ஸ்ரீ

சமணமுனிவர்கள் இயற்றிய

# நாலடியார் மூலமும்

தெளிபொருள் விளக்கமும்.



உரையாசிரியர்

வை. மு. சடகோபராமாநுஜாசாரியர்

சே. கிருஷ்ணமாசாரியர்.

மூன்றாம் பதிப்பு.

சென்னை:

சுந்தரம் அச்சுக்கூடம்.

1928.

தாயிரைட் பிரிண்டர்ட்.] [விலை ரூபா—2.

ஸ்ரீ வைஷ்ணவஸம்ப்ரதாய புஸ்தகசாலை,
19. தென்னண்டைமாடவீதி,
திருவல்லிக்கேணி.

ஸ்ரீ

# வி ஷ ய சூ சி கை.

# க. அறத்துப்பால்.

## க. துறவறவியல்.


| | | பக்கம். |
|---|---|---|
| க. | செல்வநிலையாமை. | கo |
| உ. | இளமைநிலையாமை. | உக |
| ங. | யாக்கைநிலையாமை. | ஙச |
| ச. | அறன்வலியுறுத்தல். | ஙஇ |
| ஞ. | நாய்தன்மை. | சஉ |
| ட. | துறவு. | ஞo |
| ண. | தினமின்மை. | ஞக |


## உ. இல்லறவியல்.


| | | |
|---|---|---|
| அ. | பொறையுடைமை. | டஅ |
| க. | பிறர்மனைநயவாமை. | ணஞ |
| கo. | ஈகை. | அங |
| கக. | பழவினை. | டுத |
| கஉ. | மெய்ம்மை. | டுங |
| கங. | தவினையச்சம். | கoஅ |


# உ. பொருட்பால்.

## க. அரசியல்.


| | | |
|---|---|---|
| கச. | கல்வி. | ககங |
| கஞ. | குடிப்பிறப்பு. | கஉ ர |
| க ங. | மேன்மக்கள். | கங ப |
| கள. | பெரியாரைப்பிழையாமை. | கங உஅ |
| கஅ. | நல்லினஞ்சேர்தல். | கச ஞ |
| கக. | பெருமை. | கஞ உ |
| உo. | தாளாண்மை. | கஞ அ |


## உ. நட்பியல்.


| | | |
|---|---|---|
| உக. | சுற்றந்தழால். | கடு |
| உஉ. | நட்பாராய்தல். | கள ஞ |
| உங. | நட்பிற்பிழைபொறுத்தல். | கஅ |
| உச. | கூடாநட்பு. | [illegible] |

## விஷய சூசிகை.

### ந. இன்பவியல்.


| | | |
|---|---|---|
| உநி. | அறிவுடைமை. | ஙஙள |
| உசு. | அறிவின்மை. | உ0ச |
| உள. | நன்றியிற்செல்வம் | உகசூ |


### ச. துன்பவியல்.


| | | |
|---|---|---|
| உஅ. | ஈயாமை. | உ.உ.நி |
| உங. | இன்மை. | உ.நச |
| ங 0. | மானம். | உசஉ. |
| ஙக. | இரவச்சம். | உசசூ |


### ஞ. பொதுவியல்.


| | | |
|---|---|---|
| ஙஉ.. | அவையறிதல். | உநிஅ |


### ஙு. பகையியல்.


| | | |
|---|---|---|
| ஙஙு. | புல்லறிவாண்மை. | உசுள |
| ஙச. | பேதைதமை. | உளச |
| ஙநி. | கீழ்மை. | உஅக |
| ஙசு. | கயமை. | உஅள |


### எ. பன்னேறியியல்.


| | | |
|---|---|---|
| ஙள. | பன்னெறி. | உசூநி |


# ங. காமத்துப்பால்.

### க. இன்பதுன்பவியல்.


| | | |
|---|---|---|
| ஙஅ. | பொதுமகளிர் | ங0ஙு |


### உ. இன்பவியல்.


| | | |
|---|---|---|
| ஙசூ | கற்புடைமகளிர். | ஙஙக |
| ச0. | காமநுதலியல். | ஙகசு |


இல்வாறு பாருபாடுசெய்யாமல் சிலர் இறநியதிகாரத்தைமாத்திரம் காமத்துப்பாலாகக் கூறுவர். இறநியதிகாரத்தில்மாத்திரம் அகப்பொருட் இனவிதறைகள் பயில்வதும், அதற்குமுன்னுள்ள இரண்டுஅதிகாரங்களில் அவை முழுதும் பயிலாமையும் அவர்கட்கு ஆதாரம்; திருக்குறளில்கற்புடை மகளிரென்று பொருள்படும் வாழ்க்கைத்துணைநலமென்னும் அதிகாரத்தை அறத்துப்பாலிலும், பொதுமகளிரென்றுபொருள்படும்வரைவின்மகளிரென்னும் அதிகாரத்தைப் பொருட்பாலிலும் சேர்த்துள்ளதும்நோக்கத்தக்கது.

பொருட்பாலில் வரும் இன்பவியல் என்பதற்கும், காமத்துப்பாலில் வரும் இன்பவியல் என்பதற்கும் வேறுபாடு மாணாக்கர் அறியத்தக்கது. பொருட்பாலில் வருவதை 'நீலியின்பவியல்' என்றும், காமத்துப்பாலில் வருவதை 'கடையின்பவியல்' என்றும் வழங்குவர்.

ஸ்ரீ

# அதிகார அடைவு.

"அறனிய லிரு வகைத் தாமவை தம்முள்
துறவே ழிலெற மிருமூன் றென்ப:
பொருளியல் வகையேழ் புலப்படக் கிளப்பின்
அரசிய லேழதிகார மாகும்
நட்பியல் கான்கதிகார மின்ப
மூன்றே துன்பவிய லதிகார
நான்கே யொன்றே பொதுவியல் பகையியல்
கூறதிகார நான்கே பன்னெறி
கூறதிகார மொன்றெனக் கிளப்பர்:

கடையின்ப வகைதான் கருதி னிருவகை
யின்பதுன்ப வதிகார மொன்றே யேனை
யின்ப வதிகார மிரண்டே".

---

"செல்வநிலையாமை இளமைநிலையாமை யாக்கைநிலையாமை என்னும் அதிகாரவடைவுக்கு மேலை உளதாம்; அஃதி யாதெனின்,—மூன்புயாக்கை நிலையாமையை உணர்த்தி அதன்பின்பு இளமைநிலையாமையை உணர்த்திப் பின்புஅர்த்த இளமைப்பருவத்திலே முயன்று உண்டான செல்வத்தின் நிலை யாமையை உணர்த்தவேண்டாவோ? என்னின்,—யாக்கைக்குப் புருஷா யுசு நூறுவயதென்றும், இளமைப்பருவம் முப்பதிராண்டு வயதென் றும் ஒரு நியம முண்டி, இக்காசெல்வம் இத்தனைகாள் நிற்குமென்று ஒருறுதியில்லா மையால் இப்படி ஒருறுதியில்லாத செல்வம் வந்து எய்தியபொழுதே மறு மைக்கு உறுதியான அறவுகளேசெய்யவேண்டுமென்றற்கு முன்பு செல்வ நிலையாமையை வைத்து, அதன்பின்பு அப்படி நிலையாத செல்வத்தை அனு பவித்தற்கு இளமைப்பருவத்தை நிலையாகக்கருதியிராமல் மூப்பதிராண்டு வயதுக்குள்ளே துறக்துதவஞ்செய்யவேண்டுமென்றற்கு இளமைநிலையாமை யினே அதிகாரவடைவு செய்து, பின்பு யாக்கைக்குக் கற்பித்த வயது நூறென்று கொண்டு அதனே நிலையென்று கருதாமல் அறத்தினே நாடோ றும் வழுவாமற் செய்யவேண்டுமென்றற்குப் பின்பு யாக்கைநிலையாமை யைச சொன்ன தென்பதாம்.

"ஆதலால், அறத்துப்பாலில் நிலையாமையின் வீரையுகூறற்பொருட்டு மூன்துறச செல்வநிலையாமையினை வைத்து, அதற்குப்பின்பு இளமை நிலையா மையினைவைத்து, அதற்குப்பின்பு யாக்கைநிலையாமையினே வைத்து, அதன் பின்புஇற்றப் பெறுதற்கரிய யாக்கையினைப் பெற்றபொழுதே அறஞ்செய் தற்பொருட்டாக அறன்வலியுறுத்தலே வைத்து, அதன்பின்பாக அறத்தினே

---

* இது, பழைய ஏட்டுப்பிரதியிற் கண்டபடியே அச்சிடப்படுகின்றது.

மறந்து விஷயங்களிலே மயங்காமல் அந்த விஷயங்களின் தாழ்மையில்லா மையை அறிவித்தற்பொருட்டு தாழ்தன்மையினை வைத்து, அதன்பின்பாக அப்படித் தாழ்தன்மையில் நின்று மயங்காமல் மறுமைக்கு உறுதியாக மனை வாழ்க்கையினைத்துறந்து தவஞ்செய்தற்பொருட்டாகத் துறவென்னும் அதி காரத்தை வைத்து, அதன்பின்பு அந்தத் துறவுக்கு மறுதலையாகிய ஞானம் எழாமல் உயிர்களின்மீது அன்புவைத்தற்பொருட்டாகச் சினமின்மையை வைத்து, அதன்பின்பாக இப்படியெத்தவத்துக்கு மறுதலையாகிய பகியைப் பொறுத்தலும் அறியாமையால் ஒருவர் தமக்கு ஒரு தீங்கு செய்தால் அதனைப் பொறுத்தலும் வேண்டுமென்பதுகொண்டு பொறையுடைமையை வைத்து, அதன்பின்பாக இல்லறத்தை நடத்துவதற்குப் பிறர்மனைநயவாமை பெரும் பான்மை யாதலினாலும் இந்திரியங்கள்செய்யும் மிகைகளை மீட்டுத் தம்வசத் திலே ஒருப்படுத்திக்கொள்ளுதல் முன்சொன்ன பொறையுடைமையினும் அரிதாதலினாலும் அதன்பின் இந்தப் பிறர்மனை நயவாமையை வைத்து, இந்தத் தீயகுணமில்லாதவனுக்கல்லது கொடுத்தல் கூடாதாதலின் பிறர் மனைநயவாமையின் பின் ஈகை யென்னும் அதிகாரத்தைச் சேர்த்து, மூற் பிறப்பில் ஒருவர்க்கு ஒன்றைக் கொடாதவன் தான்பழந்நற்பயிப்பினிரலிய இரந்துநிரவினென்னும் இதனை அறிவித்தற்கு ஈகைக்குப்பின்பாகப் பழ வினையை வைத்து, இந்தப் பழவினையைத் தீர உணரும் இவன் உலகத்தில் நடந்ததோதும் ஒழுக்கத்தினைத் தப்பானென்பதுகொண்டு அவ்வொழுக்கத் தின் உண்மையினை மெய்ம்மையென்ற பழவினையின்பின்பே வைத்து,உல கத்தில் நடந்தபோதும் தானதருமங்களைச் செய்யாமல் தீமையிலே புரிந் தொழுகுமவற்கு அறிவித்தற்பொருட்டாக இப்பிறப்பில் மிகவுந் தன்பமு வர் முற்பிறப்பில் தீங்குசெய்தவ ரென்னுமது தோன்ற அதன்பின்புதீவினை யச்சத்தினைவைத்து, இப்படி அறத்துப்பால் பதின்மூன்று அதிகாரமாகச் சேர்த்து,

''இனிப் பொருட்பாலதிகாரவடைவு செய்தற்குக் கல்வியை முதலிற் கற்பித்துக்கொண்டார். அரசர்க்கும் மற்றும் ஒழிந்தோர்க்கும் கல்வியுண்டா னுல்அவர்களால் உலகத்திற் பிராணிகள் சேமமப்படுமாதலானும் தருமம்பரி பாலிக்கப்பட்டுவரு மாதலானும் பொருட்பகுதிக்குக் கல்வி இன்றியமை யாதாதலின் கல்வியை முதலில் வைத்து, அந்தக் கல்விக்குப்பின்பு அந்தக் கல்விக்குத்தக ஒழுகுதல் குடிப்பிறந்தார்க்கு மிகவும்வேண்டுமாதலின்குடிப் பிறப்பைச் சேர்த்து, அதன்பின்பு எல்லாக்குணங்களிலும் வைத்து மேம் பாட்டுத்தன்மை குடிப்பிறந்தார்க்குப் பெரும்பான்மையாதலின் அந்தக் குடிப்பிறப்புக்குப்பின்பு மேன்மக்களே வைத்து, இப்படிக்கொத்த மேன்மக் களைப் பிழைத்தவர்களுக்கு மறுமைக்குஉறுதியுமில்லை இப்பிறப்பிலும் யாவ ராலும் இகழப்பட்டு அந்தப் பிராணியுமானமென்கிறதும் இல்லையாய் விடுமாதலின் மேன்மக்களைப் பிழைக்கலாகாதென்பது கொண்டு அதன் பின்பு பெரியாரைப் பிழையாமையை வைத்து இப்படிக்கொத்த முறைமை னியுடையாரைச் சேர்த்து மதிப்புண்டாக வேண்டுமென்பது தோன்ற

அதன்பின்பு கல்லினஞ்சேர்தலே வைத்து, ஒருவர் தீயராகிலும் கல்லினஞ் சேரவே அவர் பெருமையடைவ ரென்பது தோன்ற அதன்பின்பு பெருமை யென்னும் அதிகாரத்தை வைத்து, அத்தப் பெருமையும் முயற்சியுடையார்க் கல்லதில்லே யென்பது தோன்றப் பெருமைக்குப்பின்பு தாளாண்மையை வைத்து, 'இப்படி முயன்று செல்வத்தினேயுண்டாக்கினுர்க்கல்லது சுற்ற மூண்டாகாதென்பது தோன்றத் தாளாண்மைக்குப் பின்பு சுற்றந்தழாலே வைத்து, சுற்றந்தழுவியிருப்பாரொருவர் தமக்குச் சுற்றமாகத்தக்காரை ஆராய்ந்துகொள்ளவேண்டுமென்பது தோன்றுதற்கு அதன்பின்புகட்பாராய்தலே வைத்து, அப்படி ஆராய்ந்து உறவுகொண்டபின்பு அவர்செய்த பிழை களேப் பொறுக்கவேண்டுமாதலின் அதன்பின்பு கட்பிற்பிழைபொறுத்தலே வைத்து, அதன்பின்பு கூடா நட்பாகிய மூறைகேடுடையவர் தமது காரி யங்களேக் குறைவறப்பலிப்பித்துக்கொள்ளுமனவும் வேற்றுமை சிறிதும் புலப்படாமல் கலப்புண்டாக அவர் மனங்கொளக் கலந்து ஒழுகிப் பின்பு கால்தாழ்த்துவிடுவாராதலின் அவர்குணத்தினேப் பின்பு தாம் கண்டு அவ ருடனே கரிசங்கொள்ளாமல் இது சிலர்க்கு இயல்பென்றருத்தல் கட்பிற் பிழைபொறுக்கும் பெரியோர்க்கே உளதாருமென்பது கொண்டு அதன் பின்பே கூடாநட்பை வைத்து, இப்படி ஒத்தாரையும் கல்லவராகித்தமது சுபாவமும் குன்றுமலிருத்தல் அறிவுடையோர்க்கல்லது கூடாதென்பது கொண்டு அறிவுடையினே அதன்பின்பு வைத்து அறியாமையால் வருகுற் றம் விரித்துரைத்தலல்லது முன்சொன்ன அறிவுடைமை சாயாமல்நில்லா தென்பது கொண்டு அவ்வறிவுடைமையைப் பேணவேண்டி அதன்பின்பு அறிவின்மையைவைத்துஇத்தகுஅறிவுடைமையில்லாதார்க்குஉளதாகியசெல் வம் பிறர்க்குப் பயன்படாதென்பதுதோன்ற அதன்பின்பேசாமற்றியில்செல் வத்தை வைத்து, இத்தச் செல்வம் பிறர்க்குப் பயன்படாமையால் அதனுல் வருகுற்றம்தோன்றஅதன்பின்புஈயாமையைவைத்து,ஒருவர்க்கு ஒன்றைச் கொடாமல் மறுமைக்கு உறுதியான அறக்கூழும் செய்யாமல் தன் உடம் பினேச் செறித்திருக்குமவனே பிடியனென்று காட்டுதற்கு ஈயாமையின் பின்பே இன்மையை வைத்து, வறுமையுற்றுவருந்தக்கே மாளாக்கத்தக்க செய்கை உண்டாகுமாதலால், அப்படி வறுமையிலே தின்பழுறுபவன் ரான பங்கம் வந்தகாலத்து வறுமையாலும் கிடந்து கல்லாகாமல் தன் பிராணனே விட்டாவது மானத்தினேப் பாதுகாத்தல் பெரும்பான்மையாதலால் அதன் பின்பே மானமென்னும் அதிகாரத்தை வைத்து, அப்படி மானத்தினேப் பாதுகாயாமல் வறுமையினுல் பிறர்பக்கல் சென்று இரந்து உயிர்வாழ்வ தென்று தணிவராயின் இவ்வுலகத்தில் இவ்வரும் இல்லையாய்க் கண் ணுேட்டமின்றி இகழ்பவரே பெருகுவராதலின் இரப்பினே அஞ்சவேண் டும் மானமுடையா ரொருவராதலால் இரவச்சத்தை அதன்பின்பேவைத்து, எல்லாக் கல்வியையுமுடைய பல சபையிலும் இருந்து உலகத்திலுள்ளாரு டைய இயல்புகளேயும் அறியுமவர் இரப்புக்குத்துணிந்து செல்லாரென்பது தோன்ற அதன்பின்பு அவையறிதலே வைத்து, சபையிலுள்ளா ரியல்புகளே

அறியாமல் அவைக்குள்ளே ஒன்றனைச் சொல்லி இகழப்படுவோர் புல்லறிவாளராதலால் அவையறிவார்க்கு இவை குற்றமாதலின் அவையறியுமவர் இக்குற்றம் தவிர்வேண்டுமென்றற்கு அவையறிதலின்பின்பு புல்லறிவாண்மையை வைத்து, இத்தப் புல்லறிவு சில அறிந்தும் அறியாமலு முள்ள தன்மையாகுமாதலாலும்பேதைமைகோராக அறியாமலேயிருக்குமாதலாலும் புல்லறிவாண்மைக்குப்பின்பு பேதைமையையவைத்து, அறிவிலனென்றுமாத்திரமல்லது பிறர்செல்வங்கண்டு பொருமையும் அவரைப் புறங்கூறுதலும் அவர் மனங்கொள்ளும்படி அவருடனே கூடி உறவுபோல திரிந்து அவர்க்குத் தாழ்வுசெய்தலுமாகிய கீழ்மைக்குணம் பேதைமையிலும் பிரகிருதிக்கப்படுமாதலின் அதன்பின்பு கீழ்மையென்னும் அதிகாரத்தை வைத்து, இத்தக் கீழ்மைபோலன்றியே தனக்கு ஒருவர் பல நன்றிகளுஞ் செய்து தாழும் அவராலே பரிகாரப்பட்டிருந்தாலும் அவர்செய்த நியாயமில் தனக்குச்சிறிது குறையுண்டாயில் அவ்வளவுமாத்திரத்தைக்கொண்டு அவர்களுக்குக்கொலையினைச்செய்தும் தன்னைகெருங்கிவந்தார்கெர்க்குப் பயன்பட்டும் ஆசாரஞ்செய்து சிறிது பொருள்பெறின் தன்னைப் பெரியானெருவனுக மதித்தும் யாவர்கெல்லையும் கண்ணேட்டமற அவரெதிர்கின்றகுடிப் பழுதான வசனங்களைச் சொல்லியும் இத்தகைய குணங்களோடையனதல் காரணமாக முன்சொன்ன கீழ்மையினும்! மிகவுங் கடிக்கப்படுமாதலின் அதன்பின்பு கயமையினை வைத்து, பின்பு அதிகாரத்தில் எறின பாட்டுக்களையெடுத்துப் பன்னிரியென்று ஒர் அதிகாரத்தை வைத்து, இப்படி பொருட்பால் இருபத்து நான்கு அதிகாரங்களோயும் அடைவுசெய்து,

காமத்துப்பாலில் முதற்கண்ணே இழிவான குணங்களோடுடைய பொதுமகளிரை வைத்து, இத்தப் பொதுமகளிர் குணங்களொன்றுமில்லாரா கவே நல்ல குணமுடையார் எல்லாராலும் மதிக்கப்படுவாராதலால் அதன்பின்பு கற்புடை மகளிரை வைத்து, அதன்பின்பு காமநுதலியலை வைத்து, காமத்துப்பால் மூன்று அதிகாரங்களோயும் அடைவுசெய்து,

"இப்படி நாற்பது அதிகாரங்களும் அடைவுசெய்யப்பட்டன.

"இந்த அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றையும் இந்நூலிற் கூறியபடி.....கற்று 'ஆய்ந்து ஒழுகினவர்க்கு வீடுபேறும் சித்திக்குமென அறிக." *

---

"அறம் பொரு ளின்பம் வீ டடைதல் நூற்பயனே" என்பது நன்னூல்.

ஸ்ரீ

# நாலடியார்

## வரலாறு.

முன்னொருகாலத்திற் சமணமுனிவர் எண்ணாயிரவர் கொடிய பஞ்சத்தால் தத்தம் நாடு விட்டுப் பாண்டிநாட்டைந்து அவ்வரசனால் ஆதரிக்கப்பெற்று அவனதவையில் அமர்க்திருந்தனர். பன்னாள்கழித்துப் பஞ்சம்நீங்கித் தங்நாடு செழித்த தறிந்து அவர்கர் தத்தம் பிறப்பிடஞ்செல்ல விருப்பமுற்றாராய்ப் பாண்டியனிடை வேண்ட, அவனும் பன்னூற்பயிற்சியுள்ள அங்கல்லிசைப்புலவர் இருப்பது தன் அவைக்கு ஓர் அலங்காரமாமெனக் கருதி அவரைப் பிரிந்திருக்க மனமில்லாஞகி விடையளியாது தாமதித்துவக்தனன். இங்ஙனமிருக்க, அம்முனிவரீனவரும், சங்கேதமாய், அறம் முதற் பொருள் நான்கும் நன்கு புலப்படுமாறு தனித்தனி ஒவ்வொரு வெண்பாவைப் பாடிச் சிற்றேட்டிலெழுதித் தத்தமது பீடத்தின் கீழ் வைத்து, ஒரிரவில் யாரும் அறியாவண்ணம் அங்காட்டைவிட்டு அகன்றனர். பொழுதுபுலர்ந்ததும் அம்மன்னன் அப்புலவரைக் காணுமலும் சென்றவிடம் தெரியாமலும் வருந்தி, ஏவலாளரைக் கூவி, அவர்களிருந்த ஆசனங்களீ அப்புறப்படுத்துகையில், ஒவ்வொரு பீடத்தின்கீழும் ஒவ்வொரு வெண்பாட்டுச் சீட்டிலெழுதி வைக்கப்பட்டிருந்தது. அவற்றை எடுத்துப்பார்த்து அப்புலவரைப் பிரிந்த ஆற்றுமையால், அரசன், அவற்றை வையைப் பேராற்றில் வாரியெறிய ஏவினன். அவ்வாறு எடுத்தெறியப்பட்ட அவற்றுள் நானூறு பாடல், நீர்வழிச்சென்று நெடுங்கடல் சேராது எதிரேறிச் சென்றன. இம்மகிமை கண்டு, அரசன், மிகவும் ஆச்சரியமுற்று அவற்றை எடுத்து ஒரு நூலாக்கி, நாலடியார் என ஓர் நற்பெயரிட்டு வழங்கினன்.. இதனீ,

> "மன்னன் வழுதியர்கோன் வையைப் பேராற்றின்
> எண்ணி யிருநான்கோ டாயிரவர்—உன்னி
> எழுதியிடு மேட்டி லெதிரே கடந்த
> பழுதிலா நாலடியைப் பார்"

என்னும் வெண்பாவினால் அறியலாம்.

பிற்காலத்திற் பதுமனார் என்னும் புலவரொருவர், இந்நூலுக்குப் பால் இயல் அதிகாரம் என்னும் பாகுபாடுசெய்தன ரென்பர், இதனீ,

## நாலடியார் வரலாறு.

"வளங்கெழு திருவொடு வையக முழுதி
முளங்குளி ரின்பத் தின்ப முவப்ப
வண்பெருஞ் சிறப்பின் மாதவம் புரிந்தாஅய்
கெண்பெருங் குன்றத் திருந்தல முனிவ
ரறம்பொரு ளின்பம் வீடெனு மிவற்றின்
திறம்பிற ரறியுந் திறத்தை நாடிப்
பண்புற வெடுத்துப் பாங்குறப் பகர்ந்த
வெண்பா வியலெண் ணுயிர மவற்றுட்
பாரெதிர் கொண்டு பரவி யேத்த
நீரெதிர் வந்து நிறையணி பெற்ற
மேனூற் றகையின் விதிமுறை பிழையாஅ
நானூ றவற்றி னயந்தெரிந் தோகிய
மதமலர்த் தண்டார்ப் பதமன் றெரிந்த
வையமில் பொருண்மை யதிகா ரந்தா
மெய்யா றலத்த வெண்ணெந் தவற்று
ளறவியல் பதின்மூன் றரசர்க் குரிய
பொருளிய லிருபத் தொருநான் கின்ப
மான்ற வகையை மூன்றென மொழிந்தனன்
சான்றோ ரேத்துந் தருமத் தலிவனே"

எனப் பழைய ஏட்டுப்பிரதி யொன்றிற் கிடைத்த ஆசிரியப் பாவால் அறியலாம்.

**இப்பதுமனார்** இந்நூலுக்கு (திருக்குறளுக்குப் பரிமேலழக ருரை போல) மிகச் சிறந்ததோருரையும் இயற்றினரென்பர். இந் நூலில் ஆங்காங்குச் சிலபாடல்கள் அவ்வவ் வதிகாரத்தோடு நன்கு பொருந்தாமல் வருந்திப் பொருத்தத் தக்கவையா யிருத்தற்குக் காரணம், இயற்றும்பொழுதே அதிகாரப்பகுப்புடனியற்றப்பட்ட தொரு நூலல்லாமையும், பின்பு அவ்வரையறை செய்யப்புகுந்த வர் ஒவ்வோ ரதிகாரத்திற்குப் பப்பத்துப் பாடலென்னும் நியமங் கொண்டமையு மென்க.

"வெள்ளாண் மரபுக்கு வேதமெனச் சான்றோ
செல்லாருங் கூடி யெடுத்தரைத்த—சொல்லாய்ந்த
நாலடி நானூறு நன்கினிதா வெண்மனத்தே
சிலமூட னிற்க தெளிக்து"

எனப் பின்னோர் இந்நூலின் பெருமையை இனிது எடுத்து ஒதியிருத்தலும் காண்க.

# நாலடியார்.

குறள்வெண்பாக்களினாலாகிய நூலுக்கு 'குறள்' எனப் பெயராஞற் போல, நால்டிவெண்பாக்களினாலாகிய இந்நூலுக்கு 'நாலடி' எனப் பெய ராயிற்று. 'திருக்கோவையார்,' 'திருவுக்கியார்,' 'திருக்களிற்றுப்படியார்,' 'சிவஞானசித்தியார்' என்ற நூற்பெயர்களிற் போல, சிறப்புப்பற்றிய 'ஆர்' விகுதி கூட்டப்பட்டு, நாலடியார் என்ற வழங்கலாயிற்று. நாலடி என்ப தற்கு - நான்காகிய அடிகளே யுடையதென்று பொருள்; பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். நீதிநூல்களுள் இந்நூல் திருக்குறளோடொப்ப மதிக்கப்பட்டு, "ஆறும் வேறும் பல்லுக்கு உறுதி, நாலு மிரண்டும் சொல்லுக்கு உறுதி" [ஆறு - ஆறம்வீழுது. வேல்- கருவேலங்கொம்பு. நால் - நாலடியார். இரண்டு - குறள்.]. "பழருதமிழ்ச், சொல்லருமை காலிரண்டில்" என்றபடி 'திருக்குறள்' 'நாலடியார்' என்று கூட்டி வழங்கப்படுதலால், நாலடி ஏன்பது-நான்கு அடிகளேயுடைய விருத் தம் முதலிய வேறு பாடல்களின்மேற்செல்லாமல், நால்வகைப்பாக்களுள் ளும் முதன்மையையும் அர்த்தசாதியாதலாற் சிறப்பையு முடைமைபற்றி 'முதற்பா' எனப்படுவதான வெண்பாவின் மேலேயே நின்று, அவ்வெண் பாவினுள் நான்கு அடிகளேயுடையனவாய் நூல்களுட் பயின்றுவருகிற நேரி சை இன்னிசை வெண்பாக்களேயே உணர்த்தி, அவற்றாலாகிய நூலுக்குக் காரணியாகுபெயராயிற்று. இற்நூற்பெயர், நாலடிநானூறு என்னும் சிலபிர திகளிற் காணப்படுகின்றது.

'நாலடியார்' என்னும் 'நாலடி நானூறு' என்னுஞ் சொல்லப்பட்டுச் சிறப்புப்பொருந்தி வழங்குகின்ற இந்நீதிநூல், 'நாலடி கான்மணி காளுற்ப தைந்தினே முப், பால் கடுகங் கோவை பழமொழி மாமூலம், இன்னிலையை காஞ்சியோடு ஏலாதி யென்பவே, கைந்நிலையொ டாங்கு ழிழ்க் கணக்கு" எனக்கூறப்பட்டுள்ள சங்கமருவிய பதினேஞ்கீழ்க்கணக்குக்களுள் முத லாவது. பதினெண் கீழ்க்கணக்குக்களுள் ஒன்றெனவே, இது கடைச்சங் கத்தார்காலத்தீற் செய்யப்பட்டு அச்சங்கத்தில் அரங்கேற்றப்பட்ட தென் றும், ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்கட்குமுன் தோன்றியதென்றும் தெளிவாக வினங்குகின்றது. இந்நூல், ஒருவராற் பாடப்பட்ட தன்று; பல புலவர்களாற் செய்யப்பட்ட செய்யுள்களால் அமைந்ததாம்: ஆதலால், இந் நூலிலுள்ள 'கூறியதுகூற' லும், 'மாறுகொளக்கூற' லும் குற்றமாகா.

இனி, பதினெண்கீழ்க்கணக்காவன:—க. நாலடியார், உ. நான்மணிக் கடிகை, [நால் நாற்பது=] கூ. இனியவைநாற்பது, ச. இன்னாநாற்பது, ஙி. கார்நாற்பது, ஞ. களவழிநாற்பது, [கால்ஐந்தினே=] எ. ஐந்தினை யைம் பது, அ. ஐந்தினை யெழுபது, க நிணைமொழி யைம்பது, கூ. திணைமாலை

அற்றைம்பது, கக. மும்பால் [=திருக்குறள்], கூ. நிரிகடுகம், கஉ. கோவை [ஆசாரக்கோவை], கச. பழமொழி, கடி. மாமூலம் [=நிறபஞ்சமூலம்], கக. காஞ்சி [=முதுமொழிக்காஞ்சி], கஎ. ஏலாதி, கஅ. கைந்நிலை என்பன. 'ஈராஞ்பது' என்பதிலுள்ள 'ரால்' என்பதை 'ஐந்திணை' என்பதனோடுங் கூட்டுக; கூட்டவே, 'ரால்ஐந்திணை' என்பது - ஐந்திணைப்பொருளுணர்த்தும் 'ஐந்திணையைம்பது' முதலிய ரான்கு நூல்களின்மேல் நிற்கும். 'கைந்நிலை'-நச்சினார்க்கினியர் உரையில் மேற்கோள்காட்டிய நூல்களுள் ஒன்று.

இனி, சங்கத்தார் காலத்து நூல்கள், கீழ்க்கணக்கு மேற்கணக்கு என இருவகையாக வழங்கப்பட்டன. அவற்றில், மேற்கணக்காவது-வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐந்துவகைப்பாக்களாலும் ஐம்பதுமுதல் ஐந்நூற இறுதியாக வருவது: கீழ்க்கணக்காவது - அறம் பொருளின்பங்களைப்பற்றிய வெண்பாக்களினால் அத்தொகைபட வருவது: (இதனை, "மேல் கீழ்க் கணக்கென இருவகைக் கணக்கே," "மேற்கணக்கெனவும் கீழ்க் கணக்கெனவும், பாற்படு வகையாற் பகர்ந்தனர் கொளலே," "அகவலுங் கலிப்பாவும் பரிபாடலும், பதிற்றைந்தாதி பதிற்றைம்ப தீரு, மிருத்திடன் தொகுப்பது மேற்கணக் கெனவும், வெள்ளைத் தொகையு மவ்வகைவேண்டின், என்னது கீழ்க்கணக்கெனவுங் கொளலே," "ஐம்பது முதலா ஐந்நூ றீரு, ஐவகைப் பாவும் பொருள்பெறி மரபின், தொகுக்கப்படுவது மேற்கணக்காகும்," "அடிநிமிர்வில்லாச் செய்யுட்டொகுதி, அறம் பொருளின்ப மமிக்கி யவ்வகைத் திறம்பட வருவது கீழ்க்கணக்காகும்" என்ற பன்னிருபாட்டியற் சூத்திரங்களால் அறிக.) கீழ்க்கணக்கு வெண்பாவினானமும் விரிவுவருதலேயும் ஐம்பதினுங் குறைத்து ராற்பதாகவும் ஐந்நூற்றினும் மிக்கு ஆயிரத்து மூர்நூற்று மூப்பதாகவும் வருதலேயும் 'உரையிற்கோடல்' என்னும் உத்தியாலும் பிறவாற்றாலும் அமைத்துக் கொள்க. மிக்க அடிகளேயுடைய பலவகைப்பாக்களால் வருவதுபற்றி மேற்கணக்கென்றும், குறைந்த அடிகளேயுடைய ஒருவகைப்பாவால் வருவதுபற்றிக் கீழ்க்கணக்கென்றும் காரணக்குறியமைந்தனவென உணர்க. இங்ஙனங் கொண்ணூதற்கு, "அடிநிமிர்வில்லாச் செய்யுட்டொகுதி" என்றதும் ஆதாரம்.

இனி, இர்நூல் வேறெரு நூலின்வழியே தோன்றியதென்றகொள்ள இடமில்லாமையாலும், சமணசமயத்து வினேயிளீங்கி விளங்கிய அறிவையுடைய முனிவராற் செய்யப்பட்ட தாதலாலும், முதனூல் வழிநூல் சார்புநூல் என்ற நூல்வகை மூன்றில் இது முதனூலின் பாற்படுமென்க.

சமணசமயத்துப் பெருங்காப்பியமான சிவகசிந்தாமணியின் உரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர்'பிறரும் இச்சமயத்தார்"நிறகா பெருகா முறை பிறழ்ந்து வாரா" (நாலடியார், பழவினை, கo) என்றதனாலும் உணர்க'என உரைத்ததனால், இர்நூல் சமணசமயத்தார்செய்ததென ரன்குபுலனுறின் றது. இக்கொள்கைக்கு மற்றும்பல ஆதாரங்களும் உண்டு.

இர்நூல், நச்சினார்க்கினியர் பரிமேலழகர் அடியார்க்குநல்லார்மூதலிய நிறைந்த உரையாசிரியர்களால் எடுத்தாளப்படும்பிரமாண நூல்களுள் ஒன்று.

இனி, *இந்நூல் செய்கின்ற காலத்திற்கு இலக்கணநூல்கள் அகத்தியமும் தொல்காப்பியமும் மாதலாலும், தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில் "மூன்றுநூல் கண்டு முறைப்பட வெண்ணி" என்றபடி தொல்காப்பியம் அகத்தியத்தின் வழிநூலாதலாலும், பிறர்கூறிய நூல்கள் நிரம்பிய இலக்கணத்தன அன்மையாலும், தொகுத்தசெய்யப்பட்டு வழக்குநூலாகிய தொல்காப்பியம் இடைசெங்கம் முதலாக இன்றளவும் உளதாதலாலும், தொல்காப்பியத்திற் கூறிய இலக்கணமே இதற்குஇலக்கண மென்ற உணர்க; அந்நூலிற் செய்யுளியலில் ஆசிரியர், பாநான்கு என்றும் அவற்றை அறம்பொருளின்பத்தாற் கூறுக வென்றுங் கூறி, பின்பு, அம்மைமுதலிய எட்டும் [அம்மை, அழகு, தொன்மை, தோல், விருத்தி, இயைபு, புலன், இழைபு என்பன] தொடர்நிலைசெய்யுட்கு இலக்கணமென்ற கூறுகின்ற இடத்து, "வனப்பியல் தானே வகுக்குங் காலை, சென்மொழியால் தாய பனுவலோடு, அம்மைதானே அடிநிமிர்வின்றே' என்ற சூத்திரத்தால் 'சிலவாயமெல்லியவாய சொல்லோடும் இடையிட்டு வந்த பனுவலிலக்கணத்தோடும் 'அடிநிமிர்வில்லது அம்மையாம்' என்று கூறினமையின், இந்நூல் அங்ஙனங்கூறிய அம்மையா மென்று உணர்க. இன்னும், அசருத்திர வுரையில், "அடிநிமிராது' என்றது ஐந்தடியின் வராது என்றவாறு, 'தாய பனுவலோடு' என்றது, அறம் பொருளின்ப மென்னும் மூன்றற்கும் இலக்கணஞ் சொல்லுட: வேறு இடையிடை அவையன்றியுந் தாய்ச செல்வது என்றவாறு. அஃதாவது-பதினெண்கீழ்க்கணக்கு என உணர்க. அதனுள் இரண்டடியானும் ஐந்தடியானும் ஒரோசெய்யுள் வந்தவாறும், அவை இலவாய மெல்லிய சொற்களான்வந்தவாறும், அறம் பொருளின்பமென அவற்றிற்கு இலக்கணங்கூறிய பாட்டுப் பயின்றுவருமாறும், கார்நாற்பது களவழி நாற்பது முதலாயின வந்தவாறும் கண்டுகொள்க' என்றதும் அறிதற்பாலது.

---

* தலைச்சங்கத்தார்க்கு அகத்தியம்மாத்திரமும், இடைசங்கத்தார்க்கு அகத்தியம் தொல்காப்பியம் மாபுராணம் பூதபுராணம் இசைநுணுக்கம் முதலியனவும், கடைச்சங்கத்தார்க்கு அகத்தியம் தொல்காப்பியம் என்னும் இவை மாத்திரமும் இலக்கணமென்பதை, இறையனாரகப்பொருளின் நக்கீரருரையாலும், தொல்காப்பிய நச்சினார்க்கினியத்தாலும், பிறவாற்றாலும் அறிக. தொல்காப்பியப்பொருளதிகாரவுரையில் 'அகத்தியமுர் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு ஆகரமலின்' என்றது, எட்டுத்தொகைகளோடு சமதாலத்தனவாகிய பதினெண்கீழ்க் கணக்குக்களுக்கும் ஒக்கும்.

# நாலடியார்.

கடவுள்வாழ்த்து.

வானிடு வில்லின் வரவறியா வாய்மையார்
கானிலந் தோயாக் கடவுளே—யாநிலஞ்
சென்னி யுறவணங்கிச் சேர்தமெம் முள்ளத்து
முன்னி யவைமுடிக வென்று

இஃது-கடவுள்வாழ்த்து; அஃதாவது - எடுத்தக்கொண்ட காரியம் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டுக் கவி தான்வழிபடு கடவுளேயாவது எடுத்தக்கொண்ட பொருட்கு ஏற்புடைய கடவுளேயாவது வாழ்த்துதல். அவற்றுள், இவ்வாழ்த்து-தமக்கு வழிபடுகடவுளாகிய அருகதேவனைப் பற்றிய தென அறிக.

(இதன்பொருள்) வான்-மேகத்தில், இடு - உண்டாகின்ற, வில்லின் - (இந்திர) தனுசைப் போன்ற, வரவு - (உடம்பின்) வருகையை, வாய்மையால் - தத்துவஞானத்தினால், அறியா - அறிந்து,—'எம் உள்ளத்து எமது மனத்தில், முன்னியவை-செய்யநினைத்தவை, முடிக - (இடையூறில்லாமல் இனிமையாய்) நிறைவேறுக,' என்று-என்று எண்ணி,—கால் நிலம் தோயா கடவுளே - (தனது) பாதங்கள் பூமியிற் படியப்பெறுத (அருக) தேவனே,—யாம்-நாம்,—நிலம் சென்னி உற-தரையிலே தலைபொருந்தும்படி, வணங்கி-நமஸ்கரித்து, சேர்தும் - சரணமடைவோம்; (என்றவாறு.)

'உள்ளத்தில் நினைத்தவை' என்றதில், பிறப்பறுத்தலும் அடங்கும்.

அறியா, என்று, கடவுளே, யாம், வணங்கிச்சேர்தும் எனமுடிபுகாண்க.

வானத்தில் தோன்றுகிற இந்திரவில் இப்பொழுதென்றும் இன்னபடியென்றுந் தெரியாமல் உண்டாகி உடனே ஒரு அழிந்தபோவதுபோல, உடம்பும் உண்டாகி நிலையில்லாமல் அழிந்துபோவதனால் அது அழிவதற்கு முன்னமே நினைத்தகாரியங்கள் கைகூடும்படி நாம் கடவுளைச் சேர்வோமென்று கருத்து. 'வானிலிடுகின்ற வில்லினது தோற்றமும் அழிவும் போன்ற பிறப்பாகிய இயல்பையறித்து' என்ற பழையவுரையைத் தழுவி இங்ஙனம் உரைக்கப் பட்டது. இனி, சீவகசிந்தாமணியில் "மற்றவன் தேவனுங் வானிடு சிலையிற்றோன்றி" என்றவிடத்து, 'நூல்கள், இந்திரவில் இன்னவாறு தோன்று மென்று அதுதோன்றும் முறைமை கூறுவாகலின், அங்ஙனந் தோன்றுகின்ற தேவர்க்கு அஃது உவமையாயிற்று; இக்கருத்தானன்றே, "வானிடுவில்லின் வரவறியா" என்றார் பிறரும்' என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்துள்ளதனால், 'அறியா' என்பதை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகக்கொண்டு கடவுளுக்கு அடைமொழியாக்கி, ஆகாயத்தில் தோன்றுகிற இந்திரவிற்போல இன்னவாறு தோன்றுமென்று முன்புவருகையறியப்படாத கடவுளே யென்று உரைத்தல் நச்சினார்க்கினியர் கருத்தெனத் தெரிகின்றது; "நிருவி லிட்டுத் நிகழ்தருமேனியன்" எனச் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் இந்திரவில் தெய்வ வடிவத்திற்கு ஒளியின் உவமை கூறப்பட்டவாறு காண்க.

. வில்லின், இன் - ஐந்தனுருபு, ஒப்பு. முதலுரைக்கு 'அரியா' என்பது-உடன்பாட்டு இறந்தகாலவினையெச்சம். வாய்மை - மெய்ம்மை: மெய்யறிவுக்கு ஆருபெயர். வாய்மையால் அறியா என மொழிமாறி இயையும். இனி, வாய்மையால் கால்கிலக்தோயா என இயைத்து, மெய்ம்மையாகிய புண்ணியத்தாற் கால்கள் தரையிற்படியாதிருக்கப்பெற்ற என்பாரும் உளர். வாய்மையால் வணங்கிச் சேர்தும் என்று இயைத்து, திரிகரணசுத்தியாக வணங்கிச் சரணமடைவோ மென்றவாறு அமையும். காலடிகள் நிலத்தில் தோயாமை எல்லாத்தேவர்க்கும் உண்டாயினும்,மற்றைத்தேவர்கட்கெல்லாம்புண்ணியமுடிவில் தெய்வவுடம்பு நீங்கி வேறு உடம்பு வருதலால் அவர்க்கு அது முழுதும் நிலைபெருமைபற்றி, அவ்வாறின்றி எக்காலத்துந் தெய்வத்தன்மை மாருத அருகக்கடவுளுக்கு அது விசேடணமாக்கப்பட்டது. சாதாரணமாகத் தேவர்க்கு அத்தன்மை நீங்குதலே "எல்லே மூவைந்து ரான்கடை யபிர்ண்டாரின், பல்பகல்துய்த்த இன்பம் பழுதெனக் கலவ்ப கண்டாய்" என்ற சிவகசிந்தாமணிகொண்டு உணர்க. இனி, 'கால்கிலக்தோயாக் கடவுள்' எனவே, அருந்தாபத்தியால், பூவின்மேல் வந்தருளுங் கடவுளென்றகருத்துக்கொள்ளுதலும் ஒன்று; அருகக்கடவுள் தாமரைமலரை வாகனமாகக்கொண்டு அதனேயூர்ந்து செல்லுகின்றன னென்று ஜைநூல்கள் கூறும். கடவுள் - (எப்பற்றையும்) கடக்து நின்றவன்; உள் பெயர்விகுதி. சேர்தும், தும்-தன்மைப்பன்மை யெதிர்காலமுற்று விகுதி; பிறரையும் உளப்படுத்தியது. கால் நிலத்தில் தோயாத கடவுளே யாம் நிலத்தில் தலை பொருந்தும்படி வணங்குவோம் எனக் கடவுளின் பெருமையும் தமது பணிவுந் தோன்றக் கூறியவாறும்; இது, முயிர்தோடையின்பாற் படும். முடிக - வேண்டுகோட்பொருளில் வந்த வியங்கோள்.

இச்செய்யுள், பால் முதலிய பாகுபாடு செய்யத்தொடங்கும்பொழுது பதமனுர் செய்த தெனப்படும்; இதனுல், அவரது மதம் ஆருத மென்பது வினங்கிற்று.

## உரைப் பாயிரம்.

இந்திரன் முதலிய தேவர்களுடைய சுவர்க்கம் முதலிய உலகங்களேயும், அளவிறந்த பேரின்பத்தையுடைய அழிவில்லாத முத்தியுலகத்தையும் அடையும்வழியறிந்து அடைவதற்கு உரிய மனிதர்கட்கு உறுதியைத் தருவ தென்று உயர்த்தவர்களாற் குறிக்கப்பட்ட பொருள் நான்காம்; அவை - அறம் பொருள் இன்பம் வீடு என்பன: அவற்றை முறையே வடநூலார், தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்னுஞ் சதிரிவித புருஷார்த்தம் என்பர். அவற்றுள், வீடு என்பது † மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாத நிலைமையை யுடையதாதலின், அறத்தின் பகுதிகளுள் ஒன்றான துறவறமாகிய

† இது, திருக்குறளுரையாசிரியராகிய பரிமேலழகரது கருத்து. இனி, தொல்காப்பியச் சிறப்புப்பாயிரவுரையில் கச்சினர்க்கினியர் 'வீடு கூறுரோ வெனின்,—அகத்தியனுரும் தொல்காப்பியனுரும் வீடுபேற்றிற்கு கியித்தற்

காரணத்தின்வகையாற் கூறப்படுவதே யல்லாமல் இலக்கணவகையாற் கூறப்படாமையால்,நூல்களாற் கூறப்படுவனவுள ஒழித்த மூன்றுமேயாம்.

அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று புருஷார்த்தங்களும் நிரிவர்க்க மென்றும், வீடு அபவர்க்கமென்றும் வழங்கப்பெறும்.

இவற்றுள், அறம் - இம்மை மறுமை வீடு என்னும் மூன்றையுந் தருவதும், பொருள்-இம்மை மறுமை யிரண்டையுந் தருவதும், இன்பம்-இம்மை யொன்றையே தருவதும் ஆகிய சிறப்பின் தருதிபற்றி. அறம் முதலிலும், அதன்பின் பொருளும், அதன்பின் இன்பமும் நிறுத்தப்பட்டன வென்றும்; இவற்றுள் இரண்டாவதாகியபொருள்-முதலதான அறத்தக்கும், மூன்றாவ தான இன்பத்துக்கும் காரணமாதல்பற்றி, சிங்கநோக்காய் அவ்விரண்டி னிடையில் வைக்கப்பட்ட தென்றும் அறிக. பொருள்-தரும காமங்களைத் தருவதாதலே ''வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவண செய்த வீருதலேயு மெய்தும், நடுவண தெய்தாதா னெய்தும் உலேப்பெய், தடுவது போலுக் துயர்'' என்னும் இந்நூற் செய்யுளினுலும், ''அறனீனு மின்பமு மீனுக் நிறனறிந்த, நீதின்றி வந்த பொருள்'' என்ற நிருக்குறளினுலும், ''அறம் பொருளின்ப மென்று - ஆராரிவற்றி னிடையதனே யெய்துவார், சோ நிருதலேய மெய்துவர்'' என்னும் பாகாலன் வாக்கினுலும் அறிக.

அவற்றுள், அறமாவது - இம்மை மறுமை வீடு என்னும் மூன்றையுந் தருவனவாய் மனுமுதலிய நூல்களில் விதிக்கப்பட்டவற்றைச் செய்தலும், விலக்கப்பட்டவற்றைச் செய்யா தொழிதலுமாம்; அது - ஒழுக்கம், வழக்கு, தண்டமன்ன மூன்றவகைப்படும்: இவற்றை முறையே வடநூலார், ஆசாரம், வியவகாரம், பிராயச்சித்தம் என்பர். அவற்றுள், ஒழுக்கமாவது - பிராமணர் முதலிய வருணத்தவர் தம்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய ஆச்சிரமங்களில் நின்று அவற்றிற்குச் சொல்லப்பட்ட அறங்களினின்று வழுவாது ஒழுகுதல்.

---

கூறதலன்றி வீட்டின் தன்மை தமிழாற்கூருரென்று உணர்க; அமீதி, ''அக்கிலே மருங்கின மமுதலாகிய, மும்முதற்பொருட்கு முரியவென்ப'' என் பதனுன் உணர்க; இக்கருத்தானே, வள்ளுவனாயனுரும் மும்பாலாகக் கூறி, மெய்யுணர்தலான் வீடுபேற்றிற்கு நிபித்தங் கூறினர்' என உரைத்ததனுல், கச்சினர்க்கினியர் கருத்து இவ்விஷயத்தில் வேறுதல் விளங்கும். மற்றும், மேற்காட்டிய ''அக்கிலேமருங்கின்'' என்ற தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தின் உரையில் 'உலகியற்பொருள் மூன்றினையுங் கூறவான், அவற் றை 'மும்முதற் பொருள்' என்றன். அவையின்றி வீடுபெறமாறு வேறு இன்மையின், வீடும் ஆண்டுக் கூறினுன் என்பது. அல்லாதார், வீடு என்னும் பொருண்மை செய்யுட் கண் வாராமையின் அது கூறு னென்ப; அங்ஙனங் கருதின், அறமுதற்பொருளும் செய்யுட்கண் வாரா என மறைக்' என்றதும், தொல்காப்பியப் பொருளதிகார வுரைத்தொடக்கத்தில் 'இக்கிலேயாமையா னும் இவற்றனும் வீட்டிற்குக் காரணங் கூறினர்' என்றதும் காண்க.

வழக்காவது - ஒருபொருளோத் தனித்தனியே எனது எனது என்ற இருப்ப வர்கள் அதுகாரணமாகத் தமக்குள் மாறுபட்டு அப்பொருளின்மேற் சொல் வது; அது - கடன்வாங்குதல், வைப்பு, உடையவனல்லாதவன் விற்றல், கூடிமேம்படுதல், கொடுத்ததை மீண்டும் கொடாமை, கூலிகொடாமை, கட்டுப்பாடுகெடுத்தல், விற்றும் வாங்கியும் உள்ளமோப்பாமை, ஒப்பிப்பணி செய்யாமை, ஏல்லேவழக்கு, தண்டக்கொடுமை, சொற்கொடுமை, திருடு, வன்செய்கை, மாதரைக்கவர்தல், மாதராடவர் தருமம், தாயபாகம், சூது எனப் பதினெட்டு வகையது. தண்டமாவது - ஒழுக்கவழக்குக்களினின்று தவறினவர்களே அந்தந்த நெறியில் நிறுத்துதற் பொருட்டுப் பஞ்சபாதகரில் லாமல் ஆலோசித்து அந்தந்த குற்றத்திற்குத் தக்கபடி கிட்டித்தல்.

இம்மூன்றனுள், வழக்கும் தண்டமும் உலகத்தை நல்வழிப்படுத்துவ தற்கே பயன்படுவன வல்லது, ஒழுக்கம்போல மனிதரது உயிர்க்கு உறுதி தருஞ் சிறப்பை யுடையனவல்ல வாதலாலும், அவைதாம் நூல்களினுலேயே யன்றி அறிவுநிகுதியாலும் தேசத்து இயற்கையாலும் அறியப்படுதலாலும் அவற்றை யொழித்து, (திருக்குறளிற்போல), இந்நூலிலும் சிறப்புடைய ஒழுக்கமே அறமென எடுத்துக்கொள்ளப்பட்டது. அதுதான் நால்வகை அசிரமத்தாய் வருணத்தோறும் வேறுபாடுடைமையால், சிறுபான்மை யாகிய அசிரமப்பியல்புகளோயொழித்து, எல்லார்க்கும் ஒத்திருத்தலாற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி, இல்லறம் துறவறம் என இரு வகைநிலையாற் கூறப்படுகின்றது. அவற்றுள், இல்லறமாவது - இம்மை மறு மையாகிய இருமையின்பங்களேயும் அனுபவித்தற்கு உரிய இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறியில் நின்று அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடுஞ் செய்யப்படுங் தருமம்; துறவறமாவது - மேற்கூறிய இல்ல றத்தில் வழுவாமல் சுடர்த்த அறிவுடையராய்ப் பிறப்பையறுத்து முத்திபெறு தற்பொருட்டு எல்லாப்பற்றுக்களேயும் விட்டவர்க்கு உரியதாகிய தருமம்.

---

பால், இயல், அதிகாரம் என்றவற்றிற்கு - பலபொருள்கள் உள்ளன வாயினும், இங்கே, ஒருபொருளேயே குறித்துவரும் பல செய்யுட் ளின் தொகுதியாகிய நூற்கூறுபாடென்ற பொருள். இந்நூலில், சங்கேதத்தால், பால் என்றது - பெரும்பிரிவுக்கும், இயல்என்றது-அதற்கு உட்பட்ட சிறு பிரிவுக்கும், அதிகாரம் என்றது - அதன் உட்பிரிவுக்குமாகக்கொள்ளப் பட்டது.

இனி, ஒவ்வொருபொருளோ டற்புறத்திற்கூறும் பப்பத்துப் பாடல்களே யுடைய நாற்பது அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ள இந்நூலில் முதற் பதின்மூன்று அதிகாரங்கள், அறத்துப்பால்; பதினைந்தாம் அதிகாரம் முதல் மூப்பத்தேழாம் அதிகாரம் வரையில் இருபத்தாறாங் அதிகாரங் கள், பொருட்பால்; இறுதி மூன்று அதிகாரங்கள், காமத்துப்பால், "மூன் றறப்படக்கிய தன்மைத்தாயின், தோன்றுமொழிப்புலவ ரது பிண்ட மென்ப" என்னுந் தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தின்படி இந்நூல் பால் இயல் அதிகாரம் என்னும் மூன்று உறுப்புக்களேயும் அடக்கியதொரு பிண்டமா மென்க. அவற்றுள்,—

முதலாவது

# அறத்துப்பால்.

*அஃதாவது* - அறத்தையுணர்த்தும் பகுதி என்பதாம். இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனு முடன்தொக்கதொகை. இவ்வறத்துப்பால்-துற வறவியல் இல்லறவியல் என இரண்டு உட்பிரிவை யுடையது.

அறஞ்செய்வதற்கு உரிய இருவகைநிலையுள் இல்லறம் முதலதும் துற வறம் இரண்டாவது மாதலால் அம்முறைபற்றித் திருக்குறளரின் அறத்துப் பாலில் இல்லறவியல் முன்னும் துறவறவியல் பின்னும் நிறுத்திக் கூறப் பட்டிருந்தாலும், இந்நூலில் அங்ஙன மன்றி, துறவறம் நித்தியமாகிய முத் தியை யடைதற்குக் காரணமாதலால் அச்சிறப்புப்பற்றி அது முன் னும், இல்லறம் துறவறம்போல முத்தி பெறுதற்குக் காரணமாகாததனால் அச்சிறப்பின்மைபற்றி அது பின்னுமாக வைக்கப்பட்டது. இந்நூலின் முதல் எழு அதிகாரங்கள் - ஜைநசமயக் கொள்கையின்படி முத்திபெற தற்கு இன்றியமையாததான துறவறத்தைக் கூறும் இயலென்றும், அதன் பின் ஆறு அதிகாரங்கள் - அத்துறவறத்திற்கு மறுதலையாகிய இல்லறத் தைக் கூறும் இயலென்றும் அமைக்கப்பட்டன. "அறவிய லிருவகைத்தா மவைதமம்முள், துறவே ழில்லற மிருமூன் றென்ப" என்ற பழைய உரைச் சூத்திரத்தை உணர்க. அவற்றுள்,—

முதலாவது

## துறவறவியல்.

*அஃதாவது* - துறவறத்தைக்கூறும் இயல் என்றவாறு. [இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.] அதனுள்,

### முதல் அதிகாரம்.—செல்வநிலையாமை.

*அஃதாவது* - செல்வத்தினது நிலைத்தலில்லாமை. இதனைச் சொல் வது, செல்வங்கிடைத்தபோது விரைவில் அறஞ்செய்வதிற் கருத்து உண் டாதற்பொருட்டு நிலையில்லாதபொருளை யுணர்த்தா லன்றி நிலையுடைய பொருளில் மனஞ்செல்லா தாதலால், முத்தியடைவதில் விருப்பமுண்டா தற்பொருட்டு நிலையில்லாதபொருள்களை மூன்று அதிகாரங்களால் உணர்த் தத்தொடங்கி, அவற்றுள் இளமைக்குப் பிராயம் முப்பதென்றும், உடம் புக்குப் பிராயம் நூறென்றும் ஒரு காலநியமம் உள்ளதனால்,அவற்றிற்குமுன், அந்நியமமில்லாத செல்வத்தின் நிலையாமையை வைத்திட்டார். இயமனாம் அதிகாரங்களை யாதாயினும் ஒரு காரணம்பற்றி ஒழுங்குபட நிறுத்துதல், 'ஒத்துழாறைவைப்பு' என்னும் உத்தியாம்.

*அதிகாரம்-அதிகரித்தல்; அது* இருவகைப்படும்: அவற்றுள் ஒன்று அர சன்தான்இருந்த இடத்திலேஇருந்து தன்நிலம்முழுவதும் தன்கட்டளையில் நடக்கச் செய்தல்போல,ஒருசொல் நின்றவிடத்தே நின்று பலசெய்யுள்கள்

தன்பொருளையே சொல்லிவரும்படி செய்வது; மற்றெருன்று, ஆய்காய்குச் சென்றகட்டளை நிறைவேற்றும்அதிகாரிகள்போல, ஓரிடத்தின்றசொல் பலசெய்புட்களோடுஞ் சென்று இயைந்து தன்பொருளையே பயப்பிப்பது. அவற்றுள், இங்கு 'அதிகாரம்' என்றது, முதலிறுகூறிய வகைபற்றியது.இனி, அதிகாரம்என்பதற்கு-முறைமையெனப்பொருள்கூறுவர்.சச்சினர்க்கினியர்.

> ௧. அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
> மறுநிகை நீக்கி யுண்டாரும்—வறிஞராய்ச்
> சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
> றுண்டாக வைக்கற்பாற் றன்று.

(இதன்பொருள்.) அறுசுவை - ஆறுவகை ருசிகளேயுடைய, உண்டி - உணவை, அமர்ந்து - அன்போடு பொருந்தி, இல்லாள் - மனைவி, ஊட்ட-(எடுத்தெடுத்தி) உண்பிக்க, மறுநிகை - மற்றெரு கவளத்தை, நீக்கி-தள்ளி, உண்டாரும் - புசித்த பெருஞ்செல்வ முடையோரும், வறிஞர் ஆய் - (அச் செல்வமழிந்து) தரித்திரர்களாய், ஓர் இடத்து-வேரூன்றிடத்தில், சென்று-போய், கூழ் - கூழை, இரப்பர் - பிச்சையெடுப்பார்கள், எனின் என்றல்,—செல்வம் ஒன்று - செல்வமென்கிற ஒருபொருள், உண்டு ஆக - நிலையாயுள்ளதாக, வைக்கற் பாற்று அன்று - (மனத்தில்) வைத்து எண்ணத்தக்க தன்மையுடையதன்று, (என்றவாறு.)

நிலையாமையையறிந்து பொருளிற்பற்றுவிட வேண்டுமென்பதைகருத்தி.

அறுசுவை - தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்பன. உணவிற்பலவாது அன்பு எழாவதொருசுவையென்று பாராட்டிக் கூறப்படுதலால், 'அறுசுவையுண்டி' என்றதன்பின் 'அமர்த்து' என்றமை ஏற்கும். அமர்தல் - விரையாதிருத்தலாகவுமாம். இல்லாள் - இல்லறவாழ்க்கைக்குரியவள். செல்வர்கள்வீட்டிற் பரிசாரகர் பலர் இருக்கவும் மனைவியே உண்பித்தல், இன்பஞ்செய்தற்பொருட்டென்க. மறுநிகைநீக்கி உண்ணுதலாவது - ஒவ்வொருவகை யுணவிலும் முதலில் எடுத்துக்கொடுத்த கவளத்தைமாத்திரமேஉண்டு (வயிறு நிரம்பிவிடுதலால்) இரண்டாவது கவளத்தை அடியோடு வேண்டாமென்று விலக்குதல். இவ்வாறு உண்ணுதல், உணவுவகைகளின் மிகுதியினுல், ஊட்ட என்னுஞ்சொல்லின் ஆற்றலால், தாம் கையில்வாங்கி உண்ணுமல் மனையான் தானே வாயிற்போகட உட்கொள்ளுதல் தோன்றுமாறு காண்க. சென்று என்றது, முன்னே கால்களால் நடவாமை தோன்ற நின்றது. தாம்செல்வராயிருந்த இடத்திலேயே இரத்தல் பேரவமானத்தைத் தருதலால்வேறோரிடத்துச் சென்று இரப்பரென்க. இனி, 'ஓரிடத்து' என்பதற்கு - ஒரேஇடத்தில் [முன்பு தாம் செல்வராய் வாழ்ந்த இடத்திலேயே] என்று உரைப்பாரு முளர். கூழ் - மிகத் தாழ்ந்த உணவு; அதனை இரப்ப ரெனவே, மிகவுந் தாழ்ந்தவரிடத்தும் போய் இரப்ப ரென்பது பெறப்படும். எனின் - ஆதலால் என்றபடி. ஒன்று உண்டாக என எடுத்து, சிறிதும் நிலையுள்ளதாக எனினுமாம்.

உண்டி - **உண்ணப்படுவது**; இ - செயப்படுபொருள்விகுதி, ட் - எழுத்துப்பேறு. ஊட்டு - **உண்என்பதன் பிறவினை.** மறுகை-பண்புத்தொகை. **கை** என்னும் மூடிந்த குடும்பியின்பெயர், பிசைந்த அன்னத்தினின்றுஎடுக்கும் கவளத்துக்கு உவமவாகுபெயர். **உண்டாரும்**, உம் - உயர்வுசிறப்பு.**வறி**ஞர், ஞ் - பெயரிடைநிலை; வறுமைஎன்ற பண்புப்பகுதி ஈறுபோய் இடை உகரம் இரசமாயிற்று. செல்வம் - (எவரிடத்தும் நிலைத்திராமல் நீங்கிச்) செல்லுந் தன்மையது எனப் பொருள்படும் காரணக்குறி; செல் - பகுதி, அம் - கருத்தாப்பொருள்விகுதி, வ் - எழுத்துப்பேறு. பாற்று - பான்மை என்பதன் அடியாகப் பிறந்த ஒன்றன்பாற் படர்க்கைப் **பெயர்.** மேல் கசாந - ஆவது செய்யுளில், 'உணரற்பாற்றன்று' என்பதிலும் இது. **கை - சிகா** என்னும் வடமொழி திரிந்தது.

"ஆயின் சுவையவை யாரே டடிகேளுண்டார்த்தபின், ஊமன்மொழி மடவா ரிரக்கப் பின்னுங் தும்றுவா, ரீபி னெமக்கொரு தும்றென் றிடமுவ ராதலிற், கோமின் துழாய்முடி யாதியஞ்சோதி குணங்களே"எனத் திருவாய்மொழியிலும், "முல்லைமுகை சொரிந்தாற்போன் றினியபாலமுகில் மகளிரேந்த, கல்லகருணையால் காள்வாயும் பொற்கலத்து நயந்துண்டார்கள், அல்லலடைய அடகிடுமிரேட்டகத் தென்று அயில்வார்க் கண்டும், செல்வம் நமரங்காள் நினையன்மின் செய்தவமே நினைமின்கண்டீர்" எனச் சிந்தாமணியிலும் கூறியிருத்தல் காண்க.

இச்செய்யுளில் மூன்வாக்கியத்தின் பொருளைக்கொண்டு பின்வாக்கியத்தின் பொருள் சாதிக்கப்படுதலால், செய்யுட்குறியணி; வடநூலார் காரியலிங்கம் என்பர். இதில், செல்வத்தை ஈழ்வினையாற் பெற்றால் அப்பெற்ற பொழுதேஅதனைச் செய்யப்படுங் கடவுட்பூசையும் தானமும் முதலான தருமங்களைச் செய்துவைத்துக்கொள்ளவேண்டு மென்பது தொனிக்கும்.

இவ்வெண்பாவின் பின்னிரண்டடியில் இனவெதுகை காண்க. (க)

உ. துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்கா ற்றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்.

(இ - ள்.) செல்வம்—அகடு உற - நடுவுநிலைமை பொருந்த, யார்மாட்டும் - எவரிடத்தும், நில்லாது - நிலைபெறாமல், சகடம் கால் போல-வண்டியின் சக்கரம்போல, வரும் - (மேல்கீழாகவும் கீழ்மேலாகவும்) மாறிமாறி வரும்; (ஆதலால்),—துகள் தீர் - குற்றமற்ற, பெருஞ் செல்வம் - மிக்கநிரியம், தோன்றியக்கால் - (ஒருவனுக்கு) உண்டானஞ்ஞ்,—தொட்டு - (அவ்வண்டானதான்) தொடங்கி,—பகடு நடந்த கூழ்-எருமைக்கடாக்கள்உழுது டேந்ததனால் உண்டாகிற உணவை, பல்லாரோடு-பலரோடுங் கூடி, உண்க-(அவன்) உண்ணக்கடவன்; (எ - று.)

செல்வத்திற்குக் குற்றம்-தருமவழியாலன்றி வேறுவழியால் வருதல். அதருமவழியால் வந்த செல்வம் புகழுறங்கட்குக் காரணமாகா தாதலால், அதனை விலக்குதற்கு, 'தகடூர்செல்வம்' என்றார். பெருஞ்செல்வமென்றது-செலவழிக்கச்செலவழிக்கக் குறைவுபடாமல் மேன்மேல் வருவாயையுடைய பொருளென்றபடி. 'படுநெடுங்கூழ்' என்றது-பிறதொழில்களாற்பெரும் பொருள் பெற்றவர்க்கும் உழுபவர் உழுதாலல்லாமல் உணவு கிடையாதாதலால்-அன்றியும், நன்மூயற்சியாற்பெற்ற உணவென்பதற்கு ஒருதிருஷ்டாந்தங் காட்டினரென்றுமாம். கூழ் இங்கே உணவுப்பொதுவாய்நின்றது. 'பல்லார்' என்றது, விருந்தினர் சுற்றத்தார் முதலியோரை உட்கொண்டு. பல வகை தானங்களுள்ளும் அந்நதானத்திற்கு ஒத்ததும் மிக்கதும் வேறு இல்லாதனால், 'பல்லோராண்டுங்க' என்றார். பெருஞ்செல்வம் பெற்றதற்குப் பயன் பிறர்க்குத் தானஞ்செய்தலும் தான் அநுபவித்தலுமே யென்பதாம். "அற்காலியல்பிற்றுச் செல்வமதுபெற்ற, லற்குபவாக்கே செயல்" என்றார் திருவள்ளுவனரும். நெய்யுட்டுற்யணியோடு உவமையணி.

தீர் - தன்னினபிறவினைகட்குப்பொதுவானமுதனிலை; இங்குத் தன்வினை இக்காலங்கடந்த பெயரெச்சம், 'செல்வம்' என்னும் பெயர்கொண்டது. தீர்செல்வம் - வினைத்தொகை. தோன்றியக்கால்-கால் விகுதி பெற்ற எதிர்கால வினையெச்சம்: வலியிக்கதனால், இது பெயரெச்சத்தொடரன்று. தொட்டு, தொடு - முதனிலை. படு-அண்பெயர். நடந்தான்னும் பெயரெச்சம் காரணப்பொருளது. உண்க - வியங்கோள்; விதித்தற்பொருளது. யார் மாட்டும்—யார்-யாவர் என்பதன் தொகுத்தல், மாடி - எழாம்வேற்றுமைச் சொல்லுருபு, உம் - முற்று. நில்லாது - வினையெச்சம், 'வரும்' என்னும் முற்றுவினை கொண்டது. ஈறுகெடாம - லடசொல்.

இனி, "படியம் பெருமையேறு பலீறி யாண்மேறி யையம்பேர்" "அக லென்பது நடுவே குகிஞ்" என்னும் நிகண்டுகொண்டு படு நடந்த என்பதற்கு - பெருமை பொருந்திய என்றும், அகடுற உண்க அகலுற இயைத்து வயிறு நிறம்ப உண்க என்றும் உரைப்பாருமுளர்.

இச்செய்யுளில் 'செல்வம்' என இடையிலேநின்ற மொழி 'நில்லாது' என முதலிலும், 'வரும்' என இறுதியிலுஞ் சென்று கூடுதல், நேர்பிறைச் பொருள்கோளாம். (உ)

நூ. யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றேறு—மேனி
வினையுலப்ப வேறுவி வீழ்ந்தவர்தாம் கொண்ட
மனையாளே மாற்றுர் கொள.

(இ - ன்.) யானை எருத்தம் - யானையின்து பிடரி, பொலிய - (தரம் வீற்றிருத்தலால்) விளங்கும்படி, (அதன்மேல்ஏறி) குடை நிழல் கீழ்-வெண்

கொற்றக் குடையின் நிழலில், சேனை தலைவர் ஆய் - சேனைகளையுடைய அரசராய், சென்றேரும் - (வீதிகளில்) உலாச்சென்ற பெருஞ்செல்வ முடையவர்களும்,—ஏனை வினை - மற்றை வினை [நீவினை], உலப்ப - (அச் செல்வத்தை அழிப்பதனால், வேறு ஆகி - (அந்நிலையினின்றும்) வேறுபட்டு [வறுமையடைத்து], தாம் கொண்ட மனையாளே மாற்றாள்கொள - தாங்கள் மணஞ்செய்துகொண்ட மனைவியையும் பகைவர்கள் கவர்ந்துகொள்ளும் படி, வீழ்வர் - நிலேருலேர்து இழிவுறுவர்; (எ - று.)

தாமைநவிற்சியணி; வடதூலார் ஸ்வபாவோக்தி என்பர். எருத்து - கழுத்தின் மேற்புறம்; அம்-சாரியை. இவர்கள் ஏறுதலால் யானையின் கழுத் துக்கு அழகு உண்டாவது எனவே, இவர்களது அழகு கூறுமலே பெறப் படும். நிழற்கீழ், கீழ் - ஏழனருபு. "ஒருநாயகமா யோட வுலகுட ணுண்ட வர்" என்றவாறு ஏகசக்கராதிபத்தியமுடையராய் யாவரையும் வென்று விளங்குகிற சக்கரவர்த்திக ளென்பது தோன்ற. 'குடைநிழற்கீழ்ச் சேனைத் தலைவராய்ச சென்றேர்' என்றார். 'சேனைத்தலைவராய்' என்றது, ரத கஜ துரக பதாதி என்னுஞ் சதுரங்க சேனைகளும் தம்மைச் சூழ்ந்துவர என்ற படி. இவ்வாறு செல்வம் மிக்கிருத்தற்குக் காரணம் மூற்பிறப்பிற்செய்த புண்ணியமே யாதலால், அதற்கு எதிராகிய பாவம் - ஈனவினை எனப்பட் டது. சேனை - 'லேநா' என்னும் வடமொழி, ஆவீறு ஐயாயிற்று. வினை - பிறிதென்னும் பொருள் தருவதோர் இடைச்சொல். நீவினையை அதன் பெயராற் கூறவும் அஞ்சி 'ஏனவினை' என்னார்போலும். இனி, ஏனை என் பது - அசைநிலேயாய், வினை உலப்ப - அந் நல் வினை கெட என்றுமாம்; [சிலப்பதிகாரத்தில் "முதிர்வினை நுங்கட்கு முடிக்குந்தாகலின்" என்றதற்கு- 'நுங்கட்கு முற்பட்ட நல்வினை முடிந்த தாகலான்' என்று பொழிப்புரை கூறிய அடியார்க்குநல்லார் ' முதிர்தல் - முற்படுதல்; எனவே, நல்வினை முடிதலால் என்க: "ஏனவினை யுலப்ப" என்றார் பிறரும்' என லிசேட வுரை கூறியதுகாண்க.] செல்வமாகிய உயர்ந்த நிலேயினின்று இழிந்து வறு மையாகிய தாழ்ந்தநிலேயை அடைதலால், 'வீழ்வர்' என்றார். மனேயாளே என்றவிடத்து,'மற்றைச்செல்வங்களேயெனன்றி என இறந்ததழுவிய எச் சப்பொருளேத் தருகிற உயர்வு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. மாற் றார் - மாறுனவர்: மாறு [=எதிர்] பகுதி.

ஆற்றல் மிக்க அரசர்களிடத்துஞ் செல்வம் நிலேபெறுதென்றபடி. இவ் வளவு செல்வத்தவரும் வறியவராதல் கூறவே, மற்றையோர் வறியவராதல் கூறவேண்டாதாயிற்று. பெருந்தன்மும் போலவானமுந் தருதல்பற்றி மனேயாளே மாற்றார் கொள்ளுதலே எடுத்துக் கூறினர். "உய்ம்மின் நிறை கொணர்ந் தென் முலைகாண்டல சிம்மையே, தம்மின்சுவை மாடவரைப் பிறர்கொள்ளத் தாம்விட்டு, வெம்பி னெளிவெயிற் கானகம்போய்க் குமை தின்பர்கள், செம்மின்முடித்த திருமாலே வீரைக்கடி சேர்மினே" என்ற திரு வாய் மொழியையுங் காண்க. (க)

கூ. நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

(இ - ள்,) வாழ் நாள் - (உயிர் உடம்போடுகூடி) வாழ்கின்ற ஆயுள் நாள்கள், சென்றன சென்றன - கழிந்தன கழிந்தன; கூற்று - யமன், செறுத்து-கோபித்து, உடன்-விரைவில், வந்தது வந்தது—; (ஆதலால்),—நின்றன நின்றன - வந்துநின்ற செல்வம் முதலிய பொருள்களெல்லாம், நில்லா - நிலையில்லாதனவாம், என-என்று, உணர்ந்து - (உண்மையை) அறிந்து,—ஒன்றின ஒன்றின - (செய்தற்குச்) கூடினன தருமங்களே யெல்லாம், செயின் - செய்யப் புகுந்தால், வல்லே செய்க-விரைவில் (ஒருவரும்) செய்யக்கடவர்; (எ - று.)

செய்யக்கூடிய நற்காரியங்களைச் சிக்கிரத்திலே செய்யவேண்டும்;பின் செய்வோ மென்றால், செல்வம் அழிந்துபோம், உடம்பும் நிலையன்று என்பதாம்.

...

தொடர்பொருட்பின்வருநிலையணி. நின்றன- செல்வமும், இளமையும். நின்றன நின்றன, ஒன்றின ஒன்றின என்னும் அடுக்குகள் - மிகுதிபற்றியன. சென்றனசென்றன, வந்தது வந்தது என்னும் அடுக்குகள்- விரைவு பற்றியன. 'நின்றன நின்றன நில்லா' என்ற சொற்போக்கு, நிலைபெற்றன நிலைபெற்றன வென்ற தம்மாற் கருதப்பட்ட பொருள்களெல்லாம் நிலை பெறுமல் அழியு மென்ற கருத்தையும் விளக்கும். சென்றன, வந்ததுஎன்ற வற்றில்—தெளிவுபற்றி, நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டன; காலவழுவமைதி. வல்லே, உடன்- விரைவுப்பொருளைத் தரும் இடைச்சொற்கள். நாள் - பால்பகா அஃறிணைப்பெய ராதலால், இங்கு, சென்றன என்னும்பன்மையினை கொண்டது. தேவர்களேஇருதிணையாகவும் சொல்வது இலக்கணமாதலால், இங்கு 'கூற்று வந்தது' என அஃறிணையாக் கூறப்பட்டது. கூற்று-உடலையும் உயிரையும் வெவ்வேறுகூருக்குங் கடவுள்; உடலினின்று உயிரைப்பிரிப்பவு னென்றபடி. 'வாழ்நாள் இடையறுது செல்லுங் காலத்தினைப் பொருள்வகையாற் கூறுபடுத்துங் கடவுள்' என்பர் நச்சினர்க்கினியர். ஈற்றடி - இயைவதுகை.

"காலைச் செய்தோமென் றறத்தைக் கடைப்பிடித்துச், சாலச்செய் வாரேதலைப்படுவோர்—மாலைக், கிடந்தா னெழுத லரிதான் மற்றென்கொ, லறங்காலைச்செய்யாதவாறு" என்றார் அறநெறிச்சாரத்திலும். (எ)

ரு. என்னு மொன்றுதங் கையுறப் பெற்றக்காற்
பின்னுவ தென்று பிடித்திரா—முன்னே
கொடுத்தா ருயப்போவர் கோடறுக் கூற்றந்
தொடுத்தாறு செல்லுஞ் சுரம்.

(இ - ன்.) என் ஆனும் ஒன்ற - யாதாயினும் ஒரு பொருள், தம் கை உறபெற்றக்கால்-தமதுகையிற் கிடைக்கப்பெற்றால், பின் ஆவது என்ற - (பிறர்க்கு ஈதல்) பின்னே ஆகக்கடவது என்று, பிடித்து இரா - இறுகப் பிடித்துவைத்திராமல், முன்னே - அப்பொருள் கிடைத்தபொழுதே, கொடுத்தார் தானஞ்செய்தவர்கள்,—கோடு இல் - பக்ஷபாதமில்லாத, நீ கூற்றம்-கொடுமையையுடைய யமன், தொடுத்து - (தம்மைப் பாசத்தாற்)கட்டி, செல்லும் - கொண்டுபோகின்ற, ஆறு - வழியினுள்ள, சுரம்- வெப்புநிலத்தினும், உய போவர் - (அக்கால்வினே வந்து உதவுவதனால்) தப்பிச செல்வார்கள்; (எ - று.)

பலதீவினைகள் செய்து நரகத்திற் செல்லுந் தன்மையராயினும்,யாதாயினும் ஒருபொழுதில் ஒருநிறிதுதருமஞ் செய்திருந்தால் அதன் பயனை அர்நரகவழியிலுந் தன்பம் நீங்கி இன்பம் பெறுவ ரென்றபடி. யமன்வசப்பட்டுநரகத்துன்பம் நுகர்தலின் நிரல்வினைப்பயனுந் சுவர்க்கம்புக்கு இன்ப நுகர்வரென்ற கருத்தும் இதில் அமையும்.

'பின்னுவதென்றுபிடித்து' என்பதற்கு-பின்காலத்தில் [மூதுமையில்] (தமக்கு அப்பொருள்) பயன்படுவது என்று எண்ணி லோபஞ்செய்து என்றும் உரைக்கலாம். கோடு- முதனிலைத் தொழிற்பெயர். கோடுதல்-கோணுதல்: கடுவுநிலைமைதவறுதல். கோடில் கூற்றம் என்றது - நல்வினைசெய்தோர்க்குத்தீமையையும், தீவினைசெய்தோர்க்கு நன்மையையும் மறந்துக் தாராதவ னென்றற்கு: 'கடுவன்,' 'மைவரி,' 'தருமன்' என்கிற அவனது பெயர்களாலும்அறிக. பாவஞ்செய்தவர்களைத் தண்டிப்பதில் எவ்வளவும் இரக்கமில்லாமைபற்றி, 'நீக்கூற்றம்' என்றார்.

என், ஆனும் என்பன - எவன், ஆயினும் என்பவற்றின் விகாரங்கள். பெற்றக்கால் - காலிற்றா வினையெச்சம். இரா-ஈறுகெட்ட எதிர்மறைவினையெச்சம். சுரம் - ஜ்வரம் என்ற வடமொழியின் திரிபு; சுரம் என்றது - அதிபத்திரவனம் போல்வதை. உய=உய்ந்த: எச்சத்திரிபு. (கு)

கூ. இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொர்இக்
கூற்றங் குதித்துய்ந்தா ரிங்கில்லை—யாற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமி னீதே
தழீஇத்தழீஇத் தண்ணம் படும்.

(இ - ன்.) இழைத்த நான்- (ஊழ்வினையால்) விதிக்கப்பட்டுள்ளஆயுள் நாள்கள், எல்லை இகவா - (தமது) அளவைக் கடவாதனவாம்; கூற்றம் - யமனிடத்தினின்றும், பிழைத்த - தப்பி, ஒரீஇ - நீங்கி, குதித்து - (அவனெண்ணத்தைக்) கடந்துபோய், உய்ந்தார் - உயிர்வாழ்ந்தவர்கள், ஈங்கு இல்லை - இவ்வுலகத்தில் (எவரும்) இல்லை; (ஆதலால்), ஆற்ற பெரும்பொருள் வைத்தீர்-மிகவும் அதிகமான செல்வத்தைச் சேர்த்துவைத்திருப்பவர்களே! வழங்குமின் - (விரைவாகவே) தானஞ்செய்யுங்கள்; நாளே - நாளோக்கே, தண்ணம்-இறந்தவர்க்கு உரிய நெய்தற்பறை, தழீஇம் தழீஇம்-தழீம் தழீம் என்னும் ஓசைஉண்டாம்படி, படும்- அடிக்கப்படுதல்கூடும்; (எ - று.)

குறுகவுங்குறுகாத வளரவும்வளராத என்றற்கு, பொதப்பட,'எல்லே யிகவா' என்றார். ஓரீஇ-ஒருவீ; சொல்விகாரப்பட்டு அளபெடித்ததனால், செய்வினை யளபெடை. பெரும்பொருள் - பெருமையைத் தருவதாகிய பொரு ளெனினுமாம். 'பிழைத்தீ ஓரீஇ' என்பதை 'இகவா' என்பதனோடு கூட்டியுரைப்பாருமுளர். 'பகும்' என்பதற்கு- ஒலிக்குமென்றபொருளும் உண்டி. "சென்றநாளெல்லாஞ் சிறுவிரல்வைத் தெண்ணலாம், நின்றநாள் யார்க்கும்உணர்வரிது" ஆதலால் 'நாளே' என்றார். இங்கு 'நாளே' என்றது- எதிர்காலத்தையுணர்த்தவந்ததோர் குறிப்புச்சொல். தண்ணம்-தண்ணுமை யென்கிற சர்க்காட்டுப்பறை. தழீஇும் தழீஇம்-அகரண மென்னும் ஒலிக் குறிப்பு; இரட்டைக்கிளவி: இயற்கையளபெடை.

மரணம் சம்பவிக்கு மென்பது, 'தழீஇத் தழீஇத் தண்ணம் பகும்' என வேறொருவகையாற் காட்டப்பட்டது: இது, பிறிதினவிற்சியணி; வட நூலார் பர்யாயோக்தாலங்காரம் என்பர்.

இச்செய்யுள் - பலவிகற்பவினிசை வெண்பா. (க)

எ. தோற்றஞ்ஞான் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்ற மளந்துநாங் காணுண்ணு—மாற்ற
வறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவா தகரில்.

(இ - ள்.) தோற்றம் சால் ஞாயிறு - உதித்தல் பொருந்திய சூரியனே, நாழி ஆ - அளவுகருவியாகக்கொண்டு, வைகலும் - நாள்தோறும், கூற்றம்-யமன், நம் நாள் - உங்கள் ஆயுட்காலங்களே, அளந்து-அளவிட்டு, உண்ணும்-உண்டுவருகின்றான்: (ஆதலால்),—ஆற்ற - மிகுதியாக, அறம் செய்து - தருமஞ்செய்து, அருள் உடையீர் ஆகுமின் - (உயிர்களிடத்துக்) கருணை யுள்ளவராவீர்கள்; (அவ்வாறு ஆகாவிட்டால்), யாரும்-எப்படிப்பட்டவரும், பிறந்தும் - (இவ்வுலகத்தில் மனிதராய்ப்) பிறந்தும், பிறவாதாரில்-பிறவா தவர்போலவே (ஆவர்); (எ - று.)

'தோற்றஞ்சால்' என்பதற்கு- "தோற்றஞ்சால் தொகுபொருள்" என் றும் கலித்தொகையிற்போல 'விளக்கமைந்த' எனவுமாம். 'இறவாதாரில்' எனவும் பாடங்கொள்வர். 'ஞாயிறு நாழியா' என்றும், 'உண்ணும்'என்றுங் கூறியதற்கு ஏற்ப, நாள்களாகியதானியங்களே என்னுதலது-ஏகதேசவுருவக வணி. தோற்றம்-தோன்றுதல்: தொழிற்பெயர்; தோன்று - பகுதி, அம் - விகுதி, வலித்தல்- விகாரம். சால்-உரிச்சொல்.வைகலும், உம்மை-தொறுப் பொருளது. உண்ணும் - கழிப்பான் என்றபடி. சூரியனது உதயஅஸ்தமயங் களிஞலே நாள் உண்டாகிக் கழிவதனாலும், அது கழிய ஆயுள் குறைவது ஞலும்இவ்வாறுகூறினர். மேல் உ-ஆஞ் செய்யுளையும்,"நாளெனவொன்று போற் காட்டி யுயிரிரும், வாள துணர்வார்ப் பெறின்," "வாள்நாளி நாள் கள் செல்ல" என முன்னோர் கூறியிருத்தலையுங் காண்க. "ஆயுஷ்கண்ட மாதாய ரவிரஸ்தங் கமிஷ்யதி" என்னும் வடநூன் மேற்கோளும் இங்குக் கவனிக்கத்தக்கது. பலவகைப்பிறவிகளுள்ளும் அரியதாகப்பெற்ற மக்கட்

பிறப்புக்குப் பயன் அருள்கொண்டு அறஞ்செய்து உறுதிபெறுதலே யாதலால், 'ஆற்ற அறஞ்செய்து அருளுடையீராகுமின் யாரும் பிறந்தும் பிறவாதாரில்' என்றார். "அறனும் அருளுடையான் கண்ணதே யாகும்", "அருளிலார்க்கு அவ்வுலக மில்லை" என்பவாதலால், 'அருளுடையீராகுமின்' என, அறத்திற்குக் காரணமான அருள்எடுத்துக் கூறப்பட்டது.

'யாரும் பிறந்தும் பிறவாதாரில்' என்றது - அருளுடையராய் அறஞ் செய்யாதவர் அடைதற்கு அரிய மானிட சன்மத்தை அடைந்திருந்தும் அதன் பயன் பெருமையால் அதனை அடையாதவராகவே எண்ணப்படுவ ரென்றபடி. அவர்கள் பருத்தறிவின்மையால் விலங்கோடொப்ப ரென்ற கருத்தும் இதில் அமையும். பிறவாதாரில், ஐந்தனுருபு - ஒப்புப்பொருளது; இது - ஒப்பில்போலி. 'ஆவர்' என வினைமுற்று வருவிக்க. ஏழனுருபாகக் கொண்டு, பிறவாதாரில் (வைத்து எண்ணப்படுவர்) என்றுமாம். இனி,உண்ணும் என்பதனோடு கூட்டி, எவரும் பிறந்தும் பிறவாதவர்போலாம்படி [இறக்கும்படி] கூற்றம் நாள் உண்ணும் என்று உரைப்பாரு முளர்.

உண்ணும்-செய்யுமென்முற்று, நிகழ்கால முணர்த்திற்று. அறம்-செய்யத்தக்கது எனநூல்களால் வரையறுக்கப்பட்டது என்பொருள்படும்காரணக்குறி; அறு-பகுதி, அம்-செயப்படுபொருள்விகுதி: [இதன்எதிர்மொழி-மறம்; அதரும்ம்: செய்யத்தகாதது என நூல்களால் மறுக்கப்பட்டது என அதற்குக்காரணப்பொருள் காண்க.] 'அறஞ்செய்து அருளுடையீராகுமின்' என்றதை அருளுடையீராகி அறஞ்செய்மின் என விகுதிபிரித்துக் கூட்டுதலும் ஒன்று. (எ)

> ஆ. செல்வர்யா மென்றுதாஞ் செல்வழி யெண்ணுத
> புல்லறி வாளர் பெருஞ்செல்வ—மெல்லிற்
> கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
> மருங்கறக் கெட்டு விடும்.

(இ - ள்.) செல்வர் யாம் என்று - (இப்பொழுது) செல்வமுடையோம் நாம் என்று எண்ணிக் களித்து [நம்மைத் தாமே மதித்து], தாம்செல்வழி-தாம் போகுமிடங்களில், எண்ணுத - (பிறரை) மதியாத, புல் அறிவாளர் - அற்பபுத்தியுடையவர்களின்து, பெருஞ்செல்வம்-மிக்கசெல்வமும்,—எல்லில்-இராத்திரியில், கருங் கொண்மூ - கருநிறமுடைய மேகம், வாய் திறந்த - வெளிவிட்ட, மின்னு போல - மின்னல் போல, தோன்றி - (மிகசிறிது பொழுது) காணப்பட்டுமின்று, (உடனே), மருங்கு அற - இருந்த இடமுங் தெரியாமல், கெட்டுவிடும் - அழிந்துபோம்; (எ - று.)

**உவமையணி.**

இனி, 'தாம் செல்வழியெண்ணுத' என்பதற்கு-மறுமையில் தாம் செல்லுங்கதியை ஆலோசியாத என்று உரைத்தலு மொன்று. செல்வர் யாம்-தன்மையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி. செல் + உழி = செல்வுழி: வகரமெய்-உடம்படுமெய்யல்லாதமெய்; 'மெய்பிற்றுடம்படுமெய்' என்பார்சிலர்க்கினியர். மேல் திரு - ஆஞ் செய்யுளில் 'தேய்விடத்து' என்பதில் உள்ள

வகரமும் இது. கரிய இருளோடுடைய இரவிலே ஒளிமிக்கு விளங்குதலால், ஞலலில் தோன்றுகிற மின்' என்றார். கொண்மூ - நீரைக் கொள்வ தென்னும் பொருளில் வந்த காரணப்பெயர் போலும் பார்வைக்கு வாயைத் திறந்து விடுவதுபோலக் காணப்படுதலால், 'வாய்திறக்கு மின்' என்றது. மின்-செல்வத்துக்குத் தொழிலுவமை; உ - சாரியை. கெட்டுவிடும், விடு - தணிவுப்பொருளுணர்த்தும். (அ)

கூ. உண்ணு ஞெளிநிரு ஞேங்கு ! ழுஞ்செய்யான்
முன்னருங் கேளிர துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
விழுந்தானென் றெண்ணப் படும்.

(இ - ன்.) (ஒருவன்), உண்ணுன்-(தானும்) அனுபவியான்; ஒளிநிருன்-(அதிப்பையும் நிலைபெறச் செய்யான்; ஓங்கு புகழ் செய்யான் - மேம்பட்ட கீர்த்தியையும் சம்பாதியான்; தன் அருங் கேளிர் துயர் களையான் - சேர்தற்கு அரிய உறவினரது துன்பத்தையும் போக்கான்; கொன்னே வழங்கான்-கைம்மாறு கருதாமல் தானமுஞ் செய்யான்; (இவ்வாறு இருந்து), பொருள் காத்திருப்பான் எல்-செல்வத்தைக் காவல்செய்து வைத்திருப் பானுனல், (அவன்), அ ஆ - ஐயோ! இழந்தான் என்று எண்ணப்படும் - (அப்பொருளை) இழந்துவிட்டானென்றே (யாவரா லும்) நினைக்கப்படுவான்.

பாடுபட்டுத் தேடிய செல்வத்தைத் தானும் அனுபவியாமல் கல்விஷயத்திலும் உபயோகப் படுத்தாமற்போனுல் அதனை யிழந்ததற்குச் சமானமே என்ற கருத்து; வைத்திருந்தும் பயனில்லை யென்றபடி.

பரிமேலழகர் "ஓரதல் வேண்டி மொளிமாழுஞ் செய்வினை" என்ற திருக்குறளின் உரையில் 'ஒளி-தாம் உளகாலத்து எல்லாராலும்கண்குமிதிக்கப்படுதல்' என்றும், "ஒளி யொருவற்குளள வெறுக்கை" என்ற திருக்குறளின்உரையில் 'ஒளி-தான் உளஞுகாலத்து நிக்குத்தோன்றுத துடைமை; "ஒளிநிரு ஞேங்குபுகழ் செய்யான்" என்றார் பிறரும்' என்றும் உரைத்தலற்றை இங்கே உணர்க; 'ஒளியாவது - வெள்ளைமையின்மை' என்பர் தொல காப்பியவுரையில் நச்சினர்க்கினியர். நிருன், நில்என்பதன்பிறவினையாகிய நிறு-பகுதி. புகழ் - இம்மைப்பயனுய் இவ்வுலகத்தில் என்றும் அழியாமல் நிற்கும் கீர்த்தி;தாம் இறந்தழியும் தாமறுத்தநியவரா ஞலகம் உயர்த்துக் கூற நிலைபெறுவது. "நிலவரை நீள்புக ழாறறிற் புலவரைப், போற்றுதியுத் தேள ளுலகு" எனத் திருக்குறளிலும், "புலவர்பாடும் புகழுடையோ ரிகம் பின், வலவ னேவாவான மூர்தியெய்துப வென்பதஞ் செய்வினைமுடித்து" எனப் புறநானூற்றிலும் கூறியபடி, அது மறுமைக்கு காரண மென்பது தோன்ற, 'ஓங்குபுகழ் எனப்பட்டது. கேளிர்-(யோகவேமங்களைக்) கேட்பவர்; இர்-பலர்பால் விகுதி; 'மகளிர்' என்பதிற் போல. கொன்னே-பயனின்மைப்பொருள் தருவ தோர் இடைச்சொல். இதனே, 'காத்திருப்பான்' என் பதனேடு கூட்டி, வீணுகச் செல்வத்தைப் பாதுகாத்து வைத்திருப்பா னென்று பொருள்கொள்ளினும் அமையும். அ ஆ - இரக்கக்குறிப்பிடைச் சொல். எண்ணப்படும்-செய்யுமென் முற்று, ஆண்பால். முன்னிரண்டடி-இன்வெனுதுகை.

அ ஆ என்பது விட்டிசைத்ததனால், தனிக்குறில் முதலில் கோசையாயிற்று; ஆகவே, தேமாச்சீராய்த் தனைக்கு இயையும். ''விட்டிசைத் தல்லால் முதற்கண் தனிக்குறில் கோசையென்று, ஒட்டப்படாது அதற்கு 'உண்ணுண்' உதாரணம்'' என்ற யாப்பருங்கலக்காரிகையையும், 'இதனுள் 'அ ஆ' என்புழி அருளின்கண் குறிப்பாய் மொழிமுதற்கண் நின்றகுற்றெழுத்திவிட்டிசைத்த கோசையாயினவாறும், அல்லாதவழிக் குறில்கெடிலோடுங்கூடி நிரையசையாயினவாறும் கண்டுகொள்க' என்றதனதுரையையும் உணர்க.

கo. உடாஅது முண்ணுதுந் தம்முடம்பு செற்றுஞ்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்திட்டி ஞரிமுப்பர் வான்றோய் மலைநாட
வுய்த்திட்டிங் தேனீக் கரி.

(இ - ன்.) வான் தோய் மலை நாட-ஆகாயத்தை யளாவியுயர்ந்தமலைகளை யுடைய(பாண்டிய) நாட்டின் அரசனே!—உடாதும் - (நல்ல உடுப்புக்களை) உடுக்காமலும், உண்ணுதும்-(நல்ல உணவுகளை) உண்ணாமலும், தம் உடம்பு செற்றும் - தமது உடம்பை வருத்தியும், கெடாத நல் அறமும்செய்யார் - (எக்காளும்) பயனழியாத நல்ல தருமங்களையுஞ் செய்யாமலும், கொடாது - (ஏழைகட்குக்) கொடாமலும், வைத்து - (செல்வத்தைக் காவல்செய்து) வைத்து, ஈட்டினர் - (மேன் மேலும்) சம்பாதித்தவர்கள், இழப்பர் - (அச் செல்வத்தை ஒருகாலத்தில்)இழந்தேவிடுவார்கள்; (அவ்வாறுஇழப்பதற்கு), —உய்த்து ஈட்டும் தேனீ - (பலபூக்களினின்று தேனைக்) கொண்டுபோய் வைத்து (மேன்மேலுஞ்) சேர்க்கிற தேனீக்கள், கரி - சாக்ஷியாம்;(எ - து.)

தேனீக்கள் பலகாளாகச் சிறிதுசிறிதாகச் சேர்த்துவைத்த தேனை ஒரு நாளிற் பிறனொருவன் கொண்டு போவதுபோல, ஒருவன் பலகாலமாகச் சேர்த்துவைத்த செல்வத்தை ஒருகாலத்திற் கள்ளர் முதலியோர்கொண்டு போவரென்றுகருத்து;உவமையணி. ''ஈயார் தேட்டைத் தீயார்கொள்வர்'' என்ற ஔவையார் அமுதமொழி, இரட்டுறமொழிதலால், கொடாதசெல்வமிகளது செல்வத்தைக் கொடியோர் கைப்பற்றுவர் என உபமேயமாகவும், ஈக்கள் தேடிவைத்த தேனைத் திக்கேலோயுடைய வேடர் கவர்வர் என உபமானமாகவும் ஒன்றே இருபொருள்பட்டு இப்பாட்டின் கருத்தை விளக்குதல் காண்க.

'மலைநாட' என்றதனால், தேனீயை வருத்தக்கூறினர். வான்றோய் மலைநாட-ஆடுமேழுன்னிலை.ஆடுஉமுன்னிலையாவது - புருஷனே முன்னிலைப் படுத்திக்கூறுவது; [இவ்வாறு மகடூஉமுன்னிலையும் உண்டு: அது-பெண்ணே முன்னிலைப்படுத்துவது.] இந்த நாலடியாரின் பாடல்கள் சமணமுனிவர்களாற்பாண்டியநாட்டிற் பாடப்பட்டனவாதலால், இவற்றில் வருகிறமுன்னிலைகளைப் பாண்டியராசனைக் குறித்தனவென்னலாம். மருதனிளநாகியர் அந்நாட்டை அடுத்துள்ள குறிஞ்சிநிலத்தின் மாட்சியைக் கூறுவார், 'வான்தோய்மலைநாட' என்பர். ''இருபுனலும் வாய்ந்த மலியும் வருபுனலும், வல்லணங்கும் நாட்டிற்கு உறுப்பு'' என்ற திருக்குறளினாலும், 'இடை

யதன்றி ஒருபுடையதாதலும் தன்வளர்தருதலும் மாரிக்கண் உண்டகீர் கோடைக்கண் உமிழ்தலும்உடைமைபற்றி, வாய்ந்த மலையென்ரும்' என்ற அதன் உரையாலும், மலை காட்டிற்கு அவயவமாதலும், நிலவளத்திற்கு இன்றியமையாத நீர்வளத்திற்குக் காரணமாதலும்காண்க.

செற்று, செறு-முதனிலை. வான் தோய் மலை-மேகம்படியப்பெற்றமலை யெனினுமாம். தெடோஅத என்பதனோ பிறவினையாகக்கொண்டு, (தன்னே விரும்பிசெய்தவர்களேத் தான்) கெடுக்காத நன்மையையுடைய அற மென்னவுமாம்.

அளபெடைகள்மூன்றும், செய்யுளிசை நிறைக்கவந்தவை. அளபெடை கள் அடித்துவந்தது, அளபுத்தொடையாம். (கo)

## உ- ஆம் அதிகாரம்.—இளமைநிலையாமை.

அஃதாவது - இளமைப்பருவத்தினது நிலையில்லாமையை உணர்த்து வது. இங்கே, இளமை யென்றது - யௌவனம்; அது - பதினறுபிராயத் துக்குமேல் மூப்பத்திரண்டு பிராயத்துக்குள் சிற்றின் பவிஷயங்களில்மயங்கு கின்ற காலேப்பருவம். புல்லறிவுடையார் பெரும்பான்மையும் முறையேபற் றுச்செய்வது சிற்றின்பத்திற்கு ஏதுவாகிய செல்வத்தினிடத்தும், அதனே அனுபவித்தற்கு உரிய இளமையினிடத்தும், அப்பருவத்திற்கு இடமாகிய உடம்பினிடத்துமே யாதலால், அம்முறையே, இந்த இளமைநிலையாமை - செல்வநிலையாமையின்பின் வைக்கப்பட்டது. திருவள்ளுவனுரும்நிலையாமை யென்னும் அதிகாரத்துள் இம்முறை தோன்றக் கூறியவாறும் காண்க. இளமை - பண்புப்பெயர்.

**கக.** நரைவரு மென்றெண்ணி நல்லறிவாளர்
குமுலி யிடத்தே துறந்தார்—புரைதீரா
மன்னு மிளமை மகிழ்ந்தாரே கோழாஅன்றி
யின்னுங் கெழுந்திருப் பார்.

(இ - ன்.) நரை வரும் என்று - மூதுமைப்பருவம் வரு மென்று; எண்ணி - நினேத்து, குமுலியிடத்தே-இளமைப்பருவத்திலேயே, துறந்தார்- (பற்றுக்களே) விட்டவர்கள், நல் அறிவாளர் - குற்றமற்றவிவேகமுடையவ ராவர்; புரை தீரா - (காமவெகுளிமயக்கங்களாகிய). குற்றங்கள் நீங்காத, மன்னு - நிலேபெருத, இளமை - இளமைப்பருவத்தில், மகிழ்ந்தாரே - (சிற் றின்பத்தை அனுபவித்தலால்) களிக்கத் நல்லறிவில்லாதவர்களே, கோல் ஊன்றி - (கடைத்தற்கு ஆதாரமாகத்) தடியை ஊன்றிக்கொண்டு, இன்னுங்கு- தன்பத்துடன், எழுந்திருப்பார் - எழுவார்கள்; (எ - று.)

இளமையில் துறந்தவர்களே பின்பு பேரின்பமனுபவிப்பர்;சிற்றின்பத் தை விரும்பித் துறவாதவர்களே பலரால் துன்பமனுபவிப்பர் என்பதாம்.

கரை - மயிர்வெளுத்தல்; அதற்குக் காரணமான மூப்புக்கு இங்கு ஆகுபெயர். எண்ணி - துறத்தலாலுண்டாகும் பெரும் பயன்களோயும், துற வாமையாலுண்டாகும் இடர்களோயும் சீர்தூக்கி யாலோசித்து என்னவுமாம். இளமைப்பருவத்தே துறத்தற்கு ஏதுவாயினமைபற்றி'நல்லறிவு' என்றும், அங்ஙனம் அருமையாகப்பெற்ற நல்லறிவைத் தக்கவழியிற் பயன்படுத்து தல் பற்றி 'நல்லறிவாளர்' என்றும் கூறினர். தாமாகவேஎழுந்திருக்கமாட் டாமையேயன்றிக் கோலூன்றிக்கொண்டும் எழுந்திருக்க வருந்துவரென் பதி, அவ்வாது வலிமை யின்மையை ஈன்கு விளக்கும். ஏகாரமிரண்டும் - பிரி நிலை. குழ - இளமைப்பொருள் தரும் உரிச்சொல்: இங்கு, இ - பகுதிப்பொ ருள்விகுதி; "உருளி மாமதி" என்ற சிந்தாமணியிற் போல. நீர, மன்னு என்ற எதிர்மறைப் பெயரெச்சங்கள் - அடுக்கி 'இளமை' என்னும் பெய ரோடு முடிந்தன; "மூவா முதலா வுலகம்" என்ற சிந்தாமணியிற் போல. இன்னுங்கு - ஒருசொல்; 'பட்டாங்கு' என்பது போல. எழுந்திருப்பார்- ஒருசொல்: இரு-தணிவினை; இனி, எழுந்து இருப்பார் எனப்பதம்பிரித்து, எழுந்து (கிற்கவும்மாட்டாது மீட்டும்) இருப்பர் என்றலும் ஒன்று.

முதலிரண்டடியில் இனவேதுதை காண்க; அடுத்தசெய்யுளிலும்இது.

**கஉ**. நட்புரா ரற்றன நல்லாரு மஃகினு
ரற்புத் தனீயு மவிழ்ந்தன—வுட்காணாய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்ததே
யாழ்கலத் தன்ன கலுழ்.

(இ - ன்.) நட்பு - தினைகங்களாகிய, ரார் - பாசங்கள், அற்றன - (உனது கண்பார்க்கு உன்னிடத்து) அற்றுப்போயின; நல்லாரும் - (இளமை யில் உன்பக்கல் அன்புகொண்ட) மாதர்களும், அஃகினர் - அன்புருமைக் தார்கள்; அன்புதானேயும்- அன்புகளாகிய கட்டுக்களும், அவிழ்ந்தன-(உன்சுற் றத்தார்க்கு உன்னிடத்தில்) தளர்த்துபோயின; உள் காணாய் - மனத்தில் ஊன்றிஆலோசித்துப்பார்; வாழ்தலின் - (இளமையைப் பொருளென மதித்தமையிழ்ந்து) வாழ்ந்ததனால், ஊதியம் என் உண்டாம் - என்னபயன் உண்டாயிற்று? ஆழ் கலத்து அன்ன - (கடலில்) மூழ்குகின்ற மரக்கலத்தி னுள்ளவர்க்கு வந்தது போன்ற, கலுழ் - துன்பம், வந்ததே-(இப்பொழுது) வந்துவிட்டதே! (எ - று.)

இச்செய்யுள் - இளமைப்பருவத்திற் சிற்றின்பத்தையே விரும்பி அனு பவித்து வலிமைகுன்றி வீரைவிலே முதுமையடைந்த ஒருவனை நோக்கி, அவ்விளமையை மகிழ்ந்ததனை யுண்டான தீமைகளை எடுத்துச்சொன்ன தாகச் செய்யப்பட்ட தென்க. முன்னிரண்டடியில் உருவகவணியும், ஈற் றடியில் உவமையணியும் காண்க.

நண்பரும் உறவினரும் பலராதல்பற்றி, நட்பும் அற்புத்தனீயும் பல வாயின. நட்பு, தனீ என்பன - பால்பகாவஃறிணைப்பெயராதலால், 'அற் றன', 'அவிழ்ந்தன' என்னும்பன்மைவினையைக்கொண்டன. நட்பு-தொழிற்

பெயர்; நள் - பகுதி; பு - விகுதி. உம்மைகள் - எச்சப்பொருளன. காணும் என்ற ஏவலொருமைமுற்றில், ஆய்- விகுதி. ஏகாரம்-இரக்கம். அற்புத்தனே-பாசபந்த மெனப்படும். வாழ்தலின், இன் - ஐத்தனுருபு: ஏதப்பொருளது. என் - ஏவன் என்ற வினாப்பெயரின் விகாரம்; இது, அஃறிணையுயர்திணைப் பொது. 'ஆழ்கலத்தன்ன கலி' என்று பாடமோதுவாரும் உளர்; கலி-துன்பம். "நல்லா, ஞடன்படிற் ஞனே பெருகும்" என்றபடி நல்லான் என்று இலக்குமிக்குப் பெயராதலால், நல்லார் என்பது - பெரும்பாலும் மகளிரை உணர்த்தும். அற்புத்தனே = அன்பு + தனே; அல்வழியில் மென்மொடர் தன்னினவன்மொடராயிற்று.கலம்-அதிலுள்ளவர்க்கு இடவாகுபெயர்.ஆழ்கலம்-வினைத்தொகை. கலுழ் - கலுழ்ச்சி: முதனிலைத் தொழிற்பெயர்: கலக்கம், புலம்பல். ஆம் - அசை.

"காற்றத் திடைப்பட்ட கலவர் மனம்போல, ஆற்றத் தளங்காதிற்ப ஞழிவலவா" எனப்பெரியதிருமொழியிலும், "பண்ணூர் களிறேபோற் பா யோங்குயர்காவாய், கண்ணூர் கடன்மண்டிக் காற்றிற் கவிழுங்கால், மண் ணூர் மணிப்பூணேய் மக்களுர் தன்பம், நண்ணு நரகத்தின் நான்கா மடி யன்றே" எனச் சிந்தாமணியிலும், பிறநூல்களிலும், கலம்கலிழ்தமக்கள் படுந்துன்பமே மிக்கபெருந்துன்பத்துக்கு எடுத்துக் காட்டப்படுதல்காண்க.

கூ. சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பற்கழன்று பண்டம் பழிகாறு—மிற்செறிந்து
காம நெறிபடரு நண்ணினர்க் கில்லையே
யேம நெறிபடரு மாறு.

(இ - ன்.) சொல் தளர்ந்து-சொற்கள் தளர்ச்சியடையப்பெற்று,கோல் ஊன்றி-தடியையூன்றிக்கொண்டு, சோர்ந்த நடையினர் ஆய்-தளர்ந்தநடை யையுடையவர்களாய், பல் கழன்று-பற்கள் விழுந்துபோய்,பண்டம்-இவ்வுட லாகிய பொருள், பழி காறும் - (கண்டவர்யாவராலும்) பழிக்கப்படுமளவும் [மூப்புமுதிருமளவும்], இல் செறிந்து - இல்வாழ்க்கையிலேயே பொருந்தி, காமம்நெறி - ஆசையின்வழியிலே, படரும்-செல்லுகின்ற, நண்ணினர்க்கு-சேர்க்கத்தை யுடையவர்கட்கு,—எமம் நெறி - பேரின்பத்தைத் தருகின்ற முத்திமார்க்கத்தில், படரும் ஆறு - செல்லும் விதம், இல்லையே - உண் டாகாதே; (எ - று.)

வாழ்காளுள்ளமட்டும் சிற்றின்பத்தையே அனுபவித்துக் கொண்டுதூற வாதவர் நற்கதிபெறுவது அரிய தென்பதாகருத்து. எமம்நெறி-தமதுயிர் க்குஅரணுகிய நல்நெறி; வினைகளோப்போக்கிக் கூற்றத்தினின்றுதப்புவித்து முத்திபெறுவிக்குந் துறவொழுக்கம்.

இல் - இல்லறவாழ்க்கைக்கு ஆகுபெயர். பண்டமென்னுஞ் சொல், உடம்பின் இழிவு தோன்ற நின்றது. பழிகாறும் - பழிக்கப்படுமளவும்: செயப்பாட்டுவினைப்பொருளில்வந்த செய்வினை. காறு - எல்லைகுறிப்பு தோர் இடைச்சொல். தளர்ந்து, கழன்று என்னுஞ் சினவினைகள்-முதலின் மேல்நின்றன. ஏகாரம்-தேற்றத்தோடு இரக்கம். (கூ)

கச. தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டின்ற
வீழா விறக்கு மிவண்மாட்டுங்—காழிலா
மம்மர்கொண் மாந்தர்க் கணங்காகுந் தன்கைக்கோ
லம்மணீக்கோ லாகிய ஞான்று.

(இ - ள்.) தாழா - (உடம்பு) கூனடைத்தும், தளரா-மெலிக்தும், தலை நடுங்கா - தலைநடுங்கியும், தண்டு ஊன்ற - தடியை ஊன்றியும், வீழா - மேழ விழுந்தும், இறக்கும் - மரணவேதனைப்படுகின்ற, இவள்மாட்டும்-இவ ளிடத்தும், காழ் இலா மம்மர் கொள் - மனவுறுதியில்லாமற் காமமயக்கத் தைக் கொண்ட, மாந்தர்க்கு - மனிதர்க்கு,—(இவள்),—தன் கை கோல்-(இப்பொழுது) தனது கையில் (ஊன்றுதற்குப் பிடிக்கப்பட்ட) கொம்பு, அம்மனே கோல் ஆகிய ஞான்று - தன்தாய்க்கு ஊன்றுகோலாயிருக்தகா லத்தில் [தான் இளமைப்பருவ முடையளாயிருந்தபொழுதி], அணங்கு ஆகும் - மோகினியென்னுக் தெய்வப்பெண்ணாயிருந்திருப்பள்; (எ - று.)

இச்செய்யுள் • பெண்களின் இளமையைக் கண்டு வீரும்புவோர்க்கு இறந்தபடும் அமயத்தையுடைய முதியளொருத்தியைச் சுட்டிக்காட்டி 'இவள், இளமைப்பருவத்திலே காமுகர்க்கு மேன்மேல் ஆசையை மூட்டத் தக்க கட்டழகுடையளா யிருந்தவள்: இப்பொழுது இவ்வாறாயினள் என்று இளமையிலையாமையை உணர்த்துவதாகச் செய்யப்பட்டதென அறிக.

தண்டு - தண்டமென்னும் வடமொழியின் விகாரம். மாந்தர்-பன்மைப் பெயர். 'மாந்தர்' என்ற சொல்லின் ஆற்றலால், மர்தபுத்தியுடையா ரென் பதுதோன்றும். 'அணங்கு - காமகெறியான் உயிர்கொள்ளுக் தெய்வமகள்' என்பர் பரிமேலழகர்; இச்சொல்லுக்கு - தேவமாதா என்றும், திருமகள் என்றும் பொருளுண்டு. 'அணங்கு ஆகும்' என்பதற்கு - இவள் திருத்தஞ் செய்தவளாவள் என்றலு மொன்று. வீழக்கும் எனப் பிரித்து, வெருவும் என்ற பொருளுரைப்பாரு முளர்; "வீழப்பே வெருவப் பொருட்பெயரும்" என்பது தொல்காப்பியவுரிச்சொல்லியற் சூத்திரமாதலால். இனி,'(இவள்), அம்மனைக்கோல் தன்கைக்கோலாகிய காலத்தில் [முதுமையடைந்தபொ ழுது] தாழ்ந்து தளர்ந்துதலைநடுங்கித் தண்டின்றி வீழ்ந்து இறப்பள்; இவ விடத்தும் கெஞ்சுறுதியில்லாத பேதைமைகொண்ட மனிதர்க்கு ஆசை உண்டாகாதின்றது; (இது என்னவகையற்கை!)' என்று இகழ்ந்ததாகப் பொருள் கூறுதலும் அமையும்.

தாழா, தளரா, நடுங்கா, ஊன்ற, வீழா உடன்பாட்டெச்சங்கள்; 'ஆ' என்ற வினையெச்சவிகுதியே இறந்தகாலங்காட்டிற்று. உம் - இழிவுசிறப்பு. இலா-ஈறுகெட்டவிர்மறைவினையெச்சம். "செலவிகாரமாமுயர்திணை" என் பதனால், 'அம்மனைக்கோல்' என உயர்திணைப்பெயரின்முன் வலிமிக்கது.

'அம்மனைக்கோல் தன்கைக்கோலாகியஞான்று' என்றது-பிறிதினவிற் சியணி. முதலடி - முற்றுமோனை. (எ)

கடு. எனக்குத்தா யாகியீர் ளென்னீமீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்ற—டனக்குத்தா
யாகி யவளு மதுவானற் ருய்த்தாய்க்கொண்
டேகு மனித்தில் வுலகு.

(இ - ள்.) எனக்கு தாய் ஆயினள்-எனக்குத் தாயாயிருந்தவள், என்னை நமக்கு இட்டு -'என்னே இவ்விடத்தில் விட்டிட்டு, தனக்கு தாய் நாடியே - தனக்கு ஒரு தாயைத் தேடிக்கொண்டே, சென்ருள் - இறந்துபோனுள்; தனக்கு தாய் ஆகியவளும்-அவளுக்குத் தாயாயிருந்தவளும், அது ஆலை - அவ்வாறே போனுளாதலால்,—இ உலகு - இவ்வுலகத்துப் பிராணி வர்க்கமெல்லாம், தாய் தாய்கொண்டு-தாயைத் தேடிக்கொண்டே,ஏகும்-செல்லுகின்ற, அளித்து - எளிமையையுடையது; (எ - று.)

இட்டு-பெற்றுவைத்து. தனக்குத் தாய்நாடிச்சென்ருளென்றது - இறந்தமற்றொருத்தியின்வயிற்றிற்புகுந்திட்டா ளென்றபடி. உலகத்திற்பிறந்த மனிதர்கள் யாவரும் இளமைகழிந்து முதுமையடைந்து இறக்குந்தன்மையையுடையவரென்று இளமைநிலையாமையை ஒரு திருஷ்டாந்தங்கொண்டு விளக்கியபடி.

தாய்க்கொண்டு என்பதில், தாய்-தாவு என்பத னடியாப்பிறந்தஇறந்தகாலவினையெச்சம். அளித்து-ஒன்றன்பாற் குறிப்புமுற்று; து-விகுதி.

இப்பாட்டு, யாக்கை நிலையாமைக்கு இனிது பொருந்துவதாயினும், அதிகாரசெய்யுள்தொகை நிரப்புதற்கு இங்கு வைக்கப்பட்டது; இளமையிறும் மரணம் கோருமென்ற சம்பந்தம்பற்றியுமாம். (கு)

கசு. வெறியயர் வெங்களத்து வேண்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிருனை குண்டன்ன மன்னு மகிழ்ச்சி
யறிவுடை யாளர்க ணில்.

(இ - ள்.) வெறி அயர் - ஆவேசங்கொண்டு ஆடுகின்ற, வெம்-கொடிய, களத்து - பலியிடுமிடத்திலே, வேல் மகன்-வேலேயுடைய அவ்வாவேசமாடுபவனது, பாணி - கையிலுள்ள, முறி ஆர் நறுங் கண்ணி-தளிர்கள் இடையிடையே பொருந்திய வாசனைவீசுகின்ற பூமாலை, முன்னர்- (தனக்கு) எதிரில், தயங்க - விளங்க, மறி - (அக்கே பலியிடுதற்குக் கொண்டுவந்த நிறுத்தப்பட்ட) ஆடானது, குளகுஉண்டன்ன-(அம்மாலையிலுள்ள தளிரை)இரையாக எண்ணி உண்டு குளகின்ற மகிழ்ச்சிபோன்ற, மன்னு மகிழ்ச்சி-நிலையில்லாதமகிழ்ச்சி, அறிவுடையாளர்கண் இல் - உண்மையறிவுடையவரிடத்தில்உண்டாகாது [அவர் இளமையிலே துறப்பர் என்றபடி.](எ - று.)

அதிவிரைவில் அழியுந்தன்மையதான இளமையைக் கண்டு மகிழ்வது, உடனேதன்னை வெட்டுதற்பொருட்டு வாள்பிடித்து நிற்கிற வேலனதுகையிலுள்ள மாலையிற் பொருந்திய தளிரைத்தின்று பேதைமையுடைய ஆடுமகிழ்வதற்குச் சமான மென்றபடி: உவமையணி. சிறிதுபொழுதில் துன்பமாய் முடியுமென்பதாம்.

குறிஞ்சிநிலமாக்கள் அந்நிலத்தெய்வம்மானமூருகக்கடவுளுக்குப் பிரார்த்தனைசெலுத்தும் நிமித்தமாக மறியறுத்துப் பலியிட்டாடுதல் மரபு. முருகக்கடவுளது வேலைத் தனக்கு அடையாளமாக வைத்திக்கொண்டு நிற்றலால், 'வேல்மகன்' என்றார், வேலனென்றும், வெறியாட்டாளனென்றும்பெயர்களுண்டு. முறியார்கறுகுகண்ணி—"புலராப் பசுவே யிடையிடுபு தொடுத்த, மலரா மாலை" என்றார் பிறரும். முன்னர் - இங்கே; இடமுன். குளகு- இலை மேயும் விலங்கின் உணவு; "இலைநுகர்விலகுளுவே குளகென வியம்பலா கும்" என்பது நிகண்டு. உண்டன்ன-உண்டாலன்ன, உண்டதன்ன. கனம், பாணி - வட்டசொற்கள். (ஈ)

கஎ. பனிபடு சோலைப் பயன்மர மெல்லாங்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—கனிபெரிதும்
வேற்கண்ணா ளென்றிவளே வெ ன்கின்ற மற்றிவளுங்
கோற்கண்ண ளாகுங் குனிர்து.

(இ-ள்.) இளமை-இளமைப்பருவமானது,—பனி படி சோலை-குளிர்ச்சி பொருந்திய சோலையிலுள்ள, பயன் மரம் எல்லாம் - பலன்படுகிற மரங்களெல்லாம், கனி உதிர்ந்து வீழ்ந்தற்று - பழங்களுதிர்ந்து விழப்பெற்றாற் போன்ற நிலையில்லாத தன்மையை யுடையது, (ஆதலால்), வேல் கண்ணள் என்று - (இப்பொழுது) வேல்போற கூர்மையான கண்களையுடைய வளென்று எண்ணி, இவளே-இம்மகளை, கனி பெரிதும் - மிகவும்அதிகமாக, வெங்கண்-பின்-விரும்பாதோள், இவளும்—மற்றும்-பின்பு, குனிர்து-உடம்பு கூனடைந்து, கோல் கண்ணள்ஆகும்-(வழிதெரிந்து கடப்பதற்கு)ஊன்று கோலையே கண்ணாக உடையவளாவள், (எ - று.)

யாவரும் விரும்பும்படி சோலையிற் பழுங்களோடுகூடியிருந்த மரம்அப் பழுங்களுதிர்ந்தபின்புவிரும்பத்தகாத தாதல்போல, யாவரும்விரும்பத்தக்க இளமைஅழிந்தபின்பு உடம்புவிரும்பத்தகாததா மென்றபடி. உவமையணி.

இசசெய்யுள் - மகளிரது இளமையழகைக் கண்டு பேரன்புகொண்டு நிற்பவரை நோக்கிச சொல்லிய தென அறிக.

கனி பெரிதும்-ஒருபொருட்பன்மொழி. 'வேற்கண்ணள்'என, எல்லாவுறுப்புக்களுள்ளுஞ் சிறந்த கண்களின் அழகை எடுத்துக்கூறியது, மற்றை அவயவங்களின் அழகுக்கும் உபலக்ஷணம். வெங்கண்பின்-எதிர்மறையே வற்பன்மை. 'கோற்கண்ணள் ஆகும்' என்றது, முதுமையிற் கண்கெட்டு ஊன்றுகோலையே ஆதாரமாகக்கொண்டு தட்டித்தட்டிவழிதெரிந்துகடப்பதென்றபடி - "கோற்க ணெறிகாட்டக் கொல்கூற் றுமையுதா," என்றார் வாணியாபதியிலும். இவளும், உம்-உயர்வுசிறப்பு. மற்று-வினைமாற்றுமாம்.

மிக்கமுதுமையடைவனென்ற பொருளில் 'கோற்கண்ணனாகும்' என்றது, பிறிதினவிற்சியணி. (எ)

கஉ. பருவ மெனைத்துள் பல்லின்பா லேனை
யிருநிகையு முண்டீரோ வென்று—வரிசையா
லுணர்ட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோ
ளெண்ணு ரறிவுடை யார்.

(இ - ள்.) 'பருவம் - பிராயம், எனைத்து உள - எவ்வளவுகுறியுள்ளன? பல்லின் பால் - பல்லினுடைய குணங்கள், ஏனை - எத்தன்மையன? இருநிகையும் - இரண்டுவேளைக் கவனங்களையும், உண்டீரோ - புசித்துவருகின்றீர்களா?' என்று—, வரிசையால் - முறைமையாக, உன் நாட்டம்கொள்ளப் படுதலால் - மனத்தில் ஆராய்ந்து (பலரும்) விசாரிக்கக் கூடியதாயிருப்பதனால், அறிவு உடையார் - நல்லறிவுடைய பெரியோர், யாக்கைகோள் - உடம்பின்குணமாகிய இளமையை, எண்ணுர் - (ஒருபொருளாக) மதியார்; (எ - று.)

பல்லின் குணங்கள் - மென்றுதின்னுதலும், பேசுதற்கு உதவுதலும். எனைத்து = எத்தனைத்து: மரூஉ. வினைவடியாய் பிறந்த எவனென்கிற அஃறிணைக்குறிப்புமுற்று, இடைகுறைந்து முதல்நீண்டு ஐகாரச்சாரியைபெற்று 'ஏனை' என நின்றது: ஏனைய என்பதன் விகார மெனினுமாம். 'இருநிகையு முண்டீரோ' என்பதற்கு - இரண்டு கவளமாகிலும் புசித்தீர்களோ? என்று உரைப்பாருமுளர்: உங்கள்ஜீர்ணசக்தி ஒருகவளவுணவையெனக்கொள்ளுமோ? என்பது கருத்து. ஒ - விளி. நாட்டம் - தொழிற்பெயர்; நாடி-பருகி, அம்-விகுதி, டகரவொற்று - விரித்தல்விகாரம். (அ)

கக. மற்றறிவா நல்வினை யாமினைய மென்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செம்மின்
மூற்றி யிருந்த கனியொழியத் தீவளியா
னற்கா யுதிர்தலு முண்டு.

(இ - ள்.) 'நல் வினை-தருமகாரியத்தை, மற்று அறிவாம்-பின்னல்அறிந்தசெய்வோம்: யாம் இளையம் - (இப்பொழுது) யாம் இளம்பிராயமுடையோமன்றே,' என்னாது-என்று எண்ணாமல், கைத்து உண்டாம்போழ்தே-கையிற் பொருள்கிடைக்கும்பொழுதே, கரவாது-ஒளித்துவலைக்காமல்[லோபஞ்செய்யாமல்], அறம் செய்மின் - (ஈதல் முதலிய) தருமங்களைச் செய்யுங்கள்; (ஏனென்றால்),—மூற்றி இருந்த கனி ஒழிய - முதிர்ந்துள்ள பழங்கள் மாத்திரமே யல்லாமல், தீ வளியால்-கடுங்காற்றினால், நல் காய்- நல்ல காய்கள், உதிர்தலும்-உதிர்ந்திடுதலும், உண்டு-உள்ளது; (எ - று.)

இளமையை நம்பவேண்டா வென்றபடி.

மற்றறிவாம் நல்வினை யென்பதில்-விரைந்து அறிவாம் என்கிற வினையெஞ்சினை, விரையாமல் அறிவாம் என்கிற வினையைத் தருதலால்,மற்று-வினைமாற்றுப் பொருளது. 'விரையாமல்அறிவாம்' என்றது, பின்னர் முதுமையில் ஆராய்ந்துசெய்வோமென்றவாறும். நல்வினையை அறிதற்குப்பயன் அதனைச்செய்தலே யாதலால், 'அறிவாம்' என்பதற்கு - அறிந்துசெய்வோ

மென் றபொரு ளுரைக்கப்பட்டது. போழ்தே, எ-தேற்றத்தோடு விரைவு. இளமைநிலையாமையோடு செல்வநிலையாமையையும் வற்புறுத்துதற்கு, 'கைத் தண்டாம்போழ்தே' எனப்பட்டது. இனையம் - தன்மைப்பன்மைக் குறிப்பு முற்று; கைத்து-கையிடத்ததான பொருள்; ஒன்றன்பாற்குறிப்பு வினையா லணையும்பெயர்.

பருவம்முதிர்ந்த மிழவர்கள் மாத்திரமேயன்றி உடம்புவலியஇளையர் களும்இரக்கமில்லாத யமனுல் இறத்தலுமுண்டு என்னும் பொருள்தோன்ற நின்றமையின், பின்னிரண்டடி - 'பிறிதுமோழித்தல்' என்னும் அலங்காரம்; வடநூலார் 'அப்பால்நுதற்பாரம்ஸ்ய' என்பர்: இது - முன்னிரண்டடியின் பொருளைச் சாதித்தலால், செய்யுட்குறியனைக்கு அக்கமாம்.

இச்செய்யுள் - ஒருவிகற்ப இன்னிசைவெண்பா; இனவேதுவைகொண்டது. (கூ)

உ0. ஆட்பார்த் தழலு மருளில்கூற் றுண்பையார்
மீட்கோப்புக் காலதாற் கொண்டுப்பின்—பீப்பிதுக்கிப்
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன்
கள்ளங் கடைப்பிடித்த னன்று.

(இ - ள்.) ஆள் பார்த்து - (ஆயுள்முடிந்த) ஆள்களைத் தவருது பார்த் துக்கொண்டு, உழலும்- (உலகமெங்குந் தடையில்லாமல்) திரிகின் ற; அருள் இல் கூற்ற-கருணையில்லாத யமன், உணமையால் - இருத்தலினுல், தோள் கோப்பு-நல்லினியராகிய கட்டிச்சோற்றமூட்டையை, காலதான், (தேடிக் கொள்ளுதற்கு உரிய) காலத்திலேயே [இளமையில்தானே], கொண்டு-தே டிக்கைக்கொண்டு, உம்மின் - ஏடேறுங்கள்; பீள் பிதுக்கி-முதிராத கருப் பத்தை வெளிப்படுத்தி, பிள்ளேயை - குழந்தையை, தாய் அலற-பெற்றவள் அழும்படி, கோடலான் - கொண்டுபோவதனுல், அதன்-அந்த யமனது, கள் ளம் - வஞ்சனேயை, கடைப்பிடித்தல் - மறவாமல் உறுதியாக அறிந்து தேர் தல், நன்று - (மிகவும்) நல்லது; (எ - று.)—மற்று - அசை.

தோட்கோப்பு-தோளிற் கோக்கப்படுவது என, வழிப்பிறவாணத்துக் குச் கொண்டுபோவதாகிய கட்டிச்சோற்று மூட்டைக்குத்தொழிலாகுபெய ராகிய காரணக்குறி; அது : இங்கே, மறுமை வழிக்கு இன்றியமையாததான நல்வினேயை உவமவாகுபெயராய் உணர்த்திற்று. ஆகவே, இருமடியாகுபெ யர். "இறுதிறைத் தோட்கோப்புக் கொள்ளார்" என மேற் புல்லறிவாண் மையென்னும் அதிகாரத்தில் வருவதுங் காண்க. "வேற்றுவ நில்லா நும ரூர்க்கே செல்லினும் வெருண்டீர் போல, வாற்றுணைக்கொள்ளாதடியுறத்து வைப்பீரே யல்லிர்போலுங், கூற்றங்கொண்டோட்டத் தமியே கொடுநெறிக் கட்செல்லும் போழ்தி, னூற்றுணைக் கொள்ளீ ரழகலா தறிவொன்றுமிலிரே போலும்" என்ற நீலகேசித்தாமணிச்செய்யுள், இங்கு நோக்கத்தக்கது.

தோட்கோப்பு, பொதிசோறு, கட்டு சோறு, ஆற்றுரை என்பன-ஒரு பொருட்சொற்கள். தாயலறுதல், பருவம் நிரம்புதற்கு முன்னமே கருவுயிர்க் கின்றவேதனியினும் பிள்ளையயிழத்தலாலும் உண்டாயபெருந்துன்

பத்தால். 'ஆட்பார்த்து உழலும்' எனவே, அவனது வருமை நிறுத்தி தவரு தென்றபடி. 'பீட்பிதக்கிப் பின்னோயைத் தாயலறக் கோடலாஸ்' என்றது, அவனது அருளில்லாமைக்கு ஒரு திருஷ்டாந்தங் காட்டியபடி.

'காலத்தான்' என்பதில், ஆறுருபு-கருவி கருத்தாப் பொருள்களாகா மல், 'காலத்தில்'என இடப்பொருளாய் நிற்றலால், உருபுமயக்கம்; "காலத் தினஞ் செய்த னன்றி" என்ற திருக்குறளிற் போல. கோடல்-தொழிற்பெ யர்; கொள் - பகுதி, தல் - விகுதி, பகுதி முதல் நீண்டது-விகாரம்; தகரம் டகாரமான விடத்து ளகரம்கெட்டது - சுக்தி. (கூ)

## கூ - ஆம் அதிகாரம்.—யாக்கைநிலையாமை.

அரிதாவது-உடம்பினது நிலையில்லாமையை உணர்த்துவது. அதிகார முறைமை, முன்கூறியதனுல்விளங்கும். ஆதேயமாகிய இளமையினது நில யின்மையின்பின் ஆதாரமாகிய யாக்கையினது நிலையின்மையை நிறுத்தின ரென்க. (ஆதேயம் - இடத்துநிகழ்பொருள், ஆதாரம் - இடம்.) யாக்கை - (எலும்பு தசைதோல் முதலிய பெலவகைத்தாதுக்களால்) யாக்கப்பட்டது; யாத்தல் - கட்டுதல். தொழிலாகுபெய ரென்றல், கை - விகுதி; ஐ-செயப் படுபொருள்விகுதியெனன்றல், கு - சாரியை.

உக. மலைமிசைத் தோன்று மதியம்போல் யாரைத்
தலைமிசைக் கொண்ட குடையார்—நிலைமிசைத
துஞ்சினு ரென்றற்குத் தும்றப்பட் டாரலா
லெஞ்ஞா னிவ்வுலகத் தில்.

(இ - ள்.) மலைமிசை-மலையின்மேல், தோன்றும்-காணப்படுகின்ற, மதி யம் போல்-பூர்ணசந்திரன்போல, யாரை-மலைமிசை-பட்டத்தியானையினது தலையின்மேல், கொண்ட - கொள்ளப்பட்ட, குடையார் - வெண்கொற்றக் குடையையுடையராய்ச் சென்றஅரசர்களும், நிலைமிசை-இப்பூமியிலே, துஞ் சினர் என்று - இறந்தார்க ளென்று, எற்றுது - (பிறர் அறிய) எடுத்துச் சொல்லி, அறற்பட்டார் அல்லால - (பலராலும்) இகழப்பட்டாரல்லா மல், எஞ்ஞான்-அவ்விறத்தலினின்று ஒழிந்தது மில்லாக நின்றவர்கள், இ உலகத்து இல் - இந்த உலகத்தில் (எவரும்) இல்லை; (எ - று.)

மலை - மதநீரருவி சொரிகிற வலிய பெரிய யானைக்கும், மதி-குளிர்ச்சி செய்து வட்டமாக விளங்குகிற ஒற்றைவெண்கொற்றக்குடைக்கும்உவமை. மதியம், அம் - சாரியை. துஞ்சுதல்-அங்குதல்; இறத்தலைத் துஞ்சுதலென் பது-மங்கலவழக்கு; மீளவும் எழுந்திராத பெருந்தூக்க மென்க. தம் உடம் பில் நோய் முதலியன கோதபடி மேதசெளக்கியம் சிறிதுங் குறையாமற் பாதுகாத்துக்கொள்ளவல்ல அரசர்களும் இறப்பரென்று, மற்றையோரிதத் தலைக்கூறுமலே பெறவைத்தார். யாக்கை அழியும் இயல்பின தாதலால், அது உள்ள பொழுதே அறஞ்செய்ய வேண்டுமென்றதாயிற்று. முதலிரண் டடி - உவமையணி.

எஞ்சுதல் - மீதித்தல். இல்-இல்லே; வேறு உண்டு என்பனபோல ஐம் பான்மூவிடத்துக்கும் பொதுவாகிய குறிப்புவினைமுற்றுப் பகாப்பதம்.

"கொலையானே மேலோர் குளிர்வெண் குடைக்கீழ்ப், பலயானைமன் னர்பலர்போற்ற வந்தான், மலையாகம் போழாக மற்றிவனே சாய்க்தான், நிலையாமை சால நிலைபெற்ற தன்றே" என்ருர் கூளமாணிமிலும். (க)

உஉ. வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால்—வாழ்நா
ளுலவாமு னெப்புர வாற்றுமின் யாரு
நிலவார் நிலமிசை மேல்.

(இ - ன்.) வாழ்நாட்கு-ஆயுள்காளுக்கு, அலகு ஆ(க) - (தூர்) அளவாக, வயங்கு ஒளி மண்டிலம்-விளங்குகின்ற கிரணங்களேயுடையகுரியமண்டலம், வீழ் நாள் படாது - உதித்தலில்லாத நாள் உண்டாகாதபடி, எழுதலால் - (காள்தோறும்) உதயஞ்செய்து வருதலால்,—வாழ்நாள் - அவ்வாயுள்நாள், உலவாமுன் - கழிவதற்குமுன்னமே, ஒப்புரவு-உபகாரத்தை, ஆற்றுமின் - (பிறர்க்குச்) செய்யுங்கள்; யாரும் - எவரும், நிலம்மிசை - பூமியில், மேல் - (அவ்வாழ்காளெல்லேயைக்) கடக்கி, நிலவார் - வாழமாட்டார்; (எ - று.)

ஒருதயர் தொடங்கிப் பின்வருமுதயமளவிற் கழிந்த காலத்தை ஒரு நாள் என்றும், அப்படிப்பட்டகாள் மூப்பது கொண்டதை ஒருமாத மென் றும், மாதம் பன்னிரண்டு கொண்டதை வருடமென்றும் இவ்வாறுஎண்ணி நாள் கணக்கிடப்படுதலால், 'வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம் வீழ் நாள் படாதெழுதலால்' என்ருர்: மீழ் "தோற்றஞ்சால் ஞாயிறு காழியா" என்றதுங்காண்க. படாஅது-செய்யுளோசை நிறைக்கவந்த உயிரளபெடை. மிசைமேல் என்பதை ஒருபொருட்பன்மொழியாகக் கொண்டும் உரைக்க லாம். ஒப்புரவு உலகநடையை அறிந்து அதற்கு ஏற்பச் செய்யும் உதவி; ஒப்பு உரவு எனப் பிரிக்க: உலகத்தாரோடு ஒத்துச்செய்யுஞ் சிறந்த தொழி லென்றபடி. இனி, 'ஒப்புரவு' - துறவறம் என்றுகொண்டு, 'நிலமிசைமேல் யாரும் நிலவார்' என்பதற்கு - (துறவறஞ் செய்யாதா ரொருவரும்) எல்லா வுலகங்களுக்கும் மேலாகிய முத்திபுலகத்தில் வீளகுதலிலலென்று உரைப் பாருமுளர்; (இருக்குறளில் "நிலமிசை நீடுவாழ்வார்" என்பதற்கு-பரிமே லழகர் 'எல்லாவுலகிற்கும்மேலாயவீட்டிலகின்கண் அழிவின்றி வாழ்வார்' என்று உரைத்தமை காண்க: நிலமிசைமேல் மிசைகிலம் மேல் எனமாறுக.) ஆ - விகாரம். மண்டிலம் - வடசொல்லின் திரிபு. (உ)

உரு. மன்றங் கறங்கமணப்பறை யாயின
வன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை
யொலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம்.

(இ - ன்.) 'மன்றம் கறங்கசபைமுழுவதும் ஒலிக்கும்படி, மணம் பறை யின - கலியாணத்திற்கு அடிக்கும் வாத்தியமானவைதாமே, அன்று-அர்

காளிலேயே, அவர்க்கு- மணஞ்செய்துகொண்ட அவர்கட்கே,ஆங்கே-அவ் விடத்தில்தானே, பிணம்பறை ஆய்-பிணத்தைக்குக்கொட்டும் செய்தற்பறை யாகி, பின்றை - உடனே, வித்தலும்-முழங்குதலும், உண்டு ஆம் - உள்ள தாகக்கூடும்,' என்று - என்ற எண்ணி [யாக்கை நிலையாமையைக் கருதி], மாண்டார் மனம் - மாட்சிமைப்பட்ட தூறிவுடையாரது செஞ்சம், உய்கது போம் ஆறே-நற்கதிபெற்றுப்போதற்குக் காரணமான [துறவறத்தின்]வழி யிலேயே, வலிக்கும் - உறுதியாகத் துணிந்திறிற்கும்; (எ - று.)

ஆம் - அசை. மன்று-இங்கு, கலியாண காரியத்தின்பொருட்டுக்கூடின சுற்றத்தார் நண்பர் முதலியோரது கூட்டம்; அம் - சாரியை. 'வலிக்குமாம் மாண்டார் மனம்' என இவ்வாறு சான்றோர்மேல்வைத்துக் கூறியதனால், உடம்பை நிலையுடையதென்று மதித்துச் களிப்பவர் புல்லறிவாளரென்பது போதரும். மாண்டார்-இறக்தகால வினையாலணையும்பெயர்; மாண் என்னும் பண்படி - பகுதி: (இறந்தவரென்ற பொருளில், மாள்-பகுதி.) (க)

உசு. சென்றே யெறிப வொருகால் கிறுவரை
நின்றே யெறிப பறைமினோ—ரன்றேதாண்
முக்காலைக் கொட்டி லுண் மூடித்திக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவூர் சுமந்து.

(இ - ன்.) சென்று - (இறந்தவிடத்திற்குப்) போய், பரையினை-பிணப் பறையை, ஒரு கால்-ஒருதரம், எறிப- (முதலிற்) கொட்டுவார்கள்; சிறுவரை நின்று - (பின்பு) சிறிதுகேரம் சும்மா இருக்து, எறிப - (இரண்டாம்முறை) கொட்டுவார்கள்; முக்காலை கொட்டினுள்- மூன்றுதரம் கொட்டும்பொழு தில்,—செத்தாரை-இறந்தவர்களை, சாவார்-இனி இறக்கின்றவர்கள், மூடி- (போர்வையால்) மறைத்து, சுமந்து - எடுத்துக்கொண்டு, இ கொண்டு - (அந்தஉயிர்நீத்த உடலை எரிப்பதற்கு) கொருப்பையும் எடுத்துக்கொண்டு, எழுவர் - புறப்பட்டுப் போவார்கள்; ரன்றே காண் - (இவ்வுலகவியற்கை) ரன்ருயிருக்கின்றதே: (எ - று.)

எறிப - பலர்பால்முற்று; ப - விகுதி, எதிர்காலம் காட்டிநின்று. உயிர், நீங்கிய உடம்பை 'செத்தார்' என உயர்திணையாக் கூறியது, இழிவுப்பற்றி வந்த திணைவழுவமைதி, ன்றே- இகழ்ச்சிக்குறிப்பு. காண்-அசை. ன்றே காண்-ன்ருக ஆராய்ந்துபார் என்றுமாம். 'சாவார்' என அவர்களதுநிலை யல்லாமையையும் விளக்கியவாறு.

பின்னிரண்டடியில் இனவெதுகை காண்க. (ச)

உஙு. கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுப்பரர்க் கண்டு—மணங்கொண்டீண்
டுண்டுண்டுண் டென்னு முணர்வினுற் சாற்றுமே
டொண்டொண்டொ ணென்னும் பறை.

(இ-ன்.) சுற்றத்தார்-உறவினர்கள், கணம்கொண்டு-கூட்டமாகக்கூடி, கல் என்று அலற-கல்லென்ற ஒலிஉண்டாக வாய்விட்டு அழாநிற்க, பிணம்-

பிணத்தை, கொண்டு-எடுத்துக்கொண்டு, காடு - நன்காட்டில், உய்ப்பார் - சேர்ப்பவர்களே, கண்டும் - (இவ்வுலகத்தில்) பிரதியக்ஷமாகப் பார்த்திருந்தும், (யாக்கையின் நிலையாமையைக் கருதாமல்), மணம் கொண்டு - கலியாணஞ்செய்துகொண்டு, ஈண்டு-இவ்வுலகத்தில், உண்டு உண்டு உண்டு என்னும் - (இன்பம்) உள்ளது உள்ளது உள்ளது என்று கருதி மயங்குகின்ற, உணர்வினுள்-சிற்றறிவுடையவனைக் குறித்து, டொண் டொண் டொண் என்னும் - டொண் டொண் டொண் என்று ஒலிக்கிற, பறை-பிணப்பறை, சாற்றும்- (அவ்விடம்பின் நிலையாமையைத்) தெரிவிக்கும்; (எ - று.)

கணம்-வடசொல். சுற்றத்தார்-உரிய சமயங்களில் வந்துசுற்றிநிற்பவர். கல்லென்று, டொண் டொண் டொண் - ஒலித்தறிப்பு. உண்டு உண்டு உண்டு - துணிவுபற்றி மூன்றுமுறை அடுக்கிற்று, [ஈண்-பொதுச்சொ]. உய்ப்பார்க்கண்டும், உணர்வினுள் சார்றும்-உயர் ஜீவனில் ஒருபுறொக்கவழி இயல்பின்விகாரமாயின. எகாரம் - பிரிநிலையைக் காட்டிற்று.

பறை சாற்று மென்றது-தற்றறிப்பேற்றவணி; அப்பறையொலியால் யாக்கை நிலையின்மையைஅறியலாம் என்றவாறு. (கூ)

உசு. நார்த்தொடுத் தீர்க்கிலை னன்றுய்க் தடச்சிலென்
பார்த்தழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
ஊற்றையு னின்று தொழிலைநச் செய்நாட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால்.

(இ - ன்.) தோல் பையுள் நின்று-தோலினுலமைக்த பைபோன்றஉடம்பில் நின்று, தொழில் அற செய்து ஊட்டும் - தொழில்களே மிகுதியாகச் செய்து உண்பித்தவந்த, கூத்தன்-உயிராகிய கூத்தாடி, புறப்பட்டக்கால் - வெளிப்பட்டுச் சென்றுவிட்டால்,—(அந்த உயிர் நீங்கிய உடம்பை), நார் தொடுத்த ஈர்க்கில் என் - கயிற்றினுற்கட்டி இழுத்துக்கொண்டுபோனு லென்ன? நன்று ஆய்ந்த அடக்கில் என்-நன்குருக் சுத்தஞ்செய்து அடக்கஞ்செய்தா லென்ன? பார்த்த வழி பெய்யில் என்-கண்டவிடத்திற் போகட்டுவிட்டா லென்ன? பல்லோர் பழிக்கில் என்-பலரும் கண்டு பழித்தா லென்ன? (எ - று.)

வருகிற உயர்வுதாழ்வுகள் ஒன்றுமில்லை என்றபடி. உயிர் உடம்பினுள் இருக்கும்பொழுது கண்டோர்வியக்கும்படி பலவகைத்தொழில்களைச்செய்வதனால், அதனை 'கூத்தன்' என்றார்; உருவகம். இருவினைக்கு ஏற்பப் பல வேறு வடிவெடுத்து இயங்குதல் உயிரினியல்பாதல் காண்க. வழி பார்த்து என மொழிமாற்றி இடம்பார்த்து எனப் பொருள்கொள்ளினும் அமையும். 'பார்த்துளிப்பெய்யில்' எனப்பாடம்கொண்டு-பூமியைத் தோண்டிப்புதைத்தா லென்ன? எனப் பொருள்கொள்வாரு முளர்; துளி = துள்ளி. "உறப்புக் கள்தா முடன்கூடி யொன்றுயிருந்த பெரும்பை" எனத்நண்டலகேசியிற் கூறினற்போல, 'தோற்பை' எனப்பட்டது. உயிரையர் நினைச்சொல்லாற் குறித்தது, வடமொழிமுறைமைபற்றி. பார்த்தழி - தொருத்தல்வினைகாரம். ஈர்க்கில், அடக்கில், பெய்யில், பழிக்கில்-எதிர்காலவினையெச்சங்கள்.

இச்செய்யுளில் முதலிரண்டடிகளில் பூசிடையிட்ட எதுகையும், மூன்றுமடியில் இனவெதுகையுங் காண்க. (சு)

உஏ. படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித்—தடுமாற்றந்
தீர்ப்பேம்மா மென்றுணருந் திண்ணறி வாளரை
சேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்.

(இ - ன்.) படி மழை - பெய்கின்ற மழைநீரில் உண்டாகின்ற, மொக்குளின்-குமிழிபோல, பல் காலும் - பலமுறையும், தோன்றி - உண்டாகி, கெடும்-(உடனே) அழிந்துபோர் தன்மையுள்ள, ஓர் யாக்கை இது என்று-ஒருடம்பு இது வென்று, எண்ணி - நினைத்து, தடுமாற்றம் - (பிறவியில்) தடுமாறுவதை, யாம் - நாம், தீர்ப்பேம்-போக்கிவிடக்கடவோம், என்று உணரும் - என்று அறிகின்ற, திண் அறிவாளரை - உறுதியான அறிவை ஆராத ஓடைய பெரியோர்களை, சேர்ப்பார் - ஒப்பவர், நீள் நிலத்தின்மேல்-பெரிய பூமியில், யார் - யாவருளர்? [எவரு மில்லை]; (எ - று.)

அக் கலங்காத அறிவுடையவரே யாவரினும் மேற்பட்டவ ரென்றபடி. மொக்குள்-தோன்றி விரைவிலழிதற்கு உவமம். 'ஓர்' என்பது-யாக்கையின் இழிவைப் புலப்படுத்தும். அவரை யொப்பவரில்லை யெனவே, அவரினும் மேம்படுபவரில்லை யென்பது தானே அமையும். பிறந்து இறந்தழிவது உடலுக்கு இயல்பு என்று கருதவேண்டு மென்பார், 'தோன்றிக் கெடுமிதோர் யாக்கையென்றெண்ணி' என்றார். யார் என்ற வினவினைக்குறிப்புமுற்று, இன்மை குறித்துநின்றது. தடுமாற்றந் தீர்ப்பேம்-துறவுமேற்கொண்டு அந் நெறியாற் பிறப்பற்று முத்தியடைகடவோம். தடுமாற்றம்-தொழிற்பெயர். மொக்குள்-குளகம் என்னும் வடமொழியின்சிதைவு. முன்னிரண்டடி உவமையணி. (எ)

உஅ. யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க—யாக்கை
மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்.

(இ - ன்.) யாக்கையை-உடம்பை, யாப்பு உடைத்தா-உறுதியுடைய தாக, பெற்றவர்-(ஊழ்வினையாற்) பெற்றவர்கள், தாம் பெற்ற யாக்கையால்-தாம்அடைந்த உடம்பினுல், ஆய - பெறுவதற்கு உரிய, பயன் - (முத்தியாகிய) பயனை, கொள்க-(அப்பொழுதே) தேடிக்கொள்ளக்கடவர்; (ஏனெனில்),—யாக்கை-உடம்பு, மலை ஆடும் மஞ்சு போல்-மலையின்மேல் அசைந்து கொண்டிருக்கிற மேகம்போல, தோன்றி-முன்னே காணப்பட்டு, ஆங்கே-அக்கண்டபொழுதிலேயே, நிலையாது - நிலைபெறாமல், நீத்து விடும் - உயிர் ஒழிந்துபோகப்பெறும்; (எ - று.)

மலையாடு மஞ்சு - உடம்பிற்குத் தொழிலால் உவமை. யாப்பு-உறுப்புக் குறையின்மை, நோயின்மை, நினைத்ததாரியத்தைச் செய்துமுடிக்கவல்ல

வலிமை. 'யாக்கையா லாய பயன் கொள்க' எனவே, காலதாமதஞ் செய்யலாகாது என்றதாம். ஆய, ய் - இறந்தகாலவிடைநிலை. மற்று-வினைமாற்று. ஆங்கே - அவ்வாறே [அம்மஞ்ஞின்தோற்றம்போலவே] எனினுமாம். 'நீத்து விடும்' என்றதில், விடு - துணிவுணர்த்தும். பின்னிரண்டடி-உவமையணி.

உக. புனலுறையே நீர்போ னிலையாமை யென்றெண்ணி
மின்னினியே செய்க வறவினை—மின்னினியே
நின்ரு னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்ரு னெனப்படுத லால்.

(இ - ன்.) 'இன்னினியே-இப்பொழுதே இப்பொழுதே, நின்ரான் - (ஒருவன்) நின்றிருந்தான், இருந்தான் - உட்கார்ந்திருந்தான், கிடந்தான் - படுத்திருந்தான், தன் கேள் அலற-தனது சுற்றத்தார் கதறிப் புலம்பும்படி, சென்ரான்-இறந்துபோனான்,'எனப்படுதலால்-என்று(உலகத்தவரால்)சொல்லப்படுதலால், புல் நுனிமேல் நீர் போல் - புல்லினது நுனியில் நிற்கின்ற பனிநீர்த்துளிபோல, நிலையாமை - (உடம்பு) நிலையில்லாமையை யுடையது, என்று—, எண்ணி-நினைத்து, இன்னினியே - இப்பொழுதே இப்பொழுதே, அறம் வினை - தருமகாரியத்தை, செய்க-(ஒவ்வொருவரும்) செய்யக்கடவர்; (எ - று.)

எடுத்தசரீரம் கணப்பொழுதிலே அழியுமியல்பின தாதலால், அதற் கிடையே தருமத்தை விரைந்துசெய்க வென்பது கருத்து. முதலடி - உவமையணி.

'உடம்பு' என்பது, அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது. நிலையாமை யென புண்பிறையப் பண்பாக உபசரித்தார். இன்னினி - சிறிதுங் காலஞ் செல்லாமை குறித்துநின்ற இனி இனி என்னும் இடைசொல்லடுக்கின் விகாரம். ஏகாரம்-தேற்றம். கேள் - கேண்மையென்னும் பண்பின் அடி; கேளிர்க்குப் பண்பாகுபெயர். (க)

நூ. கேளாதே வந்து கிளைகளா யிற்ரேன்றி
வ்ளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மாஞ்ழியர் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

(இ - ன்.) மாந்தர்கள் - மனிதர்கள்,—கேளாதே வந்து - ('வரலாமா?' என்று) கேளாமலே வந்து, கிளைகள் ஆய்-உறவினராய், இல் தோன்றி-குடும்பத்தில் பிறந்து, (சிறிதகாலமிருந்து),—கேகை - (தமது) கூடுகள், மரன் ஒழிய - மரங்களில் தவறும்படி (அவற்றைவிட்டு), வாளாதே-சும்மா [சொல்லாமலே], சேண் நீங்கு-செடுந்தூரம் ஆகாயத்தில் நீங்கிப் பறந்துபோகின்ற, புள் போல-பறவைகள் போல, யாக்கை-உடம்பை, தமர்க்கு-உறவினர்க்கு, ஒழிய நீத்து - (தம்மினின்று) நீங்கும்படி வைத்தவிட்டு, வாளாதே-சொல்லாமலே, போவர் - இறந்துபோய்விடுவார்கள்; (எ - று.)

பறவைகள் தமதுவிருப்பத்தின்படி மரங்களில் வந்து சேர்வதும் விட்டுசெல்வதும் போல, மனிதர் முற்பிறப்பிற்செய்த ஊழ்வினைவசத்தால் ஒரு குடியிற் பிறத்தலும் இறத்தலு மடைவ ரென்றபடி. "குடம்பை தனித் தொழியப்புட்பறந் தற்றே, உடம்போ டுயிரிடைநட்பு" என்னுங் திருக்குற ளோடு இதனை ஒப்பிடுக. இனை - உவமவுருபெயர். சேக்கை - தங்குமிடம். மரன்-போலி. தமர்-தம்மவர். வானர-இடைச்சொல்; து-சாரியை: ஏ-இசை நிறை. ஆல்-அசை. உவமையுமணி. (கூ)

## ச ஆம் அதிகாரம்.—அறன்வலியுறுத்தல்.

அம்மானவதுநிலையெறதலில்லாத செல்வம் இளமை யாக்கை என்னும் இவையோ டொகாமல் நிலைபெற்றுச செல்வம் முதலியவற்றால் அவசியஞ் செய்யவேண்டுவதாய் இம்மை மறுமை வீடென்னும் மூன்றையுந் தருவதான தருமம் மற்றைப் பொருள் இன்பங்களினும் உறுதியுடையதாயிருக்குந் தன்மையை வற்புறுத்திக் கூறுவது. அதிகாரமுறைமையும், இதனுலே விளங்கும. "நிறப்புடை மாமிற் பொருளு நின்பமும், அறத்துவழிப்படூஉந்தோற்றம் போல" என்ஞர் புறநானூற்றிலும்.

கூக. அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறுஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேன்மை
தவத்தாற் றவஞ்செய்யா தார்.

(இ - ன்.) மேலை தவத்தால் - முற்பிறப்பிற்செய்த தவத்தினுல், தவம் செயயாதார்-(பிற்பிறப்பில்) தவத்தைச செயயாதவர்கள்,—(முற்பிறப்பில் வறுமையடைந்து),—அகத்தாரே வாழ்வார் என்று - 'இவ்வீட்டிலுள்ளவர்களே செல்வமுடையவர்கள்' என்று எண்ணி, அண்ணாந்து நோக்கி - (அவ்வீட்டின் உபரிகை முதலிய சிறப்புக்களை) தலையெடுத்துப்பார்த்து, (அதனுலே இரத்தற்கு முயலுகின்றதைத்தொடங்கி), தாம் புக பெருஅர்-(வாயில் காவலாளர்களால் தடுக்கப்பட்டு) தாம் உள்ளே நுழையப்பெறுதவராகளாய், புறங்கடை பற்றி வாயிற்புறத்தைப் பிடித்துக்கொண்டு, தாம் மிக வருந்தி இருப்பர்-தாம் மிகவும் வருத்தமுற்றிருப்பார்கள்; (எ - று.)

பிற்பிறப்பில் தவஞ்செய்வது முற்பிறப்பில் தவம் இல்லையாயின்கூடாதாதலால், 'மேலைத்தவத்தால் தவஞ்செய்யாதார்' என்ஞர்; "தவமுந் தவமுடையார்க்காகும் அவம் அதனை, அஃதிலார் மேற்கொள்வது" என்ஞர் திருக்குறளிலும்; அக்குறளினுரையிற் பரிமேலழகர் 'பரிசயத்தால் அறிவும் ஆற்றலும் உடையராய் முடிவுபோக்கலின் தவமுடையார்க்கு ஆகுமென்றும், அஃதில்லாதார்க்கு அவையின்மையின் முடிவுபோகாமையின் அவமா மென்றும் கூறினர்' எனஉரைத்ததை இவ்விடத்திற்கு கொள்க. இனி, மக்கட்பிறப்புக்கு ஏற்ற தவத்தோடு கூடிச செல்வத்திற்குத் தவம்பண்ணு

தவ சென்றுமரம். அகத்து ஆரே வாழ்வார் எனப் பிரித்து, இவ்வீட்டினுள் வாழ்பவர் யாவரோதாம்; என உரைத்தலும் பொருந்தும். இவ்வாறு பல பிறப்புக்களெடுத்து அலையவேண்டாதபடி செல்வத்தினிடத்தும் உடம்பினிடத்துஞ் செய்யும் பற்றுக்களே ஒழித்து இளமையிலேயே துறந்து அதற் குரிய அறங்களில்வழுவாதொழுகிப்பேரின்பம் பெறவேண்டுமென்றவாறு. அண்ணாத்த அண்ணு-பகுதி, கடைப்புறம் - புறங்கடை எனப்பின்முன்னாக மாறிவந்தது, இலக்கணப்போலி. 'வ' இரண்டில் முன்னது-பிரிநிலை; பின்னது-இரக்கத்தோடு தேற்றம். மேலை, ஐ - சாரியை. தாம் - அசை. அனபெடை, செய்யுள்சை நிறைக்கவந்தது. தவம்-தபஸ் என்னும் வடமொழியின் திரிபு.

இப்பாட்டில்-இருவிகற்ப நின்னிசைவெண்பா; மேல் கூசு-ஆம்பாட்டம்அது.

கூஉ. ஆவாகா மாக்க நசைஇ யறமறந்து
போவாகா மென்னுப் புலைநெஞ்சே—யோவாது
நன்றுஞற்றி வாழ்தி யெனினுங்ன் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை.

(இ - ள்.) புலை நெஞ்சே-அற்பத்தன்மையையுடைய மனமே! (நீ), ஆக்கம் நசைஇ-(அணுவளவும்நிலையில்லாத, செல்வத்தைவிரும்பி, 'நாம்ஆவாம்-நாம் மேன்மேலும் செல்வமுடையவராவோம்; நாம் அறம்மறந்தோபோவாம்-நாம் (அசசெல்வஞ்செலவாதற்குக் காரணமாகிற) தருமத்தை விடக்கடவோம்,' என்னு-என்றுஎண்ணி, ஓவாது நின்று - (சிறிதும்) ஓய்வில்லாமல் நின்று, உஞற்றி (அச்செல்வஞ்சம்பாதிக்கப் பலவாறு) முயன்று, வாழ்தி எனினும் - வாழ்வாயாஎனும், நின் வாழ்நாள்கள் - உனது ஆயுள்நாட்கள், சென்றன-கழிந்துவிட்டன; செய்வது உரை-(இனி நீ)செய்வதைசொல்.

தான் உள்ள காலமெல்லாஞ் செல்வத்தையே விரும்பி ஓடியோடிச் சம்பாதித்துக் காத்துவைத்து சிறிதுந் தருமஞ்செய்யாமலே அந்திமகால யடையும்பொழுது தன்மனத்தைநோக்கித் தானே 'இனி யாதுசெய்வாய்?' என்று இரக்கத்தோடு ஒருவன் சொன்னதாகச செய்யப்பட்டது இச்செய்யுள் என அறிந. 'ஆவாஎன்பது அந்தோ எனப் பொருள்படும் இரக்கக் குறிப்பிடைசொல்' எனக்கொண்டு உரைக்குமிடத்து, அதனையடித்துள்ள 'நாம்' என்றது நின்று வற்றும், ''ஆதாகா மென்னுமவர்'' என்ற நாலாடியா ரிலும், ''ஆது மென்னு மவர்'' என்ற திருக்குறளிலும், 'ஆதும்' என்பது மேலாகக்கடவோமெனும் பொருள்படுதல் காண்க.

ஆக்கம்-தொழிற்பெயர்: ஆகுதல்; இது - இங்கு, இம்மையில் மேன்மை யடைதற்குக் காரணமான செல்வத்திற்கு, காரியவாகுபெயர். விருப்பமெ ணப்பொருள்படுகிற 'நசை' என்ற பெயர்ச்சொல், விரும்பியெனவினையெ சப்பொருள்படுதற்பொருட்டு, 'நசைஇ' என அளபெடித்தது; இது-சோல் லிசை யளபெடை. நசைந்து என்ற வினையெசசம் நசைஇ என விகாரப் பட்டு அளபெடித்த தென்பர் ஒருசாரார். என்னு என்பதை கூடகெட்ட எதிர்மறைப் பெயரெசசமாகக்கொண்டு இச்செய்யுட்கு வேறுகருத்து

அமையஉரைகூறுதல்நிறவாமையை உய்த்துணர்க.புலே-பண்புப்பெயர்: புல், ஐ - முறையே பகுதிவிகுதிகள். மறந்துபோவாம் என்பதில், போ-துணைவுப் பொருளைக் காட்டிற்று. (உ)

ங்உங. வீனைப்பயன் வந்தக்கால் வெய்ய யுயிரா
மனத்தி னழியுமாம் பேதை—வினைத்தனீத்
தொல்லைய தென்றுணார் வாரே தடுமாற்றத்
தெல்லே யிகந்தொருவு வார்.

(இ - ள்.) பேதை-அறிவில்லாதவன்,—வினை பயன் வந்தக்கால்-(தான் முற்பிறப்பிற் செய்த) தீவினையின் பயனுகிய துன்பம் வந்து சேர்ந்தால், (ஊழ்வினைப்பயனென்று எண்ணியிராமல்), வெய்ய வுயிரா - கடுமையாகப் பெருமூச்சுவிட்டு, மனத்தின் - மனத்திலே, அழியும்-வருத்துவான்; அதனை-அத்துன்பத்தைப்பற்றி, வினைத்தனீத்து-ஆலோசித்து, தொல்லையது என்று உணர வாரே - முற்பிறப்பின் தீவினையால் வந்த தென்று தெரிந்துகொள்பவர்கள் தாமே, தடுமாற்றத்து எல்லை இகந்து ஒருவுவார்-சம்சார துக்கத்தின் எல்லையை விட்டுநீங்குவார்கள்; (எ - று.)

பழவினையால்வந்ததென்று அறிந்தவர், இனிவரும்பிறப்பில் அவ்வாறு தன்பம்நேரிடாமல் இன்பமேநேரிடும்படி அதருமத்தைவிட்டுத் தருமத்தை யேசெய்து பேறுபெறுவ ராதலால், 'உணர்வாரே தடுமாற்றத் தெல்லை யிகந்தொருவுவார்' என்றார். வெய்ய - வெம்மையென்னும் பண்பினடியாகப் பிறந்த குறிப்பு வினையெச்சம்; பைய மெல்ல என்பனபோல: இது - இங்கு, வினையுரியாய் நின்றது. இனி, வெம்மையுடையனவாக எனவுமாம். வெய்யவுயிர்த்தல்-சூடாக மூச்சு விடுதல். மனத்தின், இன்-ஏழனுருபு, ஆம்-அசை. தொல்லை-பண்புப்பெயர். எ-பிரிநிலையோகாரம்; தேற்றம். பேதை என்னும் பண்புப்பெயர், அறிவிலானுக்குப் பண்பாகுபெயர்; பேதமையாவது- யாதும் அறியாமை. (ஊ)

ங்உசு. அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்திற்
பெரும்பயனு மாற்றவே கொள்க—கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன
கோதுபோற் போகு முடம்பு.

(இ - ன்.) அரும் பெறல் யாக்கையை-அருமையாகிய பெறுதலையுடைய மனிதசரீரத்தை, பெற்ற - அடைந்த, பயத்தால்-பயனுல், பெரும்பயனும் - பெரிய பயனுன தருமத்தையும், ஆற்றவே-முற்றுமாகவே, கொள்க-செய்து வைத்துக்கொள்ளக்கடவர்; உடம்பு - மனிதசரீரம்,—கரும்பு ஊர்ந்த சாறு போல் - கரும்பானது (தன்னைப் பக்குவமாக ஆலையில்வைத்து ஆட்டினவர் கட்குத்) தன்னிடத்திற் பொருந்திய சாற்றை (க்கொடுப்பது) போல, சால வும்-மிகவும், பின்-மறுமைக்குவேண்டிய அறமாகிய பயனை, உதவி-(தன்னை நல்வழியில்உபயோகப்படுத்தியவர்கட்குக்)கொடுத்தி, மற்று-பின்பு, அதன் கோதுபோல் - அக்கரும்பினது சக்கை போல, போகும் - ரீங்கிப்போம்,

அரும்பெறல்யாக்கை என்பது-வடமொழிகடை; பெறலருயாக்கையெ
ன்றுமாற்றிஉரைப்பினும்அமையும். எல்லாப்பிறவிகளுள்ளும், அதனுள்செய்
கற்கரிய பெறுதற்குக் காரணமான மனிதஜன்மத்தைப் பெறுதல், முற்பிறப்
பின் யிக்கால்வினையா லன்றிக் கூடா தாதலால், 'அரும்பெறல் யாக்கை'
என்றார்; "அரிதரிது மானிடராத லரிது" என்றார் ஔவையாரும்.

"வினைபல வலியினூலே வேறுவே றியாக்கையாகி, கனிபல பிறவிதன்னுள் துன்புமா உம் பல்லுயிர்க்கு, மனிதரினரியதாகுந் தோன்றுதல்தோன்
றினுலும், இனியவை பரசவெய்துஞ் செல்வமு மன்னதேயாம்," "உயர்குடி
கனிடன் தோன்றல் ஊனமில யாக்கையாதல், மயர்வறு கல்விகேள்வித்தன்
மையால் வல்லராதல், பெறிதுணரறிவையாதல் பேறறங்கோடலென்றுகு,
கரிதிவைபெறுதலேடா பெற்றவர் மக்களென்பார்' என்னும் வினையாபதிக்
செய்யுள்களாலும், மனிதசன்மத்தின்பெறலருமை உணர்க. "மக்களுடம்பு
பெறற்கரிது பெற்றபின், மக்களறிவு மறிவரிது—மக்க, ளறிவறிந்தா ரென்
பா ரறத்தின் வழுவார், செறிதலே னின்றெழுகுவார்" என்னும் அறநெறிச்
சாரத்தையுங் காண்க. அவ்வுடம்பைக்கொண்டு மறமைக்கு உறுதி செய்து
கொள்ளாதவர் அசசரீரத்தைப் பெற்றபயனே இழப்பாதலால், 'யாக்கை
யைப் பெற்ற பயத்தாற் பெரும்பயனு மாற்றவே கொள்க' எனப்பட்டது.

சாது-ஸாரம்என்னும் வடமொழியின் திரிபு; ரஸம். கோது-அஸாரம்.
பின்-பின்னுக்கு [மறுமைக்கு] உதவும்பயனுக்கு ஆகுபெயர்; இடைசசொல்,
பெயர்த்தன்மைப்பட்டது. பயன்என்றமுற்றுத்தமல்'பெரும்பயன்' என்றது,
குறவறமென்று தோன்றுதற்கு. பின்வாக்கியம்-உவமையணி.

பின்னிரண்டடியில் இனவெதுகை காண்க. (ச)

நடி கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
அரும்பெருநூது வேங்காற் பூவராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்.

(இ - ள்,) கரும்புடன்கரும்பை, சிறு காலை - (பதன் அழிதற்கு) முன்
காலத்திலேயே, ஆட்டி - (ஆலையில் வைத்து) ஆட்டி, கட்டி-(அதன் இரசத்
தினுலாகின்ற) வெல்லக்கட்டியை, கொண்டார்-கொண்டவர்;—திருப்பு -
(அதன்) சக்கை, எழுந்து வேம் கால் - (கொருப்பிற்) பொருந்தி எரியும்பொ
முது, ஆண்டு - அவ்விடத்தில் (அதனைக்கண்டு), துவர் உழவார்-துன்பப்பட
மாட்டார்; (அதுபோலவே), வருந்தி - (விரதம் முதலியவற்றுல்) வருத்த
மூற்று, உடம்பின்பயன் கொண்டார் - சரீரமெடுத்ததன் பயனுகிய தருமத்
தைச செய்துவைத்துக்கொண்டவர்கள்;—கூற்றம் வரும் கால்-யமன் (உயி
ரைக்கொண்டுபோதற்கு) வரும்பொழுது, பரிவது இலர் - (அவ்வுடம்பின்
அழிவைப்பற்றி) வருத்தமுலிலாவர்; (எ - று.)

உடம்பினுலாகிய அறப்பயனுவது - தீறத்து தவஞ்செய்தல். சிறுகாலை
என்பது-அற்பகாலமென்னும்பொருளுள்ளதாய்,முற்காலத்தைக்குறித்தது;

"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து" எனப் பெரியார் பாகவதத்தி லுங்காண்க. கரும்பை ஆட்டிச் சாற்றைக்கொண்ட பின்பு அதன் சோதை களின் கூட்டத்தை எரித்தல் இயல்பு. கரும்பு-உடம்புக்கும், அதனை ஆட்டு தல்-வினதங்களால் உடம்பைவருத்துதற்கும், கருப்பஞ்சாற்றுக்கட்டி-உடம் பின் பயனுக்கும், சிறுகாலை - இளமைப்பருவத்துக்கும், கருப்பங்கட்டி கொண்டார் - ஞானத்தைப் பயன்கொண்டவர்க்கும், தரும்பெழுந்துவேதல் - யமன் வரவினால் உடம்பு அழிதற்கும், கருப்பங்கட்டிகொண்டார் தியருழு வாமை - யாக்கைப்பயன்கொண்டவர் வருந்தாமைக்கும் உவமை யெனக் காண்க. வேம்=வேகும்; செய்யுமெனைச்சவிற்றுயிர்செய் சென்றது.

உபமான உபமேயங்களே(ப் பிம்பப்பிரதிபிம்ப பாவத்தோன்றர்)தனித் தனிவாக்கியமாக நிறுத்தி, அவற்றின் இடையில் உவமவுருபுகொடாமற் கூறியதனால், இப்பாட்டு - பிறந்துகாட்டுவமையணி; வடநூலார் தீருஷ்டாந்தாலங்கார மென்பர். (ங்)

ஈஊ. இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னுது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா றறம்.

(இ - ன்.) (யமன்வருவது), இன்றுகொல் - இன்றைக்கேயோ? அன்று கொல் - அன்றைக்கோ? என்றுகொல் - என்றைக்கோ? என்னுது - என்ற சந்தேகப்படாமல், கூற்றம்-யமன், பின்றையே நின்றது-(உயிரைக்கொண்டு போதற்பொருட்டுப்) பின்னேயேவக்கு மறைத்து நிற்கின்றது; என்று எண்ணி - என்ற நினைத்து, தீயவை-பாவச்செய்கைகளே, ஒருவுமின்-(செய் யாமல்) நீக்குங்கள், மாண்டார் - மாட்சிமைப்பட்ட முனிவர் முதலியோர், (தூல்களிற்கூறிய), அறம் - தருமத்தை, ஒல்லும் வகையான் - (உங்களாற்) கூடியமட்டில், மருவுமின் - செய்யுங்கள்; (எ - று.)

இன்று, அன்று என்றது - இளமை முதுமைகளே. கொல் - ஐயம். பின்றை - இங்கே, பின்னிடத்தைக் குறித்து 'மாண்டாரறம்' என்றதில், தொக்குநின்ற ஆறனுருபு - செய்யுட்செழுமைப் பொருளது; *'பற்றற்றருண் பற்று', என்ற திருக்குறளிற் போல. திருக்குறளில் 'அறன்வலியுறுத்தல்' என்ற அதிகாரத்தில்"ஒல்லும் வகையானறவினே யோவாதே,செல்லும்வா யெல்லாஞ்செயல்" என்றதும், அதனுரையிற் பரிமேலழகர் 'இயலுங்கிற மாவது - இல்லறம் பொருளனவிரண்டு ஏற்பதும், துறவறம் யாக்கைநிலைக்கு ஏற்பவும் செய்தல்' என்றதும், இங்கு அறியத்தக்கவை. தீயவை ஒருவுமின்-தீச்செயல்களினின்று நீங்குங்கள் எனினுமாம். (சு)

ஈஎ. மக்களா லாய பெரும்பய னாயுங்கா
லெத்துணையு மாற்றப் பலவானும்—அஞ்சுந
டைம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தம்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும்.

(இ - ன்.) ஆயும் கால்-ஆராயுமிடத்து, மக்களால் ஆய - மனிதசரீரத்தாலாகிய, பெரும் பயனும்-நிறைந்த பயன்களும், எத் திணையும்-எவ்வுலகிலும், ஆற்ற பல ஆஞல் - மிகவும் அதிகங்களாதலினால், —தொக்க - (முப்பிறப்பின் புண்ணியத்தினால் அருமையாகக்) கிடைத்த, உடம்பிற்கே - சரீரத்துக்கே, ஒப்புரவு-உபயோகமாகின்ற காரியங்களே, செய்து ஒழுகாது-செய்துகொண்டிராமல், (அவ்வுடம்பைக்கொண்டு), —உம்பர் இடந்து - மேலுலகத்தில்இருந்து, உண்ண-(பேரின்பத்தை) அனுபவிக்கும்படி, பண்ணப்பெம் - (கல்ல தருமங்களேயே) செய்யவேண்டும்; (எ - று.)

இனி, தொக்க-பொருந்திய என்றுமாம்; பொருந்துதல் - எழுதாதிருக்கவுங்கூடி ஒன்றுதல். மக்கள் - இங்கு, அவர்களுடம்புக்கு முதலாகுபெயர். உம்மைகள் இரண்டனுள், முன்னது-உயர்வுசிறப்பு; பின்னது-முற்றப்பொருளது. ஆஞல் என்ற எதிர்காலவினையெச்சம், இங்குத் தேற்றப்பொருள் பட்டு நின்றது; இவ்வாறு வடதூலுள்ளும் சிறப்பான்மை உண்டு. எ-பிரிநிலை. உம்பர் என்றது, மூத்திபுலகத்தை. பண்ணப்படும் - ஒருவகையினர்கோள்; செயப்பாட்டு வினைமுற்றாகவுங் கொள்ளலாம்: அப்பொழுது, 'அறம்'என வருவிக்க. உடம்புக்கு ஆன ஒப்புரவுகள்-உண்ண உடுக்கப் பூச முடிக்கச் செய்பவை.

முதலிரண்டடிகளில் இனமோனை காண்க. (எ)

நே. அ. உறக்குந் தினையதோ ராலம்வித் தீண்டி
பிறப்பு நிழற்பயந் தாங்கு—கறப்பவுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

(இ - ன்.) உறக்கும் தினையதி-மிகச்சிறிய அளவுள்ளதாகிய,ஓர் ஆலம் வித்த-ஆலமரத்தின் ஓர் விதை, ஈண்டி-வளர்ந்து, இறப்பவும்-மிகுந்து, நிழல்-நிழலே, பயந்தாங்கு - தருதல்போல,—தான் சிறிது ஆயினும்-(தானஞ்செய்யப்பட்டபொருள்) தான் மிகச்சிறியதாயிருந்தாலும், தக்கார் கை பட்டக்கால்-தகுதியுடைய ஸத்பாத்திரங்களின் கையிற் சேர்ந்தால், வான் சிறிது ஆ-(மிகப்பெரிய) ஆகாயமும் சிறியதென்னும்படி, அறம் பயனும் - தருமத்தின் மேலான பயனே, போர்த்துவிடும் - பரப்பிவிடும்; (எ - று.)

உவமையணி. "பார்த்தெதிர், வியந்தவர் வெருக்கொள விசும்பிலேங்கினு, ஞயாந்தவர்க்குதவிய வுதவி யொப்பவே" எனக் கம்பர் கூறியிருத்தலுங் காண்க. "தென்னிய ஆலின் சிறுபழத்தொருவிதை, தெண்ணீர்க்கயத்துட் சிறுமீன் சினையிலும்,ஞண்ணிதேயாயினு மண்ணல் யானே,அணிதேர் புரவி ஆட் பெரும் படையொடு, மன்னர்க் கிருந்த நிழலாகும்மே"என்னும் நூற்றொகையெச்செய்யுளும்,இங்கே பார்க்கத்தக்கது."இனைத்தினைத் தென்பதொன்றில்லே விருந்தின்,தினைத்தினை வேள்விப் பயன்" என்ற நீதிநூலின் உரையிற் பரிமேலழகர் 'பொருளளவு 'தான்சிறிதாயினுந் தக்கார்கைப்பட்டக்கால், வான்சிறிதாப்போர்த்துவிடும்" ஆலின், இனைத்தினைத் தென்பதொன்றில்லே யென்றுங் கூறினர்' என்றதையும் நோக்குக. உறக்

குக்துணையது-இன்னரியெக்கும் அளவுள்ளது; "உயிர்ப்புரைபுக்கோர்தம்மை யுயிர்களாலறக்குமூன்றி" என்ற கம்பராமாயணமுமுகாண்க. தகுதி-ஞான ஒழுக்கங்களால் வரும்உயர்வு. அகத்தியில் தனக்கு ஒத்ததும் மிக்கதும் வேறு இல்லாத தாரளால், வானே எடுத்துக் கூறினர்.

ஆலம்வித்து, அம் சாரியை. பயந்தாஅங்கு-செய்யுளிசை நிறைக்கவந்த அளபெடை. அிறப்பபனும், உம்மை - அசைகிலை, உயர்வு சிறப்புமாம். சிறு தாயினும், உம்மை - இழிவுசிறப்பு. போர்த்தலிலிம் என்றதில், 'லிடி' என்றது - தொணிவுணர்த்தும். (அ)

கூசூ. வைகலும் வைகல் வாக்கண்டு மஃ தூணரார்
வைகலும் வைகலே வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றாம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலே வைத்துணரா தார்.

(இ.- ன்.) வைகலும் - தினந்தோறும், வைகல்-பொழுது கழிதலே, தம் வாழ்நாள்மேல் வைகுதல் வைத்து-முதலுதலுள்ளாகிலே கழிதலாகவைத்து, வைகலே உணராதார - நாள்கழிதலின் உண்மைகிலைமையை அறியாதவர் கள்,—வைகலும்-தினந்தோறும், வைகல் - நாள்கழிதல், வர-வந்துகொண் டேயிருக்க, கண்டும்-(அநுபவித்) பிரத்தியக்ஷமாகப் பார்த்திருந்தும், அஃது உணரார்-அந்த உண்மையை அறிந்து (இரங்கி விரைந்து) அறச்செய்யாத வர்களாய், வைகலும்-தினந்தோறும், வைகலே-ஆயுள்கழிதலே, வைகுமென்று-(மேன்மேல்) இருக்கிறதென்று எண்ணி, இன்புறுவர் - மகிழ்சசியடைவர்.

வந்த சொல்லும் பொருளும் பின்னும் பலமுறை வந்தனல், இது - தொடர்ச்சொற்பொருள்பொருளணி. வடநூலார் உபயவர்க்கும் மென னர்: "சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க, சொல்லிற்பயனிலாச் சொல்" என்றதிருக்குறளின் உரையில், பரிமேலழகர 'சொல்லின்என்பது இருவழியும் நிகையாயிலும், சொற்பொருட்பின்வருநிலை யென்னும் அணி நோக்கிவந்தது; "வைகலும் வைகல் வரக்கண்டும்" என்பதுபோல' எனஇப் பாட்டை விளக்கிக்காட்டினர்.

வைகல் என்றது-நாள்கழிதற்குக் காரணமான சூரியோதயாஸ்தமனங் களை. சிந்தாமணியில் "வைகல் நாளும் வெய்யோன்றேர்" என்றதற்கு, 'நாள்கள் தோறும் நாள் கழியாநின்றது' என நச்சினார்க்கினியர் உரைத்ததும் இங்கு உணரத்தக்கது.

முதலடியில் ஆய்தம் மெய்போல் ஒலித்தது; அலகிட்டுக்காண்க. (ச)

கூ0. மான வருங்கல நீக்கி யிழவெண்ணு
மீன மினிவினுள் வாழ்வேன்மஃனீனத்தா
யுட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின்.

(இ - ன்.) ஈனத்தால்-இழிவானதொழில்களினால், ஊட்டியக்கண்ணும்-உணவு முதலியவற்றைக் கொடுத்து வளர்த்தவிடத்தும், இ உடம்பு - இந்த

உடம்பு, உறுதி சேர்த்து-வலிமையை அடைத்து [வரவர வலிமை குளர்த்து அழியாமல்], நீட்டித்து நிற்கும் எனின் - பலஊழிகாலம் நிலைபெற்று நிற்கு மானால்,—மானம் அருங் கலம் நீக்கி-மானமாகிய பெறுதற்கரிய ஆபரணத் தைவிட்டு,இரவு என்னும்-பிச்சையெடுத்தலாகிய, ஈனம் இளிவுஞல்-பிக்க இழிவைத்தருஞ் தொழிலினுல், வாழ்வென் மன்-உயிர்வாழ்வேன்; (எ - று.)

நிலையில்லாத உடம்பைக் காத்தற்பொருட்டே இழிவானகாரியங்களேச் செய்தல் வீண், நிலையான உயிரைக் காத்தற்குவேண்டிய தருமங்களேச்செய் வதே நலம் என்று கருத்து. எவ்வளவு காப்பாற்றினலும் உடம்பு நீட்டித்து நிற்பதில்லே யாதலால் அதற்காக மானத்தை விட்டியாசித்த வாழேனென் னும்பொருளேத் தருவதனுல், மன் (இடைச்சொல்)-ஒழியிசைப்பொருளில் வந்தது. மற்றை ஆபரணங்கள்போல உடம்புக்கே அழகுசெய்யாமல் உயிர் க்கு நன்மை செய்தலால், மானத்தை 'அருங்கலம்' என்றார்; அன்றியும், மற் றை அணிகளே இழக்தால் மீண்டும் பெறுதல் கூடும், மானத்தை இழந்தால் மீண்டும் பெறலாகாது என அறிக.

'மான வருங்கலம்' என்றது, உருவகவணி. ஈன இளிவு - ஒருபொருட் பன்மொழி. ''இலமென்னும் வன்மையின் வன்பாட்டதில்,'' ''இன்னுமை வேண்டி னிரவெழுகை'' என்பராதலால், 'இரவென்னும் ஈன இளிவு' எனப் பட்டது. கூட்டியக்கண் - கண்ணீர்று எதிர்கால வினேயெச்சம், வாட்டு - உண் என்பதன் பிறவினே. (கம)

## ூ - ஆம் அதிகாரம்.—தூய்ஞன்மை.

இதற்கு - ஒப்புரவுமொழிதலால், தூய்து அன்மை எனப் பிரித்து (மனிதசரீரத்தின்) சுத்தமுடையதல்லாத தன்மையைக் கூறுவ தென்றும்: தூய் தன்மை எனப் பிரித்து-(அவ்வுடம்பை விரும்பாது) சுத்தமானதன்மை யென்றும் பொருள்கொள்க. முறையே எழுவாய்த்தொகாநிலேத்தொடரும், பண்புத்தொகைநிலேத்தொடருமாம். 'தூயதன்மை' என்று பாடமாயினும் - தூயது அன்மை, தூய தன்மை எனப் பிரிந்து இவ்வாறே பொருள் படும். தூயதன்மை-குறிப்புப்பெயரெச்சத்தொடர். மனத்தை மயக்கி நல்ல அறத் தைச்செய்யவொட்டாமற் பெரும்பாலுங் கெடுப்பது மகளிருடம்பே யாத லால், அதனிடத்து விருப்பத்தை ஒழித்து அறத்தில் மனத்தைச் செலுத்து தற்பொருட்டு, அவர்களது உடம்பின் இழிவை எடுத்துக் கூறுதலால், இவ் வதிகாரம் அறன் வலியுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

மக. மாக்கேழ் மடநல்லா யென்றாற்றவர் சான்றவர்
நோக்கார்கொ னெய்யதோர் துச்சிலே—யாக்கைக்கோ
ரிச்சிற கன்னதோர் தோலதிலும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்.

(இ - ன்.) 'மா-அழகையும், கேழ்-ஒளியையும், மடம் - இளமையையும், நல்லாய்-கற்குணத்தையுமுடைய மங்கையே!' என்று அரற்றும்-என்று (மக

ரிரைக்கண்டு காமுற்று) வாய்விட்டு இரங்குகின்ற, சான்றவர்-பெரியோர், நொய்யது-அற்பகுணமுள்ளதாகிய, ஓர்-ஒரு, துசசில-உடம்பின் இழிவை, நோக்கார்கொல்-ஆராய்ந்து பாரார்களோ' (ஏனென்றால்),—யாக்கைக்கு - அடியுடம்பில், ஓர் ஈ ரிறகு அன்னது-ஈயினது ஒரு பக்கத்துச் சிறகினளவான, ஓர் தோல்-மிகவுஞ்சிறிய தோல், அறினும்-அறுபட்டுப்போனாலும், காக்கைகடிவது-(அப்புண்ணைக்) குத்துதற்கு வருகின்ற) காக்கையை அடித்து ஓட்டுவதற்கு, ஓர் கோல்-ஒருகொம்பு, வேண்டுமே-வேண்டியிருக்குமே!

இவ்வளவு அருவருப்புக்கு இடமான உடம்பை அழகியதாகக் கண்டு விரும்புதல் பெரியோர் கொள்கையன்று என்பது கருத்து. சான்றவர்-நற்குண நல்லொழுக்கங்களால் நிறைந்தவர்; மகளிரை விரும்பிப் புகழ்கின்ற புலவரிவளரை இங்கே 'சான்றவர்' என்றது - பரிகாசத்துக்குச்சொன்ன எதிர்மறையிலக்கணை; வடநூலார் 'விபரீதலக்ஷணை' என்பர். இது, பிற தூய்மைப்பஞ்சகமும். அசுத்தியைக் கண்டிருப்பாரின் இகழ்ணங் காமுற்று அரற்றுவர் என்றற்கு, 'நோக்கார்கொல்' என்றார்.

துசசில்-தங்குமிடம்; உயிர்தங்கு மிடமாகியஉடம்பைஇங்கேகுறித்தது. 'புக்கில்' என்ற பாடத்திற்கும் பொருள் இதுவே. யாக்கைக்கு, குவலருபு - கொள்ளுதற் பொருளதாகாமல் இடப்பொருள தாதலால், உருபுமயக்கம். ஈசசிறகு - மிக்கநிறுமைக்கு எடுத்துகாட்டியதார் அளவை. கொல்-வினுவோடு இரக்கம். உம்-இழிவுசிறப்பு. ஏகாரம் - இசை.

ஒன்று + துசசில்=ஒர் துசசில்; ஒர்+தோல், ஒர்+கோல் என்பனவும் இவ்வாறே. இதனுல், 'ஒன்றுஇரண்டு என்றும் எண்கள் ஒர் ஈர் எனநிற்பது வருமொழிமுதல்லலயிர்வரு டதேதே'னையும், 'முதல்னீனாதல்காரம்பெற்று ஒரு இரு என நிற்பது மெய்வருமிடத்தே' எனவும், 'இவை மாறுபடவரின் வழுவாம்' எனவும், சிலர் கூறுவது பதியன்று. ஆனதுபற்றியே, தொல் காப்பியத்தில் அக்காலத்துப்பெரும்பான்மைவழக்குப்பற்றி அகநானூற்றி ரிருத்தலை நன்னூலார் முறைதவிர்லசகலால் ஒழித்து இலக்கியகண்டு "முதல்ரெண் முதலீரைம்" என்றும், "ஒன்றன்புள்ளி ரகமாக, இரண்ட னெற்றுமியறே உவவருமே" என்றும் பொதுப்படச சூத்திரஞ் செய்தன ரென்க. இங்ஙனமிருக்க, இக்காலத்தார்சிலர் 'ஒன்றுஇரண்டையும் அவ்வறை யறையைப் புகுத்துதல் அற்கருத்திற்கு ஒத்ததன்றும். 'என்னுலார்தாமே "ஆனவொன் றுதிபோர்ப்புடையொப்பினமே," "வேறவற்றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்" என மெய்முதல் மொழிமுன் ஓர் என உபயோ கித்திருத்தல் காண்க. "ஈர்ம பதினெஞ்றும்" என்ற பழம்பாட்டில் 'ஈர் பறவை நாற்காலோர்ப்பப்பந்தாம்' என்றதையும் நோக்குக. "அசசாணி யன்னதோர்கோல்," "ஆயிரங்காக்கைக் [illegible]" என இவ்வாறுவந்துள் ளனவை அனவிறக்தன. இக்காலடியாரில், உயிர்முதலோடு மெய்முதலோடு வரியைற ஓர் என நின்றது. "வெவ்வுயிருகு காக்க வொருவிசு லுண்டோ வில் லையோ" என்ற நீருவள்ளுவர்த்னிப்பாடலிலும், "உம்மையெசச மிருவிற் றனும்" என்ற தொல்காப்பியத்திலும், 'ஒருவாது' என உலக வழக்குச்

செய்யுள்வழக்கு இரண்டிலும் உயிர்முதல்முன் ஒரு என வந்தது. கல்கிர் கசனிஞர்க்கினியர் பரிமேலழகர் முதலிய மூன்னேருரைகளிலும், பஞ்சதந் திரம் முதலிய பின்னேருரைகளிலும் இப்படியே காணலாம்.

மூன்றுமடியில் இனவெதுகை காண்க.

இசசெய்புள் - ஒருவிகற்பஇன்னிசைவெண்பா. (க)

சுஉ. தோற்போர்வை மேலுர் தூணிபலவாய்ப் பெய்ம்மறைக்கு
மீப்போர்வை மாட்சித் துடம்பானன்—ப்ப்போர்வை
பொய்ம் மறையாக் காமம் புகலாது மற்றதனேப்
பைம்மறியாப் பார்க்கப் படும்.

(இ - ன்.) உடம்பு-இவ்வுடம்பு,—தோல் போர்வைமேலும்-தோலாகிய போர்வையின்மேலும், இனி பல ஆய்-பலதிலைகளையு முடையதாய், பொய் மறைக்கும்-(தன்னிடத்திலுள்ள) அசுத்தங்களைமறைக்கின்ற, ரீ போர்வை-மேலேபோர்க்கும் ஆடைமுதலியவற்றால், மாட்சித்து - அழகையுடையது; ஆனல்-ஆதலால்,— ரீ போர்வை - மேற்போர்வையினுல், பொய் மறையா-(அதனிடத்துள்ள) அசுத்தியை மறைத்து, காமம் புகலாது-விரும்பிப் புகழ்ந் துசொல்லாமல், அதனே - அவ்வுடம்பை, பை மறி ஆ - பையைப்போல (உட்பக்கம் வெளிப்பக்கமாம்படி) மாற்றியதாக, பாகசுப்படும் - ஆராய்ந்து பார்க்கவேண்டும்; (எ - று.)

மேலே அழகியதாயிருக்கின்ற பையை உட்புறந் திருப்பிப்பார்த்தால் அதிலுள்ள ஆபாசங்கள் வீளங்குவதுபோல, ன்னுரை ஆராய்பார்த்தால் உடம்பினுள்ளே பல அசுத்தங்களும் தெரியவரு மென்று கருத்து.

தூனே பல - கண் செவி மூக்கு வாய் முதலிய வடிவுவாராகங்கள் மீப் போர்வை பொய்ம்மறையா என்றது-மேல்தோலின் அழ கையும்ஆடையணி களின்அழகையுமே கண்டு உடம்பிலுள்ளே உள்ள அசுத்தியைஅடியோடே அறியாமல் விட்டு என்றபடி. இ ஈாறு அதனுண்மையை ஆராய்ந்தறிந்தவர் கள் அதனிடத்து வெறுப்பையுடையவராகளாய்த் திரு ந்து முற்றிலுமாகமுயல் வரென்பதாம். காமம்புகலுதல்-புணர்ச்சுரைத்தல். "காமஞ்செப்பாது கண் டதுமொழிமோ" என்ற குறையநூற்பாசூத்திரம் போல. இங்கே 'பைம்மறி யாப்பார்க்கப்படும்' எனறதை, மணிமேகலையில் வருகிற "மக்கள்யாக்கை யிதுவெனவுணராது, மக்கோ யிதனேப் புதமறிப்பாராய்" என்பதனேடும், குறையாகப்போருளுரையில் வருகிற 'பைம்மறியா நோகசுப்படுத்தாக குக் தசையைதத்' எனபதனேடும் ஒப்பிடுக. 'தொனே' என்றும் பாடம்.

போர்வை-போர்க்கப்படுவது; ஐ-செயப்படுபொருள்விகுதி, வ - வழுத் துப்போது. தன்வினே பிறவினைகட்குப் பொதுவாகிய 'மறையா'என்றவினே யெச்சம், இங்கே பிறவினேப்பொருளதாய் நின்றது. மற்று-அசை.

முதலிரண்டடியில் இனவெதுகை காண்க. (உ)

சரு. தக்கோலக் தின்று தலேநிறையப் பூர்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய வொழியுமே—யெக்காலு
முண்டி வினேபுளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல்.

(இ - ன்.) 'எக்காலும் - எப்பொழுதும், உண்டி - உணவாகிய, வினே யுள் - தொழிலினுலேயே, உறைக்கும் - உறதிபெறும்', என-என்று, பெரி யோர் - (அறிவாற்) பெரியவர்கள், கண்டி-உண்மையுணர்ந்து, கைவிட்ட - வெறுத்துவிட்ட, மயல்-செத்தையாகிய உடம்பின் அசுத்தங்கள்,—தக்கோ லம் தின்று-வாசனேப்பண்டங்களோ மென்றுதின்று, தலே நிறைய-தலேமயிர் நிரம்ப, பூ சூடி - புஷ்பங்களோ சூட்டிக்கொண்டு, பொய்கோலம் செய்ய - பொய்யான அலங்காரங்களோ செய்துகொள்வதனுல், ஒழியுமே-நீங்குமோ?

தக்கோலம் - வால்மிளகு: "தக்கோலம் நீண்பூத் தகைசா லிலவங்கங் கற்பூரஞ் சாதியோ டைந்து" என்கிற ந்தி முகவாசப்பண்டங்களுள் ஒன்று; இது, மற்றை காண்கிற்கும் உபலக்ஷணம். நிலேயில்லாமையாற் பொய்யாகிய உடம்பிற்குச செய்யப்படுவதனுலும், உள்ளேபொருந்திய துர்க்கந்தத்தை ஒழித்திடாமையாலும், 'பொய்க்கோலம்' என்றார். 'சோற் றுலெடுத்த சுவர்' என்றற்போல, 'எக்காலும் உண்டிவினேயுளுறைக்கும்' என்றார். மயல், துரால், செத்தை என்பன - ஒருபொருட்சொற்கள். மயல் என்றசொல் இப்பொருளுதாதலே "வம்புண் கோதையர் மாற்று மயலரோ" எனச சிந்தாமணியிலும் காண்க.

வினேயுள் - 'உள்' என்னும் ஏழனுருபு இடப்பொருளதாராமற் காரு ணப் பொருளதாதலால், உருபுமயக்கம். எ - எதிர்மறை. உம் - முற்று. கைவிட்ட, கை - உபசர்க்கம்.

"மெய்ப்படி சார்ந்தும் பூவுங்கிகளி சமழு மேனுல், கைப்படி சார்ந்தும் பூவுக் கொண்டலாற் சலக்க லாகா, ரப்பில் பித்து கெய்த்தோ ரகப் சோ ரமுகற் புன்றேற்,பொய்ப்பட வுரைத்த தண்டோ பொன்னுலீர் நம்புரு மால்" என்னுஞ சிந்தாமணியை இதனேக் கோக்குக.

இரண்டாமடியில், யகரமெய் - பூகெதுகை.

(உ)

சஅ. தெண்ணீர்த் குவலீன பொருகயல் வேலெண்ணு
கண்ணினிற்புன் மாக்கள் கவற்ற விடுவெனேனு
வண்ணீர் கினேந்தக்கா லுய்குருன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

(இ - ன்.) உள் நீர் கினேத்தக்கால் - (கண்களின்) உள்ளே யிருக்கின்ற நீரை எடுத்துவிட்டால், அப்கு குன் றிட்டன்ன-நெங்கைத் தோண்டி யெடுக் கப்பெற்ற பனங்காயின ஓடுபோன்ற, கண்-கண்களின், நீர்மை-(இழிவான) தன்மையை, கண்டு ஒழுகுவேன்-பார்த்துவருகின்றவனன்,—(அக்கண்களை),

'தெள் நீர் குவளை - தெளிந்த நீரில் தோன்றிய நீலோற்பல மலர்போலும்: பொரு கயல் - போர்செய்து பிறழ்கின்ற இரட்டைக்கயல்மீன் போலும்: வேல் - வேலாயுதம்போலும்,' என்று - என்றுசொல்லிப் புகழ்ந்து, கண் இல்புல் மாக்கள்-நல்லறிவில்லாத அற்பமனிதர்கள், கவற்ற-(என்மனதைக்) கவலைப்படுத்துவதனால், விடுவெனே-நான்கொண்ட தூறவை) விடுவேனே?

கண்களுக்குக் குவளை-நிறத்தினாலும் மெய்மையினாலும் அழகினாலும், கயல் - வடிவினாலும், பிறழ்ச்சியினாலும், வேல் - கூர்மையினாலும் ஆடவரை வருத்துதலாலும், இம்மூன்றும் - வடிவத்தினாலும் உவமை கூறப்படும். 'அன்று மலர்ந்த வாடாமலர்' என்பார், 'தெண்ணீர்க்குவளை' என்றார். பொரு என்னும் அடைமொழியை வேலோடுங்கூட்டலாம். பிழிவுதோன்ற, 'மாக்கள்' என்றார். மாக்களெனப்படுவார்-மனவுணர்ச்சி யில்லாமல் ஐம் பொறி யறிவுமாத்திரமேயுடைய விலங்குபோன்ற ஒருசார் மானிடங்கள். மக்களாவர்-ஐம்பொறியுணர்வோடு மனவறிவுமுடையவர்; விவேகிகளான மனிதர். "மாவும் மாக்களும் ஞயறிவினவே," "மக்கள்தாமே ஆறறிவுயிரே" என்னுந் தொல்காப்பியத் சூத்திரங்களைக் காண்க. மா என்பது விலங்கின் பெயராதலால், அதன் பன்மையான மாக்கள் என்பது - விலங்குபோன்ற அவிவேகிகளே உணர்த்துமென்க. கவற்ற விடுவெனே என்பதற்கு-கவலைப் படுத்தி மயக்கும்படி மனத்தைப் போனவழியில் விட்டுவைப்பேனே? என்னும் பொருள் கூறலாம்.

கவற்ற என்ற பிறவினைப் பகுதியில், கவல் - தன்வினைப்பகுதி, று - பிறவினைவிகுதி, ஓ-எதிர்மறை. குன்றிட்டி, குல்-பகுதி. குறுதல்-குடைதல்.

இது-ஒருவிசைப்படுத்தினால் வேம்பா. அடித்தசெய்யுளும் இது. (ச)

சுடு. முல்லே முகைமுறுவலன் முத்தென் றிவையிதற்றுங்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவெனே
வெல்லாருங் காணப் புறங்காட் டிதிர்த்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

(இ - ன்.) எல்லாரும் காண-யாவரும் பார்க்கும்படி, புறங்காடு-ஊருக் குப்புறத்திலே புள்ள கன்காட்டில், உதிர்ந்து உக்க-சிதிக்கிடக்கின்ற, பல் என்பு-பற்களாகிய எலும்புகளின் தன்மையை, கண்டு ஒழுகுவேன்-பார்த்து வருகின்றவனான்,—'முறுவல் - அப்பற்கள், முல்லே முகை - முல்லையரும்பு கள்போலும், முத்து - முத்துக்கள்போலும், என்ற இவை-என்று இத்தன் மையனவான புகழ்ச்சிகளே, பிதற்றும்-சொல்லிக்கொண்டு திரிகிற, கல்லா புல் மாக்கள் - (மெய்க்குறிகளைப்) படியாத அற்பமனிதர்கள், கவற்ற-கவல விக்க, விடுவெனே - விடுவேனே? (எ - து.)

பல்லுக்கு முல்லையரும்பும் முத்தும் - வெண்ணிறத்தாலும், வடிவினு லும், அழகினாலும் உவமை கூறப்படும். உதிர்ந்து உக்க - ஒருபொருட்பன் மொழி. உக்க, உகு - பகுதி, என்றிவை - விகாரம். (தி)

சசூ. குடருங் கொழுவுங் குருதியு மென்புந்
தொடரு நரம்பொடு தோலு—மிடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்று
ளெத்நிறத்தா ளிர்ங்கோதை யாள்.

(இ - ள்.) குடரும்-குடலும், கொழுவும்-கொழுப்பும், குருதியும்-இரத்தமும், என்பும்-எலும்பும், தொடரும்-ஒன்றோடொன்று தொடர்ச்சியாயிருக்கின்ற, நரம்பொடு-நரம்பும், தோலும்—, இடை இடையே வைத்த-(இவற்றின்) நடுவிலே நடுவிலே வைத்த, தடியும் - தசையும், வழும்பும்-நிணமும், ஆம்-ஆகிய, இவற்றுள்-இவைகளுக்குள், ஈர் கோதையான்-குளிர்ந்த மாலையையுடைய இப்பெண், எ நிறத்தான்-எக்கட்பகுதியையுடையவள்? (எ-று.)

எத்நிறத்தான் - 'என்ன மேம்பாடையள்?' எனினுமாம்.

'இங்குச் சொல்லப்பட்ட குடல் முதலியவற்று ளாகியதே உடம்பாதலால், இவற்றுள் ஒன்றையுஞ் சுத்தமுடைய பொருளாண்டோ? பாரும்' என்று, பெண்ணாசைமிக்கு அறங்கைவிட்ட நருவனைக்கோக்கிச்சொல்லியது.

குடர்—குடல்; சுற்றப்பொலி. இடையிடை - அடிக்குதொறும்பொருளது. எ, மறு - அசைகள். ஈர்ங்கோதை—ஈர் + கோதை.

இசசெய்யுள் - அருவருப்புத்தோன்றக் கூறினமையால், இழிப்புத் அணியைமாக்கு உதாரணமாம்.

"என்பினை நரம்பிற் பின்னி யுதிரந்தோய்த் திறைச்சி மெத்திப், புன்புறந் தோலைப்போர்த்து மயிர்புறம் பொலிய வேய்ந்திட், டொன்பது வாயி லாக்கி யுள்பயில் குரம்பை செய்தான், மன்பெருக் தசச னல்லன் மயங்கி னேர் மருளவென்றான்" என்னுஞ் சித்தமணிசெய்யுள் இங்கு உணரத் தக்கது. (க)

சஎ. ஊறி யுவர்த்தக்க வொன்பது வாய்ப்புலனுங்
கோறிக் குழம்பலேக்குங் கும்பத்தைப்—பேதை
பெருந்தோளி பெய்வளா யென்னுமிப் போர்த்த
கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு.

(இ-ன்.) ஊறி-(மலங்கள்) சுரந்து, உவர் தக்க-வெறுக்கத்தக்க, ஒன்பது வாய் புலனும் - நவத்துவாரங்களாகிய உறுப்புக்களெல்லாம், குழம்பு-மலத்தை, கோறி அலேக்கும்-சிதறிச்சிதறி வெளிப்படுத்தப்பெற்ற, கும்பத்தை-(மாதரது) உடம்பாகிய பாண்டத்தை (நோக்கி),-பேதை-அறிவில்லாதவன்,—மீ போர்த்த கருந் தோலால்-அதன்மேற் போர்க்கப்பட்டுள்ள பெரிய தோலினாலே, கண் விளக்கப்பட்டு-கண்களுக்கு ஒளிபெறும்படி செய்யப்பட்டு,-'பெருந்தோளி-பெரியதோள்களையுடையவளே! பெய் வளாய்-இடப்புட்ட வளையல்களை யுடையவளே!' என்னும்-என்று புகழ்ந்து சொல்வான்.

பேதை இவ்வாறு ஆவனெனவே, அறிவுடையவன் அதளிழிவை அறிந்து அறந்து முத்திபெருவ னென்றதாம். 'நீப்போர்த்த கருந்தோலாற் கண்ணிளக்கப்பட்டு'என்றது-மேற்போர்த்துள்ளதோலினழகையே பார்த்து மோகித்து உள்ளின் அசுத்தத்தை நோக்காமல் என்றபடி. 'பெருந்தோள்' என்றார், மகளிர்தோள் பருத்திருத்தல் நல்லிலக்கண மாதலின்; "தோள் கண்ணை மூவழிப்பெருகி" என்றார் கலித்தொகையிலும்.

ஒன்பதுவாய்ப் புலனும், உம்-முற்று. பேதை என்னும் என இயைக்க. பெய்வனாய்-வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகிய 'பெய்வனே' என்பதன் மறுதலிரித்த விளி.

இசசெய்யுளில் இனவேதுகை காண்க. (ஏ)

சூ. பண்ட மறியார் படுசாந்துங் கோதையுங்
கண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொல்—மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுது போத்திட்டுக் குத்தன்
முடைச்சாகா டரற்றி முழி.

(இ - ன்.) பண்டம் - (உடம்பாகிய)பண்டத்தின் இழிவை, அறியார் - அறியாமல், படி சார்த்தும் - சுபப்பட்ட சந்தனத்தையும், கோதையும்-மாலையையும், கண்டு-பார்த்து (மயங்கி), பாராட்டுவார்-(அவ்வுடம்பைக்) கொண்டாடுபவர்கள்,— மூடை சாகாடு-மூடை சாற்றத்தையுடைய (இவ்வுடம்பாகிய) பண்டி, அச்சு இற்ற உழி - (உயிராகிய) அசசு முறிந்து இறந்தபொழுது, (அதனை), பெடை சேவல் - பேடையும் ஆணுமாகிய, வல் கழுகு - வலிய கழுகுகள், மண்டி - நெருங்கி, போத்திட்டு-ஒடத்தைவிட்டு இழுத்து, குத்தல் - குத்திந் தின்னுதலே, கண்டிலர்கொல் - பார்த்திலரோ? (எ-று.)

கண்ணிளாராயின் அருவருப்புக்கொண்டு உடனே வெறுத்துத் துறப்பரே யென்றபடி.

பெடை சேவல் - முறையே பறவைகளின் பெண்பெயரும் ஆண்பெயருமாம். மூண்டை-ஒருவகை தூக்கத்தம். சாகாடு சகடமென்னும் வடமொழியின் திதைவு; இது சகடு என்றும், சாடு என்றுந் திதைந்து வழங்கும். அசசு - சக்கரங்கோத்த மரம்; அஃதுமென்னும் வடசொலலின் திதைவு. 'அச்சு' என்ற சொல்லின் நயத்தால், அசசாணியென்றும் உயிரென்றும் பொருள்படுதல் காண்க. இற்றுழி - விகாரம்.

அசசில்லாமல் வண்டி செல்லாததுபோல உயிரில்லாமல் உடம்பு இயங்காதாதலால், உடலே வண்டியென்றும், உயிரை அசசென்றும் உருவகப்படுத்தினர்.

'கொண்டுபாராட்டுவார்' என்ற பாடத்துக்கு - பூசுவன முழுப்பன முதலியவற்றால் உடம்பை அலங்கரித்து ஆதரிப்பவரென்க. 'கொத்தல்' என்றும் பாடம். (அ)

சகூ. கழிந்தா ரிடுதலே கண்டார்நெஞ் சுட்கங்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—யொழிந்தாரைப்
போற்றி யெரிநின்றி னிற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

(இ - ள்.) கழிந்தார்- இறந்தவர்களுடைய, ஈடு தலை-(இடுகாட்டிற்)சிக் நிடக்கின்றதலைகள்,—கண்டார் நெஞ்சு உட்க-(தம்மைக)கண்டவர்கள் நெஞ்சம் அஞ்சுமபடி, குழிந்து ஆழ்ந்தகண்ண ஆய்-மிகவும் ஆழ்ந்திருக்கின்ற கண்களோடையவையாய், தோன்றி-தானபபட்டு,— ஒழிந்தாரை-மற்றவர் களோகுறித்து, 'போற்றி-(நீவிரவாராதபடி உகளோம்) பாதுகாத்துக்கொண்டு, எரி (அறவுநமாகிய) நல்லவழியிலே, நின்றின்-நில்லாதகள்: இதன்-இவ்வடம்பினது, பண்பு-குணம், இற்று-இப்படிப்பட்டதது, என்று—, சால-மிகவும், சிரித்து—, சாற்றுமகொல் சொல்லுவனபோலும்; (எ - று.)

குழிந்து ஆழ்ந்த - ஒருபொருட்பன்மொழி கண்ண - தினையடியாகப் பிறந்த பலவின்பாற் பெயர. ஒழிந்தார் - இராவாமல் நின்றவர்கள். இற்று - துரசுசுட்டியாய்ப்பிறந்து ஒன்றன்பாலாகறிபபுமுற்று; று - விகுதி.

பற்றின் வெருட்டுனறபடி வாயதிறந்து கிடக்கின்ற இறகதவரதது வெண்மலைகள் உடம்பைவிரும்புகிற அறிவிலாரை நோகசசெ சிரிதுசெ சாற்றுமெனக் கூறுதலால், தற்குறிப்பேற்றவணி. சொல் என்றது,அதன் உருபாய் நின்றது. (க)

நிலை யிரேயார் வெண்டலை யுட்கச் சிரித்து
மெயிர்குருதி செம்மாப் பவரை—யெயிர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ணம் மென்பதனற் றம்மையோர்
பண்டத்தி வைப்பு நிலர்.

(இ - ன்.) உயிர் போயார்-உயிர்நீங்கினவர்களுடைய, வெள் தலை-(இடுகாட்டிற்கிடக்கின்ற) வெண்மையான தலைகள், உட்க-(கண்டவர்) அஞ்சும்படி, சிரித்து—, செமமாப்பவரை-(இல்வாழ்க்கையின்பத்தால்) மிக்கக்களித்திருப்பவர்களை, மெயிர் நீர்க்கும்-(அககளிப்பாகிய) குற்றம் நீகசசெய்யும்: மெயிர் நீர்ந்தார்-குற்றம் நீகினவர்கள், கண்டி - 'அத்தலைகளைப்) பார்த்து, இதன்வண்ணம் இற்று என்பதனல்-இதன் குணம் இப்படிப்பட்டதென்று நினைப்பதனல், தம்மை-தங்கள் உடம்பை, நிலர்பண்டத்தில் வைப்பதுஇலர்-ஒருவகைப்பொருளில் வைத்து எண்ணுகின்ற தொழிலில்லாதவராவர். ஒரு பொருளாக வைத்து மதியா தென்றபடி. (எ - று.)

உடம்பை வெறுத்துத் தவஞ்செய்து வீடெய்துவது ரென்பதாம்.

இறுமாப்பவர், அல்லாப்பவர், சோகாப்பவர் என்பனபோலவு,'செம்மாப்பவர்' என்பது-ஒருசொல். வெண்டலை-மேல்தோலழிந்து எலும்பு மாத்திரமாய் நிற்குந் தலை.

## கூ-ஆம் அதிகாரம்.—துறவு.

*அதாவது*-புறமாகிய செல்வத்தினிடத்து உண்டாகின்ற 'எனது' என்னும் புறப்பற்றையும், அகமாகிய உடம்பினிடத்து உண்டாகின்ற 'யான்' என்னும் அகப்பற்றையும் விடுதலைக்கூறுவது. தானல்லாத உடம்பையானென்று கருதி அதனிடத்துப் பற்றுச்செய்தல் 'அறுங்காமம்' என்றும், தன்னேடு இயைபில்லாத பொருளே எனதென்றுகருதி அதனிட்த்துப் பற்றுச் செய்தல் 'மமகாரம்' என்றும் வடநூலிற் பெயரிடுபடும்.

இந்நூலில் செல்வநிலையாமை, இளமைநிலையாமை,யாக்கைநிலையாமை, அறன்வலியுறுத்தல், ஈயத்தன்மை, துறவு என அதிகாரங்களே முறைப்பட நிறுத்தினமைக்குக் காரணம்-செல்வம் இளமை உடம்பு என்னும் மூவற்றின் நிலையில்லாமையையும், இவற்றுற் செய்யத்தக்க தருமத்தினது நிலையுடைமையையும், அதற்றைச்செய்யவொட்டாமல் மனத்தை மயக்கிக்கெடுக்கின்றமகரிருடலின் அசுத்தமான தன்மையையும் அறிந்து நிலையில்லாதபொருள்களினிடத்திற்பற்றைவிட்டுநிலையுடையஅறத்தைப்பற்றவேண்டுவதாதலென்க.

துறவு - துறத்தல்: தொழிற்பெயர்; துற - பகுதி, உ-விகுதி, வ்-உடம்படுமெய்: வு-விகுதி யென்றலும் உண்டு.

> குக. விளக்குப் புகவிருள் மாய்ந்தாங் கொருவன்
> றவத்தின்முன் னில்லாதாம் பாவம்—விளக்குநெய்
> தேய்விடத்துத் தென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
> தீர்விடத்து நிற்குமாந் தீது.

(இ - ன்.) விளக்கு - தீபம், புக - (நுனிடத்திற்) பிரவேசிக்க, இருள் - (அதற்குமுன்புஅங்கேயிருந்த) இருட்டி, மாய்ந்தாங்கு - அழிந்தல்போல, ஒருவன்-ஒருவன்செய்யும், தவத்தின்முன்-தவத்திற்குமுற்பட்டு, பாவம்-தீவினை, நில்லாது-அழியும்; விளக்கு நெய்-அத்தீபம் எரிவதற்குக் காரணமான நெய், தேய்விடத்து-குறைந்தபோயிடத்து, இருள்—, சென்றுபாய்ந்தாங்கு-(அவ்விடத்திற்) போய்ப் பரவுதல்போல, நல்வினை-அத்தவஞ் செய்தற்குக்கருவியான துறவினிய புண்ணியம், தீர்விடத்து - நீங்குமிடத்தில், தீது - பாவம், நிற்கும் - வந்துநிற்கும்; (எ - று.)

துறவினு லுண்டாகும் நன்மையும், அஃது இல்லாதபோது உண்டாகும் தீமையும் உபமானமுகத்தால் இச்செய்யுளில் விளக்கப்பட்டன.

தன்பகையாகிய அறம்வளர்தலின் தனக்குநிலையில்லாமல் தீவினைமெலிதலால், 'தவத்தின்முன் நில்லாதாம் பாவம்' என்றார்; "அல்லவை தேய அறம் பெருகும்" எனத் திருவள்ளுவனார் கூறியதும் இக்கருத்துப்பற்றியே. தவம், பாவம்-தபஸ், பாபம் என்னும் வடசொற்களின் திரிபுகள். நவமாவது-மனம் பொறிவழிபோகாது நிற்றற்பொருட்டு விரதங்களால் உணவு சுருக்குதல் முதலியன. பெரும்பான்மைபற்றி, தவம் அறவறத்தின்மேல்நின்றது; "தானந்தவ மிரண்டுந் தங்க" என்ற திருக்குறளிற் போல.

விளக்கு - (பொருள்களை) விளங்கச செய்வதாகிய தீப்பிழம்புக்குமுதனிலைதிரிந்த தொழிலாகுபெயர்; வினைமுதற்பொருள்விகுதி புணர்ந்து கெட்ட பெயரென்றுங் கொள்ளலாம். புகைகாரணப்பொருளில் இறந்த காலவாய்பாட்டிய செயவெனெச்சம். ஆகுபெயரெனினுமாம். காரணமாகிய செய்யின் தேய்த்தலைக் கூறி, காரியமாகிய விளக்கின் தேய்வைப் பெறவைத்தார். அதிகாரம்கோக்கி,ஈண்டுவினை துறவு எனப்பட்டது. 'ஆம்' இரண்டும்-அசை. தேய்விடத்து-எதிர்காலவினையெச்சம்; தேய்வு இடத்து என்றும் பிரிக்கலாம்: திரிபுத்தலென்பதற்கும் இவ்வாறே. ஈற்று-குறிப்பு வினையாலணையும்பெயர். முன் இல்லாதாம் என்றும் பதம் பிரிக்கலாம்.

துறவறத்திற்குவிளக்கும், பாவத்திற்குஇருளும்உவமை:உவமையணி.

இரண்டாமடியிலும், கான்காமடியிலும், ஒருவெதுகை. (க)

ஙஉ. நிலையாமை மோய்மூப்புப் சாக்காடென் றிறண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்—தொலைவில்லாச்
சித்தமுஞ் சோதிடமும் மென்றுங் கவலற்பாற்றும்
பித்தரிற் பேதையார் யில்.

(இ - ள்.) தலை ஆயார்-மேலானவர்கள்;—நிலையாமை-(செல்வம்) நிலையில்லாமலிருத்தலையும், மோய்-(உடம்புக்கு)வியாதிவருதலையும்,மூப்பு-கிழத்தனம் உண்டாதலையும், சாக்காடு என்றுமரணம் நேர்தலையும், எண்ணி - ஆராய்ந்து, தம்கருமம் செய்வார்-தாம் செய்யவேண்டுந்தொழிலாகியதுறத்தலேயெசெய்வார்கள்; (அதனைசெய்யாமல்), தொலைவு இல்லா - முடிவில்லாத, சத்தமும்-இலக்கணனூலும், சோதிடமும் கணிதநூலும்,என்றஇவைஎன்றுசொல்லப்பட்ட இவற்றை, பித்தரும் - வீடாமற் சொல்லிக்கொண்டு திரிகின்ற, பித்தரின்-பைத்தியம் பிடித்தவரைப்போல, பேதையார் - அறிவில்லாதவர், இல் - (எ)கும்) இல்லை; (எ - ம.)

செல்வங்களும் அவற்றை அனுபவித்தற்கு உரிய உடம்பும் கெடுதன்மையானவாதலைக் கருதி ஞானநூல்களைக்கற்றுத் தேர்ந்து துறவுபூண்டு ய்யாமல், சத்தம் முதலிய நூல்களேயே முக்கியமாகக்கொண்டுஎப்பொழுதும் பயின்றுவீண்காலங்கழிப்பது பேதைமை யென்பதாம்.

தொல்காப்பிய வுரையிலும், கலித்தொகையுரையிலும், ஈசனெழுத்கினியர் சிலைஷ். வியாகரணம் சத்தஸ் ருக்தம் ஜ்யோதிஷம் கல்பம் எனவேதத்திற்கு அங்கமாகவுள்ள ஆறுசாஸ்திரங்களினும் கூறிவருபடத்தி, சோதிட மென்பதற்கு ஈடாக 'காராயணீயம் வாராகம் முதலிய கணிதமும்' என்று எழுதியிருத்தல்கொண்டு, சோதிட மென்பது கணித நூலாதல் தெளிவாப் பரும். ''எண்ணெழுத்திகழேல்,'' ''எண்ணுமெழுத்துங்கண்ணெனத்தகும்,'' ''ஙஞ்ணெனவேனை யெழுத்தென்ப இவ்விரண்டுங், கண்ணென வாமுமுயிர்க்கு,'' ''எண்ணுமெழுத்துங் கண்'' எனப் பலவிடத்தும் சிறப்பித்துக் கூறப்படுதன்மையான வாதலால், மற்றைய சாஸ்திரங்களே யெடுக்காமல் இவ்விரண்டையுமே எடுத்தார். ''காணுதம்பாணிரீயஞ்ச ஸர்வஸாஸ்த்ரோப

காரகம்' என வடநூலாரும் இவ்விரண்டு அங்கங்களோடுமே எடுத்துக்கூறுத லுங்காண்க. அறம் முதலியபொருள்களைக் காணுதற்குக் கருவியாகியஇவற் றை அவனவன் கருவியாகக்கருதாது பயனாகவே எண்ணிப் பாராட்டிப்பயில் பவர், 'பித்தற்றம் பித்தர்' என இழைப்பட்டனர். சத்தம்-சாஸ்திரமும், சோதிடம் - நிரகசஞ்சாரத்தால்வரும் பயனை யுணர்த்துஞ் சோதிடசாஸ்தி ரமு மென்றுங் கொள்ளலாம். 'பித்தரிற் பேதையாரில்' என்றது, இவைகற் றறிமூடராதலால். அரிகாரத்தால், 'தம்கருமம்' என்றது-தாறவாம்; அன்றி டம், அரிய மாணிடப்பிறப்பு எடுத்தன்பயன் முதலியபெறுதலே யாதலால், அதற்குக்காரணமான தாவறம் தம்கருமமேயாம்.

மூப்பு, சாக்காடு-தொழிற்பெயர்கள். மூ, சா-பகுதிகள்: பு, காடு-விகு திகள். 'என்று' என்னுமெண்ணிடைச்சொல்லே, 'நிலையாமை முதலியகாரண ஞெங்கு கூட்டுக; அவ்வியலில் ஒன்பதாஞ் சூத்திரத்தினுல், இது தொகை பெறுமல் வந்தது. நிலையாயார்-உத்தமர். ஆயாரு, ய் இறந்தகாலவிடைகெடில. தவருமஞ்செய்வார் நிலையாயார்எனமாற்றி,துறவுபூண்பவரேநிலையான வரினுமாம் கருமம்-கர்மம்: வடசொல்.இல்லா-ஈறுகெட்டஎதிர்மறைப் பெயரெச்சம்; வினையெச்சமாகக்கொண்டு, ஒய்வில்லாமல்என்றுமாம்.அவை தாம்கற்றமுடிவதற்கு ஆயுள்போதாதபடி பலநிருத்தலால், 'தோலேவில் லா' என்றார். சத்தம், சோதிடம் என்பவை-ஸ்ப்தம், ஜ்யோதிஷம் என்ப வற்றின்திரிதவுகள். சத்தமென்னுஞ் சொல்லின் பெயர், ஆகுபெயராய், அத னிலக்கணத்தை யுணர்த்தும் வியாகரணசாஸ்திரத்தைக்குறித்தது. 'என்ற' என்னும்பெரெச்சத்தை அகரவீறு தொக்குத்தல். ஆகுசு-அசை. இல் இல்லே யென்பதன்விகாரம்; இச்சொல்இருதிணையைப்பால் மூவிடங்களுக்கும்பொது வானகுறிப்பு முற்றும் பகாப்பதமாதலால், 'பேதையார்' என்ற பலர்பால் எழுவாயைக்கொண்டது. (உ)

நேரிசை வெண்பா

நிலை மீளாமை யெழில்வனப்பு மூக்கூற்றுஞ்
செல்வம் வலியென் றிவையெலாஞ்—மெல்ல
நிலையாமை கண்டு தெடியார் துறப்பர்
நிலையாயார் தாமுய்ப்ப தொன்று.

(இ - ள்.) நிலை ஆயார்-மேலானவர்கள்,—இல்லம் - இல்லாளாகுகதை யும், இளமை யௌவனமும், எழில்-வாசகியும், வனப்பு-அழகும், மீக்கூற் றம்-மேம்பட்ட சொல்லும், செல்வம்-செல்வமும், வலி - வலிமையும், என்ற இவை எல்லாம்—, நிலையாமை - நில்லையில்லாமல் அழிதலை, மெல்ல கண்டு - விரைவாமல் ஆராய்ந்து அறிந்து, கெடியார்-காலதாமதஞ்செய்யாமல், தாம் உய்யகொண்டு-தாங்கள் (பிறவித்துன்பம் நீங்கி) கற்கதிபெற்றுக கடைத் தேறவண்ணி, துறப்பர்-(இவற்றிற் பற்றை) விடுவார்கள்; (எ - று).

ஒவ்வொருசமயத்தில் இவற்றினிடத்தேயுண்டாகும்வெறுப்பினுல்இவ் வ நிலையில்லனவென்றுதோன்றும்அறிவுதீடத்தின்மு துறவுக்கு எதுவாகாதா தலால், 'மெல்லநிலையாமைகண்டு' என்றார். இல்லம்முதலியன, மனத்தை மயக்கித்துறவறப் பூணவொட்டாமல் தடைசெய்வன. இவற்றின்நிலையாமை

யைஉணர்ந்தா லன்றி இவற்றிற் பற்றுவிடா தாதலால், நிலையாமைகண்டு துறப்பர் என்றார். சிறுகுருளில், 'நிலையாமை'என்னும் அதிகாரத்தின்பின்பு 'துறவு' என்னும் அதிகாரத்தை வைத்தமையுங் காண்க. இவையெல்லாம் நிலையாமை, இவையெல்லாந் துறப்பர் என இருவகையாகவுங் கூட்டலாம். நிலையாமைகண்ட விடத்து இல்லம் முதலியவற்றை யொழித்து நிலையுள்ள உயர்கதியைப்பெற முயலாமல் வாளாவிருக்க மனம் விரும்பா தாதலால், 'செடியார் துறப்பர்' என்றார்.

'நிலையார்த்தாமுய்யக் கொண்டு' எனப் பாடமாயின், 'செடியார்' என்பதை எழுவாயாக்கி, அறிவில்லாதவர் நிலையாய ஆரியரைத் தேர்ந்து யாருமாறுகொண்டு துறப்ப ரெனப் பொருள்கொள்ளலாம்.

இல்லம், அம் - சாரியை; இச்ச மனையின் பெயர், மனைவாழ்க்கைக்கு முடலாகுபெயர். இல்லம்-குடிப்பிறப்புமாம். இளமையாவது காமச செவவி கிடைத்தோ பருவம். எழில் - எழுசீர், தொழிற்பெயர்: எழு-பகுதி; இல் - விகுதி. 'எழிலாவது - வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறிய தன்றி இன்னும் வளரு மெனபது போன்ற காட்டுதல்' என்றார் நச்சினார்க்கினியர். 'வனப்பு' எனவருதலால், இங்கே எழில்-அழகாகாது; இனி,எழில் வனப்பு - ஒருபொருட் பன்மொழியாக மிக்க வனப்புமாம். மிகூஉந்தம் - சொற்செலவு; செல்வாக்கு: அதிகாரத்தோடு கூடிய சொல் என்றபடி; இதற்கு 'மேன்மையான சொல்லாகிய புகழ்' என்று உரைத்தால், "ஒன்று வலத்தி தியாக்கு புகழுல்லாற், பொன்றாது நிற்பதொன்றில்" எனப் பிரித்தமாகவுள்ள புகழின் அறியாததன்மையோடு மாறுபடுமென மறுக்க. கூறப்படுவது, கூற்று, அம்-சாரியை, விகுதியுமாம். வலி-தேகபலம், மனோபலம், சினேகபலம் முதலியன. என்றிவை-பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல். இனி, என்று எனப் பிரித்து, எண்ணிடைசசொல்லெனினுமாம். செடியார் - எதிர்மறைமுற்றெச்சம்; செடு-பகுதி; இ - சாரியை, (கூ)

நூடு. துன்பம் பலநா ளுழந்தது மொருநாளே
யின்பமே காழுவ ரேனையா—ரிவ்வி
ரண்டைதெரிந் தின்னுமை நோக்கி, மணியா
ரண்டைவொழிந்தா ரான்றமைந் தார்.

(இ - ள்.) ஏனையார் - அறிவில்லாதவர்கள்,—பல நாள் துன்பம் உழந்தும்-பல நாள்கள் துன்பங்களே அனுபவித்தும், ஒரு நாளே இன்பமே-(அதனுற் பெறப்படுகிற) ஒருநாளோசகிற்கின்ற பதவியே, காழுவர்-விரும்புவர்; இன்று அமைந்தார-(அற்றால்) மக்கு அதற்கு ஏற்ப அடைகுகிற்பவரோ வெனின்,—இன்பம் இடைதெரிந்து-அவ்வின்பம் மாறுபடுவதை அறிந்து, இன்னுமை நோக்கி - (அழிஞல் வரும்) துன்பத்தைக்கண்டு, மனை ஆறு அடைவு ஒழிந்தார்- இல்வாழ்க்கைவழியைச் சேர்தலைவிட்டுத் துறந்தார்.

இல்வாழ்க்கையில் அனுபவிக்கதுன்பங்களே அநுபவித்திருக்கவும்அவற் றைக்கருதாமல் மறந்து ஒவ்வொருசமயத்திலுண்டாகும் அற்பசுகத்தையே

பாராட்டி வீரும்புதல் அறிவிலார்செயல்; அறிவுடையார் அவ்வின் பதநின் நிறுமையையும், துன்பங்களின் மிகுதியையும் கன்ருகவுணர்ந்து துறந்திடு வர் என்க.

"உண்ணுணர் வின்மை வறுமை யிலதுடைமை, பண்ணப்பணைத்த பெருஞ்செல்வம்" ஆதலால், அறிவிலார் 'ஏழையார்' எனப்பட்டனர். இன் பமே, எ-பிரிநிலையோடு இழிவுசிறப்பு. உழந்தும், உம்-இழிவுசிறப்பு. நாமோ, ஐ-சாரியை. கா முறு-காமமுறுதல் என்பதன் விகாரம்; 'மூயுறு' என்பது போல. இடை-இடைதல்: முதனிலைத்தொழிற்பெயர்; இடையுறென்பாரு முளர். இன்னுமை-எதிர்மறைப் பண்புப்பெயர்; இனிமையென்னும் பண்புப்பெயர், ஈறுபோய் இடை-இகரமுங் கெட்டு, எதிர்மறை ஆகாரமும் மைவிகுதியும் பெற்று, இன்னுமையென நின்ற தென்க. மனே - இடவாகுபெயர். ஆன்று என்னும் இறந்தகாலவினையெச்சத்தில், சால் என்பதன் மருஉவாகிய ஆல் - பகுதி; இனி. அகன்று என்பது ஆன்று என மருஉவாகிய ஆல்-பகுதி;இனி, அகன்ற என்பது ஆன்று என மருஉவாயிற்றென்றலும் ஒன்று. நோக்கி ஒழித்தார் என இயையும்.

'ஆன்றவிர்தார்' என்றும் பாடமுண்டு; பொருள் அதுவே.

மேல் கம-ஆஞ் செய்யுளும் இதுபோன்ற கருத்துடையதேயாம். (சு)

**குறு.** கொன்னே கழிந்த நிளமையு முன்னே
பிணியொடு மூப்பும் வருமாற்—றுணிவொன் றி
யென்னெஞ் சூழா தெழுநெஞ்சே போதியோ
நன்னெறி சேர நமக்கு.

(இ - ன்) துணிவு என்றி-துணிதலைப் பொருந்தி, என்னெஞ் சூழாது-என்னெஞ்சுகூடி(ச செய்யக்கடவதை) ஆராயாமல், எழு - (புலன்களின்மேற்) செல்லுகின்ற, நெஞ்சே-மனமே! இளமையும்-யௌவனமும், கொன்னே - வீணாக [மறுமைக்கு வேண்டியதை செய்யாமலே], கழிந்தன-கழிந்துபோ யிற்று; இன்னே-இப்பொழுதே, பிணியொடு-வியாதியும், மூப்பும்-கிழத்தன மும், வரும்—; ஆல்-ஆதலால், (இனியாயினும்), நமக்கு—, நல்நெறிசேர - நல்லமுத்திநெறி கிடைக்க, போதியோ - (தூவுக்குச) செல்வையோ? (எ - மு.)—அவ்வியற் செல்லவேண்டி மென்று வேண்டியபடி.

மனத்தின்வழியாகவே ஆன்மா இன்பதுன்பங்களே அனுபவிப்பதனல், தனது இளமையையெல்லாம் இவ்வாழ்க்கையிற்கழித்த ஒருவன் பின்னர்த் தன்மனத்திற்குக் கூறியதாக இச்செய்யுள் செய்யப்பட்டதென்று அறிக.

நமக்கு-உனக்கும், எனக்கும்; 'நீ' என்றது, மனம்: 'நான்' என்றது,ஆத் துமா. இனி, நமக்கு நல்லமுத்திநெறி புண்டாம்படி (தூவுக்கும்) துணிவு கொண்டு என்னிடத்தில் ஆராயாமல்(எப்பொழுதும் புலன்களின்மேற்)செல் லுதலையே இயல்பாகக்கொண்ட மனமே! இளமையோ கழிந்துவிட்டது ; இன்னே பிணியொடு மூப்பும் வரும்; (இவ்வாறுனபின்பும் அவ்வாறேபுலன் நளின்மேற்) செல்வாயோ? என்னுங்கருத்தமைய உரை கூறுவாருமுளர்.

இன்னே பிணியொடு மூப்பும் வரும்-பிணியோடுகூடிய மூப்பும் விரைவில் வந்துசேரும் என்றமாம்; இளமைப்பருவத்தில் முதிராமல் அடங்கி யிருக்குநோய் தனது வளர்சிக்கு உரிய காலமாதலால் முதுமையில் முதிர்ந்து வெளிப்படு மென்றபடி. கொன் - பயனில்லாமையுணர்த்தும் இடைச்சொல். கழிந்தன்று - இறந்தகால இடைஇலேயும், 'அன்' சாரியையும், 'று' விகுதியும், சந்திவிகாரங்களும் பெற்றுவந்த ஒன்றன்பால்வினைமுற்று. 'இன்னே' என்றது, விரைவையும்தோற்றத்தையுங்குறிக்கும்; இன்-இடைசசொல்: இனியென்பதன் விகார மென்னலாம். இளமையும், மூப்பும்—உம்மைகள் - முறையேஎஞ்சிநிற்பதும் இறந்துதுலிய எசசப்பொருளன. 'துணிவொன்றி' என்பதை, 'போதியோ' என்பதனோடுஞ் சேர்க்கலாம். போதி - முன்னிலை யொருமை எதிர்காலமுற்று; இ-விருதி; "வியங்கோளிம் மாதெதிர்வும்"என் றதனால், இதுவே எதிர்காலவுகாட்டும்; ய்-எழுத்துப்பேறு. (க)

நிகூ. மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழிந்தற் கருமைபா ராட்டுண்ட
மிடியென்னு மாராத்தின் மோன்மு றைக்கண்ணே
கடியென்றார் கற்றறிந்தார்.

(இ - ன்.) கற்று அறிந்தார் - (நூல்களைக்) கற்று (அவற்றின்பொருளை) அறிந்தவர்கள், 'மாண்ட குணத்தொடு-மாட்சிமைப்பட்ட நற்குணங்களும், மக்கள் பேறு:- பிள்ளைகளைப்பெறுதலும், இல் எனினும் - (தன்மனைவிக்கு) இல்லையாயினும், பூண்டான்-மணஞ்செய்தகொண்டகணவன், கழிந்தற்கு அருமையால் - (அவனை) நீக்குதற்குக் கூடாமையாலும்,—பூண்ட - அடை இன்ற, மிடி என்னும் காராணத்தின் - வருத்தமென்கிற காரணம்பற்றியும், மேல் முறைக்கண்ணே - மேலாகிய துறவொழுக்கத்திலே (இன்று), கடி - (விலக்கத்தை) நீக்கு,' என்றூர்-என்று சொன்னார்கள்; (எ - று.)

நற்குணங்களும் புத்திரபாக்கியமும் இல்லாதிருந்தாலும் மனைவியை விட்டுக்கூடாதாதலாலும், மணஞ்செய்தபின் இல்வாழ்க்கையிற்பல துன்பகரஞ் ஞண்டாதலாலும், இளமையிலே அல்லல்வா ழ்க்கையைவிட்டுத் துறவறம் பூண்பாயென்ற பெரியோர்கள் சொன்னார்கள் என்பதாம்; இளமையிலே யே துறத்தற்குக் காரணங்கூறியவாறு

மாண்டகுணம் - கற்பு, நாண், மடம், அசசம், பயிர்ப்புமுதலியன. மாண்ட-மாண்பு என்றும் பண்பினையாப் பிறந்த பிறந்தகாலப்பெயரெசசம். மக்கட்பேறு-புத்திரபாக்கியம், 'மக்கள்' என்ற சொல்லின் ஆற்றலால், அறிவுன்ன பலபிள்ளைகளைப்பெறுதல் இல்வாழ்க்கைப்பயனெனெபதுவிளங்கும். மேன்முறைக்கண்ணே-(மனஞ்செய்தற்கு) முற்பொழுதிலேயென்றுமாம். ஈண்-இழிவுகிறப்பு; இது, மாண்டகுணத்தையும் மக்கட்பேற்றையு முடையாயின்மனைவியை விடுதல் முற்றுங் கூடாதென்பதை விளக்கும்.

இனி, 'கற்று அறிந்தார், 'மேல்-முற்காலத்தில், முறைக்கண் - நூல்களில்விதிவன்முறை - (விவாகத்துக்குரிக் கடியவேண்டியதென்ற காரணத்தால்)

(இ - ன்.) மெய்-உடம்பும், வாய் - வாயும், கண் - கண்ணும், மூக்கு - மூக்கும், செவி-காதும், என - என்று, பேர் பெற்ற - பெயர்கொண்ட, ஐ வாய-ஐந்துவழிகளே புடையதாகிய, வேட்கை அவாவினை-வேட்கையாலாகிய அவாவை, கலக்கசால் காதலை (அதனுல் தனதுமனங்) கலக்காதபடி தடுத்து, கைவாய்-தூறவொழுக்கதநிறை உய்க்கும் - (மனத்தைச) செலுத்துகின்ற, ஆற்றல் உடையான் - வலிமையையுடையவன்,—வில்லங்காது-தவறுமல், வீடுபெறும்-முத்தியைப் பெறுவான்; (எ று.)

தனதுமனத்தை ஐம்பொறிகளிற் செல்லவொட்டாது தடுத்துத் துறவறவொழுக்கத்திற் செலுத்துகின்றவனுக்கு நிச்சயமாக முத்தி சித்திக்கும் என்பதாம்.

மெய்-ஸ்பரிசேந்திரியம். பேர் - பெயரென்பதன் மரூஉ. ஐவாய - ஐம் பொறிகளே வழியாகவுடைய; வாய - குறிப்புப்பெயரெச்சம். கை-ஒழுக்கம்; வாய்-ஏழனுருபு. வேட்கையாவது - பொருள்களின்மேல் தோன்றும் பற்றுள்ளம். அவாவாவது - அப்பொருள்களைப் பெறவேண்டுமென்று மேன் மேல்நிகழும்ஆசை; வேட்கையின் மிகுதி. வேட்கையாலுண்டாகின்ற அவா என மூன்றனுருபுவிரிக்க; வேட்கையும்அவாவும் என அல்வழியாகக்கொள்ளுதலும் ஒன்று. அவாவினைக் காத்து-"கதவுகாத்துக் கற்றடங்கல்" "செல்லிடத்துக் காப்பான் வினைகாப்பான்" என்பன போல இங்குத் தடுத்தற் பொருளில் வந்தது. வீடு - (எல்லாப் பற்றுக்களையும்) விட்டு அடையும்இடமெனக் காரணப்பெயர்; 'முக்தி' என்னும் வடசொல்லின் பொருள்கொண்டது. பெறும்-செய்யுமென் முற்று, இங்கே ஆண்பாலுக்கு வந்தது.

இசைச்யுள், முதலடியில் யகர ஈறுதொகுக்கபெற்றுவந்தது. (கூ)

கூ. துன்பமே மீதூரக் கண்டுந் துறவுள்ளா
ரின்பமே காமுறுவ ரேமையா—ரின்ப
மிசைதொறு மற்றது னின்னுமை நோக்கிப்
புசைதல் பரியாத மேல்.

(இ - ன்.) ஏமையார்-அறிவில்லாதவர்,—துன்பமே மீதூரகண்டும்-(இல்வாழ்க்கையில்) துன்பம் மாத்திரமே மேன்மேல் அடுக்கிவரப் பார்த்தும், துறவு உள்ளார்-துறத்தலே கினைத்தலுஞ்செய்யாராய், இன்பமே-(இல்வாழ்க்கையில் உண்டாகுஞ்) சிற்றின்பத்தையே, காமுறுவர் - (பெற) விரும்புவர்; மேல் - (அறிவால்) மேம்பட்டவரோ வென்றால்,—இன்பம் இசைதொறும்-அவ்வின்பம் (தம்மிடத்துக்) கூடும்பொழுதெல்லாம், அதன் இன்னுமை நோக்கி-அவ்வின்பத்தாற் பின்வருந் துன்பத்தை நோக்கி, புசைதல் பரியாது - (அதனை) விரும்புதலைக் கொள்ளார்; (எ - று.)

இப்பாட்டின் இரண்டாம் அடியும், கி்ழ் கூ-ஆம்பாட்டின் இரண்டாம் அடியும்ஒன்றுமியருக்குமாறு காண்க. இப்படி வெவ்வேறுசிரியர்க்கும் பொருளோடுசொல்லும் ஒற்றுமைப்படுவது, சிறுபான்மைஇயல்பு: இதனை, சமகால

த்தில் வேறுவேறு புலவராற் பாடப்பட்ட சிலப்பதிகாரத்திலும், மணிமே கலையிலும் சிலவிடத்துக் காணலாம்.

இப்பாட்டின் கருத்து இவ்வதிகாரத்துக்கான்காம் பாட்டோடொத்ததே.

இல்வா[illegible]க்கையாலுண்டாகுந்துன்பத்[illegible] அளவைக்காட்டினும்அதனு லுண்டாம் இன்பம் சிறியதாயிருக்க. [illegible] அறியமாட்டாமையால் அவ ரை 'ஏழையார்' என்றார். [illegible]மை - அசைகள். மற்ற-வினைமாற்றுமாம். உள்ளார் - எதிர்மறைத்தெ [illegible] முறைதெரிச்சம். இசைதொறும்)- தொறும் என்னும் இடைசசொல் பெயர்சசொல் தன்மைப்பட்டதனால், இசை என் னும் வினைத்தொகை அதனை விசேடித்தது; இசையுங்தோறும் என்பதன் விகாரமாகக் கொள்வாருமுளர். பரியாது என்பதில். பரி என்பது - வட மொழி வினையடி. விகாரம். மேல்-மேலேயார்க்கு, பணபாகுபெயர். 'மேல்' என்றும்எழுவாய்-பொருளால் உயர்திணைப் பன்மையாயினுஞ் சொல்லால் பால்பகா அஃறிணை யாதலால், 'பரியாது' என்னும் அஃறிணை யொருமை வினைமுற்றைக்கொண்டது. (க0)

---

## ௧ ஆம் அதிகாரம்.—சினமின்மை.

அதாவது-கோபத்தைசசெய்தற்குக் காரணமாகிய குற்றம் ஒருவனிட த்துஉண்டாகிய விடத்தும் அக்கோபத்தை உடைத்தாகாமையை உணர்த் துவது. இது, துறந்தவர்கட்கு உரிய விரதங்களுட் சிறந்ததொன்றாதலால், துறவின்பின்வைக்கப்பட்டது. ''குணமென்னுங குன்றேறிநின்றாரெவருளி, கணமேயுங காத்த லரிது'' என்றபடி சாப அநுக்கிரக சக்தியையுடைய ர் றைமொழிமாற்றாகிய மூற்றதனாற்ற முளிர்வர்களதனால் தடுக்கப்படா த பலசிமைகளுக்குக் காரணமாகிப் பலர்க்கும் வருத்தத்தை உண்டாக்கிப் பழிபாவங்களைப் பயந்து அக்கோபித்தவரையுங் தவத்தைச்செய்தித்த நிக கதியிற்செலுத்துமாதலின், அத்தகையினம் இல்லாமை-துறந்தவர்க்குமுக் கியமான விரதமாயிற்று. திருவள்ளுவனுரும் வெகுளாமை யென்னும் அதி காரத்தைத் துறவறவியலில் வைத்தவாறு காண்க.

சூக. மதித்திறப் பாரு மிறக்கமதியா
மிதித்திறப் பாரு மிறக்க—மிதித்தேறு
யீயுங் தலேமே லிருத்தலா லஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று.

(இ - ன்.) மதித்தஇறப்பாரும்-(தம்மைக்) கௌரவித்துச்செல்பவரும், இறக்க-செல்க; மதியா-கௌரவியாமல், மிதித்த இறப்பாரும் - (தம்மைச்) கீழ்ப்படுத்திச செல்பவரும், இறக்க-செல்க; ஈயும் - (அற்ப பிராணியாகிய) ஈயும், மிதித்து ஏறி - (யாவரையும்) மிதித்து (அவர்மேல்) ஏறி, தலேமேல் இருத்தலால்-தலேயின்மேல் இருத்தலினால், அஃதுஅறிவார்-அத்தஇருப்பை

அறிந்தவர், காயும் கதம் இன்மை - (பிறரையுங் தம்மையுஞ்) சுடும்படியான கோபத்தை உடைத்தாகாமை, என்று-கல்லது; (எ - று.)

அறிவுடையவர் பெரியவரை மதிப்பர்; அறிவில்லாதவரோ அவமதிப் பர், அதற்கு ஈயே திருஷ்ட. ஆவற்றாலுண்டாகும் புகழ் புண்ணியங் களையும்பழி பாவங்களையும் அடையுமே யன்றிப் பிறரல்ல: ஆதலால், அவமதித்தவரைக் கோபித்தல் அவசியமன்று என்பது கருத்து.

மிதித்தல் என்றது-இங்கே, வைதல் அடிதலால் முதலியவற்றைக்குறிப் பால் உணர்த்திற்று. இறத்தல் - செல்லுதல். ஈயும், உம்மை-இழிவு சிறப்பு. அஃதே அறிவார் காயுங் கதமின்மை என்று-ஈயின்தன்மையை விவேகமில் லாததென்று அறிந்து அதன்மேற் கோபங் கொள்ளாமை போலத் தம்மை யிகழும்அறிவிலார்மேலுங்கோபங்கொள்ளாமை தகுதியென்க. மதித்துஇற பாரும், உம்-உயர்வுசிறப்போடு எதிரது தழுவிய எச்சம். மிதித்து இறப் பாரும், உம்-இழிவுசிறப்போடு இறந்தது தழுவியஎச்சம்.இவற்றைஎண்ணும் மைகளாகக்கொள்ளுதல்சிறப்பன்று;வெவ்வேறுவாக்கியங்களில்வந்ததனால்.

அஃதறிவார் என்பதில், ஆய்தம் மெய்போல் ஒலித்தது; வெண்டளை பொருந்த அலகிட்டுக் காண்க. (எ)

கூ உ. தண்டார்ச் சிறப்பிற்றம் மின்னுயிரைத் தாங்காது
கண்டுழி யெல்லார் துறப்பவோ—மண்டி
யடிபெயரா தாற்ற விளிவந்த போழ்தின்
முடிகிற்கு மூள்ளத் தவர்.

(இ - ன்.) அடி பெயராது - வைத்தகாலைப் பெயர்க்கவொட்டாதபடி, ஆற்ற - மிகவும், இளி-தாழ்வு, மண்டி-இடைவிடாது தெருண்டு, வந்தபோழ் தின்-வந்தகாலத்திலும்,முடிகிற்கும்-(அதற்குக்கலங்காமல்ஏறறக்கொண்ட வீரத்தை) நிறைவேற்றும்படியான, உள்ளத்தவர்-மனவலிமையையுடைய துறக்தவர்கள்,—தண்டாசிறப்பின்-நீங்காதசிறப்பினையுடைய, தம்இன் உயி ரை-தமது இனிய பிராணனை, தாங்காது-தரியாமல், கண்ட உழி எல்லாம்-கண்டவிஷயங்களி லெல்லாம், துறப்பவோ-விடுவார்களோ? [விடார்என்ற படி]; (எ - று.)

இச்செய்யுள், பிறர்தம்மை அவமதித்ததற்காகச னெக்துஉயிரைவிடுஞ் சிற்றறிவினரைக் குறித்தசெய்கள்ளதாகச செய்யப்பட்டதென அறிக.

பேரிகழ்ச்சி கோர்த்தவிடத்தும் அதைப் பாராட்டாமல் தாம் எடுத்த காரியத்தையேமுடிக்குந்தன்மையுடையோர், கண்டகண்டஇகழ்ச்சிகெல் லாங் கலங்கி உயிரைத் துறவாமற் சாந்தமாகவேயிருப்பர் என்பதாயிற்று. முத்தி பெறுதற்கு உரிய தாதலின் 'தண்டாச் சிறப்பிலுயிர்' என்றும் உயி ரினும் இனியதொன்று இன்மையால் 'இன்னுயிர்' எனவுங்கூறப்பட்டது. தமது உயிரை ஒழித்தாவது மானத்தைப் பாதுகாக்கவேண்டுமென்ற தன் மை இல்லாதார்க்குப்போலத் துறவறத்தார்க்கு இன்றியமையாததன்

றென மறுத்தவாறு. இம்மைப்பயனுகிய புகழைமாத்திரமே விரும்புதற்கு உரிய மானங்காத்தல் இல்லறத்தார்க்குச் சிறந்ததலும், முத்திப்பேற்றுக்குக் காரணமாகாத அந்த மானத்தைக்காக்கும்பொருட்டு அரிதிற்பிடைத்த மானிடயாக்கையை விட்டு அதுகொண்டு முயன்று பெறுதற்கு உரியவீடுபேற்றை யிழத்தல் துறவறத்தார்க்குச சிறவாமையுங் காண்க.

இப்பாட்டிற்கு வேறுவகையாகப் பொருளுரைத்துங் கூறலுமின், அதிகாரத்தோடும் துறவறவிலக்கணத்தோடும் பொருந்தாதாம்.

கண்டிழி - விகாரம். ஒ - எதிர்மறை. 'அடி பெயராது' என்பது, இழிவின்பிருதியை விளக்கிற்று. முடிகிற்கும்என்பதற்கு, சான்றப்பத்திற்குவற்ப, முடிக்கிற்கு மெனப் பிறவினேயாகப் பொருள்கொள்ளப்பட்டது; இவ்வாறு தன்வினே பிறவினேப்பொருளில் வருவதை வடநூலார் 'அந்தர்ப்பாவிதண்ணீச்' என்பர். முடிகிற்கும்—முடி-பகுதி, - கில்-ஆற்றலுணர்த்தும் இடைநிலே, கு-சாரியை, உம்-எதிர்காலப் பெயரெச்சவிகுதி. (உ)

கூடு. காவா தொருவன்றன் வாய்கிறந்து சொல்லுஞ்சொ
லோவாதே தன்னேச் சுடுதலா—லோவாதே
யாய்ந்தமைந்த கேள்வி யறிவுடையா ரெஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

(இ - ன்.) ஒருவன்-பிறனெருத்தன், தன் வாய்-தனது வாயை, காவாத்-காத்துக்கொள்ளாமல், கிறந்து - (அதனேத்) கிறந்து, சொல்லும்-சொல்லுகின்ற, சொல்-நீச்சொல, ஓவாதே-ஒழியாமல், தன்னே-தம்மை, சுடுதலால்-வருத்துதலினுல்,—ஓவாதே - ஒழிவில்லாமல், ஆய்ந்து - (நூல்களே) ஆராய்ந்து, அமைந்த-நிரம்பிய, கேள்வி - நூற்கேள்வியோடு கூடிய, அறிவுடையார் - ஞானத்தையுடைய துறந்தவர், எ ஞான்றும்-எப்பொழுதும், கறுத்து-கோபித்து, காய்ந்து அமைந்த-உக்கிரமாயுள்ள சொற்களே, சொல்லார்-சொல்லமாட்டார்கள்; (எ - று.)

பிறர்கூறிய கடுஞ்சொல் தமக்குத் துன்பந்தருதலேயே திருவள்ளுவர்தாமாகக்கொண்டு தாம் கூறுங் கடுஞ்சொல்லும் இவ்வனமே பிறரை வருத்துமென்றுணர்ந்து, விவேகிகன், னெஞ்துபிறர்விஷயத்திற்கடுஞ்சொற்களேக் கூறுரென்பதை கருத்து. 'தீயினுற் சுட்டபுண் ணுள்ளாறு மாருதே, நாவினுற் சுட்ட வடு'' என்ப ராதலால், 'ஓவாதே தன்னேச் சுடுதலால்' என்றார்.'தன்னே,' 'அறிவுடையார்'எனவர்தது-ஒருமைப்பன்மை மயக்கம். வழுவமைதி.

இனி, இச்செய்யுளுக்கு-துறந்தவனெருவன்தன்வாயைக்காவாமல்பிறர்ந்து னெந்துபிறரைச்சொல்லுஞ் சாபசொல்அவனது தவத்தைக்கெடுத்து அத்தவத்தின்பத்தோடு பழைய பிறவித்தின்பங்களேயும் ஒருங்கே எய்துவித்துச் சொன்ன அலனேயே வருத்துதலால், கல்வி கேள்விகளால் நிறைந்தஅறிவுடையோர்எப்பொழுதும் அப்படிப்பட்டசொற்களேக் கோபித்துச்

சொல்லார் என்றும்பொருள் கொள்ளலாம்; "தன்னைத்தான் காக்கிற்கினும் காக்கலாவாக்கால், தன்னையேகொல்லுஞ்சினம்" என்ற்திருவள்ளுவனும்.

எஞ்ஞான்றும் - சினஞ்செய்தற்குக்காரணம் ஒருவனிடத்தில்உளதான பொருளும்வன்றபடி; தம்மை ஒருவன்சொற்செயல்களால் வருத்தியபொழுதும் என்க. ஆய்ந்தமைந்த - நூல்களே ஆராய்ந்து கற்ற அடக்கங்கொண்ட என்றும்உரைக்கலாம்; "கற்றறிவார் கண்டதனடக்கம்" என்பதுமேற்கோளாதலின். பேதை பிறனது - தீக்குப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறுகதீக்ட்டல்; கற்றார்க்குக் கல்வியறிவைவற்புறுத்தியும், கல்லாதார்க்குக் கல்வியறிவை உண்டாக்கியும், இது மிகப் பயன்பெறும். கேள்வி - 'வி' விகுதி பெற்றதொழிற்பெயர். அமைந்த என்னும்சொல் இரண்டனுள், முன்னது-பெயரெச்சம், பின்னது அன்சாரியைபெறாதபலவின்பாற்பெயர். எஞ்ஞான்றும், எஃதவினஎஞ்ஞானமைப் பொருளது; உம்மை முற்றும். கறுத்தல் - கோபமுணர்த்தும் வினைச்சொல்; "கறுப்புஞ் சிவப்புமெனுளிப் பொருள" என்பது தொல்காப்பியம்: இது சுருமை யென்னும் பண்பின் அடி விகாரப்பட்டு வினைத்தன்மை பெற்றதாம். (கூ)

**சுஅ.** நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோ—ரோர்த்ததனை
யுள்ளத்தா னுள்ளி யுரைத்திடா பூர்கேட்பத்
துள்ளித்தான் முட்டிமாங் கீழ்.

(இ - ள்.) நிகர் அல்லார்-தமக்கு ஒப்பாகாதவர்[கீழ்மக்க ளென்றபடி]; நேர்த்து-எதிர்த்து, நீரல்ல-(சொல்லத்) தகுதியல்லாதசொற்களே, சொல்லியக்கால்-சொன்னஞான், விழுமியோர் - சிறந்த குறைவையுடைய பெரியோர், வேர்த்து-(மனம்) புழுங்கி, வெகுளார் கோபியார்; கீழ் கீழ்மக்களோ வென்றால்,—அதனை, அந்தைசசொல்லை, உள்ளத்தான் உள்ளிமனத்தாற் சிந்தித்து, ஓர்த்து-ஆராய்ந்து, ஊர மேட்பவரிதுள்ளவிரல்லாருங்கேட்கும்படி, உரைத்து - (பலரோடுஞ்) சொல்லி, உசாய் - (சுவர்முழுவியவற்றில்) உசாய்த்து, துள்ளி - எழும்பிக்குதித்து, மண் முட்டும் - மணலில் முட்டிக்கொள்வர்; (எ - று.)

இச்செய்யுள் பெரியோரது தன்மையையும் கீழோரது தன்மையையும் இனியதாகக கூறுவதனால், தன்மைநவிற்சியணி. இயற்கையை உள்ளபடி கூறியேகற்றறிந்தவரது மனத்தை மகிழ்விப்பதனால், இவ்வணி எல்லாவணிகளினுஞ் சிறந்ததெனக்கொண்டாடிக் கூறியுள்ளார், நம்பியகப்பொருள்.

முதலடியைப் பின்வைக்கியத்தோடுகூட்டுக. வேர்த்து-உடம்புபுழுங்குகி யென்றுமாம். வேர்த்தல், உசாய்தல், துள்ளுதல், மண்முட்டுதல் என்னும் இவை - கோபத்தின் மிகுதியால் நிகழ்வன. கோத்தி, ஓர்த்தி - கோர்த்து ஓர்த்து என்பவற்றின் வலித்தல். விழுமியோர் - சிறப்புணர்த்தும் 'விழுமம்' என்னும் உரிச்சொல்லினடியாப் பிறந்தபெயர்; "விழுமஞ்சீர்மையுஞ் சிறப்பு மிடும்பையும்" என்பது தொல்காப்பியம். விழுமம் என்பது, அம் கெட்டு

வீழும் என நின்றது; இ - சாரியை, ஈர் - இரண்டாகு பெயர். உராய் - பகுதியே வினையெச்சமாகநின்றது; "வரிப்பூனே பந்து" என்பதில்'வரி'என்பது போல; இதில், விகுதி முதலியன புணர்ந்து கெட்டன வென்க. இனி. 'உராய்' என்பதற்கு-எங்குஞ்சென்று என்று பொருள்கொள்ளுதலுமுண்டு, 'நீழ்முட்டும்' என்ற முடிபை, கூ) - ஆம் பாட்டில் 'மேல் பரியாது' என்றற் போலக் கொள்க. ஆம்-அசை. அல்ல-பெயர். ஊண்-ஸ்தூணை என்னும் வட சொல்லின் திரிபு. (ச)

கூடு. இனியா னடக்க மடக்கங் கிலொருரு
மில்லான் கொடையே கொடைப்பய—னெல்லா
மொறுக்கு மதுகை யுடையா னவன்
பொறுக்கும் பொறையே பொறை.

(இ - ன்.) இனியான்-இயைவனதுமுடையவனது, அடக்கம் - (சிற்றின்ப வழியிற் செல்லாமல்) அடங்கியிருத்தலே, அடக்கம் - சிறந்த அடக்கமாம்; கிலொருரு இல்லான்-மேல் மேல் வாரும்படியான பொருள் வரும்படியில்லாதவனது, கொடையே - ஈகையே, கொடை பயன் - சிறந்த ஈகைப் பயனும்; (அவைபோல),—எல்லாம் - எல்லாவற்றையும், ஒறுக்கும்-அழிக்க வல்ல, மதுகை உடன்-(மு) வலிமையின் டுக்கியை, உடையாளன்-உடைய தூதர்தவன், பொறுக்கும்-(இன்னில்லாமற் பிறர்செய்த பிழைகளைப்) பொறுத்துக் கொள்ளுகின்ற, பொறையே - பொறுமையே, பொறை - சிறந்த பொறுமையாம்; (எ - று.)

வயதில் மூதிர்ந்தவன் வலிமையில்லாமையால்அடங்கியிருத்தலும், அனவிறந்த செல்வமுடையவன் தனது செல்வத்தின் மிகச்சிறிதொரு பகுதியைப் பிறாக்குக் கொடுத்தலும், பிறர்மேற் கோபங்கொண்டி அவரை வருத்துதற்கு வேண்டிய வல்லமை யில்லாதவன் பொறுத்திருத்தலும்இயல்பேயாதலால், அவை விசேடகுணமென்றுசொண்டாடத்தக்கனவல்ல; பொறிகளை வெல்லுதற்கரிய இளமைப்பருவ மூடையவன் இந்திரியங்களஞ் செம்மை செய்திருத்தலும், வறியவன் தனக்குக் கிடைத்தவற்றிற் சிறிது பிறர்க்குகொடுத்தலும், எவ்வளவு மேம்பட்டோரையும் அழிக்கவல்ல தபோபலமுடையவர் கோபங்கொள்ளா தொழிதலுமே அரியன வாதலால் கொண்டாடத்தக்கன வென்பதாம். இங்ஙனம் பொதுப்பட இப்பாட்டில் மூன்று பொருள்கள்சொல்லப்பட்டிருப்பினும், அதிகாரத்தால், முதலிரண்டு வாக்கியமுகமோ உபமானமாகவும், மூன்றாவதை உபமேயமாகவும்கொண்டு, இந்நடைவகையமையின்பாற் படுத்துக. 'எல்லாமொறுக்கும்' என்ற அடைமொழியாலும், அதிகாரத்தாலும், 'மதுகையுடையாளன்' என்றது - ஆற்றலாற் பெரியராய அரசரிலும் தவத்தாற்பெரியராய முனிவர்க்கும் உரியதாம்.

இனியான்-இனமையென்னும் பண்பினடியாப்பிறந்தகுணம்பாற்பெயர் பண்புப்பெயர்-ஈறுபோய் இடை அகரம்ஐயாகிற்று; இனி, இசைசொல்-எதிர்மறைத் தெரிநிலை வினையாலணையும் பெயராகும்பொழுது, இனைத்தில்லாத

வன் எனப் பொருள்படுதலுங் காண்க. அடக்கம், கொடை, பொறை, தொழிற் பெயர்கள். இனி பொருள்-வினைத்தொகை. பிரிநிலை யேகாரத்தை முதல் வாக்கியத்திலும் கூட்டுக. (இ)

சூசு. கல்லெறிந் தன்ன கயவர்வா யின்னுரச்சொ
லெல்லாருங் காணப் பொறுத்துப்ப—ரொல்லை
யிடுநீற்றுப் பையவிந்த நாகம்போற் றத்தங்
குடிமையான் வாதிக்கப் பட்டு.

(இ - ள்.) (தறந்தவர்),—இடு நீற்றுல் - (மந்திரித்து) எறிந்த விபூதியினுல், (தடைசெய்யப்பட்டு), பை அவிந்த - படமெடுக்கமாட்டாமல் ஒடுங்கிய, நாகம்போல்-நல்லபாம்புபோல, தம் தம் குடிமையான் - தந்தமது ஆச்சிரமத்துக்கு உரிய ஒழுக்கத்தால், ஒல்லை-விரைவிலே, வாதிக்கப்பட்டு-தடுக்கப்பட்டு,—கல் எறிந்தன்ன - கல்லால் எறிந்தாற்போலத் துன்பஞ்செய்கின்ற, கயவர் வாய் இன்னு சொல் -. மூடர்வாயி லுண்டான இன்சொல்லாத [கடுஞ்] சொற்களை, எல்லாரும் காண-பலரும் அறிய, பொறுத்தா—, உய்ப்பர்-(தமதுவிரதத்தைத்) செலுத்துவர்; (எ - று.)

மந்திரபூர்வமாக மேலே விபூதியபிமந்திரிக்கப்பட்ட சர்ப்பம் தன்னை அப்பொழுது பிறர் வருத்தினுலும் அவரைத் தான் கடித்துத் தின்றிட வருத்தாமல் தடைக்கு அஞ்சிக் கட்டப்பட்டு அடங்கிக்கிடத்தல்போல, அடக்கத்தக்கு உரிய துறவறத்தை மேற்கொண்ட பெரியோரும் தம்மைப் பிறர் நிந்தித்தாலும் அவரைத் தாம் கோபித்து வருத்தத் தொடங்காமல் தமது ஆசிரமத்தின் தகுதியை நோக்கி அடங்கிக்கிடப்பர் என்பதாம். உவமையணி.

இன்னுச் சொற்களுக்கு 'கல்லெறிந்தன்ன' என உவமைகூறியது, தவறுமல் மிகவருத்தத்தக்கன என்பதற்கு. 'சொல்' எனவே அமைந்திருக்க, 'வாய்' என வேண்டாது கூறியதனுல், அவர்வாய் எப்பொழுதும் கல்ல சொற்கள் பயின்றறியாதென அதன் இழிவு விளங்கும். உய்ப்பர் - சினையின்மையென்னும் விரதந் தவறுமல் ஒழுகுவர் என்றபடி. நாகம் - வடசொல்; நகத்தில் வாழ்வதென்ற காரணப்பொருள்: நகம்-மரமும், மலையும்.

தத்தம்-தாம்என்பதன் விகாரமாகிய தந்தம் என்பதன் வலிந்தல். குடிமை, மை-தன்மைப்பொருளுணர்த்துமிகுதி. கயமை கீழ்மை; 'கயமையாவது-குணங்கள் யாவும் இலராய கீழோராது தன்மை' என்றுரர் பரிமேலழகரும்; அதனையுடையவர், கயவர். குடிமையென்பது, உயர்குடிப்பிறப்பிற் கேற்ற ஒழுக்கமெனப் பொருள்படுவதாயினும், இங்கே, இடத்துக்கு ஏற்ப ஆச்சிரமவொழுக்கமாயிற்று. வாதிக்க=பாதிக்க. ஒல்லை பையவிந்த என இயைபினுமாம். ஒல்லை-விரைவுணர்த்தும் இடைச்சொல். (ஃ)

சூஎ. மாற்றுராய் நின்றுதம் மாறேற்பர்க் கேலாமை
யாற்றுமை யென்னு மறிவுடையா—ராற்றுமை
நோற்றின்னு மற்றவர் செய்தக்காற் றுமவரைப்
போற்றின்னு செய்யாமை நன்று.

(இ - ள்.) மாற்றார் ஆய் நின்ற-பகையுள்ளவர்களானாய்நின்று, தம் மாறு ஏற்பார்க்கு-தமது பகைமைக்கு உரிய காரியங்களே மேற்கொண்டவர்கள் விஷயத்தில், எவரை - (தாமும் அவற்றை) மேற்கொள்ளாமலிருப்பதை, அறியுடையார்—,ஆற்றலை என்னர் - (துறந்தவர்களுக்கு) வலியில்லாமை யென்று இகழ்ந்துபேசார்; (ஆதலால்), அவர் - அப்பகைவர், ஆற்றலை - பொறுமையில்லாமல், கோத்து-எதிர்த்து, இன்னு-தின் பக்தருவனவற்றை, செய்தக்கால் - (தமக்குச) செய்தால், தாம்-தாமும்,அவரை - அவர்களுக்கு, பேர்த்து - பிரட்டும், இன்னுசெய்யாமை-அக்கொடுமைகளே செய்யாதிருத் தல், நன்று - நல்லது; (எ -று.)

தமக்குப் பகைவராய்த் தீங்குசெய்பவர்க்குத் தாம்எதிராய் நின்றுதிங்கு செய்யாமை உத்தம புத்திரிய வீரர்க்குப்போலத் துறவறத்தார்க்குத் நிற மின்மையென்னும் பழிப்புக்கு இடமாகாது; பிறர் செய்த தீங்குகளைப் பொ றுத்து அவர்க்குத் தீங்குசெய்யாமையே தகுதி யென்றதாம்.

மாற்றார்-மாறுதலுடையவர்; ற் - விகித்தல்; (மனத்தை) மாற்றபவரு மாம். எற்பார்க்கு, அவரை என்பன-உருபுமயக்கங்கள். ஆற்றலை என்னுஞ் சொல் இரண்டனுள், முன்னது-எதிர்மறைத் தொழிற்பெயர்; பின்னது - எதிர்மறைவினையெச்சம். இன்னு-பண்படியாகப்பிறந்தஎதிர்மறைப்பலவின் பாற்பெயர், மற்று-அசை; வினைமாற்றுமாம். (எ)

கூ. கு. நெடுங்காலை மோடி மறு நீர்ச் வெகுளி
நெடுங்காலை நின்றிப் பார்க்கு—மடுங்காலை
நீர்சொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
நீர்சொண்ட சான்றோர் கினம்.

(இ - ள்.) நீசர்-தீய்மக்களது, வெகுளி-கோபம், நெடுங்காலம்ஓடினும்- பலகாலஞ்சென்றாலும், நெடும் காலம் இன்றி - தான் அழியுங் காலமில்லா மலே, பரக்கும்-மேன்மேல் வளரும்; சீர் கொண்ட-நிறப்பெற்ற, சான் றோர்-துறவொழுக்கம்.டிக்க) மேலோரது, கினம்-கோபமோவென்றால்,— அடுங்காலை நீர் கொண்ட வெப்பம்போல்-காய்சசப்பட்டகாலத்தில் ஜலங் கொண்ட சூடுபோல, தானே தணியும் - (பிறர் ஆற்றவேண்டாமல்)தானுக வே (விரைவில்) தணிக்தபோம்; (எ - று.)

அகாதியாய் வருகின்றவாறுபற்றித் துறந்தவர்க்கும் ஒரோவிடத்து வெகுளிதோன்றினும் தோன்றியபொழுதே அதனே அவரது மெய்யுணர்வு அழிக்குமாதலால், இங்ஙனங்கூறினார்; இதுபற்றியே, திருவள்ளுவ ரும் "குணமென்னுங்குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயும்" என்றது: சாபி னரோ டொப்பர் கயவர் கடுஞ்சொற்றுப், பொற்பிளரோ டொப்பரும் போல்வாரே—விற்பிடித்து, நிற்கிழியவெய்தவடுப்போலமாறுமே,நீரொழுகு சான்றோர் கினம்" என்ற முதுமொழியையு காண்க. சான்றோர்கினம் தானே தணியு மென்றதனுல், நீசர்வெகுளி பிறர் பலர் தணிக்கும்படி எவ்வளவு முயன்றாலும் தணியாதென்பது பெறப்படும். 'அடுங்காலைநீர்கொண்டவெப் பம்' என்ற உபமானத்தால், "அந்தண ரென்போ ரறவோர்மற்றெவ்வுயிர்க்

குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்" என்றபடி தறலிகள் இயற்கையில் தண்மையான அருளுடையவரென்பதும், அவர்க்குச் னெம் பிறர்செய்யுந் தீங்குபற்றிச் செயற்கையிலாருவதேயென்பதும் விளக்கும். உவமையணி.

ஓடினும், உம் - சிறப்பு. வெருளி - வெருளுதல்: 'இ' விகுதி பெற்ற தொழிற்பெயர். காலம்-காலே யென விகாரம்; சாமம் - சாமரை, சரிதம் - சரிதை, வதம்-வதை என்பன போல. நீர், சீர் என்பவற்றை-ரீம், ஸ்ரீ என் னும் வடசொல்லின்திதைவு என்பர். தணியுமே, ஏ-தேற்றம்; வியப்புமாம்.

கூகூ. உபகாரஞ் செய்ததனே யோராதே தங்க
ணபகார மாற்றச் செயினு—மூபகாரந்
தாஞ்செய்வ தல்லாற் றவற்றினுற் றீங்கூக்கல்
வான்றோய் குடி ப்பிறந்தார்க் கில்.

(இ - ன்.) உபகாரம் செய்ததனே - (தாம்) ான்றிசெய்ததை, ஓராதே - (பிறர்) நினையாமலே, தங்கண்-தம்விஷயத்தில், அபகாரம்-தீங்குகளே ஆற்ற-மிகுதியாக, செயினும்-செய்தாலும், தாம்—உபகாரம் செய்வது அல்லால்-(அவர்கட்கு மேன்மேலும்) ான்றிசெய்வதே யல்லாமல், தவற்றினுல்-(அவ நிடத்துவண்டான) குற்றங்காரணமாக (க் கோபித்து), தீங்கு ஸுக்கல்-(தா மும் அவர்க்குத்) தீமைசெய்யமுயலுதல், வான்தோய் குடி பிறந்தார்க்கு - பெருமைபொருந்திய உயர்குலத்திற் பிறந்த தறந்தவர்களுக்கு, இல்-உண் டாகாது; (எ - று.)

தாம்செய்த உபகாரத்தைமறவாமலிருந்து பிரதியுபகாரஞ்செய்யாமை யோடு அதனை மறந்து மேலுந் தமக்கு அபகாரத்தை மிகசெய்தற்குந் தொ டங்கிய நீசர்களுக்குத் தாம் அபகாரஞ் செய்யாமையோடு மேன்மேல் உப காரஞ்செய்தல் தறவிகளியல் பென்பதாம்.

வான் தோய் குடி-(புகழால்) தேவலோகத்தை அளாவியகுடியென்ற மாம்; இனி, ஆகாயத்தையளாவிய குடி யென்ற பொருளால் உயர்ந்தகுடி யென்னுங்கருத்துப்பட 'வான்தோய்குடி' என்றதாற்கொள்ளலாம்: திருந் தூரில் "வானுயர்தோற்றம்" என்பதற்கு-'வான்போலுயர்ந்த தவவேடம்' என்றபொருள்கூறின பரிமேலழகர் 'வானுயர் தோற்றம் என்பது-"வான் தோய்குடி" என்ருற்போல இலக்கணேவழக்கு' என்றதுங் காண்க. 'குடிப் பிறந்தார்' என்பது - அதிகாரத்தால், தறவறத்தார் மேல் நின்றது. 'வான் தோய் குடி' என்ற தொடர், இந்நூலில் 'குடிப்பிறப்பு' என்னும் அதிகார நின் இரண்டாஞ்செய்யுளிலும் வந்துள்ளது. ஓராதே, எ - தேற்றத்தோடு இசைகம். செயினும், உம் - இழிவுசிறப்பு.

"இன்னுசெய்தாரை யொறுத்த லவர்நாண, ன்னயஞ்செய்துவிடல்," "இன்னு செய்தார்க்கு மினியவே செய்யாக்கா, லென்னபயத்ததோசால்பு" என்றவற்ருலும், தீங்குசெய்தார்க்கு எதிர்த்தீங்கு செய்யாமையும், ன்கு செய்தலும் சிறப்பாதல் அறிக. (கூ)

எ0. கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினு ரிங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு.

(இ - ள்.) நாய்—, கூர்த்து-கோபம்மிக்கு, கௌவீக்கொள்-(தம்முடம்பைக்) கடித்துப்பிடிக்க, கண்டும்-பார்த்தும், தம் வாயால்—, பேர்த்து நாய் கௌவினர் - மாறுபட்டு நாயைக்கடித்தவர்கள், ஈங்கு - இவ்வுலகத்தில், இல்லை—;(அதுபோல), கீழ்மக்கள்-அற்பர்கள், நீர்த்துஅன்றி-குணமுடைய சொல் ஒன்றையுஞ் சொல்லாமல், கீழ் ஆய - தாழ்வாகிய சொற்களையே, சொல்லியக்கால்-சொன்னால், மேல் மக்கள் - மேலோர் [துறந்தவர்], தம் வாயால்—, மீட்டு சொலபவோ - மாறுக (அப்படிப்பட்ட சொற்களை)ச் சொல்வார்களோ? [சொல்லா சென்றபடி], (எ - று.)

கீழோர் தம்மை வைதால் மேலோரும் அவரைக்கோபித்து எதிர்வைதல், நாய்கடித்தால் அதனை எதிரிற் கடித்தல்போலத் தகுதியற்ற தென்பதாம். "நீர்த்தகவில்லா நிரம்பாமைத் தம் நலியில், கூர்த்தவரைத் தாம்நலிதல் கோளன்றால் சான்றோர்க்குப், பார்த்தோடிசென்று கதம்பட்டு நாய் கௌவிற், பேர்த்து நாய் கௌவினு நில்" என்ற பழமொழிச் செய்யுளோடு இதனை ஒப்பிக. கீழ் மக்கட்கு நாயுவமை கூறியது, அவர்களிழிவை நன்கு புலப்படுத்தற்கு.

'சொல்ப' எனவே அமைந்திருக்க,'தம்வாயால்' என வேண்டாதுகூறினர், அவர்கள்வாய் நல்ல சொற்களையே பயின்ற தெனத் தாம் வேண்டிய தன் சிறப்பு முடித்தற்கு; இங்ஙனம் நுட்பமாகக் கருத்துக் கொள்ளுதல், வடனூலில் தாத்பரியம் எனப்படும்: "ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய, வழுஉஇயும் வாயாற் சொலல்" என்ற நீருந்தாவளிலும் இங்ஙனங்காண்க. நீர்த்து-நீர்மையென்னும் பண்பிடையாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும் பெயர். ஆய - பெயர்.

உபமான உபமேயவாக்கோத் தனித்தனி நிறுத்தி அவற்றின் இடையில் உவமைபுருபுகொடாமற் பிம்பப்பிரதிபிம்ப பாவங் தோன்றக் கூறினமையால், இது-ஏடுத்துக்காட்டுவமையணி, இதனை வடனூலார் 'நிருஷ்டாந்தாலங்காரம்' என்பர். (எ0)

குறவறவியல் முற்றிற்று.

## இரண்டாவது

# இல்லறவியல்.

செல்வநிலையாமை முதல் ஏழதிகாரங்களால் அறத்துப்பாலின் முதற் கூறாகிய துறவறங் கூறி, இனி அதன் இரண்டாங்கூறாகிய இல்லறம் கூறுவானதொடக்கினர். இ-ள்.மாவது,—இம்மை மறுமையாகிய இருமையின் பங்களேயும் அனுபவித்தற்குரிய இல்வாழ்க்கைநிலைக்குச் சொல்லுகின்ற நெறியில் நின்று, அதற்குத் துணையாகிய கற்புடைமனேவியோடுஞ் செய்யப்படும் தருமம்' என்றும், 'பொறைபுடைமை முதல் ஆறு அதிகாரங்கள் இல்லறவியல்' என்றும், இதனே "அறவியலிருவகைத்தா மவைதமம்முள்,துறவே ழில்லற மிருமுன் றென்ப" என்ற பாயிரப் உரைச்சூத்திரத்தா னுணர்க' என்றும் முன்னரே உரைப்பாயிரத்தில் உரைத்தவாற்றால் இதன்பொருள் முதலியன இனிது விளங்கும்.

## அ - ஆம் அதிகாரம்.—பொறையுடைமை.

அதாவது-காரணம்பற்றியாவதுஅறியாமையாலாவதுஒருவன் தமக்குக் குற்றஞ் செய்தவிடத்துத் தாமும் அதனே அவனிடத்துச் செய்யாமற் பொறுத்தலே புடையவராதல். இல்வாழ்பவர்க்கு உரிய பலகுணங்களிலும் இது இன்றியமையாச் சிறப்புடைய தாதலின், இல்லறவியலில் மூதலில் வைக்கப் பட்டது. திருவள்ளுவனுரும் பொறையுடைமை யென்னும் அதிகாரத்தை இல்லறவியலில் வைத்தவராதகாண்க. சினமின்மையும்பொறையுடைமையும் ஒவ்வேறு இயலின்பாற் பட்டன வாதலால், இது கூறியதுகூற லாகாது.

எக. கோதை யருவிக் குளிர்வரை நன்னாட
பேதையோ டியாது முரையற்க—பேதை
யுரைப்பிற் சிதைந்துரைக்கு மொல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று.

(இ - ள்.) கோதை - மாலேபோல வீழுகின்ற, அருவி - நீருவீழுகின்ற யுடைய, குளிர்-குளிர்ச்சிபொருந்திய, வரை-மலேயினேயுடைய, நல் - சிறந்த, நாட-பாண்டிய நாட்டையுடைய அரசனே!—பேதையோடி - அறிவில்லாத வனேடி, யாதும்-எதையும், உரையற்க-சொல்லாதிருக்கக்கடவை; உரைப் பின்-சொன்னுல், பேதை-அவ்வறிவில்லாதவன், சிதைத்துஉரைக்கும்-வரம் பழித்து பேசுவான்; (ஆதலால்), ஒல்லும் வகையான் - கூடிய வித்தால், வழுக்கி - தப்பி கழிதலே - (அவனது தொடர்ச்சியினின்று) நீங்குதலே, நன்று - நல்லது; (எ - று.)

தம்மோடு கலந்த அறிவில்லாதவனெருவன் தமக்கு யாதாயினும் ஒரு பிழையைச் செய்தால் அதற்காகக் கோபித்து அவனே ஒன்றுஞ்சொல்லலா காது; சொன்னுல் அவன்மேன்மேல்எதிர்த்துப்பேசி இகழ்வான்; ஆதலால், சமயம் பார்த்து விரோதமில்லாமலே அவனது தொடர்ச்சியை விட்டுவிடு தலே நல்லது என்பது கருத்து.

நாட்டின் நிலவளத்திற்கு மூக்கியகாரணமாகிய நீர்வளத்திற்கு இடமா தலின், மலையின் செழிப்பைக் கூறினர். இதனால், மருதநிலமாகிய அந்நாட்டை அடுத்துள்ள குறிஞ்சிநிலமாகிய மலையின் மாட்சி விளக்கும்; "இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும், வல்லரணும் நாட்டிற்கு உறப்பு" என்றதிருக் குறளினாலும், 'இடையதன்றி ஒருபுடையதாதலும், தன்வளந்தருதலும், மா றிக்கண் உண்டநீர்கோடைக்கண் உமிழ்தலுமுடைமைபற்றி 'வாய்ந்தமலை என்றார்' என்ற அதன் உரையாலும், மலை நாட்டிற்கு அவயவமாதலும் நில வளத்திற்கு இன்றியமையாத நீர்வளத்திற்குக் காரணமாதலுங் காண்க.

'கோதையருமிக்குளிர்வரைநாண்ஞட' என்பது, ஆடூஉநாண்மை.

வரை-கண்ணு: அதனேயுடைய மூங்கில் வினையும் மலைக்கு இருமடியாகு பெயர். பேதை-அறிவுமை; பேதைமை யென்னும் பண்பின் அடி: இங்கே, அறிவில்லாதவனுக்கு, பண்பாகுபெயர். பேதையோடியாதும்-குற்றியலிக ரம். உரைப்பின் - எதிர்காலவினையெச்சம்; ப்- எழுத்துப்பேறு: எதிர்கால வினைக்கிலையன்று: விருதியே காலங்காட்டுதலினுல். ஒல்லும்வகை, ம்-மகரக் குறுக்கம். நன்று-ஒன்றன்பாற்குறிப்புமுற்று.

"இலங்கு நீண்முடி யிரதிரன் மார்பின்மேல், விலங்கி வீழ்ந்த முத்தார மும்போன்றவை" என்றார், ம் நீத்தாயணியிலும். (க)

௧௨. கேரல்லார் நீடல்ல சொல்லியக்கான் மற்றது
தாரித் திருத்த றகுதிமற்—றேரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலஞ்
சமழ்மையாக் கொண்டு விடும்.

(இ - ள்.) கேர் அல்லார்-(தமக்கு) ஒப்பாகாதவர் [இழப்பட்டவர்என்ற படி], நீர்அலல-நற்குணத்தையுடையனவாகாதசொற்களோ, சொல்லியக்கால்-சொன்னுல், அது-அவ்வாறுசொன்னதை, தாரித்திருத்தல்-பொறுத்திருத் தலே, தகுதி (மீதேலார்க்குச்) சக்கதாம்; மற்றது-அதற்கு வேருகிய பொறு மையின்மையை, பொங்கு நீர் ஞாலம் - மிக்க நீரையுடைய கடலாற் சூழப் பட்ட பூமியி லுள்ள உயர்ந்தவர், புகழ்மை ஆ கொள்ளாது-புகழுக்குக்கார ணமாக எண்ணுமல், சமழ்மை ஆ கொண்டுவிடும்-பழித்தற்குக் காரணமாக எண்ணிவிடுவர்; (எ - று.)

"நிறியோர்செய்த நிறுபிழையெல்லாம், பெரியோராயிற்பொறுப்பது கடனே" என்பவாதலால், இழோர்சொன்னதகுதியில்சொற்கோப்பொறுத் தலே பூகழாம்; பொருதி தாமும் தகுதியில்சொற் கூறினுல் அது இழ்மை யின்பாற்பட்டுப் பழிப்புக்கு இடமாமென்க.

ஆ-ஆக என்பதன் விகாரம்; இது "சாவகவென் மொழியிற்றுவையிர்மெய் சாதலும் விதி" என்றதன் உபலக்ஷணத்தாற் கொள்ளத்தக்கது. தாரித்து-தரித்து. கேர்அல்லார்-செவ்வையான குணமில்லாதவரென்றுமாம். அல்ல-

பெயர். முதலடியில், மற்று - அசை. இரண்டாமடியில், மற்று - அவ்வாறு பொறுத்திராமல் தாமும் அப்படிப்பட்ட சொற்களே எதிரேசொன்னால் அது என்னும்பொருளோத் தந்ததனால், பிறிது என்னும் பொருளது. தரும்'.—அசை; ''அஞ்சுவ தோரு மறனே'' என்றவிடத்துப் போல. புகழ் மை, சமழ்மை என்பவற்றில், மைவிகுதி - தன்மைகுறித்தது. பொங்கு நீர்-வீணைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. ''உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே''என்பதனால்,ஞாலம்-இங்கே, உயர்ந்தோரை உணர்த் நிற்று. ஞாலம் கொண்டவிடம் - தோளிநிலைநோக்கிய முடிபு. (உ)

எடு. காதலார் சொல்லுங் கடுஞ்சொ லுவர்துரைக்கு
மேதிலா ரின்சொலிற் றீதாமோ—போதெலா
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
வாவ தறிவார்ப் பெறின்.

(இ - ன்.) போது எலாம் - பூக்களிலெல்லாம், மாதர் வண்டு - அழகிய வண்டுகள், ஆர்க்கும் - ஆரவாரிக்கப்பெற்ற, மலி கடல் தண் சேர்ப்ப - நிறைந்த கடலின் குளிர்ச்சியான கரையைபுடைய அரசனே!—ஆவது அறிவார் பெறின்-(ஒன்றினால்) உண்டாவதாகிய பயனே (கல்வது தீயது என்று) பகுத்தறிபவரைப் பெற்றால்,—காதலார் சொல்லும் கடுஞ்சொல் - (தம் மிடம்) அன்புள்ளவர் சொல்லுகிற கொடியசொல்,எதிலார் உவர்த்த உரைக்கும் இன்சொலின் - விரோதிகள் மகிழ்ந்து சொல்லுகின்ற இனிய சொல் லைப்போல, தீது ஆமோ - தீமையைத் தருவதொன்றுருமோ? (எ - று.)—ஆதாது, நன்மையையே தரும் என்றபடி.

அன்புள்ள கண்பர் தற்காலத்தில் இனியனவாகாமல் வெறுக்கத்தக்க சொற்களைச சொன்னலும் அவை பிற்காலத்தில் நன்மையையே தரும்; அன்பில்லாத பகைவர் செவிக்கினிய சொற்களேயே சொன்னலும் அவை விரைவில் தீமையை தரும்; இத்தன்மை, சொல்லின்பயனே அறிவார்க்கு நன்கு விளங்கும்; ஆதலால் வேண்டியவர் கடுஞ்சொற்சொன்னலும பயன் நோக்கிப் பொறுக்கவேண்டு மென்பது கருத்து.''இனியவ ரென் சொலினு மின்சொல்லேயின்னர், கனியுமொழியுங்கடுவே - மனல்கொளுர்தும், வெங காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச், சிங்கி குளிர்ந்துங் கொலும்'', ''மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர், பேசுற்ற வின்சொல்பிறிதென்க-ஈசற்கு, கல்லோ னெறிநிலையோ ரன்னுதா லொண் கருப்பு, வில்லோன்மலரோவிருப்பு'' என்றார் பின்னோர்களும்.

கடுஞ்சொல் - செவிக்கு இன்னாத சொல். போது - மலரும் பருவத்தி அரும்பு. அறிவார்ப்பெறின் - இயல்பின் விகாரமாய்ப் பகரம் மிக்கது. 'போ தெலாம் மாதர்வண்டார்க்கும்' என்பது, செய்தல் நிலமாகிய கடற்கரையின் வனத்தைச் சிறப்பித்தது.பெறுதலின் அருமை தோன்ற,'பெறின்'என்றார்,

எச. அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனு
லின்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுங்
துன்புறுது வாழ்த்த லரிது.

(இ - ன்.) அறிவது-அறியவேண்டியவையெல்லாம், அறிந்து—,அடங்கி பொறுமைக்குண்முடையராய், அஞ்சுவது-அஞ்சத்தக்க பழிபாவங்களுக்கு அஞ்சி-பயந்து, உறுவது-தாம்செய்யும் காரியத்தையெல்லாம், உலகு உவப்ப - உலகத்தவர் மகிழும்படி, செய்து—,பெறுவதனால் - அதனற் பெறும் பயன்களால், இன்பு உற்று-இன்பமடைந்து, வாழும் - வாழ்கின்ற, இயல்பு உடையார்-தன்மையையுடையவர், எஞ்ஞான்றும் - எப்பொழுதும், துன்பு உற்று வாழ்தல்-துன்பமடைந்து வாழ்தல், அரிது-இல்லை; (எ - று.)

"அறிவுடையாராவதறிவார்," "கற்றறிவார் கண்டதடக்கம்," "அஞ்சுவ தஞ்சாமைபேதைமை யஞ்சுவ, தஞ்ச லறிவார்தொழில்," "உலகத்தோ டொட்டவொழுகல் பலகற்றும், கல்லா றறிவிலாதார்" என்பன, இங்குக் காணத்தக்கன.

இப்பாட்டில் அறிவுடைமை, நீவினையச்சம், ஒப்புரவுசெய்தல், நிரம்பிய மனமுடைமை என்ற பிறபொருள்களுங் கூறப்பட்டிருந்தாலும், 'அடங்கி' என்றதைப் பிரதானமாகக்கொண்டு, இப்பாட்டு இவ்வதிகாரத்திற் சேர்க்கப்பட்ட தென்க.

அறிவது, அஞ்சுவது, உறுவது, பெறுவது - சாதியொருமை. உலகு-லோகமென்னும் வடசொல்லின் திரிபு; இது; இடத்தையும் மக்களையும் உணர்த்தும். 'அரிது' என்பதில், அருமை - இன்மைருறித்தது. (ச)

எடு. வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்காற்
றேற்ற வொழுக்க மொருவனகண் ணுண்டாயி
னாற்றுந் துணையும் பொறுக்க பொறுளையிற்
றூற்றுதே தூர விடல்.

(இ - ன்.) இருவர் இரண்டுபேர், வேற்றுமை இன்றி - மனவேறுபாடு இல்லாமல் [ஒற்றுமையாக], கலந்து-சேர்ந்து, நட்டக்கால் - சிநேகித்தால், (பின்பு), ஒருவன்கண் - (அவ்விருவருள்) ஒருவனிடத்து, தேற்ற ஒழுக்கம்-நம்பத்தகாததீயநடத்தை, உண்டாயின்-உண்டாகுமானால், (மற்றொருவன்), ஆற்றும் துணையும்-(தன்னுற்) பொறுக்கக்கூடியமட்டும், பொறுக்க-பொறுக்கக்கடவன்; பொருள் ஆயின்-பொறுக்கமாட்டாமற்போனால், அற்றதே - (அவனது தீயொழுக்கத்தைப்) பலரும்அறியவெளிப்படுத்தாமல்,தூரவிடல்-(அவனது சிநேகத்தைத்) தூரத்தில் விடக்கடவன்; (எ - று.)

நட்டக்கால் என்ற எதிர்காலவினையெச்சத்தில்,ல்-பகுதி. எகரம் டகரமானது-சந்தி, ட் - எழுத்துப்பேறு, அ - சாரியை, க்-சந்தி, கால் - விகுதி. தேற்ற என்பதில், பகுதியாகிய தேற்ற என்பதைத் தன்வினை பிறவினை இரண்டுக்கும் பொதுவென்றுவது, பிறவினை தன்வினைப்பொருளில் வர்த

தென்றுவது தேறுஎன்ற தன்வினையினிடையில் ற்கரமெய்யிரித்தல் விகார மென்றுவதுகொள்க;''சில சொல்லல் தேற்றுதவர்,'' ''வாளினுந் பேசினல் லால் வாயினுற் பேசல் தேற்றேன்,'' ''தேற்றாய் பெரும் பொய்யே'' எனப் பிறபல இடங்களிலும் இவ்வாறு வரும். ஈரவிடல் என்றது, உலகவழக்கு; இனி, ஈர - (அவனது கட்புத்) தூர்த்துபோம்படி [அழியும்படி], விடச் கடவனென்றும் பொருள்கொள்ளலாம். விடல்-அல்லீற்று உடன்பாட்டு வியங்கோள்.

**இது** - ஒருவிகற்ப இன்னிசைவெண்பா. (ஙு)

**எகூ.** இன்னு செயினு மினிய வொழிகென் று
தன்னோயே தானெஞ்சி னல்லது—நுன்னிற்
கலந்தாரைக் கையிடுதல் காணாக காட
விலங்கிற்கும் வின்ள லரிது.

(இ - ன்.) காணகம் காட - காடுசெறிந்த காட்டையுடையவனே!— இன்னுசெயினும்-(தன்னுடனிருந்தவர் தனக்கு இன்மையில்லாதிருன் பக் தருஞ்சி று காரியங்களைச் செய்தாலும்,இனிய ஒழிக என்று-(அவை) இனி யனவாய்விட்கடவன என்று எண்ணிப் பொறுத்து, தன்னோயே தான் கோவின் அல்லது (அவர் அவ்வாறு செய்தற்குக் காரணமாய் முற்பிறப்பில் தீவினை செய்துள்ள) தன்னோயே தான் வெறுத்துத்கொள்வதே யல்லாமல், துன்னி கலந்தாரை - நெருங்கி நட்புக்கொண்டவரை, கையிடுதல் - விடுதே; (எனன்ருல்),—வின்ளல் - (தீவினைத்தரிவு ஒன்றைவிட்டு ஒன்று) பிரிதல், விலங்கிற்கும் - (பகுத்தறிவில்லாத) மிருகங்களுக்கும், அரிது - அருமையையுடையது, ஆதலால்; (எ - று.)

"கூடிப் பிரியேல்" என்றார் ஒளவையாரும். இனி,இனிய ஒழிக ஏன்று என்பதற்கு - அவற்றை இனியனவாக எண்ணிச் சினமொழியாமல வென்ற மனத்தைகோக்கிச் சொல்லியென்றும் தன்னோயே தான் கோவின் அல்லது என்பதற்கு-(முன்னே செல்லவாக ஆராயாமல் அவரது கட்பை ஏற்றுக்கொண்ட) தன்னோயே தான் வெறுத்துக்கொள்வதல்லாம லென்றுங் கொள்ளலாம்.

"காணகாட" என்றும், காட்டிற்கு உறுப்பாய் அதற்கும் அரசனுக்கும் காவலாருஞ் சிறப்புடைய நால்வகையாண்களுள் ஒன்றாகிய காட்டாளனின் அமைதியைக் கூறியவாறு, "அணிமிழற், காடு முடைய தரண்" என்றார் தீருவள்ளுவனுரும். விலங்கு - 'திர்யக்' எனனும் வடசொல்லின் பொருள் கொண்டது; குறுக்காக உடம்பையப்பெற்ற தென்பது பொருள்.

கையிடுதல்=கைவிடல் - எதிர்மறை வவ்வொருமை முற்று; தி-வேண் டாவழிச் சாரியை: இனி,'தி'என்னுஞ் சாரியையை இடையிற் பெற்ற'அல்' ஈற்று எதிர்மறை வியங்கோள் ளெனினுமாம்;இனி,'அல்'விகுதிபெற்ற வியங் கோள்போல, 'தல்' விகுதிபெற்ற வியங்கோளாம் உடன்பாட்டோடு எதிர் மறைக்கும் வருமெனக் கொள்ளுதலும் ஒன்று. ஆன்றி,'கையிடுதல்' என்ப தைத் தொழிற்பெயராகவே கொண்டு,'கூடாது'என்னும் முற்று வருவித்து

முடித்தல் சோரம். 'அரிது' என்பதனையே 'கைவிடுதல்' என்னுந் தொழிற் பெயர்க்கும் பயனிலையாகக்கொண்டு கூட்டிமுடித்தல் எளியவழி. ஒழிகென்று-லியங்கோளின் ஈற்று அகரம் தொகுத்தல். உம்-இழிவுசிறப்பு. (அ)

எஎ. பெரியார் பெருநாட்புக் கோடரூஞ் செய்த
வரிய பொறுப்பவென் றன்றே—வரியோர்
வொல்லெ னருவி யுயர்வரை நன்னட
நல்லசெய் வார்க்குந் தமர்.

(இ - ன்.) ஒல் என்-ஒல்லென்னு ஒலிக்கிற, அருவி-நீரருவிகளையுடைய, உயர்-உயர்ந்த, வரை-மலைகளையுடைய, நல் நாட - நிறைந்த நாட்டையுடைய அரசனே!—பெரியார் பெரு நட்பு - (அறிவு ஒழுக்கங்களாற்) பெரியோரது மேன்மையான சிநேகத்தை, கோடல்-(யாவரும் விரும்பிக்) கொள்ளுதல், தாம் செய்த—, அரிய - (பொறுப்பதற்கு) அரிய குற்றங்களே, பொறுப்ப - பொறுத்துக்கொள்வார்கள், என்ற அன்றே-என்ற எண்ணியல்லவோ ? நல்ல செய்வார்க்கு-நல்லவைகளையே செய்பவர்களுக்கு, தமர் - உண்பாராகுபவர், அரியோர்-(கிடைத்தற்கு) அரியரோ? [அல்லர், எளிதிற் பலர்கிடைப்பர் என்றபடி]; (எ - று.)

தம்மைச் சேர்ந்தவர்கள் அதிக குற்றங்களேச் செய்தாலும், தாம்அவற்றைப்பொறுத்தல் பெரியோரியல்பு; குற்றமொன்றேனுஞ் செய்யாமல் நன்மைகளேயே செய்பவர்களுக்கு எவரும் நட்பாவ ராதலால், அது விசேஷமன்று என்பதாம்.

நாடல் தொழிற்பெயர், அரிய, நல்ல-பெயர். அன்றே, ஓ-தேற்றம். அரியோர், ஓ-எதிர்மறை. ஒல்லெனல்-ஒலிக்குறிப்பு.

உயர்வரை - வினைத்தொகை; உயர்ந்த உயர்கிற உயரும் என விரியும், உயர்வாகிய வரையென விரித்துப் பண்புத்தொகையெனக் கொள்ளுதல், பொருளமைதிக்குப் பொருந்துமாயினும் சொல்லிலக்கணத்துக்குப்பொருந்தாது: உயர் என்பது வினைப்பகுதியாதலாலும், காலத்தோன்றாதிற்றலாலும் எனக் காண்க. உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர், தொல்காப்பிய வுரையில் 'உயர்ந்தோணெயென்பது-உயர்ந்த ஒழுக்கமென இறந்தகால வினைத்தொகை; இதனேப்பண்புத்தொகை யென்பாரும் உளர்: அதுபொருந்தாது; என்னே? இது காலத்தோன்ற நிற்றலின்' என்றவாறு அறிக. செந்தாமரையென்பதை, செம்மையையுடைய தாமரையெனவிரித்து இரண்டாம்வேற்றுமையுருபும் பயனுமுடன்தொக்க தொகையாகக் கொள்ளுதல் பொருளமைதிக்குப் பொருந்துமாயினும், சொல்லமைதிக்கு அது பொருந்தாமல், செம்மையாகிய தாமரையென விரித்துப் பண்புத்தொகையாகக் கொள்ளுதலே பொருந்துமாறுபோல, தொடர்கூறவேண்டியிடத்தெல்லாம் பொருளமைதிமாத்திரத்தையேகோக்காதுபொருட்பொருத்தம்சொல்லிலக்கணம் என்னும் இரண்டற்கும்மாறுபடாதவழியைத்தழுவுதலே முறைமையென்க.

எஅ. வற்றிமற் முற்றப் பசிப்பினும் பண்பிலார்க்
கற்ற மறிய வுரையற்க—வற்ற
மறைக்குந் தினையார்க் குரைப்பவே தம்மைத்
துறக்குந் துணிவிலா தார்.

(இ - ன்.) வற்றி-(உடம்பு) உலர்ந்து, ஆற்ற பசிப்பினும் - மிகவும் பசித்தாலும், பண்பு இலார்க்கு-குணமில்லாதவர்களுக்கு, அற்றம்-(தமது) வறுமையை, அறிய-(அவர்) அறியும்படி, உரையற்க-சொல்லாதொழிக; தம்மை துறக்கும்துணிவுஇலாதார்-(லிசேஷ்சங்கடகாலங்களில்)தம்உயிரைமாய்த்துவிடும் மனவுதியில்லாதவர்,அற்றம்-(தமது) வறுமையை, மறைக்கும்தினையார்க்கு-நீக்கவல்ல தன்மையையுடைய கண்பார்க்கு, உரைப்ப-சொல்லுவர்.

மிக்க வறுமை கோர்த்தவிடத்தும், உயிர்போனலும் போகென்று பொறுத்தக்கொண்டிருப்பதே,பொறுமை; அவ்வாறன்றிப்பிறரோடுசொல்லத் துணிர்தாலும், அத்தினை வெளியிடாமல் நீக்கவல்லவர்க்குச் சொல்லாமே யல்லாமற் பிறர்க்குச் சொல்லலாகாதென்பது, கருத்து.

மற்ற-அசை; வீணைமாற்றுமாம். மறைத்தலென்பது நீக்குதலென்னும் பொருளதாதலே, "தம்வயிற்குற்றம் மறையாவழி" எனத் திருக்குறளிலும் காண்க: இனி, இரட்டுறமொழிதலென்னும் உத்தியால், மறைத்தல் என்ப தற்கு - வெளியிடாதொழிதல் என்ற பொருளும் இங்குப்பொருத்தமாறு காண்க. பண்பாவது-எல்லாரியல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்; "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்" என்றார் கலித்தொகையிலும். அற்றம்-எல்லாப்பொருள்களும் அறுதல்: இல்லையாதல்; தொழிற்பெயர்; பகுதி, அம்-விகுதி, த்-விரித்தல். எ-அசை.

இச்செய்யுள் - பொறுத்தலென்கிற சம்பந்தத்தால் இவ்வதிகாரத்திற் சேர்க்கப்பட்டது; அடித்த இரண்டு செய்யுள்களும் இவ்வாறே. (அ)

எக. இன்பம் பயந்தாங் கிழிவு தலேவரினு
மின்பத்தின் பக்க மிருந்தைக்க—வின்ப
மொழியாமை கண்டாலு மோங்கருவி நாட
பழியாகா வாறே தலே.

(இ - ன்.) ஓங்கு அருவி நாட - உயர்ந்த அருவிகளேயுடைய நாட்டை யுடையவனே!—இன்பம் பயந்த ஆங்கு - இன்பத்தைத்தந்த அவ்வழியில், இழிவு தலேவரினும்-தாழ்வுகோர்தாலும், இன்பத்தின்பக்கம் இருத்தைக்க - (அதினைவிடாமல்) அவ்வின்பம் வருகிற வழியிலேயே விருப்பியிருக்கிறஉனக்கு,—இன்பம் ஒழியாமை கண்டாலும்-இன்பம் நீங்காமலிருப்பதைப்பார்த்தாலும், பழி ஆகா ஆறே - பழிப்பு உண்டாகாத வழியே, தலே - தலேமையானதாம்; (எ - ம்.)

ஒருதொழில் இன்பத்தோடு பழியையுஞ் தருவதாஞல், அதனைப் பழி தருதலேநோக்கி விடவேண்டும்: இன்பந்தருதலேநோக்கி விரும்பலாகாது என்பது, கருத்தி; எனவே, அப்படிப்பட்ட தொழிலைச் செய்யாமற்றொழுத் தல் தகுதி யென்பதாம்.

பயந்தாங்கு-பெயரெச்சவீறு தொகுத்தல். பக்கம்-பாகம்: வடசொல். இருந்தை - முன்னிலை யொருமை யீறற்காலவினையாலணையும் பெயர். ஐ - விகுதி. இருந்தைக்க—கு உருபு, அகரச்சாரியை பெற்றது; "கடிஞிலை யின்றே யாசிரியற்க" என்பதிற் போல. (கூ)

அ0. தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பி
ஞன்கெடினு முண்ணர்கைத் துண்ணற்க—வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

(இ - ன்.) தான் கெடினும்-தான் அழிய நேர்ந்தாலும், (அவ்வழியை ஒழிக்கும்பொருட்டு), தக்கார் கேடு - மேலோரது கெடுதலே, எண்ணற்க - (பொருமையால்) கினையாதிருக்கக்கடவன்; தன்உடம்பின் ஊன்கெடினும்-தன் உடம்பிலுள்ள தசை (பசியால் மெலிந்து) அழிவதாயினும், (அதனைப் பொறுத்திடாமைபற்றி), உண்ணர் கைத்து உண்ணற்க-உண்ணத்தகாத வரது கையினல் வரும் உணவை உண்ணலிருக்க; வான்·கவிந்த - ஆகாயத் தாற் கவியப்பட்ட, வையகம்எல்லாம்-பூமிமுழுவதையும், பெறினும்-(தான்) பெறுவதாயிருந்தாலும், (தன் வறுமையைப் பொறுக்கமாட்டாமைபற்றி), பொய்யோடு இடை மிடைந்த சொல் - பொய்யோடு இடையிலே கலந்த சொல்லை, உரையற்க - சொல்லாதிருக்க; (எ - று.)

இவை யெல்லாம் பொறுமைக்குணமுடையவரது செய லென்றபடி.

முன்னிரண்டடியில், உம்-இழிவு சிறப்பு; மூன்றுமடியில். உம் - உயர்வு சிறப்பு. வையகம்-பொருள்கள் வைக்கப்படும் இடம். (கூ0)

## கூ ஃ ஆம் அதிகாரம்.—பிறர்மனை நயவாமை.

அஃதாவது-காமமயக்கத்தாற் பிறருடைய மனையாளை விரும்பாதிருத் தலேயுணர்த்துவது. பொறையுடையரான இல்வாழ்வார்க்கு, பொறுத்தற் கரியகாமத்தைப் பொறுத்தல்மேற்கியமாக வேண்டுமென்பதேதோன்ற, இது பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது. பிறர்மனைநயத்தல் பொறுத் தற்கரிய குற்றமென்பதைக் காட்டும்பொருட்டு, பொறையுடைமையின்பின் இது வைக்கப்பட்டதெனினும் அமையும்:. திருக்குறளில், பிறனில் விழை யாமையின் பின் பொறையுடைமை வைத்ததும், இவ்வதிகாரத்து ஈற்று முன்ன சம்பந்தத்தை வற்புறுத்தும். மனை-ஆகுபெயர்.

அக. அச்சம் பெரிதா லதற்கின்பஞ் சிற்றளவா
னிச்ச நினையுங்காற் கோக்கொலையா—னிச்சலுங்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்ஞர
நம்பற்க நாணுடை யார்.

(இ - ன்.) அச்சம் பெரிது-(பிறர்மனைவியை விரும்பி ஏழுங்காலத்தைத் தமக்குள்ளே தோன்றுகின்ற) அச்சம் பேரளவுடையது; அதற்கு இன்பம் சிறுஅளவு - அவ்வச்சத்திற்கு (த் தம்மால் அனுபவிக்கப்படுஞ்) சிற்றின்பம் சிறிய அளவுடையது; நிச்சம் நினையுங்கால்-(தமது களவொழுக்கத்தின்)உண்மையை ஆராய்பிடத்து, கோ கொலை - (அரசனும்) கொல்லுதல் தண்டனை (இம்மையில்தோரும்); அதுமாத்திரமேயன்றி மறுமையில், நிச்சலும்-எங்ஙனும், கும்பிக்கேகூர்த்தவினை-நரகத்திற்கே எதுவாகியபிக்பாவமாம்: (ஆதலால்), நாண்உடையார் - நாணத்தையுடையவர், பிறன் தாரம்-அயலானதுமனைவியை, நம்பற்க - விரும்பாதிருக்கக்கடவர்; (எ - று.)

பிறன்தாரம் நம்பினவர் மறுமையிலடையும் நரகத்தினை "வம்புலாங் கூர்தல்மனைவியைத் தாந்து பிறர்பொருள் தாரமென் றிவற்றை, நம்பினு நிறர்தால்நமன்தமர்பற்றியெற்றிவைத் தெரியெழுகின்ற, செம்பினுலியன்ற பாவையைப்பாவீ தழுவென மொழிவதற் கஞ்சி, நம்மனே வர்தன் திருவடி யடைர்தேன் கையிலா ரணியத்து னென்தாய்" என்னும் பேரியதிருமொழியாலும், "காதலான்கிரிதுரையக்கடியவே கனிர்துகன் மி, லதிலான்தாரம் நம்பி யெளிதெனலிறந்த பாவத்து, ளுதலிலே யுருடவெர்த வொள்ளழற்செப்புப்பாவை, ஆ தகாதென்னப்புல்லியலுமால் யானேவேர்தே"என்னுஞ்சீர்தாமணியாலும், "தர்திருட்போதில் தசைசென்றயல்மனை, யுருகுமகிழ்ர்தானவளிவன்காணெனச், செங்கன லேயென வெம்பிய செம்பினிற், பொங்கனற் பாவைகள் புல்லப் புணர்ப்பார்" என்னுஞ் சூளாமணியாலும் அறிக.

அச்சம்-அவளுக்கு உடையவர் தம்மை அடித்தல் முதலியவற்றுல்கோர்வ்ன. 'ஆல்' நான்கும் - அசை; புறப்பொருள்வெண்பாமாலையில் 'வீடுனர்ர்தோர்க்கும்லியப்பாமால்" என்றவிடத்து, உரைகாரர் 'ஆல்-அசை;சொல்வீழுக்காடாயினுமாம்' என உரைத்ததுகொண்டு, 'ஆல்'-வார்கியாலஃகார மென்றலுமாம். அதற்கு, 'கு' உருபு-எல்லைப்பொருளில் வர்ததனுல், உருபுமயக்கம். நிச்சம் - நிரயம என்னும் வடசொல்லின் லிகாரம். நிச்சல்-நித்ய மென்னும்வடசொல்லின் திதைவு. தப்தகும்பம், கும்பீபாகம் முதலிய நரகவிசேஷங்களே 'கும்பி' என்ரூர், வடசொல்நிரிபு. நம்பற்கநசையுணர்த்தும்-நம்பு'என்னும் உரிச்சொல்லினடியாப் பிறர்ர்த எதிர்மறைலியங்கோள்; "நம்பும் மேலும் நசையாகும்மே." நாணுவது-செய்யத் தகாதனவற்றில் உள்ள மொரியுதல். நாண்:- நாணுதல்; முதனிலைத்தொழிற்பெயர். 'நாணுடையார் பிறன்தார நம்பற்க' என்றதனுல், பிறன்தாரம் நம்புபவர்காணிலுரென்றது, தானே வினங்கும். தாரம்-தாரா: என்னும் வடசொல்லின்றிரிபு. 'நினைத்தற்கால்' என்பதுபோலுங்கால் எதிர்காலப் பெயரெச்சத்தொடர்; 'நினைத்தற்கால்' என்பதுபோல

இதனை ஒருசொல்லாக்கொண்டு காலிற்று எதிர்காலவினையெச்சமென்றல் மரபன்மையை உய்த்துணர்க. கால்-காலமென்னும்வடசொல்லின்விகாரம்.

அ உ. அறம்புகழ் கேண்மை பெருமையிற் நான்கும்
பிறன்ஞர நச்சுவார்ச் சேரா—பிறன்ஞர
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்.

(இ-ன்.) பிறன்தாரம் நச்சுவார்-அயலானது மனையாளேவிரும்புபவரை, அறம்-தருமமும், புகழ்-கீர்த்தியும், கேண்மை-நேசமும், பெருமை-கௌரவமும்ஆகிய, இ நான்கும்-இத்தான்கு பொருள்களும், சேரா-(ஒருகாலுஞ்) சேராவாம்; பிறன் தாரம் நச்சுவார்-அயலானதுமனையிலை விரும்புபவரை, பகை - பகையும், பழி - பழியும், பாவம் என்று - பாவமும், அச்சத்தோடு - அச்சமும் ஆகிய, இ நால் பொருள்-இந்த நான்கு பொருள்களும்,சேரும்—.

எனவே, அவர் இம்மை மறுமை என்னும் இருமையின்பங்களேயும்இழத்தல் பெறப்பட்டது. அறம் முதலிய நான்கும் கேள்வேண்ணதலின், ஈற்றில் தொகைபெற்றன; பகைமுதலிய நான்கும் இவ்வாறே. அறம்புகழ் கேண்மை பெருமை என்றதற்கு எற்ப, பாவம் பழி பகை அச்சம் என்பதே முறையாயினும், செய்யுள்நோக்கிப் பிறழவைத்தார். வைசேடிகர் பொருண்பண்பு தொழில் சாதி விசேடம் இயைபு என்பனவற்றை அறுவகைப்பொருளென்றற்போல, இங்கு பாவமாகிய பண்பும், பகை பழி அச்சங்களாகிய தொழில்களும், 'பொருள்' எனப்பட்டன.

நான்குபோய் நான்கு வருமென்றதனுல், இப்பாட்டில் பரிவர்த்தநாலங்காரம் என்னும் மாற்றுநிலையணி தொனிக்கின்றது.

"பகை பாவ மச்சம் பழியென நான்கும், இகவாவா மில்லிறப்பான் கண்" என்ஞர் நீருவள்ளுவனுரும். (உ)

அ ங. புக்கவிடத் தச்சம் போதரும்போ தச்சந்
துய்க்குமிடத் தச்சந் தோன்ருமற் காப்பச்ச
மெக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
வுட்கான் பிறனில் புகல்.

(இ - ள்.) புக்க இடத்து - (பிறன்மனையாளிடம்) போகும்பொழுதும், அச்சம்-பயம் உண்டாகின்றது; போதரும் போது-மீண்டுவரும்பொழுதும், அச்சம்—; துய்க்கும் இடத்து-அனுபவிக்கும்போதும், அச்சம்—; தோன்ருமல் காப்பு-(அதனைப்) பிறரறியாமற் காக்கும்போதும்,அச்சம்—; எ காலும் அச்சம் தரும்-(இவ்வாறு) எப்போதும் பயத்தையே தருகின்றது; (இப்படியிருக்க), உட்கான்-(ஒருவன்) அஞ்சாதவனுய், பிறன் இல் புகல்-பிறன்மனையாளிடஞ் செல்லுதல், எவன்கொலோ - எவ்வாறோ? (எ - ரு.)

மூன்றின செய்யுளிற் பிறர்மனை நயப்பவனுக்கு நேர்வனவென்று பொதிப்படக் கூறப்பட்ட நான்கு குற்றங்களுள், அச்சத்தின் தன்மை இச்செய்யுளில் தெளிவுபடையாற் கூறப்பட்டது. காமம் காரணமாகப் பாவ வழியில்

கிற்பவர்களாகிய பெண்வழிச்செல்பவரும், விலைமகளிரோடும் இழிகுலமகளிர் சோடுக்கூடி. இன்பமனுபவிப்பவரும் போல, அறத்தையும் பொருளையும் இழந்தலேயன்றி, பிறர்மனை நயப்பவர் அசசத்தால் தாம் கருதிய இன்பத்தைபு மிழக்கின்றராதலால், அச்சத்தின் கொடுமை தனியே கூறவேண்டுவதாமிற்று.

'எக்காலு மச்சந்தரும்' என்பதற்கு, 'பிறர்மனை நயத்தல்' என்ற ஏழு வாய்அநிகாரத்தால் வருவிக்க. போதரும்போது, தா-துணைவினை.போது-பொழுது என்பதன் மரூஉ; போழ்துஎன்றும் மருவி வழங்கும். ஆல்-அசை; ஆதலால என்பதன் விகாரமாகவுங் கொள்ளலாம். எவன் - வினாவடியாய்ப் பிறந்த அஃறிணைப்பொதுக்குறிப்புமுற்று. கொல் ஓ என்ற இரண்டனுள், ஒன்றுஇழிவையும், மற்றொன்று இரக்கத்தையும் உணர்த்துவதென்னலாம். உட்கான்-எதிர்மறைத் தெரிநிலே முற்றெசசம்; உட்கு - பகுதி. புகல் என்பதை இடக்கரடக்கல் என்னலாம்; "நினைத்தனையுந், தேரான் பிறனில் புகல்" எனத் திருக்குறளிலும் காண்க.

இது-ஒருவிகற்ப இன்னிசைவெண்பா. மேல் அ-ஆம் செய்யுளும் இது.

அ. காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறைய
மாணின்மை செய்யுங்கா லச்சமா—நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட
இன்ப மெனக்கெனினைத்தாற் கூறு.

(இ - ன்.) காணின்-(பிறர்) கண்டால், குடி பழி ஆம்-தன் குலத்துக்கு நிந்தை உண்டாம்; கை உறின் - ஒருப்பட்டுக்கொண்டால், கால் குறையும்-கால் வெட்டப்படும், மாண் இன்மை செய்யும் கால்-மாட்சிமையில்லாதஅத் தீசசெயலேச் செய்யும்பொழுது, அசசம் ஆம் - பயம்தோன்றும்; (இவையேயன்றி), நீள் நிரயம் துன்பம் பயக்கும்-(அவ்வொழுக்கம்) நெடுங்காலம் அனுபவிக்கும்படியான நரகவேதனையை உண்டாக்கும்; (ஆகவே), தசசாரி-தீச்செய்கை செய்பவனே! நீ கண்ட இன்பம் - நீ (அதில்) அனுபவித்த சுகம், எனைத்து எல்லளவினது எனக்கு—, கூறு-சொல்லு; (எ - று.)

பிறர்மனைநயந்து செல்லும் ஒருவனேநோக்கி அவனே அங்ஙனஞ்செல்ல வொட்டாது கற்புத்திகூறி விலக்கத்தொடங்கின கண்பனெருவன் கூறிய தாக இப்பாட்டுச் செய்யப்பட்டதென்க.

அதிகாரத்தால், 'மாணின்மை' என்றது-பிறர்மனை நயத்தலாம்;அன்றி, முடக்காடக்க லென்னலாம். பாவமென்ற பொருளில்'மாணின்மை' எனப்பட்டது; ''தெளிக்தாரிற், றீமை புரிந்தொழுகு வார்'' என்ற திருக்குறளில், 'தீமை' என்றது போல. ஆண் இன்மை எனப் பிரித்து-உத்தமபுருஷனுக்கு உரிய குணமாகாத அந்தியொழுக்கத்தையென்று பொருள்கொள்ளலுமாம். பொருட் பொருத்தத்தோடு மோனைப்பொருத்தத்துக்கும் இதுவே தகுதி. இந்திரியங்களே அடக்குதலேஆண்மையாதலால், அதனேயடக்காமல்நிலைதிரி

செல்லுதலே ஆணின்மை யென்றல்பொருத்தம்; "பிறன்மனை நோக்காதபே ராண்மை" என்ற திருக்குறளில் பிறர்மனை நயவாமையைப்'பேராண்மை' என்றதனலும், பிறர்மனையத்தல் ஆண்மையின்மையென்பதுஅமையும்;அக்குற ளினுரையிற்பரிமேலழகர்'புறப்பகைகளே யடக்கும்ஆண்மையுடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கு அருமையின், அதனையடக்கிய ஆண் மையைப் பேராண்மை யென்ருர்' எனஉரைத்ததுஉணரத்தக்கது. தச்சாரி-வடமொழி. 'ஆல்' இரண்டும்-அசை; முதலதை எதுப்பொருளாகக்கொள் ளலுமாம். 'இன்பமெனக்கெனேத்தாற்கூறு' என்பது, இன்பஞ்சிறிதுமில்லே யென்பதை விளக்கும். எனேத்து-எத்தனேத்து என்பதன் மரூஉ. (ச)

ஊரு. செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க்
கொம்மை வரிமுலேயா டோண்மரி இ—யும்மை
வலியாற் பிறர்மனேமேற் சென்ருரே யிம்மை
யலியாகி யாடியுண் பார்.

(இ - ன்.) உம்மை - மூற்பிறப்பில், செம்மை ஒன்று இன்றி - நடுவுநிலே மை சிறிதும் இல்லாமல், சிறியார் இனத்தர் ஆய்-அற்பகுணமுடைய விட ரோடு சேர்ந்தவராய், கொம்மைவரி முலேயாள்-நிரட்சியையுஞ் சுணங்கையு முடைய தனங்களே யுடையவளது, தோள்-தோள்களே, மரி இ-சேரவிரும்பி, வலியால்-(தமக்கு உள்ள) வலிமையினுல், பிறர் மனைமேல் சென்ருரே-பிற ரது மனேயாளிடஞ் சென்றவரே,—இம்மை இப்பிறப்பில், அலி ஆகி-நபும் சகராய், ஆடி-கூத்தாடி, உண்பார்-(அதனுற்) ஜீவிப்பவராவர்; (எ - று.)—ஆதலால், பிறர்மனே நயக்கவேண்டாவென்பது கருத்து.

செம்மை ஒன்று இன்றி-பழிபாவங்களுக்குச் சிறிதும் அஞ்சாமலென்ற படி; அன்றி, தன் மனேயாளது பதிவிரதாதருமம் போலவேபிறன்மனேயா ளது பதிவிரதாதருமமும் பாதுகாத்தற்கு உரியதென்று படிபாதமின்றித் தன்னேப்போலவேபிறரையும் கருதவேண்டியிருக்க, அது செய்யாமல்எனக் கொள்கை பொருத்தம். சிறியாரினத்தராய் - "வறுமொழி யாசிரொடு வம் பப்பரத்தரொடு, குறுமொழிக் கோட்டி செருெலப்புக்குப், பொசாரப்புண்டு பொருளுரையாளர், நசக்கொன்றேற்கு" எனச்சிலப்பதிகாரத்திற்கேற்ப லன்கூறினதற்போல்வன. கொம்மை-இளமையும், அழகும், வன்மையும், பரு மையுமாம். வரி-தொய்யிலிரேகையுமாம். மரி இ=மருவி;சொல்விகாரப்பட்டு அளபெடுத்ததனுல், சொல்லிசையளபெடை. உம்மைசகென்ருரென இயை யும். பிறர்மனேமேற் சென்ருர்-இடக்கரடக்கல்; "பிறன்கடைநின்ருரிற் பே தையாரில்" என்ற திருக்குறளில் 'நின்ருர்' என்றதுபோல. அலி-ஆணுறுப்பு மிருந்துபெண்ணுறுப்புக்குறைந்த நபும்சகம்; (பெண்ணுறுப்பு டக்குஆணுற ப்புக் குறைந்த நபும்சகம் பேடியெனப்படு மென்றும், பேடு என்பது-நபும் ஸ்கம் என்றவ்டசொற்போல இவ்விருவகைக்கும் பொதுவென்றும் அறிக.) 'கொம்மைவரு' என்ற பாடத்துக்கு-நிரட்சியோடு வளர்ந்தவென்க. (இ)

அசூ. பல்லா ரறியப் பறையறைந்து காட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிபுக்க—மெல்லியற்
காதண் மனையாளு மில்லாளா வென்னெருவ
னேதின் மனையாகோ நோக்கு.

(இ - ன்.) நான் கேட்டு-நல்லநாளே விசாரித்து, (அக்காளில்), பல்லார் அறிய-பலரும் அறியும்படி, பறை அறைந்த-மங்கல வாத்தியங்களோமுழங்கு வித்து, கல்யாணம் செய்து-விவாகஞ்செய்யப்பட்டு, கடிபுக்க-(தம்) காவலிற் புகுந்த, மெல் இயல்-மென்மையான குணங்களையும், காதல்-வீருப்பத்தையு முடைய, மனையாளும்-மனைவியும், இல்லாள் ஆ-தன்வீட்டில் உள்ளவளாக, ஒருவன்—, எதில் மனையாகோ-அயலானது மனையை, நோக்கு-பார்ப்பது, என் - யாதுகாரணத்தினுலோ? (எ - று.)

இங்ஙனங்கூறியது, தன்மனையா ளிருக்க அயலான் மனையாளிடத்திற் செல்வதன்குற்றத்தை நன்குவிளக்குதற்பொருட்டேயன்றிதன்மனையாளில் லாவிடின் பிறன்மனையாளிடஞ் செல்லலாமென்று கூறியதன்றெனக் கொள்க; "அறனிற்கொண்டதன்மனையாளமளித்தலத்தலிலழுதிங்கப், பிறனிற் றேடும்பெரும்பாவி" எனப் பாரதத்தில் வருதலுங்காண்க. இதனுல், இங்கு 'இல்லாள்' என்பதற்கு-இல்லாதவளென்று பொருளுரைக்கஇடமின்மையும் அறிக. நோக்கு - இடக்கரடக்கல்; "பிறன்மனைநோக்காத பேராண்மை" என்ற திருக்குறளிற் போல; அங்கு 'பிறன்மனை நோக்காத' என்பதற்கு-பரி மேலழகர் 'பிறன்மனையாளை உட்கொள்ளாத' என்ற உரை கூறியவாற அறிக பெண்களுக்கு உரிய நற்குணங்களெல்லாம் அமைத்துள்ளவளென் பது தோன்ற, 'மெல்லியல்' 'காதல்' என்னும் அடைமொழிகள் கொடுத் தார். மனையாளுக்கு 'காதல்' என்ற அடைமொழி கொடுத்ததனுல், அவ ளுக்கு இவனிடம் வேட்கையுளதே யன்றி இவனுக்கு அவளிடம் வேட்கை யிலதென்பது தோன்றும்.

அறைத்து = அறைவித்து;பிறவினைப்பொருளில்வந்த தன்வினை வினை யெச்சம். அன்றி, ஏவுதற்கருத்தாவென்றுரல், எளியவழி. கல்யாணம் - வட சொல்,கடி-உரிச்சொல். உம்-உயர்வுசிறப்பு. என்-எவன்என்னும்வினாவினைக் குறிப்புமுற்றின் விகாரம். எதில் - எதிலனுக்குப் பண்பாகுபெயர்; எதில் - அயல். நோக்கு-முதனிலைத்தொழிற்பெயர். (கூ)

அள. அம்ப லலிடைப்ப வஞ்சித் தமர்பீ ஜி
வம்பலன் பெண்மரீ ஜைமந்துற்று—நம்பு
நிலைமையி னெஞ்சத்தான் றுப்புரவு பாம்பின்
றலைநக்கி யன்ன துடைத்து.

(இ - ன்.) அயல்-அயலார், அம்பல் எடுப்ப-(அறிந்து) பழித்தல்செய்ய வும், தமர்-உறவினரும் கண்பரும், அஞ்சி-(அறிந்து இவனுக்கு என்னகேடு மோவென்று) பயந்து, பரீ ஜி - வருந்தவும், வம்பலன் பெண் மரீ ஜி-அயலா னது மனையாளைச் சேர்ந்து, மைந்துஉற்று-களிப்படைந்து, நம்பும்நிலைமை

இல் செஞ்சத்தான்-கம்பத்தக்க நிலைமையில்லாத மனமுடையவனது, தப் புரவு-சிற்றின்ப நுகர்ச்சியானது,—பாம்பின் தலைக்கில் அன்னதுடைத்து-பாம்பினது தலையை ஈக்கினுற்போன்ற தன்மையுடையது; (எ - று.)

பனபனப்பாயிருக்கிறதென்று பாம்பின்தலையை ஈக்கிளுல் அது விஷம் பட்டு உடனே மரணமடைவதற்கு எதுவாவதுபோல, தற்காலத்தில் இன் பந் தருகிறதென்று பிறன்மனைவியைச் சேர்ந்தால் அது விரைவிற் பெருந் துன்பத்திற்கு எதுவாமென்பது கருத்து. உவமையணி.

அயல்-ஆருபெயர். பரிஇ பரியவென்னுஞ் செயவெனெச்சத்தின் திரி பாகிய பரிந்து என்பதன் சொல்லிசையளபெடை. வம்பு-புதுமை; அதனை யுடையவன், வம்பலன்: அல் - வேண்டாவழிச்சாரியை. அம்பலென்பது வெளிப்படச சொல்திகழ்த்தாமல் முணுமுணுத்துச் சொல்லுதலென்ற பொருள்பயிமெனவும், இதன் இமாகிய அலனென்பது - பலராறிய வெளிப் படையாச் சொல்லித் அறற்றுதலென்ற பொருள்படுமெனவும் இறையனு ராகப்பொருளுரையாளும், தோல்காப்பிய நச்சினர்க்கினியத்தாலுர் தெரி கின்றது. மணிமேகலையில் "கினக்கிவன் மகளுத் தோன்றியதூவும், மனக் கினிபாற்கு ஈ மகளாயனூவும், பண்டிம்.பண்டிம் பலபிறப்புளவால், கண்ட பிறனியே யல்ல காரிகை" என்றவிடத்து 'மகள்' எனபதுபோல, இங்கே பெண்' என்பது மனைவி யென்ற பொருளில் வக்தது. (எ)

அ.அ. பரவா வெளிப்படாப் பல்லோர்கட் டங்கா
வுரவோர்கட் காமகோ போஒ கொடிதே
வீரவாரு ஞணுப் படலஞ்சி யாது
முரையாதுள் ளாறி விடும்.

(இ - ன்.) உரவோர்கண்-புத்தி பலமுடையவரிடத்து (உள்ளதாகிற), காமம் நோய்-காமவியாதியானது, பரவா-வளராமலும், வெளிப்படா-வெளி யாகாமலும்; பல்லோர்கண் தங்கா-பலரிடத்துஞ்சென்று தங்காமலும், வீர வாருள் ஞணுப்படல் அஞ்சி - (அந்நோய்) கலவாதவரிடத்து வெட்கப்படு வதற்குப் பயந்து, யாதும்உரையாது-ஒன்றுஞ் சொல்லாமல்,உள்ஆறிவிடும்-உள்ளேயே அடங்கிப்போம்; (ஆதலால்),—ஒஒ கொடிது - (அது) மிகவுங் கொடியது! (எ - று.)

அறிவுடையார்க்கும் வினைவசத்தாற் காமமுண்டாகலாம்;அதலிருத்தி யாகாமலும், வெளிப்படாமலும், பல விடயங்களிற் செல்லாமலும் உள் ளேயே ஆறிப்போம்; எனெனில்,—பலர்க்கும் ஞாணவேண்டியிருப்பதஞல். ஆனபடியால், அது மிகவுங் கொடியது என்றாம். கொடிது என்றது, காம த்தின் நிலைமையை நோக்கி அதையும் பொறுக்கிறார்களேயென்று உண்டான வியப்பினுலென அறிக.

அறிவுடையோர் காமமிருதியாற் பிறர்மனைநயவா ரென்ற சம்பந்தம் பற்றி, இசசெய்யுள் இவ்வதிகாரத்திற் சேர்க்கப்பட்டது.

பரவா, வெளிப்படா, தங்கா-ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சங்கள். ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சங்களின்முன்னே வலியியல்பாதற்கு லிதியில்லையாதலால், 'வெளிப்படா பல்லோர்கட்டங்கா' என்ற பாடம் கொள்ளத்தக்கதன்று; எதிர்மறைப்பலவின்பால் முற்றெச்சமாக்கொண்டு, "அல்வழியா மாமியா முற்றுமுன் மிகா" என்றபடி இயல்பானதாகக் கொள்ளலாகாதோவெனின்,—ஆகாது; 'கொடிது' என்ற ஒன்றன்பால் முற்றோடு மாறுபடுதலால். இனி,பரவாது, வெளிப்படாது, தங்காது என்ற எதிர்மறை யொன்றன்பால் முற்றுக்கள் ஈறுகெட்டு நின்றனவெனக் கொள்ளின், இயல்பாதற்கு இடமுண்டு. ஈயொழுக்கமுடையவரது இகழ்ச்சி ஒருபொருளாகப் பாராட்டத் தக்கதன் றுதலால், 'வீரவாருள் நாணுப்பட லஞ்சி' என்றார். 'யாதமுரையாது' என்றது - நிற்கும் வெளிப்படாத என்பதை புணர்த்த வக்த குறிப்புமொழி. இனி பிறர் யாதுங் கூறிப் பழிக்க இடமில்லாதபடி யென்றுங் கொள்ளலாம். ஆறிவிடும் என்பதில், லிடு என்பது-தணிவுப்பொ ருளே விளக்கிற்று. காமம்-தற்சம வடசொல். மனத்தையும் உடம்பையும் வருத்துதலினால், காமம்'நோய்' எனப்பட்டது.ஓ-நிறப்பு; அளபெடை-செய் புளிசை நிறைக்கவந்தது. ஏ-தேற்றம், நாணு, உ-சாரியை. (அ)

அகூ. அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காம
மவற்றினு மஞ்சப்படும்.

(இ - ன்.) அம்பும்-பாணமும், அழலும்-கெருப்பும், அவிர் கதிர் ஞாயி றும்-வினங்குகின்ற கிணங்களையுடைய சூரியனும், வெம்பி சுடினும்-வெப் பங்கொண்டு சுட்டாலும், புறம் சுடும்-புறமாகிய உடம்பையே சுடவல்லன வாம்; காமம்-பெண்ணையோ வென்றால், வெம்பி - வெப்பங்கொண்டு, மனத்தை-அகமாகிய நெஞ்சத்தை, கவற்றி - கவலைப்படுத்தி, சுடுதலால் - எரித்தலால், அவற்றினும்-அந்த அம்பு முதலியவற்றினும் (அதிகமாக,) அஞ் சப்படும்—; (எ - று.)

புறத்தையே சுடுவனவாகிய அம்புமுதலிய உபமானப்பொருள்களினும் அகத்தைச்சுடுகிற காமமாகிய உபமேயப்பொருளுக்கு உள்ள வேறுபாடு தோன்றக் கூறினமையால், இது, வேற்றுமையணியின்பாற்படும்.

ஞாயிறு=காயிறு; முதற்போலி. கவற்றி - வினையெச்சம்; கவல்-என்ப தன் பிறவினையாகிய கவற்று-பகுதி; இதில், பிறவினைவிகுதி - று.

இச்செய்யுள் முழுவதும் இயற்சீரான் அமைந்துள்ளது. (க)

கூ. ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகு—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்.

(இ - ள்.) ஊருள் எழுந்த - (தான் இருக்கும்) ஊர்முழுவதிலும் பற்றியெழுந்த, உரு கெழு செம் தீக்கு-உருவம் விளங்குகிறசெம்மையானெருப்புக்கு, நீருள் குளித்தும்-தண்ணீருள் மூழ்கியாயினும், உயல் ஆகும்-தப்பிப் பிழைக்கக்கூடும்; காமம்-காமமாகிய நெருப்பு, நீருள் குளிப்பினும் - நீருள் மூழ்கினாலும், சுடுமே-சுடாமல் விடாது; காமம்—,குன்முஏறி ஒளிப்பினும்-மலைமேலேறி ஒளித்துக்கொண்டாலும், சுடும்—; (எ - று.)

ஆதலால் நெருப்பினும் அஞ்சப்படுமென்பது கருத்து.

"காலத்தால் வருவதொன்றே காமத்தாற் கனலும்வெந்தீச் சேலத்தாலழிவதன்றிச் செய்யத்தாலுவ தண்டோ" எனக் கம்பராமாயணத்து வருவதுங்காண்க. உரு-ரூபமென்னும் வடசொல்லின் திரிபு. 'உறுகெழு' என்பதற்கு-அஞ்சத்தக்கதன்மை மிக்க என்றுங் கொள்ளலாம்; அப்பொழுது, 'உரு' என்பது-உரிச்சொல்: "உரு உட்காகும்" என்ற தொல்காப்பியத்துத் திரை காண்க. செந்தீ - நீக்குச் செம்மை, இயற்கைபற்றியடைமொழி: இனம்விலக்கவந்ததன்று. காமத்தை நெருப்பென்றது, தான்சேர்ந்த இடத்தை எரித்து அழித்தலால். உயல்-உய்தல்; தொழிற்பெயர்; உய் - பகுதி.

நீருள்மூழ்கி நின்றுரையும் நெடுந்தூரஞ்சென்று அகப்படாது நின்றுரையும் சுடமாட்டாத நெருப்பாகிய உபமானத்தினும், அங்ஙனம் நின்றுரையுஞ்சுடவல்ல காமமாகிய உபமேயப்பொருளுக்கு உள்ள வேறுபாடு தோன்றக்கூறினமையால், இதுவும் - வேற்றுமையணி; வடநூலார் வ்யதிரேகாலங்காரம் என்பர்.

இனி, இப்பாட்டுக்கு-காமத்தாலாகிய பாவம் புண்ணியதீர்த்தங்களிற் சென்று நீராடுதலினலும் பெரிய மலைமேலேறி ஏகாந்தமாக இருந்து அரிய தவஞ்செய்தலாலும் தீர்த்தற்கரியது என்னுங்கருத்துப்படவுரைப்பாருமுளர்.

இவ்விரண்டு செய்யுட்களாலும், பிறர் மனைகயத்தலுக்குக் காரணமான காமத்தின் கொடுமையைக் கூறினர். (கப)

---

## கஅ ஆம் அதிகாரம்.—ஈகை.

அஃதாவது-வறியவராய் இரந்தவர்க்கு இல்லையென்னுமற் கொடுத்தல் வேண்டு மென்பதை உணர்த்துவது. இல்வாழ்வானுக்குப் பிறர்மனை நயவாமைபோல ஈகைக்குணமும் இன்றியமையாததாதலின், இது அதன்பின்வைக்கப்பட்டது, இம்மைக்குப் புகழையும் மறுமைக்குப் புண்ணியத்தையுந் தவறுமல்மிகவினைத்தலில் ஈகை பிறர்மனைநயவாமையையும், இம்மையிற் பழியையும்மறுமையிற் பாவத்தையுந் தவறுமல் மிகவினைத்தலில் ஈகையின்மை பிறர்மனைநயத்தலையும் போலுதலால், ஈகை பிறர்மனைநயவாமையை யடுத்திக்கூறுதற்குக் குணமாயிற்றென்க. ஈகை - 'ஈ' விகுதிபெற்றதொழிற்பெயர்.

கூக. இல்லா விடத்து மியைக்த வளவினு
ளுள்ள விடம்போற் பெரிதுவந்து—மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
குடையாவா மாண்டைக் கதவு.

(இ - ள்.) இல்லா இடத்தும் - (தமக்குச் செல்வம்) இல்லாமற்போன காலத்தும், இயைந்த அளவினுள் - (தமக்குக்) கூடியமட்டில், உள்ள இடம் போல்-(செல்வம்) உள்ள காலத்திற்போல, பெரிது உவந்து-(இரப்பவர்வருகைக்கு) மிகவும் மகிழ்ந்து, மெல்ல-சாந்தமாக, கொடையொடு - கொடுத்தலோடு, பட்ட - கூடின, குணன் உடை மாந்தர்க்கு-நற்குணமுள்ள மனிதர்க்கு, ஆண்டைகதவு - அவ்வுலகத்துக்கதவுகள், அடையா - மூடப்பட்டிரா.

எப்பொழுதும் இரப்பவர்க்குக் கொடுப்பவரது வருகையைநோக்கியே மேலுலகத்தவர் தம் உலகத்துக் கதவைத் திறந்துவைப்பர் என்பதாம்; என்றது, தானஞ்செய்பவர்க்கு மறமைப்பயன் தவறுதலித்திக்குமென்றவாறு. 'பெரிதுவந்து', 'மெல்ல' என்றவற்றால், இரப்பவரைக் கண்டபொழுதுமுக மலர்ச்சியும் அவர் கொருகி வர்தபொழுது இன்சொலு முடைமைமுகைக்கு இலக்கணமென்பது விளங்கும்.

அம்-அசை. உம்மை - இழிவுசிறப்போடு எச்சப்பொருளது. பெரிது - குறிப்புமுற்றெச்ச வினையுரி. குணன் - சுற்றுப்போலி. உடை-உடைய என்னுங்குறிப்புப் பெயரெச்சத்து அகரவீறு தொகுத்தல். மாந்தர்-ஒருமையில் லாமல் எப்பொழுதும் பன்மையிலேயே வரும் பெயர்; இதனே வடநூலார் நித்யபஹுவசனம் என்பர். ஆண்டை, ஐ - சாரியை; "ஐயீற்றுடைக்குற்றுகரமு முளவே."

மேல் ஈயாமை என்னும் அதிகாரத்து "கட்டார்க்கும் நள்ளாதவர்க்கும்" என்னுஞ் செய்யுள், இதனேடு ஒப்புநோக்கத்தக்கது. (க)

கூஉ. முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்தண்டாம் போழ்து.

(இ - ள்.) முன்னரே - (உங்கள்) முன்னமே, சாம் நாள்-இறக்குங்காலமும், முனிதக்க மூப்பு-வெறுத்தற்குத்தக்க கிழத்தனமும், உள - உள்ளன; பின்னரும்-அவைமாத்திரமேயன்றி மேலும், பீடி அழிக்கும் நோய்-வலிமையைக்குலைக்கும்படியான வியாதிகளும், உள-உள்ளன; (ஆதலால்), கைத்து உண்டாம் போழ்து - கைப்பொருள் உண்டாயிருக்கும் காலத்தில், கொன்னே-வீணாக, பரவன்மின்-(மேலுஞ்சம்பாதித்தற்கு) அலையாதிருங்கள்; பற்றன்மின் - (உன்னபொருளே உலோபத்தால்) இறுகிப் பிடியாதிருங்கள்; பாத்துஉண்மின் - (யாவர்க்குஞ் சோறுமுதலியவறறைப்) பகுத்துக்கொடுத்து (மிகுதியை) உண்ணுங்கள்; யாதும் கரவன்மின்-(பிறரால் இரக்கப்பட்டவற்றுள்) எதையும் ஒளியாதிருங்கள்; (எ - று.)

முன்னரே - பிரதியக்ஷமாக என்றபடி; என்றது, நீங்கள் கட்புலனுக்குக் காண உலகத்திற் பலர்க்கும் பிணிமூப்புச்சாக்காடு உண்டாகின்றனவே; அவற்றைக்கண்டாயினும், ரமக்கும் இவைஉண்டென்ற துணியலாகாதோ? என்றவாறு. அன்றி, பிறப்பெடுக்குமுன்னமே சாகான்முதலிய முன்னிய வினைக்கு ஏற்ப அமைந்துள்ளன என்றவாறுமாம். பரவன்மின் - விடைத்த மட்டில் ' திருந்தியுடையவரா யிருங்கள் என்றபடி. "பருத்தண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர், தொருத்தவற்ற னெல்லாந்தலே" என்ப வாதலால், 'பாத்தண்மின்'என்றார்.நிந்தாஸ்துதியில்"பழியஞ்சிப்பாத்தானுடைத்தாயின்" என்றவிடத்து, 'பாத்தணண்' என்றதற்கு பரிமேலழகர் 'அப்பொருளே இய ல்புடைய மூவர் முதலாயினர்க்கும், தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தானுண்டல்' என உரைத்தது உணரத்தக்கது.

'முளிதக்க' என்பதில், முளி என்பது - முதனிலைத் தொழிற்பெயர், நான்காம்வேற்றுமைத்தொகை. பாத்து என்பதில், பகு என்பதன் மரூஉ வாகிய பா - பகுதி. (உ)

கூஉ. நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் தும்பந் துடையார்
கொடுத்துத்தான் முய்ப்பினு மீண்டுங்கா லீண்டு
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.

(இ - ன்.) செல்வம்—, ஈண்டும் கால்-(நல்வினையால்) வளருங்காலத்து, கொடுத்து தான் துய்ப்பினும்-(பிறர்க்கு) கொடுத்துத் தானும்அனுபவித்து வந்தாலும், ஈண்டும்-வளருமு; விடுக்கும் வினை உலந்தக்கால்-(முற்பிறப்பிற் செய்து குறையாக) விட்ட அந்நல்வினை முடிந்தகாலத்து, இடுக்குற்று பற் றினும்-இறுகிப் பிடித்தாலும், நில்லாது-நிலைபெறுமற் போய்விடும்;(இதனை அறியாத பலர்), நடுக்கு உற்று தன் சேர்ந்தார்-(வறுமையினல்) நடுங்குதலை அடைந்து தம்மைச் சேர்ந்தவரது, தன்பம்-துன்பத்தை, துடையார்-(அவர் வேண்டியன கொடுத்துப்) போக்கார்; (எ - று.)

அங்ஙனம் இருக்கலாகாது, தானும் அனுபவித்துப் பிறர்க்குங்கொடுத் தல் வேண்டும் என்பதாம்.

ஊற்றூசீர் இறைக்கஇறைக்கச்சுரத்தல்போலப் பொருள் 'தானஞ்செய் யச் செய்யச் செழிக்கு மென்பார், 'கொடுத்துத் தான் துய்ப்பினு மீண்டுங் கா லீண்டும்' என்றார்; பிறர்க்குக் கொடுத்தலால் கைப்பொருள் செலவழி ந்துப்போகப் பின்பு வறுமைப்படவேண்டி வருமே யென்றருதற்கு, கொடுக் கப்பின்வாங்குகிறவரை நோக்கி 'பொருளழிதற்குக் காரணம்வினைப்பயனே யன்றி ஈகையன்று' என்று பின்னிரண்டடிகளால் விளக்கியவாறு.

'தற்சேர்ந்தார்,' 'தான்துய்ப்பின்' என பன்மைவரவேண்டியவிடத்து ஒருமை மயங்கிவந்தது - வழுவமைதி; ஒருமைபன்மைமயக்கம்: இடுக்கு, நடு க்கு-முதனிலைதிரிந்ததொழிற்பெயர். மிடுக்கு உற்று எனப்பிரித்த-வலிமை பொருந்தி யென்றும் பொருள் கொள்வர்.

இப்பாட்டு, இரண்டாமடி முதலிலும், மூன்காமடி அதன் பின்னும், மூன்றுமடி அதன்பின்னும், முதலடி அதன் பின்னுமாக முன் பின்னாக எடுத்துமாற்றிப் பொருள் கொள்ளப்படுதலால், இது, ஏற்புழி யெடுத்துடன் கூட்டலும் அடியுதாகிய அடிமறிமாற்றுப்பொருள்கோளாம்.

இது-ஒருவிகற்ப இன்னிசைவெண்பா; மேல் கக, கo6-ஆம் பாட்டுக்களும் அது.

கூ. இம்மி யரிசித் துணையானும் வைகலு
நும்மி லியைவ கொடுத்துண்மி—னும்மைக்
கொடா அ தவரென்பர் குண்டுநீர் வையத்
தட்டா அ வடுப்பி னவர்.

(இ - ன்.) வைகலும்-காள்தோறும், இம்மி அரிசி துணை ஆனும்-இம்மி யென்னும் அரிசி யவ்வளவாயினும், நும்மில் இயைவ-உங்களுக்குக்கொடுக்கக்கூடியவற்றை,கொடுத்து-(பிறர்க்கு) கொடுத்து, உண்பின்-(மிகுதியை) உண்ணுங்கள்;(அவ்வாறுசெய்யாவிட்டால்), குண்டுநீர்வையத்து-ஆழமாகிய நீரையுடைய கடலாற் சூழப்பட்ட இந்நிலவுலகத்தில், அடா அடுப்பினவர்-சமைக்காத அடுப்பையுடைய சோற்றுப்பிச்சைக்கு வரும் வறியவர்,உம்மை-உம்மை, கொடாதவர் என்பர்-கொடுக்காத லோபிகளென்று இகழ்வர்.

மறுமைக்கு வேண்டிய நல்வினையின்பொருட்டுக் கொடாவிட்டாலும் இம்மைக்குவேண்டிய புகழின்பொருட்டாகவாயினுங் கொடுக்கவென்றபடி.

இனி, பின்னிரண்டடிக்கு - பூமியில் வறியவர் முற்பிறப்பில் தானஞ் செய்யாதவ ரெனப்படுவ ராதலாலென்றும்பொருள்கொள்ளலாம்; உம்மை-முற்பிறப்பு: அப்பொழுது கருத்தி,மறுபிறப்பில் நீங்கள்செல்வமுடையவரா யிருக்கவேண்டி இப்பிறப்பில் தானஞ்செய்யுங்க ளென்பதாம்.

சிந்தாமணியில் "இம்மியன நுண்பொருள்கள்" என்றவிடத்து நச்சினார்க்கினியர் 'இம்மியரிசி-மத்தங்காய்ப் புல்லரிசி' எனஉரைத்தது அறியத்தக்கது; இது, 'தினை' என்பதுபோல,சிறுமைக்கு எடுத்துக் காட்டிலதோர்அளவை. இயைவ-பெயர்.அளபெடைகள், செய்யுளோசைகிறைக்கவந்தன;அலகிட்டுக்காண்க. என்பர் - செயப்பாட்டு வினைப்பொருளில்வந்த செய்வினை.

கூடு. மறுமையு மிம்மையு நோக்கி யொருவர்க்
குறுமா றியைவ கொடுத்தல்—வழுமையா
லீத லிசையா தெனினு மிரவாமை
யீத லிரட்டி யுறும்.

(இ - ன்.) மறுமையும் இம்மையும் நோக்கி - மேலுலகத்துப் பயனையும் இவ்வுலகத்துப் பயனையும் நன்றாக ஆராய்ந்து, ஒருவர்க்கு - ஒருவருக்கு, இயைபு-கொடுக்கக்கூடியவற்றை, உறும் ஆறு - தக்கபடியே, கொடுத்தல் - கொடுக்கக்கடவர்; வறுமையால்-இல்லாமையால்,ஈதல்இசையாதஎனினும்-கொடுத்தல் இசையாமற்போனாலும், இரவாமை - யாசியாதிருத்தல், ஈதல் இரட்டி உறும் - கொடுத்தலினும் இருமடங்கு நல்லதாகும்; (எ - று.)

மறுமையிற் சுவர்க்க இன்பமும், இம்மையிற் புகழ்ப்பெருமையும் வருவதை நோக்கி இயைந்தவளவு பிறர்க்குக் கொடுக்கவேண்டும்; அவ்வாறு கொடுக்கக்கூடாமற் போனலும் தான் பிறரை இரவாமலிருப்பது மிகவும் நல்லது என்பதாம்.

மறுமை, இம்மை - ஆகுபெயர்கள். உறுமாறு கொடுத்தல்-தக்காலத்தில்முகமலர்ந்து நல்மனத்தோடும் இன்சொல்லோடுங் கைம்மாறுகருதாது கொடுத்தல். இயைவ - பெயர். கொடுத்தல் - தல்லிற்று உடன்பாட்டு வியங்கோள். இரட்டி - இரட்டித்தலுடையது; இரட்டுதல் - இரண்டாகுதல். இ - பெயர்விகுதி.

மூன்றுமுடி - முற்றுமோனை. (கு)

கூசு. நடுவுருள் வேதினை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணு மாக்க
ளிடுகாட்டு ளேற்றைப் பணை.

(இ - ள்.) பலர் நச்ச வாழ்வார்-பலரும் (தம்மை) விரும்பிவந்த அதித்தப் பயன்கொள்ளும்படி வாழ்பவர்,—உடு ஊருள்-ஊர்நடுவில், வேதினை சுற்றுக்கோள் புக்க-மேடையினுல் எல்லாப்புறமுஞ் சூழ்ந்துகொள்ளுதலேப் பொருந்திய, படு பனை அன்னர் - காய்த்தல் பொருந்திய பெண் பனைமரங்களே ஒப்பர்; குடி கொழுத்தக்கண்ணும் - (தமது) குடித்தனம் (செல்வத்தால்) மிக்கவிடத்தும், கொடுத்து உண்ணு மாக்கள் - (பிறர்க்குக்) கொடுத்து (த் தாமும்) உண்ணுத மனிதர், இடுகாட்டுள் ஏற்றை பனை - சுடுகாட்டிலுள்ள காய்க்காத ஆண்பனைமரங்களே ஒப்பர்; (எ - று.)

பரிசுத்தமான ஊர்நடுவிற் பழந்தரும் பனைமரம் ஒன்று இருந்தஅதைச் சுற்றிலுங் கிண்ணேயு மிருந்தால் வேண்டியவர் வந்து பழம்பறித்துக்கொண்டு அத்திண்ணேமே லிருந்து புசித்தல்போல, உயர்குலத்துப்பிறந்த உபகாரிகளேயாவரும் வந்து அடைந்து அவரிடத்துத் தமக்கு வேண்டும் பயன்களேப் பெறுவர்; அபரிசுத்தமான இடத்தில் தோன்றிப் பலனேயுந் தராத மரத்தை எவரும் சோதவறுபோல, இழிகுலத்துப்பிறந்த லோபிகளாயினுரை ஒருவரும் அடையார் என்றபடி.

'பயன்மர முன்னூர்ப் பழுத்தற்றுற் செல்வம், நயனுடை யாண்கட் படின்" என்ற திருக்குறளும், "உதவுமாறியர், பார்கெழு பயன்மரம் பழுத்தற்றுகவும்" என்ற கம்பராமாயணமும், "கற்றையுட் சுடர்மணி னகை மேனேய, பிற்றையென்னு தருள் பெரியர் வண்மைபோன், மற்றவனுள்ள பன்மரமும் தம்பய, னெற்றையு முலப்புறு நிகைசான்றவே" என்ற கந்தபுராணமும் காணத்தக்கன.

'ஊர்நடு' என்பது 'நடுவூர்' என முன்பின்னுகத் தொக்குவந்த ஆறும் வேற்றுமைத்தொகை; இலக்கணப்போலி எனவும்படும். வேதினை - வேதிகா என்னும் வடசொல் ஈறுதிரிந்தது. சுற்றுக்கோள் - சுற்றுக்கொள் ஏன்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர். படுபனை-வினேத்தொகை. செல்வம்

மிகுதியாக இருக்கவும் கொடித்து உண்ணுதலரத இழிவு தோன்ற, 'மாக்கள்' என்றார். மாக்களெனப்படுவார், மனவுணர்ச்சியில்லாமல் ஐம்பொறியறிவுமாத்திரமேயுடைய விலங்குபோன்ற ஒருசார் மானிடக்கள்; மா என்பது விலங்கின் பெயராதலால், அதன் பன்மையாகிய மாக்கள் என்பதுபிரு சுப்காயராகிய அவிவேகிகளைக்குறிக்குமென்க. மக்களாவார் - ஐம்பொறி புணர்வோடு மனவறிவு முடையவர்: விவேகிகளான மனிதர்: ''மாவு மாக்களு மையறி வினவே,'' ''மக்கள் தாமே ஆறறி வுயிரே'' என்ற தொல்காப்பியக் சூத்திரங்களைக் காண்க. இங்கொடி - (உயிர்நீங்கிய உடல்களை) இங்காடு; இதுதல் - கொண்டுபோகுதல்.

ஏற்றை - ஆண்பெயர்; ''ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம், ஏற்றைக் கிளவி புரிந்தென மொழிப'' என்னுந் தொல்காப்பியர் சூத்திரத்து 'எல்லாம்' என்றதனால், சிறுபான்மை ஆற்றலில்லாததற்கும் இது கொள்ளப்பட்டது. 'ஏற்றப்பினை' என்ற பாடமோதுவாரும் உளர். மேற்காட்டிய ''ஆற்றலொடு புணர்ந்த'' என்றதொல்காப்பியச் சூத்திரத்திலுரையில், நச்சினர்க்கினியர் 'எல்லாம் என்றதனால், சிறுபான்மை ஆற்றலில்லாதனவுங் கொள்க; அது ''இதொட்டு னேற்றைப்பினை'' என்பதுபோன்றவருவன' என்று இதனையே உதாரணம் காட்டியதனால், அப்பாடங்கொள்ளப்படாது, 'ஏற்றைப்பினை' என்ற பாடமே கொள்ளப்பட்டது. தொல்காப்பியர் ''ஏறும் ஏற்றையும்'' என்று இரண்டு பெயர்களையும் உடன்வைத்துச் சூத்திரஞ்செய்துள்ளதனால், 'ஏறு' என்பதுபோல 'ஏற்றை' என்பதும்தன்னையே ஒரு பெயரென்றும், ஏறு என்பது ஏற்றை என ஜகாரச்சாரியை பெற்றதன்றென்றும் அறிக. (சு)

கூஎ. பெயற்பான் மழைபெய்யாக் கண்ணு மூலைஞ்
செயற்பால செய்யா வீடினுங்—கயற்புலால்
புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப
வென்னை யுலகுய்யு மாறு.

(இ - ள்.) கயல் புலால்-மீன்களின் புலால்காற்றத்தை, புன்னை-புன்னை மலர்கள், கடியும்-நீக்கப்பெற்ற, பொரு-அலைமோதுகின்ற, கடல்-கடலின், தண்-குளிர்ச்சியான, சேர்ப்ப-கரையையுடையவனே!—மழை - மேகங்கள், பெய பால்-பெய்யப்படுக் தன்மையுடைய நீரை, பெய்யாக்கண்ணும் - (காலத்திற்) பெய்யா விட்டாலும், உலகம்-உயர்தோர், செயல் பால-செய்யத்தக்க உதவிகளை, செய்யாவிடினும்-(காலத்திற்) செய்யாவிட்டாலும், உலகு-உலகத்து உயிர்கள், உய்யும் ஆறு - பிழைக்கும் வழி, என்னை - யாதோ? (எ - று.)—சேர்ப்பு-தலை.

எல்லா வுயிர்களும் உய்வதற்கு மழைபொழிவது இன்றி யமையாத வாறுபோல, இல்லாதவரெல்லாம் உயிர்வாழ்வதற்கு உள்ளவர் ஈதல்இன்றி யமையாதென்பது கருத்து.

பெயற்பால்-அன்மொழித்தொகை. இனி, பெயற்பால்-பெய்தற்குரிய காலத்தில், மழை பெய்யாக்கண்ணும்-மழைபெய்யாவிட்டால் என்றும் உரைக்கலாம், பெய்யாக்கண்என்பது - கண்ணீற்று எதிர்மறைவினையெச்ச

மாயெஞருமொழி யென்றவது,ஈறுகெட்டஎதிர்மறைப் பெயரெச்சத்தொட ரென்றவது கொள்ளத்தக்கது. "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" ஆதலால் 'உலகம்' என்ற பொதுமொழிக்கு உயர்ந்தோர் எனச் சிறப்புப் பொருள்கொள்ளப்பட்டது. செயற்பால-செய்தற்கு உரியவையென்றதால் காம்வேற்றுமைத்தொகைநிலைத்தொடராகிய பெயர். கயல், புன்னை-இவை செய்தளிலத்துக் கருப்பொருள்கள். 'கயற்புலால் புன்னைகடியும்' என்றதனால், புன்னைப்பூவின் பரிமளமிகுதி விளக்கும். என்னை, ஐ-சாரியை.

'பெயற்பால மழைபெய்யாக் கண்ணும்' என்ற உபமானமும், 'உலகம் செயற்பால செய்யாவிடினும்' என்ற உபமேயமும் 'உலகுய்யுமாறு என்னை' என்ற ஒருதன்மையில் முடிக்கப்பட்டதனால், இது, தீபகாலங்காரமாம்;தமிழில் விளக்கணி எனப்படும்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்,டெனஞற்றுங்கொல்லோ வுலகு" என்ற திருக்குறளிலும் கைம்மாறுசருதாத மழைபொழியும் மேகம் கைம்மாறு கருதாது உயர்ந்தோர் செய்யும் உதவிக்கு உவமை கூறப்பட்ட வாறு உணர்க. (எ)

கூ அ. ஏற்றகை மாற்றுமை யென்னுனுந் தாம்வரையா
ராற்றுதார்க் கீவதா மாண்கட—னுற்றின்
மலிகடற் றண்சேர்ப்ப மாரிவார்க் கீதல்
பொலிகட னென்னும் பெயர்த்து.

(இ - ன்.) மலி கடல் தண் சேர்ப்ப-(வளங்கள்) மிகுந்தகடலின் குளிர்ந்த துறையையுடையவனே!—ஏற்ற கை-(யாசகன்)இரந்து ஏந்தியகையை, மாற்றுமை-மறக்காமல், என் ஆனும் - (தமக்கு உள்ளது) யாதொன்றையாயினும், தாம் வரையார்-தாம் (இன்னார்க்கு இன்னதைக்கொடுக்கலாமென்றும்,கொடுக்கலாகாதென்றும்) வரைந்துகொள்ளாதவராய், ஆற்றுதார்க்கு-பிரதியுபகாரஞ்செய்யமாட்டாத வறியவர்க்கு, ஈவது-கொடுப்பதுவே, ஆண்கடன் ஆம்-உத்தமபுருஷர்களுக்குக் கடமையாம்;ஆற்றின்-(தாம்)கொடுப்பதானால், மாரி ஈவார்க்கு-கைம்மாறு கொடுக்கவல்லவர்க்கு, ஈதல்-கொடுத்தல்,—பொலிகடன் என்னும் பெயர்த்து-கொழுத்த கடன்கொடுத்த லென்னும் பெயரையுடையது; (எ - று.)

இல்லையென்று மறுக்காமலும் உறவு நண்பு அயல் என்னும்வேறுபாடு நோக்காமலும் வறியோர்க்கு அவர் இரந்த பொருளைத் தமக்கு இயைந்த வளவு கொடுத்தல்வேண்டும்;அதுவே தானமென்றறிப்புப்பெறும்:அன்றி, பிரதியுபகாரஞ் செய்யவல்லவர்க்கு [வறியரல்லாதார்க்கு]க் கொடுப்பது, கடன்கொடுத்தல்போலாருமேயன்றித் தானமாகமாட்டாது என்பதாம்.இப் பாட்டின்கருத்தை "வறியார்க் கொன்றீவதேயிகை மற்றெல்லாம், குறியெதிர்ப்பை நீரதடைத்து"என்ற திருக்குறளிலும் காண்க. "ஆற்றுதார்க்கு அளிப்போர் அறவிலே பகர்வோர், ஆற்று மாக்களரும்பசி கூவோர், மேற்றே உலகின் மெய்க்கெறி வாழ்க்கை" என்ற மணிமேகலையடிகளிலும் காண்தக்

கன. வரையார் என்பதற்கு- தமக்கென்று ஒன்றையும் வரைந்து வைத்துக் கொள்ளாதவராய் என்னும் பொருள் கொள்ளலாம்.

ஏற்ற, ஏல் - பகுதி, கை என்பது - இற்கு இரண்டாம்வேற்றுமைத் தொகை யாதலால், "குறில்வழியத் தனியையுந் தொதுமுன் மெலி மிகலு மாம்" என்றவிதிப்படி அதன்முன் மெலிமிகாமல் விகாரத்தியல்பாயிற்று. மாற்றுமை-மையீற்று எதிர்மறைவினையெச்சம். மாண்கடன் என்றவடித்து, சிறந்தகடமை யெனினுமாம்.கடலுக்கு வளங்கள்-"ஓர்க்கோலை சங்கம்ஞெரீர் பவளம் வெண்முத்தம், நீர்ப்படு மூப்பிலை டைத்து" என்பன. (அ)

கூகூ. இறப்பச் சிறிதென்னு தில்லென்னு தென்று
மறப்பயன் யார்மாட்டுஞ் செய்க—முறைப்புதவி
னீயம் புகூஉந் தவரி கடினைறுபோற்
பையந் நிறைத்து விடும்.

(இ - ன்.) இறப்ப சிறது என்னுது-(நமக்கு உள்ளபொருள்)மிகவுஞ்சிறி யது என்று எண்ணுமலும், இல் என்னுது - இல்லையென்று சொல்லாமலும், என்றும் - எப்பொழுதும், அறம் பயன் - தானதருமமாகிய பயனை, யார் மாட்டும் - யாவரிடத்தும், செய்க - செய்யக்கடவர்; (அங்ஙனஞ்செய்தால், சிறிது சிறிதாகச் செய்யப்பட்ட அசெயல்), முறை-ஙிரமமாக, புதவின்-வா யில் தோறும், ஐயம் புகூஉம்-பிச்சைக்குச செல்கின்ற,தவரி-சன்யாசியினது, கடினைறுபோல் - பிச்சைப் பாத்திரத்தைப்போல, பைய - மெல்லமெல்ல, நிறைத்துவிடும் - (அறப்பயனைப்) பூரணமாக்கும்; (எ - று.)

சிறிது கொடித்தலிற் பயனென் னென்ற ஆலோசித்து, கொடித்தலைத் தவிரலாகாது; இயன்றவளவும் இல்லையென்னலும் யார்க்கும்எப்பொழுதுங் கொடுத்தல் வேண்டும்; அங்ஙனங் கொடுக்கப்பட்ட சிறுகொடைகளின் தொகுதியால் புண்ணியப்பயன் பூர்த்திபெறும்; வீடுதோறும் சிறிது சிறி தாக இடப்பட்ட பிச்சைகளால் பிச்சைக்காரனதுபாத்திரம் நிறைந்துவிட வில்லையா? என்பதாம். உவமையணி.

புதவின், இன் - ஏழனுருபு. தவரி - தபஸ்வீ என்னும் வடசொல்லின் திரிபு; தவஞ்செய்பவ னென்று பொருள். சன்யாசிகள் அந்நபிக்ஷை வாங்கி புண்டே சிவிக்கவேண்டுமென்பது நூல்தணிபாதலால், தவரியென்பதற்கு-சன்யாசியென்று உரைக்கப்பட்டது. பைய-குறிப்புவினையெச்சம். புகும் என் பது,செய்யுளோசைநிறைக்க நெடிலாகி அளபெடுத்தது; மூன்றுமாத்திரை; இது இன்னிசையளபெடை யன்று. (கூ)

கoo. கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்ப
ரிடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்ப
ரடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்.

(இ - ள்.) கடிப்பு இடு-குறுந்தடியால் அடிக்கப்படுகின்ற, கண் - கண்ணினையுடைய, மூசம்-பேரிகையின் ஒலியை, காதத்தோர் - ஒருகாதவூரத்துளிருப்பவர், கேட்பர்—; இடித்தி முழங்கியது-(மேகம்) இடியிடித்துக்கர்ச்சித்த ஓசையை, ஓர் யோசனையோர் கேட்பர்-ஒருயோசனை தூரத்துளிருப்பவர்கேட்பர்; சான்றோர் கொடித்தார் எனப்படும் சொல் - பெரியோரால் (இவர்யாசகர்க்குச்) கொடுத்தா ரெனப்பட்ட சொல்லையோ வென்றால், அடுக்கிய மூடீவலகும்-(ஒன்றன்மேல்ஒன்று) அடுக்கு அடுக்காக அமைந்துள்ள மூன்று உலகத்தவரும், கேட்கும் - கேட்பர்; (எ - று.)

முரசொலி காதவூரத்தளவும் கேட்கப்படும்; இடிமுழக்கம் யோசனை தூரத்தளவும் கேட்கப்படும்; இவர் கொடுத்தா ரென்று பெரியோர் சொல்லுஞ் சொல் எல்லாவுலகங்களிலுங் கேட்கப்படும் என இங்ஙனம் மேன்மேலுயர்க்கியணிபடக் கூறியதனால், கொடுப்பவரதுபுகழ் எங்கும் பரவுமென்பதாம்.

கடிப்பு-மூசடிக்குங் குறுந்தடி;, "வாய்ப்பறையாகவும், நாக்கடிப்பாகவும்" என்றார் பிறரும். கண்-வாத்தியத்தில் அடிக்கப்படும் இடம். மூசம், யோஜநா என்ற வடசொற்கள் திரிந்தன. காதம் - ஏழரைகாழியைகையிதி. காதம் யோசனையென்பன ஒரு பொருளன வென்பா ருளராயினும், இங்கே, காதத்தினும்யோசனை பெரியதென்று கொள்ளுதலே பொருத்தம்: நான்குகாதத்தை யோஜனையென்பது, ஜைநநூல்வழக்கு; சீவகசிந்தாமணியில் "ஒசனைகமழும்" என்றதற்கு நச்சினார்க்கினியர் 'நாற்காதவெல்லை நாறும்' என உரைத்தது இங்கு உணரத்தக்கது. முழங்கியது-வினையாலணையும் பெயர். மூவுலகு-மேல் நடு கீழ் என்பன; சுவர்க்க மத்திய பாதாளங்கள், ஏதேற்றம். சான்றோர்-மூன்றும்வேற்றுமைத் தொகை; சான்றோரால் எனப்படும் என இயையும்.

இச்செய்யுள், "யோஜநம் பேரிஸப்தஸ்ச மேகஸப்தஸ்ச த்வாதஸ, தாத்ருஸ்தாகாஸப்தஸ்ச த்ரைலோக்யம்ஸராசரம்" என்னுஸ்லடமொழிச் சுலோகத்தை அடியொற்றியது. (கo)

---

## கக ஆம் அதிகாரம்.—பழவினை

அஃதாவது-முற்பிறப்புக்களிற் செய்யப்பட்டதனாற் பழையனவாகிய கல்வினை தீவினைகள் தம்மைச்செய்த உயிர்க்குத் தம்பயன்களாகிய இன்பதுன்பங்களைப் பிற்பிறப்புக்களில் தவறாமல் தருமென்பதைப்பற்றிக் கூறுவது. பழவினை-ஜங்மாக்தரகர்மம். இது 'ஊழ்' என்றும் சொல்லப்படும். கல்வினை தீவினை - புண்ணிய பாபங்கள். இக்கருமத்தான் - ஸ்தூசீதம், ப்ராரப்தம், ஆகாம்யம் என மூன்றவகைப்படும்; அவற்றுள், ஸ்தூசீதம் - பிறப்பு ஆதியாய் வருதலின் உயிரால் அளவில்லாமற் செய்து சேர்க்கப்பட்ட வினைகளின்பயன்கள்;ப்ராரப்தம்-அவற்றுள் இற்ந்த உடம்புனால் அனுபவித்தன வொழியப் பிறக்த உடம்புனால் அனுபவித்தற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன: ஆகாம்யம் - அவையன்றிப் பின்னும் அனுபவிக்கக் கடவன்

வாய்க் கிடந்தன; இலவையெல்லாம் அடக்குதற்கு, பொதிப்பட, 'பழவினை' என்றார். பழவினை பண்புத்தொகை; பழமையாகிய வினையெனவிரியும். தானம் முதலிய நல்வினைகளே முற்பிறப்புக்களிற் செய்தவர்கள் பிற்பிறப்புக்களிற் செல்வம் முதலியவற்றுற் பலராண்மைகளே அனுபவிப்பரென்பதையும் அவற்றைச்செய்யாதவர் பரிபிணி முதலியவற்றுற் பலதீமைகளே அனுபவிப்பரென்பதையும் அறிவித்தற்கு, இவ்வதிகாரம், ஈகையென்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது.

கo௪. பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதரக் தாய்காடிக் கோடலேத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
திழவினை நாடிக் கொளற்கு.

(இ - ன்.) பல் ஆவுள்-பலபசுக்களின் நடுவில், உய்த்துவிடினும் - தான் செலுத்திவிடப்பட்டாலும், குழ கன்று-இளங்கன்றானது, தாய் நாடிக்கோடலே - (தனது) தாயைத் தானே தேடியடைதலில், வல்லதுமும்-வல்லமை புடையதாம்; தொல்லை பழவினையும்-மிகவும் பழமையாகிய கருமமும், தன் செய்தகிழவனை நாடிக் கொளற்கு-(பலஜீவகோடிகளுள்ளும்) தன்னைசெய்த உரிமையுடையவனைத் தேடியடைவதில், அன்ன தகைத்தே-அப்படிப்பட்டதன்மையை [வல்லமையை] புடையதேயாம்; (எ - று.)

மிகச் சிறியதாயிருப்பினும் கன்று தான் பசுமந்தையிற்நடுவில் விடப்பட்டால் தன்தாயையே நாடியடைவதுபோல, பழமையாகவருகிற வினையும் ஜீவகோடிகளுள் தனக்கு உரியவனையே நாடியடையுமென்பதாம்; உவமையாணி. ('யதா தேநுஸஹஸ்ரேஷு வத்ஸோ விந்ததி மாதரம்-எவம்பூர்வக்ருதம் கர்ம கர்த்தார மநுகச்சதி'' என்ற மஹாபாரதத்து ஆநுசாஸநிக பர்வத்திரு சுலோகத்தை அடியொற்றியது, இசசெய்யுள்.

பல்லா - பண்புத்தொகை; பல் + ஆ; பலவென்பது, தன்முன் பிறவர அகரக்கெட்டது; [ரன்-உயிர்-உo.] 'பல்லா வொளித்து விடினும்' என்கிற பாடத்துக்கு-(தாய்ப்பசுவைப்) பலபசுக்கூட்டத்திலிடையே மறைத்துவிட்டாலும் மென்று பொருள். விடின்என்பது இவ்வுரையிற்செய்வினைப் பொருளையும், முன்னுரையிற் செயப்பாட்டு வினைப்பொருளையும்உணர்த்திற்று, செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும்போது, அகரச்சாரியையும்படி விகுதியும் செய்யுள்விகாரத்தால் தொக்குநின்றன வென்று அறிக. உம் - சிறப்புமை. குழ - இளமையுணர்த்தும் உரிச்சொல். வல்லது-பண்படியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று; அ-சாரியை, து - விகுதி. ஆம்-அசை; ஆகுமெனப் பொருள்கொண்டால், 'வல்லது'-பெயராம். தாய்-இருதிணைப் பொதுப்பெயர்.

கோடலே, கொளற்கு -: இரண்டனுருபும் நான்கனுருபும் ஏழாம்வேற்றுமை விடப்பொருளில் வந்தமையால், உருபுமயக்கம். தொல்லை - பண்புப் பெயர்; தொல்-பகுதி; ஐ-விகுதி; (இப்பகுதி 'மை' விகுதிபெற்றுத் தொன்மையெனவும், 'மு' விகுதிபெற்றுத் தொன்மு எனவும்வரும்) தொல்லை,பழஒருபொருட்பன்மொழி; வினையினது அாதியாய் வருர்தன்மையை வற்பு

றத்திதற்பொருட்டே,இவ்வாறுகூறினு ரென்க: இனி,தொல்லியென்பதைப் பண்பாகுபெயராகக்கொண்டு,முற்பிறப்புக்களிற்செய்தலாற் பழமையாகிய வினை யென்னவுமாம். உம் - இறந்தது தழுவிய எச்சம். அன்ன - சுட்டியாப்பிறந்த குறிப்புப்பெயரெச்சம்; அ - பகுதி, அ - லிகுதி, ன் - சாரியை மற்றொரு ன் - சந்தி. தன் + செய்த = தற்செய்த; னகரம் நகரமாயிற்று. கிழவன் - உரியவ னென்னும் பொருளில், கிழமை. ஈறுபோன கிழ-பகுதி பெண்பால் - கிழத்தி. (வயது முதிர்ந்தவனென்னும் பொருளில், கிழம் - பகுதி; பெண்பால் - கிழவி.) (கூ)

கூஉ. உருவு மிளமையு மொண்பொருளு மூட்கு
மொருவழி நில்லாமை கண்டு—மொருவழி
யொன்றேயு மில்லாதான் வாழ்க்கை யுடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து.

(இ - ள்.) உருவும் - அழகும், இளமையும்-யௌவனமும், ஒள் பொருளும் - மேலான செல்வமும், உட்கும்-(பலரும்) அஞ்சத்தக்க மதிப்பும், ஒருவழி - ஒரேதன்மையாக, நில்லாமை - (ஒருபிறப்பில்) நிலைபெற்றிராமையை, கண்டும்-பார்த்திருந்தும், ஒரு வழி-யாதாயினும் ஒருவழியாவ, ஒன்றேயும் ஒருநிதி நல்வினையையாயினும், இல்லாதான் - செய்துவைத்தலில்லாதவனது, வாழ்க்கை-உயிர்வாழ்தலானது, உடம்பு இட்டு நின்று வீழ்ந்த தக்கது உடைத்து-உடம்பை(சு லெலாலம்) பெற்று நின்று (அதனுலாகிய பயனைக் கொள்ளாமல்) விழுந் தன்மையை யுடையது; (எ - று.)

உருவம் முதலியவற்றின் நிலையின்மையைக் கண்டும் நிலையான நல்வினையைச் செய்யாதவனது பிறப்பு வீணென்பது, கருத்து. எனவே, இங்ஙனம் நல்வினைசெய்யவொட்டாது ஒருவனது வாணாள் வீணாக்குவது பழவினையின் செயலே யென்றதாயிற்று. ஒரு வழி - ஒருவனிடத்தும் எனவும், ஒரு வழி ஒன்றேயும் - ஒப்பற்ற உயர்கதியைத் தரத்தக்க ஒருநற்செய்கையையும் எனவும் உரைப்பாரு முளர்.

உட்கு - கருவிப்பொருள்விகுதி புணர்த்துகெட்ட பெயர்; மூதனிலைத் தொழிலாகுபெய ரென்னவுமாம். உட்குதல்-அஞ்சுதல். நின்று-அசைபுமாம். வீழும் என்னும் எதிர்காலப்பெயரெச்சம், ஈற்றயிர்கெட்டு 'வீழ்ம்' என் நின்றது; "செய்யுமெனெசவலிற்றுயிர்கெடுமே சேறலும்" என்னுஞ் சூத்திரத் தின் உரையிற்கோடலால் இதனை அமைக்க. தக்கது என்பது - தகை தகுதி என்பன போல, குணத்தையுணர்த்தும் தொழிற்பெயர். (உ)

கூஎ. வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
யளந்தன போக மவரவ ராற்றுரன்
விளங்காய் திரட்டினு நில்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.

(இ - ள்.) வளம் பட வேண்டாதார் - (செல்வம்முதலியவற்றுற்) நிறைப்பப் பெற விரும்பாதவர், யார்-(உலகத்தில்)யாவர் உளர்? யாரும் இல்லை

(ஆயினும்), போகம்-(அவரவரது) சுகானுபவங்கள், அவர் அவர் ஆற்றுன் அளந்தன-அவரவரது ஊழ்வினையால் (முன்னமே) அளவு செய்யப்பட்டுள் ளன; விளகாய் நிரட்டினர் இல்லே-விளங்காயைத் நிரண்ட உருவினதாகச செய்துவைத்தவர் இல்லே; கள கனியை கார் என செய்தாரும் இல்-கனாப் பழத்தைக் காய உருவினதாகச் செய்து வைத்தவரும் இல்லே; (எ - று.)

வினங்காய் முதலியன தம்தம் இயற்கையால் அமைந்திருப்பதுபோல அவரவர்சுகமும் அவரவரது புண்ணியத்திற்குத் தக்கவாறுக அமைந்த தென்பதாம்; எடுத்துக்காட்டுவமையணி.

"அளந்தன போகமெல்லா மவரவர்க் கற்றைநாளே, யளந்தன வாழு நாளும்" என்ற சிந்தாமணி இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. 'யார்; யாரு மில்லே' என வினவும் விடையுமாக இருமுறை கூறியது, வற்புறுத்தற்கு; "உண்டோ வுணர்ச்சி மற் றில்லாரும்" என்றற்போல. வளம்பட - தமக் குச் செல்வமுண்டாகுமாறு என்றுமாம். யார்யாரும் என எடுத்து-எப்படிப் பட்டவரும் என்றும் உரைப்பர்.

அளந்தன - செய்பாட்டுவினைப்பொருளில்வந்த செய்வினே. விளங் காய், களங்கனி-மரப்பெயர்முன்னர் இனமென்மை தோன்றிற்று. போகம்-வடசொல்.

இது - இருவிகற்ப இன்னிசைவெண்பா. (கூ)

கஅ. உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா
பெறற்பா லனையவு மன்னவா மாரி
வறப்பிற் றருவாரு மில்லே யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில்.

(இ - ன்.) உறல் பால - (ஊழ்வினையால்) நேரிடத்தக்க தின்பங்களே, நீக்கல்-விலக்குவது, உறுவர்க்கும் - ஆற்றல் மிக்க முனிவர்கட்கும், ஆகா - கூடாததாம்; பெறல் பால் அனையவும்-பெறத்தக்க தன்மையையுடைய அவ வின்பங்களேப் பெறுதல்களும், அன்ன ஆம் - அப்படிப்பட்டனவேயாகும் [முனிவர்களாலுங் தாமுடியாதனவாம்]; (எவைபோலவெனில்),— மாரி வறப்பின் - மழைபெய்யாதாயின, தருவாரும்-(அதனைப்) பெய்து தருவிக்க வல்லவரும், இல்லே—; சிறப்பின் - (அம்மழை) மிகுதியாகப்பெய்தால், அதனே—, தணிப்பாரும் - குறையசெய்பவரும், இல் - இல்லே; (எ - று.)

மழை பெய்யாமல் தவிர்த்தால் அதனைப் பெய்வித்தல் எவர்க்கும் முடி யாதவாறுபோல, புண்ணியப்பயன் வாராதவிடத்து அதனைக் கொடுப்பவ ரும் இல்லே; மழைமிகுதியாகப் பெய்யுமிடத்து அதனைத் தடுத்தல் முடியாத வாறுபோல, நீவினைப்பயன் மிகுதியாக நேருமிடத்து அதனைத் தவிர்த் தலும் முடியா தென்பதாம்; எல்லாம் பழவினையின்படியே நடக்கு மென் பது, கருத்து.

எடுத்துக்காட்டுவமையணி. மழை வேண்டியவளவாகப் பெய்வதுஉல கத்திற்கு நன்மைபயத்தல்பற்றி அதற்கு நல்வினையும், மிகுதியாகப்பெய் வது தீமைவினேத்தல்பற்றி அதற்குத் தீவினையும் உவமையாதல் ஏற்கும்.

மாரிவறப்பிற்றருவாருமில்லை, பெறற்பாலனையவுமன்னவாம்; அத னைச்சிறப்பிற்றணிப்பாரு மில்லை, (அதுபோல) உறற்பாலநீக்கலுறுவார்க்கு மாகா என மாறிசென்றியைதலால், இச்செய்யுள் - எதிர்நிரனிறைப்போ நள்கோள்.

இனி, உறற்பால-சேரிடக்கூடிய துன்பங்கள், நீக்கல் ஆகா-நீக்குதற்கு முடியாதனவாம் என்றும், பெறற்பால் அனையவும்-பெறக்கூடிய கல்வினைக ளும், அன்ன ஆம் - அவ்வாறே நீக்கமுடியாதனவாம் என்று உரைப்பாரு முளர். இவ்வுரைக்கு, முறைநிரனிறையாகவே இயைக்கலாம்.

இதவும், அடுத்தகவியும் - ஒருவிதப்பு ஒன்னிைவேண்டா. இவ்வதி காரத்து கூ, கo - ஆஞ் செய்யுள்களும் அத. (ச)

கo டு. தினைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்
கினைப்பக் கிடந்த தெவனுண்டா மேலை
வினைப்பய னல்லாற் பிற.

(இ - ள்.) பனை துணையார்-பனையளவு பெரியவர்கள், வைகலும்-நான் தோறும், பாடு அழிந்த-(தமது) பெருமை கெட்டு, தினை துணையர் ஆகி - தினையளவு சிறியவர்களாய், தம் தேசு உள் அடக்கி-தமது ஒளியை உள்ளே அடக்கிக்கொண்டு, வாழ்வர்-உயிர்வாழ்வார்கள், (இதற்குக்காரணம்), நினை ப்ப-ஆலோசித்தால், மேலை வினை பயன் அல்லால்-முற்பிறப்பிற்செய்த தீ வினையின் பயனே யல்லாமல், பிற - வேறுக, கிடந்தது - பொருந்தியது, எவன் உண்டி ஆம்-யாது உள்ளதாம் [எதுவுமில்லை யென்றபடி]; (எ - று)

செல்வம் அதிகாரம் கல்வி முதலியவற்றால் உய்ர்ந்தவர்கள் பலர் விரை வீலே அவ்வுயர்சியொழிந்து தாழவைபடைந்துஒளிருந்நி இரத்தல்முதலி யன செய்து வாழ்தற்குக் காரணம் பழவினையே யென்பது, கருத்து.

தினை, பனை என்பன-சிறுமை பெருமைகட்கும், தாழ்வுஉயர்வுகட்கும் எடுத்துக்காட்டப்படும் சில அளவுகள்; "தினைத்தினை கன்றி செயிலும் பனைத்தினையாக், கொன்வர் பயன் தெரிவார்" என்ற திருக்குறளினுய காண்க. பனையென்பது, மரப்பெயராய்ப் பெருமைகுறிக்கும். தேசு - தேஜஸ் என்ற வடசொல்லின் சிதைவு. தினைத்தினையர், பனைத்தினையர்என்பன- இங்குத் தாழ் வடைந்தவர்கள், கௌரவம்பெற்றவர்கள் என்ற பொருளைத் தந்தன. வைகலும் - நாளடைவிலே யென்றுமாம். (கு)

கo சு. பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதிரேற்—கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளா தாங்கு.

(இ - ள்.) பல்-பலவகைப்பட்ட, ஆன்ற-சிறந்த, கேள்வி - நூற்கேள்வி களினுல், பயன் - (உயிர்வாழ்க்கையின்) பயனை, உணர்வார்-அறிபவராகிய

கற்றோர்கள், வீயவும்-(பலர் விரைவிலே) இறக்கவும், கல்லாதார் - படியாத வர்கள், வாழ்வது - (பலகாலம்) உயிர்வாழ்வதைப்பற்றி, அறிநிர் எல் - (காரணமென்னவென்று) ஆலோசித்தறிவீராஞல்,—கல்லாதார் - படியாத வர்கள், சேதனம் என்னும் அசேதன அகத்து இன்மையால்-அறிவென்கிற அர்த்தச்சாரத்தை (த் தமது) உள்ளே உடைத்தாகாமையால், (அவர்களே) கூற்ற-யமன், கோது என்று - அசாரமென்று கினைத்து, கொள்ளாது-எடுத் துக்கொள்ளான்; (எ - று.)

சாரத்தை விரைவிலே கிரகித்துக்கொண்டு அசாரத்தை விட்டிடுதல் எவர்க்கும் இயல்பாதலால், மமனும் கல்வியுடையோரை இளமையிலேயே எடுத்துக்கொண்டு அஃதில்லாரை விட்டிடுகின்ரு னென்பது, கருத்து.

படித்தவர் விரைவிலிறத்தலும் படியாதவர் நெடுநாளிருத்தலு மாகிய மாறுபாட்டிற்கும், சிலர் அறிவுடையராயிருத்தலும் சிலர் அறிவிலாராயிருத் தலுமாகிய வேறுபாட்டிற்கும் காரணம் சன்மாந்தர கருமமேயெனவிப்பாட லுக்கு இவ்வதிகாரத்தோடு இயைபு காண்க.

"பாபீ சொயுஸ் ஸுக்ருதீ கதாயுஃ" என்றபடி உலகத்திற் பாவிகள் நெடு நாளிருத்தற்கும், புண்ணியவான்கள் விரைவி லிறத்தற்கும் காரணங கற்பித்துக்கூறியது-ஏதுநூற்றுறிப்பேற்றவணி; வடநூலார் நோற்றோ ரஷ்டாலங்காரம் என்பர்.

சேறு-ஸாரம் என்னும் வடமொழியின் சிதைவு; "சேறு படுமலர் சிந்த வீசுர்தே" எனசீர்ந்தாமணியிலும், ஸ்ரீஸாரஸ்வோத்திரத்திருசுசேறை யென வழங்கு பிடத்துங் காண்க. தேவர்களே இருநிலையாகவுஞ் சொல்ல லா மாதலால், 'கூற்றுக் கொள்ளாது' என அஃறிணையாகக் கூறப்பட்டது. ஆம் - அசை. (கூ)

கூ0எ. இடும்பைகூர் நெஞ்சத்தா ரெல்லாருங் காண
நெடுங்கடை நின்றுமுல்வ தெல்லா மடம்பம்பூ
வன்னங் கிழிக்கு மலைகடற் றண்சேர்ப்ப
முன்னே வினையாய் விடும்.

(இ - ன்.) அடம்பம் பூ - அடம்பங்கொடியின் மலர்களே, அன்னம் - அன்னப்பறவைகள், கிழிக்கும் - (மூக்கினுற் கொத்திக்) கிழித்தலினையுடை தற் கிடமான, அலை கடல் தண் சேர்ப்ப-அலைகின்ற கடலினது குளிர்ச்த தறையையுடைய பாண்டியனே!—(உலகத்திற் சிலர்), எல்லாரும் காண - யாவரும் (தம்மைப்) பார்க்கும்படி, இடும்பை கூர் நெஞ்சத்தார்-வறுமைத் தன்பம்மிக்க மனமுடையவர்களாய், நெடுங் கடை நின்று-பெரிய பலவீட்டு வாயில்களிற் போய் நின்று, உழல்வது எல்லாம்-(பிசைசக்காக) வருந்துஞ் செய்கையெல்லாம், முன்னே வினை ஆய்விடும்-முற்பிறப்பிற்செய்த தீவினை யின் பயனேயாம்; (எ - று.)

கீழ் இவ்வதிகாரத்தின் இ-ஆம் கவியில் உயர்ந்தவர் தாழ்வுஅடைதற்கு எது முன்னேவினையென்று கூறியதுபோல, இங்கு, இயற்கையிலேயே வறி

ஞாயிருத்தலும் மூன்னேவினையிலுலேயே யென்று கூறியவாறும்; "அகத்தாரே வாழ்வாரென் றண்ணுத்துகோக்கிப், 'புகத்தாம்பெருஅர் புறங்கடை பற்றி, பிகத்தாம்வருக்கியிருப்பரே மேலத், தவத்தாற் றவஞ்செய்மாதார்" என்றது, இங்குக் காணத்தக்கது.

இனி, முதலடிக்கு - (தமது தாழ்ந்த நிலைமையை சோக்கி) யாவரும் மிக இரக்கம் பொருந்திய மனத்தையுடையவர்களாய்த் தம்மைக் காணும் படி யென்றும் உரைக்கலாம். நெடுங்கடை-வெகுகாலம் என்று உரைப்பாரு முளர். மூன்றுமடி-அச்சாட்டின் நீர்வனத்தையும், செய்தனிலச்சிறப்பையும் விளக்கிற்று.

கூர்-உரிச்சொல். உழல்வதெல்லாம் - ஒருமைப்பன்மையக்கம். அடம்பு-ஓர்கொடியின் பெயர்; அம் - சாரியை. ஆய்லிடம், லிடை - தணிவுப்பொருளே உணர்த்திற்று. அன்னம்-ஹம்ஸம் என்னும் வடமொழி. தனிச்சொல்லும் மூன்றும் அடியும்-ஆசிரிய முன்னிலை. அடுத்த செய்யுளிலும் இப்படியே.

கூ அ. அறியாரு மல்ல றறிவ தறிந்தும்
பழியோடு பட்டவை செய்தல்—வளியோடி
நெய்த னறவுயிர்க்கு நீள்கடற் றண்சேர்ப்ப
செய்த வினையான் வரும்.

(இ - ன்.) வளி ஓடி - காற்று வீசுதலினல், நெய்தல்-நெய்தற்பூக்கள், நறவு உயிர்க்கும்-(அசைச்து) தேனைச்சொரிகின்ற, நீள் கடல் தண்சேர்ப்ப-பெரிய கடலினது குளிர்ந்த கரையையுடைய பாண்டியனே!—(நிலம்), அறியாரும் அல்லர்-அறியாதவரு மல்லர்: அறிவது அறிந்தும்-அறிதற்கு உரிய வற்றை அறிந்திருந்தும், பழியோடு பட்டவை செய்தல்-உலகநிந்தையோடு பொருந்திய நீசதொழில்களைச செய்தல், செய்த வினையான் வரும் - (மூற்பிறப்பில்) செய்த தீவினையினல் உண்டாகும்; (எ - று.)

அறிந்தும் பழிப்பனசெய்தல் பழவினைப்பயனே யென்பது கருத்து. "தவமும் தவமுடையார்க்காகும்" என்றபடி நல்வினைக்கு நல்வினையேகாரணமாதல்போல, தீவினைக்குத் தீவினையே காரணமாம் என்றவாறு.

ஓடி=ஓட: எசசத்திரிபு; இனி; வளி ஓடி நெய்தல் நறவு உயிர்க்கும் - காற்றுத்தான் விரைந்தசென்று நெய்தல்மலரினது வாசனையை வீசுகின்ற எனவுமாம். நெய்தல்-நீர்ப்பூங்கொடிகளுள்-ஒன்று. அறிவது-காதியொருமை. நறவு-நரு என்பதன் விகாரம்.

'வழியோடி' என்று பாடமோதி, (காற்றின்) வழியே போய் எய்து உரைப்பாரு மூளர். 'நீள்கழித்தண்சேர்ப்ப' என்பதும் பாடம்.

முதலடி-முற்றுமோனை; அதாவது-ஓரடியின் சீர்களிலெல்லாம்மோனை வருவது. இச்செய்யுளின் முன்னிரண்டடிகளில் உயிரோதுகை; அதாவது - இரண்டாமெழுத்து ஒன்றுதாயினும் இரண்டாமெழுத்தின் மேலேறியவுயிர் ஒன்றி நிற்பது. (அ)

கூ0கூ. ஈண்டுநீர் வையத்து ளெல்லாரு மெத்தணையும்
வேண்டாரம்ற் றீயவிழைபய னல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுதல ரிது.

(இ - ன்.) ஈண்டு நீர் வையத்துள்-நெருங்கிய கடலாற் சூழப்பட்ட நில வுலகத்தில், எல்லாரும்-யாவரும், எத்தணையும்-மிகச்சிறிதும், நீய - கொடி யனவாகிய தீன்பங்களே, வேண்டார் - (பெற) விரும்பார்; விழை பயன் - (யாவரும்) விரும்பும் பயன், நல்லவை-நல்லனவாகிய இன்பங்களே யாகும்; (ஒருவர்), வேண்டினும் - விரும்பினாலும், வேண்டாவிடினும்-விரும்பாவிட் டாலும், உறற்பால-(பழவினையால்) வந்து அடைதற்கு உரியனவாகிய இன் பங்களும் துன்பங்களும், தீண்டா விடுதல் - (அவரை) அடையாமல் விடு வது, அரிது - இல்லை; (எ - று.)

காம் எப்போதும் ஈண்மையொன்றனையே காடினும் நல்வினைப்பய னும் தீவினைப்பயனும் பழவினைக்குத் தக்கவாறு அவ்வக்காலத்து வந்தே தீரு மென்பதாம்.

விழைபயன் அல்லவை எனப் பிரித்து-விரும்பப்படும் பயனல்லாதன வாகிய தீயனவற்றை யென்றும் உரைக்கலாம். நீர் - கடலுக்கு ஆகுபெயர். இனி, ஈண்டு நீர் - வினைத்தொகை யன்மொழியாகவுமாம். மன் - அசை. "தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால், மனக்கவலை மாற் றலரிது" என்ற திருக்குறளிற்போல, இங்கு அருமை இன்மையின்மேல்நின் றது; அவ்குப் பரிமேலழகர் இக்காலடியையே மேற்கோள் காட்டினர்.

இச்செய்யுளின் பிற்பாதி, பழமொழியிலும் "கழுமலத்தில்யாத்த" என்ற செய்யுளின் பிற்பாதியாகப் பயின்றுள்ளது.

'எட்டினையும்' என்றும், 'விழைப்பயனல்லது' என்றும் பாடம். (க)

கூகூ0. சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
வுறுகாலத் தூற்றுகா வாமிடத்தே யாருஞ்
சிறுகாலைப் பட்ட பொறியு மதனு
னீறுகாலத் தெண்ணி பரிவு.

(இ - ன்.) சிறுகாலை-உயிர்உடம்பை யடையுங்காலத்தில்தானே, பட்ட-(அனுபவிக்கவேண்டுமென்று) நியமிக்கப்பட்ட, பொறியும் - ஊழ்வினைக ளெல்லாம்,—சிறுகா-குறையுமாட்டா; பெருகா-வளருமாட்டா; முறைபிறழ் ந்துவாரா-(முற்பிறப்பிற்செய்யப்பட்ட) முறைதவறி முன்பின்னாக வருமாட் டா; உறு காலத்து ஊற்று ஆகா - (துன்பம்) வருங்காலத்து ஊன்றுகோல் போல் உதவி அத்துன்பத்தை ஒழிக்கமாட்டா; ஆம் இடத்தே ஆகும் - வர வேண்டியகாலத்திலேயே வரும்; அதனால்-ஆதலால், இறு காலத்து - (தீவி னைப்பயனுற்) கெடுதியடையுங்காலத்தில், பரிவு-இரங்குவது, என்னை-என்.

அனுபவித்தே தீரவேண்டுவதாகிய வினையின்பயனைக் குறித்துத் தக் திப்பது வீண் என்பது, கருத்து.

"வருந்தி யழைத்தாலும் வாராத, வாரா,பொருத்துவன போமினென் றுற் போகா—இருத்தேய்வி, நெஞ்சம்புண்ணுை நெடுந்தூரந் தாரினேத்து, தஞ்சுவதே மாந்தர் தொழில்" என ஔவையார் கூறியதும் காண்க."சாதலும் பிறத்தல்தானும் தம்வினைப் பயத்தினுஞ்சும், ஆதலு மழிவு மெல்லாம் அவை பொருட்டியல்பு கண்டாய், சோதலும் பரிவுமெல்லாம் நண்ணுணர் வின்மை யன்றே" என்ற சீந்தாமணியும் இங்கு அறியத்தக்கது. (கo)

## கஉ - ஆம் அதிகாரம்—மெய்ம்மை.

அஃதாவது-உண்மையை யுணர்த்துவது; இங்கே, உண்மையென்றது-அந்தப்பொருள்களின் இயற்கையான தன்மை. இது ஊழ்வினையால் அமைவதாதலின், பழவினையின்பின் வைக்கப்பட்டது.

**ககக.** இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை—நசையழுங்க
நின்றேடிப் பொய்த்த னிறைதொடீஇ செய்ர்ன்றி
கொன்றுரிற் குற்ற முடைத்து.

(இ - ன்.) நிரை தொடீஇ-ஒழுங்காகிய வளையல்களே யுடையவளே!—இசையாஒருபொருள்இல்என்றல்-(தம்மாற்கொடுப்பதற்குக்) கூடாததொரு பொருளே (யாசகர்க்கு)இல்லையென்று(இறந்தஅப்பொழுதே) சொல்லுதல், யார்க்கும் வசை அன்று - எவர்க்கும் பழிப்பாகாது: வையத்து இயற்கை - உலகத்தாரின் இயல்பாம், நின்று - (கொடுப்பனென்பது தோன்ற) நின்று, ஓடி-கெடுங்காலங்கழித்தசென்று, (பின்பு), நசை அழுங்க-(இரப்பவரது) ஆசை கெடும்படி, பொயத்தல்-(இல்லையென்று சொல்லிப்) பொய்யனுதல், செய்ந்றி கொன்றுரின் குற்றம் உடைத்து-(தமக்குப் பிறர்)செய்தஉபகாரத்தை மறந்தவரது குற்றத்தினும் (அதிகமான) குற்றத்தையுடையது

உலகத்தில் யோகியர்கள் தம்மாற்கொடுத்தற்கு இசையாதபொருளே ஒருவர் யாசித்தால் அப்பொழுதே இல்லையென்றசொல்லி அனுப்பிவிடுவர்; அது குற்றமன்று; அயோகியர்களோ, யாசகர்க்குத்தாங்கள்கொடுப்பதாக நெடுங்காலம் ஆசைகாட்டிக் கடைசியில்இல்லையென்று பொய்யராவர்; அது எல்லாக்குற்றங்களினும் பெரியதொரு குற்றமா மென்பது, கருத்து. இதனால்,யோகியை அயோகியர்களதுஇயற்கைசொல்லப்பட்டது. "க்ருதக்நே காஸ்நி நிஷ்க்ருதி:" என்னும் வடனூன்மேற்கோளாலும், "எர்ன்றிகொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்றிகொன்ற மகற்கு" என்னுர் திருக்குறளாலும்,செய்ந்றிமறத்தல் பிராயச்சித்தமில்லாததொரு பெரும் பாவமாதலை உணர்க.

இனி, நின்று-(யாசகன் நெடுங்காலங்காத்தி) நின்று, நசை அழுங்க - (பின்) ஆசை கெடும்படி, ஓடி பொய்த்தல்-(கொடுப்பதற்கு இசைந்த பொருளைக்கொடாமல்) ஓடஒளித்தல் எனவும்பொருள்கொள்ளலாம் நிரை தொடி.

லிணைத்தொகைப் புறத்துப்பிறக்த அன்மொழித்தொகை; ஈறு நீண்டு அள பெடுத்தது-வீளியுருபு இது, மகடூஉ முன்னிலே.

"இசைவ கொடுப்பதூஉ மில்லென்பதூஉம், வசையன்று வையத்தியற் கையஃதன்றிப் பகைகொண்டவனிற்பப்பாத்தண்ணுஞயின், நசைகொன் ருன் செல்லுலக மில்" என்பது, பழமொழிசெய்யுள். (க)

ககஉ. தக்காருந் தக்கவ ரல்லாருந் தங்நீர்மை
யெக்காலுங் குன்ற லிலாவ—ரக்காரம்
யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாங்
தேவரே தின்னினும் வேம்பு.

(இ - ன்.) தக்காரும்-தகுதியையுடைய யோக்கியரும், தக்கவர் அல்லாரும்- தகுதிபப்புடையவரல்லாத அயோக்கியரும், எக்காலும்-எப்பொழுதும் [பெரியவர்வந்தபொழுதும் சிறியவர்வந்தபொழுதும்], தம் நீர்மை குன்றல் இலர் ஆவர் - தங்களது இயல்பானகுணம் குறைதலில்லாதவராவர்; (எது போலவெனின்),—அக்காரம்-கருப்பஞ்சாற்றக்கட்டி, யாவரே தின்னினும் கையாது-எவர்தின்ருலுங் கசவாது; வேம்பு-வேப்பகாய், தேவரே தின்னினும்-தேவர்களே தின்ருலும் கைக்கும்-கசக்கும்; (எ - று.)

அக்காரம் மிகத்தாழ்ந்தவர் தின்ருலும்-இன்சுவையுடையதாவதுபோல தக்கார் எப்போதும் நற்குணமுடையவராவர்; வேம்புதேவர்கள் தின்ருலும் கைப்பையேயுடையதாவதுபோல, தக்கவரல்லாதஅயோக்கியர்எப்போதும் தீர்க்குணங்களேயே யுடையவராவர் என்பதாம்;எடுத்துக்காட்டுவமையணி.

தக்கார் நீர்மை - உத்தமகுணம்; வாய்மை முதலியன. தக்கவரல்லார் நீர்மை-அதமகுணம்: பொய்ம்மை முதலியன. அக்காரம்-இக்ஷுஸாரம் என்னும் வடமொழியின் திரிதவுபோலும்; இதனே வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலியவற்றைக் குறித்தது. எகாரங்கள்-முறையே இழிவுசிறப்பும், உயர்வுசிறப்பும் உணர்த்தும். ஆம் - அசை. (உ)

ககங. காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலரால—ரேலா
வீடரொருவ ருற்றக்கா லீங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர்.

(இ - ன்.) ஈர்குன்றம் நாட-குளிர்ந்தமலைகளேயுடைய நாட்டையுடைய வனே!—கால் ஆடு போழ்தில் - (ஒருவர்க்குச்) செல்வம் வந்த காலத்தில், வானத்து மேல் ஆடும் மீனின் பலர் - ஆகாயத்திலே உயரச் சஞ்சரிக்கின்ற நக்ஷத்திரங்களினும் அதிகர், கழி கிளைஞர் ஆவர்-(அவர்க்கு) மிக்கஉறவின ராவர்; ஒருவர் ஏலா இடர் உற்றக்கால்-அவ்வொருவரே தக்காதுன்பத்தை அடைந்தால், தொடர்பு உடையேம் என்பார் - (அவரோடு யாம்) உறவை யுடையோ மென்றுசொல்லி முன்வந்துதவுபவர், சிலர்-சிலரே; (எ - று.)

செல்வமுள்ள காலத்துப் பலர் வந்திருந்து பொய்புரவுபாராட்டி நடித்தலும், வறுமைவந்தகாலத்துச் சிலர்மாத்திரமே மெய்புரவினராக வந்து உதவுதலுமாகிய உலகவியற்கை, இதனைச் சொல்லப்பட்டது. "பொருள் கையுண்டாய்ச் செல்லக்காணிற் போற்றியென் றேற்றெழுவர், இருள் கொள் தின்பத் தின்மை காணில் என்னே யெனப்பாரு மில்லே" என்றதூஉம், "அற்ற குளத்தி லறுநீர்ப்பறவைபோ, லுற்றுழித் தீர்வாருறவல்ல—ரக்குளத்திற், கொட்டியு மாம்பழ நெய்தலும் போலவே, யொட்டியுவாருறவு" என்ற ஔவையார்வாக்கும் காண்க.

ஈர் என்ற அடைமொழி, பலநீருயிர்களோடுடைமையாகிய குன்றத்தினது வளத்தைத் தெரிவித்தது. காட்டின் நிலவளத்துக்கு முக்கிய காரணமாகிய நீர்வளத்துக்கு இடமாகலின், மலியின் செழிப்பைக் கூறினர். சிலர் என்றது, அருமைகுறித்து நின்றது.

கால் ஊதல்-பாதம் நிணைத்தவிடம் போதல்; இது - இலக்கணையால், செல்வம்பெறுதலேகுணர்த்திற்று; 'கைசாய்தல்', 'சாய்கால்', 'செல்வாக்கு" என்னபோலக் கொள்க: சீவகசிந்தாமணியில் "கண்ணுடிவென்று" என்பதற்கு - 'கண் எல்லாரிடத்தும் உலாவி வென்று' என்று உரைகூறிய ஆசிரியர் நச்சினார்க்கினியர் "காலாடுபோழ்தின்" என்றார்போல' என்று அதற்கு இதனை மேற்கோள் காட்டியவாறும் உணர்க. அன்றியும், காலாடுதல் - செல்வச்செருக்குக்கு ஒருகுறியா மென்பர். போழ்து - மருஉமொழி. கழி-உரிச்சொல்; இனி, கழிஇளைஞர்-இழிவான உறவினரென்றும் பொருள் கொள்ளலாம். இளைஞர்-மரத்தைக் கிளைபோல ஒருவரைத் தழுவுபவர்; ஞ்-பெயரிடைநிலை. மீன் - விண்மீன். மின்னுவது மீன் எனக் காரணக்குறி; வானமாகிய கரிய பெரிய கடலுக்கு மீன்போலுள்ளது என உவமை பற்றிய பெய ரென்றலு மொன்று. (கூ)

**ககக. வடினிலா வையத்து மன்னிய மூன்றி**
**னடுவணை தெய்த விருதலையு மெய்து**
**நடுவண தெய்தாதா னெய்தும் உலப்பெய்**
**தடுவது போலுந் துயர்.**

(இ - ள்.) வடி இலா - குற்றமில்லாத, வையத்து - இவ்வுலகத்திலே, மன்னிய-பொருந்திய, மூன்றில்-(அறம்பொருள் இன்பம் என்னும்) மூன்றனுள்ளே, நடுவணது - நடுவிற்சொல்லப்பட்ட பொருளை, எய்த - (ஒருவன்) அடைய, (அதனால்), இரு தலையும் - முன்னும் பின்னுமுள்ள அறத்தையும் இன்பத்தையும், எய்தும்-அடைவான்; நடுவணது எய்தாதான் - இடையில் நின்ற அசைசெல்வத்தை அடையாதவன், உலை பெய்து அடுவது போலும் துயர் - (கொல்லனது) உலைக்களத்திலே இட்டுக்காய்ச்சப்படுவதனாலாகுந் துன்பத்தைப்போன்ற துன்பத்தை, எய்தும் - அடைவான்; (எ - று.)

இதனால், செல்வமுறுமைகளின் இயற்கை கூறப்பட்டது. செல்வத்தைப்பெற்றால் தானதருமங்களைச்செய்யவும், இம்மை யின்பங்களே அனுபவிக்கவும்கூடும்; அதனைப்பெருமற்போலுல் இரத்தல் முதலியவற்றால் மிக்க

துன்பத்தையடைவான் என்பதாம். "ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு, ளேனை யிரண்டு மொருங்கு," "பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே யம்மூன்று, மாராயிற் றூனேயறம்பொருளின்பமென், றூரா ரிவற்றினிடையதூனே யெய்துவார், சீரா ரிருகூலேயு மெய்துவர்;" "இல்லா ரிருமையு நல்லவெய்தார்," "வறியா ரிருமையறியார்" என்பனகாண்க, உவமையணி.

ககடு நல்லாவின் கன்றுபி ணுகும் வினைபெறாஉங்
கல்லாரே யாயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தின் ணுழவேபோன் மீளாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல்.

(இ - ள்.) நல் ஆவின் கன்று ஆயின்-உயர்ந்ததாற்பசுவினது கன்றுயிருச்சுமானல், நாகும்-இளங்கன்றும், வினை பெறாஉம் - (மிக்க) வினையை அடையும்; (அதுபோல), கல்லாரேஆயினும்-படியாதவர்க ளாஞலும், செல்வர் வாய் சொல் - பொருளுடையோரது வாக்கிலிருந்து வருஞ் சொற்கள், செல்லும் - (தகாதனவாயினும் பலராலும்) அங்கீகரிக்கப்படும்; நல்கூர்ந்தார் சொல்-(படித்தவராயினும்) வறுமைப்பட்டவரது சொற்கள், (நல்லனவாயினும்), புல் ஈரம் போழ்தின் உழவே போல் - அற்பமான ஈரத்தையுடைய காலத்தில் உழவு (நிலத்திலிறங்காமல் மேலிலுழுதவாறுச் செல்வது) போல, மீது ஆடி-மேலே மாத்திரந் தோன்றி, செல்லா ஆம்-உள்ளே ஏற்றுக்கொள்ளப்படாதனவாம்; (எ - று.)

நல்ல சாதிப்பசுவினது கன்று மிக்க இளமையையுடையதாயிருப்பினும் மிக்க வில பெறுதல்போல, செல்வமுடையவர் மிக்க இளமையையுடையராய்ப் படியாதவராயிருப்பினும் அவர்க்கும் மிக்க செல்வாக்கு உண்டாம்; மேல்தோற்றத்தில்மாத்திரம் ஈரமுடையதாய்த் தோன்றுங் கழனியில் உழுதல் பயனற்றதாவதுபோல, தரித்திரனுடைய சொல் செல்லாதுபயனற்றதாகுமென்பதாம். இதனுல், செல்வத்தின் சிறப்பான இயற்கை கூறப்பட்டது.

எடுத்துக்காட்டுவமையணியும், முற்றுவமையணியுஞ் சேர்ந்துவந்த சேர்வையணி.

"கல்லானே யானலுங் கைப்பொருளொன் றுண்டாயின், எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானே, இல்லாளும் வேண்டாளன்மற் றீன் றெடுத்ததாய்வேண்டாள், செல்லா தவன்வாயிற் சொல்" என்றுர் ஔவையாரும்; "ஏழை வார்த்தை யம்பல மேறுது" என்பது, பழமொழி.

நாகு - இளமையையும் பெண்மையையும் உணர்த்தும் பெயர்; "ஏறு மையுமரையும் பெற்றமு நாகே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால், இது பசுவிற்கு உரியதாதலே உணர்க. வினைபெறாஉம்-இன்னிசைவினைத்தற் பொருட்டுக் குறில்நெடிலாய் அளபெடித்தது. நல்கு ஊர்என்னும் இரண்டு சொற்கள் ஒருசொல்லின்தன்மைப்பட்டு நல்கூர் என நின்றன; நல்கூர்தல்-பிறர்கொடுத்ததைப் பெற்றுக்கொள்ளச் செல்லுதல்; இது வறுமையைக் குறித்தல், தாரியத்தைக் காரணமாகக் கூறிய உபசாரவழக்கு. நல்குதல் -

*கொடித்தல், ஊர்தல் - செல்லுதல். 'வாய்ச்சொல்' என்றவிடத்து 'வாய்' எனவேண்டாதுகூறியது அதன்சிறப்பை உணர்த்தற்கு. புல்லீரம் - மயிட்டீரம். உழவு-தொழிற்பெயர்; உழு - பகுதி.* (கி)

கஙகசூ. இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்று
மடங்காதா ரென்று மடங்கார்—தடங்கண்ணு
யுப்பொடு நெய்பா றிரிகாயம் பெய்தடினுங்
கைப்பறு பேய்ச்சுரையின் காய்.

(இ - ள்.) *தட கண்ணும் - பெரிய கண்களே யுடையவனே!*—அடங்காதார்-(இயல்பாய்) அடக்குக் தன்மையில்லாதவர்கள், மெய் ஞானம்-தத்துவஞானத்தையுணர்த்தும் நூல்களே, இடம் பட-அதிகமாக, என்றும்-எப்பொழுதும், கற்பினும்-படித்தவர்தாமும், என்றும் அடங்கார் - எப்பொழுதும் அடங்கமாட்டார்கள்: [இயற்கையறிவினால் அடங்காதவர் செயற்கையறிவினால் அடங்கமாட்டாரென்றபடி]; (*எதுபோலவெனின்*),—உப்பொடு - உப்பையும், நெய்-நெய்யையும், பால்-பாலையும், தயிர்-தயிரையும், காயம்-பெருங்காயத்தையும், பெய்து-தனித்தனியே சேர்த்து, அடினும்-சமைக்கப்பட்டாலும், பேய்சுரையின் காய் பேய்ச்சுரைக்காய்கள், கைப்பு அறு-(தமதுஇயற்கையான) கசப்பு நீங்காவாம்; (எ - று.)

இதனால், அடங்காதவரது தன்மை கூறப்பட்டது.

ஞானம்-நூலுக்குக் காரியவாகுபெயர். தட-உரிசொல். தடங்கண் - உரிச்சொற்புணர்ச்சியாதலால், இனமெலிக்கத. கண்ணும்-கண்ணுன்என்பதன் விரி; மகடூஉ முன்னிலை. 'உப்பொடு' என உப்பை 'ஒடு'க்கொடுத்துப் பிரித்தது,அதுசுவையுள்ளுந்தலைமைபெறுதலாகியஅதன்சிறப்புத்தோன்ற.

'பெய்தடினும்' என்றவிடத்து, உம்மை - உயர்வுநிறப்புப் பொருளது; இனி, எச்சவும்மையாகக்கொண்டு, *அதனைக்கத்திகொண்டு தினைப்பதன்றி* எனப்பொருள் காணலாம்; ஆகவே, இப்பின்னிரண்டடி-"*யஸ்ச நிம்பம் பரமாயாஸ்சைசம் மதுஸர்ப்பிஷா-யாசைசம் கந்தமால்யாத்யை ஸர்வத்ர கடுரேவ ஸ*" என்ற சுலோகத்தோடு ஒத்தகருத்தையுடையதாய், ஒப்புமைக் கூட்டவணியின் பாற்படும்; நன்மைபுரிவாரிடத்தும், தீமைபுரிவாரிடத்தும் ஒத்ததொழிலுடைமையைக் கூறுதல், இதனிலக்கணம்.முன்னிரண்டடியில் 'அடங்காதார் அடங்கார்' என ஒருவரிடத்துள்ள தன்மையையேவற்புறுத்தி நற்பொருட்டு மீண்டும் விதித்தது, விதியணியாம்: முன்னிரண்டடியும் பின்னிரண்டடியும்பிம்பப்பிரதிபிம்பபாவக்தோன்றநிற்பது,ஏடுத்துக்காட்டுவமையணி. இவ்வாறுபலஅணிகள் சேர்ந்துவருவது, சேர்வையணியெனப்படும்.

இச்செய்யுளின் பின்னிரண்டடியை,'ஙகாரமிட்டு அரைத்துக் கரைத்தாலும் தன்காற்றம் போகாதாம்பேய்சுரைக்காய்' என்றபழமொழியோடு ஒப்பிட்டுக்காண்க. காரம் - ஸம்ஸ்காரம் (கூ)

**கக.** தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
வெண்ணெ யவரொடு பட்டது—புன்னை
விறற்பூவ் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
வுறற்பால யார்க்கு முறும்.

(இ - ன்.) புன்னை - புன்னைமரங்களின், விறல் - பெருமையையுடைய, பூ-மலர்கள், கமழ்-வாசனைவீசுகின்ற, கானல் - சோலைகளேயுடைய, வீங்கு நீர் - மிக்க நீரையுடைய கடலினது, சேர்ப்ப - துறைனையுடையவனே!— தம்மை இகழ்வாரை-(காரணமின்றித்) தம்மை நிந்திப்பவர்களே, தாம் அவ ரின்முன் இகழ்ந-அவர் நிந்திப்பதற்குமுன்னே [நிந்தித்தவுடனே யென்ற படி] தாம்நிந்திக்கக்கடவர்; அவரொடுபட்டது என்னை-(தம்மை நிந்திக்கிற) அவர்களோடு (தமக்கு) உண்டான தாக்ஷிணியம் என்ன? உறல் பால-வரத் தக்கனவாகிய இன்பதன்பக்கள், யார்க்கும்-எவர்க்கும், உறும்-(தவறுமல்) வர்தே நீருமு; (எ - று.)

வரவேண்டிய நன்மையோ தீமையோ விதியின்படி வர்தேதீருமாத லால், பிறர் நம்மைப் பழிக்கும்போது 'இதனுல் என்னதிங்கு விளேயுமோ?' என்று அஞ்சிப் பின்வாங்காது அவரைப்பழிப்பதே அவர் வாயை யடக்கும் விதமா மென்றவாறு. இங்ஙனங்கூறியது, காரணமின்றிப் பிறரைப் பழிப்ப வர்களது நிந்தையைக் குறைவுபடுத்தற்கு உபாயமா மெனனுங் கருத்தா லென்க; "கதகன்று சான்ருண்மை நீதுகழிய, மதகன்று மாண்பில்லார் முன்னர்" எனப்பிறரு கூறியதுங் காண்க.

இதனுல், கீழ்மக்களின் தன்மையும், அவரையடக்கும் உபாயமுங்கூறப் பட்டன.

'உறற்பால யார்க்கு முறும்' என்ற ஈற்றடி, 'தம்மையிகழ்வாரைத்தாம வரின் முன்னிகழ்க' என்ற வாக்கியத்திற்கு எதுவாய் நின்று சாதித்து நிற் பது, தோடாநீலக்செய்யுட்குறியணி; இது, வடமொழியில் காவ்யலிங் காலங்காரம் எனப்படும்.

'அவரின் முன்' என்பதற்கு-அவரது புறத்திலேயென்றி எதிரிலே யென் றும் பொருள்கொள்ளலாம்.'விறல்'என்றது,கடலுக்குஇயற்கையாயுள்ளதூர க்கத்தையும் போக்குந் திறத்தை.செய்தல்லிலக் கருப்பொருளாதலால், புன்னை கூறப்பட்டது. பூங்கமழ்-"பூப்பெயர்முன் இன மென்மையுந் தோன் றும்" எனப்பொதுப்படக் கூறியதனுல், அல்வழிஎழுவாய்த்தொடரில்மெலி மிக்கது. கானல்-கடற்கரைச்சோலே. வீங்குநீர்-வினைத்தொகை யன்மொழி.

இச்செய்யுளின் முன்னிரண்டடிகளில் இனவெதுகை; அதாவது வல் லெழுத்துக்களுள் ஒன்றற்கு ஒன்றும், மெல்லெழுத்துக்களுள் ஒன்றற்கு ஒன்றும், இடையெழுத்துக்களுள் ஒன்றற்கு ஒன்றும் ஏதுகையாய் நிற்பது. இவ்வ முறையே வல்லினவெதுகை,மெல்லினவெதுகை, இடையின வெது கை எனப்படும். (எ)

ககஅ. ஆவே முருவின் வாயினு மாபயந்த
பாலவே முருவின வல்லவாம்—பாலபோ
லொருதன்மைத் தாகு மறநெறி யாபோ
லுருவு பலகொள வீங்கு.

(இ - ள்.) ஆ வேறு உருவின ஆயினும்-பசுக்கள் வெவ்வேறு நிறத்தை யுடையனவாயிருந்தாலும், ஆபயந்த பால்-அப்பசுக்கள் தந்தபால்கள்,வேறு உருவின அல்ல ஆம்-(வெண்ணிறத்தையேயன்றி) வெவ்வேறான நிறத்தை யுடையவை யாமாட்டா; பால் போல்-அந்தப்; பால்போல,—அறம்-தருமம் மானது, ஒரு தன்மைத்து ஆகும்-ஒரேதன்மையையுடையதாம்; நெறி-(அத் தருமத்தின்) வழிகள், ஈங்கு-இவ்வுலகத்தில், உருவு பல கொளல்-பலரூபங் களைக்கொண்டிருத்தல், ஆ போல் - அப்பசுக்கள் போல (ஆகும்); (எ - று.)

இதனால், அறத்தினிடத்தன்மை சொல்லப்பட்டது. பசுக்கள்பலநிறமா யிருத்தல்போலத் தருமத்தைச்சம்பாதித்தற்கு உரியவழிகள்பலவாயிருப்பி னும், பசுவின்பால் ஒரேநிறமுடைய தாதல்போல அந்நெறிகளாற் செய்யப் படுந் தருமமும் ஒரேதன்மையையுடைய தென்பதாம்; உவமையணி. என் றது-தானம் தவம் வீரதம் வழிபடுகடவுள்வணக்கம் முதலாகத் தருமஞ் செய்யும் வழி பலவாதலேயும், தருமம் நன்மை யொன்றையே விளைப்பதா தலேயும் நோக்கி யென்க.

"உருவே அட்டையும் வடிவும் நிறமும்" என்பதனால், 'உரு' என்பது-நிறத்தையும் வடிவையும் உணர்த்துமாறு அறிக. தெரு-தெருவு, நடி - நடிவு என்பனபோல, உரு-உருவு என உகரசாரியை பெற்றது. 'ஈங்கு' - சுட்டு நீண்டது. இனி, 'நெறி ஆ போல் உருவு பல கொளல்' என்பதற்கு - தருமமார்க்கங்களைப் பசுக்களைப்போலப் பலவருவமாகக்கொள்ளவன்றும் உரைக் கலாம்; இவ்வுரைக்கு, 'கொளல்' என்பது - அல் ஈற்று உடன்பாட்டுவியங் கோள் வினைமுற்று: தொழிற்பெயரன்று.

இச்செய்யுளின் முன்னிரண்டடிகளில் லகாவோற்று இடைவந்த நூன்றளை; அதாவது - முதலெழுத்துக்கும் இரண்டாமெழுத்துக்கும் இடையே ய ர ல ழ என்ற மெய்களுள் ஒன்று ஒரோவிடத்து வருவது.(அ)

ககக யாஅ குலகத்தோர் சொல்லில்லார் தேருங்கால்
யாஅ குபாயத்தின் வாழாதார்—யாஅ
ரிடையாக வின்னுத தெய்த்தாதார் யாஅர்
கடைபோகச் செல்வமுய்த் தார்.

(இ-ள்.) தேரும் கால்-ஆராயுமிடத்தி, உலகத்த-உலகத்தில்,நற்சொல் இல்லார்-ஒரு நிச்சைசசொல்லே யுடையாராகாதவர், யார்-எவர்? [எவருமில் லென்றபடி]; உபாயத்தின் வாழாதார்-தந்திரத்தால் வாழாதவர்,யார்-எவர்? இடை ஆக - (தமது ஆயுளின்) இடையிலே, இன்னுதது எய்தாதார் - துன் பத்தை அடையாதவர், யார்—?கடை போக-வாழ்நாளின் முடிவுவரையில், செல்வம் உய்த்தார் - செல்வத்தை அனுபவித்தவர், யார்—? (எ - று.)

உலகத்தில் எல்லாரும் ஏதாவதொரு நிர்ணயை அடைதலும், யாதானுமோர் உபாயத்தால் வாழ்தலும், இடையிலே தன்பத்தை அடைதலும், செல்வத்தையிழத்தலும் இயற்கை யென்பது கருத்து.

முதல்வாக்கியத்திலுள்ள 'உலகத்து,' 'தேருங்கால்' என்றசொற்கள் மற்றை வாக்கியங்களிலுஞ்சென்று இயைவது, முதனிலைத்தீவகம். 'யார்' என்ற சொல் ஒன்றே ஒருபொருளிற் பலமுறை வந்தது, சொற்போருட்பின்வருநிலையணி.

சொல் என்பதற்கு-புகழ்ச்சொல் என்றும் உரைக்கலாம். அளபெடைகள்- செய்யுளோசை நிறைக்கவந்தன. 'உபாயம்' என்றது-சாம பேத தான தண்டங்களே. தாமம்-இனிதாகக்கூறல்; பேதம்-மென்மையானும் வன்மையானும் மனத்தினைப்பேதித்தல்; தானம்-பகைவர் மனமகிழக் கொடுத்தல்; தண்டம்-பகைவரைப் போர்செய்து அழித்தேவிடுதல். இனி, உழவு வர்த்தகம் சேவகம் பிச்சை முதலியன என்னவுமாம். 'கடைபோக' என்பது இப் பொருளில் வருதலை, "சூது கடைபோக வெனக்கரு ளென்றலும்" என்ற மணிமேகலையிலுங் காண்க.

இசசெய்யுளில் அளபெடைகள் பல வந்தது, அளபுக்தோடையாம்.

இசசெய்யுள், "கல்யதோஷ குலே காஸ்தி யாதிர்நாகோபீடித:-வ்ய ஸனம்கோரப்ராப்தம் கல்பஸஸைக்யம் நிரத்தரம்" என்னும் சுலோகத்தைப் பெரும்பாலும் ஒத்தது.

'வாழாதாரியார்' என்றும், 'செல்வமுற்றூர்' என்றும் பாடம். (கூ)

கூஉ0. தாஞ்செய் வினையல்லாற் றம்மொடு செல்வதுமற்
றியாங்கணுந் தேரிற் பிறிதில்லை—யாங்குத்தாம்
போற்றிப் புனைந்த வுடம்பும் பயமின்றே
கூற்றங்கொண் டோடும் பொழுது.

(இ - ன்.) தேரின்-ஆலோசித்துப்பார்த்தால்,—தம்மொடு செல்வது - (உடம்பைவிட்டபின்பு)தமது உயிரோடு வருவது, தாம்செய்வினை அல்லால்-அவரவர் செய்த கருமமே யல்லாமல், பிறிது-வேறொன்று, யாங்கணும்-எவ்விடத்தும், இல்லை—: கூற்றம்கொண்டு ஓடும்பொழுது - யமன் (உயிரைக்) கொண்டு விரைந்துபோகும்போது, ஆங்கு தாம் போற்றி புனைந்த உடம்பும் - அவ்வாறு தாம் பாதுகாத்து (ஆடையாபரணமுதலியவற்றால்) அலங்கரித்த சரீரமும், பயம் இன்றே-பிரயோசனமில்லாததேயாம்; (எ - று.)

'இதுதான்உயிர்' என்றுதேகத்தினிடத்தில்மிக்க அபிமானங்கொண்டு உணவுமுதலியவற்றாற் பலவகையாகப்பிரயாசைப்பட்டு வருந்திவளர்த்தஇவுடம்பேயமன்உயிரைக் கொண்டும்போம்போது நமக்குப்பயன்படுவதில்லை யென்றல், மற்று எதுதான் நமக்குப்பயன்படப்போகின்றது? எதுவுமில்லை; ஆகவே, நம்மோடு வருவன இருவினைகளே யென்பதைப் தெளிவாகவுணர்ந்து நீவினைகளே நீக்கி நல்வினைகளோச செய்யவேண்டு மென்று கருத்து.

இச்செய்யுளில், ஒரு பொருளைக் கூறுவதனுல் மற்றெருபொருள் எளி திற் சித்தித்தலாகிய கைழதிகநியாயந் தோன்றி, தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணி தொனித்தல் காண்க.

நீதிநூல்களி லெங்கும், நன்மைதீமையான காரியங்களின் தன்மையை மாத்திரங் கூறுமிடங்களில், நன்மையைச் செய்யவேண்டும் தீமையைத் தவிரவேண்டும்.என்று கூறியதாகக் கருத்துக் கொள்க.

'உடம்பும் பயமின்றே' என்றது, அது இவ்வுலகத்தே கழிந்துவிதே லால் 'உடம்பும்' என்ற உயர்வுநிறப்பும்மை, மற்றைச செல்வம் இனமை சுற் றம் கல்வி முதலியவற்றின் பயனின்மையையும் உணர்த்திற்று.

இப்பாட்டினுல், வினை உடம்பு இவற்றின் தன்மை கூறப்பட்டது.

"ஈட்டிய வொண்பொருளு மில்லொழியும் சுற்றத்தார், காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர்-மூட்டும், எரியினுழியு முடம்பு ஈர்ங்குன் றாட, தெரியி னறமே தணே," "மனேயாளும் மக்களும் வாழ்வும் தனமும் தன்வா ல்மட்டே, இனமான சுற்றம் மயானமட்டே வழிக்கு எதுதணே, இனேயா மாவு எவ்வளவாகினும் முன்புசெய்த தவம், தனேயாள என்றும்பரலோகஞ் சித்திக்கும் சத்தியமே," "அத்தமும் வாழ்வும் அகத்திமட்டே விழியம்பு ஒழுக, மெத்திய மாதரும் மீதிமட்டே லிம் மிலிம்மி யிரு, சைத்தலே மேல் வைத்தழு மைந்தருஞ் சுடுகாடுமட்டே, பற்றித்தொடரும் இருவினைப் புண் ணியபாவமுமே" என்ற செய்யுள்களி இங்குக் காணத்தக்கன, "அர்த்தாச் ருமேநிவர்த்தந்தே ர்மாராதேயித்தபாத்தவா - ஸ க்ருதம் தஷ்க்ருதஞ் சைவ கசகசுத்த மநுகசகதி" என்னும் வடநூன்மேற்கோளுங் காண்க.

மற்று - அசை. யாங்கண் - யாக்கண் என்பதன் மெலித்தல். 'மூடிப்ப மூடித்துப் பின் பூசுவ பூசி உடுப்ப உடுத்து உண்ப உண்டு' பாதுகாக்கப்படு தலினுல், 'ஆங்குத் தாம்போற்றிப்புனேந்த உடம்பு' எனப்பட்டது. இங்கே 'ஆங்கு' என்றது, உலகநடப்பு. மற்றியாங்கண்-குற்றியலிகரம். குற்றியலிக ரம், இங்கு அலகுபெறவில்லே. ஏ - தேற்றம்.

இசைசெய்யுளின் முன்னிரண்டடிகளில் இனவெதுகை. (க0)

## கூடு : ஆம் அதிகாரம்.—தீவினையச்சம்.

அஃதாவது - பாவத்தைத்தருகின்ற கொடிய தொழில்களைச் செய்வ தற்கு அஞ்சி யொழுகவேண்டு மென்பதைப்பற்றிச் சொல்வது. பொருள் களின் உண்மையான தன்மையை உணர்ந்தா லல்லது தீவினை தருபவை இவை யெனஅறிந்து அவற்றி னின்று அஞ்சி அவற்றைச் செய்யாதொழுகு தல் கூடாமையால், இது மெய்ம்மை யென்னும் அதிகாரத்தின்பின் வைக் கப்பட்டது.

கஉக துக்கத்துட் டுங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
லிலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலங்கெட்ட
புல்லறி வாளர் வயிறு.

(இ - ள்.) சுடுகாடு-மயானங்கள்,—துக்கத்துள் - சம்சாரத்தின்பங்களி லே, அழுங்கி-தங்கியிருந்து, துறவின்கண் - துறவறத்திலே, சேர்கலா - சே ராத, மக்கள்-மனிதர்களுடைய, பிணத்த-பிணங்களேயுடையன; புலம் கெ ட்ட-நல்லறிவில்லாத [மாம்சபோஜனஞ் செய்கிற], புல்அறிவு ஆளர்-அற்ப அறிவையுடையவர்களது, வயிறு-வயிறுகளோவென்றால்,—தொக்க லிலங் கிற்கும் புள்ளிற்கும் காடே-தொகுதியான மிருகங்களுக்கும் பறவைகளுக் கும் உரிய இடுகாடெனேயாம்; (எ - று.)

"அரிதரிது மானிட ராத லரிது" என்றபடி பிறவிக்குள் உயர்ந்தமனி தரது பிணத்தையுடைய சுடுகாட்டிலும், மக்களிலும் பலமடங்கு இழிந்த மிருகபக்ஷிகளின் பிணங்களேயுடைய அற்பர்களது வயிறு மிகவும் இழிவான தாம் என்பது போதருதலால், குறிப்பால்வந்த வேற்றுமையணி; உபமான உபமேயங்களுள் ஒன்றற்குச் நெருப்புக்கூறதல், இவ்வணியின் இலக்கணம்: இதனைவடநூலார் வ்யதீரேகாலங்காரம் என்பர். இங்கே உபமானத்திலும் உபமேயத்து விசேஷம் கூறினர்.

'புலங்கெட்ட' என்றது, உயிர் உய்வதற்கு உபாயமாகிய தத்துவஞான த்தை உடைத்தாகாமையால். 'புல்லறிவாளர்' என்றது, உண்ணல் உடுத் தல் உறங்கல் முதலியவற்றுக்கு உரிய சாதாரண அறிவை யுடைமையால். துறவிகளது அய உடல் சுடுகாட்டிற் சேர்த்துச சுடப்படாமற் சிறந்ததோ நிடத்திற் சேமஞ்செய்து புனிதமாகப் போற்றப்படுதலால், அதனைஒழித்து 'துக்கத்துட்டுங்கித் துறவின்கட்சேர்கலா மக்கட்பிணத்தகுகாடு' என்றார்.

இப்பாட்டால், மாம்சபோஜனம் தீவினை யென்பது கூறப்பட்டது.

சுடுகாடு-பால்பகா அஃறிணைப்பெயர்: (இறந்தவரைச்) சுட்டு எரிக்குங் காடென். பிணத்த-'அன்' சாரியை பெறுத பலவின்பால்முற்று. (எ)

கஉ. இரும்பார்க்குங் காலரா யேதிலார்க் காளாய்க்
கரும்பார் கழனியுட்சேர்வர்—சுரும்பார்க்குங்
காட்டுளாய் வாழுஞ் சிவலுங் குழும்பூழுங்
கூட்டுளாதக் கொண்டுலைப் பார்.

(இ - ன்.) சுரும்பு-வண்டுகள், ஆர்க்கும் - ஆரவாரிக்கின்ற, காட்டுள் - வனத்திலே, ஆய்-பொருந்தி, வாழும் - வாழ்கின்ற, சிவலும் குழும்பூழும் - கவுதாரி காடை முதலான பறவைகளே, கூட்டுள் - கூட்டினுள்ளே, ஆய் - ஆகும்படி, கொண்டு வைப்பார்-கொண்டுபோய் வைத்துவளர்ப்பவர்கள்,— (மறுபிறப்பில்), இரும்பு ஆர்க்கும் காலர் ஆய்-இருப்புவிலங்குகள்ஒலிக்கின்ற கால்களே யுடையவர்களாய், எதிலார்க்கு ஆள் ஆய் - அயலார்க்கு அடிமைகளாய், கரும் பார் - வட்டைநிலங்களிலும், கழனியுள் - வீனேநிலங்களிலும் சேர்வர் - (வேலைசெய்தற்குப்) போய்ச் சேர்வார்கள்; (எ - று.)

பறவைகளைக் கொன்று தின்பதேயன்றி அவற்றைப்பிடித்துக் கூட்டிலடைத்து வருத்துவதும் தீவினையென்பது, இதனால் கூறப்பட்டது.

(தசகுமாரசரிதத்துள் அன்னப்பார்ப்பை நூலிட்டுக் காலைக்கட்டிய பாவத்தாற் பின்பு வெள்ளிவிலங்கு காலிற் கிடந்ததென்று ஆசிரியர்கூறுவாறும், ஜீவகசிந்தாமணியுள் முற்பிறப்பில் அன்னப்பார்ப்பைச் சுற்றத்தினின்றும் பிரித்துச் சிறைவைத்த தீவினையாற் சீவகன் சுற்றத்தினின்றும்பிரிந்து சிறைப்பட்டானென்று சாரணர்கூறியவாறும் உணர்க. "பூவைங்ளிதோகை புனமன்னமொடுபன்மா, யாவையவைதங்கோயி னீங்கியழவாங்கித்,காவல் செய்துவைத்தவர்கள் தங்கோயி னீங்கிப், போவார் புகழ்கம்பி யிதுபொற் பிலதுகண்டாய்" என்னுஞ் சீவ.நாமணிச் செய்யுளையுங் காண்க.)

கரும் பார்-கருமையான பார்; இங்கே, கருமை - வலிமை; அதாவது - வட்டையாயிருத்தல்; பயனில்லாத நிலம். இனி, இருளுலகமாகிய தாமிஸ்ரம் என்னும் நரகவிசேடமென்ற உரைப்பாருமுளர். கரும்பு ஆர் எனப் பிரித்து - கரும்புகள் மிகுகிற கழனியென்றும் உரைப்பர். சுரும்பு-வண்டுகளில் ஓர்சாதி. 'ஆய்' என்ற சொல் நான்கனுள், பின்னது - ஆக என்னும் எச்சத்தின் திரிபு. வைப்பார்-பெயர். சிவல், குழும்பூழ்-மற்றைப்பறவைகட்கும் உபலக்ஷணம். இரும்பு-விலங்குக்குக் கருவியாகுபெயர். இரும்பு ஆர்க்கும்-இரும்புவிலங்கிஞலற் கட்டப்பட்டஎன்றலுமாம். எதிலார்=ஏதிலிலார்-யாதொரு சம்பந்தமு மில்லாதவர்; பகைவருமாம். (உ)

கஉங. அக்கேபோ லங்கை யொழிய கிரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே—யக்கா
லலவணைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்.

(இ - ன்.) அ கால் - முற்பிறப்பில், அலவணை - நண்டை, காதலித்து - விரும்பி, கால் முரித்து-அதன்காலை ஒடித்து, தின்ற-தின்றதனலாகிய, பழ

வினை-பழைய தீவினை, வந்து அடைந்தக்கால்-(பிற்பிறப்பில்) வந்து சேர்ந்தால்,—(அத்தீவினைசெய்தவர்),—அக்கே போல் - சகுமணிபோல, அகம் கைஒழிய-அகங்கைமாத்திரம் கிற்க, வீரல் அழுகி-விரல்கள் அழுகிப்போய், துக்கம் தொழு நோய் எழுப-(மிக்க) துன்பத்திற்கு இடமானகுஷ்டவியாதி உண்டாகப்பெறுவர்; (எ - று.)

'அலவன்' என்றது-பிறபிராணிகட்குங் உபலக்ஷணம். நண்டு முதலிய பிராணிகளே முரித்துத்தின்றவர்க்குக் குட்டநோயுண்டா மாதலால், அது வுந் தீவினை யென்பது, கருத்து.

அகம் + கை = அங்கை எனப் புணர்க்கது. தொழுநோய்-தொழுவாகிய நோய்; இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ''உயர்திணைதொடர்ந்த பொருள் முதலாறும், அதனெடு சார்த்தினதிணை முடிபின்'' என்னுஞ் சூத்திரத்தால், 'நோய்' என்னும்அஃறிணையெழுவாய் 'எழுப' என்னும்உயர்திணை யெழுவாயின் முற்றைகொண்டது; த்திணைவழுவமைதி. இன்ற பழவினை - 'சங்குசுட்ட சுண்ணம்பு' என்பதிற்போல, பெயரெச்சம் காரணப்பொருளதாய்க் காரியப்பெயரைக் கொண்டது. பின்னிரண்டடி - இன்னேவுதுலக.

குஉச. நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல் வதூஉ
மெரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும்—பரப்பக்
கொடுவினைய ராகுவர் கோடாருங் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து.

(இ - ன்.) நெய் போல்வதூஉம்-நெய்யும்,—நெருப்பு அழல் சேர்ந்தக்கால் - நெருப்பினது வெப்பத்தைத் தான் சேர்ந்தால், எரிப்ப சுட்டு - (உடம்பை) எரிக்கும்படி காய்ந்து, எவ்வம் நோய் ஆக்கும்-(தன்னேச்சார்ந்தவர்க்குத்) துன்பந்தரும் நோயை உண்டாக்கும்; (அதுபோலவே,) கோடாரும் - (கல்லொழுக்கத்தில்) தவறுத யோகியர்களும்,—கடு வினையர் ஆகியார் சார்ந்து - கடுமையான, பாதகச்செயல்களேயுடைய அயோக்கியரைச் சேர்ந்தால், கோடி-(அச்சேர்க்கையால்தம் ஒழுக்கத்தில்)தவறி,பரப்பகொடு வினையர் ஆகுவர்-பிறவுங் கொடியதொழில்களேச் செய்பவராவர்; (எ - று.)

பலவகையாலும் உடம்புக்கு உறுதிதருவதாகிய நெய்யும் நெருப்பைச் சேர்ந்தால் தான் அவ்வுடம்பையே யெரிப்பதுபோல, தீவினையுடையாரைச் சேர்ந்தால் நல்லவரும் அத்தீவினையே யுடையராவரென்பதாம்; திருப்பாற் தாலங்காயம் [எருத்துக்கரட்டவ்வமையணி.]

''நியகந்த முள்ளதொன்றைச் சேர்ந்திருப்ப தொன்றற்குத், நியகந்த மேறுந்திறமதுபோல்—நிய, குணமுடையோர் துங்களுடன் கூடி யிருப்பார்க்குக், குணமதுவே யாஞ்செறிவு கொண்டு'' என்பது காண்க.

நீயோர்சேர்க்கையினல் வருந் தீமை இதனுற் கூறப்பட்டது.

'நெய்யும்' என்ற உயர்வுநிறப்பும்மை-அதனது தன்மையையும், எத்தன்மையானபுண்களேயும் ஆற்றமையில்பையும், ''ஆயுர்வை க்ருதம்'' என்றுவேதத்

நிலநுங் கூறும்படி ஆயுளளிக்கவல்ல தாதலேயுங் காட்டிற்று. போல்வது-ஒப்பிலிபோலி; "ஒப்பில் போலியு மப்பொருட் டாகும்" என்னும் தோல்காப்பியச் சூத்திரத்தின் உரையில், ஒன்றற்கொன்று ஒக்குமென்னும் பொருள் தன்கண் இன்றி வரும் 'போல்' என்னுஞ் சொல் சிறிது பொருளுணர்த்தி உரையசையாய் நிற்பதற்கு இதனே உதாரணங்காட்டியிருத்தல் காண்க. இனி, கோடிக்கடவினையர் என வெடுத்த - மிகப்பலவாகிய தீவினைகளே யுடையவர் என்றுமாம். (ச)

கஉடு. பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே கிறியார் தொடர்பு.

(இ - ன்.) பெரியர் கேண்மை-(அறிவினுற்) பெரியோர்களது சினேகம்,—பிறைபோல - இனஞ்சந்திரன் போல, நாளும் - தினந்தோறும், வரிசை வரிசை ஆ-முறையே, நந்தும்-வளரும்; கிறியார் தொடர்பு-(அறிவினுற்) சிறியவரது சினேகமோ,—வான் ஊர் மதியம் போல் - ஆகாயத்திற் செல்லும் பூர்ணசந்திரன்போல, வைகலும்-நாள்தோறும், வரிசையால் - முறையாக, தானே-தனக்குத்தானே [பிரருடைய முயற்சியில்லாமலே], தேயும் - குறைந்துவிடும்; (எ - று.)

அறிவுடையார் தமக்குட் செய்துகொண்ட நட்பு முன்சுருங்கிப் பின் பெருகுதற்கும், அறிவிலார் தமக்குட் செய்துகொண்ட நட்பு முன்பெருகிப் பின் சுருங்குதற்குங் காரணம், தமக்குள் ஒருவர் ஒருவருடைய குணத்தை முன் அறியாமலிருத்தலும் பின் அறிதலுமா மென்க. "பிறைநீர நீரவர்கேண்மை பிறைமதிப், பின்னீர பேதையார் நட்பு" என்னுக் திருக்குறளை நோக்குக. "ஆரம்ப குர்வீடியிஞ்ஞேரமேண லங்வீபூராயருத்தி மசிசபாஸ்சாத் - தீக்ஸ்யபூர்வார்த்த பரார்த்தபிக்ரா தாயேவ மைத்ரி கலவாற்ஜாகாம்" என்னும் பத்யமும் இங்குக் கவனிக்கத் தக்கது. இவ்வாறு இருநிறத்தாரது நட்பையும் உணர்ந்து கிறியார் தொடர்பை அஞ்சி விடவேண்டுமென இவ்வதிகாரத்திற்கு வற்பக் கருத்துக்கொள்க.

இதனே, கஉ-ஆம் கவியோடு ஒப்பிக்க.

"சூன்றமார்பரிந்து வெள்வேற் குமிமா மஞ்ஞை யூர்ந்து" என்ற சீத்தாமணியிலுரையில், 'ஊர்தல் - ஈண்டுப் போதலேமேற்று: "வானூர் மதியம்' - போல' என்று நச்சினார்க்கினியர் உரைத்தது இங்கு உணரத்தக்கது.

கஉசு. சான்றோர் ரெனமதித்துச் சார்ந்தாய்மற் சார்ந்தாய்குச்
சான்றாண்மை சார்ந்தார்க ணில்லாயிற்—சார்ந்தோய்கேள்
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட தடைத்து.

(இ - ன்.) (நீ), சான்றோர் என மதித்து-(இவர் எல்லாம்) சான்றாண்மையுடையவர் என்று நன்கு மதித்து, சார்ந்தாய் - (நிலரைச்) சிநேகித்

தாய்; சார்ந்தாய்க்கு - (அவ்வாறு) தினைத்த வனக்கு, சான்றாண்மை-அர்நற்குண நிறைவுடைமை, சார்ந்தார்கண் - (உன்னைற்) சேரப்பட்ட அவரிடத்து, இல் ஆயின் - இல்லாமற்போனால், (அது),—ஒருவன்—, சாந்து அகத்து உண்டு என்று - வாசனைத்திரவியம் இதனுள்ளே இருக்கிற தென்ற எண்ணி, செப்புநிறந்து-ஒரு மிருமைத் திறந்து, அகத்துள்ளே - அதனுள்ளே, பாம்பு கண்டது - பாம்பைக் கண்ட தன்மையை, உடைத்து - உடையது; சார்ந்தோய் - சினைஞ்செய்தலனே! கேள் - (இதனைக்) கேட்டறிவாயாக; (எ - று.)

இதனாலும், மேலிரண்டுசெய்யுள்களாலும், அஞ்சப்படுவதாகியநீயோர் தொடர்பா லுண்டாகுந் தீமை கூறப்படுகின்றது.

நன்கு ஆராயாமல் ஒருவரோடு நட்புச்செய்தல் பெருந்தீமை வருதற்குக் காரணமா மென்பதை உபமானமுகத்தால் விளக்கினார். சான்றோரென மதித்துச் சார்தலுக்கு - சாந்தகத்தண்டென்று செப்புத்திறத்தையும், அங்குச் சான்றாண்மையின்மையைக் காணுதற்கு-பாம்பை அதனகத்தைக் காணுதலும் உபமானமெனக் காண்க.

கண்டாற்போன்ற தன்மையையுடையது எனக் கூறுது 'கண்டது உடைத்து' என உபமேயத்தை உபமானமாகவே கூறியது, நாட்சியணி. ஒருகாரியத்தைச் செய்யத்தொடங்கி இவ்விடத்தை யடையாது அகவிடத்தை யடைதலாகிய தருதலியின்மையணியையும் இச்செய்யுளிலே காண்க. இவ்வாறு இரண்டணிசேர்ந்தது - சோபவையணி.

மன் - அசை; மிகவும் என்றும் பொருள்கொள்ளலாம்: ஒழியிசைப் பொருள தென்றலுமாம். சான்று ஆண்மை என்ற வினையெச்சத்தொடர் - (நற்குணங்களால்) நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை என்ற பொருள்பிம். சாந்து-சந்தகம் என்னும் வடமொழியின் விகாரம்; செப்புப்பெயர் பொதுப்பொருள் குறித்தது.

இச்செய்யுளின் பின்னிரண்டடி இனவேதுகை. (கூ)

கூஉஎ. யாஅ ரொருவ ரொருவர்த மூள்ளத்தைத்
தேருந் நுணேமை யுடையவர் —சாரற்
கனமணி நின்றிமைக்கு நாடகேண் மத்தன்
மனம்வேறு செய்கையும் வேறு.

(இ - ன்.) சாரல்-மலைப்பக்கங்களிலே, கனம் மணி-பெருமை பொருந்திய இரத்தினங்கள், நின்று-நிலைபெற்று, இமைக்கும்-விளங்குகின்ற, நாட-நாட்டையுடைய அரசனே!—கேள்-கேட்பாயாக:—ஒருவர்தம் உள்ளத்தை-வேறொருவருடைய மனத்தை, தேரும் - ஆராய்ந்தறியக்கூடிய, நுணேமை-வல்லமையை, உடையவர் - உடையவராகிய, ஒருவர்-ஒருத்தர், யார் - எவருளர்? [ஒருவரு மில்லை]; (எனின்றால்),—மக்கள் மனம்வேறு செய்கையும் வேறு-மனிதர்களது எண்ணமும் வேறு செய்யுந் தொழிலும் வேறு;(எ-று.)

உலகத்தில் மனிதர்பலர்க்கு மனமுஞ் செயலும் ஒற்றுமைப்பட்டிரா மல் வேறுபட்டிருக்கு மாதலால், ஒருவரது உள்ளம் இத்தன்மையதென்று அவர் செய்கையைக்கொண்டு தெளிவலாகாது என்பது கருத்து. எனவே, பலகாள் பலவழியால் ஆராய்ந்து ஒருவரை நட்புக்கொள்ளவேண்டுமே யன்றி, ஆராயாது நட்புக்கொள்ளின் தீயரோமம் நட்பு சேர்ந்துவிடு மாதலால், அத்தீவினைக்கு அஞ்சி நடக்கவேண்டு மென்பதாம்.

'மக்கள்மனம்வேறு செய்கையும்வேறு' என்பது முன்னிரண்டடியைச் சாதித்து நிற்பது-தோடார்நீலைக்கேயியுட்டுறியணி.

"மாஸ்யேகம் வஸல்யேகம் கர்மண்யேகம் மஹாத்மாகம் - மாஸ்யஸ்யத் வஸஸ்யஸ்யத் கர்மண்யஸ்யத் துராத்மாகம்" என்னும் வடதூல் மேற்கோள் கவனிக்கத் தக்கது.

கேள்-மூன்னிலேயசையுமாம். வேறு-ஐம்பால் மூவிடத்துக்கும் பொது வான குறிப்புவினைமுற்றுப் பகாப்பதம். (எ)

கஉ. உள்ளத்தா னள்ளா தறுதித் தொழிலராய்க்
கள்ளத்தா னட்டார் கழிகேண்மை—தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனத்துக்கண் மாசாய் விடும்.

(இ - ன்.) புனல்-அருவிநீர், தெள்ளி - தெளிவுடையதாய், செதும்பு - சேற்றை, நின்ற அலைக்கும்-இடைவிடாது ஒழித்துதிர்கின்ற, பூ குன்றம் - அழகிய மலையையுடைய, நாட-நாட்டையுடையவனே!—உள்ளத்தால் நள் ளாது-மனப்பூர்வமாகச் சினேகஞ்செய்யாமல், உறுதி தொழிலர் ஆய்-(பிற ரது நன்மையிற் சிறிதுங்கருத்தையாது தமது) நன்மையையே தேடுந் தொழிலை யுடையவராய், கள்ளத்தால் கட்டார் - வஞ்சனையாற் சினேகஞ் செய்தவரது, கழிகேண்மை-மிகுதியான நட்பு, மனத்துக்கண் மாசு ஆய் விடும்-மனத்திற் குற்றமாய் முடியும்; (எ - ம்.)

ஆதலால், அதற்கு அஞ்சவேண்டு மென்பதாம்.

'மனத்துக்கண் மாசாய்விடும்' என்றது, பின்பு பலதீமையை விளைக்கு மென்றபடி. பூங்குன்றம்-பண்புத்தொகை; அழகாகிய குன்ற மென்க.

'கழிகேண்மை' என்றும் பாடம். (அ)

கஉகூ. ஒக்கிய வொள்வாடன் ஞெஞ்ஞர்கைப் பட்டக்கா
லுக்க மழிப்பதூஉ மெய்பாகு—மாக்க
மிருமையுஞ் சென்று சுடுதலா னல்ல
கருமமே கல்லார்கட் டூர்வ.

(இ - ன்.) ஒக்கிய - (போரிற் பகைவரைக்கொல்லுதற்பொருட்டு ஒரு வன்) உயரவெத்த, ஒள் வாள் - பிரகாசமான வாளாயதமானது, தன் ஒன் ஞர் கை பட்டக்கால்-அவனது பகைவரது கையில் அகப்பட்டுவிட்டால், ஊக்கம் அழிப்பதூஉம் - (பகைவரை அழியாமையோடு தன்) வலிமையை

காசப்படுத்துவதும், மெய் ஆகும்-(இம்மையில்) உண்மையாம்; (அதுபோல வே),—ஆக்கம் - (மூடர்க்குத் தாம்செய்யும்) உபகாரம், இருமையும்என்று சுதேலால் - (இம்மைமறுமை யென்கிற) இரண்டிடத்தைத் தொடர்ந்து (தம்மை) வருத்துவதனால், கல்லார்கண் நீர்வு-அறிவில்லாதவரிடத்தினின்றும் நீங்குதல், நல்ல கருமமே - நல்ல காரியமேயாம்; (எ - று.)

பகைவர் கையில் தவறி அகப்பட்ட தமதுவாளினால் உண்டாகுந் தீமையினும், அறிவில்லார்க்குத் தாம்செய்த உபகாரத்தாலுண்டாகுந் தீமைக்கு மிகவும் அஞ்சவேண்டுமென்பது, கருத்து: எனெனில், பகைவர்கையிற் பட்ட வாள் இம்மையில் தம் உயிர்வாழ்க்கையை யொழித்தாலும் மறுமையில் வீர சுவர்க்க வின்பத்துக்குக் காரணமாம்: அறிவிலார்க்குச்செய்த உபகாரமோ செய்தவர்க்கு இம்மையிற் பழியையும் மறுமையிற் பாவத்தையும் தந்து அவரை இருமையுங் கெடுக்கு மாதலி னென்க.

வேற்றுமையணியை உட்கொண்டு வந்த எடுத்துக்காட்டுவமையணி.

ஓக்கிய என்னும் இறந்தகாலப் பெயரெச்சத்தில், ஒக்கு என்பதன் பிறவினையாகிய ஒக்கு - பகுதி; மெலி வலியானது - பிறவினைக்குறி. ஒன்னர் - ஒன்னூர் என்பதன் மரூஉ; சேராதவ ரென்று பொருள்.

'ஆக்க மிருமையுஞ் சென்று கெதைத்தலால்' என்று பாடங்கொண்டு, தம்மூடைய நன்மையை இம்மை மறுமை யென்ற இரண்டிடத்துக் கெடுத்தலால் என்று பொருளுரைத்தலு மொன்று. (கூ)

கஉ. மனப்பாசங் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
யெனைத்தூழி வாழ்தியோ நெஞ்சே—யெனைத்துஞ்
சிறுவரையே யாயினுஞ் செய்தநன் றல்லா
லுறுபயனே யில்லை யுயிர்க்கு.

(இ - ள்.) நெஞ்சே - மனமே!—மனே பாசம் கைவிடாய் - மனையாளிடத்து உள்ள அன்பை விடாமல், மக்கட்கு என்று எங்கி - பிள்ளைகளுக்காகவும் இரங்கி, 'எனைத்தூழி வாழ்தியோ-எத்தனைகாலம் வாழ்வாயோ? எனைத்தும் சிறு வரையே யாயினும் - எவ்வளவு சிறிதாயினும், செய்த-(ஒருவன்) செய்துள்ள, நன்று அல்லால் - நற்காரியமே யல்லாமல், உயிர்க்கு - (அவனது) உயிர்க்கு, உறு பயனே-அடையும்படியான நற்பயனே, இல்லை-வேறில்லை; (எ - று.)

உயிர்க்கு உறுதியாகிய கல்வினையைத் தேடாது ஸம்ஸாரபாசபந்தத்தில் அகப்பட்டுழன்று வீண்காலங்கழித்தலாலாகுந் தீமைக்கு அஞ்சவேண்டுமென்பது, இதனுற் கூறப்பட்டது.

'எனைத்தூழி வாழ்தியோ' என்றதனால், யாக்கைநிலையாமையைக்குறிப்பித்தவாறு. முதுமொழியினால், பெண்டு பிள்ளைகள் மறுமைக்கு உதவாமையை உணர்த்தினார்.

இச்செய்யுளின் பின்னிரண்டடியை, கீழ் உ0-ஆஞ் செய்யுளின் முன்னிரண்டடியோடு ஒருசார் ஒப்பிக.

இச்செய்யுளில், ஸாந்திரஸம் தோன்றுமாறு காண்க.

ஸம்ஸாரத்தினின்று அப்பாற்செல்லவொட்டாதகயிறுபோலக்கட்டிப் படித்தலால், அன்பை 'பாசம்' என்றே கூறினர்: உவமையாகுபெயராகிய காரணக்குறி. கைவிடாய்-முற்றெச்சம்; கை-உபசர்க்கம்: தனக்கென்றஒருபொருளில்லாமல் வினையையத்த்து வந்தது. சிறவரை-சிறிய அளவு. (கo)

இல்லறவியல் முற்றிற்று.

அறத்துப்பால் முற்றுப்பெற்றது.

இரண்டாவது

## பொருட்பால்.

அஃதாவது - இல்லறத்தின்வழிப்படுவனவாகிய பொருளின்பங்களுள் பொருளே உணர்த்தும் பாகம். இரண்டாம் வேற்றுமையுருபும்பயனுமுடன் தொக்கதொகை. பொருளின்பங்களிற்பற்றுவிடுதலேதுறவாதலால்,இல்லைதுறவறத்தின் வழிப்படுவனவல்ல. பொருளாவது - தனது அனுபவத்தால் இம்மையையும் தானம்முதலியவற்றால் மறுமையையுந் தருவதாகித் தருமவழியிற் சேர்க்கப்பட்ட பொன் மணி நெல் முதலியன. உலகத்திற்கு உயிர் போலச் சிறந்த அரசனது நீதி பொருளுக்குத் தினைக்காரண மாதலால், அவ்வரசனீதி கூறவே பொருளின்தன்மை கூறியதா மெனக் கொண்டு, இப்பொருட்பா லிருபத்தி நான்கதிகாரங்களாலும் அதனைக்கூறுகின்றார்.

இப்பொருட்பால்-பதினைஞ்காம் அதிகாரம் முதல் ஏழு அதிகாரங்கள் அரசியலென்றும், அதன்பின்நான்குஅதிகாரங்கள் சுட்டியலென்றும்,அதன்பின் மூன்று அதிகாரங்கள் இன்பவியலென்றும், அதன்பின் நான்கு அதிகாரங்கள் தன்பவியலென்றும், அதனபின் ஓர் அதிகாரம்பொதுவியலென்றும், அதன்பின் நான்கு அதிகாரங்கள் பகையியலென்றும், அதன்பின் ஓர் அதிகாரம் பன்னெறியியலென்றும் ஏழு உட்பிரிவுகளோ டுடையதாய்அழைக்கப்பட்டது; "பொருளியல் வகையேழுபுலப்படக்கினப்பின், அரசியலேழுநிகாரமாகு, சுட்டியல் நான்கதிகாரமின்ப, மூன்றேதின்பவியலதிகாராறான்கே ஒன்றே பொதுவியல் பகையியல், கூறதிகார நான்கே பன்னெறி,கூறதிகார மொன்றே" என்ற பழைய உரைசசூத்திரத்தை உணர்க, (இதனுல், ஓரியல் தானே ஓரதிகாரமாக வருதலுமுண்டி என்பதும் போதரும்.) அவற்றுள்,

முதலாவது

## அரசியல்.

அஃதாவது-அரசனது தன்மையைக்கூறும் பாகமென்றவாறு.அரசனீநியைக் கூறும்பொழுதி முதலில்அரசனது தன்மையைக்கூறியேயிவ்வேறு

கூறவேண்டியிருத்தலால், அதனைத்தெரிவிக்கும் அரியல்முதலில்வைக்கப் பட்டது: அரசு இயல்-இராசதருமம்;அதாவது-காவலோடாதிருமுறைமை.

---

## கசஅ ஆம் அதிகாரம்.—கல்வி.

அஃதாவது-அவ்வரசன் தான் கற்பதற்கு உரிய நூல்களைக் கற்றலைப் பற்றிச் சொல்வது. அவை - அறநூலும், நீதிநூலும், தேர் யானை குதிரை படைக்கலம் என்னப்பட்ட இவற்றின் நூல்களும் முதலியன. பொருள் பெறுதற்கு முதற்காரணமாயும், பெற்றபொருளைக் காத்தற்கும் பிறர்க்குச செலவழித்துத் தானும் அனுபவித்தற்குந் துணைக்காரணமாயும், இருத்தல் பற்றி, கல்வி முதலில் வைக்கப்பட்டது. அரசன் அறிவுடையவனுயிருந்தால் தனது உயிர்க்கேயன்றி உலகத்து உயிர்கட்கும் பயன்படுதல் நோக்கிஇஃது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும்,யாவர்க்கும்உறுதியைத்தருஞ்சிறப்பை புடைமையாற் பொதுப்படக் கூறப்படுகின்றது. 'கல்வியாவது-தத்தங் குல த்திற்கேற்ப நுதிதலும், பொருள்களை விளங்கக்கேட்டறிதலும், பின்பு அவற்றைத் தான் வகுத்துக்கூற வல்லனுதலுமாம்' என்பது, பழையவுரை. கல்வி - தொழிற்பெயர்; வி - விகுதி.

கஙக. குஞ்சி யழகுங் கொடுந்தாடிக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழுகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

(இ - ள்.) குஞ்சி அழகும்-மயிர்முடியின் அழகும், கொடுந்தாடிகோடு அழகும் - மடிப்புள்ள ஆடையினது கரையின் அழகும், மஞ்சள் அழகும் - கலவைப்பூச்சினது அழகும், அழகுஅல்ல-அழகாகமாட்டா; நெஞ்சத்தில் கல் லம்யாம் என்னும் நடுவுநிலைமையால் - மனத்தில் யாம்; நற்குணமுடையோ மென்று காண்கின்ற கோணுதலில்லாத தன்மையால்,கல்வி அழகேஅழகு- படிப்பினுலுண்டாகும் அழகே அழகாம்; (எ - று.)

குஞ்சியழகு முதலியன தம்மைப்பார்க்கும் பிறர்க்கேயன்றித் தமக்கு இன்பந்தருவன அல்ல, கல்வி யொன்றே தம்மனத்திற்கு இன்பந்தருவது என்பதாம். இனி, பின்னிரண்டடிக்கு மனத்தில் நல்லவர்களா யிருக்கக் கடவோம் யாமென்ற எண்ணுகிற பக்ஷபாதமில்லாத தன்மையோடுகூடிய கல்வியினது அழகே அழகென்று உரைப்பாரு முளர்.

ஆடவர்க்குஉரிய குஞ்சியை முதலிலும், மகளிர்க்குஉரியமஞ்சளிஇறதி யிலும், இருவர்க்கும் பொதுவாகிய தானையை இடையிலும் வைத்துக்கூறிய தாகக்கொண்டு இப்பாட்டை ஆண்கல்விக்கும் பெண்கல்விக்கும் பொது வென்பர் சிலர்.

"மயிர்வனப்புங் கண்ணவரு மார்பின் வனப்பும், உயிர்வனப்புங் காதின் வனப்புஞ்—செயிர்தீர்ந்த பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த,

சொல்லின் வனப்பே வனப்பு" என்னுஞ் சீறுபஞ்சமூலக்செய்யுளேயும், "இடைவனப்புந் தோள்வனப்பு மீடின் வனப்பு, நடைவனப்பு நாணின் வனப்பும்—புடைசால், கழுத்தின் வனப்பும் வனப்பல்ல வெண்ணே, டெழித்தின் வனப்பே வனப்பு" என்னும் ஏலாதிச் செய்யுளேயும் இங்கு ஒப்பு நோக்குக. "கேயூரணி நபூஷயந்தி புருஷம் ஹாரா நசந்த்ரோஜ்வலாஃ, ந்ஸ்நாநம் நவிலேபநம் நகுஸுமம் நாலங்க்ருதா மூர்த்நஜா: | வாண்யேகா ஸமலங்கரோதி புருஷம் யா ஸம்ஸ்க்ருதா தார்யதே, க்ஷீயந்தே கலு பூஷ ணாநி ஸததம் வாக்பூஷணம்பூஷணம்," "வித்யைவபூஷணம் பும்ஸாம்" என்னும் வடநூல் மேற்கோள்கள் இங்கு ஒப்பிடத்தக்கன.

குஞ்சி-ஆண்மயிர்; பங்கி, குமிழ், கிகை என்பனவும் இவ்வாறே: (அளகம், ஒதி, கூர்தல், ஐம்பால், கோதை என்பன - பெண்மயிரின் பெயராம்.) கொடிமை-வளைவு; கொடுங்கோல், கொடிலான், கொடுமரம், கொடும்புறம் என்றவிடங்களிலும் காண்க; இங்கே மடிப்புக்குக் கொள்ளப்பட்டது. மஞ்சன்-மற்றும் பலவகைப்பட்ட மேற்பூசுசுக்களுக்கும், கொடிதானைக்கோடு-பூபரணங்களுக்கும், குஞ்சி-பிறவுறுப்புக்களுக்கும் உபலக்ஷணம். நல்லம் - தன்மைப் பன்மைக் குறிப்புமுற்று; அம்-விகுதி. எ - பிரிநிலை. (எ)

கருஉ. இம்மை பயக்குமா ரீயக் குறைவின்றுற்
றம்மை வீளக்குமாற் றுமுளாராக் கேடின்று
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்வியோன்
மம்ம ரறுக்கு மருந்து.

(இ - ள்.) (கல்வியானது),—இம்மை-இப்பிறப்பின் பயனுகிய தத்துவ ஞானத்தை, பயக்கும் - (தன்னேயுடையாளுக்குத்) தரும்; ஈய-(பிறர்க்குச்) கொடுக்க. [போதித்தலால் என்றபடி], குறைவு இன்று-(செல்வம்போலவ்) குறைவுபடாது [மேன்மேல் வளரும்]; தம்மை வீளக்கும் - தம்மை (ப் புகழால்நெடுந்தூரமட்டும்) வீளங்கச்செய்யும்; தாம் உளர் ஆ கேடு இன்று-தாங்கள் உயிருள்ளவராக வாழுமளவும் அழிதலில்லே; ஆல்-ஆதலால்,—யாம்—, கல்விபோல் மம்மர் அறுக்கும் மருந்து-கல்விபோல அறியாமையாகிய நோயையொழிக்கின்ற தொரு மருந்தை, எம்மை உலகத்தும்-எத்தன்மையான உலகத்திலும், காணேம்-காண்கின்றேமில்லே; (எ - று.)—மம்மர்-மயக்கம்.

கல்விப்பொருளானது செல்வப்பொருள்போலவே இம்மையைப் பயர்தும் ஈயக்குறைவதில்லே; அன்றியும், தம்மை வீளக்குவதாயிருக்தும் தாமுள்ளபோது கெடுவதில்லே, அதுவன்றியும், செல்வமோ அலிவேகத்தை வளர்க்கின்றது; இக்கல்வியோ அதனே அடியோடு ஒழிக்கின்றது எனச் செல்வத்திற்கும் கல்விக்கும் வேற்றுமைதோன்றக் கூறியுள்ளது காண்க.

கல்வியை மருந்தாகக் கூறியதற்கு ஏற்ப, மம்மரை நோயாகக்கூறுதலுள், இலீத-ஏகதேசவுருவகவணி; 'கல்லிபோல்' என உவமையணியுள் கலந்துவர்தது.

உடற்பிணிதீர்க்கும் மருந்தினும் உயிர்ப்பிணிதீர்க்குங் கல்வி பலவகையாலுஞ் சிறந்ததென்பது, இதனுள் கூறப்பட்டது.

இச்செய்யுள், தொல்காப்பியப் பொருளதிகார நச்சினார்க்கினியருரையில் ஒதற்சிறப்புக்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. "அறம்பொருளின்பமும் வீடும் பயக்கும், புறங்கடை கல்வியைபுகாட்டு—முறங்கவலொன், முற்றியும் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லே, சிற்றுயிர்க் குற்ற தீண்" என பின்னோர் கூறியதும் காண்க.

இம்மை-பயனுக்கு ஆகுபெயர். மை விகுதி-இம்மை யென்பதில் இடப்பொருளையும், எம்மை யென்பதில் தன்மைப்பொருளையும் உணர்த்திற்று. தேவலோகத்து மருந்தாகிய அமிருதமும் மம்மரறுக்கா தாதலால் அதனினுஞ்சிறந்ததென்பது தோன்ற, 'எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்வி போன் மம்மரறுக்கு மருந்து' எனப்பட்டது. இம்மை-செல்வம் எனவுமாம், முதலிலுள்ள மூன்று 'ஆல்' - அசை; நான்காவது 'ஆல்' - ஆதலால் என்பதன் விகாரம். (உ)

கருங். களர்நிலத் துப்பிறந்த வுப்பினைச் சான்றோர்
வீளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

(இ - ள்.) களர் நிலத்து பிறந்த - (இழிவானிய) உவர்நிலத்தில் உண்டான, உப்பினை-உப்பை, சான்றோர் - பெரியோர், வீளை நிலத்து நெல்லின் விழுமிது ஆ - வீளைங்கின்ற (நல்ல) நிலத்தில் தோன்றிய நெல்லினுஞ் சிறந்ததாக, கொள்வர் - கொள்வார்கள்; (அதுபோலவே), கடைநிலத்தோர் ஆயினும்-இழிவானசாதியிற் பிறந்தவர்களாஞலும், கற்று அறிந்தோரை-(துல்லீனக்) கற்று (அவற்றின் பொருளை) அறிந்தவர்களை, தலை நிலத்து வைக்கப்படும் - மேன்மையான இடத்தில் வைத்து கௌரவிக்கவேண்டும்;

பிறப்புப்பற்றி உயர்வு தாழ்வு பாராட்டாமற் கல்விச்சிறப்பால் நன்கு மதிக்கவேண்டுமென்பது, கருத்து. "நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன், கற்றில ஞயிற் கீழிருப்பவனே," "எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும், அக்குடியிற் கற்றோரை யருக வென்பார்," "ஆக்கு மறிவானலது பிறப்பினுண்மீக்கொ ளுயர்விழிவுவேண்டற்க," "மெய்த்த திருவள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்வியால், தெய்ந்த சங்கத்தார் தாழ்ந்தார் சோமேசர - வுய்த்தறியின், மேற் பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்து, கற்றா னேற்றிலர் பாடு," "வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளுங், கீழ்ப்பாலொருவன் கற்பின், மேற்பாலொருவனு மவன்கட் படுமே" என்பன காண்க. உப்பின்சுவை உணவுக்கு இன்றியமையாததி போலக் கல்வியறிவு மக்கட்கு இன்றியமையாததென்பது தோன்ற, உப்பைத் திருஷ்டாந்தமாக எடுத்துக் கூறினர். உப்பு விழுமிதாக் கொள்ளப்படுதலே, "வுண்ணும் ளாநாம் வலணும் ப்ராநாம்" என்னும் வடநூல்மேற்கோளைக்கொண்டும், "உப்பில்லாப் பண்டம்குப்பையிலே" என்னும் பழமொழியைக் கொண்டும்உணர்க. இனி, நெல்லின் - நெல்லைப்போல எனவும் உரைப்பர்.

*வீழுமிது-வீழும மென்னும் உரிச்சொல்லினடியாகப் பிறந்த ஒன்றன் பாற் குறிப்புவினையாலணையும்பெயர். வைக்கப்படும்-ஒருவகை வியங்கோள் வினைமுற்று: செய்வினை: செயப்பாட்டுவினையன்று. அன்றி, வைக்க என்பதைச் செயவெனெச்சம் தொழிற்பெயர்த்தன்மைப்பட்டு வந்ததாகக்கொண்டு, மைவக்க - வைத்தல், படும் - தகும் என்றும் உரைக்கலாம்.*

*இச்செய்யுளில் 'வருக்கவேதுகை'யோடு உயிரொதுகை; அதாவது-இரண்டாமெழுத்து ஒன்றுதலினும் இரண்டாமெழுத்தின்மேலேறிய உயிர் ஒன்றி நிற்பது.* (கூ)

கஉ. வைப்புழிக் கோட்படா வாய்த்தியிற் கேடில்லை
மிக்க நிறப்பி னரசர் செறின்வவ்வா
ரெச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

(இ - ன்.) (விச்சை) - கல்விகள், வைப்பு உழி - வைக்கப்பட்ட இடத்தில், கோள்படா-(பிறராற்)கவரப்படமாட்டா; வாய்த்தி-(கொள்பவர்தக்கவராகக்) கிடைத்தி, ஈயின்-(அவர்க்குக்) கொடுத்தால்,கேடு இல்லை-குறைதலில்லை; மிக்க நிறப்பின் - மிகுதியான நிறப்பினாலே, அரசர் - அரசர்கள் செறின்-(பொருமைகாரணமாகக்)கோபித்தாலும்,வவ்வார்-அபகரிக்கமாட்டார்கள்; (ஆதலால்), ஒருவன்—, எசசம் என - ஆக்கமென்று, மக்கட்கு - (தனது) பிள்ளைகளுக்கு, செய்வன-சேர்த்துவைக்கத்தக்கவை, விச்சை கல்வி;பொருள்களேயாம்; பிற அல்ல-மற்றைச் செல்வப் பொருள்களல்ல.

செல்வப்பொருள்கள் கள்ளராலும் ஞாதியர்முதலியோராலுங்கவர்ந்து கொள்ளப்படும், பிறர்க்குக்கொடுத்தாற் செலவழிந்துபோம்,கொடுங்கோன்மன்னராற்கொள்ளே கொள்ளப்படும்; கல்விப்பொருளுக்குஇத்தன்மையான அபாயங்கள் ஒன்றும் இல்லை; ஆதலால், செல்வப்பொருளினும் கல்விப் பொருளே சிறந்த தென்பது கருத்து. வேற்றுமையணி.

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு, மாடல்ல மற்றையவை', "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து, முந்தி யிருப்பச் செயல்" என்ற திருக்குறள்களேயும், 'அழிவின்மையாவது-தாயத்தார் கள்வர் வலியர் அரசர் என்றிவராற் கொள்ளப்படாமையும், வழிபட்டார்க்குக் கொடுத்துழிக் குறையாமையுமாம்' என்ற பரிமேலழகருரையையும் இங்கே அறிக.

செல்வத்தினும் கல்வி சிறந்ததென்பதற்குக் காரணங்காட்டி, அதனை மக்கட்குச் செய்யவேண்டியது கடமையென்பது, இதனாற் கூறப்பட்டது.

வைப்பு உழி-வைத்தலியுடைய இடம். கோள்-கொள்ளுதல்; முதனிலை நிரிந்த தொழிற்பெயர். எச்சம் - (சம்பாத்தியத்தில்) மிச்சப்பட்டு நிற்பது; ஆல்தி. எஞ்சு - பகுதி, அம்-கருத்தாப்பொருள்விகுதி, வலித்தல்-விகாரம். விச்சை-வித்யா என்னும் வடமொழியின் திரிவு, மற்று-அசை;வினைமாற்றுமாம், மற்று, பிற - ஒருபொருட்பன்மொழி யெனவுங் கொள்ளலாம்.

"ஸோரஹார்யம் சராஜஹார்யம்வீதேஸயாகோசபாகாரி | ஏதத்தாம் வர்வதாத் ப்ரதாகம் வித்யாதாம் யத் புருஷா வஹந்தி" என்ற சுலோகம் இவ்வு ஒப்பிடத்தக்கது.

இக்காலடிநானூற்றில் ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வொரு புலவரால் தனித்தனி பாடப்பட்டதாதலால், இச்செய்யுளில்:ஈயிற்கேடில்லே'என்றது "ஈயக்குறைவின்று" என்றதனேடே கூறியதுகூற லென்னும் குற்ற மாகாதென அறிக; மற்றும் இவ்வனம் வருவனவற்றிற்செல்லாம் இஃது ஒக்கும். இச்செய்யுளில் இனவேதுகை. (சு)

காடு. கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதி
னூராய்ச் தமைவுடைய கற்பவே ரீரொழியப்
பாலுண் குருகிற் நெரிந்து.

(இ - ன்.) கல்வி கரை இல - வித்தைகளாயிய கடல்களோ கரையை புடையனவல்ல; கற்பவர் நாள் சில-(அவற்றைப்) படிப்பவரது வாழ்காட் களோ சிலவாம்; மெல்ல நினைக்கின் பிணி பல-விரைவின்றி ஆலோசித்துப் பார்த்தால் (அவ்வாழ்காள் சிலவற்றுள்ளும்) நோய்களோ பல உள்ளன; (ஆதலால்), நீர் ஒழிய பால் உண் குருகின் - நீர் ஒழியப் [பிரித்துவிட்டுப்] பாலமாத்திரமே உண்கின்ற அன்னப்பறவைபோல, தெரிந்து-(நூல்களின் தன்மைகளேப் பகுத்து-அறிந்து, தெள்ளிதின் ஆராய்ந்த-தெளிவாக ஆராய்ச்சிசெய்து, அமைவு உடைய - சாரமாகவுள்ள ஞானநூல்களேயே, கற்ப - (வீவேகிகள்) படிப்பார்கள்; (எ - று.)

கல்வி கடல்போற் பரந்தும், ஆயுள்காள் மிகக்குறுகியும், அவ்வாழ் காளிலும் கற்கவொட்டாது தடைசெய்யும் பலவகையாகிய பிணிகள் மிக் கும் இருத்தலால், பெறுதற்கரிய மனிதசன்மமெடுத்தோர் சாரமானவற் றைப்படித்த உய்யக்கடவரென்பதாம். ("அசுக்தபாரம் மஹாவேஜிதவ்யம் அல்பஸ்சகாலோபஹவச்சவிக்காயத்வாரபூதம்தது நீத்,ஸம்லோயஹாத் ஸ்ரீரமிவாம்புமிச்சம்"என்ற வடநூல் மேற்கோளும்இப்பொருளுடையதே.)

'அமைவுடைய' என்றது, வேதாந்தநூல்களே. பாலேயும்நீரையுங்கலந்து வைத்தால் அன்னப்பறவை நீரைப்பிரித்துவிட்டுப் பாலே உண்ணுமென்பது நூற்றணிவு; "பானிதக்குருஜனுங்க்து" என்றார் சீத்தாமணியாரும்.இதபற் றியே, அன்னம் தலைமாணுக்கர்க்கு உவமை கூறப்படும்.சுரை-எல்லேழுடிவு.

இச்செய்யுளின் பின்னிரண்டடிகளில் இனவேதுகையோடு வருக்க வேதுகை. (டு)

கூடு. தோணி யியக்குவான் றெல்லே வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்—காணு
யவன்றுணேயா வாறுபோ யற்றேநூல் கற்ற
முகன்றுணேயா நல்ல கொளல்.

'(இ - ன்.) (மேற்பட்டசாதியிற் பிறந்தவனுமினும்), தூல் கற்ற மகன்- சான்றோர்களேப்பதித்த மனிதனே, தினை ஆ - (ஒருவன்) தினையாகக்கொண்டு, கல்ல - நிறந்த நூற்பொருள்களே, கொளல் - 'அறிந்துகொள்ளுதலானது,—தோணி இயக்குவான் - மாக்கலத்தைச் செலுத்துபவன், தொல்லே வருணத்து-பழமையான சாதிகளுள், கடைப்பட்டான் என்று - இழிவான சாதியிற்பிறந்தவனென்று, காணின்-(யாவரும்) அறிந்திருந்தும், இகழார் - (அவனே) இகழ்ச்செய்யாதவர்களாய், அவன் தினை ஆ - அவனைத் தினையாகக்கொண்டு, ஆறுபோய் அற்றே-ஆற்றுவெள்ளத்தைக் கடந்துபோனற் போன்றதாம்; (எ - று.)

தாழ்ந்தசாதியனுமினும் மீகாமனேக்கொண்டே வெள்ளத்தைக்கடப் பது இன்றியமையாதிருத்தல்போல, தாழ்ந்தசாதியனுமினும் கற்றவனேக் கொண்டே அவசியமானபொழுது நூல்களேக் 'கற்கவேண்டு மென்பதாம். உவமையணி.

பிறப்பினலுண்டாரும் பெருமையினும் கல்வியினலுண்டாரும் பெருமை நிறந்ததென்றவாறு 'வேற்றுமைதெரிர்தாற்பாலன்ஞரு, கீழ்ப்பாலொரு வன்கற்றின், மேற்பாலொருவனு மவன்கட்படுமே" என்றார் பிறரும். 'கற்ற வன்' என்னுது 'கற்றமகன்' என்றது, கல்லாதவன் மனிதருள் வைக்கப் படாது விலங்குகளோடு ஒப்பமதிக்கப்படுவா னென்பது விளங்குதற்கு.

தோணி - த்தோணி என்னும் வடமொழியின் திதைவு. சாதிவிகற்பஞ் சிருஷ்டிகாலத்தே ஏற்பட்டதன்றி யிடையிலே வந்ததென்பது தோன்ற, 'தொல்லேவருணம்' எனப்பட்டது. காலைய்-முன்னிலேயசை; நீ அறி என்றுமாம். போய்-போனு லென்னும் எச்சத்தின் திரிபு; இனி, போயற்று என்பதை - போயதற்று என்பதன் பிராமாகவுங் கொள்ளலாம்.

இசையியுளின் பின்னிரண்டடிகளின் உயிரேதுகையோடு முன்றமே முதற் தொன்றெதுகை. மூன்றுமெழுத்தொன்றெதுகையாவது - இரண்டாமெழுத்து ஒன்றுது நிற்க மூன்றுமெழுத்து ஒன்றிநிற்பது. (கூ)

**கருஎ.** தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையா
ரிகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலரி னிதாயிற் காண்பா மகலவானத்
தும்ப ருறைவரா பதி.

(இ - ன்.) தவல் அரு-தவறுதலில்லாத, தொல் - பழமையால [தொன்றுதொட்டுப் பரம்பரையாக வருகின்ற] கேள்வி - நூற்கேள்விகளினது, தன்மை-தன்மையை, உடையார்-உடையவர்களாரு, இகல் இலர்-பகைமைக் குணமில்லாதவர்களாரு, எஃகு உடையார்தம்முள் - புத்திக்கூர்மையுடைய வர்களாரு ஆகிய கற்றவர்களுடைய குழாத்தினுளே, குழீஇ-கூடி யிருத்தி, நகலின் - மகிழ்தலேக்காட்டிலும், இனிது ஆயின் - இன்பந்தருவதாமானுல், அகல் வானத்து உம்பர் உறைவரா பதி - பரந்த விண்ணுலகத்தில் வாசம் செய்கின்ற தேவர்களது சுகமாகிய அமராவதியை, காண்பாம் - (யாம்) காணக்கடவோம்; (எ - று.)

கற்றோர் நேசத்தைப்போல சுவர்க்காநுபவம் தத்துவஞானத்துக்கும் முத்திபெறுவதற்கும் எதுவாகாததனுல், கற்றவர்களோடினேந்தித்து அனு

பலிக்கும் ஆனந்தம் சுவர்க்காநுபவத்தா லுண்டாகும் ஆனந்தத்தினுஞ் நெ க்கதென்பது, கருத்து. அறிவுடையோருடன் கூடி மகிழ்தலினும் இனிய தன்றுதலின் தேவர்பதியை யாம் காணக்கடவேமல்லோம் எனக் கற்றறிந் தோரது கூட்டுறவின் அருமைபெருமைகளைத் தெரிவித்தபடி. தேவர்கட் கும் வித்துவான்கட்கும் வடமொழியில் 'விபுதர்' என்ற பெயரும், தென் மொழியில் 'புலவர்' என்ற பெயரும் உள்ளது, இங்குக் காணத்தக்கது.

ஒவ்வொருவனும் பெரும்பாலும் தன்னேப்பற்றித்தான்பன்மையாகவே எண்ணுதல் இயல்பாதலால், 'காண்பாம்' எனப்பட்டது; தனித்தன்மைப் பன்மை. தவல்-தொழிற்பெயர்; தபு என்பதன் மரூஉவாகிய தவு - பகுதி. கேள்வியாவது - கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல்; இது, கற்றவர்க்குக் கல்வியறிவலவலியுறுத்துதலாலும், கல்லாத வர்க்கும்அவ்வறிவை உண்டாக்குதலாலும் சிறந்ததா மெனஅறிக. கேள்வி-தொழிற்பெயர். எமரு - ஆயுதம்: கூர்மை; இங்கே, புத்தி மட்டம். குழுமி அல்லது குழுவி என்பது, குழீஇ எனவிகாரப்பட்டு ஆளபெற்றது; இது, சொல்லிசையளபெடையின் பாற்படும். உம்பர் - மேலிடம்; இங்கே, சுவர்க் கம். அகல் வானம் - விளக்குத்தொகை.

தொல்காப்பியப்பொருளதிகாரச்சினர்க்கினியருரையில், இப்பாட்டு, அறிவுபொருளாக உவகைபிறக்குதற்கு உதாரணங காட்டப்பட்டுள்ளது.

கூடூஉ கனை கடற் றண்சேர்ப்பக் கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்பி தின் றற்றே— நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
வீர மிலாளர் தொடர்பு.

(இ - ன்.) கனை - ஒலிக்கின்ற, கடல்-கடலினது, தண்-குளிர்ச்சியான, சேர்ப்ப - துறையையுடையவனே!—கற்று - (நல்ல நூல்களைப்) படித்து, அறிந்தார் - (அவற்றின் பொருள்களை) அறிந்தவர்களது, கேண்மை-சினேக மானது, நுனியின் கரும்பு தின்று அற்று - நுனியிலிருந்து (அடிவரையிற்) கரும்பைத் தின்றுற்போன்றது [வரவர இனிமையிகும்]; பண்பு இலா - (அக் கற்றறிவாகிய) குணமில்லாத, ஈரம் இலாளர் - அன்பில்லாதவர்க ளுடைய, தொடர்பு-சினேகம், நுனி நீக்கி - (அக்கரும்பை) நுனியிலிருந்து தின்னுதலே ஒழித்து, தூரின் தின்று அன்ன-அடியிலிருந்து தின்றுற் போ ன்ற, தகைத்து-தன்மையையுடையது [வரவர இனிமைகுறையும்.] (எ-று.)

பயனுவமையணி. இதனை, கடலு, சுகு - ஆங்காலிகளோடு ஒப்பிடுக. "கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை யெஞ்ஞான்றுங், குருத்திற்கரும் புதின் றற்றே - குருத்திற், கெதிர்செலத் தின்றனன் றகைத்தரோ வென் றும், மதர மிலாளர் தொடர்பு" என மேல் சுட்பாராய்தலில் வருவதும் காண்க. அரோ - ஈற்றசை.

"இதோகாரத்தாத் க்ரமஸ: பர்வணிபர்வணி யதா ரஸவிஸேஷ: | தத் வத் லஜ்ஜாமைத்ரீ விபதாகாத்துவிபதா" என்னும் வடநூல்மேற்கோளை அடியொற்றியது இச்செய்யுள். (அ)

கருக. கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகி
னல்லறிவு நாளுந் தலைப்படுவர்—தொல்சிறப்பி
னெண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

(இ - ன்.) தொல் சிறப்பின்-பழமையான [இயற்கையாகவுள்ள] சிறப்பையும், ஒள் நிறம்-பிரகாசமான நிறத்தையும் உடைய, பாதிரி பூ - பாதிரி மரத்தின் மலரை, சேர்தலால் - அடைதலினால், புது ஓடி - புதிதான பானையோடானது, தண் நீர்க்கு-(தன்னிடமுள்ள) குளிர்ந்த நீர்க்கு, தான்பயந்து ஆங்கு'-தான் (வாசனையைக்) கொடுத்தாற்போல,—கல்லாரே ஆயினும் - (தாம்) படியாதவர்களேயானாலும், கற்றாரை சேர்ந்து ஒழுகின் - படித்தவர்களைச் சேர்ந்தாடால், நல்அறிவு நாளும் தலைப்படுவர் - (அச்சேர்க்கையால்) நல்லஅறிவு நாள்தோறும் உண்டாகப்பெறுவர்; (எ - று.) .

புத்தோடு - கல்லார்க்கும், பாதிரிப்பூ-கற்றார்க்கும், நல்ல பரிமளம் - நல்லறிவுக்கும் உவமை யெனக்காண்க. 'புத்தோடுதண்ணீர்க்குத்தான்பயந் தாங்கு' என்ற உவமையால், முன்னே கல்லாதவர் பின்பு கற்றோரதுசேர்க்கையால் தாம் அடைந்த அறிவைத் தம்மைச்சார்ந்தவர்க்குத்தருவரென்பது பெறப்பட்டது. புதுப்பானையிற் பாதிரிமலர்களையும் நீரையும் பெய்தலைத் தால் அந்நீர் நல்லமணத்தைப் பெறுமென அறிக. ''பூவோடு சேர்ந்தாரும் மணம் பெறும்'' என்ற பழமொழியோடு ஒத்தது இவ்வுவமை ''நல்லமண மூள்ளதொன்றை நண்ணியிருப்பதற்கு, நல்ல மணமுண்டாம் நலமது போல்—நல்ல, குணமுடையோர் தங்களுடன் கூடியிருப் பார்க்குக், குண மதுவே யாஞ்சேர்வு கொண்டு'' என்றார் பெரியாரும்.

அறிவு தலைப்படுவர்-நிறைவழுவமைதி: [நன்-பொது-உரை.] புதுமை யென்னும் பண்புப்பெயர், ஈறுபோய்த் தன்னெற்றிரட்டி, புத்தோடு எனப் புணர்ந்தது. ஆங்கு - உவமவுருபாகிய இடைச்சொல். (கூ)

கூச0 அலகுசால் கற்பி னறிவுதரல் கல்லா
துலகநூ லோதுவ தெல்லாங்—கலகல
கூஉக் தினையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்.

(இ - ன்.) அலகு சால் - அளவு மிக்க, கற்பின் - வித்தைகளுள்ளே, அறிவுதரல்-தத்துவஞானத்தைத் தருகின்ற சாஸ்திரங்களே, கல்லாது - படியாமல், உலகம் நூல்-இவ்வுலகத்துக்கே பயன்படுகின்றவேறநூல்களே, ஓதுவது எல்லாம்-படிப்பது முழுவதும், கலகல கூஉம் தினை அல்லால்-கலகலவென்று கூவுமளவேயல்லாமல், கொண்டு - (அவ்வுலகநூலோதுவதைக்) கொண்டு, தடுமாற்றம் போம்துணை அறிவார்-(பிறவித்தின்பக்களில்) தடுமாறுதல் நீங்குக் தன்மையை அறிபவர், இல்-இல்லை; (எ - று.)

அறிவுதரல்-ஞானசாஸ்திரங்கள். உலகநூல்-தருக்கம்,வியாகரணம் முதலியன. 'அறிவுதரல்கல்லா துலகநூ லோதுவது' என்றதனால், தத்துவ நூற்

பயிற்சிக்கு வேண்டிய அளவு மற்றைய நூல்களேயுங்கற்றல்வேண்டுமென்க; கீழ்த்தரவென்னும் அதிகாரத்தில் ''தொலைவில்லார்,சத்தருஞ்சோதிடமும் என்றாங் கிவையிதற்றும், பித்தரிற் பேதையா ரில்'' என்றதிலும் இச்செய்யுளின் கருத்து இருத்தல் காண்க.

இச்செய்யுளிலும், இன்னது கற்கவேண்டுமென்றுகூறியவாறு.

'அறிவனூலோதாது' என்ற பாடத்துக்கு-ஞானசொரூபியான கடவுளேப்பற்றிய நூல்களேப் படியாமலென்ற பொருள்; அன்றி, இறைவனற்கூறப்பட்ட ஆகமனூல்களே ஓதாமல் என்றுங் கொள்ளலாம்.

கற்பு - கல்வி; தொழிற்பெயர்: பு-விகுதி, இன் - ஏழனுருபு. கலகல - அநுகரணம்; இரட்டைக்கிளவி; இங்கே, பொருளில்லாமையைக்குறித்தது. அளபெடைகள்-செய்யுளோசை நிறைத்தன. கூம், போம்-கூவும், போகும்; செய்யுமெனைச்சத்து ஈற்றுயிர்மெய் கெட்டது. சால்-உரிச்சொல்.

பிண்ணிரண்டிகளில் அவ்வுத்தோடை காண்க. (கo)

---

## கடு ஆம் அதிகாரம்.—குடிப்பிறப்பு.

அஃதாவது -:உயர்ந்த குலத்திற் பிறத்தலினது சிறப்பைக்கூறுவது. உயர் குடியிற்பிறந்தார்க்கே பெரும்பாலும் கல்விகேள்விப்பயன்கள்அமைதலால், இது கல்வியின்பின் வைக்கப்பட்டது; அன்றியும், கல்வி ஒருவன் பிறந்த குடியை உயர்த்துதலே அதிகாரமுறைமைக்குக்காரணமென்னலாம்.

**குசுக.** உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணுங்
குடப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்ற
நிடுக்கண் டலைவந்தக் கண்ணு மரிமா
தொடிப்புற் கறிக்குமோ மற்று.

(இ-ள்.) உடுக்கையுலறி-உடுக்கப்படும் ஆடையுங்கெட்டு, உடம்புமழிந்தக்கண்ணும்-(உணவில்லாமையால்)உடம்பும்மெலிந்துமழிந்துபோவதானாலும், குடி பிறப்பு ஆளர்-உயர்ந்தகுடியிற்பிறத்தலேயுடையவர்கள், தம்கொள்கையின் குன்ற்-தமதுகுலத்துக்குஉரிய ஒழுக்கத்திற் குறைவுபடார்; (எதுபோலவெனின்),—இடுக்கண்தலைவந்தக்கண்ணும்-(பசியினுலாகிய)துன்பம் மிகுதியாய் உண்டாம்பொழுதும், அரிமா - சிங்கமாகிய மிருகம், கொடி புல் கறிக்குமோ-கொடியாகப் படர்ந்திருக்கும் புல்லைத்தின்னுமோ?[தின்ஞுது.]

மிருகேந்திரனுகிய சிங்கத்துக்குப் புல்லைத்தின்னுமைபோல, நிறைந்தவராகியகுடிப்பிறப்பாளர்க்குஒழுக்கம்குன்றுமை இயல்பென்பதாம். இதனுல், புல்லைத் தின்னுதல் பசுமுதலியவற்றிற்கு இயல்பாதல்போல ஒழுக்கங் குறைதல், தாழ்குடிப்பிறந்தார்க்கு இயல்பா மென்பதும் பெறப்படும். எடுத்துக்காட்டுவமையணி.

இரண்டுகோடியைக்களினுமுள்ள இழிவுசிறப்பும்மைகளால், பிறகாலங்களில் சிலவேறுபடாமை கூறுதே குறிப்பிக்கப்பட்டது. "புலி பசித்தாலும்

புல்லெத்தின்னுது", "கல்லாரெழுக்கின் றலைகின்றூர்கல்கூர்க்தும், அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய, செங்கட் புலியே றறப்பித்தற்கின் ஞவாம்" "பைங்கட் புனத்தபைங் கூழ்" என்பனகாண்க. 'தலைவர்தக்கண் ணும்வரிமா என்ற பாடத்தற்கு-கோடகளோடுடைய புலியென்ற பொருள்.

உடுக்கை உலறி - பொல்லாவுடுக்கையாற் பொலிவிழர்த்த என்றுமாம். உடுக்கை-உடுக்கப்படுவது என ஆடைக்குக் காரணப்பெயர்; இதனைத்தொழி லாகுபெய ரெனபாரு முளர். பிறப்பாளர்-பிறப்பை ஆள்பவர். 'இடுக்கண் என்பது-மலர்ந்தமுகக்கமின்றி மையல்நோக்கம் பட வரும் இரக்கம்' என ஆசிரியர் நச்சினர்க்கினியர் கூறியிருத்தலைக் கொண்டு, இங்குகண் என் பதனிடக்கண் எனவிகாரப்பட்ட தென்றும், தன்பம்நேருங்காலத்திற் கண் இங்குதலால் தன்பத்திற்கு இங்கண் எனப் பெயரென்றும் உணர்க. அரி மா - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ஓ - எதிர்மறை; மற்று - அசை.

கசஉ. சான்றாண்மை சாய லொழுக்க மிவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார் கல்லது—வான்றோயு
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வ
மெய்தியக் கண்ணும் பிறர்க்கு.

(இ - ன்.) வான் தோயும் - ஆகாயத்தை அளாவிய, மை தவழ்-மேகங் கள் தவழ்கின்ற, வெற்ப - மலையையுடைய அரசனே!—சான்றாண்மை-மற் குணங்களால் நிறைந்து (அவற்றை) ஆளுதலும், சாயல்-மென்மையும், ஒழுக் கம்-நல்லொழுக்கமும், இவை மூன்றும்—, வான் தோய் குடி பிறந்தார்க்கு அல்லது - (கீர்த்தியால்) மேலுலகத்தை அளாவிய [உயர்ந்த] குடியிற் பிறந் தவர்க்கே யல்லாமல், பிறர்க்கு - மற்றையோர்க்கு, பெருஞ் செல்வம் எய்தி யக்கண்ணும் - மிக்க செல்வம் உண்டானலும், படா - உண்டாகாவாம்.

"சாயல் மென்மை" என்னுக் தொல்காப்பியத்தற்சூத்திரத்தால், சாயல் என்பது ஐம்பொறிகளாலும் நுகரப்படும் பலவகைமென்மைகளேயும் உணர் த்துவதோர் உரிசசொல்லெனதலை உணர்க. வான்தோய் குடி - "வானுயர் தோற்றம்" என்றற்போல, உயர்ந்தகுடியென்னும் பொருள்பட நின்றது.

'வான்தோயுமைதவழ்வெற்ப' என்றவிடத்து, மலைக்கும் 'மேகத்துக் குஞ் சம்பந்தமில்லாமலிருக்கவுஞ் சம்பந்தத்தைக் கற்பித்துக் கூறியதனால், தோடரியுயர்வு நவிற்சியணி. வடனூலார் 'ஸம்பந்தாதிசயோக்தி' என்பர்: இதனுல், மலையினது உயர்வு தொனிக்கின்றது.

முதலடியில், பெயர்க்கேஷ்வேஷ சுற்றில் தொகைபெற்றது. ஆண் மை - பண்புப்பெயர்; வினைப்பகுதியடியாப்பிறந்தது: தொழிற்பெயரெனி னும் இழுக்காது. (உ)

கசஎ. இருக்கை யெழுது மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்ற மெழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்று வுணரற்பாற் றன்று.

(இ - ன்.) (பெரியோரைக்கண்டால்), இருக்கை எழுதலும் - (உடனே தமது) ஆசனத்தை விட்டு எழுந்து நிற்றலும், எதிர் செலவும் - (அவர்களை) எதிர்கொண்டு சென்று அழைத்துவருதலும், வினை - இன்னமும், விடுப்ப ஒழிதலோடு-(அவர்கள் மீளும்பொழுது) விடைகொடுக்கத் தாம் (அவரை விட்டுப்) பிரிதலும், இன்ன-இத்தன்மையான செய்கைகளே, குடிபிறந்தார்-உயர்ந்தகுடியிற் பிறந்தவர்கள், குன்ற ஒழுக்கம் ஆ - (என்றுங்) குறைவுபடாத [இயற்கையான] ஒழுக்கமாக, கொண்டார் - வைத்துக்கொண்டார்கள்; (ஆதலால், அவர்களே), கயவரோடு மூடர்களுடனே, ஒன்ற ஆ - ஒரு தன்மையாக, உணரல்பாற்று அன்று - மதித்தல் தக்கதன்று; (எ - று.)

நற்குடிப்பிறந்தாரும் பிறவாதாரும் மேல்கோக்கில ஒத்திருப்பினும் இவ்விருவர்க்குமுள்ள வேறுபாடு அவ்வவருடையஒழுக்கத்தால்கண்குபுலனு மென்பதாம். 'இன்ன' என்றதனால், இவைபோன்றமற்றும் பலகல்லொழுக்கங்களும் கொள்ளப்படும். இவையெல்லாம் இழிகுலத்தாரிடத்து இயற்கையாக அமைந்திராவாதலால், 'கயவரோடொன்ற வுணரற்பாற்றன்று' என்றார்.

இருக்கை - 'கை' விகுதி பெற்ற தொழிலாகுபெயர். வினை-வினைமாற்றுப்பொருளில் வந்த இடைச்சொல். ஒடு-எண்ணிடைச்சொல். கயமையாவது - நற்குணங்கள் யாவும் இல்லாத தன்மை: அதனினுடையவராகிய, கீழோர், கயவர். முதலடி - ழ் றுமோனை. (உ)

**கழுஉ நல்லவை செய்பி னீயல்பாகுர் நியவை**
**பல்லவர் நூற்றும் பழிபாகு—மெல்லா**
**முணருங் குடிப்பிறப்பி னூதிய மென்னே**
**புணரு மொருவர்க் கெனின்.**

(இ - ன்.) (உயர்குடியிற் பிறந்தவர்கள்), நல்லவைசெய்யின்-நல்ல காரியங்களைச் செய்வாராயின், இயல்பு ஆகும் - (அஃது அவர்கட்கு) இயற்கையென்றஎண்ணப்படும் [சிறப்பாககொள்ளப்படாது], நியவை (செய்யின்)-கெட்டகாரியங்களைச செய்தாலோ, பல்லவர் அற்றும பழி ஆகும் - (அது) பலரும் எதிர்த்துசொல்லும் பழிப்புக்குக் காரணமாம், (ஆதலால்), ஒருவர்க்கு—, புணரும் எனின்-(உயர்குடிப்பிறப்பு முன்னிய நல்வினையாற்) கூடினுல், எல்லாம் உணரும் குடி பிறப்பின் - எல்லாவற்றையும் அறியவல்ல அவ்வுயர்குடியிற் பிறத்தலினுல், ஊதியம் - பயன், என்னை - யாதோ.

உயர்குடிப்பிறந்தார்க்கு மிக்க நல்லொழுக்கத்தாலும் பெரும்புகழுண்டாதலில்லை; சிறிய தீயொழுக்கத்தாலும் பெரும்பழி உண்டாகின்றது; தாழ்குடியிற் பிறந்தார்க்கோ இவ்வனமில்லை: சிறிது நல்லொழுக்கத்தாற் பெரும்புகழும், பெருந்தீயொழுக்கத்தாற் பெறபழியும் உண்டாகின்றன; ஆதலால், உயர்குடிப்பிறந்தார்க்கு அக்குடிப்பிறப்பால் நஷ்டமேயொழிய லாபமில்லை என, வஞ்சகப்புகழ்ச்சி [நிந்தாஸ்துதி] வகையாற் குடிப்பிறப்பின் மேண்மையை விளக்கியபடி. இனி, நல்லவை செய்தலே இயல்பாகவும் நியவைசெய்தலைப் பலரும் அற்றம்பழியாகவுங்கொண்டு யாவராலும் அறி

ன்து ன்குமதிக்கப்படுகின்ற உயர்குடிப்பிறப்பு ஒருவர்க்குக் கூமோமின் அதனினும் இலாபம் வேறுயாதோ" [ஏதுவுமில்லை] என்ற உரைப்பினும் அமையும். மூக்கின பொருளுக்கு 'இன்' என்ற ஐக்தனுருபு - ஏதப்பொருளதும், பிக்கின பொருளுக்கு, எல்லைப் பொருளதுமாம். வெள்ளாடைக்கு மாசுபடிதல்போல, உயர்தோர்க்குப் பழியுண்டாவது எளிதாம்; "குடிப் பிறந்தார்கண்வினைக்குங்றம விசும்பின், மதிக்கண் மறப்போலயார்க்", "ஒன்றுய்விடினு மூபர்க்தார்ப் பங்குற்றங, ருண்றின்மேலிட்ட வினைக்கு" என்பன காண்க.

மூதலடியில் 'கல்லவை,' 'நியவை' என மாறபட்டசொற்கள் வர்தது- நூலீன தோடை. (சு)

கசசடு. கல்லாமை யர்சங் கயவர் கொழிலர்ஞ்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்ச—மெல்லா
மிரப்பார்க்கொன் ரூயாமை யாச மரத்தாரிம
மாணுக் குடிப்பிறந் தார்.

(இ - ள்.) கல்லாமை அசசம் - தாம் படியாமைக்கு அஞ்சுதலும், கய வர் தொழில் அசசம்-கீழோர்செய்யும் இழிதொழில்களேசை செய்தற்கு அஞ் சுதலும், சொல்லாமையுள்ளும் ஓர் சோர்வு அசசம் - (பொய் கோள் கடுஞ் சொல் பயனில்சொல் என்னுக் தீசசொற்களோ) சொல்லாமலிருப்பதிலும் (எந்த இடத்தில்தவறிப்போமோ என்று) ஒரு சோர்சசிக்கு அஞ்சுதலும், எல்லாம் இரப்பர்க்கு ஒன்று ஈயாமை அசசம் - (தமக்குவேண்டுவன) பல வற்றை இரப்பவர்களுக்குப் (அப்பொருள்கள்) பலவற்றுள் யாதாயினுமொ ன்றைக் கொடுக்கக்கூடாமற்போனால் அதற்கு அசசமும், (இதற்கண்மை யான பல அசசங்கள், உயிர்குடிப்பிறந்தார்க்கே உள்ளன); (ஆதலால்), இ மாணு குடி பிறந்தார் - மாட்சிமைப்படாத இவ்வுயர்குடியிற் பிறந்தவர்கள், மரத்தார்-மரக்கலத்தினுள்ளார்போல எப்பொழுதும் அசசமுடையரா.

இதனும் - வருவிப்பதற்கியலையமாக குடிப்பிறப்பின் மேன்மை யைத் தெரிவித்தது.

"ஒன்றனுக் தீசசொற் பொருட்பயனுண்டாயின், கன்றுகா தாகி லிடும்" ஆதலால், 'சொல்லாமையுள்ளுமோசோர்வச்சம்' எனப்பட்டது. தம்மிடத்து உள்ளதை எல்லாகொடுத்தது இல்லாததைக்குறித்தபிறகுவ தென்பார், 'எல்லாமிரப்பாக்கு ஒன்று ஈயாமை அசசம்' என்றார். உயர் குடியை 'மாணுக்குடி' என்றது, எப்பொழுதும் பல அசசத்திற்கு இடமா யிருத்தல்பற்றி; இனி, மாண் ஆகுடி எனப பிரித்து, மாட்சிமையாதலே யுடையகுடியென்று உரைத்தலும பொருத்தம்.

மரக்கல மென்பது சில இடங்களிற் கலமென நிற்றல்போல, இங்கே மரமென நின்றது; இடவாறு வருவதனே, வடமூலார் 'நாமைகதேத கேதா மகாறுணாம்' என்பர். இனி, மரமென்பதை - அதனுலாகிய தோணிக்குக் கருவியாகுபெயரெனக் கொள்ளலுமாம். இனி, மாணுக்குடிப்பிறந்தார மாட் சிமையில்லாத தாழ்ந்தகுடியிற் பிறந்தவர்கள், மரத்தார் - (இப்படிப்பட்ட அசசத்திற்குக் காரணமான உணர்சசி நிறைதம் இல்லாதமையால்) மரத்தோ டொப்பர் என்றும் உரைத்தல் கூடும்; மரத்தார்-மரத்தினுலுசெய்த பாவை போன்றவ ரென்றும் உரைப்பர். (சு)

கசசு. இனநன்மை யின்சொலொன் றீதன்மற் றேனை
மனநன்மை யென்றிவை யில்லாங்—கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப
விற்பிறந்தார் கண்ணே யுள.

(இ - ன்) கனம் - பெரிய, மணி - இரத்தினங்கள், முத்தோடு-முத்துக் களுடனே, இமைக்கும்-பிரகாசிக்கின்ற, முழங்கு உவரி - ஆரவாரிக்கின்ற கடலினது, தண் சேர்ப்ப - குளிர்ச்சியான கரையையுடையவனே!—இனம் நன்மை-நல்ல இனிதிதரை யுடைத்தாயிருந்தாலும், இன்சொல் - இனிய சொற்களைச்சொல்லுதலும், ஒன்ற ஈதல் - இரப்பதொருபொருளே (இரந் தோர்க்கு) க் கொடுத்தலும், ஈனை மனம் நன்மை - மற்றும் மனத்தினது நல்லமையும், என்ற இவை எல்லாம் - என்று சொல்லப்பட்ட இக்குண ங்களெல்லாம், இல் பிறந்தார் கண்ணே - உயர்குடியிற் பிறந்தவரிடத்தே, உள - (இயல்பாக) உள்ளன; (எ - று.)

'இற்பிறந்தார்கண்ணே' என்னும் பிரிநிலை ஏகாரத்தால், தாழ்குடிப் பிறந்தாரிடத்து இவை இல வென்பது பெறப்படும். மற்று - அசை. என் றிவை - பெயரெச்சவிகாரம்; இனி, என்ற இவை எனப் பிரித்து, எண்ணி டைச்சொல்லாகக்கொண்டு, பிறவிடத்தும் கூட்டி யுரைத்தலும் ஒன்ற. 'ரத்நாகரம்' என்னும் வடமொழிப்பெயரின் பொருள் விளக்க, 'கனமணி முத்தோ டிமைக்கு முவரி' எனப்பட்டது. உவரி - உவர்ப்புச்சுவையுடை யது; உவர் - உப்பு, இ - பெயர்விகுதி.

"கை யீகை யின்சொ லிழுமை நான்கும், வகையென்ப வாய்மைக் குடிக்கு" என்பது, நீநெடுந்தேர்.

முதலடி - முற்றுமோனை. (கூ)

கசஎ. செய்கை யழிந்து சிதன்மண்டிற் றாயினும்
பெய்யா வொருநிறை பேரி யுடைத்தாகு
மெவ்வ முழக்கக் கடைத்துங்கு டிப்பிறந்தார்
செய்வார் செயற்பா லவை.

(இ - ள்.) பேர் இல்-பெரியவீடாயிருந்தால் அது, செய்கை அழிந்த- கட்டுக் குலைந்து, சிதல்மண்டிற்று ஆயினும் - செல்லால் அரிக்கப்பட்டதா னாலும், பெய்யா ஒரு நிறை உடைத்து ஆகும்-(மழைநீர்) உள்ளே ஒழுகாத ஒருபக்கத்தையுடையதாம்; (அதுபோல), குடிபிறந்தார்-உயர்குடியிற் பிறந் தவர், எவ்வம் உழம் தக்கடைத்தும் - (வறுமை சோய் முதலியவற்றால்) தன்ப மனுபவிக்கும் பொழுதும், செயல் பாலவை - தாம் செய்தற்குரிய கடமைகளே, செய்வர் - (விடாமற்) செய்வார்கள்; (எ - று.)

எடுத்துக்காட்டுவமையணி.

சிதல் - கறையான். சிதல்மண்டிற்று ஆயினும் - சிதல்கள் கெருக்கிய தானாலும் என்றமாம். சிதல் - காற்யோநமை. பாலவை - பான்மையென் னும் பகுதியினடியாப்பிறந்த பலவின்பாற் குறிப்புவினையாலணையும்பெயர். இரண்டாஞ்சுருபு தொக்கது.

கசஅ. ஒருபுடை பாம்பு கொளினு மொருபுடை
யங்கண்மா ஞாலம் விளக்குறூஉந்—திங்கள்போற்
செல்லாமை செவ்வனோர் நிற்பினு மொப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார்.

(இ - ன்.) ஒரு புடை-(தனது) ஒருபாகம், பாம்பு கொளினும் - பாம்பினாற் பிடிக்கப்பட்டிருந்தாலும், ஒரு புடை-மற்றொருபாகத்தால், அம் கண் மா ஞாலம்-அழகிய இடத்தையுடைய பெரிய பூமியை, விளக்குறூஉம்-பிரகாசிப்பிக்கின்ற, திங்கள் போல்-பூரணசந்திரன் போல,—குடி பிறந்தார்-உயர்குடியிற் பிறந்தவர்கள், செல்லாமை-வறுமை, செவ்வன் கோ நிற்பினும்-கன்ருக(த் தம்மிடம்) கோக்கின்றலும், ஒப்புரவிற்கு - (பிறர்க்கு) உபகாரஞ் செய்வதற்கு, ஒல்கார்-தளரார்; (எ - று.)—உவமையணி.

நிரகணகாலங்களிற் சந்திரனை மறைக்கின்ற பூமியின் சாயையை இராகு கேதுக்களென்னுங் கரும்பாம்பு செம்பாம்புகளாகக் கூறுகின்றபுராண நூல் வழக்குப்பற்றி, இங்ஙனங் கூறியது. இதனை கசக-ஆஞ் செய்யுளோடொப்பிடுக. செல்லாமை-எண்ணமும் சொல்லும் தொழிலும் ஆகிய நிரிசரணங்களின் செயல்கள் நிற்றி பெறுமை; எனவே, வறுமையாம். செவ்வன்-பண்புப்பெயர்; அன் - விகுதி. கோர்-'கோர்ந்து' என்னும் வினையெசத்தின் விகாரம்: "வரிப்புனை பந்து" என்பதில், 'வரி' என்பதுபோல. ஒப்புரவு உலக நடையை அறிந்து அதற்குஏற்பப் பிறர்க்குச் தலிசெய்தல்;ஒப்பு ஈரவு என்று பிரிக்க: உலகத்தாரோடு ஒத்துச செய்யுஞ் நிறந்தொழி லென்றபடி. (அ)

கசஉ. செல்லாவிடத்தும் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்—புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோற்
பொருமுரண் ஏற்ற தில்.

(இ - ன்.) செல்லா இடத்தும் - (வறுமைமுதலியவற்றுற்) செய்யமுடியாதகாலத்திலும், குடி பிறந்தார்-உயர்குடிப்பிறந்தவர், செய்வன-செய்யும் நற்காருமங்களோ, சிறியவர்-தாழ்குடிப்பிறந்தவர், செல் இடத்தும்-(செல்வம் முதலியவற்றுற்) செய்யக்கூடியகாலத்திலும், செய்யார் - செய்யமாட்டார்; புல்வாய் - மானினது, பருமம் பொறுப்பினும் - சேணம் முதலிய பொர்க் கோலத்தைத் தாங்கினலும், பாய் பரிமா போல் - (இயற்கையாகப்) பாய்ந் தோடுந்தன்மையையுடைய குதிரைபோல, பொரு முரண் ஆற்றல் இன்று - போர்செய்யுந் தன்மையை யுடைத்தாதலில்லை; (எ - று.)

தீருஷ்டாந்தாலங்காரம்.

புல்வாய்-புல்லென்னும் வாயையுடையது என மானுக்குக் காரணப் பெயர்; வேற்றுமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. பருமம்-குதிரைமேற்றவிசு. பருமம் பொறுப்பினும்-பருத்திருத்தலே யுடைத்தாயிருந்தாலும் என்றமாம். பிறவற்றைக்கூறுது புல்வாயையும் பரிமாவையுஞ்

கூறியது, இரண்டுக்கும் மானென்ற ஒருபெயர் பொதுவாக உள்ளதனால்; அன்றியும், ஒருவகைமான் குதிரைபோலப் பருத்திருக்கும். பொருமுரண் - வினைத்தொகை. 'பெருமுரண்' எனவும் பாடம்.

இச்செய்யுளோடு மேல் கஎக, கடுஅ - ஆஞ் செய்யுள்களோ ஒப்பிட்டுக் காண்க. (கூ)

கடுஉ. எற்றென்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தா
ற்றுத்தற் சோர்ந்தார்க் கசைவிடத் தூற்றுவ
ாற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்காற்
றெற்றென் றெண்ணீர் படும்.

(இ-ன்.) குடிப்பிறந்தார்—,எற்று ஒன்றும் இல்லா இடத்தும்-யாதொரு பொருளு மில்லாதகாலத்தும், அற்று தன் சேர்ந்தார்க்கு-வேறுகதியில்லா மல் தம்மை அடைந்தவர்கட்கு, அசைவு இடத்து ஊற்று ஆவர் - தளர்ச்சி சேர்ந்தவிடத்து ஊன்றுகோல்போல உதவுவர்; (எதுபோல எனின்),— அகல் யாறு-பெரிய நதியானது, அற்றக்கடைத்தும்-நீர்வற்றியபொழுதும், அகழ்ந்தக்கால் - (தன்னைத்)தோண்டினுல், (தோண்டின அவ்விடத்தில்), தெற்றென-விரைவாக, தெள் நீர் படும்-தெளிவான நீர் உண்டாகப்பெறும்.

ஆறுனது வெள்ளமுள்ள காலத்தத் தன்னை எவருக் தோண்டுதல் வேண்டாமலே தானே எங்குஞ் சென்று நீரை உதவி நீர்வறண்டகாலத் திலே தோண்டினமாத்திரத்தில் நீரை உதவுதல்போல, குடிப்பிறக்தார் செல்வமுள்ள காலத்தே எவரும் தம்மைச் சோர்ந்து யாசிக்க வேண்டாமலே தாமே எங்குஞ் சென்று பலஉதவிகள்செய்து செல்வமில்லாதகாலத்திலே தம்மையடைந்த மாத்திரத்தில் உதவிசெய்வர் என்பதாம்.''ஆற்றப் பெருக் கற் றழகுடைமக் காஞமவர், றாற்றப் பெருக்கா லுலகூட்டும்-எற்றவர்க்கு, நல்ல குடிப்பிறந்தார் கல்கூர்ந்தா ராளுலுமில்லையென மாட்டாரிசைத்து'' என்பதனோடு இதனை ஒப்பிக.

இதுவும், தருஷ்டாந்தாலங்காரம்.

மேல் கஎகி-ஆஞ் செய்யுளோடு இதனை ஒப்பிட்டுக் காண்க.

எற்று - வினுவடியாகப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும் பெயர். தற்சோர்ந்தார்-ஒருமைப்பன்மைமயக்கம்; 'தஞ்சோர்ந்தார்' எனின், வழாநிலையாம். தெற்றென-வினையடைக்குறிப்பு. 'தண்ணீர்ப்படும்' என்றபாட த்துக்கு, தெற்றென-தெளிவாக என்க. யாறுநீர்படும்- இடத்துங்கழ் பொ ருளின் தொழில் இடத்தின்மேலேற்றிக் கூறப்பட்ட உபசாரவழக்கு.(கூ)

## கஉ - ஆம் அதிகாரம்.—மேன்மக்கள்.

அஃதாவது - செய்தற்கரியனசெய்தல் பிறர்குற்றங்கூறுமை சொருக் கின்மை என்ற இவை முதலிய நற்குணங்களாற் பெரியார்களது தன்மை யைப்பற்றிக் கூறுவது. மேன்மக்களாவதற்கு உயர்குடிப்பிறப்பு ஒருவே யான காரணமாதலின், இவ்வதிகாரம் குடிப்பிறப்பென்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது.

**கடுக. அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்**
**திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கண்**
**மறுவாற்றுஞ் சான்றோர்மை தாற்றுர் தெருமந்து**
**தேய்வ ரொருமா சுறின்.**

(இ - ள்.) அம் - அழகிய, கண் - இடத்தையுடைய, விசும்பின் - ஆகாயத்திலே இருந்து, அகல் நிலா பாரிக்கும்-பரந்த நிலாவை வீசுகின்ற, திங்களும்-சந்திரனும், சான்றோரும்-பெரியோரும், மன் ஒப்பர்-பெரும்பாலும் தம்மில் ஒத்திருப்பர்; (ஆனல்), திங்கள் - சந்திரன், மறு ஆற்றும்-களங்கத்தைத் தான்பொறுக்கும்; சான்றோர் - பெரியோர்களோ, அஃது ஆற்றூர்-களங்கத்தைப் பொறுக்காமாட்டார்கள்: (பிண்ணே என்னுவ ரெனின்),—ஒரு மாசு உறின் - சிறிது களங்கம் (தம்மை) அடையுமாயின், தெருமந்து - வருந்தி, தேய்வர் - அழிந்தேவிவிவர்; (எ - று.)

'திங்களுஞ் சான்றோரு மொப்பர்' என்றது-சந்திரன் புறவிருளேயொழித்தலும் தண்மையுடைத்தாதலும், சான்றோர் அகவிருளேயொழித்தலும் தண்ணளியுடைத்தாதலுமாகிய பொதுத்தன்மைபற்றி யென்க. 'மறு' என்பதற்கு - களங்கம் என்றும், பங்கம் என்றும், இரண்டுபொருள். திங்களும் சான்றோரும் இலக்ஷணங்களால் ஒப்பராயினும் மறுவாற்றுமையால் திங்களினுஞ் சானறோர் சிறந்தவர் என்பது போதருதலால், இது, தற்சிறப்பாஸ்வந்த வேற்றுமையணியாம்; இவ்வலங்காரத்தினது இலக்ஷணம்-உபமான உபமேயங்களுள் யாதாயினுமொன்றை வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவதுவிசேஷமுடையதாகசொல்லது: இதனே வடநூலார் வ்யதிரேகாலங்காரம் என்பர். இங்கே உபமானமாகிய சந்திரனினும் உபமேயமாகிய சான்றோர்க்குமாகநிறைதிறம் ஆற்றுமையாகியவிசேடம் சொல்லப்பட்டதுகாண்க. திங்களினுஞ் சான்றோர் சிறந்தவரென்னுங் கருத்தைப் பின்னிரண்டடியினது குறிப்பினுற் பெறவைத்ததனுல், 'குறிப்பால்வந்த வேற்றுமையலங்காரம்' எனப்பட்டது; இதற்கு, 'மறு' என்பதினுள்ள ச் (லையணி அங்கமாக நின்றது.

திங்கள் மறுவாற்றுதலேயும் சான்றோர் அஃதாற்றுமையையும் முறையே (நன்னெறி) "திங்கள், கறையிருளோக்கக் கருஞாலத்தில், நிறையிருளோக்கும் மேல்நின் று." (திருக்குறள்) 'மயிர்நீப்பின் வாழாக் கவரிமாவன்னர், உயிர் நீப்பர் மானம் வரின்" என்றவற்றில் அறிக. திங்களுக்கு 'அங்கண் விசும்பி னகனிலாப்பாரிக்கும்' என்ற அடைமொழியைக் கொடுத்ததற்கு ஏற்ப, சான்றோர்க்கு 'அழகியஇடத்தையுடைய நிலவுலகத்திலே இருந்து பெரியகீர்த்தியை எங்கும் பரவசெய்கின்ற'என்னும்விசேஷணத்தை அமைத்துக்கொள்க. திங்களே 'அங்கண்விசும்பின்'என்று உயர்ந்த இடத்தைக்கூறி விசேடித்த அதனுல், மேன்மக்கள் உயர்குடியிற் பிறந்தவரென்பது தொனிக்குமாறு அறிக. 'சான்றோர்தேய்வர்' என்றதனுல், சந்திரன் தேய்ந்தாலும்மறுபடிவளர்கிருன், சான்றோர் அங்ஙனம் பங்கப்பட்டபின் பெருமிதங் காட்டார் என்பது குறிப்பிக்கப்படுகின்றது.

அகல் நிலா ஃ வினைத்தொகை. 'மன்' என்ற இடைச்சொல், இங்கே, மிகுதியென்ற பொருளில்வந்தது. 'தீங்கள்' என்னும் அஃறிணையும் 'சான்றோர்' என்னும் உயர்திணையுங் கலக்து நிறப்பிளவு 'ஒப்பர்' என்னும் உயர்திணைமுடிபைப் பெற்றன; தினைவழுவமைதி. சான்றோர் திங்கள் போல மறுத்தாக்கமாட்டாமை, இங்கேகிறப்பு; அன்றியும், உயர்திணையாயிருத்தலேயே அஃறிணையினுஞ் நிறப்பாகக் கொள்ளலாம். திங்கள்என்பது - பொருளால் இருதிணைப்பொதுவாயினும், சொல்லால் அஃறிணையெனக்கொள்க. 'தேவர்களே உயர்திணையாகவும் அஃறிணையாகவுஞ் சொல்லலாம்' என்னும் விதியையே கோக்கின், 'திங்களுஞ் சான்றோரு மொப்பர்' என்னும் முடிபு வழாநிலையாம்.

எஞ்ஞான்றும் தம்மிலையில் தாழாமையும் ஊழ்வினையால் தாழ்வுவந்த விடத்து உயிர்வாழாமையு மாகிய மேன்மக்களது மானமுடைமை, இச்செய்யுளாற் கூறப்பட்டது; "குடிப்பிறந்தார்க்கண்விளக்குக் குற்றம் விசும்பின், மதிக்கண் மறுப்போ லுயர்ந்து" என்ற திருக்குறளும். "வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலம், சான்றோர் தக்க ணெய்திய குற்றம், தோன்றுவழி வீளகுகுர் தோற்றம்போல, மாசறுவிசும்பின் மறுநிறங்கிளர" என்ற மணிமேகலையும் இங்கு நினைக்கத் தக்கன.

'அஸ்தாற்றார்' என்றவிடத்து ஆய்தம் மெய்போல்ஒலித்தது; சான்றோ ரஸ்தாற்றார் எனப் பிரித்து அலகிட்டு, தேமாங்காய்முன் கோவந்தமை காண்க: உயிர்போலொலித்ததாகக்கொண்டு அஸ்தாற்றார் எனப் பிரித்துப் புளிமாங்காயாக அலகிட்டால், அதற்குமுன் 'தெரு' என்னும் நிரை வருவது வெண்டளைக்கு இயையாமை அறிக. (க)

கறுஉ. இசையு மெனினு மிசையா தெனினும்
வசைதீர வெண்ணுவர் சான்றோர்—வீசையி
னரிமா வளங்கிழுத்த வம்பினிற் றீதோ
வரிமாப் பிழைபெய்த கோல்.

(இ - ள்.) சான்றோர் - பெரியோர்கள், இசையும் எனினும் - (தமக்கு எளிதில்) முடியுமாயினும், இசையாது எனினும் - (எளிதில்) முடியாதாயினும், வசை தீர - பழிப்பில்லாதபடி, எண்ணுவர் - (பெருங்காரியங்களேயே செய்ய) நினைப்பர்; (எனெனில்),—அரி மா-திங்கமானது, பிழைப்ப-குறித்த இலக்குத்தவறி உய்யும்படி, எய்த - (அதன்மேல்) பிரயோகித்த, கோல்-அம்பானது,—வீசையின் - யேகத்தோடு (சென்று), நரி மா-நரியினது, உளம்-மார்பை, கிழித்த - பிளந்து ஊடுருவீசென்ற, அம்பினில்-அம்பைக் காட்டிலும், தீதோ - நீமையுடையதோ? [அன்று, நன்று என்றபடி]; (எ - று.)

திங்கட்திண்மேல் அம்புஎய்து அதிதவறினுஞ் பெருமையுண்டு நரி யின்மேல் அம்புஎய்து அதன்மார்பைப்பிளக்தாலும் பெருமையில்லை; அதுபோல, செய்தற்கரிய பெரியகாரியத்தைத் தொடங்கி முயன்றுஅது முடியுபோகாதாயினும் பெருமையுண்டு, இழிவானதொழிலைத்தொடங்கி முடித்தாலும் பெருமையில்லை: ஆதலால், பெரியோர் தம்மிடத்தில் பழிப்பு உண்டாகாதபடி மேலான காரியத்தையே செய்ய நினைப்பர் என்று கருத்து.

பெரியகாரியம் முடிவுபோகாமற்செய்தமுயற்சி விசைரோடுநெரியகாரி யத்தை முடித்த முயற்சியினும் ஈன்றென்னும் பொருள் தோன்ற நின்றது ஞல்,பின்னிரண்டடி-பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம்:இச்செய்புளில் பின்வாக்கியத்திற்கூறிய கருத்து மூன்வாக்கியத்திற் கூறியபொருளுக்குக் காரணமென அறிக;இங்ஙனம் ஒன்றைக் காரணங்காட்டிச் சாதித்தல், ஏது வலங்காரம்.

"சான முயலெய்த வம்பினில் யானை,பிழைத்தவே லேந்த லினிது"என் னுங் திருக்குறளோடு இக்கவியின் பின்னடிகளே ஒப்பிடுக. "பெருமையுடை யவராற்றுவா ராற்றின்,அருமையுடைய செயல்"என்றதிருக்குறளையும்அறிக.

மேன்மக்களது செயற்கரியனசெய்புந்தன்மை இதனுற் கூறப்பட்டது.

விசையின் - உடனிகழ்ச்சிப் பொருளில் வந்த மூன்றும்வேற்றுமைத் தொகை; இன்-சாரியை. இனி, விசையால் என உரைத்து,ஏதப்பொருளில் வந்த ஐந்தாம்வேற்றுமைமயிரி யெனினும் ஒக்கும். கரியாகிய மா,அரியாகிய மா என இருபெயரோட்டு. உளம் - இருதயம்; உளமென்னும் மனத்தின் பெயர், அது உள்ள இடமாகிய மார்புக்கு இங்கே தானியாகுபெயர். அம் பிளில் - ஐந்தனுருபு, உறழ்பொருவு; இது எல்லாப்பொருளில் அடக்கும். பிழைப்ப என்னுஞ் செயலெனைச்சம் ஈறுதொக்கது. ஒ, எதிர்மறை. உம் மைகள் - முறையே உயர்வு நிறப்பும், இழிவுநிறப்பும்.

முதலடி - தோடைழாகீன. (உ)

கடுரை. நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினுஞ் சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண் டேறு—ருங்கவரு
வுள்ளமெனு நாரிஞற் கட்டி யுளவரையாற்
செய்வர் செயற்பா லனவை.

(இ - ன்.) சான்றோர்-மேன்மக்கள்,நரம்பு எழுந்து-(உணவின்மைபற்றி உடம்பு மெலிதலால்) நரம்புகள் மேலேதோன்றப்பெற்று, நல்கூர்ந்தார் ஆயினும்-வறுமையடைந்தவர்களானலும், குரம்பு எழுந்து-(தமது கல்லெ ழுக்கத்தின்) வரம்பிளின்றும் கடந்து, குற்றம் கொண்டு-குற்றமான செய் யை மேற்கொண்டு, ஏறு - (அச்செய்கையில்),அதிகப்பட்டோடவாமல், உரம்-(தமது) அறிவையே, கவறு ஆ-கருவியாகச்கொண்டு, உள்ளம் எனும் நாரினல்-முயற்சியென்கிற கயிற்றினலே, கட்டி-(மனத்தைக்) கட்டி, உள வரையால் - (பொருள் தமக்கு) உள்ள அளவிற்கு ஏற்ப, செயற்பாலவை - செய்யத்தக்க நற்காரியங்களே, செய்வர்—, (எ - று.)

மேன்மக்களது வரம்புகடவாமையும் உதாரகுணமும் கூறப்பட்டன.

கவறு - பிளப்புள்ள பீனமட்டை; இது-ஒன்றைப்பிடித்தக் கயிற்றாற் கட்டவைத்தற்கு ஆதாரமாம். உரம் - வலிமை; தேகபலம் முதலியன நல் லொழுக்கத்திற்குக் கருவியாகாமையால், உரமென்பது-இங்கே, நெறிப்பாய், புத்தி பலத்துக்கு வந்தது. 'உரங்கவறு உள்ளமெனும் நாரினற் கட்டி'— வறுமையால் தனாராதபடி மனத்தை அறிவினலும் முயற்சியினலும் உறுதிப்

படித்திக்கொண்டு என்றபடி. உருவகவணி. செயற்பாலவை - செய்தற்கு உரிய பான்மையையுடையவை.

(நீதிநெறிவிளக்கம்) "கல்லா ரெழுமுக்கின் றலேகின்றூர் கல்கூர்ந்து,கல்லன செய்தற் கொருப்படார்," (திருக்குறள்) "சலம்பற்றிச் சால்பில செய்யார் மாசற்ற, குலம்பற்றி வாழ்தலென் பார்" என்பவற்றோடு இக்கவியை ஒப்பிடுக. இங்கே 'குரம்பெழுக்குற்றக்கொண்டேறார்'என்றதை"கொதித் தவுள்ளமொடு குரம்புகொண்டேறி" என்ற மணிமேகலையோடு ஒப்பிடுக.()

கடுஉ. செல்வுழிக் கண்ணொருநாட் காணினுஞ் சான்றவர்
தொல்வழிக் கேண்மையிற் றோன்றப் புரிந்தியாப்பர்
நல்வரை நாட னிலாஎடிட்படிற்
கல்வரையு மூன்டா நெறி.

(இ - ள்.) நல்வரை நாட-நல்ல மலைகளையுடைய பாண்டியநாட்டை புடையவனே! செல்வுழிக்கண்-போகிறவிடத்திலே, ஒருநாள்—,காணினும்-(ஒருவரைப்) பார்த்தாலும், சான்றவர்-பெரியோர்கள், தொல் வழி கேண்மையின் தோன்ற பழைய வழியால்வந்த சினேகம்போலக் காணப்படும்படி, புரிந்து-அன்புசெய்து, யாப்பர்-(சினேகிதராகத் தம்மோடு அவரைக்) கட்டுவர்; நிலா னள் அடிபடின்-நிலகாலம் காலடி பட்டுவருமாயின், கல்வரையும்-கல்மலையிலும், நெறி உண்டு ஆம்-வழிஉண்டாகும்; (எ - று.)

'எறும்பூர்க் கல்லுர் தேயும்'என்றவாறு நிலகாலங் காலடிபட்டுவர்தாற் கல்லிலும் வழி உண்டாவதுபோல, வல்சொஞ்சர்க்கும் பழகினாற் சினேக மூண்டாகும்;அது நிறப்பன்றா: சான்றோர்களோ"ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை, யிருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே" (நறுந்தொகை) என்றவாறு கண்டவுடனே சினேகித்துச் சிறுபழக்கத்தால் அச்சினேகத்தை உருதிப்படுத்துவர் என்பது கருத்து. "புணர்சசி பழகுதல் வேண்டா வுணர்ச்சொன், கட்பாங் கிழமை தரும்" என்றார் திருவள்ளுவநாயனார்.

இதனுல், மேன்மக்களது நட்பின் தன்மை கூறப்பட்டது.

செல் + உழி = செல்வுழி; மெய்யிற்றின்மூன் உயிர்வர உடம்படுமெய் யல்லாத வகரமெய் பெற்றது: இதனே 'மெய்யிற்றுடம் படுமெய்' என்பர், ஆசிரியர் நச்சினர்க்கினியர். தொல்வழி - தொன்று தொட்டு வந்த; பரம் பரையாய்வந்த. வரைக்கு நன்மை - மிளகு கோட்டம் அகில் தக்கோலம் குங்குமம் முதலிய பொருள்களோடு நீரருவியையும் உடைத்தாதல். நில காலடிப்படின் கல்வரையு மூண்டா நெறி-பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம். 'கல்' என வேண்டாது கூறினர்,மலையினது திண்மையை உணர்த்துதற்கு. உம்மைகள் - இழிவுசிறப்பு. புரிந்தியாப்பர் - குற்றியலிகரம். (அ)

கடுஊ. புல்லா வெழுத்திற் பொருளில் வழங்கோட்டி
கல்லா வொருவ னுரைப்பவுங் கண்ணேடி
நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்
பல்லாரு ணுணல் பரிந்து.

(இ - ள்.) புல்லா - பொருந்தாத, எழுத்தின் - இலக்கண நூல்களே யுடைய, பொருள் இல் - அருத்தஞானமில்லாத, வறுங் கோட்டி - வீண் கூட்டத்தினிடையிலே, கல்லா ஒருவன் - (படித்தற்கு உரிய நூல்களைப்) படியாத ஒருத்தன், உரைப்பவும் - (தனக்குத்தோன்றிய தொருபொருளே எடுத்துச) சொல்லவும், கல்லார்-மேன்மக்கள், வருந்தியும் - (குற்றமுமுடைய அதனைக் கேட்டற்கு) வருத்தப்பட்டும், அவன் பல்லாருள் ளானல் பரிந்து-அக்கல்வியறிவில்லாதவன் பலபேர்முன்னிலையில் அவமானப்படுதற்கு மனம்இரங்கி, கண் ஓடி - (அவனிடத்தில்) தாட்சிணியம்வைத்து, கேட்பர்-(காதுகொடுத்துக்) கேட்டிருப்பர்; (எ - று.)

நற்குணமுடையோர் தமது உள்ளத்திற்கு உவப்பு இன்றியிலும், கல்லாதவன்பேசுங்கேளாமும் புறத்தேசெவிகொடுத்துக் கேட்பர்; அறிவுடையதாம் பேதமதுசெய்தால் அதுகோபிப் பிறராலும்உபேக்ஷிக்கப்பட்டு அவன் பலர்முன் அவமானப்படுவனே யென்பதற்கு இரங்கி யென்றபடி.

இதனே "பாடமேமோதி - பரிந்து" என்னும் உகசு - ஆஞ் செய்யுளோடு ஒப்பிடுக.

புல்லா எழுத்தின் கோட்டி என்பதற்கு-எழுத்தினேப்புல்லாத கோட்டி என்று கருத்து; இதனே "அருக்கேடன்" (திருக்குறள்) என்பதுபோலக் கொள்க; இது வடமொழிநடை. எழுத்து - அக்ஷரம்; எழுதப்படுவது; இது, இங்கு இலக்கணத்திற்கு ஆகுபெயர். எழுத்தின்-இன்சாரியை.கிற்க இரண்டனுருபு தொக்கது. கோட்டி - கோஷ்டி என்னும் வடமொழியின் திரிபு. உம்மைகள் - இழிவுசிறப்பு. மற்று - அசை; நற்குணமில்லாத அவனென்றுங் கொள்ளலாம். உரைப்ப என்பதைப் பெயராகக்கொண்டு, இரண்டாம் வேற்றுமைத் தொகையாக்கி உரைப்பவற்றை என உரைப்பினுமாம்.

இதனுல், மேன்மக்களது பொறுமை கூறப்பட்டது.

இங்கு "புல்லாவெழுத்திற் பொருளில்லவர்கோட்டி" என்றதை "வெள்ளேக்கோட்டி" என்ற சிலப்பதிகாரத்தோடும், "வம்பக்கோட்டி" எனற மணிமேகலேயோடும், "கிரம்பிய,தூலின்றிக்கோட்டிகொளல்' என்ற திருக்குறளோடும் ஒப்பிடுக. (கி)

கடுசு. கடித்துக் கரும்பினைக் கண்டகரு ணாறி
யிடித்தரீர் கொள்ளினு மின்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்துக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூறுர்தம் வாயிற் சிதைந்து.

(இ - ள்.) கரும்பினை - கரும்பை, கடித்து - (வாயாற்) கடித்தும், கண்தகர-கணுக்கள் கொருங்கும்படி, நாறி - (ஆலேயிற்போகட்டுச்) சிதைத்தும், இடித்து - (உலக்கை கல் முதலியவற்றால்) கொருக்கியும், நீர் கொள்ளினும்-இரசத்தைக் கொண்டாலும், இன் சுவைத்தே ஆகும்-(அக்கரும்பஞ்சாது) இனிய உருசியை யுடையதேயாம்,(அதுபோல),—வடு பட - குற்றந்தோன்றும்படி, வைது இறந்தக்கண்ணும் - (தம்மைப் பிறர்) திட்டிப்போனவிடத்

தும், குடி பிறந்தார் ~ உயர்குடியிற்பிறந்தவர்கள், நைதந்து - (தமது நல்ல நிலைமை) கெட்டு, தம் வாயின் - தங்கள் வாயினால், கூரார் - (தீயசொற்களைச்) சொல்லமாட்டார்கள்; (எ - று.)

இதனால், பிறர் வருத்தியகாலத்தும் மிக்குவினாய்குகின்ற மேன்மக்களது நற்குணம் கூறப்பட்டது.

இது - எடுத்துக்காட்டுவமையணி.

'வாயின்' எனவேண்டாது கூறினார், 'நல்லசொற்கள் பயின்றது' எனத் தாம்வேண்டியதன் நிறைப்பு முடித்தற்கு; அடுத்தசெய்யுளிலும், கஎ - ஆம் செய்யுளிலும் இதுகொள்க. சலவைத்து - ஒன்றன்பாற் குறிப்புவினையாலணையும்பெயர். உம்மைகள் - இழிவுசிறப்பு. ஏ - தேற்றம். 'நைதந்து, என்றதனால், 'தீயசொற்களே' என்பது பெறப்பட்டது. (கூ)

கருஎ. கள்ளார்கள் ஞண்ணூர் கடிவ கடிந்தொரீஇ
யெள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற்பொய் கூரார் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்.

(இ - ன்.) வடு அறு காட்சியார் - குற்றமற்ற அறிவையுடைய மேன்மக்கள், கள்ளார் - (பிறர்பொருளைக்) களவுசெய்யமாட்டார்; கள் உண்ணூர் - மதபானஞ்செய்யார்; கடிவ கடிந்து ஒரீஇ - (நூல்களால்) விலக்கப்பட்ட தீச்செயல்களே வெறுத்துச் செய்யாதொழிந்து, பிறரை எள்ளி இகழ்ந்து உரையார் - அயலாரை அவமதித்து இகழ்ந்துப் பேசார்; தள்ளியும் - மறந்தும், வாயின் பொய் கூரார் - வாயினற் பொய்சொல்லார்; சாயின் பரிவது இலர்-(தமக்கு வறுமை முதலியவற்றால்) தளர்சியோர்தகாலத்தும் வருந்துதலையுடைத்தாகார்; (எ - று.)

இதனால், மேன்மக்களது தீச்செயலின்மை கூறப்பட்டது.

கடிவ - பலவின் பாற்பெயர். தள்ளியும் - பிறரால் ஏவப்பட்டும் என்றுமாம். பிரதியக்ஷமாகக்காணுதல்போல அறிவினற் காணுதல் கூடுமாதலால், அறிவுக்கு 'காட்சி' என்ற ஒரு பெயர். அறிவுக்குக் குற்றம் - ஐயக் திரிபு அறியாமைகள். 'சாயின்' என்றதில் இழிவுசிறப்புவும்மை தொக்கது. தள்ளியும், உம் - இழிவு சிறப்பு.

இப்பாட்டில் சான்றோர் தன்மையைக் கூறியதனால், ~ன்மைநவிற்சியணி.

கருஅ. பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா நிற்கட் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாது
மறங்கூற வேண்டா வவற்கு.

(இ - ன்.) (ஒருவன்), பிறன் அறிந்து - நல்லொழுக்கத்தின் வகையை உணர்ந்து, பிறர் மறையின்கண் செவிடு ஆய் - அயலாரது இரகியங்களைக் கேட்பதிற்செவிடனுமாய்,ஏதிலார் இல்கண் குருடன் ஆய்-அயலாரது மனை

**வியசைக் காதலோடு காண்பதிற் குருடனுமெும், தீய புறம் கூற்றிற் மூங்கை ஆய்-(ஒருவர்மேல்) தீயசொற்களை அவர்களைக் காணுதலிடத்துச் சொல்லுவதில் ஊமையாகியும், நிற்பான் எல்-நிற்கமாட்டுவனுயின், அவற்கு-அவனுக்கு, யாதும் அறம் கூற வேண்டா - எக்தத் தருமமும் (பிறர்) உபதேசிக்கவேண்டியதில்லே; (எ - று.)**

அவனிடத்து எல்லாத்தருமங்களும் நிரம்பியுள்ளனவென்றும், இம்மூன்றுமே எல்லாத்தருமங்களுள்ளுஞ் சிறந்தனவென்றும், இவற்றையுடையான் தருமத்தைப் பிறர்க்கெல்லாம் உபதேசிக்கவல்லா னென்றுங் கருத்து.

இதனுல், மேன்மக்களது ஒழுக்கங்களின் சிறப்புக் கூறப்பட்டது.

மறை-(வெளிப்பட்டார் குற்றம்வருமென்று அஞ்சிப் பிறர்க்கு) மறைத்து ஒருவன் சொல்லுஞ் சொல்; செயப்படுபொருள்விருதி புணர்ந்து வெட்டபெயர். செவிடு-பண்பாருபெயர். நிறன்-ஈற்றுப்போலி. இல்-வீடு, வீட்டிலிருந்து சம்சாரகாரியங்களே நிர்வஹிக்கின்ற மனேவியர்க்கு இடவாகுபெயர். தீய - பலவின்பாற்பெயர்; பெயரெசசமாக்கொண்டும் உரைக்கலாம். கூற்று என்னும் முதனிலே திரிந்த தொழிற்பெயர். மூங்கை-மூக என்னும் வடமொழியின் திரிபு; இது, மூகை எனவும் நிற்கும். நிற்பானேல் என்றது, அநுவனம்நிற்றலின் அருமையை விளக்கிற்று. வேண்டா என்றது-வேண்டும்என்பதன் எதிர்மறையாதலின், ஒருவகை வியங்கோளெனக் கொள்க.

'பிறர்மறையின்கட்செவியிடாய்', 'தீயபுறங்கூற்றின்மூங்கையாய்', 'யாதுமறைகூறவேண்டாவவற்கு' என்பவற்றை— "பல்லர்மறையிற்செவியிலன்", "தீசொற்கணமூகை", "அயல அயலவர் நூல்" என்னும் எலாதியோடு ஒப்பிடுக. "பாரக்ஷேயு ஜாதயஸ்தா பரதாரேஷ்வமாதா: - பரீ லாதேஷ யேமூகாதேந்வதயிதாமம" என்னும் வடமொழிமேற்கோள் இங்கே உணரத்தக்கது. (அ)

**கடுகு. பன்னூறு சென்றக்காற் பண்பிலார் தம்முழை**
**யென்னுமெம் வேண்டுப வென்றிகழ்ப—வென்னுனும்**
**வேண்டி னுண்டுமற் றென்று மிழுமியோர்**
**காண்டொறுஞ் செய்வர் சிறப்பு.**

(இ - ள்.) பண்பு இலார் - மேன்மைக்குண மில்லாதவர்கள், தம்முழை - தம்மிடத்து, பல் காலும் - பலதினமும், சென்றக்கால்-(ஒருவர்) வருவாராயின், என் னும் வேண் டுப என்று - (இவர்) யாதாயினும் ஒருபொருளேத் (தம்மிடத்துப் பெற) விரும்புவரென்று கருதி, இகழ்ப- (அவர்களே) இகழ்சி செய்வார்கள்; வீழுமியோர் - மேன்மக்கள், என் னும் வேண்டி னும் உண்டு என்று - (இவர்) யாதாயினும் (தம்மிடத்துப் பெற) விரும்பினுலும் கல்லதே யென்றுகருதி, காண்தொறும் - (அவர்களேப்) பார்க்கும் பொழுதெல்லாம், சிறப்புச்செய்வர் - உபசாரங்களேச் செய்வார்கள்; (எ - று.)

இதனுல், மேன்மக்களது மனமாட்சி கூறப்பட்டது.

தொறு என்பது - இடைச்சொல்லாயினும், பெயர்ப்பொருளேத்தருதலால், பெயரெச்சத்திரிபாகிய 'காண்' என்னும் வினேத்தொகை அதனேக்

கொண்டுமுடித்தது. காளும், உம்மை - முற்று. ஆனும், உம்மை - இழிவு சிறப்பு. தான்று என்றது, அங்கோரப் பொருளது. சென்றக்கால் என்றதில், செல் என்ற பகுதி "தால் வரல் கொடை செலவ் சாரும் படர்க்கை, எழு வாயிரண்டும் எஞ்சிய வேற்கும்" (நன்னூல்) என்ற விதிக்கு மாறுக இங்கே தன்மைக்கு வந்தது, இடவழுவமைதி: இங்ஙனம்வருதல் சிறபான்மை. தம் மூழை, உழை - ஏழனுருபு. (சு)

கசுஙு. உடையா ரிவரென் றெருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வ—ருடைய
பிலத்தில்ப் பட்டது போலாதே நல்ல
குலத்தில்ப் பட்ட விடத்து.

(இ - ன்.) (உலகத்திலே சிலர்),—உடையார் இவர் என்று - செல்வ முடையார் இவரென்றுகருதி, ஒருதலை ஆ பற்றி-ஒரேதுணியாகப் பிடித்து, கடை யாயார் பின் சென்று - கீழ்மக்கள்பின்னே போய்க்கொண்டு, வாழ் வர்-உயிர்வாழ்வார்கள்; (அதனாற் பயனென்னை?) (அங்ஙனம் வாழ்பவர்கள்), நல்ல குலம் தலைப்பட்ட இடத்து - நிறைந்த குலத்தில் பிறந்தவர்களைச் சேர் ந்தவிடத்து, உடைய பிலம் தலைப்பட்டது போலாதே - (வேண்டும்பொ ருள்க ளெல்லாவற்றையும்) உடையதொரு சுரங்கத்தைச் சேர்ந்ததுபோ லாகாதா? [ஆகுமென்றபடி; (எ - று.)

இதனால், மேன்மக்களது சேர்க்கையின் பெரும்பயன் கூறப்பட்டது.

செல்வரை 'உடையார்' என்றது, உலகவழக்குப்பற்றி. தலையாயார், இடையாயார் என்பன-கடையாயார் என்பதன் எதிர்மொழிகள்; உத்தமர், மத்தியமர், அதமர் எனக் காண்க. வாழ்தல் - ஜீவித்தல். தலைப்படுதல் ஒரு சொல்; தலை-தம்பிழுபசர்க்கம். குலம்-அதிற் பிறந்தார்க்கு இடவாகுபெயர். தலைப்பட்டவிடத்து - ஒருவகைவினையெச்சமாயினும், போலாதது-இடைச் சொல்லடியாப்பிறந்த எதிர்மறைமுற்று; எகாரம் - வினுவகையால், எதிர் மறைகாட்டிற்று. இங்கு இரண்டு எதிர்மறை, உடன்பாடு உணர்த்திற்று.

———

## கஎச ஆம் அதிகாரம்.—பெரியாரைப்பிழையாமை.

அஃதாவது - பெரியராயினரை அவமதித், தொழுகாமை. இப்பிற மொழிதலென்னுமிப் உத்தியால், பெரியார் என்பது - வலியாற் பெரியராகிய அரசர் மேலும், தவத்தாற்பெரியராகிய முனிவர்மேலும் நின்றது; அன்றி யும், பொதுப்படப் பெரியா ரென்றதனால், அறிவு பருவம் ஒழுக்கம் இம் மூன்றினுலும் பெரியவராகிய ஞானவருத்தர், வயோவருத்தர், சிலல்ருத்தர் என்னும் இவரையும் உணர்த்தும்: அன்றியும், குலத்திற்பெரியோருமாம். பிழையாமை - பிழைசெய்யாமை; எதிர்மறைத் தொழிற்பெயர். மேன்மக்க ளது நிறப்பை அறிந்து அவருடன்பழகுவார்க்கு இன்றியமையாதாதலின், இவீ்து, மேன்மக்களென்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது.

**ககூக.** பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபி
ஞர்க்கு மருவி யணிமலி நன்னுட
பேர்க்குதல் யார்க்கு மரி தது.

(இ - ள்) ஆர்க்கும்-பேரொலிசெய்கின்ற, அருவி-நீரருவிகளையுடைய, அணி-அழகிய, மலை-மலையையுடைய, நல் நாட - நிறைந்த பாண்டியநாட்டையுடையவனே!—பொறுப்பர் என்று எண்ணி - (இவர் காம் செய்யும் பிழைகளைப்) பொறுத்துவிடுவரென்று நினைத்து, புரை தீர்ந்தார்மாட்டும்-குற்றம் நீங்கிய பெரியோர்களிடத்தும், வெறுப்பன செய்யாமை-அவர் வெறுக்கத்தக்க கொடுஞ்செய்கைகளைச் செய்யாதிருத்தல், வேண்டும்-தருதி; (ஏனெனில்),— வெறுத்த பின்-(அவர்பொருமல்) வெறுப்பாராயின் அதன்பின்பு, பேர்க்குதல்-(அதனுல்வருந் தீங்கை) கீக்குதல், யார்க்கு-எவ்வகை மேம்பட்டோர்க்கும், அரிது - முடியாது; (எ - று)

"நிறியோர் செய்த நிறுபிழை யெல்லாம் பெரியோராயிற்பொறுப்பது கடனே" (நறுந்தோகை) என்ற நீதியையே முக்கியமாகக்கொண்டு, பெரியோர் பக்கல் எவ்வகைப்பிழையையுஞ் செய்யற்க; செய்யின், "நிறியோர் பெரும்பிழை செய்தனராயின், பெரியோ ரப்பிழை பொறத்தலு மரிதே" (நறுந்தோகை) என்றவாறு, பிழையின்கொடுமையால் அவர்சஞ்சனம்பொருதுகோபித்தால் அக்கோபம் தன்பயனேத்தராது நீங்காதாதலால், அதனுல் வருந்தீங்கைவிலக்குதல் எவ்வாறுமாகாது என்பதாருத்தி, "குணமென்னுங் குன்றேறினர்ரூர்வெகுளி,கணமேயகாத்தலரிது" என்ரூர்ந்துகூறளிலும்,

புரைதீர்ந்தார்மாட்டும், மாடு-எழுஉருபு. உப்மை-உயர்வுதிறப்பு. இதினை எச்சவும்மையாகக் கொண்டால், எவரிடத்தும் வெறுப்பன செய்யலாரா தென்பது போதரும். நாட்டுக்கு நன்மை-நலவளம் நீர்வளம் முதலிய பல வளங்களையும் உடைமை. 'வெறுத்தபின்' என்றது. எதிர்காலவினையெச்சத்தின் தன்மையது. 'போக்குதல்' என்றும் படிக்கலாம். (க)

**ககூஉ.** பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே நலீக்கூடப் பெற்றிருந்து—மன்னே
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயநி லறிவி னவர்.

(இ - ள்.) நல்ல நயம் இல் அறிவினவர் - நிறைந்த மேன்மை யில்லாத அறிவையுடைய நீழ்மக்கள், பொன்னே கொடுத்தும் புணர்தற்கருமையாரை-(அதிகமாகப்) பொன்னையே (காணிக்கையாகக் கொண்டுபோய்க்) கொடுத்தாலும் இனேகித்தற்கு அரியரான பெரியோர்களை, கொன்னே - ஒன்றுந் தாராமலே, தலீக்கூட பெற்றிருந்தும் - இனேகிக்கப் பெற்றவைத்தும், அன்னே-ஐயோ! பயன் இல் பொழுது ஆக்கழிப்பரே-(அக்காலத்தை நல்ல பயன்தருவதாகச் செய்வித்துக்கொளாமல்) பிரயோசனமில்லாத [வீண்] காலமாகக் கழிப்பார்களே! (எ - று.)

அருமையான பெரியோர் வலியத் தம்மிடம்வந்து கூடியபொழுதும் அவர்களைக்கொண்டு நன்மைபெறுமற் காலங்கழிப்பதும் பெரியாரைப் பிழைத்தலாம்; ஆதலின், அவ்வாறு செய்யலாகாது என்பது கருத்து.

பொன்னே, ஏ - உயர்வுதிரப்பு. கொடுத்தும், பெற்றிருந்து என்பவற்றில் உள்ள உம்மைகளும் இப்பொருளனவே. அன்னே - அத்தோ, ஐயோ என்பனபோல, இரக்கப்பொருள்குறிக்கும் இடைச்சொல்; 'கழிப்பரே' என்பதில், ஏகாரமும் - இப்பொருளது. (உ)

**கக்ஷ.** அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டு
நிகைமக்க ளான்மதிக்கற் பால—நயமுணராக்
கையறியா மாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார்.

(இ - ன்.) அவ மதிப்பும்-தாழ்ந்தமதிப்பும், ஆன்ற மதிப்பும் - உயர்ந்த மதிப்பும், இரண்டும்—, நிகை மக்களால்-பெருமையையுடைய மேன்மக்களினால், மதிக்கல் பால - மதிக்கத்தக்க தன்மையையுடையனவாம்; நயம் உணரா - நற்குணத்தை அறியமாட்டாத, கை அறியா - நல்லொழுக்கத்தையும் (தாம்ஒழுக) அறியாத, மாக்கள் - ஈற்மக்கள் செய்கின்ற, இழிப்பும் - அவமதிப்பையும், எடுத்து ஏத்தும் - சிறப்பித்துப் புகழ்தலேயும் வடித்த நூலார் தெளிர்ந்தெடுத்த நூல்களே உணர்ந்த பெரியோர்கள், வையார்-(ஒரு பொருளாக மனத்திற்) கொள்ளமாட்டார்கள்; (உ - ம்.)

'நாயின்மேலேறி வையாளிவிட்டானென்ன, வீட்டார்களென்ன,' என்ற பழமொழிப்படி, அற்பர் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் அதனைப் பிறர்கள் வருவதோர் உயர்வும் தாழ்வும் இல்லை யென்பதாம். பெரியாரதமதிப்பின் சிறப்புக்கூறுவார், சிறியாரது மதிப்பின்சிறப்பின்மையையும்உடன் கூறினார்.

ஆன்ற என்பதில், சால்என்பதன் மருஉவாகிய ஆல்-பகுதி; 'அகன்ற' என்பதன் மருஉ என்லாவுமாம். முதலடியில், உம்மைபெற்ற சொற்கள்,ஈற்றில் இரண்டுஎன்னுந் தொகை பெற்றன. மதிப்பு-தொழிற்பெயர்; 'ஆவ' - இன்மை புணர்த்தவதொரு வடமொழி உபசர்க்கம்.மிகை-விகுதி;தொழிற் பெயர், ஐ- விகுதி.

'கையறியாமக்கள்' என்னுது 'மாக்கள்' என்றது-அவர்கள் விலக்கின் நன்மையென்னும் இழிவு தோன்றற்கு. உணரா, அறியா என்னும் எதிர்மறைப் பெயரெச்சங்கள் அடுக்கி, 'மாக்கள்' என்னும் ஒருபெயரைக்கொண்டன; "மூவா முதலா வுலகம்" என்ற சிந்தாமணியிற் போல. ஏத்து - முதனிலைத் தொழிற்பெயர்.

இச்செய்யுளை,மேல்வரும்உகூ-ஆஞ் செய்யுளோடுஒப்பிட்டுக்கொள்க.(கூ)

**கஉச.** விரிநிற நாகம் விடருள தேனும்
மூரும்பின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கு
மருமை யுடைய வரண்சேர்ந்து முய்யார
பெருமை யுடையார் செறின்.

(இ - ள்.) லீரி நிறம் நாகம்-படம்விரிக்குந் தன்மையையுடையழலியை யுடைய பாம்பானது, வீடர்ளது எனும்-வெடிப்புநிலத்தினுள்ளேயிருந்தாலும், உரு மின் கடுகினம்-இடியினது மிக்ககோபத்தாலியதுபோன்ற ஒலி, சேண்நின்றும்-வானத்தில்நெடுந்தூரத்திலிருக்கவும்,உட்கும்-(அதற்கு)அஞ்சும்;(அதுபோல), பெருமை உடையார்செறின்-பெருமைக்குணமுடையவர்கள் கோபிப்பாராயின், (அவர்க்குப் பிழைசெய்த பிறர்), அருமை உடைய அரண் சேர்ந்தும் - (பிறரால் அழித்தற்கும் புகுதற்கும்) அரிய காவலிடத்தை சேர்ந்திருந்தாலும், உய்யார் - (அவர் கோபத்தற்குத் தப்பி) உயிர் வாழமாட்டார்.

எடுத்துக்காட்டுவமையணி. பெரியாரைப் பிழைத்தலினு ணுண்டாகிற கேட்டைத் திருவள்ளுவநாயனாரு மிளக்கினார்.“இறற்றமைந்த சார்புடையா ராயினு மும்மையார், பிறற்றமைந்த பீரார் செறின்” என்றார் திருக்குறளிலும்.

கடுஞ்சினம்-இடியோசைக்கு இலக்கணை. “வானின்முகம்வழங்கி வருதலால்” என்ற திருக்குறளிற்போல, ‘கிற்ப’ என்பது-‘கின்று’ எனத் திரிந்து நின்றது;தன்கருத்தாவின்னியைக் கொண்டு முடிதற்கு ஏற்றசெய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம், ‘உட்கும்’எனனும் பிறகருத்தாவின் வினையைக்கொண்டு முடிதற்கு ஏலாமையால்,அதனைஅதற்கு ஏற்றசெயலெனைச் சத்தினை திரிபாகக் கொள்ளவேண்டியதாயிற்று. பாம்பு இடியோசைக்கு அஞ்சிவருந்துதல்,இயல்பு. நாகம்-வடசொல்;ஈகத்தில்வாழ்வது; நத்தீநாந்த நாமம்; நகம்-மலையும், மரமும். அரண்-சரணமென்ற வடசொல்லின் திரிபு.

கசுடு. எம்மை யறிந்நிலீ ரெம்போல்வா ரில்லென்று
தம்மைத்தாங் கொள்வது கோளன்று—தம்மை
யரியரா நோக்கி யடனறியுஞ் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள்.

(இ - ன்.) ‘எம்மை அறிந்திலிர்-எமது சிறப்பை (நீவிர்) அறிந்தீரில்லீர்; எம்போல்வார் இல்-எம்மைப்போன்றவர்(உலகத்தில்) இல்லை,’என்ற—, தம்மை தாம்கொள்ளுது தம்மைத தாமே சிறப்பித்துக்கொள்வது,கோள் அன்று-ஒரு பெருமையாகாது, அரண் அறியும் சான்றோர்-தருமங்களேஅறிந்தமேன்மக்களால்,தம்மை அறியர் ஆ நோக்கி-தம்மை (உலகத்தில் பிறர்க்கு)அருமையான குணங்களே யுடையவராகப் பார்த்து, பெரியர் ஆ கொள்வது - பெரியோர்களாக அங்கீகரித்து மதிக்கப்படுவதே,கோள்-(ஒருவர்க்குப்)பெருமையாம்; (எ - று.)

இதனுல், பெரியார் தம்மைத்தாமே நன்குமதித்துக்கொள்ளா ரென்பதும், பெரியாரால் மதிக்கப்படுவதே பெருமையென்பதும் கூறப்பட்டன.

முதலடியில் ‘எம்’ என்றது, செருக்குப்பற்றிவந்த தன்மைப்பன்மை: அறிதிலிர்-மூன்றிலைப்பன்மை யெதிர்மறை யீறாக்தகாலமுற்று. கோள் கொள்ளப்படுவது; செயப்படுபொருள்விகுதி செட்டு முதல்நீண்ட பெயர்: முதனிலை திரிந்ததொழிலாகுபெய ரென்பாரு முளர்.

இச்செய்யுளோ, மேல் கூசை-ஆஞ் செய்யுளோடும்"வியவற்கவெஞ்ஞான்றும் தண்ணே"என்ற தீநுந்தறளோடும்,"தன்னே லியப்பிப்பான் தற்புகழ்தல்' என்ற தொடங்கும் நீதிநெறிவிளக்கத்தோடும் ஒப்பிட்டுப் பார்க்க. (இ)

கசுசு. களிகடற் றண்கேர்ப்ப நாணிழற் போல
விளிபுஞ் சிறியவர் கேண்மை—விளிவின் றி
யல்கு நிழற்போ லகன்றகன் றேடுமே
தொல்புக ழாளர் தொடர்பு.

(இ - ன்.) களி-பெரிய, கடல் - கடலினது, தண்-குளிர்ந்த, சேர்ப்ப - துறையையுடையவனே! சிறியவர் கேண்மை-கீழோரது கட்பு, நாள் நிழல் போல-உதயகாலத்துச் சாயைபோல, விளியும் - வரவரச் சுருங்கும்; தொல் புகழ் ஆளர்-தொன்றுதொட்டு [பரம்பரையாக] வருகிற கீர்த்தியையுடைய பெரியோரது, தொடர்பு - நிசேகம், விளிவு இன்றி-(அங்ஙனஞ்) சுருங்குத லில்லாமல், அல்கு நிழல் போல் - சாயங்காலத்துச் சாயைபோல, அகன்று அகன்று ஒடும் - மிகவும் வளர்ந்து நீளும்; (எ - று.)

இச்செய்யுளில் உபமானம் உபமேயம் உவமவுருபு பொதுத்தன்மை என்னும் நான்கும் அமைந்திருப்பதால், பூர்ணவுபமையணி; வடநூலார் பூர் ணோபமாலங்காரம் என்பர்.

இச்செய்யுளால், பெரியார்நட்பின் நிறப்பும்,சிறியார்நட்பின் நிறப்பின் மையும் ஒருங்கு கூறப்பட்டன. "நிரைநீர் நீரவர் கேண்மை பிறைமதிப், பின் னீரபேதையார் கட்பு" என்னுர் திநுந்நுவளிலும். "பெரியவர் கேண்மை பிறைபோல காளும், வரிசை வரிசையா நர்தும்-வரிசையால், வானூர் மதி யம்போல் வைகலுர்தேயுமே,தானே சிறியார் தொடர்பு" என்ற நாலடியா ரோடு இதனை ஒப்பிடுக. "ஆரப்யகுர்வ்ஜிமிணீச்சரமேண லம்பீபராவ்குத்தீ மதீசபர்சாத்-திங்ஸ்யபூர்வாராத பரார்த்தபீசா ராயேவமைத்" கலஜ்ஜகா ராம்" என்னும் வடநூல்மேற்கோளும் கவனிக்கத்தக்கது.

பிற்பகற்பொழுது கழியுங்தோறும் நிழல் நீண்டுகொண்டே வருதல் போலப் பெரியார்நட்பு அவர்முடியுமளவும் மிகுந்துகொண்டேவரும்; ஆத லால், அவர் நிறந்தப் பிழைசெய்யாமல் அவரைத் தேணைக்கொள்க: சிறி யோர்நட்பு முதலில் அதிகமாயிருப்பினும் வரவரக் குறைந்துவிடுமாதலால், அவர்கள்நட்பைக் கொள்ளற்க என்பது கருத்து.

பெரியாரைப்பிழையாமைக்கு அவர்நட்பின் பெருமையையறிதல் ஏது வாகுமாதலால், இப்பாட்டு இவ்வதிகாரத்தில் வைக்கப்பட்டது.

களி-பெருமையுணர்த்தும் உரிச்சொல்;"தடவுங் கயமும் களியும் பெரு மை" என்னுர் தோல்காப்பியத்தால் உணர்க. சேர்ப்பன் - கெய்தல்நிலத் தலைவன்பெயர். ஒருவர்க்கொருவர் கேடிம சமாசாரங்களைக் கேட்பதனால், கேண்மையென்ற நட்புக்குப்பெயர், இது-பண்புசொல். அல்கு என்னும் பகுதிக்கு - சுருங்கு என்று பொருள்; இது, பகற்பொழுது சுருங்குதற்கு இங்கு ஆயிற்று. அகன்று அகன்று-மிகுதிபற்றிய அடுக்கு. (சு)

கசுஎ. மன்னர் திருவு மகளி ரெழினலமுங்
துன்னியார் தும்பர் தகல்வேண்டா—துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லா
முழைதங்கட் சென்றார்க் கொருங்கு.

(இ - ன்.) மன்னர் திருவும் - அரசர்களது செல்வத்தையும், மகளிர் எழில் கலமும்-பெண்களது வளர்சியோடுகூடிய அழகையும், துன்னியார்-(அவரை இடைவிடாது) சேர்ந்தவர்கள், தும்பர்-அனுபவிப்பார்கள்; தகல் வேண்டா - (அவற்றிற்கு இன்னர்) தகுதியுடையவரென்பது வேண்டுவதில்லை; (எதுபோலவெனில்),—குழை கொண்டு தாழ்ந்த-தளிர்களே (த் தம்மிடத்தே) கொண்டு தாழ்ந்துள்ள, குளிர் மரம்-குளிர்ந்த மரங்கள், தங்கண் துன்னி சென்றார்க்கு எல்லாம் - தம்மிடத்து வருகின்ற வர்களுக்கெல்லாம், ஒருங்கு - வேறுபாடில்லாமல் ஒரு தன்மையாக, உழை - இடமாம்.

"பயன்மர முள்ளுநர்ப் பழுத்தற்றுத் செல்வம், நயனுடை யான்கட் படின்" (திருக்குறள்) என்றவாறு எல்லார்க்கும் வரிசில் தவறாமற் பயன் கொடுத்தலுடைத்தாகின்ற அரசர்களது நிறப்பு இதனுற்கூறப்பட்டது; படவே, ஆற்றலாற் பெரியராய அவர்களோப் பிழையாமற் பலரும் பயன்பெறவேண்டு மென்பது கருத்து.

இதில் 'மன்னர்திரு,' 'மகளிரெழினலம்' என்னும் இரண்டு பொருள்களோயும், 'தன்னியார் தும்பர் தகல்வேண்டா' என்னும் பொதுவாகிய ஒருதருமத்தில் முடித்தலால், உபமேயகூட்டவணி, வடநூலார் தூல்ய யோகிதாலங்காரமென்பர். பின்னிரண்டடி - விருத்தி ரூபகமாயணி; இவ்விரண்டும், சேர்ந்துவந்ததனுல், சேர்வையணி; வடநூலார் 'ஸமுச்சயம்' என்பர்.

மகளிர் - பொதுமகளிர் எனக் கொள்ளல், தகுதி. தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்னும் வரம்பு இன்றி வந்தவரையெல்லாம் தம்மிடஞ்சேர்க்கின்ற அறிவில்லாத மரங்கள்போலவும் வேசையர்போலவும் அரசர் பெரியாரைச் சிறியாரோடு வரியுறச சேர்த்தலும் பெரியாரைப் பிழைத்தலாம் என்ற இப்பாட்டுக்குக் கருத்துக் கூறுவாரு முளர்.

இச்செய்யுளே "ஆஸ்காமேவங்ருஜோர் பாஜதேம ஸுஷ்யம் வித்யாவிவிகம குஸீகமஸங்கதமம்வா - ப்ராபயேணாபமிபதய ப்ரமதாலதாரூப யத்பார்ஸ்வ தோபவதிதத் பரிவேஷ்டயர்தி" என்னும் வடநூல் மேற்கோளோடு ஒப்பிட்டுக் காண்க. (எ)

கசுஅ தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெருமைபடர்கோய் செய்யும்—பெரிய
வுலவா விருங்கழிர் சேர்ப்பபயார் மாட்டுங்
கலவாமை கோடி யுறும்.

(இ - ள்.) பெரிய—,உலவா - நீர்வற்றாத, இருங் கழி - மிக்க கழியையுடைய, சேர்ப்ப - கடல்துறையையுடையவனே! தெரிய தெரியும் தெரிவு இலார்கண்ணும்-வினைக்க ஆராயசி யில்லாதவரிடத்தும், பிரிய -

(ஒருவன் கூடிப்) பிரிய, (அப்பிரிவு அவனுக்கு), பெருபடர் தோய் செய்யும்-மிக்க வினைவிற்கு ஏதுவான தன்பத்தைச் செய்யும்; (ஆதலால்), யார்மாட்டும் கலவாமை - எவரிடத்தும் சிநேகஞ்செய்யாமை, கோடி உறும் - (சிநேகஞ்செய்துபிரிதலினும்) பலமடங்கு நல்லது; (எ - று.)

அறிவிலாரிடத்தைக் கூடிப்பிரியினும் பெருந்துக்க முண்டாமாதலால், அறிவுடைய பெரியோரைக் கூடிப்பிரிதலா லுண்டாகுந் துக்கத்தைக் ஒரு வகையாகிலும் இல்லை; ஆதலால், சினேகஞ்செய்து பிரிதலினும் சிநேகஞ்செய்யாமைதான் நல்லது என்பதாம். சிநேகித்தற்குமுன்பே செவ்வையாக ஆராய்ந்து ஒருவரோடு கூடவேண்டும்; கூடினபின்பு பிரிதலாகாது என்பது கருத்து. "கூடிப் பிரியேல்" என்ற ஔவையார் அமுதமொழி உணரத்தக்கது.

இதனால், பெரியாரைக் கூடிப்பிரிதல் பிழையாமெனக் குறிப்பித்தவாறும்.

படர் - பிரிவாற்றமையாலுண்டாகுந் தின்பத்தை எப்பொழுதும் நினைத்தல்: சிந்தை; இப்பொருளை, (திருக்குறள்) "படர்மெலிந்திரங்கல்" 'தனிப்படர்மிகுதி' என்ற இடங்களிற் காண்க: 'படரே யுள்ளல் செலவுமாகும்,' என்ற தொல்காப்பியத்தால், இது ஓர் உரிச்சொல்லாமென அறிக. உம்மை இரண்டனுள், முன்னது - இழிவுசிறப்பு. பின்னது - முற்று. கோடி - வடசொல்: நூறுலட்சம்; மிகப்பலவான எண்ணிற்கு ஒன்று எடுத்துக்காட்டியது.

இச்செய்யுளின் முதலடியோடு மேல் உள்ள - ஆஞ் செய்யுளின் மூன்றாமடியை ஒப்பிடுக. (4)

கஉஉ. கல்லாத போகிய நாளும் பெரியவர்க்
செல்லாத வைகிய வைகலும்—மொல்லை
கொடாஅ தொழிந்த பகலு முரைப்பிற்
படாஅவாம் பண்புடையார் கண்.

(இ - ன்.) கல்லாத - (படித்தற்கு உரிய நூல்களைப்) படியாமல், போகிய - கழித்த, நாளும் - தினமும்,—பெரியவர் கண் - பெரியோர்களிடத்து, செல்லாத - (அந்நூற்பொருள்களே அறியும்பொருட்டுப்) போகாமல், வைகிய - கழித்த, வைகலும் - தினமும்,—ஒல்வ - (தம்மாற்கொடுக்கக்) கூடிய பொருள்களை, கொடாத - தானஞ்செய்யாமல், ஒழிந்த - கழிந்த, பகலும் - தினமும்,—உரைப்பின் - சொல்லுமிடத்து,—பண்பு உடையார் கண் - நற்குணநற்செய்கையுடையாரிடத்து, படா ஆம் - உண்டாகாவாம்: (எ - று.)

இதனால், பெரியாரது நற்குணநற்செய்கைகள் கூறப்பட்டது. இதனால் - கல்லாமையும் பெரியோரிடத்துச்செல்லாமையும் ஈயாமையும் இக்குணங்க ளென்பது பெறப்படும்.

நாள், வைகல், பகல் என ஒருபொருளையேகுறிக்கின்ற பலசொற்கள் அடுத்தவந்ததனால், பொருட்பின்வருநிலையணி. கல்லாதுபோகிய நாள், பெரியவர்கண்செல்லாதுவைகிய வைகல், ஒல்வகொடாதுஒழிந்த பகல் என்ற மூன்றுக்கும் இயையும்படி இறுதியில் 'பண்புடையாராகண்படாவாம்' என்ற வினையை வைத்தது, கடைநிலைத்தொழில்தீவகவணி. (கூ)

கஎ0 பெரியார் பெருமை சிறுதகைமை யொன்றிற்
குரியா ருரிமை யடக்கந்—தெரியுங்காற்
செல்வ முடையாருஞ் செல்வரே தற்சேர்ந்தா
ரல்லல் கூப வெனின்.

(இ - ன்.) தெரியும்கால் - ஆராயுங்கடத்து, பெரியார் பெருமை - பெரியோர்களது பெருமைக்குணமாவது, சிறு தகைமை - (பெருமைபாராட்டாமல்) வணங்கியிருத்தலாம்; ஒன்றிற்கு உரியார் உரிமை - (கல்வி முதலியவற்றுள்யாதாயினும்) ஒன்றற்கு உரிமையுடையவர்களுக்கு உரிய குணமாவது, அடக்கம் - (மனமொழிமெய்கள்) அடங்கியிருத்தலாம்; செல்வம் உடையாரும் - தனவான்களும், தன்சேர்ந்தார் அல்லல் கூப எனின் - தம்மை அடுத்தவர்களது தின்பங்களை நீக்குவார்களாயின், செல்வரே - செல்வ முடையோரே யாவர்; (எ - று.)

இதனால், பெரியோர்களது வணக்கமும் அடக்கமும் பிறர்க்கு உதவி செய்தலும் கூறப்பட்டன.

(நீதிநெறிவிள்க்கம்) "கல்வியுடைமை பொருளுடைமையென்றிரண்டு, செல்வமுஞ் செல்வ மெனப்படு - மில்லார், குறைபிரந்து தம்முன்னர் நிற்ப போல் தாமும், தலைவணங்கித்தாழப் பெறின்," (திருக்குறள்) "தானாற்றித் தந்த பொருளெல்லார் தங்கார்க்கு, வேளாண்மை செய்தற் பொருட்டு," "கயனுடையா னல் கூர்ந்தா னுதல் செயீர், செய்யா தமைகலா வாறு" என்பவற்றை இங்கே அறிக.

சிறுதகைமை - சிறுமையாகிய தகைமை யென விரியும். செல்வமுடையார் என்ற பன்மைக்குவற்ப 'தஞ்சோந்தார்' வன்னுமல்' 'தற்சேர்ந்தார்' என்றது, ஒருமைப்பன்மைமயக்கம்; "கடுக்குற்றத் தற்சேர்ந்தார் தின்பத் துடையார்," "அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றுவர்" என்ற இடங்களிற்போல. (கo)

---

## கஅ - ஆம் அதிகாரம்.—நல்லினஞ்சேர்தல்.

அஃதாவது - தாம் நன்னெறியில் ஒழுகுதலேயன்றித் தம்மைசேர்ந்தவர்களையுங் நீதெறியினின்றும் விலக்கி நல்நெறியிற் செலுத்தவல்ல பெரியோர்களதுசேர்க்கை. பெரியோர்பக்கற் பிழையாம லொழுகுதலேயன்றி அவரைப்பிரியாமல் கட்புக்கொள்ளவும் வேண்டும் என உணர்த்துகின்றமையால், இது பெரியாரைப் பிழையாமையின்பின் வைக்கப்பட்டது. நல்ல இனத்தைச் சேர்தல் என விரியும்.

கஎக. அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வு—நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின்முறுகப்
புற்பனிப் பற்றவிட் டாங்கு.

(இ - ன்.) அறியாபருவத்து - அறிவுடையராகாதிருந்த இளம்பிராயத்திலே, அடங்காரோடு ஒன்றி - அடக்கமில்லாத அயோக்கியர்களோடு சேர்

க்க, நெறி அல்ல செய்து ஒழுகியவும் - சந்மார்க்கமல்லாத பாவகாரியங்க
ளைச் செய்து நடந்த குற்றங்களும், நெறி அறிந்த நல் சார்வு சார - நல்வழி
யைஉணர்ந்த நல்லபெரியோர்களைச் சேர்தலால், புல் பனி வெயில் முறுக
பற்று விட்டு ஆங்கு - புல்லைச் சேர்ந்திருந்த பனித்துளி வெயில்மிகுதலால்
(அதனைப்) பற்றுதலே விட்டாற்போல, கெடும் - அழியும்; (எ - று.)

இதனுள், நல்வினஞ்சேர்தலின்பயன் கூறப்பட்டது உவமையணி.

அல்ல, ஒழுகிய - பெயர். முன்பின்னாக மாற்றி, செய்து ஒழுகியவை
யாகிய தெறியல்வையும் என்றும் உரைக்கலாம். ஒழுகியும்வும், வசாமெய்-
விரித்தல்விகாரம். நெறி - சான்றோர்பாடு. சார்வு - சாரத்தக்கவர்க்குத்
தோழிலாதுபெயர். சார - காரணப்பொருளதாதலால், இறந்தகாலங்காட்
டிய செயவென்னும் வினையெச்சம். விட்டால் என்பது - விட்டே எனத் திரி
த்து, ஆங்கு என்னும் உவமையுடைச்சொல்லோடு சேர்ந்தது. (க)

கலஉ. அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

(இ - ன்.) எஞ் ஞான்றும் - எப்பொழுதும், அறம் நெறி - தருமமார்க்
கத்தை, அறிமின் - அறியுங்கள்; கூற்றம் - யமனுக்கு, அஞ்சுமின் - பயப்
படுங்கள்; பிறர் கடு சொல் - அயலார்சொல்லும் வன்சொற்களை, பொறு
மின் - பொறுத்துக்கொள்ளுங்கள்; வஞ்சம் - வஞ்சனையாகிய குணத்தை,
போற்றுமின் - (உம்மிடம் வாராதபடி தடுத்துப்) பாதுகாத்துக்கொள்ளுங
கள்; வினைதீயார் கேண்மை - தீச்செயல்களையுடையவரது நினைவுத்தை,
வெறுமின் - வெறுத்துவிடுங்கள்; பெரியார் வாய் சொல்-பெரியோரது வார்
த்தையை, பெறுமின் - கேட்கப்பெற்ற அவ்வளவே ஒழுகுங்கள்; (எ - று.)

'அறிமின்' முதலிய ஆறும் - ஏவற்பன்மை. 'அஞ்சுமின் கூற்றம்' என்
றது - மரணம்வருவது இன்னபோதென்று நிச்சயிக்கப்படாமையால் அத
ற்கு அஞ்சிவிரைந்து அறஞ்செய்யவிரும்புங்கள் என்றவாறு; நிலவினைசெய்
தல்பற்றி யமனுலிதிக்கப்படுந் தண்டனையினின்று பயத்து நல்வினை செய்
யுங்களென்றும் கருத்துக்கொள்ளலாம். 'போற்றுமின் வஞ்சம்' என்றவிடத்
திலுள்ளபோற்றுதலென்பதை "செல்லிடத்துக் காப்பான் வினைகாப்பான்'
என்ற நீருக்குறளில் 'காத்தல்' என்பதுபோலக் கொள்க. இனி, இவ்வாக்கி
யத்திற்கு - பிறர்செய்யும் வஞ்சனையி னின்றும் உம்மை இடைத்துக்கொ
ளலுமென்றும் பொருள்கொள்ளலாம். வினைதீயார்-நிவினையார் என விகுதி
பிரித்துக்கூட்டப்பட்டது; வினையில் தீயவ ரென்றுமாம். பெரியார்வாய்ச்
சொல் - பெரியோர்களது ஆசீர்வாதமுமாம்.

நல்லினஞ்சேர்தற்கு எதிர்மறையாகிய தீயினஞ்சேர்தலே விலக்கவே
ண்டுமென்பார், அது போல இன்றியமையாத பிறவற்றையும் இனமாக
கூடஎடுத்துக் கூறினர். (உ)

களரு. அடைந்தார்ப் பிரிவ மரும்பிணியுங் கேடு
முடங்குடம்பு கொண்டார்க் குறலாற்—றொடங்கிப்
பிறப்பின்ஞ தென்றுணரும் பேரறிவி னூரை
யுறப்புணர்க வம்மாவென் னெஞ்சு.

(இ - ன்.) தொடங்கி-(தூல்களே) ஆராயத்தொடங்கி,'அடைந்தார் பிரிவும் - தம்மோடுசேர்ந்த பந்துக்கள் தினேகிதர் முதலியோரை நீங்குதலும், அரு பிணியும்-(தீர்தற்கு) அருமையான நோய்களும், கேடும்-(மற்றும் பல வகைத்) தீங்குகளும், உடம்பு கொண்டார்க்கு-இவ்வுடம்பைப்பெற்ற மனிதர்களுக்கு, உடங்கு-ஒருசேர, உறலால்-சேர்தலால், பிறப்பு இன்ஞது-சன்மம் இனிமையைத்தருவதன்று', என்று—, உணரும்-அறிகின்ற, பேர் அறிவினரை - பெரிய புத்தியையுடைய நல்லோர்களே, என் நெஞ்சு - எனது மனம், உற புணர்க-உறுதியாகச சேரக்கடவது; (எ - று.)

அம்மா - அசை; இப்படிப்பட்ட நற்கருத்தி அருமையாகத் தனக்கு உண்டாகியதைப்பற்றி 'அம்மா' என வியந்ததாகவும் கொள்ளலாம்.

பிறப்பின் துன்பங்களைக் கண்டு அதனை வெறுத்திருக்கின்ற ஞானியரைச்சேர்தல் நன்மைக்கு ஏதுவா மென்பது கருத்து.

அடைந்தார்ப்பிரிவு இரண்டாம் வேற்றுமைத்தொகையாதலால், உயர்திணைப்பெயர்முன் வல்லெழுத்துமிக்கது: ''இயல்பின் விகாரம்''. உடங்கு - 'ஒருங்கு' என்பதுபோல,ஒருவகை இடைசசொல் உறலால் என்னும் மூன்றாம்வேற்றுமைக்கு 'இன்ஞது' என்பது முடிக்குஞ்சொல். இனி. 'புணர்க' என்பதை முடிக்குஞ் சொல்லாகக் கொண்டு, பிறப்பிற் பல துன்பங்கள் சேர்தலால் (அப்பிறப்பையொழிக்கும் பொருட்டு) என்மனம் அதன் தன்மையை யறிர்தோரைச சேர்வென்றும் பொருள்கொள்ளலாம்.தொடங்கி உணரும் என்று இயையும். தொடங்கி உறலால் என்று இயைப்பினுமாம். தொடங்கு இப்பிறப்பு என எடுத்து ஊழ்வினை தொடர்தற்கு இடமான இந்தப்பிறவி யெனவுங் கொள்ளலாம். (கூ)

களச. இறப்ப நினேயுங்கா லின்ஞ தெனினும்
பிறப்பினே யாரு முனியார்—பிறப்பிணுட்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்று
நண்பாற்றி நட்கப் பெறின்.

(இ - ன்.) பிறப்பினுள்-தான்பிறக்க மனிதசன்மத்திலே, பண்பு ஆற்றும் நெஞ்சத்தவர்களோடு நண்பு ஆற்றி-நற்குணமுடையவற்றைச செய்ய வேண்டுமென்னும் மனமுடைய நல்லோர்களுடனே தினேகத்தைசெய்து, எஞ்ஞான்றும் - எப்பொழுதும், நட்க பெறின - (பிரியாமல் ஒருவர் அவர்களோடு) கூடி வாழப்பெற்றால்,—இறப்ப நினேயுங்கால்-மக்களும் ஆலோசிக்குமிடத்து,—இன்ஞது எனினும் - (பிறப்புத்) துன்பத்தருவதாயினும், பிறப்பினே-(அவனது) சன்மதை,யாரும்-எவரும்,முனியார்-வெறுக்கமாட்டார்.

பிணி பசி மூப்புத் தின்பங்களோயும் செல்வாம்களோயு மூடையமனிதப் பிறப்புக்குச் சிறப்பைத்தரும் பெரும்பயனுவது, கல்லினஞ்சேர்தலே என்பதாம்.

பெறின் என்றது, அங்ஙனம் செறேத்தலினது அருமையைக் குறித்தது. நினையுங்கால் இறப்ப இன்னுது என்றும் இயைக்கலாம். (சு)

கஎடு. ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா—மோருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

(இ - ன்.) ஊர் அங்ஙனம் நீர்-ஊரிலுள்ள சலதாரையினது நீரானது, உரவு நீர் சேர்ந்தக்கால் - நிறப்புப்பொருந்தியதொரு (நதி குளங்களின்) நீரைச் சேர்ந்தால், பேரும் பிறிது ஆகி - (அதற்குப்) பெயரும் வேறாய், தீர்த்தம் ஆம்-(அது) புண்ணியதீர்த்தமாய்விடும்; (அதுபோலவே),—குலம் மாட்சி இல்லாரும்-(தாம் பிறந்தி) குலத்தின் பெருமை யில்லாதவர்களும், நலம் மாட்சி நல்லாரை சார்ந்து - நற்குணங்களோடையு யர்குடிப்பிறந்தோரை அடைந்து, (அதனுல்), குன்று போல் நிற்பர் - மலைபோலப் பெருமையுடையராய் நிற்பர்; (எ - று.)

எடுத்துக்காட்டுவமையணி. 'ஒரும்' என்பது - அசைநிலை; "அஞ்சுவ தோரு மறனே யொருவனே, வஞ்சிப்ப தோரு மவர்" என்ற திருக்குறளிற் போல. இனி, எதிர்காலப்பெயரெச்சமாகக் கொண்டு, (யாவரும்) அறியும் என்றும் பொருளுரைக்கலாம். ஒரும் - எவற்பன்மையுமாம்; (நீங்கள்) அறியுங்கள் என்ற பொருள். அங்ஙணம், தீர்த்தம்-வடசொற்கள்.

'குன்றுபோல்' என்ற உவமையால், அளவுசெய்யப்படாத கல்விப் பொருளும், பிறரால் குற்றஞ்சொல்லப்படாத அசைவின்மையும், கல்வி யறிவு ஒழுக்கங்களால் யாவரும் அறிய நிற்றலும், பொருள்வரும்படி இல்லாக்காலத்தும் பிறர்க்கு உபகாரஞ்செய்தற்கு உடன்படுதலும் முதலிய குணங்களோடையு ராவனைக் கொள்க.

"நல்லமணமுள்ள தொன்றை நண்ணி யிருப்பதற்கு, நல்லமண முண்டா நமதுபோல் - நல்ல, குணமுடையார் தங்களுடன் கூடியிருப் பார்க்குக், குணமதுவே யாஞ்சேர்வு கொண்டு" என்னும் உபதேசத்தின மாலையோடும், "லத்ஸங்காத்பவதிஹி சாதுதாகலாகாம்" என்னும் வடனூல் மேற்கோளோடும் இதனை ஒப்பிடுக.

'பேரும்பெரிதாகி' என்றும் பாடம். (இ)

கஎசு. ஞண்சுதிர் வாண்மதியஞ் சேர்தலா லோங்கிய
வங்கண் விசும்பின் முயலுங் தொழப்படுஉங்
குன்றிய சீர்மைய ராயினுஞ் சீர்பெறுவர்
குன்றன்னர் கேண்மை கொளின்.

(இ - ன்.) ஒங்கிய-உயர்ந்த, அம் கண்-அழகிய இடத்தையுடைய, லிசம் பின்-ஆகாயத்திலே,—ஒள்-வினக்கமாகிய, கதிர்-கிரணங்களேயுடைய, வான்-பிரகாசமான, மதியம்-சந்திரனே, சேர்தலால்-அடைந்திருத்தலினால்,—மூயலும்-முசலும், தொழம்பமேம்-(யாவராலும்) வணங்கப்படும்;(அதுபோல),—குன்றிய சீர்மையர் ஆயினும்-குறைந்திறப்புள்ளவர்களாஞ்சும், குன்றுஅன்னர் கேண்மை கொளின்-மலையையொத்த பெரியோர்களது சினேகத்தைக் கொண்டால், சீர் பெறுவர்-(அதனால் தாமும்) சிறப்புப்பெறுவர்; (எ - று.)

இதவும் - எடுத்துக்காட்டுவமை. முயலுக்குஅஞ்சலிசெய்தல் தொழுவார் கருத்தில் லில்லையாயினும், அவ்வஞ்சலியைச் சந்திரனிடத்தே பிரார்த்தமுயல் தானும் பெறுதல்போல, சீர்மை குன்றினர்க்குச் சிறப்புச்செய்தல் செய்பவரது கருத்திலில்லையாயினும் அச்சிறப்பை கல்லோரினத்திலே யிருந்து தாமும் பெறுவரென்பது, கருத்து. "மிக்காரைச்சேர்தன் மிகமாண முன்னிரிதே" என்றார், இனியவை நாற்பதிலும். "யயபதேரே கமஹாதம் வரிந்நிஸ்ஸஞ்ஜாயதேபரா-ஸமரீகோவ்யபதேரோஸவஸர்திரமர காஸ்ஸுகம்" என்பது நோக்கத்தக்கது.

சந்திரனைத் தோன்றுங்காலத்தைத் தொழுதல் இயல்பு. சந்திரனிடத்திலுள்ள களங்கத்தை முயலென்றும், மானென்றும், மறுவென்றும், மலேயென்றும், பூமியின்சாயை யென்றும், மரமென்றும் கூறுவது, கலிசமயம்.

'சதுர்தர்தனென்னும் அரசயாண்டை ஒருமுயல்சந்திரமண்டலத்தைக் காட்டி அதனைத தரதிலிவிட்டுத் தன்னினைத்தோடு சமித்திருந்தது' என்னும் பஞ்சதந்திரகதை, இங்கே நினைக்கத் தக்கது.

'ஒள்கதிர்' என்பதில், ஈகரம் முன் டகரமாகி, பின்பு ணகரமாக மெலிந்ததெனக் கொள்வர்.

'வான் மதியம' என்றும் பாடம்.

இச்செய்யுள், இனவெதுகையால் வந்தது. (३)

களவு. பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெறிந்து தோன்றுதாங்—தேரிற்
சிறியார் சிறுமையுந் தோன்றுதா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

(இ - ன்.) பாலோடு அளாய நீர் - பாலுடனே கலந்த நீரானது, பால் ஆகும் அல்லது-அந்தப்பாலாய்த் தோன்றுமேமல்லாமல், நீர் ஆய்நிறம்தெரிந்து தோன்றுது-நீராய்த தன்நிறம் விளங்கிக் காணப்படாது;(அதுபோல), தேரின் - ஆராயுமிடத்து, கல்ல பெரியார் பெருமையை சார்ந்து - சற்குணமுடைய பெரியோர்களது மகிமையைச் சேர்தலினால், சிறியார் சிறுமையும் தோன்றுது - அற்பர்களது கீழ்மைக்குணமும் வெளிப்படாது; (எ - று.)

இதவும், எடுத்துக்காட்டுவமையணியே. "தெருண்ட மேலவர் சிறியர்ச்சேரினு மவர்தம், மருண்ட தன்மையை மாற்றுவ ரொருமிதுவழக்கே" எனக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் கூறியதும் இச்சருத்தைப் பற்றியே,

அனாலிய என்னும் இறந்தகாலப் பெயரெச்சம், அனாய என மருவியது; அளாவு என்னும் முதனிலேயிலுள்ள ற்றுயர்மெய் குறைந்து இறந்தகாலங் காட்டும் யகர இடைநிலையும் அகரவிகுதியுஞ்சேர்ந்து உண்டானதென்றுஞ் சொல்லலாம். 'நிறந்நிரிந்து' என்னும் பாடத்துக்கு - வருணம் வேறுபட்டு என்க. 'ஆம்' என்பது - இரண்டொழியத்திலும் அசை. (எ)

களஅ. கொல்லே பிரும்புனத்துக் குற்றி யடைந்தபு
லொல்காவே யாகு முழவ ருழுபடைக்கு
மெல்லியரே யாயினு நற்சார்வு சார்ந்தார்மேற்
செல்லாவாஞ் செற்றார் சினம்.

(இ - ள்.) கொல்லே-(காட்டிலுள்ள) கொல்லைகளிலும், இரு புனத்திலும்-பெரிய வயல்களிலும், குற்றி - மரக்கட்டையை, அடைந்த - அடித்துள்ள, புல்-புற்கள், உழவர் உழுபடைக்கு-உழுபவர்களது கலப்பைக்கு, ஒல்காவே ஆகும் - அசையாதனவேயாம்; அதுபோல), மெல்லியரே ஆயினும்-(இயற்கையில்) வலியில்லாதவர்களே யானாலும், நல் சார்வு சார்ந்தார் மேல் - நல்லினத்தாரைச் சேர்ந்தவர்களின்மேல், செற்றார் சினம் - பகைத்தவர்களது கோபம், செல்லா ஆம் - பயன்படாவாம்; (எ - று.)

இதுவும், திருஷ்டாந்தவணி. குற்றி பெயர்க்கப்படாமையால், அதையடித்த புல்லும் பெயர்க்கப்படாது; அதுபோல, பகைவரினம் வலியாரிடத்துச் செல்லாமையால் அவரையடித்த எளியாரிடத்துஞ் செல்லாது என்பது கருத்து. "தச்சாரினத்தனுய்த் தானெழுத வல்லானேச், செற்றார்செயக் கிடக்தில்" என்றார், திருவள்ளுவனாரும், 'மெலியோர் வலியவிரவலரா யருசார், வலியோர் தமைத்தாம் மருவின்" என்ற நன்னெறியையுங்காண்க.

குற்றி - குறுமையையுடையதென மரக்கட்டைக்குக் காரணப்பெயர்; குற என்னும் பண்படி, தன்ஒற்று இரட்டிற்று: இ பெயர்விகுதி. பல்லினம் எனபலவை-பால்படா அஃறிணைப்பெயர்களாதலால், பன்மையினேகொண்டன. ஒல்கா, செல்லா - எதிர்மறைப் பலவின்பால் முற்றுக்கள்; "ஆவே யெதிர்மறைக் கண்ண தாகும்" (சன்னூல்) என்றதனால், 'ஆ' விகுதி பலவின்பாலோடு எதிர்மறைப்பொருளையுங் காட்டும். படை-கருவி, உழுபடை-வினைத்தொகை விரைத்தொடராய், கலப்பைக்குக் காரணப்பெயராயிற்று; வினைத்தொகையாதலின், வலி மிகவில்லை. நற்சார்வு என்றது-தம்பகைவரிலும் மிக்க வலிமையுடையாரை. (அ)

களக. நிலநலத்தா னன்றிய நெல்லேபோற் றத்தங்
குலநலத்தா லாகுவர் சான்றோர்—கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றுண்மை
தீயினுஞ் சேரக் கெடும்.

(இ - ள்.) நிலம் நலத்தால்-வீளைநிலத்தினது நல்லவளத்தால், நன்றியன்ற, நெல்லேபோல்-நெற்பயிர்போல, (மனிதர்கள்), தம்தமிகுலம்நலத்தால்-தாய்கள் தாய்கள் சேர்கிறகூட்டத்தினதன்மையால், சான்றோர் ஆகுவர்-மேன்மக்களாவர்; கலம் நலத்தை-மரக்கலத்தினது வலிமையை, தீ வளி-

கடுங்காற்று, சென்று - போய், தைத்து ஆங்கு - கெடுத்தலால் (அக்கலம் கெடுவது) போல, சான்ருண்மை - (ஒருவரது) மேன்மை, நீ இனம் சேர - தீர்க்குணமுள்ள கூட்டத்தைச் சேர்தலினால், கெடும் - அழியும்;(எ - று.)

உபமாலங்காரம். நிலாலத்தால் கந்திய நெற்போல் என்பதற்கு-நெல் நிலாலத்தால் கத்துதல்போல என்று கருத்து. கலம் - பொதுப்பெயர், இங்கே சிறப்பாய்; கப்பலேக் குறித்தது; அணிகலம், உழுகலம், படைக்கலம், அளவுகலம், உண்கலம்முதலாகப் பலவற்றிற்குப்பொதுவாகுமாறு காண்க. 'கலாலத்தைத் தீவளிசென்று தைத்தாங்கு' என்பதற்கு - கலாலம் தீவளி செல்லுதலாற் தைக்தாற்போல என்று கருத்து. ரூபோமையாவது - (பலகுணங்களாலும்) நிறைந்து (அவற்றை) ஆளுதல்தன்மை; சான்ரு ண்மை எனப் பிரியும்: 'பலகுணங்களாலும்' என்பது சானுதற்குரிழிலாற் பெறப்பட்டதனால், 'அவற்றை' என்பது வருவிக்கப்பட்டது; ஆண்மை - ஆள் என்னும் வினைப்பகுதியின்மேற் பிறந்த பண்புப்பெயர்.

நல்லினஞ்சேர்தலின் சிறப்புக் கூறுவார், நீயினஞ்சேர்தலின் இழிப் பும் உடன் கூறினர். (க)

கஅ0. மனத்தான் மறுவில செய்குஞ்சேர்ந்த
இனத்தா லிகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
யெறிபுனஞ் சேர்ப்பட்டக் கால்.

(இ - ன்.) மனத்தால் மற இலர் எனும் - மனத்தின் நிலைமையால் குற்றமில்லாதவர்களாயினும், தாம் சேர்ந்த இனத்தால் - தாங்கள் சேர்ந்த கூட்டத்தின் தீமையால், இகழப்படுவர் - நிந்திக்கப்படுவார், (மனிதர்கள்); (அது எதுபோல எனின்),—எறி புனம் - வெட்டப்பட்ட மரச்செறிவில், நீ பட்டக்கால் - நெருப்புப் பற்றினுல், புனத்து - அக்காட்டிலுள்ள, வெறி கமழ் - வாசனை வீசுகின்ற, சந்தனமும் - சந்தனமரமும், வேங்கையும்-வேங் கைமரமும், வேம்-வெந்துபோம்; (எ - று.)

இயற்கையிற் குற்றமிலாயினுஞ் சேர்க்கைக்குற்றத்தாற் கெடுவரென் பது நுத்தி.

இதனுல், நீயினஞ்சேர்வதனுலாகுங் கேடு விளக்கப்பட்ட

இது, நிருஷ்டாந்தவலங்காரம்.

"சந்தனத்தைச் சார்தருவுக் தக்க மணங்கமழுஞ், சந்தனத்தைச் சார் வேய் தமல்பற்ற—வந்தவனுர், தானு மசசந்தனமுக் தன்னினமு மான்வ தன்றித், தானுங் கெடச சுடுமே தான்" என்னும் நீதிவெண்பாவை இத னேடு ஒப்பிடுக. "மனத்தானு மாந்தர்க் குணர்ச்சி யீனத்தானு, மின்னு னெனப்படுஞ் சொல்," 'மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்கு, இனநல மேமாப் புடைத்து" என்னுர் நீருக்குறளினும்.

மனத்தா லென்பதற்கு - உருபுமயக்கமாக, மனத்தில் என்றும் பொ ருள்கொள்ளலாம், ஏகாரம், பிரிநிலையை விளக்கிற்று. (கo)

## ஙஙஉ ஆம் அதிகாரம்.—பெருமை.

அஃதாவது - எவ்வழியும் மனக்கலக்கமின்றித் தாம் செய்யவேண்டிய வற்றை இயன்றவளவு செய்யும் உறுதிப்பாட்டா லாகிய பெருந்தன்மையை உணர்த்துவது. பெருமை-மகிமை; பண்புப்பெயர். இப்பெருமை நல்லினத் தின் தன்மைபாதலால், அதன்பின் வைக்கப்பட்டது; அன்றி, நல்லினஞ் சேர்தலாற் பெருமையுளதா மென்பதபற்றி, அதன்பின் இது வைக்கப் பட்ட தெனினுமாம்.

கஅந. ஈத லிசையா னிளமைசே னீங்குதலாற்
காத லவருங் கருத்தல்லர்—ஈதலிற்
றாதுநா மென்னு மவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள்.

(இ - ன்.) ஈதல் இசையாவது - (பொருளின்மையாற் பிறர்க்கு ஒன் றைக் கொடுத்தலும் முடியாமல், இளமை சேண் நீங்குதலால் - யௌவன மும் செடுஞ்சாத்தில் நீங்கிவிட்டதனால், காதலவரும் - (கம்மேல் முன்பு) அன்புடைய மகளிரும், கருத்த அல்லர் - (இப்பொழுது கம்மை) எண்ணு தலும் இல்லாராயினர்; (ஆதலால்), 'காவலித்த - (அம்மகளிரை விரும்பி, நாம்—, ஆதும் - வாழ்கட்டவோம்', என்னும் - என்கிற, அவாவினை-ஆசை யை, கைவிட்டு - முழுவதும் நீக்கி, போவதே - (துறவுக்குச்) செல்வதே, பொருள் போலும் - நல்ல காரிய மாகும்; (எ - று.)

ஒருவர்க்கு ஒன்றுகொடுத்து உபகாரஞ்செய்யக்கூடாமலும் போகல் கூடா அனுபவிக்கக்கூடாமலும் போனபின்பும் சிற்றின்பத்தில் ஆசையைத் தூத் தடுமாறுவதைவிட்டு ஆத்மானுபவசுகத்தைப் பெற மனத்தினிவதே பெருமை என்பது கருத்து.

இச்செய்யுள் ஒருவன் தன்மனத்தைநோக்கி உபதேசித்ததாகச் செய் யப்பட்டதென அறிக.

காதலவரும், உம்மை-உயர்வு சிறப்பு. கருத்தி - முதனிலைதிரிந்த தொ ழிற்பெயர். ஆதும்-மேலாகக்கூடவேம்; தன்மைப்பன்மையெதிர்காலமுற்று. போலும் - ஒப்பில்போலி; "ஒப்பில்போலியு மப்பொருட் டாகும்" என்ற தோல்காப்பியத்தால், இங்கு உரையசைப்பொருளாய் நின்றது. (க)

கஅந. இற்சார்வி னேமாந்தே மீங்கமைந்தே மென்றெண்ணிப்
பொச்சார்ந் தொழுகுவர் பேதையா—ரச்சார்வு
நின்றன போன்று நிலையா வெனவுணர்ந்தா
ரென்றும் பரிவ திலர்.

(இ - ன்.) பேதையார் - அறிவில்லாதவர்கள், 'இல் சார்வின் - இல் வாழ்க்கையை அடைந்ததனால், எமாந்தேம் - இன்பமடைந்தோம், ஈங்கு - இவ்வுலகத்தில், அமைந்தேம் - எல்லாவற்றாலும் நிறைந்தோம்,' என்ற ஏனனி-என்று நினைத்து, பொச்சார்ந்து ஒழுகுவர் - (பின்வருந்தன்பத்தை)

மறக்கு கடப்பார்கள்; 'அ சார்ந்த - (இல்வாழ்க்கையாகிய) அப்பற்றுக்கள், நின்றனபோன்று - நிலைபெற்றனபோற் காணப்பட்டு, நிலையாமைநிற்கிராவாய் அழிந்துபோய்விடும்,'என உணர்ந்தார்-என்று அறிந்த பெரியோர்கள், என்றும் - எப்பொழுதும், பரிவது இலர் - வருத்துதலில்லாதவராவர்.

எல்லாவற்றின் தன்மைகளேயும் உள்ளபடியறிந்த தத்துவஞானிகள் அழியாத வீட்டிலுகத்தில் நிரதிசயவின்பம்பெற்று வாழ்வர் என்றகருத்தி.

ஏமாந்தேம், ஏமா - பகுதி; அலமா, இறுமா, அல்லா, சோகா என்பன போல ஒருசொல் இனி,ஏமம் யா அல்லது ஏமம் ஆ என்னும் இரண்டுசொல் ஒருசொல்லின் தன்மைப்பட்டு ஏமா என்று நின்றதெனவுங் கொள்ளலாம். பொசசாந்து, பொசசா-பகுதி. ஈங்கு - இங்கு என்னும் சுட்டின் நீட்சி. பரிவது இலர் - (அந்த இல்வாழ்க்கையை) விரும்புதலிலராவர் என்னலுமாம்.

கஅஙூ. மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து
சிறுமைப் படாதேநீர் வாழ்மி—னறிஞராய்
நின்றழி நின்றே நிறம்வேறு காரண
மின்றிப் பலவு முளை.

(இ - ள்.) நீர்-நீங்கள், அறிஞர் ஆய்-அறிவுடையவர்களாய், மறுமைக்கு வித்து - மறுமைபின்புத்தருகுக் காரணமான நற்காரியத்தை, மயல்இன்றி-மயங்குதலில்லாமல், செய்து - தூண்டுதல்செய்து, சிறுமை படாதே-சிறியோராது தன்மையிற் பொருந்தாமல்,வாழ்மின்-வாழுங்கள்; (ஏனெனில்).—நின்றழி நின்றே நிறம் வேறு ஆம் - இருந்தலிடத்திலிருந்துகொண்டே நிறம் வேறுபட்டுப்போம், காரணம இன்றி பலவும் உள - ஒருகாரணமுந்தெரியாமற் பலவேறுபாடுகளும் உண்டாம். (எ - று.)

மறுமை-இரண்டாம்பிறவி அடையுங் கதி 'நின்றழி நின்றே நிறம் வேறும்' என்றது - உடம்பு நின்ற நிலையில் நிற்கையிலேயே விரைவில் இளமைமுதலிய அரண் தன்மைகள் வேறுபடி மென்றபடி 'காரண மின்றிப்பலவுமுள' என்றது கமக்குக் காரண மின்னதென்று தெரியாமல் வருத்தந்தருவதற்குரிய பல இடையூறுகள் கோவன என்றவாறு.

இதனுல், பெருமைப்படுதற்கு உபாயங கூறப்பட்டது. (கூ)

கஅஙு. உறைப்பருங் காலத்து மூற்று நீர்ந் தேனி
யிறைத்துணினு மூராற்று மென்பர்—கொடைக்கடனை,
சாயக மண்ணு மெரியாரோன் மற்றையா
ராயக மண்ணு மரி.

(இ - ள்.) உறைப்பு அரு காலத்தும் - மழைபெய்தல் அருமையான காலத்திலும், ஊற்று நீர் தேனி - ஊற்றிலுனுள் நீரையுடைய குளம், இறைத்து உணினும் - இறைத்துக்குடித்தாலும், ஊர் ஆற்றும்-ஊரிலுள்ளாரைக் காப்பாற்றும், என்பர்-என்று சொல்லுவார்கள்; கொடை கடனும்-தானஞ்செய்தலாகிய கடமையும், சாயக்கண்ணும் - (வறுமையால்) தளர்ந்த விடத்தும்,

பெரியார்போல்-பெரியவர்கள்போல, மற்றையார் - சிறியோர், ஆயக்கண்ணும் - செல்வமுடையோரானவிடத்தும், அரிது - உண்டாதலில்லை.

சுரப்புள்ளதொருகுளம் மழையில்லாத பொழுதும் ஊற்றுநீரோம் பலரைக் காப்பாற்றவதுபோல, பெருமையுடையார், செல்வக் தங்களுக்கு இல்லாதபொழுதும் யாதோ ஒருவகையாற்பிறர்க்கு உதவிசெய்வர்; சிறியாரோ செல்வ முகுயிலும் அப்படிச்செய்யார் என்பது கருத்து.

முன்னிரண்டடியிற் கூறிய உபமானம் பெரியோர்களது தன்மையாகிய உபமேயத்தைக் குறித்ததனால், பிரிந்துமொழித்தலென்னும் அணி.

ஊற்று - ஊறுவது. குளத்தைக் கேணி யென்பது, அருவாகாட்டார் வழங்குந்திசைச்சொல். ஊர்-ஊரிலுள்ளார்க்கு இடவாகுபெயர்; 'ஊருணி,' 'ஊடைங்கிற்று' என்றவற்றிற் போல. கடனும், உம்மை-அசை; உய்வு பிறப்பு என்றலும் ஒன்று. சாயக்கண், ஆயக்கண் - 'கண்' விகுதி பெற்ற எதிர்கால வினையெச்சங்கள்: இரண்டிலும், அளபெடை-செய்யுளோசை நிறைத்தற்பொருட்டுவந்தது. மற்றையார்-மற்றையென்னும் இடைச்சொல், வேறு என்னும் பொருளது. அரிது என்பதற்குக் கடனும் என்பது எழுவாய்.

'சாஅயக்கண்', ஆஅயக்கண்' என ஈரளபெடையான பாடத்துக்கு ஒரு அளபெடை இன்னிசைநிறைக்கவந்ததெனக் கொள்க.

பின்னிரண்டடிகளில் அளபெடை வந்தது, அளபுந்தோடை. (5)

கமுடு. உறுபுன றந்துல கூட்டி யறுமிடத்தும்
கல்லுறு மூழியு மாறேபோற்—செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டிலந்தங் கண்ணுஞ் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை.

(இ - ள்.) உறு புனல் தந்து - (செழித்தகாலத்தில்) மிகுந்த நீரைக் கொடுத்து, உலகு ஊட்டி - உலகத்தாரை உண்ணச்செய்து, அறும் இடத்தும்-நீர் அற்றகாலத்திலும், கல் ஊற்று ஊழி-தோண்டப்படுகிற ஊற்றுக்குழியிலே, ஊறும் - நீர்சுரக்கின்ற, ஆறே போல் - நதியே போல,—(பெரியோர்கள்), செல்வம் - (தமது) பொருளை, பலர்க்கு ஆற்றி (செழித்திருள்ள காலத்தில்) பலபேர்க்குந் தானஞ்செய்து, கெட்டு உலர்த்தக்கண்ணும் - அழித்து வறக்கவிடத்தும், சிலர்க்கு - சிலர்க்காயினும், ஆற்றி - தானஞ்செய்து, செயற்பாலவை - செய்யத்தக்க உபகாரங்களை, செய்வர் - செய்வார்கள்.

ஆறுனது வெள்ளமுள்ள காலத்துத் தண்ணீ எவருந் தோண்டுதல் வேண்டாமலே தானே எங்குஞ்சென்று நீரைஉதவிநீர்வறண்டகாலத்திலுந் தோண்டினமாத்திரத்தில் நீரை உதவுதல்போல, குடிப்பிறந்தார் செல்வ முள்ளகாலத்தே எவரும் தம்மைச்சேர்ந்து யாசிக்கவேண்டாமலே தாமே எங்குஞ்சென்று உதவிகள் செய்து செல்வமில்லாதகாலத்திலுந் தம்மை அடைந்தமாத்திரத்தில் உதவிசெய்வர் என்பதாம். "எற்றிரும்பூமில்லாலிடத்தும் குடிப்பிறந்தார், அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தாற்றுவர்;

அற்றக் கடைத்தி மகல்யாறகழ்ந்தக்கால், தெற்றெனத்தெண்ணீர் படும்" எனஇக்குற்பதினேந்தாம்அதிகாரத்தில்வந்ததையுங் காண்க. உவமையணி.

"ஆற்றுப் பெருக்கற் றடிசுடு மக்காளு மவ்வா, றாற்றுப்பெருக்கா தில்ல கூட்டும்-ஏற்றவர்க்கு, கல்ல குடிப்பிறத்தார் கல்கூர்த்தாரானுலும், இல்லே யென மாட்டா நிகைக்கு" என்ற நல்வழிசெய்யுளோடு இதனே ஒப்பிடுக. "இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார், கடனறி காட்சி யவர்"என்னுக் திருக்குறளிலும் இக்கருத்தே விளங்குகின்றது.

கல்ஊற்று - வினேத்தொகை.

இச்செய்யுளின் ஈற்றடி போலவே கசஎ, கஙஙு - ஆஞ் செய்யுள்களில் ஈற்றடியுமிருத்தல் காண்க. (இ)

கஉசு. பெருவரை நாட பெரியார்கட் டீமை
கருநரைமேற் ரூடேபோற் ருேன் றுங்—கருநரையைக்
கொன்றன்ன வின்னு செயினுஞ், சிறியார்மே
லொன்ருனுந் தோன்ருக் கேடும்.

(இ - ன்.) பெரு வரை நாட-பெரிய மலேயையுடைய நாட்டை யுடைய பாண்டியராசனே!—பெரியார்கண்-பெரியோரிடத்து உண்டான, தீமை - குற்றமானது, கரு நரை மேல் சூடே போல் - பெரிய வெள்ளேயெருதின் மேற் போகட்ட சூட்டின் வடிப்போல, தோன்றும் - ரன்கு விளங்கும்; கரு நாரையை கொன்ற அன்ன-பெரிய எருதைக் கொன்றது போன்ற, இன்னுசெயல்களே, செயினும் - செய்தாரானுலும், சிறியார்மேல் - கீழ்மக்களிடத்து, ஒன்ருனும் - ஒருகுற்றமாயினும், தோன்ரு - விளங்கிக்காணுமல், கெடும் - அழியும்; (எ - று.)

இதனுல், பெருமையுடையோர் சிறிதுங் குற்றஞ்செய்யாது தம்மைக் காக்கவேண்டு மென்பது பெற்ரும்; "கன்றி முதிர்ந்த கழியப்பன்னுள்செயினும், ஒன்றுஞ் சிறியார்க ணென்னுஞ் தோன்ருவாம், ஒன்றும் விடினு முயர்ந்தார்ப்பங்குற்றங், குன்றின்மே லிட்ட விளக்கு" (பழமொழி) எனப் பிறர் கூறியதுங் காண்க. உவமாயணி. பெரும்பாதகமாகிய பசுக்கொலேயைக் குறிப்பித்தற்கு, 'நரையைக்கொன்றன்ன' என்ருர்.

நரை-வெண்மை; வெள்ளெருதுக்குப் பண்பாகுபெயர். சூடு-சுடப்படுவது; முதனிலே திரிந்தது. 'கருநரைமேல் சூடேபோல்' என்பதற்கு - கரிய எருதின்மேலுள்ளமுசப்புப்போல என்றும்உரைப்பர். தோன்ரு-ஈறுகெட்ட எதிர்மறை வினேயெச்சம்; இதன்முன் வல்லொற்று மிகுவதேதகுதி. 'தோன்ருகெடும்' என ஒற்றுமிகாமற் பாடங்கொண்டு, அஃறிணேப் பன்மைமுற்றெச்சமென்பார்க்கு, ஒன்ருனும் என்ற ஒருமையோடு வழுவாமைமுடிக்க.

கஉஎ. இரைந்த சிறுமை யியல்பிலா தார்கட்
பரைந்த தணேயும் பரிவா—மரைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவி னர்கட்
பகையேயும் பாடு பெரும்.

(இ - ள்.) பிறமை-பிழ்மைக்குணம், பிசைந்த - பொருந்திய, இயல்பு இலாதார்கண்-நற்குண மில்லாதவரிடத்து, பசைந்த தணியும்-இனிமைத்த வனவும், பரிவு ஆம்-துன்பமேயாம்; அசைந்த-நிலைதடுமாறிய நிச்செயல்களே, கசையேயும்-வினையாட்டிலேயும், வேண்டாத - விரும்பாத, நல் அறிவினர் கண் - நல்ல அறிவையுடைய பெரியோரிடத்து, பகையேயும்-விரோதமும், பாடு பெறும் - பெருமையடையும்; (எ - று.)

ஒருவன் பெரியோரிடத்துப்பகைமை கொண்டால், பெரியோர்கள் மிக்க பொறுமையை யுடையவராதலால், அதனால் அவனுக்குத் தீங்கு வாராது; வந்தாலும் ஒருவாற்றால் உய்தல்கூடும். தீயோர் சேர்க்கையால் உண்டாகுங் தீமைகளுக்கு ஒருவாற்றாலும் தப்பமுடியாதுஎன்பதகருத்து. "பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையார், ஏதின்மை கோடி யுறும்" என்றார் திருக்குறளிலும்.

பிறமை - நற்குணங்கள் யாவு மின்மை. அசைந்த - பெயர். இதற்கு பிறர் கடுங்குதற்குக் காரணமான கொடுந்தொழில்கள் என்றும் உரைப்பர். கசை - கிரித்தல்; கசு - வருந்தி, ஐ - விருதி: கசை-பருந்தியாயின், முதனிலைத் தொழிற்பெயர்; பரிகாசமென்றபடி. இனி, கசையேயும் என்பதற்கு-களிக் குங்காலத்தும் என்றும் உரைக்கலாம்.

பரிகாசத்திலுந் தகாததைக் கொள்ளலாகாதென்பதை "பரிஹாஸே ப்யகேளித்யம்" என்னும் வடநூல் மேற்கோளாலும் அறிக. (எ)

கடிய மெல்லிய நல்லாருண் மென்மை யதனிற்றந்
தொன்னாருட் கூற்றட்டு மூட்குடைமை யெல்லாஞ்
சலவருட் சாலச் சலமே நலவரு
ணன்மை வரம்பாய் விடல்.

(இ - ள்.) மெல்லிய - வலிமையில்லாத, நல்லாருள்-பகையல்லாதவரிட த்து, மென்மை - (தானும்) நிருதுவாயிருத்தற்கும்,—ஒன்னாருள் - (வலிய) பகைவர்களிடத்து, அது இறந்து-அம்மென்மைத்தன்மையைவிட்டு, கூற்று உட்கும் உட்கு உடைமை-யமனும் அஞ்சும்படியான பயங்கரத்தன்மையை உடைத்தாயிருத்தற்கும்,—எல்லாம் சலவருள் - எல்லாக்காரியகளிலும் பொய்யுடையோரிடத்து சால சலமே - மிகவும் பொய்பேசுதற்கும்,—நல வருள் - நற்குணமுடையோரிடத்து, நன்மை - நற்குணமுடைமைக்கும்,— வரம்பு ஆய்விடல் - (ஒருவன்) எல்லையாயிருக்கக்கடவன்; (எ - று.)

அயோக்கியரிடத்து அயோக்கியமாயும் யோக்கியரிடத்து யோக்கிய மாயும் நடப்பது பெருமை யென்பது கருத்து.

'மெல்லிய' என்றதனால் ஒன்னார் வலியவரென்றும், 'ஒன்னார்' என்றத னால் நல்லார் பகையில்லாதவரென்றும் கொள்ளப்பட்டது. சலமுடை யோர், சலவர்; நலமுடையோர், நலவர். சலம் - தணியாக்கோபமுமாம். சால - உரிச்சொல்லடியாப் பிறந்த செயவெனெச்சம்.

மென்மை, உடைமை, சலம் என்றவிடங்களில் 'வேண்டுக' என்றுவது, 'செலுத்துக' என்றுவது வினைவருவித்துத் தனித்தனிவாக்கியமாக முடிப்

பாருமூளர். ஆய்விடல்-'அல்' லிருநிபெற்றுவந்த உடன்பாட்டுவியங்கோள் வினைமுற்று; "மக்கட் பதடி யெனல்" என்ற திருக்குறளில் 'எனல்' என்பது போல: இதில், விடு - தணிவுப்பொருளுணர்த்நிற்று. இனி, வரம்பாய் - எல்லையாகி, விடல் - செலுத்துதல என்றும் உரைக்கலாம்.

இசசெய்புளில் 'வரம்பாய்விடல்' என்பது; கடைநிலைத்தொழிற்றிவகம்.

க அகூ. கடுக்கி யொருவன் கடுங்குறளே பேசி
மயக்கி விடினு மனப்பிரிப்பொன் றின்றித்
தளர்க்க மிலாதவர் தூய மனத்தார்
விளர்க்கினு ளொண்சுடரே போன்று.

(இ - ன்.) ஒருவன்-ஒருத்தன், கடுக்கி-(முகத்தைக்) கடுமையாக வைத்துக்கொண்டு, கடு குறளே பேசி-(பிறர்மேல்) கொடியகோட்சொல்லி, மயக்கி விடினும் - (தமது அறிவு) மயங்குமபடி செய்தாலும், மனம் பிரிப்பு ஒன்று இன்றி-மனத்தில் வேறுபடுதல் நிறிதும் இல்லாமல், தளர்க்கம் இலாதவர்-கலக்கமில்லாதவர்கள் தாமே, விளர்க்கினுள் ஒண் சுடரே போன்று - நீபத்தினிடத்துள்ள பிரகாசமான சுவாலையையே யொத்து, தய மனத்தார் - பரிசுத்தமான மனத்தை யுடையவ ராவர்; (எ - று.)

ஒருவனிடத்துத் தாமாகக் குற்றங்கண்டன்றிப் பிறர்சொல்லுங் கோட்சொற்களேக் கேட்டு அவறைக்கொண்டு தரமிப்பிராயப்படுவது பெருமையன்றென்பது கருத்து.

குறளே-பழிமொழி; புறங்கூறல். ஒன்று என்பது, இக்கே, சிறிதென்பதைக்காட்டி நின்றது. சுடரே, ஏ-உயர்வுசிறப்பு. 'இன்றி' என்னுங் குறிப்பு வினையெச்சம், 'இலாதவர்' என்னுங குறிப்பு வினையாலணையும் பெயரைக் கொண்டது. (கூ)

கஙூ. முற்றுத்துந் துத்தினே நாளு மறஞ்செய்து
பிற்றுத்துத் துத்துவர் சான்றவ—ரத்துத்து
மூக்குற்ற நீக்கி முடியு மளவெல்லாந்
துங்கத்து னீக்கி விடும்.

(இ-ள்.) சான்றவர்-பெரியோர்கள், மூன் றுதீதும் துத்தினே-மூன்றே உண்ணுதற்கு உரிய உணவை, நாளும்-தினந்தோறும், அறம் செய்து-(பிறர்க்குத்தானஞ்செய்தலாகிய) தருமமாகச் செய்துவிட்டு, பின்றுத்தி - பின்பு உண்ணுதற்கு உரிய உணவை, துத்துவர்-(பின்புதரம்) உண்பர்; அ துத்து-அங்ஙனம் பிறர்க்குக்கொடுத்தலும் தாணுண்டதுமாகிய உணவு,—(அவர்களது),மூ குற்றம் நீக்கி-(காமம் வெகுளி மயக்கம் என்னும்) மூன்று குற்றங்களேயும் போக்கி, முடியும் அளவு எல்லாம்-(அவர்கள்) வீடுபெறுமளவும்,அதக்கத்துள் நீக்கிவிடும்-(அவர்களேப்) பலதுன்பங்களினின்றும் நீங்கச்செய்யும்.

. தமக்கு அருமையாகக்கிடைத்த உணவு இரண்டு கவளமேயாஞலும் அவற்றுள் முதலிலெடுக்கும் கவளத்தை விருந்தினர் சந்றத்தார் முதலி

யோர்களுள் சேர்பவர்க்குக் கொடுத்து மற்றெரு சுவளத்தையே தாம்உண் பது, செல்லாத மட்டுத் தன்பங்கனோர்க்கு இன்பங்கனேத்தரும்படியானபெரு மைக்குணமாம் என்பது கருத்து. இங்ஙனஞ்செய்வது, ஐம்பெருவேள்வி களுள் ஒன்றுகிய மநுஷ்யஜ்ஞம் [வீருர்தோம்பல்] எனப்படும்.(மற்றவை— பிரமயஜ்ஞம் [வேதமோதுதல்], தேவயஜ்ஞம் [தெம்மவர்த்தல்], பித்ருயஜ் ஞம் [தர்ப்பணஞ்செய்தல்], பூதயஜ்ஞம் [பலியீதல்] என்பனவாம்.)

தத்தும்-எதிர்காலப்பெயரெச்சம்; து-பகுதி, த்-சந்தி, து - சாரியை, உம் - விகுதி. தித்து - வினையாலணையும்பெயர்; உண்ணத்தக்க தென்பது பொருள்: து-பகுதி, து-ஒன்றன்பால் விகுதி; து - தொழிற்பெயர் விகுதி யெனக்கொண்டு, தொழிலாகுபெய ரென்றலுமாம். இனி, 'தற்றும்,' 'தற் றின்ன,' 'தற்று'; 'தற்றவர்,' 'தற்று' எனப்பாடங்கொள்வாரு மூளர்; அப் பாடத்திற்கு, தற்று-பகுதியென்க. முடிபுமுளவு-இறக்குமளவு என்றுமாம். எல்லாம் என்பதை 'அத்தித்து' என்பதனேடு கூட்டலுமாம்.

'அனுதியாகிய அவிச்சையும்,அதுபற்றி யான்என மதிக்கும் அகங்கார மும், அதுபற்றி எனக்கு இதுவேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப் பொருளின் கண் செல்லும் ஆசையும், அதுபற்றி அதன்மறுதலையின்கண் செல்லுங்கோபமும்' எனவடநூலார்குற்றம் ஐந்தென்ருர்; இவை-அவித்யா, அஸ்மிதா, ராகம், அபிநிவேசம், த்வேஷம் என்னும் பஞ்சக்லேச மெனப் படும்: அவற்றுள் அகங்காரம் அவிச்சையிலும், அவாவதல் ஆசையிலும் அட ங்குதலால், தமிழ் நூலார் குற்றம் மூன்றென்பர்; ''காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன், ராமக்கெடக் கெடு நோய்'' என்ருர் நீருவள்ளுவனரும்.

## உ0 ஆம் அதிகாரம்.—தாளாண்மை.

அரீதாவது-இடைவிடாத மெய்ம்முயற்சியை ஆளுர்தன்மை. எல்லா ற்காரியங்களேயும் லகூடுவிக்கின்ற இக்குணம், பெருமையுடையோர்க்கு இன்றியமையாதாதலின், அதன்பின் வைக்கப்பட்டது. முயற்சியுடையார் க்கே பெருமை சித்திக்குமென்பது அதிகாரமுறைமைக்குக் காரணமெனி னுமாம்.

கக. கோளாற்றற் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்போற்
கேளிவ துண்டு கிளேகளோ துஞ்சுப
வாளாடு கூத்தியர் கண்போற் றடுமாறுந்
தாளாளர்க் குண்டோ தவறு.

(இ - ன்.) கோள் - கொள்ளுதற்கு உரிய நீரை, ஆற்ற - மிகுதியாக, கொள்ளார்-கொள்ளமாட்டாத, குளத்தின் கிழ்-நீர்நிலையின் கிழுள்ள, பைங் கூழ் போல்-பசிய பயிர்போல, கேள் ஈவது உண்டு - அன்பர்கள் கொடுப் பதைப்புரித்து, கிளேகளோ-(அக்கொடுப்பவர்களுக்கு) உறுப்பாயுள்ளவர்க ளோ, துஞ்சுப-(அவனுக்கு வறுமைநேர்தலிடத்தித் தாமும்) வருந்துவர்;

(அங்ஙனமன்றி),வாள் ஆடுகூத்தியர் கண் போல்-வாளின்மேலிருந்து ஆடுகின்றகூத்தையுடைய மகளிரது கண்கள்போல, தடுமாறும்-(பலவிடத்தயக்கங்களிலும் ஏககாலத்தில்) ஒழியாமல் விரைந்து செல்கின்ற, தாள் ஆளர்க்குமுயற்சியைக் கையாளுகின்றவருக்கு, தவறுஉண்டோ-(நினைத்தொடங்கியுமுள்ள காரியம்) கைகூடாமற்போவது உண்டோ? [இல்லை யென்றபடி.]

மிக்கசீரைக் கொள்ளமாட்டாத வரியின்கீழ்ப் பயிர் அவ்வேரி செழித்திருக்கு மனவுஞ் செழித்திருந்து அது வறண்டால்தானும் அழிவதுபோல, ஒரு முயற்சியுஞ் செய்யாமல் அன்பர்கள் கொடுக்கத் தின்று கொண்டு காலங்கழிக்குஞ் சோம்பர்கள் அவர் செல்வம் வறளும்போது தாமும் அழிவர்; கத்திமூனையின் மேலிருந்து கூத்தாடுகிறவள் அவ்வாட்டத் தவறுமலும் தனக்கு அபாயம் வராமலுங் கவனமாய்க் கண்ணே காற்புறமும்செலுத்துவது போலக் கவனமாய் முயற்செய்பவர்களுக்கு எக்காரியமுந்தவறிப்போகாதாதலால்அவர்களுக்கு எப்பொழுதும்ஒருகுறைவுமில்லை என்பது கருத்து.

ஆற்ற - ஆற்று என்னும் பகுதியின்மேற் செயவெனெச்சம். கூழ் என்னும் உணவின்பெயர், அதற்குக்காரணமான பயிருக்குக் காரியவாகுபெயர். இனைகளோ, ஓ இரக்கத்தில் வந்தது. வாளாடுகூத்தியர்-இரண்டு கையிலும் வாளே எடுத்துச் சுழற்றிக்கொண்டு தாமுஞ் சுழன்று ஆடும் இளமங்கையரென்றலுமொன்று; இவர்கள், மதங்கியரெனப்படுவர். வாள் ஆடென்பதற்கு-ஒளிபொருந்திய எனப் பொருளுரைத்து, கண்ணுக்கும் அடைமொழியாக்குவர். கூத்தாடும்மகளிரது வாள்போலுங்கண் எனினுமாம். கூத்து-கபாப்பதமாகிய தொழிற்பெயர். தவ - தம்பிதிற்றல், அதுமாறுதல்-தடுமாற்றம்.

'துஞ்சுக' என்றும், 'துஞ்சுவ' என்றும், 'துஞ்சுவர்' என்றும் பாடமுண்டு. (க)

ககூ௨. ஆடுகோ டாகி யதரிடை நின்றதூஉம்
காழ்கொண்ட கண்ணே களிறமணந்குங் கந்தாகும்
வாழ்தலு மன்ன தகைத்தே யொருவன்றன்
முழ்வின்றித் தன்னைச் செயின்.

(இ - ள்.) ஆடுகோடு ஆகி - துவளுகின்ற சிறுகொம்பாகி, அதரிடை-வழியிலே, நின்றதூஉம்-நின்ற இளமரமும், காழ் கொண்ட கண்ணே உள் வயிரங்கொண்டவிடத்தே,களிறு அணைக்குங் கந்தாகும்-யானையைக்கட்டுவதற்கு ஆதாரமான தறியாகிவிடும்; ஒருவன்—, தான்—,தன்னை—,தாழ்வு இன்றி - (நின்ற நிலையினின்றும்) கீழ்ப்படுதலில்லாதபடி, செயின்-(முயற்சியால்) விருத்திசெய்வானுயின், வாழ்தலும்—,(அவனுடைய) வாழ்க்கையும், அன்ன தகைத்தே-அப்படிப்பட்ட தன்மையை யுடையதேயாம்; (எ - று.)

முதலில்மிகமெல்லியதாயிருந்தாலும் முடிவில் நிரம்பவலியதாம் என்க.

கொண்ட கண் - பெயரெசசத்தொடர். 'கொண்டகண்' என்னும் பாடத்திற்கு - கண்ணீற்று எதிர்கால வினையெச்சமென்க. களிறு - ஆண்

பாற்பெயர்; "வேழக் குரித்தே விதந்து களி றென்றல்" என்னுந் தோல் காப்பியத்தால், இது யானைக்கு உரியதாதலே அறிக. (பெண்பால் - பிடி; "பிடியென் பெண்பெயர் யானைமேற்றே" என்னுர் தோல்காப்பியனர்.) களிறு - களிப்புடையது; களி - பருதி. று - பெயர்விகுதி. மதத்தார் கதஞ் செறித்த ஆண்யானையைக் கட்டுர் தறி மிகவலியதாயிருத்தல்வேண்டு மாதலின், 'களிறணைக்கு கர்தாகும்' என்னுர். கர்து-ஸ்கம்ப: என்னும் வட மொழியின் திரிபு. 'தின்றனஉம்' என்றதனுல், போற்றிவளர்ப்பாரில்லா மல் தானேவளர்வ தென்றவாறு; இது, பிறருதவியில்லாமல் தானே முய ன்று பெற்படைதற்கு உவமை.

உவமையணி. இரண்டாமடி - முற்றுமோனே. (உ)

கக. உறுபுலி யூனிரை யின்றி யொருநாட்
சிறுதேரை பற்றியுந் தின்னு—மறிவினுற்
காற்றொழி லென்று கருதற்க கையினுன்
மேற்றொழிலு மாங்கே மிகும்.

(இ - ன்.) உறு புலி-வலிமை மிகுர்தபுலியானது, ஊன் இரை இன்றி - (தான் உண்ணுதற்கு உரிய மிக்க) இறைச்சியாகிய உணவு இல்லாமல், ஒரு நான் - ஒருதினத்தில், சிறு தேரை பற்றியும் தின்னும் - சிறிய தவக்கையைப் பிடித்தும்புசிக்கும்; (அதுபோலவே, ஒருவன்), அறிவினுல் - தன் அறிவினு லே, கால்தொழில் என்று கருதற்க-(கிடைத்ததொரு தொழிலைக்) காலாற் செய்தற்குரிய சிறுதொழி லென்று நினைத்து அலக்ஷ்ய: செய்யாதிருக்கக் கடவன்; (எனெனில்) ஆங்கே - அச்சிறுதொழில் செய்துவருகையிலேயே, கையினுல் மேல் தொழிலும்-கையாற்செய்தற்குரிய மேலான செய்கையும், மிகும் - உண்டாகும்; (எ - று.)

புலியும் ஒருசமயத்தில் தேரையைத் தின்னும்படி நேரிடும் ஆதலால், காமும் சமயத்துக்கு ஏற்றபடி ஒரு அற்பகாரியஞ் செய்யவர்தால் அதை அற்பமென்று நினையாமல் முயன்றால் மேலானகாரியம் அப்படியே கை கூடும் என்பது கருத்து. எடுத்துக்காட்டுவமையணி.

பெரிரைச்சி கிடையாதகாலத்துப் புலி கிடைத்த சிற்றிரைசியையும் இழந்து தின்னுதொழிர்தால் இறந்துவிமென்றே அங்ஙனம் இறவாமற் கிடைத்ததை உண்டு ஜீவித்ததனுல் மறுநாளாயினும் பெரிரை கிடைக்கப் பெறுதல்கூடும்; அதுபோலவே, பெருர்தொழில் கிடையாதகாலத்து ஒரு வன் கிடைத்த சிறுதொழிலையும் இழந்து செய்யாதொழிர்தால் அழிர்த லிவ னன்றே? அங்ஙனம் அழியாமல், கிடைத்த தொழிலைச் செய்துவாழ்வ தனுல்மற்றொரு காலத்தாயினும் பெருர்தொழில்கிடைக்கப்பெறுதல்கூடும்.

கஉ. இசையா தெனினு மியற்றியோ ராற்று
லசையா துகிற்பதா மாண்மை—யிசையுங்காற்
கண்ட நிரையலேர்குங் காலனுர் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று.

(இ - ள்.) கண்டல் - தாழையை, திரை - அலைகள், அலைக்கும் - அலையசெய்கின்ற, கானல் - கரைசேர்கலையையுடைய, அம் - அழகிய, தண் - குளிர்ந்த, சேர்ப்ப - கடல்துறையையுடைய பாண்டியனே!—இசையாதது எரிறும்-(செய்யத்தொடங்கியதொருதொழில் எளிதில்) முடியாதாயினும், இயற்றி - (இடையூற்றின் மிகுதிக்கு அஞ்சி) வீடாமல் அரிதின் முயன்று செய்து, ஓர் ஆற்றல் அசையாது - ஒருவகையாலுர் தளராமல், கிற்பது - (அம்முயற்சிவழியிலேயே) நிலைத்திற்பது, ஆண்மை ஆம் - ஆண்தன்மையாம்; இசையும் கால் - (அங்ஙனமன்றி மிக எளிதில் ஒவ்வொரு காரியமும்) கைகூடுவதானால், பெண்டிரும்-பெண்களும், வாழாரோ - (ஆடவர்போல) மேன்மைபெறமாட்டார்களோ? (எ - று.)

மகளிரினும் ஆடவர்க்கு உள்ள சிறப்பு, எத்தணைச்செய்தற்கரிய செயலேயுர்தொடங்கி இடையூற்றினேதோக்கி இடையில்விட்டிடாமல்முடிவுவரையிலும்முயன்றுசெய்துபோவதேயாம் என்றுகருத்து. "அருமையுடைத்தென்றசாவாமை வேண்டும், பெருமை முயற்கி தரும்" என்றுர் திருவள்ளுவரும்.

மற்று - வினைமாற்று. அம் - அழகைக்குறிக்கும் உரிச்சொல்; சாரியையாகவுமாம். ஆண்மை, மை - தன்மைப்பொருளுணர்த்தும் விகுதி. ஓர் ஆற்றல் இயற்றி என இயைத்து, ஒருவாறாகச செய்து என்றுமாம். வாழாரோ-இரண்டி எதிர்மறை உடன்பாடி கானல்-உற்கரைசோலை. (ச)

கூகூடு. நல்ல குலமென் றீய தூலமென் றாரு
சொல்லை வல்லார் பொ ருளில்லத்—தொல்கிறப்பி
னொண்பொரு ணன்றே தவங்கல்வி யாள்வினை
யென்றிவற் றினுகுங் குலம்.

(இ - ள்.) கல்ல குலம் என்றும் - உயர்ந்த குடி யெனவும், நீய குலம் என்றும் - தாழ்ந்த குடியெனவும், சொல் அளவு அல்லால்-சொல்மாத்திரமாயிருப்பதேயல்லாமல், பொருள் இல்லை - (அசொற்களுக்குச கிறந்த) பொருள் இல்லை; (ஏனெனில்), தொல் கிறப்பின்-பழமையான கிறப்பையுடைய, ஒன்பொருள் ஒன்றே-சுத்தமான செல்வமொன்று மாத்திரத்தாலோ, தவம்-தவமும், கல்வி - படிப்பு, ஆள் வினை - முயற்சியும், என்ற இவற்றின் - என்றுசொல்லப்பட்ட இக்குணங்களால், குலம்—, ஆகும் - மேன்மையடையும்; (எ - று.)

இயற்கையாய் கல்லகுலமென்றும் நீயகுலமென்றும் இல்லை, கற்குண கற்செய்கையுடைமையால் கல்லகுலமெனறும் அவையின்மையால் நீயகுல மென்றும் ஆகும் என்று கருத்து.

ஒண் பொருள் - ஒளியையுடைய பொருள்; பொருளுக்கு ஒளியாவது - கல்வழியாற் சம்பாதிக்கப்படுதல் அப்படிப்பட்ட பொருளுக்குச் சிறப்பு - அறம் இன்பம் என்னும் இரண்டுபுருஷார்த்தங்களையுங் தருவதால். இச் சிறப்பு மனு முதலிய பழைய நூல்களிற் கூறப்பட்டது என்பது தோன்ற,

'தொல் றெப்பு' என்றார். ஒன்றே என்பதை எண்ணிடைச் சொல்லாகவுங் கொள்ளலாம்; "அறனெனறே வான்ற வொழுக்கு" என்ற திருக்குறளிற் போல, என்றிவற்றுள் - பெயரெச்சத்தின் ஈறு தொகுத்தல்; இனி, என்று என்பதை எண்ணிடைச்சொல்லாகக் கொண்டு, நின்றலித்தப்பிரித்துப் பிறவிடத்துங்கூட்டி உரைத்தலும் ஒன்று. ஆன் வினை - ஆளும் வினையென வினைத்தொகை; தொழிலை நடத்துதற்குக் காரணமான முயற்சியை ஆன் வினையெனக் காரியத்தின் பெயராற் கூறினர்.

"ஆர்கு மறிவா னலது பிறப்பிஞன், பீக்கொ ளுயர்வீழிவு வேண்ட தற்" என்னும் நான்னெறியை உணர்க. "சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால், நீதிவழுவா நெறிமுறையின் - மேதினியில், இட்டார் பெரியோர் இடாதார் இதிதலத்தோர், பட்டாங்கு ளுள்ள படி" என்றபடியிக் செய்புனோடு ஒத்த வாய்பாலை யுதை இச்செய்யுன். "குணோருத்தங்கதாம் யாதினுதுஜாதிப்பாவுத" என்ற வடமொழிமேற்கோளும் காண்க. (கு)

கசுஉ. ஆற்றுங் துணையு மறிவினை யுள்ளடக்கி
யுக்த முளையா நுணர்வுடையா ருக்த
முறுப்பிஞ லாராயு மொண்மை யுடையார்
குறிப்பின்கிழ்ப் பட்ட துலகு.

(இ - ன்.) ஆற்றும் துணையும் -(ஒருகாரியத்தைச்) செய்து முடிக்கு மளவும், அறிவினை - (அதுசெய்தற்குத் தமக்குள்ள) அறிவை, உள் அடக்கி - (வெளிப்படுத்தாமல்) மனத்திலேயே அடக்கிவைத்து, ஊக்கம் - (தமது) முயற்சியை, உணர்வுடையார்-அறிவுடையவர்கள், உரையார்-(பிறர்க்குச்) சொல்லார்; ஊக்கம்-(பிறர்) மனவலியை, உறப்பிஞல்-(அவர்களது முகம் கண் முதலிய) அவயவங்களின் குறிப்பிஞல், ஆராயும்-ஆராய்ந்துணர்கிற, ஒண்மை உடையார்-அறிவுவுடையவர்களது, குறிப்பின்கீழ்-புத்தியடத்தில், உலகு - உலகம், பட்டது - அடங்கியிருக்கின்றது; (எ - று.)

புத்திமான்கள் தமதுமுயற்சி பயன்படுமளவும் தமது கருத்தைக் குறிப்பிஞல் பிறர் அறியவொண்ணுதபடி அடக்குவர்;பிறர்கருத்தை அவர்களது முப்புக்க ளிருந்துக் தன்மையால் அறிந்துகொள்வர்: அப்படிப்பட்டவர்களது குறிப்பில் உலகமெல்லாம் அடங்கியுள்ளது என்பது கருத்து.

ஊக்கம் உறுப்பிஞ லாராயப்படுதலே, "அடித்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சை, கடித்தது காட்டும் முகம்," "பாலைமையுங் கேண்மையும் கண்ணுளரைக்குங் கண்ணின், வலைமை யுணர்வார்ப் பெறின்" என்ற திருக்குறள்களாலறிக. குறிப்பின்கீழ் என்பதற்கு-குறிப்பாலேவுவின்ற குற்றேவலில் என்றும் உரைக்கலாம்.

இரண்டாமடி - ஒழ்றுமோனை.

"யஸ்யக்ருத்யம் நஜானந்தி மந்த்ரம் வா மந்த்ரிதம்பரே-க்ருதமேவாஸ்ய ஜானந்தி லவைபண்டிதஉச்யதே" என்னும் வடநூன் மேற்கோளை ஒப்பு நோக்குக. (சு)

௧௯௭. சிதலை நினப்பட்ட வால மரத்தை
மதலையாய் மற்றதன் வீழ்நன்றி யாங்குக்
குதலைமை தந்தைகட் டோன்றிற்றன் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்.

(இ - ன்.) சிதலை - செல்லிஞல், நினப்பட்ட - அரிக்கப்பட்ட, ஆல மரத்தை—,அதன் வீழ்-அதாரினின்ற இறங்கிய விழுதானது, மதலையாய்-தாங்குந் தூணாய் நின்று,ஊன்றி ஆங்கு-தாங்கினின்ற்றற்போல,—தந்தைகண்-பிதாவினிடத்தில், குதலைமை-தளர்சி, தோன்றின்-உண்டாஞல், (அது), தான் பெற்ற புதல்வன் மறைப்ப-அவன்பெற்ற புத்திரன்(தன்முயற்சியால்) மறைக்க, கெடும் - நீங்கிப்போம்; (எ - று.)

செல்லரித்து வீழ்ந்துபோகத்தக்க ஆலமரத்தை அதன்விழுது தாங்கு தல்போலத் தந்தைசெய்யுந் தொழிலுக்கு நேருந்தளர்சியையைமைத்தன்முயற்சியால் நீக்கவேண்டும் என்பது கருத்து இதனுல். தன்னேயேயன்றித்தன் முன்னோரையும் பெருமைப்பித்தவல்ல முயற்சியின்றிப்புக்கூறப்பட்டது.

ஆலமரம், அம்-சாரியை. மற்று அசை; பின்பு எனினுமாம். வீழ் விழுர்தின்னது; கருத்தாப்பொருள் விகுதி புணர்த்தகெட்ட பெயர். மதலை என் பதில் மகனென்னும் பொருளுந் தோன்றும், உவமையணி.

"கைத்தடியற்றவாலம் கடிகிவீழ்கின்றதென்று, வர்த்தவீழ்ன்றி வீழா வகை நிலவிளக்குமாபோல், மைந்தர்கள் தமக்குள் நல்ல அறிவிஞல்மிஞ்சி ந்து சேர்த்து, தந்தையைத் தளராவண்ணம் தாங்குவர் தவத்தினென்றன்" என்ற ஒட்டக்கூத்தருந்தாகூடைச்செய்யுள் இச்செய்யுளை அடியொற்றி யது. "ஆலகு நிறைவாவலுறை தொன்மரக னென்ன. தங்குருகுலகையவத னுட் பிறந்த வீரர், தாங்கல் கடனஞற்" என்றார் சித்தாமணியாரும். (எ)

௧௯௮. ஈனமா யில்லிருந் தின்றி விளியினு
மானந் தலைவரு செய்பவோ—யாதினை
வரிமுகம் புண்படுத் தும்வள் ளுகிர் கோன்ற
ளரிமா மதுகை யவர்.

(இ - ன்.) யாதினை-யாதேயினது, வரி-புள்ளிகளையுடைய, முகம் - முகத்தை, புண் படுக்கும்-விரணப்படுத்துகின்ற, வள்-கூர்மையான, உகிர் - நகங் களையும், கோன் தான்-வலிமையுடைய கால்களையுமுடைய,—அரிமா - சிங் கத்தினது,மதுகையவர்-வலிமைபோன்ற வலிமையுடையவர்கள்,ஈனம் ஆய்-(தம் தொழில்முயற்சி) குறைபட்டு, இல் இருந்து - வீட்டிலேயே இருந்து, இன்றி - ஒருபொருளும்) இல்லாமல், விளியினும் - இறக்கநேர்ந்தாலும், மானம் தலை வரு - இழிவு நேரும்படியான காரியங்களை, செய்பவோ - செய்வார்களோ? [செய்யார்]; (எ - று.)

நல்ல சாமர்த்தியமுள்ளவர்கள் ஒருகால் தங்கள் முயற்சி இடையூறுற்றுத் தொடங்கிய தொழில் முடியாமல் வழமையில் இறக்கும்படி நேரிட்டா

லும் பொறத்திருந்து அம்முயற்சியை மீண்டுங் கைகூடப் பார்ப்பார்களே யன்றி இழிதொழில்களைச் செய்யார் என்பதாம். (நீதிநெறி விளக்கம்) 'கல்லாரெழுத்தின் நலிவின்றிரார் கல்லார்த்தும், அல்லன செய்தற்கொருப்படார்-பல்பொறிய, செங்கட்புலியே றறப்பசித்தும் தின்னுமாம், பைங்கட்புனத்த "பைங்கூழ்" எனவும், (திரிகடுகம்) "தோல்வற்றிச, சாயினுஞ்சான்றுண்மை குன்றுமை" எனவும் பிறர் கூறுமாறுங் காண்க.

உபமேயத்தில் 'இல்லிருந் தின்றி வீளியினும்' என்பதற்கு ஏற்ப, உபமானத்தில் 'குலையிலிருந்து உணவின்றி இறக்கினும்' என்றும்; உபமானத்தில் 'யானே வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள்' என்பதற்கு ஏற்ப, உபமேயத்தில் 'பெருமுயற்சியைச செய்து முடிக்குங் கூறிவுந் தக்க வுபாயமுமுடையார்' என்றும் வருவித்து உரைக்க.

தலைவருவ-பெயர். முகத்திற் செம்புள்ளிகளே யுடைத்தாயிருத்தல், உத்தம கலலக்ஷணம். விமானமென்பது 'மானம்' என முதற்குறை விகாரப்பட்டு வருதல்போல, இவ்கே அவமானமென்பது 'மானம்' எனக்குறைந்து நின்றது; இனி, மானர் தலைவருவ-பெருமை கெடுவை என்றும் உரைக்கலாம்; இவ்வுரையில், தலையென்னும் உபசருக்கம், வர என்னும் பகுதியின் பொருளே வேறு பற்றியதென்க. (அ)

கஉஉ. நீங்கரும் பீன்ற திரள்கா லுளையலரி
தேங்கமழ் காற்ற மிழந்தா அங்—கோங்கு
முயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொ றிக்கும்
பேராண்மை யில்லார்க் கடை.

(இ - ன்.) நீம் - மதரமாகிய, கரும்பு - கரும்பானது, ஈன்ற - பெற்ற, திரள் கால் திரண்ட தாளையுடைய, உளை-(குதிரை சிகரம்முதலியவற்றின்) பிடரி மயிர் போன்ற, அலரி - பூவானது, தேன் கமழ் காற்றம் - தேனெடு கூடிப் பரிமளிக்கின்ற வாசனையை, இழந்தி ஆகுங - இழந்தாறபோல,—பெயர் பொறிக்கும் போ ஆண்மை இல்லாககடை-தன் பெயரைஇலிறுத்துதற்கு எதுவான பெரிய முயற்சிதறமை இல்லாதவிடத்து, ஓங்கும் உயர் குடியுள் பிறப்பின்- நல உயர்ந்த குலத்திற் பிறத்தலால், என் ஆம் - யாது பயன் உண்டாம்? (எ - று.)

மிக்க இன்சுவையுள்ள கரும்பிற் பிறந்தும் அதன் நுனியிலுள்ள மலர் க்குச சிறப்பில்லாமைபோல, உயர்குலத்திற் பிறந்தாலும் முயற்சியில்லா தார்க்குச சிறப்பிலலை யென்பதாம் உவமையணி.

திரள்கால-பூவிற்கு லிசேடணம். கால் என்றது, அதன்அடியிடத்தை. மெதுவாய்ச செறிந்து குஞ்சம்போலிருத்தலால், உகை, கரும்பின்மலருக்கு உவமையாயிற்று. அலர்வது, அலரி, இ-குருத்தாப்பொருள்விகுதி. தேன் + கமழ்=தேங்கமழ்; தேன்மொழி இறஇயழிந்து லலியர மெலிபிக்கது.தேம் கமழ் எனப்பிரித்தால்; இனிமைமிகுந்த என்ற பொருளாம். இழந்தாஅங்கு

செய்யுளோசையிறைக்க வந்த அளபெடை;அளபெடையில்லாக்கால்,புளிமா லின்முன் நேர்வருவது வெண்டளைக்கு வழுவாம். நெய்கும்,உயர்-ஒருபொருட் பன்மொழி. பிறப்பின், ஐந்தனுருபு - எதுப்பொருளது. பொறித்தல் - அறி வுடையோரால் எழுதும்படி யிருத்தல். பேராண்மை-அருமையான முயற்சி களைச் செய்யுந் திறம். இல்லாக்கடை-எதிர்மறை எதிர்காலவினையெச்சம்.

௨00 பெருமுத் தரையர் பெரிதுவக் நீயுங்
கருணைச்சோ ழர்வர் கயவர்—கருணையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரு மமிழ்தாய் விடும்.

(இ - ன்.) கயவர்-கீழ்மக்கள் [ஒருமுயற்சியுமில்லாத சோம்பேறிகள்],-பெருமுத்தரையர்-பெருமுத்தரையர் என்பவர், பெரிது உவந்து - மிகவும் விரும்பி, ஈயும்-அளிக்கிற, கருணை சோழ - பொரிக்கறியோடுகூடிய சோற்றை, ஆர்வர்-உண்பார்கள்; கருணையை பேரும் அறியார் - பொரிக்கறியைப் பேரினுமும் அறியாமல், நனிவிரும்பு தாளாண்மை-மிகவும்விரும்பிச்செய்த தம்முயற்சியாற் பெற்ற உண்ட, நீரும்-நீர்மாத்திரமும், அமிழ்தாயுவிடும்-(நிறப்பிரிவு) அமிருதத்தை ஒத்ததாகும்; (எ - று.)

தன்முயற்சியில்லாமற் பிறர்முயற்சியால் தான்பெற்ற கல்லுணவினும் பிறர் முயற்சியா லன்றித் தன் முயற்சியாற்பெற்ற உண்ட புற்கைநீர்மாத்திரமும் மேலானதென்பது கருத்து. "தெண்ணீ ரமிழ்தை யாயினுந் தான் கந்தது, உண்ணலி னூங்கினிய தில்" என்றார் திருக்குறளிலும்.

இசசெய்யுள்செய்த ஆசிரியர் காலத்துப் பெருஞ் செல்வத்தினராய் அன்னதானஞ்செய்தலிற் றிறந்த பெருமுத்தரையரென்பவரொருவர் இருந் தனரானதல்வேண்டும். இப்பெயர் இந்நூலின் முப்பதாம் அதிகாரத்தில் ஆறு வது செய்யுளிலும் "நலகூர்த்தக்கண்ணும் பெருமுத்தரையரே, செல்வரைச் சென்றீரவாதார்" எனக் காணப்படுகின்றது. ஸ்ரீரங்கத்துக்குச் சமீபத்தி லுள்ள முத்தரசநல்லூரில் முத்தரசன்என ஓரரசன் இருந்ததாகவும், அவன் ஸ்ரீரங்கராதனுக்கு முத்துகளாலேயே குடை சாமரம் சுருட்டி முதலிய எடுபிடிகளோடும் சில திருவாபரணங்களோடு செய்வித்ததாகவும் ஜதிதியபிரபு ப்தால், இப்பாட்டிற்கொல்லப்பட்டவன் அவ்வரசனுகலிருப்பினும் இருக் கலாமென்றும் ஊகிக்கப்படுகின்றது. பெருமுதத அரையர்-பெரிய முத்தக் கோயுடைய பாண்டியவரசர்கள் எனவுமஉரைக்கலாம்; அர்காட்டிலேமுத்து மிருகிடும் உண்டாவது பிரசித்தம்; அன்றி, பெருமு தரையர் எனப்பிரித்து, பெரிய மூன்றுதேசங்களுக்குத்தலைவர் எனக்கொண்டு, சேர சோழ பாண் டியர் என்னுந் தமிழ்நாட்டு மூவேந்தரெனவும் உரைகூறலாம். தம்மு ஷாட் டிலுள்ள பிரபுக்களின் பெயரை யெடுத்துத் தாம் செய்யும் தூலிற் நிறப்பித் துக்கூறுதல், கலிகனதுகியல்பு; கம்பர் இராமாயணத்தில்திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பமுதலியாரையும், புகழேந்திப்புலவர் களவெண்பாவில் முமணிகர் சந்திரசுவர்க்கியையும், வில்லிபுத்தூரார் மகா பாரதத்தில் வக்கபாகை வரபதியாட்கொண்டானையும், மண்டலபுருஷன் சூடாமணிநிக ண்டில் கிருஷ்ணதேவராயனையும் புகழுமாறு அறிக.

கருணை-மறைதத்தின் பண்டங்களுக்கும் உபலக்ஷணம். நீரும்,உம்மை-இழிவுசிறப்பு. திருப்தியையும் பெருமையையுந்தருவதனால், அமிருதத்தோடு ஒப்பிடப்பட்டது. (எ0)

அரசியல் முற்றிற்று.

## இரண்டாவது

# நட்பியல்.

உற்றழி உதவுபவராகிய நண்பரின் தன்மையைக் கூறும் பாகம் என் பதாம். அரசனுக்குப் படைபோல யாவர்க்கும் தொழிலிடத்து உதவுவதா கிய நட்பின் இயல்பை விதிமுகத்தாலும் எதிர்மறைமுகத்தாலும் இவ்வதி காரமுதல் நான்கு அதிகாரங்களாற் கூறுகின்றார். ஒருவனுக்கு இன்பதுன் பவகன் கோர்ந்தவிடத்துவக்கு உதவுபவர் உறவினரும் நண்பரு மாதலால் அவ்விருதிறத்தாரது தன்மையும் இவையிவற்றிற் கூறப்படுதல் அறிக.

## உக ஆம் அதிகாரம்.—சுற்றந்தழால்.

அஃதாவது தனது உறவினரைத் தன்னிடத்தினின் றும்விட்டுநீங்காத படி அணைத்தல். செல்வம் அதிகாரம் முதலியவற்றால் தாம் தருக்த மேம் பாட்டை அடையும்பொருட்டுப் பலவகைமுயற்சிகளையும் இடைவிடாது செய்தொழுகும் பெருமையுடையாருக்கு, சமயத்தில்வந்து உதவும் இவ்வுற வினரைத் தழுவுதலும் அம்முயற்சிகளின் இனமானதொன்றுமாதலின், இவ் வதிகாரம் தாளாண்மையென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது; பலவகை முயற்சிகளாலும் பொருள்படைத்தார்க்குப் பற்றுஜனவருக்கத் தைத் தழுவிப் பாதுகாத்தல் தருமவழியாதலால், இவ்வதிகாரம் தாளாண் மையென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப்பட்டதென்று கொள்ளலாம்: தாளாண்மை கருவியும், சுற்றந்தழுவுதல் பயனுமாமெனக் காண்க; சுற்றத் தாரைப் பேணியோம்புவது அறநெறியாதலை "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்றாங்கு, ஐம்புலத்தாறோம்பல்தலை" என்னுங்திருக் குறளாலும்அறிக. மீழ்நிகாரத்தில் "தெற்லினப்பட்ட மரத்தை,மதலே யாய் மற்,றதன் வீழுன்றியாங்கு, குதலேமை தங்தைகட்டோன்றின் தான் பெற்ற, புதல்வன் மறைப்பக் கெடும்" எனத் தோற்றுவாய்செய்த மாட்சி யையே விளக்கிக் கூறுதலாலும், அதிகாரவடைவுமுறைமையை அறிக. முயற்சிசெய்து செல்வம் சேர்த்தவர்க்கல்லது பிறர்க்கு நெருங்கிய சுற்றம் உண்டாகாது என்பதுபற்றி, தாளாண்மையின்பின் சுற்றந்தழால் நிறுத்தப் பட்டதென்பாரும் உளர். சுற்றம்-பந்துவர்க்கம்; சுபஅசுபகாலங்களில்வந்து ஒருவனேச சுற்றிநிற்குக் தன்மையாகலின், சுற்றமென்றுடவினர்க்குக்காரணப்பெயர்; சுற்ற-பகுதி, அம்-கருத்தாப்பொருள்விகுதி: இதனைத்தொழி லாகுபெயராகக் கொள்ளினும் அமையும். தழால்-தழுவுதல்;தொழிற்பெயர்: தழுவுஎன்னும் பகுதி ஈறுகெட்டு ஊற்றுயுகாரமுடன்போய் ஆல் என்னுந்தொ ழிற்பெயர் லிகுதியோடு புணர்ந்தது;'ஓரால்' என்பதும் இவ்வாறே நிற்கும்.

உ0க வயாவும் வருத்தமு மீன்றக்கா லெவ்வங்
கயாஅன் மகற்கண்டு தாய்மறக் தாஅங்
கசாஅத்தா னுற்ற வருத்த முசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்.

(இ-ன்.) வயாவும்-கருப்பந்தரித்திருக்கிறதனலுண்டான சோயையும், வருத்தமும் - அதுபற்றி வரும் பல துன்பங்களேயும், ஈன்றக்கால் சோவும்-பிரசவிக்குங்காலத்து உண்டாகும் சோவையும், (எல்லாவற்றையும்), தாய் - தாயானவன், கவான் மகன் கண்டு - தனது மடியின்மேல் புத்திரனேப்பார்த்த அம்மாத்திரத்தில்,மறந்து ஆங்கு-மறக்குமாறுபோலவு,—அசா தான் உற்ற வருத்தம் - (பலவகைத்) தனாச்சினாலும் (ஒருவன்) தான் அடைக்த துன்பமெல்லாம், உசா தன் கேளிரை காண - ஆேமவிசாரணே செய்யுக் தன்மையுள்ள தனது உறவினரைப் பார்த்தமாத்திரத்தில், கெடும்-இருக்கது தெரியாமல் நீங்கும்; (எ - று.)

மூற்றுவமையாணி. வயா - கருவுற்ற சோய். வருத்தம் - அக்காலத்துத் தக்க உணவையேற்றுக்கொள்ளாமையும், உடம்புமெலிக்து தன்வசஞ்சப்பு தலும் முதலியவற்றாலுண்டாவன. ஈன்றக்கால் நோவு - பிரசவவேதனே. 'வயா என்பது கருக்கொள்ளுங் காலத்து வருவதொரு சோவு: இதனே மசக்கையெனவுஞ் சொல்லுவார்கள்; வருத்தமென்பது - கருவைப்பொறுத்துத் திரியுங்காலத்து வருவதொரு சோவு; ஈன்றக்கால்சோவு என்பது - சனுப் காலத்து வருவதொரு சோவு' என்பது, பழையவுரை.

ஈன்றக்கால் - கருவுயிர்க்கையில்; இது, எதிர்காலவினேயெச்சம்: இங் கே திகழ்காலத்துக்கொள்ளப்பட்டது; "சொல் திரியினும் பொருள் திரியா வினேக்குறை" என்ற பொதுவிதியால், பொருளமைதிக்கு ஏற்ப. கவான் - கவினே என்னும் வடமொழியின் திதைவென்பர்; அது வேதத்தில் வழக்கு வது: அதற்கு-தோடையென்ற பொருள். மகற்கண்டு - உயர்திணேயில் ஒரு பாலாகிய ஆண்பாலுக்கு ஒருபெயர்; இது, திணேப்பெயர்ப் விகாரப்பட்டது, இரண்டாம்வேற்று மைத் தொகையாதலின்; "இயல்பின் விகாரம்". பலராலும் நன்குவிரும்பப் படுஞ்சிறப்புப்பற்றி மகன் என ஆண்பாலினேயேகூறினாரெனினும் உபலக்ஷ ணத்தால் பெண்பாலேயுங் கொள்க. மகன் என்பதில், மக-பகுதி: இனமை; உரிச்சொல்; ன்-ஆண்பால் விகுதி; இதன் பெண்பால், மகள்: மக்கள் என் பது - இவற்றின் பன்மையெனக் கொள்ளலாம். சுட்டிடைச்சொல்லுடனாய் பிறந்த அகுசுவென்பதன் விகாரமான ஆங்கு என்பது - இங்கே உவமவுரு பு. அசா,உசா-முதனிலேத்தொழிற்பெயர்கள்;இவற்றின்மேல் எதிர்மறைத்தொ ழிற்பெயர்கள் அசாவாமை, உசாவாமை என வரும். காண-செயவெனெச் சம் காரணப் பொருளதாதலின், இறந்தகாலம்; நிகழ்காலத்தற்குரிய செயவெனெச்சத்தாற கூறினது, விரைவையுணர்த்தற்கு இப்பாட்டிலுள்ள அனபெடை காண்கும் - செய்யுளோசை நிறைத்தற்கு வந்தன; அலவிட்டுப் பார்த்து அறிக.

இச்செய்யுளோடு "பொன்னஞ்சிறந்தபோற்றே, மருளுடைமாத ருற்ற மம்மாகோய்-மறைத்ததன்றே" என்னும் சிந்தாமணியும், "ஈன்றபொ முதிற் பெரிதுவக்கும்,,,,,,தாய்" என்ற நீருக்குறளும்ஒப்புநோக்கத்தக்கன.

சற்றச்தழுவுதல் தனது பலவருத்தங்களும் ஒழிதற்குக் காரணமென இசெய்புகால் சுற்றத்தழாலினது பயன் கூறப்பட்டது. (க)

உ0உ. அழன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்லா
நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கிப்—பழுமரம்போற்
பல்லார் பயன்றுப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

(இ - ன்.) அழல் மண்டு போழ்தின் - வெயில்வெப்பம் செருக்கிய காலத்தில், அடைந்தவர்கட்கு எல்லாம்-(தன்னிடம்வந்து) சேர்ந்தவர்யாவர்க்கும், நிழல் மரம்போல் - நிழலியுடையமரம் (பட்சாதபமின்றி வெப்பத்தணித்து உதவுதல்) போல, சேர் ஒப்பதாகுகி-(தன்பம்சேர்ந்தாலத்திற் தன்னிடம் வந்து சேர்ந்தற்றத்தார்யாவரையும்) ஒசேசமாக (அத்தன்பத்தினின்றும்) எடுத்துக்காத்து, பழு மரம் போல் - பழுத்துள்ள மரம்போல, பல்லார் பயன்துய்ப்ப - பலருர் தன்னிடத்தப்பயனை அனுபவிக்கும்படி, தான் வருந்நி வாழ்வதே-தான் வருத்தப்பட்டுக்கொண்டாயினும் உயிர்வாழ்ந்திருப்பதே, நல்ஆண் மகற்குகடன்-ஆண்தன்மையுள்ள நல்ல மனிதனுக்குக்கடமையாம். (எ - று.)

இதுவும் உவமையணி. முதலடியை உபமானம் உபமேயம் என்னும் இரண்டுக்கும் கூட்டுக. பழுமரம் - ஆலமரமென்றும் கொள்ளலாம்; "தெள்ளிய, ஆலின் நிறபழத்தொருவிதை, தெண்ணீர்க்கயத்துட் நிறுமீன் தினையினும், அண்ணிதே யாயினு மண்ணல் யானே, யணிதேர் புரவி யாட்பெருங் படையொடு, மன்னர்க் கிருக்க நிழலாகுமே" என்ப வாதலால்.

இலை பூ காய் பழம் முதலிய தனது உறப்புக்களில் தம்மைக்குவேண்டுவனவற்றை வேண்டியபொழுது அவரவர் கொய்துகொள்ளத் தான் இடங்கொடுத்துப் பொறுத்திருத்தலேயே வருத்துதலாகக் கூறினது; உபமேயத்திற்கும் இவ்வணமே ஏற்றபடி கொள்க. "பயன்மர முன்றுப்பு பழுத்தற்றாற் செல்வம், நயனுடையான்கட் படின்" எனவும், "மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம், பெருந்தகையான்கட் படின்" எனவும்நிருக்குவிலும்; "மன்னர் நிருவும், மகளிரொழினலமும், தன்னியார் தியப்பர் தகல்வேண்டா - தன்னிச், குழைகொண்டொழ்ந்த குளிர்மரமெல்லாம், யுழை தங்கட்சென்ருர்க்கு ஒழுங்கு" எனவும், "ஈவோருள் வேஇலை கற்றுக்கோட் புக்க, படினே யன்னர் பலர்ச்சு வாழ்வார், குடிகொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணு மாக்கள், இகொட்டேலேற்றைப் பினே" எனவும் இந்நூலிலும்; "பார் கெழு பழுமரம் பழுத்தற்றுகவும்.....வார்புனல்பெருகவு மறக்கின்றூர்கள் யார்" எனக் கம்பராமாயணத்திலும் வருகின்ற செய்யுள்களின் பொருள் இதனேடே ஒத்ததாம்.

பயன், கடன் - பயம், கடம் என்பவற்றின் ஈற்றுப்போலிகள். 'வாழ்வதே' என்னும் ஏகாரம் - பிரிநிலே. நல் ஆண்மகன் - நற்குண நற்செய்கைனேயுடைய புருஷன். ஆன் மகன் - ஆனும் மகனுமாம். நல்லாண்மகன் - உயர்குலத்திற் பிறந்தவனுமாம், நல்லான் முகன் எனப்பிரித்தால், நல்லவ ஏது மகனென்று ஆம்.

இச்செய்யுளை, "காயாமல்யகுர்வந்தி ஸ்வயம்திஷ்டந்தி சாதபே· புலந்திச பரார்த்தேச காத்மஹேதோர் மஹாத்ருமா:," "வதாக்யஸ்ஸம் வீபாகோ பூர்ணேகுர்யாத தருக்ஷமம் -சாயயாப்யாயயத்யாத்பலார்ய பிம ஸ்ரீருஹாக்" என்னும் வடநூல் மேற்கோளோடு ஒப்பிட்டுக்காண்க.

இதனுள்;சுற்றந்தழால் இல்லறத்தார்க்குக் கடமையெனக்கூறப்பட்டது

உ0ஙூ. அடுக்கல் மலைநாட தற்சேர்ந்த வரை
யெடுக்கலு மொன்னார் பெரியோ—டடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினு மில்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

(இ - ள்) அடுக்கல் மலைநாட-(சுற்சேர்ந்த ஒன்றன்மேலொன்று) அடுக்கி லைவத்தாற்போன்ற மலைகள் பொருந்திய நாட்டையுடைய அரசனே!— பெரியோர்-பெருமைக்குணமுடையவர்கள், தன் சேர்த்தவரை எடுக்கலம் ன்னுஞ்-தம்மை அடைத்தவர்களோப் பாதுகாக்கமாட்டோ மென்ற கூரார்; அடித்து அடித்து வல் காய் பலபல காய்ப்பினும்-நெருங்கி நெருங்கி வலிய (பெரிய)காய்கள் அனேகங் காய்த்தாலும்,தன் காய் பொறுக்கலா கொம்பு-தன்காய்களோச சுமக்கமாட்டாத மரக்கிளைகள், இல்லையே - (உலகத்தில்) இல்லையன்றோ? (எ - று.)

கனமான காய்கள் எத்தனைகாய்த்தாலும் அவற்றை மரக்கிளைகள் எவ் வளவு மெல்லியனவாயிருப்பினும் பொறப்பது இயல்பாதல் போல, பெருங் குடும்பமுடைய பக்குகள் எத்தனைபோ தம்மை வந்தடுசேர்ந்தாலும் பெரி யோர்தாங்கள் எவ்வளவு எளியநிலையிலிருந்தாலும் அவர்களைக் காத்தலே இயல்பாகக்கொள்ள ரென்பதாம். எடுத்துகாட்டுவமையணி.

அடுக்கல் - தொழிற்பெயர். அடுக்கல்மலை-ஒன்றேடொன்று தொடர் சியான மலை யெனினுமாம். கண்டவர்களால் மலையப்படுதல்பற்றி, மலை யென்பது - காரணப்பெயர்; மலைதல் - அஞ்சுதல்: செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது.

'மலைநாட' என்ற மலைமுகமாக காட்டிஞ்சிறப்பைக்கூறியது, மலையில் லிளையத்தக்க மிகுத கோட்டம் அதில் தக்கோலம் குங்குமம் முதலிய பொ ருள்களாலும் மலைவினின்றுபெருகும் அருவிநீர்வளத்தாலும் செழிப்புடைய தென்பதோடு, சிறந்தகாலவான மலையாணை புடையதென்னுங்கருத்தையுங் கொண்டு, "இருபுனலும்வாய்ந்த மலையும்வருபுனலும், வல்லரணும்காட்டிற் குரைப்பு" என்னுங்கிருந்தவளவும் காட்டிற்கு மலை நல்லூழ்ப்பாதலேஅறிக.

பின் 'பெரியோர்' எனப் பன்மையாக வருதற்கு ஏற்ப 'தஞ்சேர்ந்தவ ரை' என்னுது ஒருமையாக 'தற்சேர்ந்தவரை' என்றது, ஒருமைபன்மை மய க்கம்; இந்நூலில் ஈழ் "நடுக்குற்றுத்தற்சேர்ந்தார்தின்பத் துடையார்" என்ற விடத்தும் இவ்விலுக்கணலமைதி காண்க. 'தன்' என்பதன் சுற்றுணரைரும்

வன்மையோடு உறழாமல் நிரிச்தே வருதல், இரண்டாம்வேற்றுமைத் தொகைச் சிறப்பு விதியால். பலபல என்ற அடுக்கு, பிகுதிபற்றிவக்தது.

'கொடிக்குக் காய் பளுவோ' என்னும் பழமொழி வழங்குதலுங் காண்க.

இதனால், சுற்றத்தழால் பெரியோர்க்கு இயல் பெனப்பட்டது. (கூ)

உ0ஈ. உலகறியத் தீரக் கலப்பினு நில்லா
சிலபகலாஞ் சிற்றினத்தார் கேண்மை—நிலதிரியா
நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றினைத்தா
லொற்கு மிலாளர் தொடர்பு.

(இ - ன்.) சிறு இனத்தார் கேண்மை - அற்பகுணமுடைய உறவினரது தொடர்சசி,—உலகு அறிய நீர் கலப்பினும் - உலகத்தாரெல்லோரும் அறியும்படி குறைவுநீர (முதலிற்) கலந்து பின்றலும், நில்லா - நிலை நிற்க மாட்டாவாம்: சில பகல் ஆம் - சிலதினமே இருக்கும்; ஒற்கம் இல் ஆளர் தொடர்பு-(குணத்) தளர்ச்சி யில்லாத உறவினாதகம்பந்தமோவெனின்,—நிலை திரியா நிற்கும் பெரியோர் நெறி அடைய நின்ற அனைத்து - (தம் தம் வருணசரிம) நிலைமைகளினின்ற மாறுபடாமல் ஒரு நிலையில் நிற்கின்ற பெரியோர்கள் (மோ. ஷமாகிய) நற்கதியைப் பெறுதற்கு (யோகமார்க்கத்தில்) நிலைகின்ற அத்தன்மைத்து; (எ - று.)

தவருது நெடுங்காலம்நின்று பயன்படு மென்பது கருத்து. "நூருண்டு பழகினும் மூர்க்கர்கேண்மை, நீர்க்குட்பாவிபோல் வேர்க்கொள்ளாதே", "ஒருநாட் பழகினும் பெரியோர்கேண்மை, இருநிலம்பிளக்க வேர்ப்ழ்க்கும் மே" என்றார் நறுந்தொகையிலும். உவமையணி.

உலகு - இடவாகுபெயர். நீர - முடியுபோக, செவ்வையாக, உறழ்ப் பட. உம்மை - உயர்வுசிறப்பு. நில்லா-எதிர்மறைப் பலவின்பால்முற்று; முற்றெசசமாகவுங கொள்ளலாம். கேண்மை - பால்பகா அஃறிணைப்பெயராதலால், நில்லா என்னும் பண்மைவினை கொண்டது. இதனை, ஈறுகெட்ட எதிர்மறை வினையெசசமாக் கொள்ளலாகாது; 'நில்லாச நிலபகலாம்' என அதன்மூன் வலிமிகவேண்டு மாதலால். அடைய - செயவெனெசசம், காரியப்பொருளதாதலின், எதிராகலம். இலாளர் - இல்லாமையை யாளுபவர், இல்லாமையையுடையவர், இல்லாதவரென்க. ஆல் - ஈற்றசை.

அதிகாரம் சுற்றத்தழாலாதலின், 'இனத்தார்' என்றது, உறவினரையே உணர்த்நிற்ற; கீழிரண்டுபாடல்களில் 'அடைந்தவர்கள்', 'பல்லார்', 'சேர்தவர்' என்றவையும் இவ்வாறே: மேலும் இங்ஙனஞ் சில காண்க.

இதனால், நற்குணகற்செய்கையுடைய உறவினரே தழுவத்தக்கவ ரென்றும், அங்ஙன மில்லாதவர் தழுவத்தகாதவ ரென்றும் வேறுபாடு கூறப்பட்டது. (சு)

உ0டு. இன்னரியை மெம்பிற ரென்னுஞ்சொ
லென்னு மிலரா மியல்பினுற்—றுன்னித்
தொலைமக்க டின்பந்திர்ப் பாரேயார் மாட்டுக்
தலைமக்க ளாகற்பா லார்.

(இ - ள்.) இன்னர் - இவர், இனையர் - இத்தன்மையர், எமர் - எமக்கு வேண்டியவர், பிறர்-எமக்குவேண்டாதவர், என்னும்-என்றுசொல்லுகின்ற, சொல்-வார்த்தை, என்னும்-மிகச்சிறிதும், இலர் ஆம் - இல்லாதவராகின்ற, இயல்பினுல்-தன்மையினால், துன்னி-சேர்ந்து, தொல்மக்கள் துன்பம் நீர்ப் பாரே-(துன்பத்தால்) தளர்கிற (உறவினரான) மனிதர்களதுவருத்தங்களே ஒழிப்பவர்கள் தாமே,—யார்மாட்டும்-எல்லோரிடத்தும், தலைமக்கள் ஆகல் பாலார் - மேன்மக்களாகுந் தன்மையுள்ளவர்; (எ - று.)

தமது உறவினர் குணங்கேடுடையராயினும் அக்காரணத்தால் தமக்கு வேண்டாதவராயினும் அவர்களுக்கு ஒருதுன்பம் நேருமாயின் அக்காலத்திலே அவர்குற்றங்களே மறத்து அவர்களைப் பாதுகாப்பதே உத்தமமான நல்லொழுக்க மென்பதாம்.

நற்குணநிறைவுடைய உறவினரே தழுவத்தக்கவரெனக் கிழப்பாட்டிற் கூறப்பட்ட விதிக்கு, சமயபேதவசமையால், இப்பாடலில் விலக்குக் கூறிய படியாம். ரமது உறவினரென்றும் உறவினரல்லாதவ ரென்றும் வேறுபாடு கருதாது யாவரையுந்தழுவுதல் தலையறமென இப்பாட்டுக்குக் கருத்து உரைத்தல் அதிகாரத்தோடு முரண்படுவதாதல் காண்க.

இயல்பினுல் இயற்கையோடுகூடி யென்றும் உரைக்கலாம். அதிகாரத்துக்கு ஏற்ப, மக்கள்-பந்துஜன மெனப்பட்டது. எ-பிரிதிலே. யார் - யாதொரு; எஞ்சாமைருபித்தது; மாட்டு-எழுறுபு. தலைமக்கள்-தலையுடைய மக்கள்; உத்தம அங்கமான தலைபோல யாவர்க்கும் மேற்கொள்ளத்தக்க மக்கள். ஆகற்பாலார்-ஆகுதற்பொற்ற பான்மையையுடையார். (கூ)

உ0சூ. பொறற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்க
லக்காரம் பாலோ டமரார்கைத் தண்டலி
னுப்பிலிப் புற்கை யுயிர்போற் கிளைஞர்மாட்
டெக்கலத் தானு மினிது.

(இ - ள்.) பொன் கலத்து பெய்த - பொன்னுலாகிய பாத்திரத்திலே இடப்பட்ட, புலி உகிர் வான் புழுக்கல் - புலியின்நகம்போல (வெண்மையான) நிறந்த சோற்றை, அக்காரம் பாலோடு - சர்க்கரையோடும் பாலோடும், அமரார் கைத்த - உறவினராகப் பொருந்தாதவருடைய கையால் வந்தனை, உண்டலின்-உண்ணுதலைக்காட்டிலும், உப்பு இலி புறகை - உப்பில்லாததானபுல்லரிசிக்கூழை, உயிர்போல்கிளைஞர்மாட்டு-தனதுஉயிர்போன்ற உறவினரிடத்து, எக் கலத்து ஆனும் - எந்தப்பாத்திரத்திலாயினும், (உண்பது), இனிது - (பலவாற்றலும்) இனிமையுடையது; (எ - று.)

வால் புழுக்கல் எனப்பிரித்து, சுத்தமான சோறு எனினுமாம்;("அகன் புனல்" போல.) புழுக்கல் - சமைக்கப்பட்ட சோற்றுக்குத் தொழிலாதுபெயர்; இனி, அல்-செயப்படுபொருள்விகுதி யெனினும் தவறுகாது. அக்காரம் இக்ஷுஸாரம் என்ற வடமொழியின் திதவு என்பர் உணர்ந்தோர்; கருப்பஞ்சாறு என்று முதலிற் பொருள்:அதுபின்பு இலக்கணையாய் அதன் காரியமான சர்க்கரைக்கு வந்தது. அக்காரம் பால்-உம்மைத்தொகை. அமராா் - எதிர்மறைப்பலர்பால் வினையாலணையும்பெயர்; எதிர்மறையாகாரம் புணர்ந்துகெட்டது. 'உப்பும்' என்னும் இழிவுசிறப்பும்மை, விகாரத்தால் தொக்கது; அது, எல்லாச்சுவைகளுள்ளுஞ் சிறந்ததான உப்பினது இன்றியமையாமையை உணர்த்தும். புற்கை-இழிவான உணவு. எக்கலத்தானும், உம் - இழிவுசிறப்பு. கலம் - உண்கலம்.

'அமர்கைத்தி' என்று பாடமோதி, தேவர்கள் கையிலிருந்து என்று உரைத்தல், மிகத்தகுதியாம். பாலுக்குச் சர்க்கரை யில்லை யென்பார்க்கும் பருக்கையற்ற கூழுக்குப்போட வுப்பில்லை யென்பார்க்கும் அவரவர் தகுதிக்கு ஏற்பக் குறைவு குறைவே யாதலால், 'அக்காரம் பாலோடு' எனவும், 'உப்பிலிப்புற்கை' எனவும் உடன்சேர்த்துக் கூறப்பட்டது.

இதனுள், சுற்றத்தார்சிறப்பு வருணனைவகையாற் கூறப்பட்டது. (சு)

உஎ. நாள்வாய்ப் பெறினுந் தந்நாளதா ரில்லத்து
வேளாண்மை வெங்கரூஉ வேம்பாகுங்—கேளாய
பரானப் போற்றினடுவா ரேனுந்
தமரானார் மாட்டே யினிது.

(இ - ன்) நாள்வாய் பெறினும் - காலத்திலே பெறப்பட்டாலும், தம்கள்ளாதார்இல்லத்தி - தமக்குஉறவினரல்லாதவரது வீட்டிலே, வேளாண்மை-உபகாரமாகச் சொல்லப்பட்ட, வெம் கருனை - சுண்கையோடு கூடிய பொரிக்கறியுணவும், வேம்பு ஆகும்-வேப்பங்காய்போலக்கைப்புடையதாம்; கேளாய்-(யான்சொல்வதைக்) கேள்; அபரானப்போற்றின்-பிற்பகற்பொழுதிலே, அடகு இலேரேனும் - இலைக்கறியை இலேராயினும், தமர் ஆயார் மாட்டே - உறவினராயவரது வீட்டிலேயாயின், இனிது - இனிய சுவை புடையதாம்; (எ - று).

இதனுள் தோன்றுதற்குக் காரணம் - முறையே அன்பில்லாமையும், அன்புடைமையுமாம். இதுவும், உறவினர்சிறப்பைப் புனைந்துரைவகையாற் கூறியதே.

நாள்வாய்-தினத்தின்தொடக்கமான உதயகாலத்திலேயென்றபடி. நள்ளாதார்-சினேகஞ் செய்யாதவர்; அதிகாரத்துக்கு, ஏற்ப, உறவினர்; எதிர் மறைவினையாலணையும்பெயர். வேளாண்மை-பண்புப்பெயர். வெங்கரூனை - லிரும்பப்படுங் கறியமுதமாம்; வெம்மை - விரும்பமுமாதலே "வெம்மை வேண்டல்" என்னுந் தொல்காப்பியத்தாலறிக. வேம்பு-மரத்தின் பெயர், அதன் காய் முதலிய சினைக்கு முதலாகுபெயர். அபரானம் - அபரார்த்தம்; வடசொல்திரிபு: அபர அர்த்தமெனப் பிரிக்க; அபரம்-பின், அர்த்தம்-பகல்: எனவே, மத்தியான்னகாலத்துக்குப்பின்னிட்டபொழுதாம்; இது,வடமொ

நிப்புணர்ச்சி, தீர்க்கசர்தி, அபரானப்போழ்து-இருபெயரொட்டுப் பண்புத் தொகை. அடகு - இரை போல்வன.

இதனை, பாண்டியனை நோக்கியதே யாகவாவது, பிறனெருவனுக்கு உபதேச மூலமாகத் தெரிவித்ததாகவாவது கொள்ளலாம்.

இவ்வதிகாரத்துப் பத்தாம் பாட்டும் இக்கருத்தேயுடையது. "வெருக் குக்கண் வெங்கருனை வேம்பாம்"என்றதுபோல, 'வேளாண்மைவெங்கருனை வேம்பாகும்' எனப்பட்டது. (எ)

உ0ஆ. முட்டிகை போல முனியாது வைகலுங்
கொட்டியுண் பாருங் குறடுபோற் கைவிடுவர்
சுட்டுக்கோல் போல வெரியும் புகுவரே
நட்டார் எனப்படு வார்.

(இ - ன்.) முட்டிகை போல - சம்மட்டியென்னுங் கருவிபோல, முனி யாது-(தம்தொழிலிலே) வெறுப்பில்லாமல் [சோம்பாமல், டியாமல் என்ற படி], வைகலும்-காள்தோறும், கொட்டி - (பிறபொருளை) அடித்தடித்து, உண் பாரும்-தாம்ஸீவிப்பவர்களும், குறடுபோல்கைவிடுவர்-(அனல்வெம்மை ணுதுங்காலத்து அதிலே பெருளை விட்டிட்டுத்தான் நீக்கியொழியுங்)குற டென்னுங் கருவிபோல (ருவர்க்குத் தன்பம்வந்தகாலத்து அவரை) கை விட்டு நீங்குவர்; நாட்டார் எனப்படுவார்-அன்புடையஉறவினரென்றுசொல் லப்படுபவர், சுட்டுக்கோல் போல - உலையாணிக்கோல் போல, எரியும்புகு வர் - (அப்பொருளுடன்கூட) நெருப்பையும் அடைவர்; (எ - று.)

முட்டிகை, குறடு, சுட்டுக்கோல் எனக்கம்மாளர்கருவிகளே இச்செய் யுளில் உவமையாகக் கொள்ளப்பட்டவாறு காண்க. தமது இன்பத்தக்கு மிஞ்சித் துன்பத்துக்கு வருந்துபவரே உறவினராவரென்றும், அவ்வன மன்றி இன்பம் நேர்ந்தகாலத்து உடன்வந்து உண்டு உயிர்வாழ்ந்துதுன்பம் நேர்ந்தவாறே அதற்கு உடனில்லாமல் விட்டொழியுந் தன்மையர் உறவின ரல்ல ரென்றும் இதனால் உண்மை கூறப்பட்டது. "அற்றருளந்நி லறுநீர்ப் பறவைபோ, லுற்றுழித் தீர்வா ருறவல்லர்-அற்குளத்நிற், கொட்டியு மாம் பலு நெய்தலும் போலவே, யொட்டி யுலர்வா ருறவு" என்ற ஔவையார் பாடையோடு இதனை ஒப்பிட்டு அறிக.

முனியாது - எதிர்மறைவினையெச்சம்; உ-லிகுதி, த்-எழுத்துப்பேறு; து-லிகுதி யென்பாரும் உளர். வைகலும், உம்மை - தொறும்பொருளது. கொட்டியுண்பார் - ருவரை அடித்து வருத்தித் தாம் உண்டு வாழ்பவர். உம் - உயர்வுசிறப்பு. எரியும், உம் - இழிவுசிறப்பு. புகுவரே, ஏ - தேற்றம். அதிகாரத்தால், நட்டார் என்பது-உறவின ராயிற்று. எனப்படுவார்-என்ற சொற்பிரித்துக் கூறப்படுவார்; "ஊரெனப்படுவது உறையூர்", "பூவெனப்படு வது பொறிவாழ்பூவே" என்றாற் போல. (அ)

உ0ஞ. நறுமலர்த் தண்கோதாய் நட்டார்க்கு நட்டார்
மறுமையுஞ் செய்வதொன் பண்டோ—விறுமாவு
மின்புறவ வின்புற் றெழிஇ யவரோடு
துன்புறவ துன்புறுக் கால்.

(இ - ன்.) நறு-நல்லமணமுள்ள, மலர்-பூக்களாலாகிய, தண்-குளிர்ந்த, கோதாய்-மாலையையுடையவனே! நட்டார்-உறவினர், நட்டார்க்கு-தம் உறவினர்க்கு, இறும் அளவும்-(அவரும் தாமும்) இறக்தொழியும் வரையிலும், அவரோடு அவர்களுடனே,(இம்மையில்),இன்பு உறவ இன்பு உற்று-இன்பமடையத்தக்கவற்றிற்கு இன்பமடைந்து, எழிஇ-நாடக்தவொழுகியென்றபடி], துன்பு உறவ துன்பு உருக்கால்-துன்பப்படத்தக்கவற்றிற்குத் துன்பப்படாவிட்டால், மறுமையும் செய்வது ஒன்று உண்டோ - மறுமையிலுஞ் செய்வதோர் உதவி (உலகத்தில்) உள்ளதோ' [இல்லை யென்படி]; (எ - று.)

ஒருவர் இன்புறத் தாம் இன்புற்று அவர் துன்புறத்தாமும் கூடத் துன்புறுபவரே தக்க உறவினராவரென உறவினரிலக்கணங் கூறப்பட்டது.உறவினருறவெல்லாம் உடம்பைவிட்டு உயிர் ஒழிபுமளவேயாதலால், நட்டார்க்கு நட்டார் மறுமையிற் செய்வதொன்றும் இல்லையாயிற்று.

மலர்த்தண்கோதாய் - பூக்களாகிய குளிர்ந்த கூந்தலுடையாளே என்றுமாம். நறுமலர்த்தண்கோதை-அன்மொழித்தொகை; கோதை-மாலை போல் பலவினை உரைத்தால், உவமையாகுபெயர். கோதாய் என நறுநிறத்தது, வீளியுருபு. இது, மகடூஉ முன்னிலை ஒருவரியல்பை உணராது உறவு கொண்டாடுதல் பெரும்பாலும் மகளிர்க்கன்மையே யாதலால், பெண்பாலை முன்னிலைப்படுத்தி இது கூறினர். மறுமையும் என்ற உம்மையால், இம்மை யியைவில்லாமல் என்பது விளக்கப்பட்டது. உம்மை-இழிவுசிறப்புப்பொருளதே யாதல் வேண்டும்; ஒருவன் உயிர்வாழ்க்திருந்த பொழுதிலெல்லாம் இல்லாமல் அவன் இறந்தபிறபு என்றபடி. இனி, உம்மையை ஒன்று என்ப தனோடு கூட்டலுமாம். எழுந்து என்பது, 'எழிஇ' என விகாரப்பட்டு அளபெடுத்தது; கோலிகையளபெடை. எழிஇ-எழுந்து; மகிழ்ச்சியோடு தலையெடுத்து என்றவாறுமாம்.

"உத்ஸவே வ்யஸநேசைவ துர்பிக்ஷே ரிபுஸங்கடே-ராஜத்வாரேச்மசாகேசயஸ்திஷ்டதிஸபாந்தவ."என்றவடநூல்மேற்கோள்உணரத்தக்கது,

உகo. விருப்பிலா ரில்லத்து வேறிருந் தண்ணுவர்,
வெருக்குக்குத் தண் வெங்கருணை வேம்பாம்—விருப்புகடைத்
தன்போல்வா ரில்லுட் டயங்குநீர்த் தண்புற்கை
யென்போ டியைந்த வரிப்பு.

(இ - ன்.) விருப்பு இலார் இல்லத்து-(தன்மேல்) அன்பில்லாத பிறரதுவீட்டிலே, வேறுஇருந்தி உண்ணும்-தனியேயிருந்து உண்ணுகின்ற,கெருகு

கண் வெம் கருணை - பூனையின் கண்போல் ஒருவகைப் பளபளப்பையுடைய சுடுகிற பொறிக்கறிபுணவும், வேம்பு ஆம்-வேம்புபோலக் கைப்புடையதாம்: வீருப்பு உடை தன்போல்வார் இல்லுள் - (தன்மேல்) அன்புடைய [தன்னேடொத்த] தமரது வீட்டிலே, (உண்ணப்படுகின்ற),தயங்கு நீர் தண் புற்கை - தெளிவான நீர்வடிவமாயுள்ள குளிர்ந்த புல்லரிசிக் கூழும், என்போடு இயைந்த அமிழ்தி - உடம்பிற்கு ஒத்த அமிருதமாகும்; (எ - று.)

அமிருதம்போ லினியதா மென்றபடி. உவமையணி. இக்கருத்து, இவ்வதிகாரத்தி லாறு எழாம் பாட்டிக்களோடு ஒத்தது.

வேறிருந்து என்பதில், அன்பிற்குத் தக்க உபசாரம் பெருமலிருந்து என்னும் பொருளுந் தோன்றும் வெருகு + கண் -வெருக்குக்கண்; வேற்று மைப்புணர்சியில் உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்துக் ககரவொற்றிரட்டிற்று: "செடிலோ டுயிர்த்தொடர்க் குற்றுகரங்களுஞ், டறவொற்றிரட்டும் வேற்றுமைமிசையே"என்ற நன்னூற் சூத்திரத்து 'டகரவே' என்றது காண்க. கடுமையே ஒருசுவையாதலால், 'வெங்கருணை' எனப்பட்டது. வீருப்புடைத் தன்போல்வார் - ஒருவரோ டொருவர் அன்புடையா ரென்றபடி. தயங்கு நீர்த் தண்புற்கை-பருக்கையற்ற கூழ். என்பு - உடம்புக்குச் சினையாகு பெயர்; "என்பு முரியர் பிறர்க்கு" என்றதிருக்குறளிற் போல. வேறிருந்து-பிறரோடொப்பப் பந்தியில்லாமல் சிறப்பாகத் தான் தனியேயிருந்து என்றாய் கொள்ளலாம். கருணைபுற்கை என்றவற்றில், முறைமையேயுரியதெப்பு இழிவு சிறப்பு உம்மைகள் விகாரத்தால் தொக்கன. அமிழ்தி - அமிருதம்; வட சொல்: மரணத்தைத் தவிர்ப்பது.

இப்பாடின் இரண்டாமடியிற்போலவே மூன்றாமடி - ஆம் பாட்டின் இரண்டாமடியிலும் 'வெங்கருணை வேம்பாகும்' என்னும் உபமானம் வந்துள்ளது. (௩0)

## ௨௨ - ஆம் அதிகாரம்.—நட்பாராய்தல்.

அமிதாவது - சிறந்த இலக்கணமுடைய சிநேகிதரை இன்னரென்று ஆராய்ந்து அறிதல். ஒருவன் குணங்களே ஆராயாமல் அவனேடு விரைந்து நட்புக்கொண்டால் அதனாற் சிலசமயங்களில் தீங்குகேரு மாதலாலும், குற்றங்கண்டு பின்பு அவனேவிடுதல் குற்றமாதலாலும், நட்புக்கொள்ளு மிடத்துக் குடிப்பிறப்பும் முழுக்கமும் குணங்களும் உடைமையைப்பற்றி நன்றாக ஆராய்ந்து நட்புக்கொள்ளக்கடவன் என்பதாம். ஒருவனுக்கு இன்பதுன்பங்கள் கேர்ந்தவிடத்து வந்து உறவினர்போல உதவுபவர் நண்பராதலால், இது சுற்றந்தழாலின்பின் வைக்கப்பட்டது.

நட்பு - இங்கே, நட்புடையார்க்குத் தொழிலாகுபெயர்.

௨௫. கருத்தினார்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ், ஞான்றுங்
குருத்திற் கரும்புதின றற்றே—குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ வென்று
மதுர மிலாளர் தொடர்பு.

(இ - ன்.) கருத்த உணர்ந்த - (நூல்களின்) உட்பொருளே அறியா
ன்ற, கற்ற அறிந்தார் - படித்துத்தேர்ந்தவர்களது, கேண்மை-நினேகம்,
எஞ்ஞான்றும் - எப்பொழுதும், குருத்தின் கரும்பு தின்ற அற்று - நுனிக்
குருத்திலிருந்து (அடிவரையில்) கரும்பைக் கடித்துத்தின்றாற்போலும்
[வரவரஇனிமைதரும்];என்றும்-எப்பொழுதும்,மதரம் (நல்லூர் தொடர்பு-
(கல்வியறிவாகிய) இனியதன்மை யிலாதவர்களது நினேகம், குருத்திற்கு
எதிர்செலதின்ற அன்ன தகைத்து - (அக்கரும்பையே) குருத்திற்கு எதிரே
செல்லும்படி [அடியிலிருந்து] (நுனிவரையில்) தின்றாற்போன்ற தன்மை
யையுடையது [வரவரஇன்னுமையைத் தரும்]: (எ - று.)—அரோ-ஈற்றசை
தேற்றமுமாம்.

இதனால், நெருங்கத்தக்கவரும் நெருங்கத்தகாதவரும் இன்னரெனக்
கூறப்பட்டது.

அறிவுடையாரும் அறிவுடையாருஞ் செய்த சுட்பு முன்சுருங்கிப் பின்
பெருகுதற்கும், அறிவிலாதாரும் அறிவிலாதாருஞ்செய்த சுட்பு முன் பெரு
கிப்பின் சுருங்குதற்குங் காரணம்,தம்முள் ஒருவர் ஒருவருடைய குணத்தை
முன் அறியாமையும் பின் அறிதலுமாம். கீழ்க் கல்வியென்னும் அதிகார
தில் "கனே கடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை, நுணியிற் கரும்பு
தின் றற்றே-நுணிகீக்கித், தானிற்றின்றன்ன தகைத்தரோ பண்பிலா, ஈமயி
லானர் தொடர்பு" என்றதிலும் இக்கருத்தே கூறப்பட்டுள்ளது: இதனே
"நிரைதீர நீரவர் கேண்மை பிறைநுதற், பின்னீர பேதையார் சுட்பு"என்னுந்
திருக்குறளோடும், "பெரியவர் கேண்மைபிறைபோல காணும், வரிசை வரி
சையா நாதும்-வரிசையால், வானூர் மதியம்போல் வைகலுங் தேயுமே, தா
னே நிரியார் தொடர்பு" என்னும் காலடியாரோடும் ஒப்பிக. பயனுவமை
யணி. கரும்பை நுனியிலிருந்துதின்றால் வரவர இன்சுவையிகுதலும், அடியி
லிருந்து தின்றால் வரவரச் சுவை குறைதலும் இயல்பு.

உணராதின்ற என்ற நிகழ்கால வினையெச்சம், உணர்ந்து என இறந்த
கால வினையெச்சமாகத் திரிந்தது; "தெய்வத்தொழாஅள் கொழுநற்றொழு
தெழுவாள்" என்பதில் 'தொழுது' என்பது போல. கருத்த உணர்ந்த -
தமது கருத்தினுற் சுற்கப்படும் நூல்களே இன்னவையென்று அறிந்த என
உரைத்தல், பிறப்பு. அறிந்தார் - காரியாகாரியங்களே அறிந்த விவேகி
னென்றபடி. மதரம் - வடசொல்.

"இஷோரக்காத்க்ரமஸ் பர்வணிபர்வணி யதா ரஸவிஸேஷ—தவதத்
ஸஜ்ஜாமைத்ரீ விபரீதாசாரத்வவிபரீதா" என்னும் சூலோகம் ஒப்பு நோக்கத்
தக்கது. (க)

உகஉ. இற்பிறப் பெண்ணி யிடைதிரியா ரென்பதோர்
நற்புடை கொண்டமை யல்லது—பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட
மனமறியப் பட்டதொன் றன்று.

(இ - ன்.) பொன் - பொன்னேஉடிய, கேழ் - நல்ல நிறமுன்ன, புனல் - தண்ணீர், ஒழுக - பெருக, புள் இரியும்-பறவைகள் ஒடிதற்கு இட மான, பூ குன்றம் - அழகிய மலைகளேயுடைய, காட - பாண்டியராட்டை யுடைய அரசனே!—(உயர்குடிப்பிறந்தவர்), இல் பிறப்பு எண்ணி-(தமது) உயர்குடிப்பிறப்பை நினைத்து, இடை திரியார் - கடலிலே (தமது நற்குண த்தினின்று) மாறுபடார், என்பது ஓர் கல் புடை - என்று சொல்லப்படுவ தொரு கல்ல தன்மையை, கொண்டமை அல்லது - (தாம் செய்கிப்பதற்கு ஒரு கல்ல காரணமாகக்) கொண்டது மாத்திரமேயல்லாமல், மனம் அறியப் பட்டது ஒன்று அன்று - (பிறரொருவருடைய) மனதிலே (ஒருவரால் உட் புகுந்து) அறியப்பட்டதென்பதொரு தன்மையதன்று; (எ - று.)

ஒருவர் மற்றொருவருடைய மனநிகழ்ச்சியைப் பிரதியக்ஷமாக உண்மை பொருந்த அறிவது அசாத்திய மாதலால், உயர்குடிப்பிறந்தவர் தமது உத் தமகுணத்தை எப்பொழுதும் இடையிலே மாறிடாரென்பதோ ருறுதி பற்றி நற்குடிப்பிறந்தாருடன் நட்புக்கொள்ளவேண்டுமென இதனுற் கூறப்பட்டது.

ஈம்பாட்டில் நட்பிற்குக் கல்வியறிவு ஒருகுண மென்றார்; இப்பாட் டில் உயர்குடிப்பிறப்பும் ஓர் இலக்கண மெனப்பட்டது.

தெளிவான அழகிய அருவிநீர்வெள்ளம் மேனின்று வழிந்துபாயும் பொழுது பொன்னே அடித் தள்ளிக்கொண்டு ஓடிவருதலால் அதனைக்கண்டு இது யாதோ எனப் பறவைகள் அஞ்சி ஒடுகின்றன என்று மலையைச்சிறப் பித்தவாறும். (உ)

உக. யானே யனேயவர் கண்பொரீஇ நாயனேயார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானே
யறிந்தறிந்தும் பாகனேயே கொல்லு மெறிந்தவேன்
மெய்யதா வாள்குமைக்குங் நாய்.

(இ - ன்.) யானே அனேயவர்-யானேயைப் போன்றவர்களது, கண்பொ - னேகத்தை, ஒரீஇ - விட்டு, நாய் அனேயார் - நாயைப்போன்றவர்களது, கேண்மை-னேகத்தை, கெழீஇக் கொளல்-சேர்த்துக் கொள்ளுதல், வே ண்டும் - தகுதி: (ஏனெனில்),—யானே,—அறிந்து அறிந்தும் - பலகாலம் பயின்றிருந்தும், பாகனேயே-(தனக்கு உணவு முதலியன கொடுத்துக்காத் திடும்) பாகனேயே, கொல்லும்—; நாய்—, எறிந்த வேல் மெய்யது ஆ - (தன்னேயுடையவன் தன்மேற்றினத்து) எறிந்த ஆயுதம் தன் உடம்பில்தைத் துள்ளதாயிருக்கையிலும், வால்குழைக்கும் - வாலேக் குழையவைத்து ஆட் டிக்கொண்டு தன் எளிமையையும் அன்புடைமையையும் காட்டிநிற்கும்.

பலகாலம் தம்மாற்பற்பலவுதவிகளேப் பெற்றிருந்தும் அவற்றை யெல் லாம் அடியோடுமறந்து தம்மிடம் யாதாயினும்ஒருபொழுதுகோபத்துக்குக் காரணமொன்று காணப்பட்டதாயின் அதனேயே பிரதானமாகக்கொண்டு எப்பொழுதும் மனத்திலே மறவாது அடக்கிவைத்திருந்து சமயம்பார்த்து அழிக்குந் தன்மையரோடு னேகஞ்செய்யலாகாது; தம்மாற் செய்யப்பட்டு

வரும் பெரிய அபகாரங்கள் பலவற்றையும் மறந்திட்டுத் தம்மால் மூன்பு ஒருகாலத்துச செய்யப்பட்டதொரு சிறிய உபகாரத்தையே உள்ளத்திற் கொண்டு பாராட்டும் இயல்பினருடனே சினேகங்கவேண்டுமென்பதாம். ஏதுவணியோடு சேர்ந்த உவமையணி.

ஒருவி, கெழுவி என்னுஞ் சொற்கள் விகாரப்பட்டு 'ஒரி இ', 'கெழீஇ' என அளபெடுத்தன; சொல்லிசையனபெடை. அறிக்தறிந்து-அடுக்கு, மிகுதிப்பொருளது. வேல்-ஆயுதமென்னுமாத்திரையாய் நின்றது. யானை, காய்-இலை, இம்முக்காட்டியகுணத்தைகுமாத்திரமே சிறியார்க்கும் பெரியோர்க்கும் முறையே உவமை. வேண்டும்-தேற்றப்பொருளதோர் வியங்கோள்.

இங்கோன்றிமறவாத நற்குணமுடையோர்க்குத் தாழ்ந்த மிருகமாகிய காயை உவமைகூறியது, இழிவுவமைக்குற்றத்தினபாற்படாது; "மிகுதலுங் குறைதலுந் தாழ்தலு முயர்தலும், பான்மாறுபடுதலும் பாகுபாடையை" என்ற தண்டியலலங்காருக்கிரத்தாரும், அதன் உரையாலும்உயர்ந்தபொருளே இழிந்த பொருளோடு உவமித்தல் புன்புலவர புணர்க்குங்கால் சிறப்பின்மை தெரிந்து ஆன்றோரால் குற்றமென்ற தள்ளப்படுதலும், அதுவே என்புலவர் புணர்க்கு கால் சிறப்புடைமை தெரிந்து ஆன்றோரால் குண மென்று கொள்ளப்படுதலுங் காண்க. இவ்வாறு கல்விசைப்புலவர்செய்யுள் களில் வருவன கண்டுகொள்க. (உ)

உதா. பலகாளும் பகைத்தார் ராயினு நெஞ்சிற்
நிலகாளு மொட்டாரோ டொட்டார்—பலகாளு
நீத்தா ரெனக்கை விட லுண்டோ தந்நெஞ்சத்
தியாத்தாரோ டியாத்த நிதாடா.

(இ - ன்.) பல காளும்-பலதினமும், பக்கத்தார் ஆயினும் - தமதுபக் கத்திலேயேவாழ்ந்துன்னவர்களாகினுமும், நெஞ்சில் ஒட்டாரோடு-மனத்திற் பொருத்தமில்லாதவர்களுடன், சில காளும்-சிலகாளாயினும், ஒட்டார்-சேர மாட்டார், (அறி படையோர்); தம் நெஞ்சத்து-தமது மனத்திலே, யாத்தா ரோடு - (அன்பாற்) கட்டப்பட்டவர்களுடனே, யாத்த-கொண்ட, தொட ர்பு - சினேகத்தை, பல நாளும் நீத்தார் என-(அவர்) பலகாலமாய் (த் தம் மை) விட்டுள்ளாரென்றும கருதி, கைவிடல் உண்டோ - (அறிவுடையோர்) நீங்கவிடுதல் (உலகத்தில்) உண்டோ' [இல்லை யென்றபடி], (எ - று.)

சினேகத்துக்கும் சினேகமில்லாமைக்கும காரணம், எப்பொழுதும் அருகிலிருத்தலும் இல்லாமையுமே மன்று; மனங்களலக்கிருத்தலேயா மென்ப தாம். தெரிந்தாரத்திலுள்ள சூரியனுஞ் தாமரைமலராகுச சிநேகமும், எப் பொழுதும் அருகிலேயுள்ள தவளையுடனே அத்தருகு சிநேகமில்லாமையும் காண்க.

பலகாளும், சிலகாளும் என்ற உம்மைகள் - முறையே, உயர்வுசிறப்பு இழிவுசிறப்புப் பொருளன; இந்த உம்மைகள் - முறையே காளினது மிகுதி யையும் குறைவையும் விளக்குவன. பக்கம்-பகடியென்னும் வடமொழியின் திரிபு. நெஞ்சத்திற் சிலகாளும் ஒட்டார் என எடுத்து, மனத்திற் சிலகாளா யினும் ஒன்று படாதவர் என்னும் உரைக்கலாம். (ஈ)

உகடு. கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி—தோட்ட
கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரு நட்பாரு மில்.

(இ - ள்.) கோடு பூ போல - மரக்கிளைகளிலுண்டாகின்ற மலர்போல, மலர்ந்து-(முன்னே முகை) மலர்ச்சிபெற்று, பின் கூம்பாது-பின்பு (அம்மலர் சிதி) குவியாமல், வேட்டதே வேட்டது-(முன் ஒருவரோடொருவர்) விரும்பங்கொண்டதுவே விரும்பமாயிருப்பது, நட்பு ஆட்சி ஆம் - தினைகதருமத்தைக்காத்தலாகும்; தோட்ட கயம் பூ போல்-தோண்டப்பட்ட நீர்நிலையிலுண்டாகிற மலர்போல, முன் மலர்ந்து-முதலில் (முகை) மலர்ச்சிகாட்டி, பின் கூம்புவரை-பின்பு (அம் மலர்ச்சியொழிந்து முகஞ்) சுருங்குபவர்களே, நயப்பாரும்-விரும்புபவாகளும், நட்பாரும்-தினைகிப்பவர்களும், இல் - இல்லை.

உவமையணி. கோட்டுப்பூ, கொடிப்பூ, ரிப்பூ, புதர்பூவெனப் பூகான்கு வகைப்படும்; நிலப்பூ என ஒன்று கூட்டி ஐந்தென்பாரு முளர். ஆம் - ஆகு மென்பதன் விகாரம். தோட்ட-தோடுகளையுடைய எனவும் உரைக்கலாம்.

உகக. கடையாயார் நட்பிற் கமுகன்ன ரேனை
யிடையாயார் தெங்கின் னவர்—தலையாயா
ரெண்ணரும் பெண்ணே போன் றிட்ட ஞான்றிட்டே
தொன்மை யுடையா தொடர்பு

(இ - ள்.) கடை ஆயார் - கீழ்ப்பட்டவர்கள், நட்பில்-தினைகதருமத்தில், கமுகு அனையர் - பாக்குமரத்தை ஒத்திருப்பர், எனை இடை ஆயார் - பற்றை நடுத்தரமானவர், தெங்கின் அனையர் - தென்னைமரத்தை ஒத்திருப்பர்; தலை ஆயார் - முதல்தரமானவராகளாகிய, தொன்மை உடையார் - பழமையென்னும் பெருங்குணத்தையுடைய மேன்மக்களது, தொடர்பு-தினைகம், எண் அரு பெண்ணே போன்று-மனைத்தற்கும் அருமையான (சிறப்பையுடைய) பனைமரத்தை ஒத்து, இட்ட ஞான்று இட்டதே-நட்ட அக்காலத்தில் நட்டதன்மையதே; (எ - று)

பாக்குமரம்போல ஒருகால் உபசரிக்கதவிர்தாலும் பயன்கெடுபவரா அதமர், தென்னைமரம்போல இடையிடையே உபசரிக்கையில்லாமற்போனற் பயன் கெடுபவரா மத்தியமர், பனைமரம்போல முதல்நட்டது மாத்திரமே யன்றிப் பின்ஒருகாலதிலும் யாதோருபசரனையையும்வேண்டாமல் என்றும் ஒரு படிப்பட்ட பயன்படுபவர் உத்தமர் என்பதாம். "உத்தமர்தாமியல்பிடத் தோகுபனைபோல்வரே, மத்திமராக் தெங்குனே மாறுபடாரே - முத்தலரும், அங்கமுகுபோல்வ தமமவாகளே, தீத கதலியும் போல்வர் தோந்து" என்னும் நீத்தவேணபாவையும் காண்க. உவமையணி.

கமுகு - கமுகம் என்னும வடமொழியின் திரிபு. தெங்கின்-இன்சாரியையிற்க இரண்டனுருபு தொக்கது. பன்னீரண்டிடகு கேழுகையாக

அ‌ர்வமித்துப் பொருளைப்பாரு மூளர்; அது பொருத்தமாயிற் கொள்க. பழமையாவது - ஒருகாற்செய்த நட்பைப் பலகாலும் பாராட்டுந் தன்மை; இனி, பரம்பரையாகவரும் நற்குண மென்றும் கொள்ளலாம். (சு)

உகஎ. கழுநீருட் காரடகேனு மொருவன்
விழுமிதாக் கொள்ளி னமிழ்தாம்—விழுமிய
குய்த்தலையார் வெண்சோறே யாயினு மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்.

(இ - ள்.) கழு நீருள் கார் அடகு எனும்-அரிகெழுவிய நீரிற் சமைத்த கறித்த இலைக்கறியே யாயினும், ஒருவன் - ஒருத்தன், விழுமித ஆ கொள்வின் - சிறந்த அன்புடையதாக (க்கொடுக்க) ப் பெற்றால், அமிழ்த ஆம் - (அது) அமிருதம்போ லின்சுவையதாகும்; விழுமிய-சிறந்த, குய் - தாளித்த கறிகளோடும், தலை - தலையல்களோடுங் கூடி, ஆர் - நிறைந்த, வெள் சோறே ஆயினும்-வெண்மையான நல்லரிசிசோறேயாஞலும்,மேவாதார் கைத்தஉண்டல்-தன்னைச் சினேகியாதவரது கையிலுள்ளதை உண்ணுதல், காஞ்சிரம் காய் - எட்டிமரத்தின் காயைத் தின்பதுபோல இன்னாதாகும்.

இக்கலியின்கருத்தே கீழ் அதிகாரத்துக்கு சு, எ, கo - மூன்றுபாடல் களிற் கூறப்பட்டது.

கழுரீர் - கழுவுரீர் என்பதன் விகாரம்; வினைத்தொகை. சோறேயாயி னும் என்றதிலுள்ள ஏகாரமும், உம்மையும் - உயர்வுசிறப்பு. கைத்த-பொ ருள் என்றபடி. (ஏ)

உகஅ. நாய்க்காற் சிறுவிரல்போ னன்கணிய ராயினு
மீக்காற் றுணையு முதவாதார் நட்பெனுஞ்
சேய்த்தாஞ சென்று கொளல்வேண்டுஞ் செய்வினைக்கும்
வாய்க்கா லனையார் தொடர்பு.

(இ - ள்.) நாய் கால் சிறு விரல் போல் - நாயின் கால்களிலுள்ள சிறிய விரல்கள்போல, நன்கு அணியர் ஆயினும்-மிக அருகில் நெருங்கியுள்ளவரா ஞலும், ஈ கால் துணையும் உதவாதார் - ஈயின்காலளவாகிலும் உதவிசெய் யாதவர்களது, நட்பு-சினேகம், என் ஆம்-யாதபயனுடைத்தாம்? [ஒரு பய னும் உள்ளதன் றென்றபடி]; செய் வினைக்கும் - கழனியைப் பயிரிவினையும் படி செய்கின்ற, வாய்க்கால் - நீர்க்காலை, அனையார்-ஒத்தமிக உதவுபவர்க ளது, தொடர்பு - சினேகத்தை, சேய்த்தாஞும்-தூரத்திலுள்ளதாயினும், சென்று கொளல்வேண்டும் - போய்ப் பெறவேண்டும்; (எ - று.)

"அணியராயினும்' என்ற உம்மை - உயர்வுசிறப்பு. 'ஈக்காற்றுணையும்' என்ற உம்மை- இழிவுசிறப்பு. 'சேய்த்தாஞும்' என்றஉம்மை-உயர்வுசிறப்பு. ஈக்கால் என்றது, இங்கே சிறுமைக்கு எடுத்துக்காட்டுவதோரளவு; "ஈச்சிற கன்னதோர் தோலறினும்" என்றவிடத்து 'ஈச்சிறகு' போல, ஈ -பெயர்ச சொல்; ஒருபகுவை. செய்-கழனியாதலே 'நன்செய்,' 'புன்செய்' எனவழக்கி லுங் காண்க. வாய்க்கால் - நீரோடுகால். (அ)

உக்கூ. தெளிவிலார் நட்பிற் பகைநன்று சாதல்
வினியா வருநோயி னன்று—லனிய
விகழ்தலிற் கோற லினிதேமற் றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

(இ - ள்.) தெளிவு இலார் நட்பின் - தெளிவான அறிவு இல்லாதவர்களுடன் கொள்ளுஞ் சிநேகத்தைக்காட்டிலும், பகை - (அவருடைய) விரோதம், நன்று - நல்லது; விளியா வரும் நோயின்-எவ்வுபாயத்தாலுர் நீராமல் நீடித்துவருகிற வியாதியைக்காட்டிலும், சாதல்-இறத்தல், நன்று-நல்லது; அனிய இகழ்தலின் - (ஒருவனதுகொஞ்சம்) மிகப்புண்படும்படி கிந்தித்தலைக் காட்டிலும், கோறல்-கொல்லுதல், இனிது - நல்லது; இல்ல புகழ்தலின் - (ஒருவனிடத்தி) இல்லாத குணங்களைச்சொல்லித் துதித்தலைக் காட்டிலும், வைதலே - நிட்டதலே, நன்று - நலலது; (எ - று.)

மூடனுடையபகைமையாற் பெரும்பாலுக் துன்பமே உண்டாகாது; ஒரு கால் உண்டானலும் அது எளிதில் ஒழித்தற்குக் கூடியதாயிருக்கும், அங்ஙன மன்றியும் அதனலுண்டாகுக் தீங்கினும் அவனது ரண்பினுலுண்டாகுக் தீங்குகள் மிகப்பலவாம். ஆதலின், 'தெளிவிலார்நட்பிற் பகை நன்று' என்றார். "சாதலினின்னுதகில்லை" என்றபடி ஒருவனுக்கு எல்லாத் துன்பக்களினும் மிக்கதெனப்படுகிற மரணவேதனையைக் நீராதவியாதியினும் நன்று என்றது, ஆதாரமான உடம்பு நீங்கியவாறே உயிர்க்குத்துன்ப முகர்சசி இன்றுமாதலின். மரணத்துன்பத்தினும் மிகுந்த துன்பத்தைத் தருவது நிந்தனே என்பது, மூன்றும் வாக்கியத்தின் கருத்து. 'இல்லபுகழ்தலின் வைதலே நன்று' என்றது, இல்லாததைச் சொல்லிப் புகழ்தலின் இழிவை விளக்குதற்கு.

தெளிவு இலார் - ஆராய்ந்து தேறி நம்பப்படாதவ ரென்றுகொள்ளலாம். விளியா என்பதைப் பெயரெச்சமாகக்கொண்டு, மேல் அரு எனப் பதம்பிரிக்கது, நீக்காத அருமையான நோயென்றும் கொள்ளலாம். மற்றை-அசை, இல்ல - பெயர்.

அதிகாரம் நட்பாராய்த லாதலால், முதல்வாக்கியத்தை உபமேயமாகவும், மற்றைமூன்றையும் உபமானமாகவுங் கொள்க. (கூ)

உஉ0. மரீஇப் பலரோடு பண்ணுய முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்னு
மரீஇயிப் பின்னீப் பிரிவு.

(இ - ள்.) பலரோடு - அநேகம்பெயருடனே, மரீஇ - சேர்ந்து, பல்ரான் - அநேகநாட்கள், முயங்கி - கலந்து, பொரீஇ - (தம்குணமும் அவர் குணமும்) ஒத்தி, பொருள் தக்கார்-ரன்குமதிக்கும் பொருளாகத் தக்கவர்களை, கோடலே-தினைகஞ்செய்துகொள்ளுதலே, வேண்டும்-தகுதி; பரீஇ-கடித்தி, உயிர் செகுக்கும் - உயிரையொழிக்கின்ற, பாம்பொடும்-பாம்போடாயினும், மரீஇ நிகைஞ்செய்து, பின்னீப்பிரிவு-பின்பு அதனை விட்டுநீங்குதல், இன்னு - துன்பத்தருவதாம்; (எ - று.)

தாகுகுணமுடையவரோடு கிகேகுசெடது பிரிநதாலும மனவருதத முணடாமாதலால, பினனெருசாலததம பிரியவேணடாதபடி முனனமே ஒருவரிடததளள குணததைப பழகிப்பாரததறிநது கினேகிகவேணடு மெனபதாம இசசெயயுளில முதறின வாகியதறிற கூறிய நிதாகததறிற குப பிரகினைவாகியதறி காரணகவாடடி கிறதறினமையால, ஏதுவணி

மருவி, பொருவி, பரிநது எனனும இறநதகால வினையெசசகள-மரீ இ, பொரீஇ, பரீஇ என விகாரபபடடு அளபெடைதன, சொலலிசையளபெ டை நானகாமடியில, மரீஇஇ ஈரளபெடை, நானகுமாதறிரை பொரூ டகாரா - உபயோகமாகத தகவா பாமபொடும, உ மமை - இழிவுறிறபபு இனனு எனபதை இனனது எனபதன ஏறதொகுததலாகவாயினும, பிரிவு எனபதைப பனமை குறிககும பாலபகாலஸ்றிணைப பெயராகவாயினு கொளக தக்காகுகோடல எனபதில, உயாதிணைற்று ரகாதறினமுன வனமைமிக்கது, இரணடாம வேறறுமைதொகை யாதலின

இசசெயயுளில நானகுஅடியிலும எதுகையில உயிரளபெடை வாதது, அபபுதறோடை

''கூடிபபிரியேல,'' 'இணகமறிநதிணககு'' எனஒவவையார் கூறிய திமிகருதறேபறறியாம 'விலவகேயுரதமமோடெறுறைதனமேவுங,கல நதாரைகைவிடிதலொலலா- விலவருவி, தாஅயிழியுமவோலவினஞசே, பேஎயோடாறுமபிரிவு'' எனனுமபழமொழசெயயுள ரோகததகக்கது.

''யலயரஜஞாயதேபரீலை ருகுலமர ரச வைமரய நதோலகதிமகுர யாத'' எனனும வடனூல மேறகோள இகருக கவளிக்கத்தக்கது

[தொல்காப்பியம் எழத்ததிகாரம - நன்மரபு சூ] ''டேடமமேவெணடி னவள புடைய, கூடடி யெபபு லெனமனரா புலவர' எனனுஞ சூதறிர வுரையில ஆசிரியர ரசினுரகினியார கூறுமாறு —' அவனஎபுடைய 'எனப பனமையாகக கூறியவதனை இவரும நானகுமாதறிரையும கொணடார எனனே இவவாசிரியரை 'மூதறிதூலகணம்' எனறாகலின மாபுராணதது ''செயயுடகளோசை சிதையுகரா லரசபு, மையபபாடினறி யீணையுமா — மைதிரொடு, நினறியபு செயயுடகெடி னெறறை யுணடாககு, குனறுமே லொறறனபுங கொள'' எனற சூதறிரததான அவாகொணட நானகுமாதறிரையும இவவாசிரியாககு ஒதலவேணடுதலின அது, ''ஆஉஏதறிமபுகைத தொலவிசமபு,'' ''பேஎ எதறுகதொல,'' ''செறுஅஅயவாழிடநெருகு,' ''இலாஅஅாகஇலலிதத்மா,'' ''வீராஅஅயசெயயாமைநனறு,'' ''மரீஇஇப பினனேபபிரிவு'' எனச சானறோ செயயுடகளெலலாம நானகுமாதறிரை பெறறுகிறறலின அனறி, மூனறுமாதறிரை பெறறனவேல ஆசிரியதறோ தடடுச செபபலோசைகெடுமாயிறறு இஙஙனம அளபெடாதுனறு ஆசிரி யதறோதடடுகிறபன கலிசகுஉறபாகிய கொசசகவெணபாகள இவை யலலனவெனறுணாக ''—எனபது

இனி, தொலகாபபியதறிச செயயுளியலில ''கேரீறறியறனரி' எனனுஞ சூதறிரதறின (சி. லவ தாமோதரம பினனேயவாகள அசசிடட) உரையில

"உரு அர்க்கு நோ யுரைப்பாய் கடலே, செரு அய் வாழிய நெஞ்ச" என வும், 'கலா அத் இனிகடியுங் கானகாாட, விலா அர்க் இல்லேத் தமர்" எனவும், 'தீவினவகையின் நிவர்த்தன' என் றும், 'தாவும் போக்கும்" என் றருத்திரத்தின் உரையில்'இங்ஙனம் பாவேறுபடாமையினன்றே "உரு அர்க்கு றநோயுரைப் பாய் கடலே, செரு அய் வாழிய நெஞ்ச" என்பதை வெண்பா என்பாமா யிற்றென்பது' என்றும் காணப்படுவதை உற்றுநோக்குமிடத்து, செய்யு ளியலுக்கு மூடி பிள்ளையவர்கள் அச்சிட்டுள்ள உரை "நீட்டம் வேண்டின்" என்னுஞ் சூத்திரத்தின் உரையெனக்கினியருரையோடு மாறுபடுதலின், அவர் கள் அச்சிட்டுள்ள செய்யுளியலுரை உரையெனக்கினியருரையல்ல வென்ற ஊகிக்கப்படுகின்றது. (கo)

## உரு - ஆம் அதிகாரம்—நட்பிற்பிழைபொறுத்தல்.

அஃதாவது-தம்மாற்செய்யப்பட்டாரிடத்து உள்ளனவாகும்பிழை களைப் பொறுத்தல். ஆராய்ந்து நெருங்கப்பட்டாராயினும், பொறுக்கப் படுங் குற்றமுடையராதலாலும் விரைவுத்தாலும் உரிமையாலும் அந்நட் டார் தமக்குப் பிழைசெய்தல் கூடும். அவற்றைப்பொறுப்பது அவ ரை யினைசெய்தாரதுகடமையாம். ஆதலின், இவ்வதிகாரம்நட்பாராய் தலின்பின்வைக்கப்பட்டது. நட்பு-நட்டார்க்குத்தொழிலாதலேபொ ருட்பிழை-முதனிலைத்தொழிற்பெயர். திருக்குறளில் 'நட்பாராய்தல்' என்னும் அதி காரத்தின்பின் 'பழமை' என்னும் அதிகாரத்தை வைத்ததற்குப் பரிமே லழகர் இக்காரணமே கூறிப்போந்தவாறு காண்க.

உஉக. கல்லா ரெனத்தா ணனிவி நும்பிக் கொண்டாரை
யல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டு
நெல்லுக் குயிர்போ லீர்க்கு ணரையுண்டு
புல்லிதற் பூவிற்கு மூண்டு.

(இ - ன்.) கல்லார் என தாம் ணனி வீரும்பி கொண்டாரை - நற்குண நற்செய்கையுடையரொன்று ஆராய்ந்ததறிந்து தெளிந்து தம்மால் மிகவீரும் பிச னினைக்செய்துகொள்ளப்பட்டவரை, அல்லார் எனினும்-(பின்பு ஒரு காலத்தில் மூன்று தாம் தேறியபடி) நற்குண நற்செய்கை யுடையவ ரல்லா தவ ரென்று கண்டாலும், அடக்கி கொளல்வேண்டும் - (அவர்குற்றங்களோப் பிறர் அறியக்கூறி வெளிப்படுத்தாமல்தம்மனத்திலேயே) அடக்கிவைத்துக் கொள்ளுதலே தகுதி; (ஏனெனில்),—நெல்லுக்கு உயி ரண்டு - (யாவரா லும் உணவின்பொருட்டு மிகவிரும்பிக்கொள்ளப்படுகிற) நெல்லுக்கும் (பயனற்ற) அதன் உமியாகிய குற்றம் உள்ளது; நீர்க்கு உரை உண்டு-(யாவ ராலும் பானத்தின்பொருட்டு மிகவிரும்பி காடியடையப்படுகிற) நீருக்கும் உரையாயிருக்குற்றம் உள்ளது; பூவிற்கும் புல் இதழ் உண்டு - (சிறப்புடைய) மலருக்கும் (பயனற்ற) அதனே மேல்தழுவியுள்ள புறவிதழாகியகுற்றம் உள்ளது; (எ - று.)

பல சிறந்த குணஉகளேயுடைய உயர்ந்த பொருள்களிலுஞ் சில குற்ற ங்களிருக்கை உலகவியல்பே யாதலாலும், "குற்றம்பார்க்கிறசுற்றமில்லே" என்றபடி ஒவ்வொருவரிடத்திய குற்றமதையே நோக்கினால் நண்பரில்லே

யாரு மாதலாலும், தம்மாற் கினேகிக்கப்பட்டாரிடத்துப் பின்பு காணப் படில் குற்றங்களேயெல்லாம்பாராட்டாமல் அவரிடத்துள்ள குணங்களேயே முக்கியமாகக் கொள்ளவேண்டு மென்பதாம். அடக்கிக்கொளல்-இரகசியத் தில் அவர்க்குத் தாம் அறிவு கூறி அவர்களே அடங்கச்செய்து வைத்துக் கொள்ளுதல் என்றும் உரை கூறலாம்.

பின்னிரண்டடிகளிற் கூறிய மூன்று பமானங்கள் எத்தனை நற்குண முடையாரிடத்தும் குற்றங்கள் காணக்கூடுமென்ற உபமேயத்தை விளக்கு தலால், பிறிதுமோழிதல் என்னும் அலங்காரம்; வடனூலார் அப்ரஸ்துதப்ர சம்ஸை என்பர்.

வீரஞ்சிராசரனே வதைத்ததனால் இந்திரனைத்தொடர்ந்த பிரமகத்தி யைத்தொலைக்கும்பொருட்டு அவன் அசுவமேதயாகஞ்செய்ய நிருமாலைப் பூசிக்கவே, அப்பிரமகத்தி தேவர்கள் நியமனத்தின்படி நான்கு கூறுகப்பிரிக் கத் ஒன்றினுல் வெள்ளம்புரண்டுவரும் ஆற்றிலும், மற்றொன்றுற் சவட்டி நிலத்திலும், வேறொன்றுற்பருவம்வந்த பெண்களிடத்தும், இன்னொன்றில் வதைசெய்பவரிடத்துஞ் சென்றிருக்கிற தென்றும், வெள்ளத்தில்நுரையாய பகுதியே அச்கொலைப்பாவத்தின் வடிவ மென்றும் தூல்களிற் கூறப் படுகிற வரலாற்றால், ரீருக்கு நரை குற்றமாதல் அறிக. "மங்கலமாகி யின் றியமையாதி, யாவரு மகிழ்ந்துமேற்கொள மெல்லிப், பொழுதின் முகமலர் வுடையது பூவே" இதனுல், பூவின்நிறப்பை அறிக.

ஈனி - வீசேஷத்த உரிசசொல். இரட்டுறமொழிதலென்னும் உத்தி யால், புல்லிதழ் என்பதற்கு-பண்புத்தொகையாய், இழிவானஇதழென்றும்; வினைத்தொகையாய், தழுவியுள்ள இதழென்றும் ஒருங்கு உரைகொள்ளப் பட்டது: முறையே புன்மையான இதழென்றும், புல்லியஇதழென்றும்மிரி யும். மேல் ஈன்றியில்செல்வம் என்னும் அதிகாரத்து ஈ-ஆம் பாட்டினுள்ள "காருத்தகடு" என்பதனேடு ஒப்பிடத்தக்கது. பூவிற்கும் என்ற உம்மை - இறக்கத தழுவியது. "ஞருபொருட்கினலி செஞ்சொலாமிற், பிற்படக் கினவார் முற்படக் கினத்தல்" என்றதொல்காப்பியவிதியால், உம்மையில் லாத சொற்கள் முன்னும்,உம்மையுள்ள சொல் பின்னும் வைக்கப்பட்டன. இனி, உயர்வுநிறப்பும்மையாகக்கொண்டு, செல்லுக்கு நீர்க்கு என்பவற்றோ டெல் கூட்டலாம். (க)

உஉஉ. செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டீரார்
மறுத்துஞ் நிறைசெய்வர் நீர்நசைஇ வாற்நர்
வெறுப்பக் வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.

(இ - ன்.) செறு தோறு உடைப்பினும் - (தாங்கள்) அடைக்குந்தோ றும் உடைத்துக்கொண்டு போவதாயினும்,செம்புனலோடு ஊடார்-நல்லநீ ருடனே நிறுகோபமும் கொள்ளாதவர்களாய், நீர் நசைஇ வாற்ர்-தண்ணீ ரைப் பயன்படுத்த லிரும்பி வாழ்பவர்கள், மறுத்தும் நிறைசெய்வர் - மறு படி மறுபடி அணைதோலி (அக்ரீரை) க் கட்டிவைப்பார்கள்; (அதுபோல

வே);—வெறுப்ப வெறுப்ப செயினும் - வெறுக்கத்தக்க குற்றமான காரியங்களே (ஒருவர்) வெறுப்புண்டாம்படி மிகுதியாகச் செய்துவந்தாலும், தாம் வேண்டி தொடர்பு கொண்டார் பொறுப்பர் - தாம் விரும்பிச் சினேகஞ் செய்து கொண்டவர் (அவரைப் பிழை) பொறுப்பர்; (எ - று.)

எடுத்துக்காட்டுவமையணி. செறு தோறு-அடக்குந்தோறும்: செறுத்தல் - அடக்குதல்: செறு தோறு - வினைத்தொகை; தொறுவன்பதன் ஈட்டல் விகாரமான தோறு என்பது இடைச்சொல்லாயினும் பெயர்ச்சொல் தன்மைப்பட்டு நிற்றலால், செறுவன்னுங் காலங்காரத்தபெயரெச்சம் அதனைக் கொண்டது. வினைத்தொகை உகரமுன்னர் இயல்பாதற்குரிய இது 'செறுத்தோறு' என வருமொழிமுதல் வலிமிக்குவந்தது, சந்தவின்பப்பொருட்டு. நிறைசெய்தல் - புறத்துச் செல்லவொட்டாது தடுத்தல். கசைஇ - சொல்லிசை யளபெடை. வெறுப்ப என்னுஞ் சொல் இரண்டனுள், முன்னது-ஓர்காலப் பலவின்பால் வினையாலணையும் பெயர்; பின்னது - செய வெனெச்சம், காரியப்பொருளது. இரண்டையும் எச்சமாகவேகொண்டு, துன்பங்களே யெனவருவித்து மிகுதிப்பொருளில்வந்த அடுக்கெனினுமாம். இரண்டையும், பலமுறை செய்தலாகிய பொருள்நிலையில்வந்த பலவின்பாற் பெயரின் அடுக்காகக் கொள்ளலாகாது;'வெறுப்பசெயின்' எனஅஃறிணைப் பன்மைப்பெயர்முன் வருமொழி முதல்வலி இயல்பாகவேண்டி மாதலால்.

உஉக. இறப்பவே நீய செயினுந்தன் னட்டார்
பொறுத்த றகுவதொன் றன்றே—நிறக்கோங்
குருவ வண்டார்க்கு முயர்வரை நாட
விவரருவர் பொறைபிரிவர் நட்பு.

(இ - ன்.) நிறம் கோங்கு-கல்லிறமுள்ள கோங்குமரத்தின் மலர்களிலே, உருவம் வண்டு - அழகிய வடிவமுடைய வண்டுகள், ஆர்க்கும் - ஒலித்தற்கிடமான, உயர் வரை - உயர்ந்த மலைகளேயுடைய, நாட - நாட்டையுடையவனே!—தன் னட்டார் - தனது சினேகிதர், இறப்பவே நீய செயினும் - மிகவுங் கீங்குகலையே செய்தாராயினும், பொறுத்தல் - (அப்பிழைகளைப்) பொறுத்தல், தகுவது ஒன்று அன்றே - (பெருமைக்குண்முடையார்க்குத்) தகுதிருப்பதொரு காரியமன்றே? (ஏனெனில்),—ஒருவர் பொறை இருவர் நட்பு-ஒருத்தர் (ஒருத்தருடைய பிழையைப்) பொறுத்திடுதலே இரண்டுபேரது சினேகத்துக்குக் காரணமாகும், (ஆதலால்); (எ-று)

ஏதுவணி. "ஒருவர்பொறை யிருவர்நட்பு" என்னுஞ் சொற்றொடர், "தந்தீமையில்லாதார் நட்டவர்தீமையையு, மெந்தீமையென்றேயுணர்பவர்தன்னை, பொருதிரை வன்துலாம் பொங்குநீர்ச சேர்ப்ப,வொருவர்பொறை யிருவர் நட்பு" என்ற பழமொழித்செய்யுளிற் பயின்றுள்ளது காரணமாகிய பொறுத்தற்குணம், காரியமாகியினைகமாக உபசரிக்கப்பட்டது. இறப்பவரம்புகடக்க. கோங்குமரப்பெயர், அதன்னினையான மலருக்கு முதலாகு பெயர். உயர்வரை - ஓங்கின மலை. சிறந்த மலை; இரட்டுறமொழிதல், இது

உயர்ந்தஉயர்கிற உயருமனைக் காலஞ்தோன்ற நிற்றலால், வினைத்தொகை; இதனால் உயர்வாகிய மலேயெனப் பண்புத்தொகையாகாது. (க.)

உஉச. மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தம்
கடுவிசை நாவாய் கரையேலக்குஞ் சேர்ப்ப
விடுதற் கரியா ரியல்பிலரே னெஞ்சஞ்
சுடுதற்கு மூட்டிய தீ.

(இ - ன்.) மடி திரை தந்திட்ட-மடித்துவிழுகின்ற அலைகள் கொணர்ந்துகொழித்திடுகின்ற, வான் கதிர்முத்தம்-சிறந்த ஒளியையுடைய முத்துக்களே, கடு விசை நாவாய் - மிகுந்த வேகத்தையுடைய மரக்கலங்கள், கரை அலைக்கும்-கரைகளிலே அலையச்செய்து தள்ளுகின்ற, சேர்ப்ப-கடல்திறை யையுடைய பாண்டியனே!—விடுதற்கு அரியார் - (நினைகம்) விடுதற்குக் கூடாதவர்கள், இயல்பு இலரேல் - இயற்கையான நற்குணம் இல்லாதவராயின், (அவர்), நெஞ்சம் சுடுதற்கு மூட்டிய தீ - (தமது) மனத்தை எரிப்பதற்கு மூட்டப்பட்ட கெருப்பை யொப்பர்; (எ - று.)

கூடிப்பிரிதல் கூடாதாயினும், நினைக்கப்பட்டவர் நற்குணமில்லாமல் தூர்க்குணமுடையராயிருந்தால் மனத்திற்கு மிக்க துன்பமே தரும்; ஆதலின், நினைக்கப்பட்டவர் தம்மாற்கூடியவளவு தவறின்றி யொழுக வேண்டு மென்பதாம்.

'விடுதற்கரியார்' என்னும் பிரயோகம் மேல் உஉ-ஆஞ் செய்யுளிலும், இந்த அர்த்தமுள்ள 'விடற்பாலரல்லார்' என்னும் பிரயோகம் அடுத்தசெய்யுளிலும் வருதல் காண்க. நாவாய் - கௌ என்னும் வடமொழியின் திரிவென்பர். கடலில் முத்து - சிப்பி சங்கு முதலியவற்றிலிருந்து உண்டானவையும், ரத்நாகரமானதால் இயற்கையிலே உள்ளவையும். செயற்கையான நற்குணம் நிறைதலால் இருக்குமேயன்றி மேடித்து நில்லாதாதலால், 'இயல்பு' எனப்பட்டது. சுடுதற்கு-எதிர்காலவினையெச்சம்; இனி, இச்சொல்லே, சுடுதலென்னுந் தொழிற்பெயரின்மேற் பொருட்டுப்பொருளிவ்வந்த தான்காம் வேற்றுமையாகக் கொள்ளலாகாது: இசசொல் எதிர்காலங் காட்டுதலாலும், தொழிற்பெயர் பெரும்பாலும் காலங்காட்டாமையாலு மென்க. சுடு-கடி யென்னும் உரிச்சொல் ஈறுதிரிந்தது. (ச)

உஉடு இன்ன செயினும் விடற்பால ரல்லாரைப்
பொன்னெனப் போற்றிக் கொளல்வேண்டும்—பொன்னெனு
நல்லிற் சிதைத்தநீர் நாடொறு நாடித்த
மில்லத்தி லாக்குத லால்.

(இ - ன்.) இன்ன செயினும் - தன்பங்கள் பலவற்றைச் செய்தாராயினும், விடல் பாலர் அல்லாரை - விடத்தக்கவரல்லாதவரை, பொன் ஆ போற்றிகொளல் வேண்டும்-பொன்னைப்போலவேனேதத விரும்பிதன்கு மதித்தமென்மையாகக் கொள்ளுதல் தகுதி; (ஏனெனில்),—பொன்னெ

நல் இல் நெதத்த நீ-பொன் முதலிய நற்பொருள்களுடனே (ஒருவருடைய) நிறந்த வீட்டையும் எரித்தழித்திட்ட பொருப்பை, நான் தொறும் காடி தம் இல்லத்தில் ஆக்குதலால்-தினந்தோறும் விரும்பி (அவர்) தமது வீட்டில் வளர்த்துவைத்தலால்; (எ - று.)

இந்தச்செய்யுளின் முதலடியோடு வருஞ்செய்யுளின் முதலடி ஒப்பு நோக்கத்தக்கது.

நன்மை நீமை பாராது அகப்பட்டவையெல்லாவற்றையும் எரித்தழிக்கும் இயல்பினதாகிய பொருப்பையும் சமைத்தல் விளக்கெரித்தல் முதலிய பிரயோசனங்களின்பொருட்டு உலகத்தில் எல்லோரும் தமது வீடுகளில் பல இடத்தும் சேர்த்திருக்கவில்லையா? அதுபோலவே, சிலகாலம் தன் பஞ்செய்வாராயினும் பிறகாலத்து உதவிசெய்தல் நோக்கி அவரோடு பிழையாராது பொறுத்தல நினைக்கவேண்டு மென்பதாம். பொருப்பை உமானமாகக் கூறினமையின், தூர்க்குணமுடையாரோடு மிக நெருங்காமலும் விட்டு நீங்காமலும் பழகவேண்டு மென்றவாறும்.

பொன் - நிறந்த பொருள்களுக்கெல்லாம் உபலட்சணம். இன்ன - இனிமையென்னும் பண்பினடியாப் பிறந்த எதிர்மறைப் பலவின்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர்.

முன்பாட்டில் "நெஞ்சஞ் சுடுதற்கு மூட்டிய நீ" என்றமையின் - யாவரும் அஞ்சுவா ரெனக் கருதி, நீயைச சோத்தல்போல தவறையஞ் சேர்த்தல்வேண்டுமென்ற இப்பாட்டை அருளிச்செய்ய வைத்தார்.

"அப்ரியாண்யபிகுர்வாணோயப்ரிய ப்ரியஸ்ய வத-தத்தமந்த்ரிஸாரேபி கல்பயஹ்காவகாதரஃ" என்பது, இதற்குச் சோந்த வடனூன் மேற்கோள்.

உஉசு. இன்னு செயினும் விடுதற் கரியாரைத்
தின்னுத் துறந்த நகுவதோ—தின்னருஞ்ஞீர்
விண்குத்து நீள்வரை வெற்ப கணபவோ
கண்குத்திற் றென்றுதங் கை.

(இ - ன்.) தின் அரு ரீர் - (பிரவிடத்தசை) சேர்தற்கருமையான நிறப்புக்களைத் தம்மிடஞ் சேரப்பெற்றுள்ள, விண் குத்தும் நீள் வரை-ஆகாயத்தைக் குத்துகின்ற நீண்ட மூங்கில்களோடுடைய, வெற்ப - மலைகளுடைய பாண்டியனே!—கண் குத்திற்று என்று தம் கை கணபவோ-தமது கண்ணைக் குத்திவிட்டதென்ற காரணத்தால் தமது கையை வெட்டியொழிப் பார்களோ? [உலகத்தில் எவரும் ஒழிக்கமாட்டாரன்றே],(அதுபோலவே) இன்னு செயினும்-தின்பங்களைச செய்தாலும், விடுதற்கு அரியாரை-விடாத தகாதவர்களை, தின்னு துறத்தல் - சேர்க்காமல் விட்டிடுதல், நகுவதோ தகுந்ததொரு காரியமாகுமோ? [ஆகா தென்றபடி]; (எ - று.)

இது-எடுத்துக்காட்டுவமையணி. கையைத் திருஷ்டாந்தமாகக் காட்டினமையின், அவர் தமக்கு அங்கமாகுபவரென்க. தமக்குக கண் உறுப்பு

கூறப்பட்டதனால், தம்மையும் ஓர் அங்கமாகவே கருதுக வென்றபடியாம். இவருக கூறிய உவமையால், தமது அவயவங்களுள் ஒன்றில் மற்றொன்று அழாகவிரைதையினுறபட்டு அதறகு வருததததையுணடாகினுல அதற்காக அவவருததமம உறப்பைக கோபிததறக களைபவரிலலாமைபோல, ஒருவர மறறொருவாகருக சோவினுல நீஙகிழைததால அதறகாக அவரையழிப் பது தகுநியனறு எனபது பெறபபட்டது

வரையெனலுங கணுவினபெயா-மூஙகிறகுச சினையாருபெயா வினைப-பலாபால முறறு ஓ - எதிரமறை (கு)

உ.ஏ இலஙகுநீர்த தணசேர்பப வினை செயினுங
கலஙகு பழிகாலுர சானறோர—கலஙகுதபின
,ம்மை யெடுத்துரைகருகு நிணைறி லிலலாதார
தாமு மவரிற கடை

(இ - ள) இலகுகு நீர் தண சோபப-வினைகருகிற நீரையுடைய குளிர் நத கடலதறையையுடைய பாணடியனே!—இனனு செயினுமை-(தமகருத) தனபகன பலவுறறைச செயதிடடாலும, சானறோ (நறகுண நறசெய கைகளாலும கலவி கேளவிகளாலும) மிக பெரியோ, கலஙகு பழி கா ணுர - (ஒருவரைச) நினைகிதது அதனபின (அவரிடமுளள) குறறதததப பாராடடமாடடார், கலஙகுபினநிமை எடுதது உரைகருடஙகினுதபினபு (அவரது) குறறஙகளே வெளிபபடுதது கூறுகினற, நிண அறிவு இலலா தார - உறுதியான அறிவு இலலாதவரன, தாமும அவரின கடை-தாயக ளும் (தகுஙளுருகுது நீஙகுசெயயும) அவரபோலவே கடைபபடடவராவர.

சிழமகளினும மேனமகளுருகு உளள சிறபபு அவரிடமுளள குற றஙகளே ஒருபொருளாக நோகாது பொறுததலே யாதலால மேனமகள அஙனஞசெயயாராயின தாமும சிழமகளாய விடுவ ரெனபதாம

தாம அறிவுடையராயிருததும கறறறிமூடராய குறறஙகாறறதலால, அவரிறகடை எனபதறகு-அவாகளினுகு கடைபபடடவா எனறும உரைக கலாம சிறியோாகுக குறறஞசெயதலஇயலபு, பெரியோாகு அது பொ றுததல இயலபு ஆகலே, சிறியோ தம இயலபாற செயத குறறஙகளேப பெரியோ தம இயலபாற பொருராயின, இயலபுகெடடு அவரினும இழி வுடையராவரெனக காணக நணபாகருத நீஙகுசெயயும அவிவேகமபோல வதே அவரிடததி உளள குறறதறறத் தெடுததுரைகரும அவிவேகமு மெனக.

இலஙகு நீர் வினைகருக தன்மையுளள எனறும உரைகலாம, நீர்-நீர் மையென்றும பணபுபபெயா ாறுபோயிறறு பழி-பழிகபபடுவது, செயப படு பொருள்விருதி புணாாது கெடட்பெயா நிமை - பணபுபபெயா. தா மும், உமமை - எசசபபொருளது பிறாகருத நீஙகுசெயயாத தாமும என உபாவு சிறப்பாகவுமாம். கடை-அதம ரென்றபடி, கடையாருகு ஆருபெயா,

ஊஅ. எதிலார் செய்த திறப்பவே தினனிது
நோதக்க தென்னுண்டர நோக்குங்காற்—காதல்
கழுமியார் செய்த கறங்கருவி நாட
வீழுமிதா நெஞ்சத்து ணின்று.

(இ - ன்.) கறங்கு அருவி நாட - ஒலிக்கின்ற மலையருவிகளோடுடைய நாட்டையுடையவனே!—எதிலார் செய்தது-அயலார் செய்தது, இறப்பவே தீது எனிலும் - மிகவுங் தீமையைத் தருவதேயானாலும், நோக்குங்கால் - (விதியை) ஆராய்ந்துபார்க்குமிடத்து, நோதக்கது என் உண்டு ஆம்-வெறுக்கத்தக்கது யாது உள்ளதாம்? [ஒன்றுமில்லை யென்றபடி]; (ஆகவே), காதல் கழுமியார்செய்த-அன்புமிகுந்தவர் செய்த தீங்குகள், நெஞ்சத்துள் நின்று-மனத்தில்நின்றுல் [ஆராய்ந்து எண்ணினு லென்றபடி], விழுமிதா ஆம்-சிறப்புடையதாய்விடும்; (எ - று.)

அயலார் செய்த குற்றமே ஆலோசிக்குமிடத்து வெறுக்கத்தகாததென்றுல், நண்பர் செய்தது பிரியமாகுமென்னத் தட்டில்லை என்பதாம். தீம்ச்சில பாடல்களால், நண்பர் அறிவில்லாமையாற் செய்யுங் குற்றங்களைப் பொறுத்தல் கூறப்பட்டது; இப்பாட்டில், விதிபற்றி அவரால் நிகழுங் குற்றத்தைப் பொறுத்தல் உணர்த்தப்பட்டது.

செய்த-பெயர். செய்த வீழுமிதாம்-பன்மையொருமைமயக்கம்; தனித் தனி விழுமியதாகு மென்க. இனி, செய்தது என்பதன் ஈறுதொகுத்தலாகவுங் கொள்ளலாம். நோதற்குநோக்கத, நோதக்கது. நோ - முதனிலைத் தொழிற்பெயர்; நான்காம் வேற்றுமைத்தொகை. ஆம் - அசைநிலைப்பொருளது. நிற்ப என்பது, நின்று எனத் திரிந்தது; "வானின் றுலகம் வழங்கி வருதலால்" என்னுந் திருக்குறளிற்போல விழுமிதா எனப் பிரித்து, தன் பற்தருவதா? [அன்று] என்றும் உரைக்கலாம்; "வீழுமஞ் சீர்மையும நிறப்பு மிடும்பையும்" ஆதலின். (அ)

ஊஆ. தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயினவரைத்
தமரினு நன்கு மதித்திதத் தமரன்மை
தம்முள டக்கிக் கொளல்.

(இ - ள்.) தமர் என்று தாம் கொள்ளப்பட்டவர்தம்மை - தமது நண்பினரென்று தம்மால் அபிமானித்துச் சினேகஞ் செய்துகொள்ளப்பட்டவர்களை, தமர் அன்மை தாம் அறிந்தார் ஆயின்-தமதுநண்பரென்று கொள்ளுவதற்குவற்ற குணமுடைய நல்லாதவராகத் தாம் (பின்பு) அறிந்தாரானுல், அவரை தமரினும் நன்கு மதித்து-அவர்களோ தமது உண்மையான நண்பரினும் மேன்மையாகக் கொண்டு கௌரவித்து, தமர் அன்மை தம்முள் அடக்கிக்கொளல்-(அவர்களிடங்காணப்பட்ட) தமாதநற்கேளாத தன்மையைத் தமது மனத்தினுள்ளேயே அடக்கிவைத்துக்கொள்க; (எ - று.)

தமரிலும் கண்குமிழித்தல்-அவர்கள்தமதுகுணத்தை நோக்கியாயினும் தம்தம்குற்றம் ஒழிதற்பொருட்டும், தம்மிடம் அவர்கள் மேன்மேற்குற்றஞ் செய்திடாமைப்பொருட்டு மென்க. தமமன்மை-தமரல்லாதவர், பண்பாகு பெயர். இனி, உருபுமயக்கமாய், கொள்ளப்பட்டவர்தம்மை என்பதற்கு - கொள்ளப்பட்டவரிடத்து என்றும் உரைக்கலாம். கொளல் - அல் ஈறுதிரி பெற்றலியல்கோள்உடன்பாட்டு முற்று;"பயனில்சொல் பாராட்டுவானை— மக்கட்பதடி யெனல்" என்ற நீருக்குறளில் 'எனல்' என்பது போல.

இப்பாட்டில் 'தமர்' என வந்தசொல்லும் பொருளும் மீண்டும் பல விடத்து வந்தமையால், கோற்போநுட்பின்வருநிலையணி. (க)

உரூ0. குற்றமு மேணக் குணமு மொருவனை
நட்டபி னுடித் திரிவேனே—னட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
வுறைகடல்சூழ் வைய கத.

(இ - ன்.) ஒருவனை நட்டபின் - ஒருத்தனைச் சினேகித்தபின்பு, குற்றமும் எனை குணமும் காடி திரிவேனேல்-(அவனிடத்திலுள்ள) குற்றங்களையும் அவற்றிற்கு எதிரிடையான குணங்களையும் ஆராய்ந்து திரிவேனானால், (யான்), அறை கடல் சூழ் வையம் முக-ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த நிலவுலகத்தார் யாவரும் (என்னை இகழ்ந்து) சிரிக்கும்படி, நட்டான் மறை காவா விட்டவன் செல்வுழிசெல்க-சினேகிதனது இரகசியத்தை அடக்கிவைத்துக் காவாமல் வெளியிட்டு விட்ட பாவி செல்லுங் கதியிற் செல்வேனாக;(எ-று)

இச்செய்யுள், நட்பிற்பிழைபொறுக்கும் இயல்புறநியையுடையானொருவன் செய்புஞ்சபதமூலமாக அக்குணத்தின்கடமையைவெளியிட்டவாறு.

வெளியிட்டால் கேடித்தவனுக்குத் தின்பதற்குக்கூடிய இகலியங்களை வெளிப்படுத்தினவனுக்கு நேரும் நரகமே ஒருவனைச் சினேகித்தபின் அவனது குற்றங்களைப் பாராட்டுபவனுக்கும் கோவதென்பதாம். எனவே, இரண்டும் ஒத்த பெரும்பாவ மென்றபடி. நட்டபின் குற்றமும் குணமும் காடித்திரிதல் முகாதென்றமையின், நட்பதற்குமுன்னமே இவற்றை ஆராய்ச்சி செய்யவேண்டுமென்றும், நட்புச்செய்தபின் குற்றங்களையும் குணமாகவே கருதவேண்டு மென்றும் கூறியபடியாம்.

மறை - மறைத்தற்கு உரியது, (பிறர்க்கு அறியப் படாமல்) மறுக்கத் தக்கது. செல்க-வியங்கோள்முற்று; இங்கே, தன்மையொருமைக்குவந்தது. வையம்-எல்லாப்பொருள்களையும் வைக்குமிடமெனக் காரணப்பெயர்; இங்கே இடவாகுபெயர். (கப)

## உசாஅம் அதிகாரம்.—கூடாநட்பு.

அஃதாவது - திரிகரணங்களுள் உள்ளே மனத்தாற் கூடாமலிருந்தே வெளியே சொற்செயல்களாற் கூடியொழுகுவாரது சினேகம். பேற்ற நண்பர் செயத பிழைகளைப் பொறுத்தல் வேண்டுமெனக்கூறி, இங்கே, பொறுக்கப்படாத குற்றமுடைமையால் விடற்பாலதாகிய நட்புக் கூறின்றமையின், இது அவ்வதிகாரத்தின்பின் வைக்கப்பட்டது; திருக்குறளிலும் பழமையென்னும் அதிகாரத்தின்பின் பேதைப் கூடாநட்பு என்னும் அதிகாரங்களை வைத்தவாறு காண்க. இனி, இதற்கு - குடிப்பிறப்பாலும் குணத்தாலும் ஒழுக்கத்தாலும் மனத்தாலும் அறிவுடைமையாலும் பிறவாற்றாலும் தமது நெஞ்சுக்குப் பொருத்தாதவரைச் சினேகஞ்செய்ய லாகாதென்பதை யுணர்த்துவ தென்றும் பொருள்கொள்ளலாம்.

உ.கு. செறிப்பில் பழங்கூரை சேறாணை யாக
விறைத்துநீர் சேர்ந்துங் கிடப்பர்—கறைக்குன்றம்
பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட
தங்கருமம் முற்றுந் தகை.

(இ - ள்.) கறை குன்றம்-கறுப்பான மலைகளினின்று,பொங்கு அருவி தாழும் - மிகுந்த அருவிகளாகப் பெருகுகின்ற, புனல் வரை-நீரெல்லையையுடைய, நல் நாடநிறைந்த நாட்டையுடைய பாண்டியனே!—செறிப்பு இல் பழங் கூரை-கட்டுக்கோப்பில்லாத பழைய கூரைவீட்டிலே, (மழைக்காலத்தில்), சேறு அணை ஆக - சேற்றினால் அணை உண்டாக (க் செய்து), (நீர்) இறைத்தும் - (அதனுள்ளேயிழுத்த) நீரை (வெளியிலே) இறைத்தும், நீர் ஏற்றும் - (மேல்வியும்) நீரை (அகலமான விழலொட்டாமற் கையினாலும் பாத்திரங்களினாலும்) ஏற்றும், தம் கருமம் முற்றும் தகை - தங்கள் காரியம் முடியுமளவும், இடப்பர் - (சிலர் அதிலே) வாசஞ்செய்திருப்பர்;(எ-று.)

சிலர் தமது இயற்கை நற்குணத்தினாலல்லாமல் தங்கள் காரியம் நிறைவேறுதற்பொருட்டே அதுவரையில் மிகத்தாழ்ந்த நிலையில் இருப்பதாக வெளிக்குக்காட்டுவது உண்டு, அப்படிப்பட்டவர்கள்சினேகம் நம்பிக் கொள்ளத் தக்கதன்று என்பதாம்.

செறிப்பு-அமைதி; தொழிற்பெயர். கூரை - இழிவான மேற்புறத்தையுடைய சிற்றில். அணை-நீரைத்தடுக்குஞ் செய்கரை. வரை-மலையென்றலு, குன்றம்-அதன் சிகரமென்க.

இனி, இப்பாட்டிற்கு - பழுதுபட்ட கூரைவீட்டிலுள்ளவர் மழை பெய்கையில அதற்குப் பழுதுவராமற் பலகையாலுங் காத்துவிற்பதுபோலச் சினேகிதராதகாரியம் முடியுமளவும் அதனைப் பலவகையாலும் முயன்று காத்திடுபவரே நேசிக்கத்தக்கவர் என்றும், மழைவருமுன்னமே பழுதுபட்டவீட்டைச் செவ்வைசெய்துகொள்ளாமல் வந்தபொழுது வருந்துகின்றவர்போல வருமுன்காப்பவரல்லாமல் வருங்காலும் வந்தபின்புங் காப்பவர் நட்புப்படாதவ ரென்றும் கருத்தைக்கொள்வாருமுளர்.

நீர்இறைத்தும்-(கூவிக்காகப் பிதர்பயிருக்கு) தண்ணீரிறைத்தும், ஏற்றம்-யாசகஞ்செய்தும், சேறு அணை ஆக - சேற்றினால் தலைக்கு அணையமைத்தல்கொண்டு, கிடப்பர்-படுத்திருப்பர் என்றும் உரைகொள்ளலாம்.

உருஉ. சிரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றுய்
மாரிபோன் மாண்ட ப்யத்ததா—மாரி
வறந்தக்காற் போலுமே வாலருவி நாட
சிறந்தக்காற் சிரிலார் நட்பு.

(இ - ன்.) வால் அருவி நாட - வெண்மையான மலையருவிகளையுடைய, நாட்டையுடையவனே!—சிரியார் கேண்மை - சிறப்புடையாரது சினேகம், சிறந்த சிறப்பிற்று ஆம் - மிகுந்த சிறப்புள்ளதாய், மாரிபோல்-(பெய்யும்) மழைபோல,மாண்ட பயத்தது ஆம்-மாட்சிமைப்பட்ட பயனையுடையதாம்; சிரிலார்நட்பு-சிறந்த குணமில்லாதவரது சினேகம், சிறந்தக்கால் - மிகுந்தால், மாரி வறந்தக்கால்போலும் - மழை (பெய்யாமல்) வறந்து போனால் (அந்நிலைமை) போலப் பயனற்றதாம்; (எ - று.)

சிறப்பிற்று-ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர்; சிறப்பு பருநி, இன்-சாரியை, று - விகுநி. எ - தேற்றம். (உ)

உருஉ. நுண்ணுணர்வி னூரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்று—ணுண்ணூ
ணுணர்வில ராகிய பூதிய மில்லார்ப்
புணர்த்த னிரயத்து ளொன்று.

(இ - ன்.) நுண் உணர்வினுரொடு கூடி - நுட்பமான அறிவையுடைய வர்களுடனே சேர்ந்து, நுகர்வு உடைமை - (அவர்களிசேர்க்கையா லுண்டாகும் இன்பங்களை) அனுபவிக்குந் தன்மையுடையவராயிருத்தல், விண் உலகே ஒக்கும் விழைவிற்று - தேவலோகவினபத்தையே ஒத்திருக்கின்ற விரும்பப்படும் மேன்மையுடையது; நுண் நூல் உணர்வு இலர் ஆகிய-நுட்பமான சாஸ்திரங்களே அறியும் அறிவு இல்லாதவரான, ஊதியம் இல்லார்-பயனில்லாதவர்களே, புணர்த்தல்-சேர்தல், நரயத்துள் ஒன்று - நரகத்தின் பங்களுள் ஒன்றாகும்; (எ - று.)

விண்ணுலகு, நிரயம் என்பன - அவற்றில் அனுபவிக்கப்படும் இன்பதுன்பங்களுக்கு இடவாகுபெயர். நுண்ணுணர்வு - சூக்ஷ்மபுத்தி. நுகர்வு உடைமை என்பதற்கு - உணவுண்ணுதலேயுடையராதல் என உரைத்தல் நிறவாதாம். விழைவு - விரும்புதல்; இங்கே, தொழிலாகுபெயர். நிரயம் - வடசொல். அறிவுக்கு நுட்பம்-ஆழ்ந்த உட்கருத்தக்களையும் அறிதல்.தூலத்துக்கு நுட்பம்-அரிய விஷயங்கள் பலவற்றைக் கூறுதல். (ஊ)

உருஉ. பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போ
லொருபொழுதுஞ் செல்லாதே நக்து—மருகெல்லாஞ்
சந்தன நீள்சோலைச் சாரன் மலைநாட
பந்த மிலாளர் தொடர்பு.

(இ - ன்.) அருகு எல்லாம்-சமீபமான இடங்களிலெல்லாம், சந்தனம் நீள் சோலை-சந்தன மரங்களின் பெரிய சோலைகளையுடைய, சாரல்-பக்கல் களையுடைய, மலை-மலையையுடைய, நாட-காட்டரசனே!—பக்தம் இல்லாதவர் தொடர்பு-(மனத்தில் அன்பின்) கட்டில்லாதவராதல் நிநேகம், பெருகுவது போல தோன்றி-முதலில் வளர்வதுபோலக் காணப்பட்டு, வை தீ போல்-வைக்கோலிற்பற்றிய நெருப்புப்போல, ஒருபொழுதும்செல்லாதே நின்றும்-சிறிது பொழுதுகூட நிலைத்திராமல் அழியும்; (எ - று.)

வை-வைக்கோல். சாரல்-மலைப்பக்கம். இங்கே, மலை-மலய பருவதம்; பொதியமலை: அதிலே சந்தனமரங்கள் அதிகமென்று கவிகளெல்லாரும் வருணிப்பர். சந்தகம், பக்தம்-வடசொற்கள். வைத்து ஈற்போல்எனப்பதம் பிரித்தலில் உரை சிறவாமை காண்க. (ச)

உகூடு. செய்யாத செய்தகா மென்றலுஞ் செய்வதனைச்
செய்யாது தாழ்த்துக்கொண் டோட்டலு—மெய்யாக
வின்பு மூஉம் பெற்றி யிகழ்ந்தார்க்கு மக்நிலையே
துன்பு மூஉம் பெற்றி தரும்.

(இ - ன்.) செய்யாத காம்செய்தும்என்றலும்-தம்மாற் செய்யக்கூடாத காரியங்களே 'நாம் செய்வோம்' என்று சொல்லுதலும், செய்வதனை செய் யாது தாழ்த்துக்கொண்டு ஓட்டலும்-தம்மாற்செய்யக்கூடிய காரியத்தைச் செய்யாமல் தாமதித்துக்கொண்டு காலங்கழித்தலும், (இவ்விரண்டும்),—மெய் ஆகஇன்பு உறஉம் பெற்றி இழந்தார்க்கும்-உண்மையாக(ஐம்புலன் கள்ன்) இன்பங்களே அடையுந்தன்மையை இழந்த துறவறத்தார்க்கும், அந்நிலையே-அப்பொழுதே, துன்பு உறஉம் பெற்றிதரும்-துன்பங்களே மிக அடையுந் தன்மையைக் கொடுக்கும்; (எ - று.)

"செயக்கடவ வல்லனவுஞ் செய்தமன் னெண்பார், கயத்தகு நாகரிக மென்னுஞ்-செயிர்த்துரைப்பின், நெஞ்சுநோமென்று நேமிப்பான் றண் ணளிபோ, லெஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று," "சொல்வன்மையுண்டெ னிற்கொன்னேவிடித்தொழிதல்,கல்வினேகோறலின்வேறல்ல-வல்லேத்தம், ஆக்கங்கெடுவ தளதெளினு மஞ்சுபவோ, வாக்கின்பயன் வேர்ள்பவர்" என்றார் நீதிநெறிவிளக்கத்தும்.

செய்யக்கூடாதவை செய்வோமென்றுபிறர்க்குக்கூறுதல் தற்குழற்சி வகையால் டம்பத்தன்மையாகு மாதலாலும், ஆசைகாட்டிமோசஞ்செய்து நம்பிக்கைத்துரோகமாய் முடியுமாதலாலும்,பெருங்குற்றமாம்.செய்யக்கூடி யதைச் செய்யாமையை உபகாரமாகாததோடு அபகாரமாகக் கொள்வர் அறிவுடையோர் என அறிக.

செய்யாத-பெயர். செய்தும்-தன்மைப்பன்மை எதிர்காலமுற்று; தும் - லிகுதி. செய்வது - காதியோருமை.

இவ்விரண்டும் கூடாநட்புடையார் செயலென்பது கருத்தாதலின்,இப் பாட்டு இவ்வதிகாரத்தில் வைக்கப்பட்டது. (இ)

உருகூ. ஒருநீர்ப் பிறந்தொருங்கு ணீண்டக் கடைத்தும்
விரிநீர் குவளையை யாம்ப லொக்கல்லா
பெருநீரார் கேண்மை கொளினுஞ் நல்லார்
கருமங்கள் வே ரு படும்.

(இ - ன்.) ஒரு நீர் பிறந்து - ஒரு ஜலத்தில் தானே தோன்றி, ஒருங்கு ணீண்டக்கடைத்தும்-ஒருசேரவே வளர்ந்தவிடத்தும், விரி நீர் குவளையை - மலர்ந்து விளங்கி மணம் வீசுந்தன்மையுள்ள நீலோற்பலமலர்களே, ஆம்பல்-ஆம்பல் மலர்கள், ஒக்கல்லா-ஒத்திருக்கமாட்டா; (அதுபோலவே),—பெருநீரார் கேண்மை கொளினும் - சிறந்த குணமுடையோரது சினேகத்தைக் கொண்டாலும், நீர் அல்லார் கருமஙகள்-நற்குணமுடையவரல்லாதவரது தொழில்கள், வேறுபடும் - வேறுகிப்போம்: (எ - று.)

சிறந்த குவளையுடனே ஆம்பல் பிறந்துவாழ்ந்து பயின்றிருந்தும் அச் சிறப்பையடையாமல் தன் இயல்பிலேயே நிற்றல் போலக் குணவான்களுடனே குணமில்லாதவர் பலகாள்பழகியும் அவர் நற்குணத்தைத் தாம் பெருமல் தமது இயல்பான நீக்குணத்திலேயே இருப்பர் என்பதாம். எடுத்துக்காட்டுவமையணி.

முதலடியில், நீர்-ஜலம்: நீரமென்னும் வடமொழியின் திரிபு: மற்றை மூன்றிடத்தும், நீர்-குணம்: நீமையென்னும் பண்புப்பெயரின் விகாரம். ஒக்கல்லா - எதிர்மறைப் பலவின்பால் முற்று.

இனிய நீமையில்லாதவர் கூடாநட்பின ரென்க. "நிறை நீர நீரவர் கேண்மை" என்ற திருக்குறளில், 'நீரவரென்றார், அறிவுடையாரை) இனிமைபற்றி' என்ற பரிமேலழகர் விசேடவுரையை இங்கே அறிக. (கூ)

உருஎ. முற்றற் சினமஞ்சி முற்பட்ட தந்தையை
நெற்றுக்கண் டன்ன விரலான் வெரிஇத்திட்டுக்
குற்றிப் பறிக்கு மலைகாட வின்னதே
யொற்றுமை கொள்ளாதார் கட்பு

(இ - ன்.) முற்ற அல் நிற மஞ்சி-(பருவம்) முதிர்தலல்லாத [இளமையான] பெண்குரங்குகள், முன் பட்ட தந்தையை - தமக்கு எதிரே சேர்ந்த தமது தந்தையான பருவம்முற்றின பெரிய ஆண்குரங்குகளே, நெற்றுக்கண்டு அன்னவிரலால்-பயற்றுநெற்றைக் கண்டாற்போன்றதமதுகைவிரல்களால், ஞெரிச்திட்டு குற்றி-கெரித்துக்குத்தி, பறிக்கும் (அதன்கையிலுள்ள கனி முதலியவற்றைப்) பறித்துக்கொண்டுபோதற்கு இடமான, மலை - மலைகளையுடைய, காட காட்டையுடையவனே!—ஒற்றுமைகொள்ளாதார் சட்பு-தமது மனத்தோடு ஒன்றுபடாதவரது சினேகம், இன்னுது-இனிமையாய் இராது

மஞ்சி - குரங்கின் பெண்மைப்பெயர், "குரகு முசவு மூசமு மஞ்சி" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார். இளமையையும் பேதைமையையுமுடைய பெண் தரங்குகளுக்குத் தந்தையினிடம் விளையாட்டுச் சொல்லல்

பட்டது. தான் வருதற்குமுன்னமே வந்து அங்குள்ள குற்றியைப் பெயர்த்தெடுக்கமாட்டாமலிருக்கிற கிழக்குரங்கை வீரலால் அப்பால்தள்ளிவிட்டுத் தான் அக்குற்றியை எளிதிற் பெயர்த்தெடுக்கிற சிறுகுரங்கையுடைய மலையென்று உரைப்பாரு முளர்.

தந்தை-இருநிணப் பொதுப்பெயர். குற்றி-மரக்கட்டை. ஏற்றுமை - மனம் ஒன்றுபடுதல்; ஸாம்யம். மூற்றல் என்பதைத் தொழிற்பெயராகக் கொண்டு, தந்தைக்கு அடைமொழியாக்கினுமாம். (எ)

உரு. மூட்டுற்ற போழ்தின் முடிகியென் ஞருயிரை
நட்டா னெருவன்கை நீட்டேனே—னட்டான்
கடிமனை சுட்டழித்தான் செல்வழிச் செல்க
நெடுமொழி வையக நக.

(இ - ன்.) மூட்டு உற்ற போழ்தில்-(எனதுகண்பஞ்ஞருவனுக்குச்)தன் பம் சேர்ந்தபொழுது, முடுகி-விரைந்து, என் ஆர் உயிரை-எனது அருமையான உயிரை, நட்டான்ஒருவன் கைநீட்டேனேல்-(அத்தன்பத்தினின்றும் அவனைக்காக்கும்பொருட்டு) அச்சிகேதிதனெருவனதுவசத்திற்கொடாமற் போவேனாஞல், (யான்), நெடுமொழி வையம் நக-(மிகப் பலகாலமளவும்) அழியாமல் வழங்கும் புகழ்ப்பழிச்சொற்கூற்றையுடைய நிலவுலகத்தார்யாவரும் (என்னை) இகழ்ந்து சிரிக்கும்படி, நட்டான கடிமனை கட்டு அழித்தான் செல் வழி செல்க-தனது நிகேதனது காவலிலுள்ள மனையாளை உறுதியான கற்பை அழித்த பாவி செல்லும் நீக்கநிலம் செல்வேனாக; (எ - று.)

தனது உயிரைக் கொடுத்தாயினும் நண்பனுயிரைக் காக்கவேண்டியது கடமை, அங்ஙனஞ் செய்யாமற்போனல் அது பெரும்பாவமாம் என்றபடி.

இனி; நட்டான் கடிமனை என்பதற்கு நிகேதனற் கலியாணஞ்செய்யப்பட்ட மனைவியென்றும் உரைக்கலாம். மூட்டு மூட்டுதல்,தடைப்படுதல், இடையூறு; மூதனிலத்தொழிற்பெயர். நெடுமொழி வையம்-மிகப்பிரசித்திபெற்ற உலகம் என்றுமாம். ஆதாரமாகிய உலகம் அழியுமளவும், ஆதேயமாகிய புகழ்ச்சொல்லும் பழிச்சொல்லும் அழியாது நிலைநிற்றலால், 'நெடுமொழிவையம்' எனப்பட்டது. நகல்-பரிகாசம். எவர்க்கும் உயிரினும் மேம்பட்டது ஒன்று இன்றுதலின், 'ஆருயிர்' எனப்பட்டது. கடி - பலபொருள் குறிக்கும் உரிச்சொல்.

நட்புக்குணத்தை நன்றுகவுடையாஞெருவனதுபிரதிஜ்ஞைவார்த்தை மூலமாகச் சிறந்த நண்பரது இயல்பு கூறப்பட்டது. (அ)

உருக. ஆன்படு நெய்பெய் கலனு ளதுகளிந்து
வேம்படு நெய்பெய் தீனத்தரோ—தேம்படு
நல்லரை நாட நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி ஞரொடு நட்பு.

(இ - ள்.) தேன் படிதல் வரை நாட-தேன்கூடுகள் மிக்க சிறந்த மலை களையுடைய நாட்டையுடையவனே!—நயம் உணர்வார்கண்பு ஒரீஇ-சினேக குணத்தின் இயல்பை அறியுந்தன்மையுடையாரது சினேகத்தைவிட்டு, புல் அறிவினருடன் நட்பு-அற்பபுத்தியை யுடையவரோடு சினேகித்தல், ஆன் படு நெய் பெய் கலனுள் - பசுவின் சம்பந்தமாகவுண்டான நெய்யைப் பெய்து வைத்துள்ள பாத்திரத்தில், அது கலந்து - அந்த நெய்யை எடித்து விட்டு, வேம்பு அடு நெய் பெய்து அனைத்து-வேம்பின் சம்பந்தமாகப் பொருந்திய நெய்யைப் பெய்துவைத்தாற் போலும்; (எ - று.)—அரோ - ஈற்றசை; தேற்றமுமாம்.

தகர தென்றபடி. உவகமயணி.

வேம்படுநெய்-வேப்பநெய், வேப்பங்கொட்டையாலாகிய நெய்; வேப் பெண்ணெ யெனவழங்குவர். தேன்-அதன் கூண்டுக்குத் தான்யாதுபேயர். இனி, தேம் படி - இனிமைபொருந்திய என்றுங் கொள்ளலாம். ஆன்படி இனவேதுதை. (கூ)

உதா. உருவிற் கமைந்தான்க ணூராண்மை யின்மை
பருகற் கமைந்தபா னீரலா யற்றே
தெரிவுடையார் தீயினத்தா ராகுத லஞகம்
விரிபெடைபோ டாடிவிட் டற்று.

(இ - ள்.) உருவிற்கு அமைந்தான்கண் - பெருமைக்கு உரிய சில நற் குணங்களேயுடையானிடத்து, ஊர் ஆண்மை இன்மை-ஊரிலுள்ள பிறர்க்கு உபகாரஞ்செய்யுங் குணமில்லாமைபொருந்துதல், பருகற்கு அமைந்த பால் நீர் அளாய் அற்று-குடிப்பதற்கு ஏற்ற இன்சுவையுடைய பாலில் நீர் கலந் தாற்போலும்; தெரிவு உடையார்-அறிவுடையார், தீ இனத்தார் ஆகுதல் - கொடிய ரண்பரை யுடையராதல்.ராகம் விரிபெடையோடு ஆடிவிட்டு அற்று-கல்லாதிச் சர்ப்பம் பெட்டைவிரியன் பாம்புடன் புணர்ந்து நீங்கினாற் போலும்; (எ - று.)

பாலில் நீர்கலந்தாற் சுவைகெடுதல்போலக் குணமுடையாரிடம் பிறர்க்கு உதவாமை யிருந்தாற் குணங்கெடும்; ராகம் விரிபெடையோடு புணர்ந்தால் அழிதல்போல நல்லோர் துஷ்டசகவாசத்தாற் கெடுவர் என்ப தாம். ராகம் விரிபெடையோடு புணர்ந்தாற் சாகு மென்பர்.

இனி, உருவிற்கு அமைந்தான் எவ்வதற்கு-நேசிப்பதற்கு ஒருகாரண மான வடிவழகுக்கு ஓர் இடமாகப் பொருந்தினவன் என்று உரைப்பாரு மூளர். "பேடையும் பெடையு நாடி ஞெண்மம்" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தி 'ராடின்' என்ற யிகையால், ஊர்வனவான ராகத்திற்குப் பெடையென்னும் பெண்மைப்பெயர் கொள்ளப்பட்டது. (கூ)

மூன்றாவது

# இன்பவியல்.

மனிதர்மனத்திற்கு மகிழ்ச்சியுண்டாதலைப்பற்றிக் கூறும் பிரிவு என்ப தாம். இத்தன்மை இவ்வியலின் முதலதிகாரத்தால் உடன்பாடாகவும், மற் றை யிரண்டு அதிகாரங்களால் மறுதலையாகவும் கூறப்படுதல்காண்க. இன் பமாவது - மனத்திற்கு ஆனந்தமுண்டாதற்குக் காரணமாவது.

## உடு = ஆம் அதிகாரம்.—அறிவுடைமை.

அஃதாவது - கல்விகேள்விகளிஞலாகிய அறிவோடு உண்மையறிவை யும்உடையவனுதல். இன்னவர் கூடாரணம்பர் இன்னவர் கூடாரென்பர்என்று அறிதலும் அவர்களே முறையே கலவாமையும் கலத்தலும் அறிவுடையார்க் கல்லது கூடாமையின், இது அதன்பின் வைக்கப்பட்டது. அறிவு-காரியா காரியங்களைப் பகுத்தறிந்துகொள்ளும்வீவேகம்; இயற்கையறிவோடுகூடிய செயற்கை யறிவு: நூல்களிற்கூறியபடி இம்மைமறுமைவீடுகட்கு உரியவற் றை அறிவதோடு உலகநடையையும் அறிதல். இனி, எல்லாச் செல்வத்தி னுஞ் சிறந்த அறிவாகிய செல்வம் என்றும் உரைக்கலாம்.

உசாத. பகைவர் பணிவிட நோக்கித் தகவுடையார்
தாமேயு ராணித் தலைச்செல்லார் காணு
யிளம்பிறை யாயக்காற் றிங்களைச் சேரா
தணங்குருர் துப்பி னரா.

(இ - ள்.) பகைவர் பணிவு இடம் நோக்கி - பகைவர்கள் தாழ்த்திலே மையை யடைந்திருத்தலைப் பார்த்து, தகவு உடையார்-தகுந்த அறிவுடை யவர், தாமேயுர் ராணி - தம்மில்தாமே வெட்கமடைந்து, தலைச்செல்லார்- (அவரைவெல்லுதற்கு) அச்சமயத்திற்போகமாட்டார்கள்; காணுய்-(நீ) பார்; அணங்கு அரு துப்பின் அரா-வருந்துதலில்லாத வலிமையையுடையபாம்பு, திங்களை - சந்திரனை, இளம் பிறை ஆயக்கால் - இளையபிறைசந்திராஞகும் பொழுது, சேராது - (வருத்துதற்குப்) போகாது; (எ - து.)

நன்மைதீமைபார்க்குர் தன்மைய தல்லாத கொடியபாம்பும், சந்திரன் இளந்திருக்கும் பொழுதெல்லாம் அதனை அணுகாதுவிட்டு அது பூர்ண மாய் நிறைந்திருக்கும்பொழுதே அதனைப் பிடித்துப் பீடிக்கிறது; ஆதலால், பகைவரை இளந்திருக்குஞ்சமயம்பார்த்து வெல்லக்கருதாமல் அப்பொ ழுது அவர்பால் இரங்கிப்பின்பு அவர் தலையெடுத்தபொழுதே பொருது வெல்லக்கருதுதல் விவேக மென்பதாம். எடுத்துக்காட்டுவமையணி.

கிரகணகாலத்திற் சூரியமண்டலத்தை மறைக்கிற சந்திரனது சாயை யையும் சந்திரமண்டலத்தைமறைக்கிற பூமியின்சாயையையும்ராகுகேதுக்க ளென்னுங் கரும்பாம்பு செம்பாம்புஞனாகச் கூறுதல், கலிகளதிகொன்கை,

பாற்கடல் கடைந்து அமிருதமெடுத்து அதனைத் திருமால் தேவர்க ளுக்குத் தனியே இருத்தி அவர்களுக்குப் பகிர்ந்துகொடுத்து வரும்பொழுது ஓசுரன் இடையிலேவந்து கையைநீட்ட அவனை அருகிலிருந்த சூரியசந்திர ரது வார்த்தையினால் விஷ்ணு அசுரனென்று அறிந்து கினந்து தலேவேறு உடல்வேருகும்படிஇதைத்திட்டானென்றும், அப்பொழுதே அவன் இராகு கேது என்னும் இரண்டு தேவசரீரத்தைத் திருமாலின் கரஸ்பரிசத்தாற் பெற்றுப் பின்பு அவனருளால் பருவகாலங்களில் தனக்குப்பகைவரான சூரியசந்திரரைத் தான்வருத்தவும் அக்காலத்தைப் புண்ணியகாலமாகச் சனங்கள் கொண்டாடவும் வரம்பெற்றனென்றும் பெனராணிகர் கூறுவர்.

அணங்கு-முதனிலைத்தொழிற்பெயர். அணங்கு அரு திப்பின் என்ப தற்கு-(பிறர்) வருந்துதறகுக்காணமான எவராலுந் தடுக்கமுடியாத வலி மையையுடைய என்றும் பொருள்கொள்ளலாம். தகவு - தகுதியையுடைய அறிவுக்குத் தொழிலாகுபெயர். (உ)

உரை. நளிகடற் றண்சேர்ப்ப நல்கூர்ந்த மக்கட்
கணிகல மாவ தடக்கம்—பணிவில்சீர்
மாதந்திரை யின்மி ருடக்குமேல் வாழ்மூர்
கோத்திரங் கூறப் படும்.

(இ - ன்) நளி கடல் தண் சேர்ப்ப-பெரிய கடலின் குளிர்ந்த துறை மூகத்தையுடையவனே!—நல்கூர்ந்த மக்கட்கு-வறமையடைந்துள்ள மனி தர்க்கு, அணிகலம் ஆவது-அணிதற்குரிய ஆபரணமாவது, அடக்கம்-அட க்கியிருத்தலாம்; (ஒருவன்), பணிவு இல சீர்-அடக்குதலில்லாத தன்மை யுடனே, மாத்திரை இன்மி ருடக்கும் எல் - தன்வரம்புகடந்து நடப்பா னுல், வாழும் ஊர் - அவன்வாழ்ந்திருக்கும் ஊரி லுள்ளார் யாவராலும், கோத்திரம் கூறப்படும்-(அவனது) குலம் (இழிதகை) சொல்லப்படும்.

எப்படிப்பட்டவர்க்கும் அடக்கம் அவசியமாயினும் தரித்திரர் அடங்கி யிராமற் போனுல் அலரைப்பற்றி அவர்குலமும் இகழப்படு மென்பதாம். இதனுல் அடங்குதல் அறிவுடைமையென்றவாறு; இதுபற்றியே, இப்பாட்டு இவ்வதிகாரத்து நிறுத்தப்பட்டது.

நளிகடல் - உரிச்சொற்றொடராதலின், இயல்பு. கிழ்கடல் மேல்கடல் என்னும் இரண்டெல்லையளவும் உள்ள காடு என்பார், 'நளிகடற்றண்சேர் ப்ப' என்ரு ரென்க; பிறநூல்களிலும், இவனது காட்டிலேயே சூரியனுதிப் பதும் அஸ்தமிப்பதும் எனக் கூறியவாறு காண்க. பலபண்டங்களும் எற்று தல் இறக்குத லாவதற்கு ஏற்ற துறைமுகத்தை யுடைத்தாயிருப்பது காட் டுக்குப் பெருஞ் சிறப்பாதலுங் காண்க. கோத்தம்-வடசொல். (உ)

உரை. எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னுட் டவருஞ் சுவர்க்கம் புகுதலாற்
றன்னுற்ரு னுமமை வடதிசையுங்
தொன்னூளர் சாலப் பலர்.

பால்] உரு - ஆம் அதிகாரம்.—அறிவுடைமை. ஙஙங

நீது எனினும் - சேர்ந்தகூட்டம் குணங்கொடியதாயிருந்தாலும், இயல்பு உடையார் கேண்மை-இயற்கைஅல்லறிவுடையாராது நட்பு; மனம் நீது ஆம் பக்கம் அரிது-மனம் கொடியதாகுந் தன்மை இல்லை; (எ - று.)

இயற்கையில் இன்சுவையமிக்குள்ள பழமாயின் சேர்க்கையாற் சுவை கெடுதல் இல்லைபோல, இயற்கையில் நல்லறிவு மிக்குள்ள மனிதராயின் சேர்க்கையாற் குணங்கெடுதலில்லை யென்பதாம்.

ஆங்கு-உவமவுருபு; இது உபமான உபமேயங்களுக்கு இடையே வந்து லிட்டதனால், இப்பாட்டு எடுத்துக்காட்டுவமையணியாகாது; உவமையணி யேயாம்.

வாழை-அதன் பழத்துக்கு முதலாகுபெயர். 'நீச்சுவை' என வலிமிக்கு வருமிடத்து, நீமை சுவை யெனப் பிரித்து, கடுஞ்சுவையென்று பொருள் உரைக்கவேண்டும். நீம் என்பதனடியாகப் பிறந்தபெயரெச்சம் நீயிய என்னும், நீமை யென்பத னடியாகப் பிறந்தது நீய எனவும் நிற்கும் வேறுபாட் டையுங் காண்க. வாழை தன் சுவை திரியாது-தொடர்ந்தபொருள் அதன் பயனிலையையே கொண்ட முடிபு. (ஈ)

உசாவு. கடல்சார்ந்து மின்னீர் பிறக்கு மலைசார்ந்து
முப்பீண் டுவரி பிறத்தலாற் றத்த
மனத்தனைய ரல்ல ரெறிகடற்றண் சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார்.

(இ - ன்.) எறி கடல் தண் சேர்ப்ப - அலைகின்ற கடலினது குளிர்ந்த துறையை யுடையவனே!—கடல் சார்ந்தும் இன் நீர் பிறக்கும்-(உப்புச் சுவையுடைய) கடலே அடுத்தும் இன்சுவையுடைய நீர் உண்டாகும்; மலை சார்ந்தும் உப்பு ஈண்டி உவரி பிறத்தலால் - (இனிய அருவிநீரையுடைய) மலையை அடுத்தும் உப்புநிறைந்த உவர்நீர் உண்டாகும் ஆதலால்,—மக்கள் என்பார்-மனிதரெனப்படுபவர், தம்தம் இனத்து அனையர் அல்லர்-(குணஞ் செயல்களில்) தங்தன் தங்கள் இனத்தாரையொத்தவரல்லர்; மனத்து அனை யர்-தம்தம் மனத்தின் அறிவை யொத்தவர் (எ - று.)

தமது இயற்கை நற்குணஞ் சேர்க்கையால் மாறுபடாதவரே மனித ரென்று நிறப்பித்துக் கூறப்படுவதற்கு ஏற்றவ ரென்பதாம்.

'மக்களென்பார்' என்பது, "இல்வாழ்வானென் பான்," "ஊரெனப்படு வது உறையூர்" என்பனபோலச் சிறப்புத்தோன்ற நின்றது. என்பார்எனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது. அதிகாரத்துக்கு ஏற்ப, மனம் அறிவாயிற்று. மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் நான்கு அந்தக்கரணங்களுள் ஒன்றன்பெயர் மற்றொன்றிற்கு நூல்களில் மாறி வருவது உண்டு. 'சார்ந்தும்' என்ற உம்மை-முன்னர் இழிவுசிறப்பும், பின்னர் உயர்வு சிறப்புமாம். என்பார்என்பதை முதல்வேற்றுமைச் சொல்லுரு பாகவுங் கொள்ளலாம்.

இது, நீருஷ்டாந்தாலங்காரம்; ஏதுவணி எனினும் அமையும். (இ)

உசசு. பரா அரைப் புன்னே படுகடற்றண் சேர்ப்ப
வொரா அலு மொட்டலுஞ் செய்பவோ நல்ல
மருஉச்செய்தி யார்மாட்டுங் தங்கு மனத்தார்
வீரா அ அய்ச்செய்யாமை நன் பா.

(இ - ள்.) பரு அரை - பருத்தஅரையையுடைய, புன்னை-புன்னைமரங் கள், படு-பொருந்தின, கடல்தண் சேர்ப்ப-குளிர்ந்தகடற்றுறையையுடைய பாண்டியனே!—தங்கும் மனத்தார் - உறுதியாய் ஒருநிலையில்நிற்கின்ற மனமுடையவர்கள், நல்ல மருஉ செய்தியார்மாட்டும்-நற்குணங்கள் பொருந்தின செய்கையை யுடையவராகளிடத்தும், ஓராலும் ஒட்டலும்-கூடி நீங்கு தலேயும் மறபடி சேர்தலேயும், செய்பவோ - செய்வார்களோ? [செய்யா என்றபடி]; (இங்ஙனஞ் செய்தலினும்), வீராய் செய்யாமை - (எவரோடுங் கலந்து) தினைகஞ்செய்யாதிருத்தல், நன்று-நல்ல விவேகமாம்; (எ - று.)

அயோக்கியரிடத்தங் கூடிப்பிரிதல் காரியமன்று; ஆனபொழுது, யோக்கியரிடங் கூடிப்பிரிதலும் மறபடி கூடுதலும் மனம் ஒருவழிப்பட்ட வரது செயலாகா: அதனினும் அவர்களோச சோரமலிருப்பதே மிக நல்ல தாம் என்றபடி.

கூடிப்பிரிதலினும் கூடாமை நல்ல தென்றது, கூடிய நல்லோரைப் பிரிந்தகுற்றமும் தன்பமும் கூடாதவர்க்கு இல்லையாதலின். செய்தி யார் மாட்டும் எனப்பிரித்து, செய்கையையுடைய யாவரிடத்தும் என உரைத்த லும் ஒன்று. தங்குமனத்தார் வீராய்ச செய்யாமை நன்று என இயைத்து, நிலேபெற்ற ஒருபெற்றியேயின்ற மனத்தினேயுடையார் கூடினலேயும்பிரிதலே யும் கலந்துசெய்யாமை நல்லதென்று உரைப்பாரு முளர்; ஒன்று, கூடியே யாவது இருக்கவேண்டும்; அல்லது, பிரிந்தேயாவது இருத்தல்வேண்டும் என்பதாம். ''கூடிப்பிரியேல்'' என்ற ஔவையார் நீதிவாக்கியத்தில், எதிர் மறைவகையால் 'பிரிந்துகூடேல்' என்னும் பொருளும் ஒருவாறு தோன்று மாறு காண்க.

பரு + அரை = பராரை; (ஒப்பணை) தோகைமருஉழுடி. புன்னை செய்தளிலத்துப் பொருள்களுளொன்று. புன்னேப்பசி எனபதற்கு-புன்னை மரத்தாற் நிறந்த என்றும் உரைப்பர். மருஉ-மருவு என்பது விகாரப்பட்ட அளபெடை. இனி, நல்லகுணகன கெட்டசெ திதைந்து மருவிவழங்கிய செய்கையாரிடத்தும் சலியாத மனமுடையோர் கூடிப்பிரிதலும் மீண்டு கூடுதலுஞ் செய்வார்களோ என்றும உரைக்கலாம்: இவ்வுரைக்கு, உம் - இழிவுசிறப்பு; இடையிற்கூறிய உரைக்கு, முற்றும்பொருளது. அரை-மரங் களிற் இனேபிரியுமனவும் அடியிலுள்ள கட்டை.

எல்லாவடியிலும் எதகையில் அளபெடைவந்தது ஓர் அழகாம்; அன புத்தோடை: அளபெடைவண்ணம். மூன்றுமடியில் அளபெடை செய்யு ளில்கணத்துக்கு இன்றியமையாத தன்றுதலின்; இயற்கையளபெடை யென்றுவது, இன்னிசையளபெடை யென்றுவது கொள்ளவேண்டும்.

மேற்ப் பெரியாரைப் பிழையாமையென்னும் அதிகாரத்தில் ''தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும், பிரியப் பெரும்படர்கோய் செய்யும் •

**பெரிய, அலவா வீருங்கழிச்சேர்ப்ப யார்மாட்டுங், கலவாமை கோடியுமும்" என்றபாட்டிலும் இக்கருத்துக் காண்க.**

**செய்து யார்மாட்டும் எனப் பிரித்து, குற்றியலிகரமாகக் கொண்டு, கல்லாகாரியங்களைப் பொருந்திச்செய்து யாவரிடத்தும் அன்புகொள்ளும் மனத்தை யுடையாரென்றும் உரையிடலாம்; இவ்வுரைக்கு, குற்றியலிகரம் அலகு பெறவில்லையென்க. மூன்றுரையில், மூன்றுமடியில் அளபெடைக்கு அலகில்லை. (சு)**

**உசாவு உணரு முணருமா வண்பம்—புணரின்**
**றெரியுந் தெரியுந் தெரிவிலா - தாரைப்**
**பிரியப் பிரியுமா நோய்.**

**(இ - ள்.)உணர உணரும் உணரு முடையாரை-(கண்ணழிமைகோள்) பகுத்தறிய வல்ல வீவேகமுடையவராகிலும், புணர-சேர்தலால், இன்பம் புணரும்-பலவித இன்பமும் உண்டாகும்; தெரிய தெரியும் தெரிவு இலாதாரை-(கண்மைநீமைகோள்) பகுத்தறிய வல்ல வீவேகமில்லாதவர்களோ, புணரின்-(தெரியாமற்) சேர்த்துவிட்டால், பிரிய - (அவரைவிட்டு) நீங்குமாற்றினால்-(தெரியாதவர்களுக்கு) பலதுன்பங்களைத் நோகும்.**

**'ஆம்' இரண்டிம்-அசை. இதனில், மா நோய் எனப்பிரித்து, மிகுந்த துன்பமென்று கொண்டாலாம். உணரும், தெரியும் என்பவற்றிற்கு - கும்முடைய சினைகேகுணகங்களே யென்னும் செயப்படுபொருளும் வருவிக்கலாம்.**

**உணர, தெரிய என்பவற்றைப் பிரவினைப்பொருளில்வந்த தன்வினை யெனகொண்டு, பிறர் உணர்த்த, பிறர் தெரிவிக்க எனப் பொருள்கொள் வாருமுளர். புணரின் - கூடுமாயின் என்றுமாம்.**

**இக்குறளில் ஒவ்வொருபாட்டும் ஒவ்வொரு சமணமுனிவரது கருத்தாதலின், கீழ்க் கூடப்பிரியலாகாதெனப் பலவிடத்துவர்த்தனரேனும் இது மாறு கொளக் கூறலாகாது; பிறவும் இவ்வனம் வருமிட களுக்கெல்லாம் இது கொள்க: அதிகாரிபேதத்தால் ஒற்றுமைப்படுத்தி அமைத்தலும் ஒன்று.**

**அடிதோறும் வந்தசொல்லும் பொருளும் மீண்டும் வந்தது சொற் பொருட் பின்வருநிலையணி.**

**அறிவுடையாரைக் கூடுதலும் அறிவில்லாதாரைப் பிரிதலும் அறிவு டைமை யென்பதாம். (எ)**

**உசாவு. கண்ணில்லைக்கட் டன்னே நிறுப்பானுந் தன்னே**
**நில்லாவுலகில் நிழிடு வானும்—நல்லியலு**
**மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்**
**நல்லோகச் செய்வானுந் தான்.**

**(இ - ள்.) கல் நிலைக்கண் தன்னை நிறுப்பானும் - கல்லதிலையிலேயே தன்னை வைப்பவனும், தன்னை நில்லா வுலகில் கீழ் இடுவானும் - (தான்நின்ற கல்லதிலையினின்று)உலகுசசெய்துதன்னைக் கீழ்ப்பட்டதிலையிற்சேர்கிறவ**

னும், நிலையினும் மேல் மேல் உயர்த்து நிறப்பானும் - (தான்நின்ற) நிலையினும் மேலே மேலே உயர்த்தநிலையில் தன்னே எறிந்திசசெய்பவனும், தன்னேதலே ஆக செய்வானும்-தன்னே(ப் பிறர்பலரினும்) முக்கியமாகச் செய்பவனும், (எல்லாம்), தான் - தானேயாவன்; (எ - று.)

என்றது, ஒருவனுடைய உயர்வுதாழ்வுகளுக்கு அவனுடைய அறிவும் அறிவில்லாமையுமே காரண மென்பதாம்.

நிலையினும், உம்மை-உயர்வுசிறப்பு: அசைநிலையுமாம். மற்றை உம்மைகள் நான்கும்-எண்ணுப்பொருளன. நிறுப்பான்முதலிய நான்கும்-எழுவாய், தான் - பயனிலை. (அ)

உசுரு. கருமவரிலையாற் கல்லாதார் பின்னும்
பெருமை யுடையாருஞ் சேற—லருமரபி
னேதை மறற்று மொலிகடற் றண்சேர்ப்ப
பேதைமை யன்ற தறிவு.

(இ - ள்.) அருமரபின் - (பிற நாகிகளிற்) பெறுதற்கு அருமையான (சிறப்புத்) தன்மையையுடைய, ஓதம் அரற்றும் ஒலிகடல்தண்சேர்ப்ப-அலைகள் மிகவொலிக்கின்ற கடலினது குளிர்ந்த துறைமுகத்தையுடைய அரசனே!—கருமம் வரிசையால்-காரியத்தின் முறைமையால், கல்லாதார்பின்னும் பெருமை உடையாரும் சேரல்-படியாதமூடர்களது பின்பும்பெருமையுடைய புத்திமான்கூடஞ் செல்லுதல், பேதைமை அன்று-அவிவேகமன்று; அது அறிவு - அது விவேகமேயாகும்; (எ - று.)

காரியசித்தம் கல்லாதவரை அநுசரிப்பதும் அறிவுடைமை யென்பதாம். பேதைமையன்று என்றதன்பின் அது அறிவு என்றது, உறழ்ச்சிபடத்தவந்த அநுவாதம்.

கல்லாதார்பின்னும், உம்-இழிவுசிறப்பு. பெருமையுடையாரும், உம் - உயர்வுசிறப்பு. சேரல் என்னுந்தொழிற்பெயரில், செல்-பகுதி.அருமரபின் என்பது, கூடற்சேர்ப்புக்கு அடைமொழி. ஓதத்திற்கு அடைமொழியாக்கொண்டால், அதற்கு அருமை-மற்றெருண்டுக்கு இல்லாதபடி என்றும் ஒருவிதமாய் ஓங்கியெழுந்து மடியுந்தன்மை யென்க. இனி, கருமவரிசையால் என்பதற்கு முற்பிறப்பிற்செய்த வேதவிதியின் வகையால் எ றும் உரைக்கலாம்; கல்லாதாரைத்தழுவுதல் பாபமா மென்றபடி. பேதைமைஅது அறிவுஅன்று எனப்பிரித்துக்கூட்டி, கல்லாதவர்பின்செல்லுதல்அறியாமையாம்: அது அறிவுடைமையன்று எனத் தினைத்திரைக்கவும் இடமுண்டு.

உடுo. கருமமு முள்படாப் போகமுந் துல்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—வொருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே லஃ தென்ப
பட்டினம் பெற்ற கலம்,

(இ - ள்.) கருமமும் உள்படா-(அறம்பொருள்களுக்குக் காரணமான) தொழில்களேயும் உடன்பட்செய்து, போகமும் துவ்வா-(அவற்றால் உள்ளனவாகும்) இவ்வுலகவின்பங்களேயும் அனுபவித்து, தருமமும்தக்கார்க்கே செய்யா-(தானம்முதலிய) அறத்தொழில்களேயும் (அறிவொழுக்கங்களால்) தருதியுடையவர்களுக்கேசெய்து, மூன்றும் ஒருநிலையே முட்டு இன்றி முடியும் எல்-இம்மூன்றுகாரியங்களும் (இங்ஙனம்) ஒருபிறப்பிலேயே(ஒருவனுக்குத் தடையில்லாமல் நிறைவேறுமாயின், அஃது - அற்நிலமை, பட்டினம் பெற்ற கலம் (பிறநாடுகள் பலவற்றிற்சென்று வியாபாரஞ்செய்துஇலாபம் பெற்ற மீண்டு தனது) பட்டினத்தையடைந்த மரக்கலத்தை யொக்கும், என்ப - என்றுசொல்வர், (அறிவுடையோர்); (எ - று.)

கருமமும்,போகமும், தருமமும் என்றவற்றிலுள்ள உம்மைகள்-எதிரது இறந்தது தழுவியஎச்சப்பொருளன; எண்ணும்மையாகக்கொள்ளக்கூடாது; வெவ்வேறு வினைமுடிக்குஞ்சொல் வந்ததனால் உள்படா, துவ்வா, செய்யா என்னும் மூன்றும்-உடன்பாட்டு இறந்தகால வினையெச்சங்கள். பட்டினம்-செய்தல்லிலத்தலைர், துறைமுகநகரம். போகம் - வடசொல், 'பட்டினம் பெற்ற கலம்' என்ற உபமானத்தால், அப்பிறப்புப் பயன்பெற்ற பிறப் பென்பதாம்.

இம்மூன்று தொழில்களேயுஞ் செய்வது அறிவுடைமை யென்பது கருத்து. இம்மூன்றும் இல்லறத்தார்க்கே உரிய தொழிலாம்.

இங்கே ஆஃது என்பதில் ஆய்தம் மெய்போல ஒலித்தது; உயிர்போல ஒலியாமையை அலகிட்டுக் காண்க.

இப்பாட்டின் முற்பாதி, தீநுந்தரளுமையிற் பரிமேலழகரால் "கற்ற பின், நிற்க வதற்குத்தக" என்றவிடத்து எடுத்தாளப்பட்டுள்ளது. (சு)

---

## உக - ஆம் அதிகாரம்.—அறிவின்மை.

அஃதாவது-கல்விகேள்விகளினுலாகியஅறிவு இல்லாமையோடு உண்மையறிவும் இல்லாதவனுதல். அறிவு - காரியாகாரியங்களேப் பகுத்தறிந்து கொள்ளும் வீவேகம்; இயற்கையறிவோடு கூடிய செயற்கையறிவு; நூல்களிற் கூறியபடி இம்மை மறுமைகட்கு உரியவற்றை அறிவதோடு உலக நடையையும் அறிதல்.

நெற்ற ஐங்குரவர்முதலாயினர் அறிவுறுத்தினகாரியங்களேஉட்கொள்ளாமல்ஒழித்தலிலிதலும்,நூல்களிற் கூறியவற்றைஐயந்திரிபுகளால் அறிதலும்,நூற்கொள்கைமுறைமையையும்உலகவியற்கைமுறைமையையும்இகழ்ந்துலகத்தின்மனத்திற்கு ஏற்றபடிநடந்துஎல்லாராலும் இகழப்படுதலும்,மறுமைக்கு உறுதியல்லாதவற்றைச் செய்தலும் இப்படிப்பட்டவை அறிவின்மையின்பாற்படும். அறிவுடைமைசிறப்பு.முன்னதிகாரத்தில்உடன்பாட்டுமுகத்தாற் கூறியஅனவிஞல் முற்றப்பெறுமைநோக்கிஎதிர்மறைமுகத்தாலும் கூறப்படுகின்றதாதலால், அறிவின்மையென்னும் இவ்வதிகாரம், அறிவுடைமையின்பின் வைக்கப்பட்டது; திருக்குறளில் கல்வியின்பின் கல்

லாமையைக்கப்பட்டதுபோல. செல்வத்தைச் சம்பாதித்தற்கும், சம்பாதி தபொருளைக் காத்தற்கும், அங்ஙனம் காக்கப்பட்ட பொருளைல்வழியிற் செலவுசெய்து தானும் அனுபவித்தற்கும் அறிவு கருவியாதலால்,ஞ்ச்தஅறி வுடைமை அறிவின்மை அதிகாரங்கள் பொருட்பாலின்பாற் படுவனவாயின வென அறிக.

உரை. தண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வ—மெண்ணுங்காற்
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம்.

(இ - ள்.) (உலகத்தில் ஒருவர்க்கு), நுண் உணர்வு இன்மை - நுட்ப மான அறிவு இல்லாமை,—வறுமை-தரித்திரத்தன்மையாம்; அஃது உடை மை-அத்நுண்ணறிவை உடைத்தாயிருத்தல்,—பண்ண பணைத்த-மிகவளர் ந்த, பெரு செல்வம் - பெரிய சம்பத்தாம்; எண்ணும்காலை - ஆலோசித்துப் பார்க்குமிடத்து,—பெண் அவாய்-பெண்தன்மை மிகுந்து, ஆண் இழந்த - ஆண்தன்மை குறையப்பெற்ற, பேடி-பேடியானவள்,—கண் அவா தக்க - (யாவர்) கண்களும் (காணுதற்கு) விரும்பத்தக்க [மிகஅழகிய], கலம்-ஆப ணங்களே, அணியாளோ-தரிக்கமாட்டாளோ? [தரிப்பள்]; (எ - று.)

மனிதர்க்குச் சிறந்தசெல்வமாவது-அறிவுடைமையே; அச்செல்வமில் லாமையாவது - அறிவின்மையே: மற்றை உலகத்துப் பொன் பணி செல் முதலிய பொருள்களெல்லாம் செல்வமென்று சிறப்பாகக் கொள்ளதகாத வையல்ல அறிவில்லாதவர்கு எவ்வளவு செல்வ மிருந்தாலும் அறிவுடை யார்க்குப்போலப் பெருமையும் பயனும் உண்டாகா: அது எதுபோல வெ னின்,—பெண்தன்மை யமைந்திராத பேடிக்கு எவ்வளவு ஆபரணங்க ளணி ந்தாலும் இயற்கைமகளிர்க்குப்போல அழகின்சிறப்பும் இன்பப்பயனும் உண்டாகாதவாறு போல வென்க.

பின்னிரண்டடிகளால் ஏற்பமெய்கருத்து-எடுத்துக்காட்டுவமை. மூன் னிரண்டடிகளின் கருத்தாக அமைந்த, 'அறிவிலார் செலவமைந்தாலும் சிறப்புடையராகார்' என்பது - இதன் உபமேயம்.

பெண்தன்மை குறைந்து ஆண்தன்மை மிகுந்தபுருஷசம்-அலியெனப் படுமென்றும், ஆண்தன்மைகுறைந்து பெண்தன்மைமிகுந்த நபுசகம் - பேடியெனப்படுமென்றும், பேடுஎன்பது-இவ்விரு வகைக்கும் பொதுப்பெய ரென்றும் அறிக. மிகுதியாய் ஆபரணங்களோந்தரித்தல் மகளிர்க்கே இயல் பாதலால், இங்கே, பெண்தன்மைமிகுந்து ஆண்தன்மைகுறைந்தபேடி கொ ள்ளப்பட்டது. பேடி ஆபரணங்களணிந்தால், சீவகசிந்தாமணியில் விஜயபு யென்னும் பேடியை "ஒண்பொனுருகொடியே" என்றதனாலும் அறிக. "பெண்மைவிட்டாணவாவுவ பேடாண்பால், ஆண்மைவிட்டல்ல தவாவுவ பெண்பால், இருமையு மஃறிணையன்னவுமாகும்" என்ற இலக்கணம்பற்றி, இங்கே, பெண்ணவாய் ஆணிழந்த பேடியை 'அணியாள்'என உயர்திணைப் பெண்பாலாற் கூறியது; "மைந்தனிப்பொழுதே யென்று வருவுவன்பொற் றேரூர்ந்தா, ரார்தமெய்ப்பேடியாகி லென்தன னாந்தனான்" என ஜீவ்ஜி

புத்நாஃரிபாரதத்நிலும், "ஏயெயிவளொருத்தி பேடியோவென்ஞர்" எனச் சித்நாமணியிலும் பேடியைப் பெண்பாலாற் கூறியது காண்க.

இனி, பெண் அவாய் என்பதற்கு - பெண்தன்மையை விரும்பி என உரைத்தால், அது ஆணிழந்த என்பதனேடுமுடியாது; எனினில்,—ஆண் தன்மை யிழத்தற்குக்காரணம் பெண்தன்மையை விரும்புதலல்லாமல் ஊழ்வினைப்பயனன இயற்கையா மாதலால். இனி, பெண் அவாய் என்பதற்கு - பெண்தன்மையை விரும்பியென்று உரைத்து, அணியாளோ என்பதனேடு இயைத்து, ஆணிழந்த பேடி பெண்தன்மையையடையாவிக் கண்ணவாத்தக்க கலம் அணியாளோ? என மொழிமாற்றிப் பொருள்கொள்ளுதலும் ஒன்று.

பெண் ஆண் என்பன-பெண்தன்மைக்கும், ஆண்தன்மைக்கும் பொருளாகுபெயர். பெள் ஆள் என்னும் வினைப்பகுதிகள் - ஈறுதிரிந்து பெண் ஆண் என நின்று, பலராலும் விரும்பப்படுதல்பற்றி மகளிர்க்கும், அம்மகளிரை ஆளுதல் பற்றி ஆடவர்க்கும் பெயராகு மென்பர். பெண்மை ஆண்மைகளுள் யாதாயினு மொன்று பேடியிடத்து முற்பிறப்பிற்செய்தநதிலினையால் நிறைவுற்றிராமையாகிற இரக்கப்பாடு தோன்ற, 'பெண்ணவா யாணிழந்த' என்ஞர்.

அவாத்தக்க - அவாவத்தக்க; "சாவவென்மொழி மீற்றுயிர்மெய் சாதலும்மிலி" என்றதன் உபலக்ஷணத்தால், செயவெனெச்சத்து ஈற்றுயிர்மெய் கெட்டது; 'செய்தக்க' 'நோதக்க' என இவ்வாய்பாடுகொண்ட பிறவற்றையும் இங்ஙனமே கொள்க; இனி, அவாத்தக்க - அவாவதற்குத்தக்க எனவிரித்து, மூதனிலைத் தொழிற்பெயரின்மேல் வந்த நான்காம்வேற்றுமைத்தொகை யெனினும் இழுக்காது. கலம் - அணிகலம். நுண்ணுணர்வு - சூட்சமபுத்தி. வறுமைக்குக் காரணமான நுண்ணுணர்வின்மை காரியமான வறுமையாகவும்செல்வத்துக்குக்காரணமான நுண்ணுணர்வுடைமை காரியமான செல்வமாகவும் உபசாரவழக்குப்பற்றிக் கூறப்பட்டன. 'கன்னக்கூத்த, சின்னஞ்சிறிய, பொன்னம்பெரிய' என்பவைபோல, 'பண்ணப்பணத்த' என்பதை வளர்தற்பொருள் பற்றிவந்த பகுதியென்பதன் ஒருவகை யதிகுசிதை வெனக் கொள்க.

"அறிவுடையீ ரெல்லாமுடையா ரறிவிலார், என்னுடையரேனுமிலர்" என்ற திருக்குறளோடு இப்பாட்டின் முதலிரண்டடிகளோ ஒப்பிடுக. 'செல்வங்களெல்லாம் அறிவாரி படைக்கவும் காக்கவும் பகுத்தலின் அரிதுடையாரை 'எல்லாமுடையர்' என்றும், அவையெல்லாம் முன்னேஅமைய இடப்பிறும் அழியாமதகாததற்கும் தெய்வத்தான் அழிந்துழிப்பட்டதற்குங் கருவியுடையரன்மையின் ஆற்றில்லாதாரை 'எனனுடைய ரேனுமிலர்' என்றுங் கூறினர்' என அங்குப் பரிமேலழகர் உரைத்தது, இங்குஞ்சற்றும் ஒக்கும். தாயத்தார் கள்வர் வலியார் அரசர் என்றிவராற் கொள்ளப்படாதனவும் வழிபட்டார்க்குக் கொடுத்தலிடத்துக் குறையாமையுமாகிய சிறப்புப்பற்றி, அறிவுடைமையை 'பண்ணப்பணத்த பெருஞ்செல்வம்' எனப் பல அடைமொழிகள் கொடுத்துக் கூறினர்; திருவள்ளுவர் "கேடில் விழுச்செல்வங், கல்வி பொருவற்கு, மாடல்ல மற்றையவை" என்ற்போல; இப்படிப்பட்ட சிறப்பு பொருட்செல்வத்துக்கு இல்லாமை காண்க.

அஃதடைமை-இங்கே ஆய்தம் உயிர்போல் ஒலித்தது; மெய்போல் ஒலித்ததாகக் கொண்டால் வறுமையென்ற முன்னிரோடு வெண்டளை தவறுதலே அலகிட்டுக்காண்க. (க)

உடுஉ. பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
தில்ல துழப்ப தறிதிரோற்—றெல்சிறப்பி
னுளின் பிழுத்தி யுறைதலாற் சேராளே
பூவின் பிழுத்தி பிலம்.

(இ - ள்.) பல்-பலவகைப்பட்ட, ஆன்ற-நிறைந்த, கேள்வி-நூற்கேள்வியாளால், பயன் உணர்வார்-(உயிர்வாழ்க்கையின்) பிரயோசனங்களே அறியும் அறிவுடையவர்கள், (செல்வ மின்மையால்) பாடு அழுந்து-தம்பெருமை கெட்டு, அல்லல் உழப்பது - துன்பப்படுதல் வருந்துவதன் காரணத்தை, அறிதிர் எல்-ஆராய்ந்தறியு விரும்புவீராயின், (சொல்லுவேன்; அது என்னவெனில்:—) தொல் சிறப்பின்-பழமையான சிறப்பையுடைய, காவின் பிழுத்தி-சரசுவதிதேவி, உறைதலால்-(அவர்களிடம் கூடி) சென்றதால், பூவின் பிழுத்தி-ஸ்ரீமகாலட்சுமி, புலர்ந்த-கோபங்கொண்டு, சேராளே - (அவர்களிடம் சேரமாட்டாளே. (என இதுவேயாம்); (எ - று.)

உலகத்தில் ஒருவனிடம் ஒருபெண்கூடியிருக்கையில் மற்றொருபெண் வந்து கூடாமற் பிணங்கிப்போவதுஇயல்பாதலால் அம்மகளிரிபர்கைப்படி கல்விமகள் சேர்ந்த விடத்தைச் செல்வமகள் சேராது பிணங்குவன் எனக் கற்பனை முகத்தால் வருணித்துக் கூறியபடி.

உலகத்திற் பெரும்பாலும் படித்தவர் செல்வமில்லாமையிருத்தலும் படியாதவர் செல்வமுடையராயிருத்தலுமாகிய மாறுபாட்டிற்கு உண்மையிற் காரணம், "இருவேறுலகத் தியற்கை திருவேறு, தெள்ளியராதலுமலேறு" என்றபடி அவரவர் முற்பிறப்பிற்செய்த ஊழ்வினையேயாம்: இப்படியிருக்க, இவ்வணம் காரணமல்லாத ஒன்றைக் கவிசாதிரியத்தார் காரணமாகக் கூறி நிறுத்தினது, எதுத்தநிறுப்பேற்றுவண்; இதனை வடநூலார் ஹேதூத்ப்ரேக்ஷாலங்காரமென்பர்.

இவ்விருமகளிரும் ஒருவனிடம் சேர்ந்திருத்தல் அரியதொரு சிறப்பாதலே "காவீற்றிருந்த புலமாமகளோடு கன்பொற், பூவீற்றிருந்தநாமமகன் புல்லகாளும்" எனச் சீவகசிந்தாமணியிற் கூறியமைகொண்டும் உணர்க. புலத்தல், பிணங்குதல், ஊடுதல் என்பன - ஒருபொருட்சொற்கள்; அதாவது-யாதாயினும் ஒரு காரணம்பற்றித் தலைமகன் தலைமகளைக் கூடாமல் மாறுபடுதல். ஒருவனிடத்தில் ஒருமகள் இருப்பதாக அறிந்தமாத்திரத்தில் மற்றொருமகள் அவனிடம் சேர்தற்குப் பிரியப்படாமல் வெறுப்பது இயல்பாதலே "கண்ணுளார் ஙங்காதலர் ஒழிகாமமீங்கென; உண்ணிலாயவேட்கையா வூடினர்" என்ற சிந்தாமணிகொண்டும் உணர்க.

இனி, இதனை, வேறுவகையாக வருணித்தல்கூறுவதும் உண்டு; எங்ஙனமெனின்,—மாமிக்கும் மருமகளுக்கும் ஒற்றுமையில்லாமை பெரும்பா

லும் உலகவியற்கையாதலால் அதுபற்றி, மருமகளான கலிமகன் உள்ள விடத்து மாமியான திருமகள் சோது வெறுப்பள் என்பதாம்: திருமாலின் மனைவி திருமகளும், அத்திருமாலிடம் தோன்றிய பிரமதேவனது மனைவி சரசுவதியு மாதலால், இவர்கள் மாமிமருமகளிராவர்.

'அறிவைப் பெருமைப்படுத்திக் கூறுகிறீரே, அறிவுடையார்பலர் உலகத்திற் செல்வமின்றி வருந்துகிறார்களே' என ஒருவர் வினவினதாகப் பாவித்து உத்தரங்கூறினதாக இச்செய்யுள் செய்யப்பட்டது; இது-இச்செய்யுளில் 'அறிதிரேல்' என்ற சொல்லால் விளங்கும். 'அறிதிரே' என்ற பாடத்துக்கு - அறிவீரன்றே எனப் பொருள்கூறுக.

இப்பாட்டில் "நுண்ணுணர்வின்மையுமை யஃதடைமை, பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" என்றதன்மேல் வந்த ஆட்சேபத்துக்குச் சமாதானங் கூறியதாதலால், இப்பாட்டு இவ்வதிகாரத்து இங்கு வைக்கப்பட்டது. இனி, இருவர்மகளிர் ஒற்றுமைப்பட்டு ஒருங்குசேராமையாகிய உண்மையின்மை உணராது அறிவுடையார் சிலர் வறியராயிருத்தலேயே நோக்கி அறிவுடைமையிற் குறைகூறுதல் அறிவின்மையாம் என இவ்வதிகாரத்தோடு சம்பந்த முரைத்தலுமொன்று;

இப்பாட்டைக் கீழ்'பழமை'என்னும் அதிகாரத்தில் வந்த"பல்லான்று கேள்விப் பயனுணர்வார் யீயவும், கல்லாதார் வாழ்வு தறிதிரேற்—கல்லாதார், சேதனமென்னு மச்சே றகத்தின்மையார், கோதென்று கொள்ளாதாங் கூற்று" என்ற பாட்டோடு ஒத்த வாய்பாடையுதாக அறிக.

பயன்-அறம் பொருள் இன்பம் வீடுகளும் புகழும் முதலியன. உணர்வார், உழப்பது என்பவற்றில், இடைநிலைகள்-எதிர்கால முணர்த்தாது தன்மைமாத்திரமுணர்த்தின. "கல்லாரேயாஞலுங் கைப்பொருளொன்றுண்டாயி, னெல்லாருஞ் சென்றங்கெதிர்கொள்வரிலவரே, யில்லாருந்தான் வேண்டா ளீன்றெடுத்ததாய் வேண்டான், செல்லாதவன்வாயிற்சொல்," "இல்லாரையெல்லாருமெள்ளுவர்" என்றபடி பொருளில்லாரை யாவரும் இழிவராதலால் 'பாடழிந்து' என்றும், "பொருளுடையான் கண்ணதே போகம்", "பொருளிலார்க்கு இவ்வுலகமில்" என்றபடி செல்வமில்லாதவர்க்கு இவ்வுலகத்து இன்பமொன்றும் இன்மை மாதலால் 'அல்லலுழப்பது' என்றும் கூறப்பட்டது.

நாமகளுக்குத் தொல்சிறப்பு-"அறம்பொருளின்பமும் வீடும் பயக்கும், புறங்கடை நல்லிசையெரிகாட்டும்-உறங்கவலொன், றுற்றழியும் யாக்கைபெடுக்குங் கல்வியிணுங்கில்லை, சிற்றுயிர்க்குற்ற தினை" எனக் கூறப்படுவதாம்; இனி, அவளுக்குத் தொன்றுதொட்டு வருகிற சிறப்பு முற்பிறப்பிற்செய்த நல்வினைத்தொடர்சியாற் பிற்பிறப்பிலே இயற்கையில அமைதலென்றும் கொள்ளலாம். கல்வி யுயிர்க்குணமாய் முற்பிறப்பேதொடங்கி யுயிரோடு விடாதுதொடர்ந்து அவ்வுயிர் புகுர்தவிடத்துப் புகுந்தன்மை, "ஒருமைக்கண் தான் கற்ற கல்வியொருவற்கு, எழுமையு மேமாப்புடைத்து" என்ற திருக்குறளால் அறியப்படும் இப்படிப்பட்ட தொல்சிறப்புச் செல்வத்துக்கு இல்லையாம், ராவின்கிழத்தி-நாக்கிற்கு உரியவள் எனச் சரசுவதிக்

குக் காரணப்பெயர்; பிரமனது காவில் வாழ்தலாலும், அறிவுடையோர்காவில் தங்குதலாலும் வந்தது. பூவின் கிழத்தி-பூவிற்குரியவள். "பூவெனப் படுவது பொறிவாழ் பூவே", "பூவிற்குத்தாமரையே", "பூவினுக்குரங்கலம் பொங்குதாமரை" என எல்லாமலர்களுள்ளுஞ் சிறந்ததாகக் கூறப்படுகிற செந்தாமரைமலரில் வசித்தலால், பூமகளென்றபெயர். இமயமலையில் மரகதப்பாறையில் பதுமையென்னுங் கயத்தில்தோன்றிய பொற்றுமரைமலரில் திருமகள் வீற்றிருக்கின்றனளென்பது, ஜைந நூற்கொள்கை; "அருமணிமரகதத்தகணறிய, எரிதிறப்பொன்னிதழ்ந்தது தாமரைத், திருமகள்" என்றார் சீத்தாயணியாரும். காவின்கிழத்தி-கல்விக்கு அதிதேவதை; பூவின் கிழத்தி-செல்வத்திற்கு அதிதேவதை; இசைசொற்கள் - தகுதிப்பொருளில் வந்த நான்காம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள், இவற்றில், இன்-சாரியை. கிழத்தி-உரிமையையுடையபொருளுணர்த்தும் கிழமையென்னும் பண்பினடியாப் பிறந்த கிழவன் என்பதன் பெண்பால்; (கிழம் என்னும் பெயரடியாப்பிறந்த கிழவன் என்பதன் பெண்பால் கிழவியென நிற்கும்.)

உருரு. கல்லென் பு தந்தை கழு மதனீயோர்
சொல்லென்பு கொள்ளா திகழ்தகவன்—மெல்ல
வெழுத்தேகோ லில்லார்முன் சிட்ட வினிதா
வழுக்கோல்ட் டொண்டி விடும்

(இ - ன்.) தந்தை-(தனது) பிதா, கல் என்ற கழற-(கல்லியைக் கற்பாயென்று இடித்து அறிவுகூறி, அ னை - அசைசொல்லே, ஓர் சொல் என்று கொள்ளாது - (தனக்கு உறுதிபையதருவது) ஒரு வார்த்தையென்று கொண்டுஅடங்கியடியாமல், இகழ்தகவன்-(இளமையிலே) அலட்சியஞ்செய்துவிட்டவன்,—(பின்பு), பல்லார் முன் - பலபேர்கூடிய சபையில், எழுத்து ஓலை - எழுத்து எழுதப்பட்டுள்ள ஓலையை, மெல்ல-மெதுவாக, கீட்ட - (நீ இதனைப் படியென்று ஒருவர் கொண்டுவந்து) கையிற்கீட்ட, (த் தன்னிடம்) கொடுக்க, வினிதா - (அதற்குச்) கோபங்கொண்டு, வழுகோலை கொண்டு விடும்-(அடித்தலாகிய) பிழையைச் செய்யும் தடிக்கொம்பை (அவரை அடித்தற்கு) எடுத்துக்கொண்டிடுவான்; (எ - று.)

படியாதவனை யாவராயினும் அவனுடைய அறிவின்மையை அறித்தாவது அறியாமலாவதுயாதாயினுமொரு பத்திரிகையைகொடுத்து இதனைப் படியென்று சொன்னால், அவன் தான் படிக்கமாட்டாமையால், பலர்முன் அவமானப்படுவதற்கு மனம்பொருமல், அவலவமானந் தனக்குவருவதற்குக் காரணமாகிற அவரை அடித்தற்குப் பெருங்கோபத்தோடு தடியெடுத்துக் கொள்வான் என்பதாம். தந்தைசொல்லைக்கேட்டு அதன்படிகற்று அறிதலேயுடையனுகாதவன் தனது குற்றத்தைத் தான்கருதி அமைந்திராது பிறர் மேற் குற்றத்தையேற்றிக் கோபித்தல் பெரிய அறிவின்மை யென்றபடி.

இப்பாட்டு- அறிவின்மையின் இழிவை விளக்கியவாறும்.

கல் - வினைப்பகுதியே ஒசை வேறுபாட்டால் ஏவற்பொருளுணர்த்தி நின்று. கழறல்-உறுதிச்சொல்லே உறுத்திச்சொல்லுதல்;கழறு-பருகி. ஐங்குரவருள் மூதல்வனும் "தந்தை மகற்காற்றுங்கன்றி யவையத்து, முந்தியிருப்பச் செயல்," "சான்றோனாக்குதல் தந்தைக்குக்கடனே," "உயர்மிக்கதந்தை" என்றபடி மைந்தனைக் கல்வியுடையனாக்குவதிலே கடமையாகப்பூண்ட தந்தையினது சொல் "தந்தைசொல்மிக்க மந்திரமில்லை" என்றபடி தலைமேற் கொண்டு நன்குமதிக்கத்தக்க தாதலின், அசரிறப்புத்தோன்ற, அதனை 'ஓர்சொல்' என்றது. கொள்ளாத இகழ்ந்தவன்-மூத்தோர்சொல்லும் வார்த்தையை அமுதமாகக்கொள்ளாமல் உகுத்தவன். இகழ்ந்தவன் என்ற இறந்தகாலம், சுற்றற்கு உரிய இளம்பிராயத்தில் என்பதைப் புலப்படுத்தும். இகழ்ந்தவன் கொண்டிலியிம் - செய்யுளிசை முற்று ஆண்பாலுக்கு வந்தது. எழுத்தேலா - எழுத்தையுடைய ஓலை என இரண்டாருரும் பொருளுந் தொக்கதொகையாக விரிக்க. மைவிட்டில்என்றகாரணம், கொடுத்தலாகிய காரியத்தின்மேல் நின்றது - உபசாரவழக்கு.

விளியா - உடன்பாட்டு இறந்தகால வினையெசசம்; இனி, விளியா - இறந்தாற்போலாகி, வழக்கு ஒலே (தாழ்கிருந்து) ப்பிப்போதருங்காரணமான ஒலியை, தொண்டிலிம் - கொள்வான் என்றும் உரைப்பர்; இவ்வுரைக்கு-மானபங்கப்பட்டுச் சொல்தழுதழுத்து - நெடும்விட்டிருந்த வழிதேடிவனென்றகருத்து. வழுக்கு ஒல் - காரியப்பொருளதான வினைத்தொகை: ஒலை-ஒல் என்பதன் இரண்டாம்வேற்றுமை விரி இனி, இனியவன்று பதம் பிரித்து, அவமதிசெரிப்புசெரிப்பு எனப் பொருள்கொள்ளுதல் மோனைத் தொடைக்குப் பொருத்தமென்க. கொண்டிலிம், விடி என்னும் தணை வினை-தேற்றமுணர்த்தும். (கூ)

உறுக. கல்லாது நீண்ட வினாநுவ லுத்து
கல்லிறி வாளர் நிடைப்பு ருமெல்ல
விருப்பினு நாயிருந் தற்றே பிரா
துரைப்பினு காய்குரைத் தற்று.

(இ - ள்.) கல்லாது - கல்விகற்காமல், நீண்ட - வளர்ந்த, ஒருவன்—, உலகத்து - லோகத்தில், கல் அறிவாளரிடை புகுந-கல்ல விவேகமுடையவர்கள் சபையிலே புகுந்து, மெல்ல இருப்பினும் - பேசாமலிருந்தாலும், (அந்த இருப்பு), காய் இருந்து அற்றே-காய் இருந்தாற்போன்றதாம்; இராது-பேசாநிராமல், உரைப்பினும் - (யாதாயினும் ஒன்றை) எடுத்துசசொன்னலும், (அது), காய் குரைத்தஅற்று-அந்த காய் (வாய்மூடியிராமல்) குரைத்தாற்போலும்; (எ - று.)

பரிசுத்தமான இடத்தில் அசுத்தமானகாய் வந்துசேர்ந்தால் அம்மாத்திரத்தால் அவ்விடம் அசுத்தப்படுவதுபோல, கல்லறிவாளர் கூட்டத்தில் அறிவிலான்சென்றால் அம்மாத்திரத்தால் அக்கோஷ்டி மாசடையும்; அதன்மேலும் இவன் வாய்திறந்து ஏதாவது பிழைபடக் குளறினால் அது காய் குரைத்தல்போல வெறுக்கப்படும் என்றபடி.

பயன்பற்றி வந்த உவமையணி. நாயுவமை கூறியது, இழிவை நன்கு விளக்குதற்கு.

உலகம்-லோகமென்னும் வடமொழியின் திரிபு: இதனைத்தமிழ்ச்சொல்லென்று சாதிப்பர் நச்சினார்க்கினியர். நல்லறிவு - அறியவேண்டுவனவெல்லாம் அறியும்அறிவு. மெல்லஇருத்தல்-சாதுவாகஇருத்தல்;சும்மாஇருப்பது. உம்மைகள்-முறையே எதிரதும் இறந்ததன்தழுவிய எச்சப்பொருளன.இரா அது-உயிரளபெடை, செய்யுளோசை நிறைக்கவந்தது; அலகிட்டுக்காண்க. அற்றே,ஏ-ஈற்றசை. இருப்பின், உரைப்பின் என்றவினையெச்சங்களினின்று எடுக்கப்படுகிற இருத்தல், உரைத்தல் என்னுந் தொழிற்பெயர்; தற்று, குரைத்தற்று என்னும் வினைமுற்றுக்களுக்கு எழுவாயாக.

உடுரு. புல்லாப்புன் கோட்டிப் புலவ ரிடைப்புக்குச்
சில்லாத சொல்லுங் கடையெல்லாங் கற்ற
கடாஅயிலுஞ் சான்றவர் சொல்லார் பொருண்மேற்
படாஅ விடுபாக் கறிந்து.

(இ - ள்.) கடை எல்லாம் கீழ்மக்களெல்லோரும்,—புல்லா - (இலக்கணத்தோடு) பொருந்தாத. புல்-இழிவான, கோட்டி-சபையிற் கூடியுள்ள, புலவரிடை-அற்பபுத்திமான்களதவியில், புக்கு அஞ்சாதசென்று, கல்லாத-தாம் கற்றறியாத விஷயமாகவும், சொல்லும்-தைரியமாய்க்கூறுவர்; சான்றவர்-(கல்வி கேள்விகளினால்) நிறைந்தவான்,—கற்ற - தாம்படித்தறிந்த விஷயமாகவேயும், கடாயினும்-(சொல்லும்படி பிறர்) கேட்டாலும்,பொருள் மேல்படாவிடுபாக்கு அறிந்து (அ - டனம் விஷயமிது அவர்களதுஅறிக்தாம் சொல்லும் அரிய) பொருளின்மேல முழுவதுஞ்செல்லாமல் நீங்கிப்போகும் விதத்தை அறிந்து, சொல்லார்-சொல்லமாட்டார்கள்; (எ - று)

அறிவுடையார்க்கும் அறிவிலார்க்குமிடையுள்ள வேறுபாட்டை விளக்கிய படி. அறிவிலார்க்கு அடக்கமும் அமையசமயமும் இல்லையாதலாலும், தாம் எதாயினும் ஒன்றைப் பலருமுன்சொல்லிப்பெருமையடையவேண்டுமென்ற அவா அதிகமாதலாலும், அவர் இவ்வாறுகூறுவர்; கல்லறிவுடையார்க்கோ அவையசகிஷ்ணுவாயிருத்தலும், "கொளவேண்டுகொள் வகையறிந்து அவனுளம் கொளக், கோட்டம் இலமனத்தின் நூல்கொடித்தில்" இலக்கணமாதலால், வினவப்பட்ட பொருள்களுள்ளும் எற்ற சிலவற்றை முறையாகச் கூறுவதேயன்றி ஒருங்கு கூறார்.

"புல்லாவெழுத்தற்ற பொருள்லலறு" கோட்டி "என்றறிபோல, 'புல்லாப்புன்கோட்டி' என்ற, அதாவது "புகழும் தரும் பெறினும்ஈரா பொய்காமம்,இகழுஞ்சினஞ்செற்றமிலேலோ—ரிகழுங்கேளன், எல்லாமூணர்ந்தோரிருந்தவிடமன்ரே, நல்லாரவைகஃ நலம்," "நலனுடைக்குஞ்செம்மைகெடுவிலே கான்கும், குலனென் றிவையுடையோ கோதில—புலனில்லோர்,சென்று மொழிந்தனவுங் கேட்டோர் செறிந்தவிடம், அன்றே யிறைந்தவை" என நல்லவைக்குப்போதையகைக்குகூறப்பட்ட இலக்கணம்சிறிதுமில்லாதபை,

புலவர்-அறிவுடையவர்; புலம் அல்லது புலமை-அறிவு. 'புல்லாப்புன் கோட்டிப் புலவர்' எனவே, சிற்றறிவினராயிற்று: இனி, புலவர் என்பது - இகழ்ச்சிக்குறிப்பெனினுமாம். கடை-கடைப்பட்டவர்க்குப்பண் பாகுபெயர்; அதமென்க. கடையென்பது-பொருளால் உயர்திணைப்பலர் பாலாயினும், சொல்லால் பால்பகாஅநிலைப்பெயராதலால், சொல்லும் என்னும் செய்யுமென்முற்றைக் கொண்டது. எல்லாம் என்னும் பெயர், இருதிணைக்கும் பொது. கடாஅயின்-செய்யுளோசை குன்றுதலிடத்தினுள னாமிசை நிறைத்தற்கு வந்தது. படாஅ-செய்யுளோசை நிறைக்க படை; அலகிட்டுக்காண்க. இரண்டடிகளில்அளபெடைவந்தது, ாடை. உம்மை-உயர்வுதெரிப்பு. பொருள்மேல், மேல்-ழுனுருபு; இனி, மேலென்பது-பொருளிலுட் செல்லுதலேயென்றி மேற்செல்லுதலும் அரிதென்பதை விளக்குவதெனவுங் கொளலாம். (இ)

உடுகூ. கற்றறிந்த நாவினர் சொல்லார்தந் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர் பணையின்மேல்
வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி.

(இ - ன்.) கற்று-(படித்தற்குரிய நூல்களோப்) படித்து,அறிந்த-(அவற் றின்பொருள்களை உள்ளபடி)உணர்ந்த,நாவினர்-நாக்கையுடையபெரியோர் கள், தம் சோர்வு அஞ்சி-(சொல்லும் சொற்களில்) தமக்கு ஏதாவது பிழை நேரிடுமோவென்றுபயந்து, சொல்லார்-(விஷயங்களைக்கண்டபடி மிகுதியா கச்) சொல்லமாட்டார்கள்; மற்றையராவார்-கற்றறிந்த நாவினரல்லாத சிறி யோர், பகர்வர்-(அப்படிப்பட்ட சோர்வுக்கு அச்சமில்லாமல் விஷயங்களை ஆரா யாது தோன்றினபடி மிகுதியாகச்) சொல்லுவார்கள்; (அவை எவைபோலவெ னின்:—) எஞ்ஞான்றும் எப்பொழுதும், பணையின்மேல்-பணைமரத்தின்மேல், வற்றிய ஓலை-உலர்ந்துள்ள ஓலைகள், கலகலக்கும்-கலகலவென்று ஒலிக்கும்; பச ஓலைக்கு-பசுமையாகவுள்ள ஓலைகளுக்கு, ஒலி இல்லை-ஓசையில்லையாம்.

ஈரமில்லாத உலர்ந்தஓலைகள் மிகவொலித்தல்போல, சாமானஅறிவு இல்லாதவர்மிகப்பேசுவர்;ஈரமுள்ளபசுமையோலைகள்ஒலியாதலாறுபோல, சாமான விவேகமுள்ளவர் மிகுதியாகப்பேசாமல் சாவடக்கே மௌனமாக இருப்பர் என்றபடி. இப்பாட்டின்கருத்தை "சிற்றுணர்வோரென்றுஞ்சிறு நெஞ்சர் நன்றமைந்த, முற்றுணர்வோ சொன்ற மொழியாரே—வெற்றி பெறு, வெண்கலத்தினோசை மிகுமே விரிசமம்பொன், ஒண்கலத்தினுண் டோ ஒலி" என்ற நீதிவெண்பாவின் பொருளோடு ஒப்பிடுக. எடுத்துக்கா ட்டுவமையணி.இதில்'கற்றறிந்தநாவினர் சொல்லார் தம் சோர்வஞ்சி'என் பதற்கு-'எஞ்ஞான்றும் பசசோலைக்கில்லை யொலி' என்பது-உபமானம்,'மற் றையராவார் பகர்வர்' என்பதற்கு-'பணையின்மேல் வற்றியவோலை கலகலக் கும்' என்பது - உபமானம், ஆகவே, இப்பாட்டில் உபமேயவாக்கியங்களே ஜவத்த முறைமைக்கு ஏற்ப உபமானவாக்கியங்களே நிறுத்தாமல் மாறுபடி நிறுத்தியது - எதிர்நிரனிறைப்பொருள்கோள்.

"ஆக்கமுய் கேடு மதனல் வருதலாற், காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு" "யாகாவராயினு நாகாக்க காவாக்கால்,சோகாப்பர் சொல்லிழுக் குப்பட்டு", "ஒன்ருனுந் தீச்சொற்பொருட்பயனுண்டாயின், நன்ருகாதாகி விடும்" என்ற நீதிகளே உள்ளபடி உணர்ந்தவராதலால், கற்றறிந்தவர் தம் சோர்வஞ்சுவர்; கல்லாதவர் இப்படிப்பட்ட நீதிகளே அறியாராதலாலும், மானம் வெட்கம் பயம் இவற்றை ஒழித்தவராதலாலும் சோர் வஞ்சார்.

மற்றையர் - ஒழுக்குறித்ததற்கு எதிரான பொருள் தருகின்ற மற்று யென்னும் இடைச்சொற்பகுதியடியாப் பிறந்த பலர்பாற்பெயரும் - ஈரடுக்கொலிக் குறிப்பு; இரட்டைக்கிளவி.

உருஎ. பன்றிக்கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்ருன்
னன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்கால்
குன்றின்மேற் கொட்டுந் தறிபோற் றலைதகர்த்து
சென்றிசையா வாருஞ் செவிக்கு.

(இ - ன்.) நன்று-நன்மையை, அறியா - அறியமாட்டாத, மாந்தர்க்கு - மனிதர்க்கு, அறத்தது ஆறு-தருமத்தினதுவழியை, உரைக்குங்கால்-சொல்லு மளவில், (அது),—பன்றி கூழ் பத்தரில் - பன்றிக்குக் கூழ்வார்க்கின்ற தொட்டியில், தேமா வடித்தற்ற - தேன்மாம்பழத்தி னீரசத்தைப் பிழிந் தாற்போலும்; (அன்றியும்), குன்றின்மேல் கொட்டும் தறிபோல்-மலேமேல் அடிக்கப்படுகிற கட்டித்தறிபோல, தலை தகர்த்து - (அந்தத்தருமவழியின்) தலேநிதற, செவிக்கு-(அவர்கள்) காதுகளினுள், சென்று இசையா ஆகும் - போய்ப் பொருந்தாதனவாம்; (எ - று.)

பன்றிக்குக் கூழின்உருசி தெரியுமேயல்லது தேமாவின் சுவை தெரி யாது: அதுபோலவே, நீழ்மக்களுக்கு அதருமவழியின் தன்மை தெரியுமே யல்லது தருமவழியின் பெருமை தெரியாது; ஆதலால், அவர்கட்குச்செய் யுந் தருமோபதேசம், மலேக்கற்பாறையின்மேல் நாட்டும்பொருட்டு வலிமை யோடு அடிக்கப்படுகின்ற மரத்தறி அக்கல்லினுட்செல்ல இயலாமல் தான் முறிதல் போல, அவர்கள் காதினுட் செல்லமாட்டாமல் தடைப்பட்டு ஒழி யும் என்றபடி. உவமையணி.

பத்தர்-பத்தல்லன்பதன் இறுதி லகரத்துக்கு ரகரம் போலி; சாம்பல்-சாம்பர், பந்தல்-பந்தர் என்பனபோல. தேமா - இன்சுவைப் பழமுடைய ஒருவகை மாமரம்; இங்கே, அதன் பழத்தின் இரசத்திற்கு-இருமடியாகுபெ யர். தேமா - தேன் மா எனப்பிரித்து, தேன்போ லினிய மா என உவமத் தொகையாகப்பொருள்கொள்க; தேன்மொழி, மெலிவர இறுதியழிந்தது. ஆல்-சாற்றசை. மாந்தர் - ஒருமையில்லாமல் எப்பொழுதும் பன்மையிலே யேவரும் பெயர்; இதனே வடநூலார் நித்யபகுவசன மென்பர். உபமேயத் தில், தலையென்பது-ஒருபொருளினுங் காராது வந்த உபசர்க்கமாகக் கொ ள்ளலாம்; அல்லது-தலைதகர்த்து-நெற்புகைகெட்டு எளிதும் அமையும், செவி

க்கு- செவியில்; கான்கனுருபு ஏழாம் வேற்றுமை யிடப்பொருளில் வந்தது னல், உருபுமயக்கம்.

அறிவிலாதார் யாதாயினும் ஒருகன்மைபைச்சொல்லப்படுதற்குக் தகாதவரென்பது, இப்பாட்டினுற் கூறப்பட்டது. முதலடியில்வந்த உபமானம், தகுதியில்லாதவிடத்தே சென்றுசேர்தலாற் பயனற்றதாம் என்பதை விளக்கவந்தது. இதனே "அங்கணத்துளுக்க வமிழ்தற்றால் தக்கனத்த, ல்லார் முற் கோட்டிகொளல்" என்ற நிருக்குறளோடு ஒப்பிடுக. (எ)

பாலாற் கழிஇப் பலரா ரூணக்கினும்
வாலிதாம் பக்க மிருந்தைக் கிருந்தன்று
கோலாற் கடாஅய்க் குறினும் புகலொல்லா
நோலா வுடம்பிற் கறிவு.

(இ - ள்.) பல கான்-அநேக காட்களில், பாலால் கழீஇ - (வெண்மையான) பாலினலே கழுவி, உணக்கினும் - உலர்த்திவைத்தாலும், இருந்தைக்கு - (இயற்கையிற் கருநிறமுடைய) காக்கை, வாலிது ஆம் பக்கம் - வெண்ணிறத்தையுடையதான தொரு பகுதி, இருந்தன்று-உண்டாகமாட்டாது; (அதுபோலவே), கோலால் கடாஅய்-தடியைக்கொண்டு அடித்து அதட்டி, குறினும் - சொன்னலும், நோலா உடம்பிற்கு-(மூற்பிறப்பிற்) புண்ணியஞ் செய்திராத (உயிரையுடைய) உடம்புக்கு [நல்ல ஜாழ் இன்மையால் இயற்கையில் அறிவில்லாத மனிதனுக்கு என்றபடி], அறிவு-ஞானம், புகல் ஒல்லா - வர்துசேரமாட்டாது; (எ - று.)

காரியைப் பாலாற்கழுவினலும் வெண்மையுண்டாகாததுபோல, ஜன்மாந்தர புண்ணியமில்லாத மனிதனுக்கு எவ்வளவு சொன்னலும் அறிவு வருவதில்லே யென்றபடி.

எடுத்துக்காட்டுவமையணி; மூன்னிரண்டடி - உபமானவாக்கியம், பின்னிரண்டடி - உபமேயவாக்கியம். "இருந்தை யிலக்க வெள்ளுறுபடா தென்செய்தாலு நிம்பத்தி, இருந் தையிலந்தித்தியாது" என்பர், திருவரங் கத்தந்தாதியிலும்.

உணக்கின் என்னும் எதிர்காலவினையெச்சததில், உணங்குஎன்பதன் பிறவினேயான உணக்கு - பகுதி உம்மைகள் இரண்டும்-உயர்வுசிறப்பு. வாலிது-வால் என்னும் பெயரினடியாப்பிறந்த ஒன்றன்பாற்குறிப்பு வினேயாலினேயும்பெயர்; இ-சாரியை பக்கம் - பகுதியென்றுமவடமொழியின் திரிபு. இருந்தன்று எதிர்மறை யிறந்தகால ஒன்றன்பால் வினேமுற்று. குறின் - கூறின் என்பதன் தொகுக்கல். ஒல்லா-ஒல்லாது என்பதன் விகாரம்எதிர்மறை ஒன்றன்பால் வினேமுற்று.

அறிவு பெருதவனது இகழ்ச்சி தோன்ற, 'உடம்பிற்கு' எனஅஃறிணேயாக் கூறினர்: இழிபுபற்றிவந்த தீணேவழுவமாகி; உயர்திணேப்பொருளினுடைய உடம்பையும் உயிரையும் வேறுபிரித்து நோக்கக்கூறினுல்

அவை அஃறிணைபாம்; "எவஷுஞ்செய்கலான் தான்தேரு னவ்வுயிர், போஒ மளவு மோர்கோய்"என இகழ்ச்சிதோன்ற உயிர்மாத்திரத்தாற் கூறியதுங் காண்க. இவனிடத்துசேதனமான [உணருந்தன்மையதான] உயிர்இருந் தும் அதன்தன்மை தலேயெடாமல் அசேதனமான [உணருந்தன்மையதல் லாத] உடம்பின்தன்மையே முழுவதும் தலேயெடுத்து நின்றமை தோன்ற, 'உடம்பிற்கு' எனக் கூறினசென்க. முற்பிறப்பில் கல்வினை செய்திருந்தா லொழிய இப்பிறப்பில் கல்லறிவு தலேப்படாதாதலால்,'கோலாஉடம்பிற்கு அறிவு புகலொல்லா' எனப்பட்டது,

"ஸ்வபாவோயாத்ருஸீ யஸ்யகுஜ்ஜாதிகதாசக - அங்காரஸ்ஸாத தென தேசமலிருத்வம்கருஞ்சதி" என்னும் வடநூல் மேற்கோள் அறியத்தக்கது.

உடுகூ. பொழிந்தினிது நாறினும் பூநெய்தல் செல்லா
திழிந்தவை காமுறாஉ ரப்போ—லிழிந்தவை
தங்கலந்த நெஞ்சினார்க் கென்னுந்தங் காரம்வாய்த்
தேன்கலந்த தேற்றச்சொற் சோர்வு.

(இ - ன்.) பொழிந்து-(தேனேச) சொரிந்து, இனிது-இனியதாக, நாறி னும்-நல்லமணம்வீசினலும், பூநெய்தல்செல்லாது-பூவிலுள்ளதேனேயுண்ணு தற்குப்போகாமல், இழிந்தவை காமுறாஉம்-(அதர்க்கருமள்ள) இழிவான பொருள்களேயிரும்புதிற்போல்-ரபோல்-ரபோல,—இழிந்தவைதாம்கலந்த-(உயர்ந்தவைகள் இருக்க ம்அவற்றைவிட்டு)இழிவானவற்றைப்பொருந்திய, நெஞ்சினர்க்கு-மனத்தையுடைய அவிவேகிகளுக்கு,—தங்கார்வாய-(அறிவு ஒழுக்கங்களினல்) தகுதியையுடையவர்களதுவாயிருண்டாகிர,தேன்கலந்த தேனின் தன்மைபொருந்தின, தேற்றம்சொல்-தெளிவையுண்டாக்கும் உப தேசமொழிகளிறுடையு, தேர் - தெளிர், என் ஆகும் - யாதுபயன்படும்? [ஒருபயனேயுந் தாராமென்றபடி.] (எ-று.)—பயன்பற்றிவந்த உவமையணி.

இனிது-இனிமையென்னும் பண்பினடியாப்பிறந்த ஒன்றன்பாற்குறி ப்பு வினையாலணையும்பெயர்; இங்கே வினேயெசசப்பொருள்பட்டு, நாறின், என்பதனே யுத்து, வினேபுரியாய்நின்றது.உம்-உயர் நெற்பு ழீ-அதிலுள்ள தேனுக்கு இடவாகுபெயர். காமுறு-காமமுறு-என்பதன்விகாரம்; எழுது, ஐயுறு, பேதுறு என்பனபோல. காமம் - விருப்பத்தை, உறுதல் அடைத லென்க. தக்கார்-போக்கியர், தேன்-தேனின்தன்மைசு முதலாகுபெயர். இனி, கலந்த என்பதை உவம ருபாக்கொண்டு, தேன்கலந்த-தேனேயொ த்த என்றுமாம். தேன்கலந்த தேற்றசசொல்-தேன் நாடக்கு இனிமை தரு தல்போலச செவிக்கு இனிமைபைத்தற்கு தன்மையவினேக்கும்வார்த்தை யென்க. 'தேங்கலந்த' என்று பாடமோதி, தேம் கலந்த எனப் பிரித்து, இனிமை பொருந்தின என வுரைத்தலு மொன்று.

தாமாகயம் அறியாமல் பிறர் சொன்னலும் உணராத பேதைகளுக்கு அஃறிணேப்பொருள்களில் இழிவை யுடைத்தான ஈயை உவமை எடுத் தக்கூறி அவர்கள் நிறுமையை விளக்கினர். (க)

உசுo. கற்றூ ருரைக்குங் கசடறு நுண்கேள்வி
பற்றுத லின்னெஞ் சுதைத்தலான்—மற்றுமோர்
தன்போ லொருவன் முகநோக்கித் தானுமோர்
புன்கோட்டி கொள்ளுமாங் கீழ்.

(இ - ன்.) கற்றூர்-(நூல்களைக்) கற்றறிந்தவர்கள், உரைத்த சொல்லுகின்ற, கசடு அறு நுண்கேள்வி-குற்றமற்ற நுட்பமான நூற்கேள்வியினை, பற்றுதல்-உறுதியாக உட்கொள்ளாமல், தன் நெஞ்சு-தனதுமனம், உதைத்தலால்-இகழ்ந்து தள்ளிவிடுதலினால்,—கீழ்-கீழ்மகன்,—தன்போல் மற்றும் ஒருவன் முகம் நோக்கி-தன்னைப்போன்ற வேறு மொரு கீழ்மகனது முகத்தைப்பார்த்து, தானும் ஓர்புல் கோட்டி கொள்ளுந-(அறிவில்லாத)தானும் ஓர் இழிவான பிரசங்கத்தைச் செய்வான்; (எ - று.)

கசடு-குற்றம்; கேள்விக்குக் குற்றம்-ஐயந்திரிபுகள்: "கற்க கசடறக் கற்பவை" என்றதிற்போலக்காண்க. கேட்கப்படுகின்றபொருள்களின்நுட்பத்தைக் கேள்வியின்மேல் ஏற்றி, 'நுண்கேள்வி' என்றார்; "நுணங்கியகேள்வியர்" எனத் திருக்குறளிலும் காண்க. "நிரம்பிய, நூலின்றிக் கோட்டி கொளல்" 'அல்லார்மூற்கோட்டிகொளல்' எனத் திருக்குறளிலும், 'புல்லா வெழுத்திற்பொருளில் வறிக்கோட்டி" என இந்நூலிலும்போல, கோட்டியென்பது அவருரைத்தலுஞ் சொல்லுதற்கு இடவாகுபெயராம். தானுமென்ற உம்மை-இழிசிறப்பு; அறிடையான் பிரசங்கருக்குச்செயலில்போல என்றுவந்தது, அறிந்தவர்சொல்லும்நூற்கேள்விகளை இகழ்ந்ததுமாத்திரமேயன்றி என்றுவது இறந்ததுதழுவிய எச்சப்பொருளாக்கலு மொன்று; கீழ்-ஈற்றுமையுடையவலுக்குப் பண்பாகுபெயர்; அவனது இழிவை நன்கு விளக்குதற்கு, கீழ என அஃறிணைச்சொல்லாற்கூறினரென்க. கீழ்மக்கள்புன்கோட்டிகொள்ளுதல், கற்றூரிடத்துப் பொறாமைகிருதியால். ஓர், ஆம்-இரண்டும்- அசைகள்.

—

## உஎ ஆம் அதிகாரம் —நன்றியில்செல்வம்

அஃதாவது-சம்பாதித்தவனுக்கும் பிறர்க்கும்பயன்படுதலில்லாததும் கேடுதருவதுமான செல்வத்தினது இயல்பு. கன்றி-கன்மை; இப்பண்புப் பெயர்-இவ்வு, நல்லபயனுக்கு ஆகுபெயர். இல்செல்வம்-பண்புத்தொகை. செல்வத்தை நல்வழிப்படுத்தாவது அறிவின்பய னுதலால், அவ்வறிவின்மை செல்வம்நல்வழிப்படாமைக்கும்நீவழிப்படுதற்கும்காரணமாகும்இயைபுபற்றி, இவ்வதிகாரம் அறிவின்மையென்னும் அதிகாரத்தின்பின் வைக்கப் பட்டது.

உசுக அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவீன் வாவல் குறுகா
பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வங்
கருதுங் கடப்பாட்ட தன்று.

(இ - ன்.) அருகலது ஆகி-சமீபத்திலிருத்தலையுடையதாய், பல பழுத் தக்கண்ணும் - அநேகமாய்ப் பழங்கள் பழுத்திருக்கப் பெற்றாலும், பொரி தாள் வினவினை-பொரிந்த அரையையுடைய வினாமரத்தை, வாவல்-வெள வால்கள், குறுகா-சேராமட்டா; (அதுபோல),—பெரிது அணியர் ஆயினும்-மிகவும் சமீபத்திலுள்ளவராயிருந்தாலும், பீடு இலார் - (எளிதிற் பிறர்க்கு உதவுதலாகிய) பெருமைக்குணமில்லாதவர்களது, செல்வம் - ஐசுவரியம், கருதும் கடப்பாட்டது அன்று - (எளியவர்களால் தமக்குக் கிடைக்கு மென்று) நினைக்கத்தக்க முறைமையையுடைய தன்று; (எ - று.)

ஏதுத்துக்காட்டுவமையணி;முன்னிரண்டடியில் உபாதானவாக்கியமும் பின்னிரண்டடியில் உபமேயவாக்கியமும் எற்றத்தாழ்வில்லாமல் (பிம்பப் பிரதிபிம்பபாவத்தோன்ற) ஒருபடிப்பட்டிருத்தல் காண்க.

அருகலது - அருகல் என்னுஞ் தொழிற்பெயரின்மேற் பிறந்த உடன் பாட்டு ஒன்றன்பாற் 'குறிப்புவினையாலணையும்பெயர்; அ - சாரியை; இனி, அருகு என்னும் வினைப்பகுதியின்மேற் பிறந்தஇறமை யொன்றன்பால் தெரிநிலவினையாலணையும்பெயராகக் கொண்டால், குறையாததாய் என்று பொருள்படும். உம்மைகள் இரண்டும் - உயர்வுசிறப்பு.

மரங்களுக்கு உரிய கோழரை, பொருட்டரை, பொரியரை, முள்ளரை யென்னும் நால்வகை அரையுள், வினாமரம் பொரியரையாதலால், 'பொரி தாள்வினை' எனப்பட்டது. பொரியரை-பொருக்குள்ள அரை. அரை யெனினும், தாளெனினும் ஒக்கும்; அது-ஓரிரியுமாயுமுள்ள மரத்தின் அடிக் கட்டை. வினஎன்பதைத் தனிப்பெயரென்றாவது, வினா வென்னுங் குறிய தன்கீழ் ஆக்குறுங்கின தென்றாவது கொள்க. வினவினை, இன்-சாரியை, ஐ-இரண்டனுருபு. வாவல்-வெளவாலென்னும் பறவையாதலை, ''தூங்குநிறை வாவலுறை தொன்மரங்களென்ன'' எனச் சீவகசிந்தாமணியிலுங் காண்க. வாவல் - பால்பகர அஃறிணைப்பெயராதலின், குறுகா என்னும் பலவின் பால்முற்றைக்கொண்டது. வினாமரத்திற்குப் பெருமையிருக்காதும்அதனை வெளவால் குறுகாமைக்குக் காரணம், இதற்கு அதனற் பயனில்லாமை யென அறிக. பெரிது-குறிப்புமுற்றெச்சவினையுரி. தூணியர்-அணிமையென் னும்பண்பினடியாப்பிறந்த குறிப்புவினையாலணையும்பெயர். கடப்பாட்டது-கடப்பாடு என்பதன் மேற்பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும் பெயர்; உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தின் டகரவொற்று இரட்டித்து, கடப்பாடு என்பது-கடமை படுஎன்ற இரண்டுசொற்கள்சேர்ந்து ஒருசொல் தன்மைப்பட்ட கடப்படு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

எளியவர்க்கு வெளவால வுவமைகூறினது, பலவிடத்துஞ் சென்று இனியபலங்களைப் பெற்று முகரும் இயற்கைய ரென்பதுபற்றியாதல் வேண்டும். வினா வெளவாலொழிந்த பிறபலபிராணிகளுக்கு உபயோகப்படுதல் போல, பீடிலார் செல்வமும் எளியரல்லாதார்க்குக் கண்டபடி பயன் படுதலென் கொள்க.

உகூ. அள்ளிக்கொள் வன்ன குமுகிழ வாயினுங்
கள்ளிமேற் கைநீட்டார் சூடும்பூ வன்மையாற்
செல்வம் பெரிதுடைய ராயினுங் கீழ்களே
கள்ளார் றமிழ்டை யார்.

(இ - ன்.) அள்ளி கொள்வ அன்ன - (கைகளால்) அள்ளியெடுத்துக் கொள்ளத்தக்கவை போன்ற [அழகாய் நிறைந்த], குறு முகிழ ஆயினும் - சிறிய அரும்புகளே யுடையனவா யிருந்தாலும், சூடும் பூ அன்மையால் - (அவை) சூட்டிக்கொள்ளத்தக்க மலர்ல்லாமையால், (உலகத்தில் மனிதரெவரும்), கள்ளிமேல் கை நீட்டார்-கள்ளிசெடியின்மேல் (புப்பறிப்பதற்குக்) கைநீட்டமாட்டார்கள்; (அதுபோலவே), செல்வம் பெரிது உடையர் ஆயினும்-செல்வத்தை மிகுதியாக உடையவர்களாயிருந்தாலும், கீழ்களோ-கீழ்கள்களே, அறிவுடையார்-புத்திமான்கள், கள்ளார்-விரும்பிசேரமாட்டார்கள்.

மிக அழகியதான பொருளின்மேல் அள்ளியெடுத்துக்கொள்ளலாம்படியானவிருப்பம் உண்டாதல் இயற்கையாதலால், 'அள்ளிக்கொள்வன்னகுறு முகிழ்' என்றார். கொள்வன்ன-கொள்வவன்ன என்பதன்தொகுத்தல். முகிழ்ப்பது, முகிழ்; வினைமுதற்பொருள்விகுதி புணர்த்துகெட்டது.உம்மைகள்-உயர்வுசிறப்பு. கைநீட்டார் - இரண்டாம்வேற்றுமைத்தொகை யாதலால், "குறில்வழி யத் தனியைக் கொதமுன் மெயிலிகுமாம்" என்ற பொதுவிதிப்படி தனி ஒகாரத்தின்முன் மெயிலிகாதாயிற்று: "விசாபந்து (கியஸ்.)" உபமானத்தில் 'சூடும்பூவன்மையால்' என்றதற்கு ஏற்ப, உபமேயத்தில் 'பயன்படுஞ் செல்வ மல்லாமையால்' என்க.

எடுத்துக்காட்டுவமையணி. (உ)

உகூ. மல்லு திரைய கடற்கோட் டிருப்பினும்
வல்லாற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்
செல்வம் பெரிதுடைய ராயினுஞ் சேட்சென்ற
நல்குவார் கட்டே நசை.

(இ - ள்.) மல்லு-மிகுத்த, திரைய-அலைகளையுடைய, கடல்-சமுத்திரத்தின், கோடு-கரையிலே, இருப்பினும்-(தாம்) வாழ்கிருந்தாலும்,(மனிதர்), வல் ஊற்று-வலிமையான நீர்ச்சுரப்பையுடைய, உவர் இல் கிணற்றின்கண்-உப்புத்தன்மையில்லாத கிணற்றினிடத்திலே, சென்று - (வெகுதூரமாகவிருந்தாலும்), போய் உண்பர் - (நீரைக்) குடிப்பார்கள்; (அதுபோலவே), செல்வம்பெரிது உடையர் ஆயினும்-(அருகிலுள்ளவர்களும்)செல்வத்தை மிகுதியாக உடையவர்களாகவிருந்தாலும், சேண் சென்றும் - வெகுதூரத்திற்போயாயினும், நல்குவார்கட்டே நசை-கொடுக்கும்மான்மக்களிடத்திலே உள்ளதாகும் (பெரியோர்க்கு) விருப்பம்; (எ - று.)

எடுத்துக்காட்டுவமையணி. மல்லு திரை - வினைத்தொகை. திரைய - குறிப்புப்பெயரெச்சம். இருப்பினும்,ஆயினும்என்றஉம்மைகள்உயர்வுசிறப்பு.

சேட்சென்றும் என்ற உம்மை - இழிவுசிறப்பு. ஊற்ற-ஊறுதல்: ஆதலினே திரிந்த தொழிற்பெயர். வல்லூற்று என்றது, விரைவில் நீர்சுரக்கும்நல்லூற்றன்றி,இடையிடையேநீர்ற்றுச்சுரத்தலும், தோண்டத்தோண்ட நீர்ஊறுதலும் தோன்றற்கு. "அறுநீர்ச்சிறுகிணற் றூறல்" என மேல்வருவது காண்க. கிணற்றிலுள்ள நீரின்மேலுவர்ப்பின்மையைக் கிணற்றின்மேல் ஏற்றி,"உவரில் கிணறு" என்றார். இனி, விரைவில் நீர்சுரக்கும் ஊற்று எனினுமாம். வல் - முக்கியபொருளில், பண்படியாக்கியபொருளில், இடைச்சொல். உண்ணல் என்பது-உண்பனதின்பனபருகுவனநக்குவனஎனப்பருத்தக்கூறுமிடத்துச் சிறப்புவினையும், அநுபவம் பருப்பு நோக்காதவிடத்துப் பிரதாகங்கள் நீர உட்கொள்ளப்படும்பொருளெல்லாம்உணவெனப்படுமாகலின் பொதுவினையுமாகுதலால், இங்கு'பருகுவர்' என்னாது'உண்பர்'என்றார். கடலில்நிறைந்த நீரும் உதவாமைக்குக் காரணம் உவர்ப்பாதல்போல, கீழ்மக்கள் செல்வம் பெரிதாயினும் உதவாமைக்குக்காரணம் லோபமென்க.உபமேயத்தினுள்ள சேண் என்பதை உபமானத்திலுங் கூட்டிக்கொள்க. கிணற்றை நல்குவார்க்குஉவமைகூறியதனுல், அவர்கள்கிழசெல்வமுடையாயிருந்தாலுமென்க.

உகக புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே
புணர்வ துடையா ரிருப்ப—வுணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே
பட்டுந் துகிலு முடுத்து.

(இ-ள்.) உணர்வது உடையார்-(அறியவேண்டியவனவற்றையெல்லாம்) அறியும் அறிவையுடையவர்கள், இருப்ப-செல்வமில்லாதவறியராய்இருக்க, உணர்வு இலா-அறிவு (பிறரும்) இல்லாத, வட்டும் வழுதுணையும் போல்வாரும்-வட்டு வழுதுணை என்னுஞ் செடிகள்போல அசேதனமாய் எளிதிற் கிடைக்கத்தக்க கீழ்மக்களாகிய, பட்டுந்துகிலும் உடுத்து-(செல்வமிகுதியால்) பட்டுவஸ்திரங்களோடுமேலுடைகளில்லாவஸ்திரங்களோடும்உடுத்துக்கொண்டு, வாழ்வரே-வாழ்கின்றார்களே:(ஆதலால்), புணர்கடல்சூழ்வையத்தை-நெருங்கிய சமுத்திரஞ் சூழ்ந்த பூமியில், புண்ணியமோ வேறே-(முற்பிறப்பிற் செய்த) நல்வினைப்பயனே வேறுவகையாயுள்ளது; (எ - று.)

செல்வத்தைச சம்பாதித்தலும் பாதுகாத்தலும் அநுபவிப்பதும் ஒருதலையாக அறிவுடையாராக்கு அல்லது கூடாவன்றே. அவரானறி, அறிவுடையார் வறியராகவும் அறிவிலாதவர் செல்வராகவுங்காணுதலால், அறிவுடையாராதற்கு ஆகும் ஏழுசெல்வமுடையாராதற்கு ஆகாது, செல்வமுடையாராதற்கு ஆகும் ஏழும் அறிவுடையாராதற்கு ஆகாதென்றதாயிற்று:"இருவேறுலகத் தியற்கை திருவேனு, தெள்ளியராதலு மேனும்"என்றார்,தெய்வப்புலமைத் தீருவள்ளுவனாரும். இதனுல்,ஊழுவினையாற்செல்வம் பெறவேண்டிய காலத்து அறிவாகிய துணைக்காரணமும் வேண்டாவென்பது பெறப்படும்.

அறிவிலார்செல்வம் நன்மையில்லாததென இப்பாட்டிற்கு இவ்வதிகாரத்திற்பொருத்தங் காண்க.

புண்யம்-வடமொழி. புண்ணியமோ, ஓகாரம்-அதிசய இரக்கச்சொல். வேறே என்ற ஏகாரம்-தேற்றம் வாழ்வரே என்ற ஏகாரம்-இரக்கத்தோடு பிரசித்தியைவிளக்கிற்று. வேறு-பொதுக்குறிப்புமுற்றப்பசாப்பதம்.போல் வாரும், உம்மை - இழிவுசிறப்பு; மற்றை நான்கு உம்மைகளும் - எண்ணுப் பொருளன. வட்டி - பினைவட்டெனக் கூறுதல் பொருத்தாது; அது, அட்டு எனப்படுவது. வட்டி - சூதாடுவட்டு எனினுமாம். (ச)

உசுரு. நல்லார் நயவ நிருப்ப நயமிலாக்
கல்லார்க்கொன் றுகிய காரணந்—தொல்லே
வினைப்பய னல்லது வேனெடுங் கண்ணுய்
நினைப்ப வருவதொன் றில்.

(இ-ன்.) வேல்-வேலாயுதம்போன்ற, நெடு நீண்ட, கண்ணுய்-கண்களை புடையவளே!—நயவர்-நற்குணமுடையவரான, கல்லார்-கல்லறிவுடையவர் கள்,இருப்ப-(வறியவராய்)இருக்க,நயமிலா-நற்குணமில்லாத,கல்லார்க்கு-கற்றறிவில்லாதவர்க்கு,ஒன்று-ஒருசெல்வப்பொருள், ஆகிய காரணம்-உண் டாகிற காரணம், (என்னவெனில்),—தொல்லே வினை பயன் அல்லது-முற் பிறப்பிற்செய்த கல்வினையின் பயனே யல்லாமல், வினைப்ப வருவது ஒன்று இல்-ஆலோசித்துப்பார்க்கத் தோன்றுவதான காரணம்வேறொன்றுமில்லே.

முன்பாட்டிற் கூறினபடி அறிடையோ செல்வம்பெறுமைக்கும்,அறி லீலார் செல்வம்பெறுதற்கும் காரணம்-செல்வமுடையராதற்கு வேண்டிய சுதந்தரம் முன்னேயோர்க்கு இல்லாமையும், பின்னேயோர்க்கு உண்மை யுமே யென உறுதிப்படுத்தியபடி.

ஒன்று-ஒரு பொருளுக்கும், ஒரு காரணத்துக்கும் பலவாலளவுரு பெயர். இஃசு, தொல்லேவினை யென்றது, இடத்திற்கு ஏற்ப கல்வினை யாயிற்று; இனி, வினைப்பயன் எனத் தனித்தனி வேறுவாக்கியமாக்கி யும் உரைக்கலாம். கண்ணுக்கு வேல் உவமை - கூர்மைக்கும், வடிவுக்கும், நீடவரை வருத்தித்தற்கும் என்க. கண்ணுய்-கண்ணுள் என்பதன்விளி;வேல் நெடுங்கண்ணுய்-மகடூஉமுன்னிலை. இப்பாட்டிற்பெண்ணே முன்னிலைப்படுத் தித்கூறியது-உலகத்துப் பெரும்பான்மையான இயற்கைபற்றி. கல்வி வறு மைக்கும் கல்வியின்மை செல்வத்துக்கும் காரணமென்று மகளிர் தமது இயற்கையான பேதைமையாற்கருதக்கூடுமென்று எண்ணி அவர்களுடைய அவ்வெண்ணத்தை அகற்றுதற்பொருட்டே என்னலாம். (இ)

உசுரு. நாறுத் தகடேபோ னன்மலர்மேற் பொற்பாவாய்
நீறுய் நிலத்து ளினியரோ—வேறுய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போ
நன்மக்கள் பக்கந் நுறந்து.

(இ-ன்.) நாறு-பரிமளம்வீசுதலில்லாத,தகடேபோல்-புறவிதழ்போல நல் மலர் மேல்-(எல்லா மலர்களுள்ளும்) சிறந்த தாமரைப்பூவின்மேலிருந்

கிற, பொன் பாவாய்-பொன்னுலகிய பதுமைபோ லழகிய நிருமதனே! நீ ,பொன்போலும்-பொன்னேப்போல் அருமையான, நல் மக்கள் பக்கம் - நற்குணமுடைய மனிதர்களிடத்தை, துறந்து-விட்டு, வேறு ஆய-(அர்கள் மக்களினின்று) வேறுபட்ட, புல் மக்கள் பக்கம் - இழிகுணமுடைய மனிதர்களிடத்தில், புகுவாய் - சென்றுசேர்வாய்: (ஆதலால்), நிலத்து-உலகத்திலே, நீறு ஆய் வினி - சாம்பலாய் அழிவாய்; (எ - று.)

உலகத்தில் பெரும்பாலும் நற்குண நற்செய்கையுடைய யோக்கியர் வறியராகவும், அங்ஙனமில்லாத அயோக்கியர் செல்வராகவும் இருக்கிற அக்கிரமத்தை ஏவுதிலமைமையுடைய ஒருவன் பார்த்து மனம்பொருமல் அச்செல்வத்திற்கு அதிதேவதையான இலக்குமியின்மேற் கடுங்கோபங் கொண்டு அவளுக்குப் பெருஞ்சாபமிட்டதாகச் செய்யப்பட்டது இச்செய்யுளென அறிக.

இதில், நாருத்தகடி என்ற உபமானம் - பூவின்மேல் இருத்தும் அப்பூவின் நறுமணம் புறவிதழுக்கு இல்லையாதல்போல, சிறந்ததாமரைமலரில் இடையுறுது வாழ்ந்தும் அம்மலருக்குரிய மென்மைக்குணம் நிருமகட்குச் சிறிதும் இல்லையாமென்பதை விளக்கிநின்றது. பொற்பாவை என்ற உபமானமும், எல்லாராலும் விரும்பப்படும் அழகு நிருமகட்கு இருந்தபோதிலும் அதற்கேற்றகுணம் செல்கள் இல்லையென்பதை நன்குவிளக்க வந்தது. இனி, நாருத்தகடிபோல் என்பதற் மணமில்லாத பொற்றகபோல மென்மையில்லாமல் கண்ணுக்கினிமை மாத்திரமாய் நிற்கிற வெனவும் உரைக்கலாம்.

தகடேபோல் பாவாய் என இயையும். தகடே, ஏ - அசை. பாவாய் - பாவையென்பதன் விளி. வினி - ஏவலொருமை. நன்மக்களுக்குப் பொன் உவமை-அருமைக்குமாத்திரமேயன்றி, நன்குமதிக்கப்படுதற்கும், மங்களகரமாயிருப்பதற்கும், யாவராலும் விரும்பப்படுதற்கும், பலவகையாக உபயோகப்படுதற்கும், பெருஞ்சிறப்புக்கு மாம். அரோ - ஈற்றசை. (சு)

உஅ. நயவார்க ணல்குரவு நாணின்று செல்லோ
பயவார்கட் செல்வம பரம்பப்—பயனெல்லா
வியவாய்காண் வேற்கண்ணு யிவ்விரண்டு மாங்கே
நயவாது நிற்கு நிலை.

(இ - ள்.) வேல் கண்ணாய் - வேல்போலுங் கண்களேயுடையவளே!—நயவார்கண் - உதவிசெய்தலேயுடையவரிடத்தி உள்ள, நல்குரவு-வறுமை, நாண் இன்று கொல் ஓ-வெட்கமில்லாததோ? பயவார்கண்-(ஒருவர்க்கும்) உதவாதவரிடத்தி உள்ள, செல்வம்-ஐசுவரியம், பரம்ப பயன்கொல்-விடாமற் பாவுதற்கு (ஏற்ற) பிரிஞே? இ இரண்டும்-(நன்மக்களிடத்து வறுமையும் புன்மக்களிடத்தச செல்வமும் ஆகிய) இந்த இரண்டும், ஆங்கே - அவ்விடத்திலே, நயவாது நிற்கும் - நன்மைப்படாமல் நிற்கின்ற, நிலை-நிலைமையை, வியவாய் காண் - (நீ) வியர்த்து பார்; (எ - று.)

செ

செல்வவறுமைகளுக்கு முற்பிறப்பின்வினையே யொழிய இப்பிறப்பில் அவரவர்குணம் காரணமன்று என்று பேதைமையொழிய விளக்கியபடி.

கயவார்-கயத்தையுடையவர்: உடன்பாட்டுக் குறிப்பு வினையாலணையும் பெயர். கயம்என்பது - உதவிசெய்தலென்னும் பொருளதாதலே "செல்வம், கயனுடையான்கட் படின்", "கயனுடையான் நல்கூர்ந்தானெதற்" எனத் நீருக்குநிலையுங் காண்க; இனி, கயவார்என்பது-கயவன்னும் வினைப்பகுதி யடியாப்பிறந்த எதிர்மறை வினையாலணையும்பெயராய், (செல்வத்தை ஒரு பொருளாகக்கருதி) விரும்பாதவர் எனப் பொருள்பட்டு, மேன்மக்களா தலுமாம்.

காண்-காணம்; முதனிலைத்தொழிற்பெயரி. 'காணுவது-செய்யத்தகாத வற்றின்கண் உள்ளமொடுங்குதல், ஆதலால், தான் சேர்ந்திவருத்திதற்கு உரியரல்லாத நல்லோரிடம் நீங்காது-பலகாலஞ்சேர்ந்திருக்கிற நல்குரவை 'ஈனின் தகைவு' என்றார். கொல்-இடைச்சொல், இரண்டிடத்தும் ஐயவி னுப்பொருளது. ஓ-அசை. பயவார்-பயவன்னும் வினைப்பகுதியடியாப் பிறந் தஎதிர்மறைத்தெரிநிலைவினையாலணையும்பெயர்; பயத்தல் - பயன்படுதல். பயின் பரம்புதலாவது-காற்புறமும் ஒட்டும்படி வியாபித்தல். 'பயின்கொல்' என்றது, தகாதவிடத்தில் நெடுங்காலம் நீங்காது நிலைநிற்றலால். வியவாய்-உடன்பாட்டு வலலொருமை முற்றெச்சம். இரண்டும், உம் - முற்று. ஆக்கு-அங்கு என்பதன் ரீட்டல். ஏ - அசை. (ஏ)

உசூ. வலவைக ளல்லாதார் காலாறு சென்று
கலவைக ளூண்டு கழிப்பர்—வலவைகள்
காலாறுஞ் செல்லார் கருணையாற் பூப்பவே
மேலாறு பாய விருந்து.

(இ - ன்.) வலவைகள் அல்லாதார் - ராணிலிகளல்லாதவர் [நாணமூ டையயோகினியர்கள்], (வறுமையினால்), கால் ஆறு சென்று-தங்கள் கால்க னால் அரவழிநடக்கிறபோய், கலவைகள் உண்டு-(அங்கங்குச் சிறிதிறிதாக இரந்துபெற்ற பலவகைக்) கலப்பானஉணவுகளைப் புசித்து, கழிப்பர்-(கா லஞ்) கழிப்பார்கள்; வலவைகள்-ராணிலிகளான அயோகினியர்களோ, (செ ல்வமுடைமையால்), கால் ஆறுஞ் செல்லார்-காலால் வழிநடத்தலுஞ் செய் யாதவராய் [ஓரடியெடுத்து வைத்தலேனும் வேண்டாதவராய்], இருந்து - (இரப்போர்க்குக் கொடுக்க மனம்இல்லாமல் கதவடைத்துத் தம்வீட்டினுள் னேயே) இருந்து, மேல் ஆறு பாய-செய்யாறு பாலாறு தயிராறுகள் மேன் மேற் பெருக, கருணையான்-பொறிக்கறிஞருடனே, தூய்ப்ப - (நல்லுணவு னைத் தாம் தனியே) உண்பார்கள்; (எ - று.)

இப்படி தகாதவரிடம் உண்டாவது கன்மையில்லாதசெல்வமா மென இப்பாட்டு கன்றியில்செல்வ மென்ற அதிகாரத்துக்கு ஏற்றதாயிற்று.

சிலப்பதிகாரத்தில் "மாதர்க்கோலத்து வலவையி னுரைக்கும்" என்ற நிடத்து, அடியார்க்குநல்லார்'வலவையின்-ராணிலிகளைப்போல;"வலவை

னல்லாதார்" என்றார் பிறரும்' என்றதனாலே மேற்கோள் காட்டியுரைத்தது காண்க. இனி, வலவையென்பதற்கு-பேய்என்பொருளும்உள்ளதாதலால், 'வலவைகளல்லாதார்' என்பதற்கு-பேய்த்தனமுடையவரல்லாதவர்என்னும் பொருள் கொள்ளலாம். கலப்புடையது, கலவை: கதம்பம்; ஐ - கர்த்தாப் பொருள்விகுதி. காலாறும்செல்லார்,உம்-இழிவுசிறப்பு. ஏற்றவானமிருத்தலாலும், காரியமில்லாமையாலும், சிறிதும் நடந்துசெல்லாரென்க. கருணையான்-'ஆன்' என்னும் மூன்றாவதுருபு, இங்கே உடனிகழ்ச்சிப்பொருளது; "அங்குகையா லேங்குகுடைய" என்பதிற்போல. தய்த்தல்என்றவினைக்கு 'கல்லுணவுகளே' என்றசெயப்படுபொருள் வருவிக்கப்பட்டது,அவாயினிலையாம். தய்ப்ப-பலர்பால் வினைமுற்று;ப-விகுதி; இவ்விகுதியே இங்கு எதிர்காலங்காட்டிற்று. விருந்து எனப் பதம்பிரித்து, பண்பாகுபெயராய்,புதிய உணவுகளேயென்றும்உரைக்கலாம். இனிமேலாறுபாயஇருந்தவென்பதற்குஉடம்பின்மேல் வேர்வைநீர் ஆறுப்பெருக வீட்டினுள்ளேயே யாசரை வரவொட்டாது கதவடைத்தி) இருந்து என்றும் பொருளைகொள்ளலாம்.

உஊஉ. பொன்னிறச் செந்நெற் பொதியொடு பிள்வாட
மின்னெனிர் வானங் கடலுள்ளுங் கான்றுகுக்கும்
வெண்மை யுடையார் விழுச்செல்வ மெய்தியக்கால்
வண்மையு மன்ன தகைத்து.

(இ - ன்.) பொன் நிறம்-பொன்போன்ற நிறத்தையுடைய, செந்நெல்-செந்நெற்பயிர்கள், (நாகெயிற்கழுனிகளிலே), பொதியொடுபிள்வாட-பொதிந்திருக்கும் கதிர்களோடு தமது கரும் உட்படவாடாநிற்க, (அப்பழமழையைப்பொழியாமல்), மின் ஒளிர் வானம்-மின்னல் வீசுகப்பெற்ற மேகங்கள், கடலுள்ளும் கான்றுஉகுக்கும-சமுத்திரத்தினிடையில் நீரை வெளிப்படுத்தி சொரிதலுமுண்டு; வெண்மை உடையார்-அறிவின்மையுடையவர்கள், விழுச்செல்வம் எய்தியக்கால்-மேன்மையான செல்வத்தைஅடைந்தால், வண்மையும்-(அவர்கள்) தானஞ்செய்தலும், அன்ன தகைத்து - அப்படிப்பட்ட தன்மையையுடையது; (எ - று.)

அறிவிலாதார் தம்மிடம் அகப்பட்ட செல்வத்தைச சற்பாத்திரத்தில் உபயோகப்படுத்தாமல் தகாதவர்க்கு உதவுவர் என்பது கருத்து.

உவமையணி: எந்தக்காட்டுவகைமையணியென்றும்; பின்வரக்கியத்தில் 'அன்னதகைத்து'என உவமபுருபு வந்ததனால். பலர்க்கும் உபயோகப்படுதலால்இனியமையாத பயிர்-பலர்க்கும் உபயோகப்படுவின்றாலோர்க்கும், உவர்ப்புசுவையுடைமையால் பயன்படாதகடல்-தர்க்குணமுடைமையாற் பயன்படுதலில்லாத கல்லவரல்லார்க்கும் உவமையாயின.

செஞ்செல்-ஒருவகைச நிறந்தநெல்; இது - நீரில் வீளைவது. பொதி - கருவை உள்ளே பொதிந்திருத்தலையுடைய கதிருக்குக்காரணப்பெயர், கருத்தாப்பொருள்விகுதி புணர்ந்து கெட்டது. மீன்-பயிரின் இனக்கரு. வாட

**வன்னஞ் செயவெனைசசம்-உடனிகழசிப்பொருள தாதலின, கிகழகால முடையது. வானம்-ஆகாயதநிற கருளகிகரும மேகதகரு, இடவாதுபெ யர், அம-சாரியை கடலுள்ளும, உம-இழிவுசிறபபு காணு, கால - பகுதி வெணமை-அறிவுமுதிராமை வெண்மையுடையார-அசாரமானவாஎனபபடி விழு விழும மெனபதன் விகாரம விழுமம எனபது - சிறபபெனனும பொ ருள தரும உரிசசொலலாதலி, ''விழுமரு சீமையுளுசிறபபு மிமிமைபபும'' எனற தொல்காப்பியத்தாலறிக வணமையும,உம இறநததழுவியஎசசம**

உ.ஏ0 ஒதியு மோதா ருணாவிலா ரோதாது
மோதி யறிவா ருணரவுடையார—தூயகாக
நலகூருதுஞ செலவ ரிரவாதா ரெலவரு
நலகூருதா ரீயா ரெனின

(இ - ன்) உணாவு இலார-பருத்தறிவிலலாதவாகள, ஒதியும-படிதது ருநதாலும, ஒதா-படியாதவாகளே உணாவு உடையார பருத்தறிவுடைய வாகள,ஒதாதும-படியாதிருநதாலும,ஒதிஅணையார படிததாறபோனறவாக னே, தூயது ஆக-(மனம)பரிசுதத்முடையதாயிருகக, இரவாதா யாசிதத்ல செயயாதவாகள, நலகூராதும வறுமையடைநதிருகதாலும, செலவா ஐசவ ரியமுடையவாகளே செலவரும செலவமுடையோரும, ஈயாஎனனி (தக கோராகருக) கொடாமறபோவாராயின, நலஊராரா - தானதிறபபட்ட வாகளே. (எ - று)

உபமான உபமேயதத்மை தோனறத் தனிதத்னி இரணடிறகின இபபாடடிற கூறபபட்டன, அதிகாரம நனறியிலசெலவ மாதலால, இப பாடடில முனனிரணடடி - உபமானமும பினனிரணடடி உபமேயமும ஆகும படபிறநதபயனஅறிவாதலபோல, செலவதிறகுபபயன தககவா கு ஏத னெனபதாம படிதத்மை அறிவிலலாத கறறறிமோனைகள போல வா, தகவாகரு ஈயாத செலவ ரெனக செலவனறியும இவவாதார படிப பினறி உணாவடைநதவாபோல அதிசயிகக்ததகவாவா

ஒதியு ம, செலவரும எனற உமமைகள உயாவுசிறபபு, ஒதாதும, நல கூராதுமை எனற உமமைகள - இழிவுசிறபபு ஒதி ஒதினுல, எசசதனிறபு இனி, ஒதி-அறிவுடையவனெனப பெயருமாம

முனனிரணடடில உபமானஙகளைக கூறிய முறைமைகரு மாறுபப டாகப பினனிரணடடிலில உபமேயஙகளைக கிறதினைது, எந்நிரனி றநதப பொருள்கோள் முதலடி - முற்றுமோனை (கம)

நான்காவது

# துன்பவியல்.

மனிதா மனததிறகுத துனபமுணடாதலேபபறறிககூறும பிரிவு, அத தனபஙகள இரபபோகஙியாமை முதலிய காரணஙகளால உணடாகும. அதனை இதமுதல நானகு அதிகாரஙகளாற கூறுகினறார

## உஅ அம அதிகாரம.— யாமை.

அஃதாவது - வறியவாக ராய இரதவாகளுகு இலலேயெனறுபடி கொடுததலேச செயயாமை (ஏழப பததாம அதிகாரமாகிய ஈகைககு எதிர மறையாய அதனபின வைதது கூறிய இவவதிகாரததை இஙகுவைதத தறகுக காரணம எனனெனறால —சமபாதிபபவறறகும பிறாகுமபயன படதலிலலாது ஒழகூடிய கனறிலிலகெலவ மாதலால, அதுபிறாகுபபய னபடாமையா லுளளதாகுமறற பெருமபா றமையும மனதறகுததனப மூடடிவதம மிகக இழிபுடையதாதலு மபறறி யாமையை அதனபின இவ வதிகாரததில விவரிததுக கூறுகினறனரெ னற அறிக ழே அதிகாரததின இறுதிசசெயயுளில செலவரு நலகூாதா ரயாரெனி" னெத தோறறு வாய செயயபபடட யாமையின இழிவை விரிததுககூறுகினறமையின, இவவதிகாரம னறியிலசெலவதனபினவைகபபடடதெனறுகொளக. யாமை - எதிரமனறத தொழிறபெயா

உ கெ நடடாரகது நலளா சுவாகது மூலவுரையா
லிடடது பாரதுணடு விடடுணடாகிடட
தலடைதிரு தணலெடாழு மாவதின மாகக்
சலடைகுமா மாணடைக ளகவு

(இன) நடடாரகும (தமமோடு) சிநேகஙகொணடவாகளுகும், எள ளாதவாகளு மெநேகஙகொளளாதவாகளுகும, உனவுரையால (தமகளு) உ ளளஅளவிறகுஏறப, அடடதுபாரதது சமமபலசெயத உணவைபபகுகிடகு தொடைதது, உணடல (பினபுதாமு) உணணுதல —அடடுசணடல சமைத தது உணடுவாழுமவித மாம (அநகுணமினறி) அடடதுசமைதத உணவை, அடைததுஇருததுஉணடு (தமமோடடிலுளள பருமவரெவொணணுபா வாயிற கதவை)மூடிததாமஎனலேயிருதது(நிதது, ஒழுகும நடகஙகின றவாது இல மாகவடகு பயனலலாதமனிதாகளுகு,ஆணடைகதவு மேலுலகததின கத வு; அடைகும (உடபுகவொணணாது) மூடபபமெ, (எ - று) —ஆம-அசை

"செலவிருதோமபிவருவிருதுபாரதிருபபன, நலவிருதாவானத தவாகு", "ஒனருக நலல தமியோமப லாகுகதபின, ஈனாயக டகஙகு ளாக கெதுணடல—எனறிரணடி, குனருப புகழோன வருகெனறமெலுல கம, நினறது வாயில கிறாது' எனறபடி இமமையில விருதோமபியவினை மறுமையில தேவாகள எதிரொணடு உபசரிபபராதலால,அபபடியிலலாத வனுககு மேலுலகததினகதவு அடைகபபடி மெனபபடடது.

நட்டார்-சுற்றத்தார், கள்ளாதவர் - விருப்பினர் என்றும், முன்பழக்க முண்மையாற் குறித்து வர்தவரும் அஃது இன்மையாற் குறியாதுவந்தவரு மென்ற இருவகையிருந்தினருள் முன்னையர்-நட்டார் பின்னையர் - கள்ளாதவர் என்றுங் கொள்ளலாம். இவர்களுள், கள்ளாதவரினும் நட்டவர் வருவது பெரும்பான்மையாதலாலும், அவர்கட்கு உதவாமை பெரும்பழிப் புக் கிடமாதலாலும், அவர்களே முன்வைத்தது.

உம்மைகள் இரண்டும்-எண்ணுப்பொருளன. உள-உள்ள;தொகுத்தல். அட்டது என்னும் ஒன்றன்பால் வினையாலணையும்பெயர், சாத்தியோருமை; அட்டலை யென்க. 'அட்டது' என்ற ஒருமைசொல், பிரசசிறியதாயினும் பகுத்துண்ணுதலே தகுதியென்பதைவிளக்குமென்க; இக்கருத்தே,'உள வரையால்'என்பதனாலும்கருவிளக்கப்பட்டது. பாத்து-பகுத்தினென்பதன் மரூஉ. ஆவது எதிர்கால வினையாலணையும்பெயர்; செல்வம்படைத்ததனால் பெறலாகும் பயனென்க. மூற்பிறப்பின் நல்வினையால் அரிதிற்பெற்றசெல் வத்தைத் தக்கபடி பயன்படுத்தாத அவிவேகிகளான மனிதரை மக்கள்என் ஞது'மாக்கள்'என்றார். அடைக்கும் செயப்பாட்டுவினைப்பொருளில்வந்த செய்வினைச் செய்யுமென்முற்று. 'அடைக்கும் கதவு' என்றமுடிபுக்குவிதி-செய்யப்படு பொருளைசெய்ததுபோலத், தொழிறபடக்கிளத்தலும்வழக்கி லுளஞரிந்தே" என்பது. செய்மைப்பொருள் குறிக்கும் அகரச்சுட்டடைச் சொல்லடியாப் பிறந்து முதல் நீட்சிபெற்ற ஆண்டு என்பது-இங்கே, மறு மையில் இன்பம்பெறுதற்கு உரிய சுவர்க்கத்தைக் குறித்தது.

மூலவடியில், தொடைமரணி காண்க. (க)

உஎக. எத்துணை யானு மியைந்த வளவினுற்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர்—மற்றைப்
பெருஞ்செல்வ மெய்தியக்கற் பின்னறிது மென்பா
ரழிந்தார் பழிகடலத் துள்.

(இ - ன்.) எ துணை ஆனும்-எவ்வளவானலும், இயைந்த அளவினுல் - தமக்குக்கூடிய அளவால், சிறுஅறம் செய்தார்-சிறிய தருமங்களாயினுஞ் செய்துவைத்தவர்கள், தலைப்படுவர்-மேன்மை யடைவார்கள்; மற்றை-இவ ணம் அப்பொழுது அப்பொழுது தருமஞ்செய்யாத, பெருஞ்செல்வம் எய் தியக்கால் பின் அறிதும் என்பார்-'நிருதியானபொருள்கிடைத்தால் அதன் பின்பு (தருமஞ்செய்தலே) ஆலோசிப்போம்' என்று வாழ்நாளைக் கழிப்பவர் கள், பழிகடலத்தன் அழிந்தார்-உலகநிந்தனையாகிய கடலில் அகப்பட்டுச் சிதைந்தவராவர்; (எ - று.)

எத்துணையானும், உம்மை-இழிவுசிறப்பு. ஆனும்-ஆயினும் என்பதன் மரூஉ. மற்றை யென்னும் இடைச்சொல் - பிறிதென்னும் பொருளது. கடலத்தன், அத்து - சாரியை, பழிகடலத்தன் அழிந்தார்-வரம்பில்லாத பழியை யடைவ ரென்பதாம்; இனி, பழிக்கப்படுவது என்ற காரணத்தாற் பாபமும் பழியெனப்படுதலால், பாவக்கடலில் மூழ்குவ ரென்றுமாம். பழிக் கடலத்தன்எனப்பண்புத்தொகையில்கலியரட்டிவரற்பாலது,இசையின்பம்

நோக்கிப் பழிகடலென இயல்பாய் நின்ற தென்க. அழிக்தார் - நிச்சயமாய் அழிவர்;தெளிவுபற்றி எதிர்காலம் இறக்தகாலமாகச சொல்லப்பட்ட கால வழுவமைதி. மற்றையென்பது, என்பார் என்பதோடு இயையும். பின் இங்கே காலங்குறிக்கும்.

பெருஞ்செல்வம் வருவது நிசசயமன்மையாலும், அங்ஙனம்வர்தாலும் அதன்பின் உடம்புபேடித்திருப்பது நிலையில்லையாதலாலும், கிடைத்தவரை யில் இனமையிலே அறஞ்செய்யாதவர் பின்பு நாய்காணிற் கற்காளுவாரும் நன்மை பெருரென்பதாம்.

"மற்றறிவாம் நல்லவினை", "இன்று கொலன்று கொல்" என்னும் இர் னூற் செய்யுள்கள் இங்கு உணரத்தக்கன. (உ)

உஎந. தாய்த்துச் கழியான் றுறவோர்க்கொன் ருகலான்
வைத்துக் கழியு மடவோனே—வைத்த
பொருளு மவனே நகுமே யுலகத்
தருளு மவனே நகும்.

(இன்.) தாய்த்து கழியான்-(அருமையாகப்பெற்ற பொருளைத்) தான் அனுபவித்துக் காலகழியாமலும், துறவோர்க்கு ஒன்று ஈகலான்-துறவற த்தார்க்கு ஒருபொருளே யேனும் கொடுத்து உதவாமலும், வைத்து கழி யும்-(பாடுபட்டுத்தேடினபொருளை வீணாக) வைத்துப் (பயன்கொள்ளாமல்) இறக்கின்ற, மடவோனே அவனே - அறியாமையையுடையவனுக்கு அந்தப் பெரிய லோபியை, வைத்த பொருளும் - (அவன் தேடி) வைத்த செல்வ மும், நகுமே - (பார்த்துச) சிரிக்கும். உலகத்து அருளும் - உலகத்திலே வீணாகுகிற கருணையென்னுஞ் சிறக்குணமும், அவனே நகும் - அவனைப் (பார்த்துச) சிரிக்கும். (எ - று.

இங்கே, நகுதல்-பிறனை இகழ்தல்காரணமாக உண்டாயிற்று; பரிகாச மாகசிரித்தல். "அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை", "அறனும் அருளுடை யான் கண்ணோடியாகும்" என்றபடி தானம் முதலிய தருமகாரியஞ்செய்து சுற்கதியைப் பெறுதற்குக் காரணமான அருளோடு சிறிதும் உடையனுகாமல் பொருளேப்பா படுத்தின்றதபற்றி, அவனருள் இவனே இகழ்ந்து சிரிப்பதா யிற்று; அருளுடையரும்பிறர்க்குகொடாவிட்டாலும் தானுவது அனு பவிக்கலாமே, அதுவுர் செய்யாமல பொருளேயிட்டுதலேயே பயனுக்கரு திக் காலகழித்த அறியாமையை நோக்கி, அர்தப்பொருளும் சிரிப்ப தாயிற்று.

துறவோர்க்கு என்பதற்கு - '(ஆதரிக்கத்தக்கவரால்) துறக்கப்பட்ட வர்க்கு' என்றும் உரைக்கலாம். கிருஸ்தாசரிமத்திலிருப்பவன் மூற்று துறந்த யோகவொழுக்கத்தார்க்கு அடவொழுக்கொறியை முடியச்செல்லு மளவும் அசசெலவிறருப் பினி நோய் குளிர் முதலியவற்றால் இடைந்துவரா ராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலியன உதவி அர்தொறியல் வழுவாமற் செலுச்சவேண்டியவரலோ 'இல்வாழ்வானென்பான் கிடை யுழுவார்க்கும், கல்லாறு னினறாதலோ' என றதரு :தாளிறுபாய, அத் நிப்பவரால் துறக்கப்பட்டவர்க்குத் தான் ஆதாவாய் நின்று வேண்டுவன செய்யவேண்டுபவனுதலே "துறந்தார்க்குந் துவவாதவர்க்கு மிறந்தார்க்கும்,

இல்வாழ்வானென்பான் தினை" என்ற திருக்குறளினுலும் அறிக. பொருளும், அருளும் என்ற உம்மைகள் - முறையே எதிரதும் இறந்ததுந்தழுவிய எச்சப்பொருளன; எண்ணுப்பொருளனவாகா: வெவ்வேறு வாக்கியத்தில் வந்தனுல். ஏ - தேற்றம்; ஈற்றசையுமாம்.

பற்றுக்களே முற்றத்துறத்தலே புடையவ ரென்ற பொருளில், துற வோர் என்பதிற் பகுதியாகிய துறவு - செய்வினையென்றும், கோகணனவ ரால் விடப்படுதலேயுடையவ ரென்ற பொருளில், துறவு-செயப்பாட்டுவினை ப்பொருளில் வந்த செய்வினை யென்றும் அறிக. துறவோர்-உடன்பாட்டுப் பெயரின் ஈற்றயலகாரம் ஒகாரமிற்று; மடவோன் என்பதிலும் இது. கழி யான், ஈகலான்-எதிர்மறை முற்றெச்சங்கள். மடவோன் என்பதில், மடம் அல்லது மடமை-பகுதி. 'அருளும் பொருளும் நகும்'—அபிநயியில்,செய் யாதது செய்வதுபோலச் சொல்லப்பட்டது. ஒன்று என்பதன் இறுதியில் இழிவு சிறப்புமை விகாரத்தால் தொக்கது. மடவோனே, அடனே - ஒரு பொருளின்மேல் வந்த பெயர்கள். இயைபாவது விசேடணம், விசேடியம் என்ற இரண்டிலும் வேற்றுமையுருபுகளே விரித்துரைப்பது, ஒருவகைப் பாவைநடை.

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள், ஞ்ஞ மகத்தே நகும்" என்ற திருக்குறளோடு இதனை ஒப்பிக்க. (கூ)

உஎஅ. கொடுத்தலுங் தய்த்தலுங் தேற்ற விடுக்குடை
யுள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ மில்லத்
தருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தா
லேதிலான் அய்க்கப் படும்.

(இ - ன்.) கொடுத்தலும் - (பிறர்க்குச்) கொடுத்தலேயும், தய்த்தலும் - (தான்) அனுபவித்தலேயும், தேற்ற-அறிந்து செய்யாத இடுக்கு உடை உள் ளத்தான் - லோபகுணத்தையுடைய மனமுடையவன், பெற்ற - சேர்த்து வைத்த, பெரு செல்வம்-மிகுந்த ஐசுவரியமானது,—இல்லத்து உரு உடை கன்னியரை போல-குடியிற்பிறந்த வடிவழகுள்ள பெண்களைப்போல, பரு வத்தால்-(அனுபவித்தற்கு உரிய) காலம் வந்தபொழுதில்,எதிரான் தய்க் கப்படும் - அபலரனுல் அனுபவிக்கப்படும்; (எ - து.)

குடும்பத்திற்பிறந்த மணஞ்செய்யப்படாத மகளிர் இங்கே லோபியின் செலவத்திற்கு உவமை; தன்னே வருந்திப்பெற்றவளாத்தவனுக்கு உத வாமல் அது செய்யாத பிறனனுபவத்திற்கே பின்பு உதவுதலாகிய இவ் வொரு பொதுத்தன்மையில் மாத்திரமே யென்க.இப்படிப்பட்ட கன்னியர் தன்மையை, "வலம்புரியின்றழுத்தம் மண்மீசையவர்கட்கல்லால், வலம்புரி பயத்தை யெய்தாது அணையரே மகளிர்" எனச் சிந்தாமணியிலும்,"பலவுறு நறுஞ்சாந்தம்படுபவர்க்கல்லதை, மலியுளேபிறப்பினும் மலேக்கலைதா மெனசெய்யும், நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனியளே", சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கல்லதை, நிருளேபிறப்பினும் நீர்க்கலைதா மென்செய்யும், தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனியளே", "எழ்ப கரின்னிசை மூல்பவர்க்கல்லதை, யாழுளேபிறப்பினும் யாழ்க்கலைதா

மென்செய்யும், சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கணியளே" எனக் கலித் தொகையிலுங் கூறியவாறு காண்க. உவமையணி. லோபியின் பெருஞ் செல்வம் எதிலான் துய்க்கப்படுதல்-கள்ளர் முதலியோராற் பறித்துக்கொள்ளப்படுதல். லோபத்திற்குப் பற்றுள்ளமென்னு ஒரு பெயராதலால், அப் பொருள்கருதி, அதனை இங்கு 'இடுக்குடையுள்ளம்' எனலர். பொருளிடத் தகுமிடத்து விடாது பற்றுதலேசெய்யும் உள்ளம்: எனவே, லோபமாம்.

தேறாரு என்பதை - தேருவன்பது விரித்தலவிகாரம்பெற்ற தென்னு வது, பிறவினை தன்வினைப்பொருளில் வந்ததென்னுவது, இருவினைக்கும் பொதுவென்னுவது கொள்க. 'சுட்பாடல் தேற்றுதவர்'; "வாளினுற் பேணி னல்லால் வாயினுற்பேசல்தேற்றேன்", "வாணிகமொன்னு துக்தேற்ருய்", "தேற்றுய்பெரும" "தேற்றுவொழுக்கம்" எனப்பிறவிடங்களிலுங் காண்க. இடுக்கு என்னுஞ்சொல்-லோபமென்னும் பொருளதாதலே, இத்நூலில் "இடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்" என்றதனுலும் அறிக. இடுக்கு - முதனிலைத்தொழிற்பெயர்; இடுக்குதல் - இறுகப்பிடித்தல். இனி, இடுக்கு என்பதை இடுகு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெய ரெனக் கொண்டு, குணங்குறைதலேயுடைய அற்பமனமுள்ளவனென்றும் உரைக்கலாம். உரு, கண்ணி, பருவம் - ரூபம், கர்யா. பர்வம் என்னும் வடமொழிகளின் திரிபுகள். பருவத்தால் - மூன்ருவேற்றுமையின் 'ஆல்' உருபு ஏழாவதன் இடப்பொருளில் வந்ததனுல் உரு முமயக்கம்; "காலத்தினுற் செய்த நன்றி" என்பதிற் போல. (அ)

உஎடு. எறிநீர்ப் பெருங்கடல் லெய்தி யிருந்து
மறுநீர்ர் சிறுகிணற் ரூறல்பார்த் தாண்பர்
மறுமை யறியாதா ராக்கத்திற் சான்ரோர்
கழிநல் குரவே சலே.

(இ - ள்.) எறி-(அலைகளை) ய்சுகிற, நீர்-மிக்க நீரையுடைய, பெருகடல்-பெரிய சமுத்திரத்தை, வய்தி இருந்தும் - (தாம்) அடைந்திருந்தாலும், (அது உவாப்பிஞற் பயன்படாமையால், எல்லோரும்), அறு நீர் - (இடையிடையே) அற்றுஅற்றுந சுரக்கிற நீரையுடைய, சிறு கிணறு-சிறியகிணற்றின், ஊறல்-ஊறுதலை, பார்த்துதேடிக்கண்டு, உண்பர்-(அற்நீரைக்) குடிப்பார்கள்; (ஆதலால்),—மறுமை அறியாதார் ஆக்கத்தின்-மறுமைப்பயனேயறியாத லோபிகளுடைய பெருஞ்செல்வத்தினும், சான்ரோர் கழி நல்குரவே - (மறுமைப்பயனேயறிந்த மிக்கசுற்றுணங்களால்) நிறைந்த பெரியோரதுமிக்க வறுமையே, தலே-மேலானது; (எ - று.)

சான்ரோர் வறியராயிருக்கையில் உதவுகிற அவ்வளவும் உதவார், மேற் மக்கள் செல்வம் நிரம்பியபொழுதிலும் என்பது கருத்து. வறுமையடைந் திருந்தும் செல்வமுடைய லோபிகளேபோல ஆகாமல் சான்ரோர் மறுமைப் பயனையடைவர் என்று கருத்துக்கொள்ளினுமாம்.

'மிக்கசெல்வமுடைய லோபிகளேயடைந்திருந்தாலும் அவர்கள்பயன் படாமையால், உலகத்தார், சிறிது சிறிதாகவாயினும் பயன்படத்தக்க வறிய

ரான கல்லோரைத் தேடியடைந்தீ உண்டேவாழ்வர்' என்னும்பொருள்தோன்ற நின்றதனால், முன்னிரண்டடி-பிறிதுமோழிதல் என்னும் அலங்காரம்; வடநூலார் அப்ரஸ்துதப்ரசம்ஸை யென்பர்: உபமேயத்தைக் கூறாமல் உபமானத்தைமாத்திரம் கூறி அதனால் உபமேயத்தைப் பெறவைத்தலும்-இல் வணியின் இலக்கணம். பின்னிரண்டடியில், அறிவிலாரது செல்வத்திலும் அறிவுடையார் வறுமையே சிறந்ததென்பதற்கு முன்னிரண்டடியின் கருத்தைக் காரணமானது ஏதுவணியின்பாற்படு மென்க.

ஊறல்என்னுந் தொழிற்பெயர், ஊறுதலையுடைய நீருக்கு ஆகுபெயர். இதில், அல்-கருத்தாப்பொருள்விகுதி யென்றுங்கூறலாம். ஆக்கப்பட்டது, ஆக்கம்; அம்-செயப்படுபொருள்விகுதி: ஆக்குதல்-சம்பாதித்தல், உண்டாகசெய்தல். கழி-மிகுதியுணர்த்தும் உரிச்சொல். தில-தன்மையையுடைய தென்றுவது, உத்தமஅஃறிணை தலைபோலச் சிறந்ததென்றுவது பொருள்.

"கடல்பெரிது, மண்ணீருமாகாததனருகே சிற்றூர்ல், உண்ணீருமாகிவிடும்" என்பதனை இச்செய்யுளின் முதலிரண்டடிகளோடு ஒப்பிடுக.

மேற் உகூ- ஆம் செய்யுளும் இக்குக் கவனிக்கத் தக்கது. (கூ)

**உஎஉ.** எனதென தென்றிருக்கு மேழை பொருளீ
யெனதென தென்றிருப்பன் யானுங்—தனதாயிற்
றானு மதனீ வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனீ யது.

(இ - ன்.) எனது எனது என்று இருக்கும் ஏழை பொருளை - 'என்னுடையது' 'என்னுடையது' என்று (மிக்கஅபிமானங்கொண்டு செலவுசெய்யாமல்) இருக்கிற அறிவில்லாதலோபி (சேர்த்துவைத்துக்கொண்டுள்ள) செல்வத்தை, யானும் எனது எனது என்று ஆருப்பன் - (அப்பொருளோடு யாதொருசம்பந்தமுமில்லாத) யானும் 'என்னுடையது' 'என்னுடையது' என்று (அபிமானக்தோன்றச்) கூறிச் சளிப்புற்றிருப்பேன்; தனது ஆயின்-(அசசெல்வம்) அவனுடைமதாயிருக்குமானால், தானும் அதனை வழங்கான் பயன்துவ்வான்-அவன்தானும்அசசெல்வத்தைப் (பிறர்க்குக்)கொடுத்தலும் (அத்தசசெல்வத்தால்) இன்பப்பயனைத் தான் அநுபவித்தலுங்கூடுமே அது செய்கிறதில்லை: யானும் அதனை அது - தானும் அப்பொருளை அப்படியே [பிறர்க்குவழங்குதலும் பயன்றுவ்த்தலும் செய்யேன்]; (எ - று.)

சம்பாதித்த லோபி செல்வத்தை உபயோகப்படுத்தாமல 'எனது' என்றசொல்வதற்கும் சம்பாதியாதவன் அப்படி சொல்வதற்கும் ஒன்றும் வித்தியாசமில்லை; ஏனெனில்,—செல்வத்தின் பயனுயிய தானுபவித்தலும்பிறர்க்குக் கொடித்தலும்இருவர்க்கும் இல்லையாதலால்என்பது கருத்து.

மிக்க லோபகுணமுடைய ஒருவனது செல்வத்தைச்சுறித்துப்பிரகாசஞ்செய்யுமியல்புடைய ஒருவன் சொன்னதாக இச்செய்யுள் செய்யப்பட்டதென அறிக.

எனது-யான் என்பதனடியாப்பிறந்து அகரச்சாரியையும் 'து' விகுதியும் பெற்ற ஒன்றன்பாற் குறிப்பு வினையாலணையும்பெயர்; ஆரும்வேற்று மைவிரியன்று. அடுக்கு, செல்வத்தினிடத்தில் மிக்க அன்பை விளக்க வந்தது. இரண்டாமடியில் அதிகத்தைத் தணிவுணர்த்த வந்ததாகவும் கொள்ளலாம். தன்னேடு இயைபில்லாத பொருளே எனது என்றகருதி அதனிடத்துப் பற்றுசசெய்யும் அபிமானம், மகாரமெனப்படும்; இதன்இனமாயினல்லாத உடம்பை யானெனன்பது - அகங்காரம். "நுண்ணுணர்வின்மை வறுமை" ஆதலால், அறிவாகிய செல்வமில்லாத லோபியை இங்கே 'ஏழை' என்றார்; இனி, செல்வமிருக்கும் பயன்பெருமையால் அவன் வறியவனேடு ஒப்பினென்னுங் கருத்தால் ஏழையென்றதாகவும் கொள்ளலாம். ஏழையென்பது - உயர்திணைப்பெயராதலின், 'ஏழைபொருன்' என அதன்முன் வலியியல்பாயிற்று. இனி, ஏழையானவன் பொருளே எனது எனது என்றிருப்பன் என எழுவாய்த்தொடராகவும் உரைக்கலாம். யானும், உம்மை - இறந்ததது தழுவிய எச்சமும், இழிவுசிறப்புமாம்.

இப்பாட்டிற்கூறியுள்ள விஷயம்கைப்பை வினத்தலால், இப்பாட்டு-ஸ்தியஸ்துதி என்பாற்படும்.

"க்ருஹமன்யஸிதாதேஹமுதாஸீநோயதி-பவாம: கிம் க தேனவதோ ரந்நோ ரோவயம்" என்னும் வடநூல்மேற்கோள் உணரத்தக்கது. (சு)

உளெ. வழங்காத செல்வரி னல்கூர்ந்தா ருய்ந்தா
நிழந்தா ரெனப்பபடுத லுய்ந்தா—ருழந்ததணேக்
காப்புய்ந்தார் கல்லுதலு முய்ந்தாதங் கைந்நோவ
யாப்புய்ந்தா ருய்ந்த பல.

(இ - ன்.) வழங்காதசெல்வரின்-(பொருளை) உபயோகப்படுத்தாத தனவான்களினும், நல்கூர்ந்தார் - வறுமைப்பட்டவர், உய்ந்தார் - (தன்பக்கலினின்றும்) தப்பினர்; (அது எப்படியெனில்,—) இழந்தார் எனப்படுதல் உய்ந்தார் - (இருந்தபொருளை) இழந்துவிட்டார்கள் எனப்படுகிற அபவாதத்தினின்றும் தப்பினர்கள்; அதனே உழந்து காப்பு உய்ந்தார் - அப்பொருளை வருந்திக்காப்பாற்றுகிற [சிரமத்தினின்றும்] தப்பினர்கள்;கல்லுதலும் உய்ந்தார்-(அப்பணத்தைப் புதைத்துவைத்தற்பொருட்டு நிலத்தைத்)தோண்டுகிற வருத்தத்தினின்றுந்தப்பினர்கள்; தம் கை நோவ யாப்பு உய்ந்தார் - தமதுகைகள் நோகும்படி இறகப்பிடித்தலினின்றும் தப்பினர்கள்; உய்ந்த பல-(இங்ஙனம் அவர்கள்) தப்பினவை இன்னும் பல (உண்டு); (எ - று.)

இப்பாட்டோடு "வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன், ரல்குரலே போலு ளனிகல்ல—கொன்னே, அருளில னன்பிலன் கண்ணறைய னென்று, பலரா லிகழப் படான்" என்ற நீதிநெறிவிளக்கச் செய்யுளே ஒப்பிடுக.

இழந்தா ரெனப்படுதல் முதலிய குறைகள் செல்வமுடையவரிடத்து மிகுதியாய் நிற்க, மற்றைப் பயன்பெருதலியபத்தில் செல்வரும் வறியரும் ஒப்பரென்பது கருத்து.

'உய்ந்த பல' என்றது-அருளில்லாதவன், அன்பில்லாதவன், கண்ணோட்டமில்லாதவன், லோபி என்ற பலராலும் இகழப்படுதல் முதலியன இன்மையற்றி. "உடாஅது முண்ணுதுர் தம்முடம்புசெற்றகு, கெடாஅதல்லற முஞ்செய்யார்—கொடாஅது, வைதீட்டினு நிழப்பாவான்றேரும் மலைகாட, உயதீட்டுர் தேவீக கரி", "உண்ணு ஞெளிநிரு ஞெலகு புகழசெய்யான், தனனருக கேரிர தியாகனோயான—கொனனே, வழுகான பொருள்காத் நிருப்பானேல் அது, இழதானென நெணணப்படும"என்ற தணிபின்படி லோபிகள் செலவம நிலலபெரு தழிதலால, 'இழதா சொனப்படுதி லுய்ந தா' எனப்பட்டா. (எ)

உஎஅ. தனதாகத் தான்மகாடான் முயத் தலருக
தமதாய போர்ததே கொடா அர—தனதாக
முனனே கொடிபபி னவாகடியார் தானகடியான்
பின்னே யவாகொடுகுகும போழதி.

(இ - ன்) (சிலகுடிமபகளில், பொருனசோதது வைததவன்), தனது ஆக-(அபபொருள) தனகது உரியதாயிருகக, தான் கொடான-(அபபொழுது) தான (அசசெலவதனதைபபிறாகுகுத) தானஞசெயயான, தாயததாகளும-(பின்பு அப்பொருளைப்பெறுதறகுரிய) தாயததாகளும, தமது ஆயபோழதே - (அப்பொருள அவனகாலதினபின) தமமுடையதாகியபொழுதி, கொடாரா-(தாமும அதனைப் பிறாகுகுத) தானஞசெயயார; முனனே-முனபு [சம்பாதிததவனவாழநதினகாலததில], தனது ஆக-(அசசெல்வம) தன்னுடையதாயிருகையில, கொபபின-(அதனைத தான பிறாகுக) கொடுததால, அவா கடியார-அத்தாயததவா விலகக மாட்டார, பினனே - பின்பு [அவனிறநதபின அசசெலவம தாயததாருடையதாயிருகையில], அவா கொடுகும போழது - அத்தாயத்தவா தானஞசெயயுஞசமயததில, தான் கடியான-(அப்பொருளை ஈட்டியவன) வருதலிலக கமாட்டான, (எ - று.)

பொருளசேமபாதிததவன தனதருமகுல செயயாமலே உலோபததோடு இறநதாலும, அதனபின் அசசெலவததை அடையும் தாயததாரா வது "பிறாகுகுதவி செயயா பெருஞசெல்வம் வேறு, பிறாகுகுதவி யாகுபவாபேரும" என்றபடி நல்வழியிற செலவுசெயது புகழும் புணணியமும பெறுதல்கூடும. அகவனமுமிலலாமலதனைவருமேபெரிய லோபிகளாயுள்ள நிலகுடும்பததாரைப்பற்றி இசசெயயுள செயயப்பட்டதென அறிக.

தாயததவரும், உயமை-இறந்தது நிமுவிய எசசம். தாயமாவது-தமப்பன்பாட்டன முதலானா மூலமாக வநத பொருள, அதனையெடுத்துகொள்ளத்தக தாதையழிசுறறதத்வா-தாயாதா: அவரே இஙகு 'தாயததவா' எனப்பட்டவா. எ-இசைநிறை. கொடாஅர - அளபெடை, செய்யுளோசை நிறைப்பது. தனதாக கொடுத்தின என்பதற்கு - தனகுப் புண்ணியமும புகழும், உண்டாயபடி தானஞசெய்தா லென்றும் பொருள் கொள்ளலாம. மூன, பின - காலகெறிநிதன; ஏ, ஓ - சாரியைகள். (அ)

உகூ. இரவலர் கன்றுக வீவாரா வாக
வீரகிற் ஈரப்பதரம் வண்மை—வீரகின்றி
வல்லவ ரூன்ற வடியாபோல் வாய்வைத்துக்
கொல்லா நரப்பதாங் ரீற்.

(இ - ன்.) இரவலர்-யாசகர், கன்று ஆக-கன்றை ஒப்ப, ஈவார்-கொடுப்பவர், ஆ ஆக-பசுவை ஒப்ப, வீரகின் ஈரப்பத-உற்சாகத்தோடு பயன்தருவதே, வண்மை ஆம்-தானகுணமாம்; வீரகு இன்றி-(அப்படிப்பட்ட) உற்சாகமில்லாமல் வல்லவர் ஊன்ற வடி ஆபோல-வலிமையுடையவர்கள் அழுத்தி வருத்தப் பால்தருகிற பசுப்போல, வாய்வைத்து கொல்ல - பல உபாயங்களைசெய்து வருத்த, ஈரப்பத-பயன்தருவது, ரீழ் ஆம்-கீழ்மைக்குணமாம்.

கன்றைக்கண்டமாத்திரத்தில் மகிழ்சியோடு பாலைக்கரக்கும் நல்ல சாதிப்பசுப்போல, இரப்பவரைக் கண்டமாத்திரத்தில் நிறைமம்பெறுப்பில்லாமல் மிக்க மகிழ்சியோடு அவர்க்குவேண்டியபொருளைக் கொடுப்பதுதான் கொடை; கன்று வாயைவைத்து ஊட்டியருத்தலும் பிறர் பலவாறுபிடித்து அழுத்தலும் மனமின்றிப் பால்சுரக்கிற அற்பசாதிப் பசுப்போல, இரப்பவர் வாயினற்பலபேசி வருத்தலும் மற்றும்பலர் பலவாறு கிர்ப்பந்தப் படுத்தலும் வெறுப்போடுகொடுப்பதுகொடையாகாது என்பது-கருத்து.உவமையணி.

இரவலர் - இரத்தலில் வல்லவர்; இரவலர் எனப் பிரிக்க: அல்லது இரத்தலேயுடையவர்; இரவல் அர் எனப்பிரிக்க: இரவல் என்னும் தொழிற்பெயரில், அல் விகுதியாம். கன்று-இனமைப்பெயர்; "யானையுங் குதிரையுங் கழுதையுங் கடாவையும், ஆனே டைந்து கன்றெனற் குரிய" என்பது, தொல்காப்பியம். ஆக-உவமஉருபு. வீரகின்-பக்குவமாக, சிரமமின்றிஎன்ற படி. வண்மையென்னும் பண்புப்பெயரில், வள்-பகுதி. வாய்-வாயில்; உபாயம். இனி, 'வாய் வைத்துக் கொல்ல' என்பதற்கு-சேர்ந்த இடங்களில் நிந்தனை செய்து வருத்த என்றும், உறைப்பிடங்களில் கருவிகளைக்கொண்டு சோவுபண்ண என்றும் பொருள் கொள்ளலாம். கொல்லுதல் என்பது-இங்கே மிக்க துன்பஞ்செய்தலே யுணர்த்தி நின்றது; "தன்னையே கொல்லுஞ் சினம்" என்ற திருக்குறளிற்போல: அதனை இக்காலடியாரையே மேற்கோள் காட்டினர் பரிமேலழகர். வடஆ-வினைத்தொகை: வடித்தல்-ஊற்றுதல்; இங்கே பால்சுரத்தல். ரீழ்-நீழமையென்னும் பண்புப்பெயரின் விகாரம். (கூ)

உஅ. சட்டலுங் துன்பமற் றீட்டிய வொண்பொருளுங்
காத்தலு மாங்கே கடிந்துன்பங்—காத்தல்
குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பந்
நிறைபதி மற்றைப்பொருள்.

(இ - ன.) சட்டலும் - (பெருமுயற்சியாற்) சம்பாதித்தலும், துன்பம்-வருத்தமாம்; மற்று-பின்பு, சுட்டிய ஒள் பொருளை - அங்ஙனம் சம்பாதித்த நிறைந்த செல்வத்தை, காத்தலும்-பாதுகாத்தலும், ஆங்கே - அவ்வாறே, கடி துன்

பம்-மிக்கவருத்தமாம்; காத்தல் குறைபடின்-அப்பாதுகாப்புக் குறைத்தால், துன்பம்-வருத்தமாம்; கெடின் - (அசசெல்வம்) அழிவடைத்தால், துன்பம்-வருத்தமாம்; (ஆதலின், இவ்வாறு), பொருள் - செல்வம், துன்பக்கு உறை பதி-(பலவகை)வருத்தங்கட்கும் இருப்பிடமாம்;(எ - று.)—மற்றை-அசை.

இப்பாட்டோடு"இன்னல்தரும் பொருளே மீட்டிதலுந்துன்பமே, பின்னதனேப் பேணுதலுந் துன்பமே - அன்ன, தழித்தலுந் துன்பமே யாதோ பிறர்பா, ழிழத்தலுந் துன்பமே யாம்" என்ற நீதிவெண்பாவை ஒப்பிக்க. "ஒண்பொருள், செய்ய மென்பார்க்குந் தயிலில்லே யப்பொருள், காப்பார்க்கு மில்லே தயில்" என்றார் நாமணிக்கடிகையிலும்.

"அர்த்நாசாமார்ஜநே: கம் ஆர்நிதாகாஞ்சநஷணே - ஆயேவ்யயே மஹத்த: கம் சதுமர்த்தாஸ்ரு காவஹா" என்பது, இதற்கு கேரான வட நூல்மேற்கோள்.

தின்பத்தக்குக் காரணமானதைத்துன்பமெனக் காரியமாகக்கூறியது, உபசாரவழக்கு. உம்மைகள் இரண்டும்-முறையே எதிரதும்இறந்ததற்தழுவிய எச்சப்பொருளன. மற்ற என்னும் இடைசசொல் - இங்கே, பின் என்னும் பொருளது. 'ஒண்பொருள்' என்றது, செல்வமதுமை மறுமைகளிற் புகழ் புண்ணியங்களே விளைத்து அறத்தக்கும் இன்பதத்குங் காரணமாகுஞ்நெறப்புப்பற்றி, இனி, ஒண்பொருள்-தருமவழியாற்சேர்க்கப்பட்டபொருளென்றுங் கொள்ளலாம். துன்பக்கு - அத்தச சாரியை தொக்கது.

## உஉச ஆம் அதிகாரம்.—இன்மை.

அஃதாவது ஓம்பொறிகளால் அனுபவிக்கப்படும் பொருள்யாவும் இல்வாழ்வை; இவ்வறுமை முற்பிறப்பில் ஈயாமையின் பயனுதலால், அக்காரண காரிய முறைபற்றி ஈயாமையின்பின் வைக்கப்பட்டது. இன்மை - எதிர்மறைப் பண்புப்பெயர்.

உஅக. அத்திட்ட கூறை யரைச் சுற்றி வாழினும்
பத்தெட் டுடைமை பலருள்ளும் பாடெய்து
மொத்த குடிப்பிறந்தக் கண்ணுமா மில்லாதார்
செத்த பிணத்திற் கடை.

(இ - ன்.) அத்தி இட்ட கூறை - செக்கிறம் பொருந்திய ஆடையை [காஷாயவஸ்திரத்தை], அரை சுற்றி வாழினும் - இடையிலே கட்டிக்கொண்டு உயிர்வாழ்ந்தாலும [துறவிகளாயிருந்தாலும்], பத்து எட்டுடைமை-பத்தாயினும், எட்டாயினுமொருவீனுடைத்தாயிருத்தல், பலருளுளும்பாடெய்தும் - பலசனங்களுளளும் பெருமையை யடையும்; ஒத்த குடி பிறந்தக் கண்ணும் - (உலகத்தாரதுமதிப்புக்கு) ஏற்ற உயர்குலத்திற் பிறந்தாலும, ஒன்று இல்லாதார்-நிறுமம்பொருளில்லாதவர், செத்த பிணத்தின் கடை - உயிர்நீங்கிய உடம்பாகிய பிணத்தினுங் கடைப்பட்டவராவர்; (எ - று.)

சர்வீயாயியாயிருந்தாலும், நிதாயினுஞ் செல்வமிருந்தால்தான் ஒருவனைப் பலரும் பெருமைப்படுத்துவார்கள்: உயர்ந்ததுலத்திற் பிறந்திருந்தாலும் நிதியும் பொருளில்லாதிருந்தால், ஒருவனை எவரும் லட்சியஞ்செய்வாரில்லை என உலகவியல்பு கூறியவாறு. பிணத்துக் காயினும் அந்திமகிரியைகளில் சில உபசாரங்கள் நேர்கின்றன; செல்வமில்லாதவரையோ எந்தவிதத்திலும் உபசரிப்பாரில்லை யென்பார், 'பிணத்திலும் கடை' என்றார். "கொடிது கொடிது வறுமைகொடிது" என்றார் ஔவையாரும். பலர் உண்ணும் பாடு எனப் பிரித்து; பலருங் கருதும் மதிப்பு எனினுமாம்.

வறுமையின் இழிவைக் கூறுவார், செல்வத்தின் உயர்வையும் உடன் கூறினர். வாழினும், உம்-இழிவுசிறப்பு. பலருள்ளும், உம்-முற்று. பிறந்தக் கண்ணும், உம்-உயர்வுசிறப்பு. துறவிகள் காஷாயவஸ்திரம் தரித்தல் மரபு. இனி, அத்து இட்ட கூறை என்பதற்கு-தையல் நிறைந்த தினையென்றும் பொருள்கொள்ளலாம். 'அத்து' என்றது - இவ்விருபொருளையு முடையதாதலை, "அரைப்பட்டியையுந் தின்ன முதலைகொல்லும், சொற்றமும் மிலை தெரியில் அத்தென்ப" என்னும் பிங்கலந்தையினுலும் அறிக. [இந்தில் தின்னம்-தையல், ஒன்றோடொன்று - இசைத்தல்.] பாதியென்னும் பொருள் தரும் அரையென்பது-இங்கே, உடம்பின் மத்தியபாகத்துக்கு ஆகுபெயர். பத்து எட்டு-இப்பொருளுக்கு எண்ணலளவாகுபெயர். இவற்றின்பின் ஐய வும்மைகள் செய்யுள்விகாரத்தால் தொக்கன வென்க. பாடெய்தும் - பெருமைபெறுதற்குக் காரணமாமென்க; உபசாரவழக்கு. 'செத்த' என வேண்டாதவர்த அடைமொழி, பிணத்தின் பயனின்மையை ன்குவிளக்கும். செத்த, சா-பகுதி. கடை கடையர்; பண்பாகுபெயர். 'பதருள்ளும்' என்ற பாடத்துக்கு-அசாரமான வருளாயினு மென வுரைக்க. (க)

உஎஉ. நீரினு நுண்ணிது நெய்யென்ப நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்ப—தேரி
னிரப்பிமிம்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து.

(இ - ள்.) நீரினும்-(எல்லாப்பொருள்களினும் நுட்பமாயுள்ள) நீரைக் காட்டிலும், நெய் - நெய்யை, நுண்ணிது என்பர் - நுட்பமானது என்று (யாவரும் அறிந்து) சொல்லுவார்கள்; நெய்யினும்-அந்நெய்யைக்காட்டிலும், புகை நுட்பம் - புகையினது நுண்ணிதாயிருக்குந்தன்மையை, யாரும் அறிவர்-எல்லோரும் அறிவார்கள்: தேரின்-ஆலோசித்தறிந்தால், இரப்பு இடும்பை ஆளன்-இரத்தலாகிய தின்பத்தை யுடையவன், புகையும்புகற்கு அரிய பூழை-(அதிநுட்பமான) அந்தப்புகையும் உட்புகுதற்கு முடியாத திவாரத்தில், நுழைந்து புகும்-நுழைந்து செல்வான்; (எ - ம்.)

யாசகன் மிகவும் கொய்யவனென அவனது இழிவைக் கூறியவாறு - புகையும் புகுதற்கு அரிய பூழை நுழைந்துபுகும்' என்றது, கலி அரிசயோக்தி யாதலருளிச்செய்தற்கு கூறியது.

ஏ-தேற்றம்; ஈற்றசையுமாம். உம்மைகள் முன்றும்-இழிவுசிறப்பு; அவற்றின் பண்மையைக் காட்டுதலால். இவற்றில் பண்மை யென்றது, மிகச் சிறிய தினையிலும் பலைதற்கேற்ற சிறுமையை. தன்பத்துக்குக் காரணமானதைத் துன்பமென்றது, உபசாரவழக்கு. இனி, இரப்பிற்பை - இரப்பினாலாகிய துன்பமென்றுமாம். நிரப்பு எனப்பதம்பிரித்து, வறுமைத்துன்பமெனப் பொருள்கொள்ளினும் அமையும்; நிரப்பு-வறுமையாதலே, "செருவிலும், கொன்றதைபோலு நிரப்பு", "நிரப்பிலுள், யாதொன்றுங் கண்பாடரிது" எனத் தீருக்குறளினுள்ளுங் காண்க. எல்லாப்பொருள்களும்-நிரம்பியிருத்தலைக் குறிக்கும் 'நிரப்பு' என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர், எதிர்மறையீற்றுவினையால், பொருளொன்றுமில்லாமையைக் குறிக்குமென்க. பூழை-புழை யென்பதன் கீட்டல். (உ)

உஉஞ. கல்லோங் குயர்வரைமேற் காந்தண் மலராக்காற்
செல்லாவாஞ் செம்பொறி வண்டினங்—கொல்லேக்
கலாஅற் கிளிசடியுங் கானகநாட
வீலாஅ அயர்க் கில்லைத் தமர்.

(இ - ன்) கொல்லே-கொல்லைகளிலே, கலால்-கற்களைக்கொண்டு, கிளிகளினை, கடியும் - (தினைப்புனங்காப்பவர்) - அதட்டிஓட்டுதற்கு இடமான, கான் அகம்-காட்டினிடத்தையுடைய, காடகநாட்டையுடைய அரசனே!—கல் ஒங்குஉயர் வரைமேல் - கற்களால்வளர்க்துள்ள மலையின்மேலே, காந்தன்-காந்தட்செடிகள், மலராக்கால்-பூப்பூவாவிட்டால், செம்பொறி வண்டினம்-நிலத்தே உடற்புள்ளிகளேயுடைய வண்டுகளின் கூட்டங்கள், செல்லாஆம்-(அவற்றினிடத்தில்) போகாவாம்; (அதுபோலவே), இலார்க்கு-பொருளில்லாதவர்க்கு, தமர் இல்லை - (விரும்பி வரும்) இனத்தவர் உளராகார்.

காந்தள் பூவாதபோது வண்டுகள் அதனிடம் செல்லாமைபோல, ஒருவன் செல்வமுடையனாகாதவிடத்து அவனிடம்உறவினர் வாராரென்பதாம். இதிற் காந்தளென்றதைப் பிறமலர்களுக்கும் உபலக்ஷணமென்னலாம்.

எடுத்துக்காட்டுவமையணி. முன்னிரண்டடி - உபமானவாக்கியம்; இறுதியடி-உபமேயவாக்கியம். தனிச்சொல்லோடு கூடிய மூன்றுமடி-ஆசிரியமுன்னிலை. மருதநிலமாகிய அக்காட்டை அடுத்துள்ள முல்லைகுறிஞ்சி நிலங்களின்மாட்சிமை கூறுவார், 'கொல்லைக் கலாற் கிளிகடியுங்கானகநாட'என்றார். "மணிநீரு மண்ணு மலையுமணிமிழற், காடு முடைய தரண்" எனக் கூறப்பட்ட நீரரண் நிலவரண் மலையரண் காட்டரண் என்னும் நால்வகை யரண்களுள் மலையரண் காட்டரண்களின் அமைதியை 'கொல்லைக் கலாற் கிளிகடியுங் கானகநாட' என்றதனால் உணர்த்தினு ரெனக் கொள்ளலுமொன்று.

கல்லால்-கலால் எனச்செய்புள்விகாரத்தால் தொக்கது. கல்லால் என்பதற்கு-இரத்தினங்களாலென்று பொருள்கொண்டால், செல்வச் சிறப்பை நினைக்கும், கான் - காசகம் என்னும் வடமொழியின் திரிபு. அனுபெடை

இரண்டுமே செயயுளோசை நிறைபபன " செறுஅயர் வாழிய செஞ்சு" என்ற திருக்குறளிற்போல, இலாஅதாகு எனபதில ஈரனபெடுத்தது, மாதிரைரானகு உரை ஆம பாடடின்உரையைப பாரக்க தமா-தமமவா,தாம-பகுதி, முதல குறுகினது விகாரம ஒருகு உயா - ஒருபொருட பனமொழி யெனறுமு கொளளலாம (கூ)

உஅசு உணடாய போழதி னுடைநதுழிக காகமபோற
பெறணடா யிரவா தொருகுபவே—வணடாயத
திரிகருங காலதது நிதினிரோ வெனபா
ரொருவரு ரிவ ரிலகத தில.

(இ - ள) உடைநத உழி - (உடமபு உயிரநஙகிச) ஸெதாதவிடதது, காகமபோல - அளவிலலாத காரகைகள (அதனைதினபதறகு அவவிடம வாதுசோதல) போல, உணடுஆய போழதின (ஒருவாகருச செலவம) உணடானபொழதில, ஆயிரவா ஆயிரமபோ, தொணடு-அடிமையாய, தொருபவாதது கூடிவாாகள, (அவவொருவாதாமே), வணடு ஆய நிரிதருமகாலதது-வணடைபபோனறு (பலவிடதது உணவினபொருடடு) அலலுழகாலதது, நிதி இலிரோ எனபா ஒருவரும - (அவரை ரோகி 'நீர) தனபமில லாம விருகஙிறீரோ?' எனறு கேமம விசாரிபபவா ஒருவரும, இ உலகதது இல-இநத உலகுதில இலலே [அரிய ரெனறபடி], (எ - று)

இநிவுதோனற, பிறாபொருளா உணண விருமபி அபபொழுதமாதநிரம ஓடிவருகினற தாகருணமுடைய பலாகருப பிணமபிடுகினறினறுய காகதையை உவமைகூறினர இஙகே செலவதது்கரு பிணம உவமையாவது, அதன நிலைய்லலாமையை விளகரும வணடுகள பூகளுனள விடடுகளி லெலலாரு தேடிசசெனறு அலேது பலபூகளிலு முளன தேனை உடகொளவதுபோல, இரபபவா கொடையாளிகளுளள விடடுகளிலெலலாரு தேடிப பலதிசைகளிலுஞ செனறு அலேது அவாகளிடமுளள பொருளேப பெறறு உணணும இரததலதொழிலின இயலபைவிளகக, 'வணடாயதநிரி தருமகாலதது' எனறார உவமையணி

போழதின, இன எழறுரு உடைநதுழி - உடைநதவுழி; பெயரெச சததினமுகரவீறு தொகுததல 'உடைநதுழி'-எதிரகாலவினையெசசமுமாம காகம வடசொல, கா எனறு கததலதலபறறி வழஙகும பெயா ஆயிரவா - எணணடியாபபிறநத பலபாறபெயா தொருப-பலாவால மூறறு ஏ-தேறறம ஆய உவமவருபு செலவமிலலாத காலததிலெயோகேமமலிசாரிகரும ஒருவனதி உயாவுவிளகுதறகு, மரியாதைபபணமையாகக கூறிஞ ரெனக,

உஅடு பிறநத குலமாடம பேராணமை மாடஞ
சிறநததங கலவியு மாயுங—கறஙகருவி
கணமேற கழூஉந கணமலே நணணுட
னினமை தழுவபபட டாரக்கு

(இ - ன்.) கறங்கு-ஒலிக்கின்ற, அருவி-நீரருவிகள், கல்மேல்-கற்களின் மேல் (விழுந்து). கழுமல-(அக்கற்களின்மாசைப் போக்கிச்) சுத்தி செய்தற்கிடமான, கணம்-கூட்டமாகிய, மலை-மலைகளையுடைய, கல்-சிறந்த, நாட - காட்டையுடையவனே!—இம்மை தழுவப்பட்டார்க்குவறுமையால் அடையப்பட்டவர்களுக்கு,—பிறந்த குலம் மாயும்-(அவர்கள்) பிறந்த கற்குடியின் பெருமையும் அழியும்; பேர் ஆண்மை மாயும் - சிறந்த ஆண்மைக் குணங்களும் அழியும்; சிறந்த தம் கல்வியும் மாயும்-(எல்லாப்பொருளிலுஞ்) சிறந்த அவர்களது கல்வித்திறமையும் அழியும்; (எ - று.)

பொருளில்லாதார்க்குக் குடிப்பிறப்பு முதலிய மேன்மைகள் இருந்தாலும் அவர் சிறப்படையா ரென்பதகருத்தி. ஆண்மை பராக்கிரம மென்றவது, அறிவு நிறை ஒர்ப்புக் கடைப்பிடி யென்னும் ஆன்முணம் நான்கு மென்றவது கொள்க.

மழையில்லாத காலத்தும் வற்றுதலில்லாத நீர்ப்பெருக்கத்தின் அமைதியை அர்ராட்டிற்குக்கூறி அதன்வளத்தைத்தெரிவிப்பார்'கறங்கருவியின் மேற்கழுமலங் கணமலொன்னுட' என்றார். கழுமல-கழுவும் என்பதலிகாரப்பட்டு அனபெடுத்தது; சொல்லிசையளபெடை. கணம் - வடசொல். நாட்டுக்கு ரன்மை-திலவளம் நீர்வளம் முதலிய பலவளங்களு மூடைமை. அடைமொழி கொடாமற் பொதுப்படக்கூறினுல் அசரியர்கள் பெரும்பாலும் நிறப்பையே குறிப்பது மரபாதலால், 'பிறந்த குலம்' என்றது-உயர்குலமாயிற்று; குடிப்பிறப்பு, ஒழுக்க முடைமை, குணசாலி, அறிவுடையான், கர்த்தலர் என்பன காண்க.

"குடிப்பிறப் பழிக்கும் வீழுப்பகு கொல்லும், பிடித்த கல்விப் பெரும் புணை விடினும், காணினி கூடிய மாணெழில் சிதைக்கும், பூண்முலை மாதொடு புதுகடை நிறுத்தி்ம், பசிப்பிணியென்னும் பாவி" என்ற மணிமேகலையையும், "தொலவரவுக தோலுடை கெடுக்கு தொகையாக, நல்குர வென்னு நகை" என்ற திருத்தருவினையும். "ஈனு மினமையு நல்குரவின் இழிசனம்" என்ற நாற்பமணிக்கடிகையையும், "மானங் குலங் கல்வி வண்மை யுறிவுடைமை, தானந்தவமுயர்சி தாளாண்மை—தேனின், கசிவந்தசொல் லியர்மேற்காமுறுதல் பத்தும், பசிவந்திடப் பறந்து போம்" என்ற நல்லழியையும் இங்கே அறிக, (கு)

உரூஉ. உள்கூர் பசியா ஞிழைநசைஇச் சென்ருர்கட்
குள்ளு நிருந்துமொன் முற்றுதா—ளுள்ளூர
நிருநதுயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தின னுதலே நன்று.

(இ - ன்.) உள்-வயிற்றிலுள்ளே, கூர் - மிகுந்த, பசியால்-பசியினுலே, உழை-தன்னிடத்தை, நசைஇ - விரும்பி. சென்ருர்கட்கு வந்த அடைந்தவர்களுக்கு, உள் ளூர இருந்தும் - ஊர்க்குள்ளே யிருந்தும், ஒன்ற ஆற்றுதான - ஒருதவியுஞ்செய்யமாட்டாத வறியவன், உள் ளூர இருந்து - அந்த ஊரிலுள்ளேயிருந்து, உயிர் தனது உயிர்வாழ்வாளே, கொன்னேகழியாது-வீணுகக் கழியாமல், தான் போய்விருந்தினன் ஆதலே-தான் (வேறவூர்க்குப்) போய் (ஒருவனுக்கு) விருந்தாளியாவதே, நன்று-நல்லது; (எ - று.)

தன்னிடம் பசித்துவர்தவர்கட்கு உதவிசெய்யமாட்டாத தரித்திரன் ஓர்ஊர்க்குள்ளே இருந்துகுடித்தனஞ்செய்துலக்காட்டிலும் எங்கேயாகிலும் போய்ப்பிச்சையெடுப்பது நல்லது என்பதாம்; எனவே, "இன்னமைவேண்டின் இர வெழுக" என்றபடி யாசகனுய்ப் புறப்படுவது எல்லாவற்றினும் தன்பத்தருவ தென்பது பிரசித்தம்: அதனினுங்கீழ்ப்பட்டதாகும் பொருளில்லாமை என்பது கருத்து. இதனுல், இரத்தாயினும் பொருள்சேர்த்தல் வேண்டுமென்பது போதரும். பொருளுள்ளவன் ஊரினுள் இருந்து பிறர்க்குதவுதலுஞ் செய்வானுனுல், பலர்க்கும் பயன்படுதல்கூடும்: பொருளில்லாதவன் ஊரினுள் இருந்தும் எவர்க்கும் பயன்படான் எனப் பொருளில்லாதானது பயனற்ற தன்மையை விளக்கியவாறு.

கூர்-மிகுதியுணர்த்தும் உரிசொல். நசை என்ற பெயர்சொல்-நசை இ என அனபெடுத்து, நசைத்து என்ற வினையெசத்தின் பொருளைத் தந்தது; 'உனசைஇ யுள்ளங் தணையாகச் சென்ருர், வரனசைஇ யின்னு முளேன்" என்றதிருக்குறளிற்போல இது செய்யுளோசைகுறையாதவிடத்து வந்த கொல்லையாற்பாடை. ஊரினது உள் - உள்ளூர்; முன்பின்னைத் தொக்கசுரும்வேற்றுமைத்தொகை: இது, இலக்கணப்போலியின் பாற்படும். அது-பிறர்க்குப் பயன்படத்தக்க உள்ளாரிலிருத்தலின்தகுதியை விளக்கும். உயிர்-உயிர்வாழும் நாளுக்கு இருமடியாகுபெயர். ஒருவன் பிறப்பெடுத்ததற்குப் பயன் தன்னிடம் ஒருபொருளோ விரும்பிவந்தவர்க்கு உதவுதலே யாதலால், அதுசெய்யாதவிடத்தலே 'உயிர்கொன்னேசழித்தல்'என்ருர். விருந்துபுதுமை: பண்புப்பெயர்: புதியனுய்ச செல்பவன், விருந்தினன், ஆற்றுதான் என்பது- அதிகாரத்தால், செல்வ ...லாதவ னென்றதாயிற்று.

இனி, இப்பாட்டிக்கு "இரத்தலி ணின்னது மன்ற நிரப்பிய, தாமே தமியருணல்" என்றதிருக்குறளின் கருத்தோடுஒப்ப, உள்ளூரிலிருத்தும் பசியால் வந்தவர்க்கு ஒன்றைத்தராமல் தானே உண்பவன் அங்ஙனஞ்செய்தலினுமே இரத்தலே நல்லது என்றும் பொருளுரைக்க இடமுண்டு. (சு)

உ வுஎ. நீர்மையே யன்றி நிரம்ப வெழுந்ததங்
கூர்மையு மெல்லா மொருங்கிழப்பர்—கூர்மையின்
மூல்லே யலைக்கு மெயிற் றுய் நிரப்பென்னு
மல்ல லடையப்பட் டார்.

(இ - ள்.) கூர்மையின் - கூர்மையையுடைய, மூல்லே-மூல்லையரும்பின் நிறப்பை, அலைக்கும்-அழியச்செய்கின்ற, எயிறுய்-பற்களேயுடையவளே! நிரப்பு என்னும் - வறுமையென்கிற, அல்லல் - துன்பத்தால், அடையப்பட்டார்-சேரப்பட்டவர்கள், நீர்மையே அன்றி-(தமது) நற்குணங்களேமாத்திரமேயல்லாமல், நிரம்ப எழுந்த-பூர்ணமாய்சிறந்துநின்கிற, தம் கூர்மையும்-தமது அறிவின் அட்பத்தையும், எல்லாம்-மற்றமுள்ள சிறப்புக்களெல்லாவற்றையும், ஒருங்கு-ஒருசேர, இழப்பர்-இழந்திவிவார்கள்; (எ - று.) பொருளிலாதாருடைய நற்குணம் முதலியவை விளங்கா என்பது கருத்து.

நீர்மையே என்ற ஏகாரத்தை உயர்வுநிறப்பாகவாவது பிரிநிலையாகவாவதுகொள்க. கூர்மையும்,உம்-இறக்கதுதழுவியவச்சம்.ஒருங்கு-எஞ்சாமைப் பொருள்தரும் இடைச்சொல். கூர்மை, வெண்மை, அழகு இவற்றில் முல்லைமலரினும் பல் சிறந்த தென்பார், 'கூர்மையின் முல்லைலக்கு மெ யிர்' என்றார். முல்லை-அதன்மலருக்கு, முதலாகுபெயர். அல்லல்-இகலே, தன்பத்தற்குக் காரண மென்றபடி. நிரப்பென்னும் அல்லல்-காரணம் கா ரியமாக உபசரிக்கப்பட்டது.'எல்லா மொருங்கிழப்பர்'—"ஸர்வம்ஸுகிம்யம் தரித்ரஸ்ய," என்பர் வடநூலார். (ஏ)

உஅஅ இட்டாற்றுப் பட்டோன் றிரந்தவர்க் காற்றாது
மூட்டாற்றுப் பட்டு முயன் றுள்ளூர் வாழ்தலி
னெட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைநீட்டுங்
கெட்டாற்று வாழ்க்கையே நன்று.

(இ - ன்.) இட்டு-அற்பமான, ஆறு-(வறுமையின்) வழியிலே, பட்டு - அகப்பட்டு, ஒன்ற-(யாதாயினும்) ஒருபொருளோ, இரந்தவர்க்கு-யாசித்தவர் கட்கு, ஆற்றாது-கொடுக்கமாட்டாமல், மூட்டு ஆறு பட்டு-சங்கடமான வழி யிலேபொருந்தி, முயன்ற - (தன்னேப்பாதுகாத்துக்கொள்ளுதற்குமாதி ரம்) பிரயத்தனப்பட்டு, உள் ஊர் - ஊரினுள்ளே, வாழ்தலின்-வாழ்தலைக் காட்டிலும், நெடு ஆறு சென்ற-அரமான வழியிலேபோய், நிரை மனையில்-வரிசையாயுள்ள வீடுதோறும், கை நீட்டும்-(பிசசையாய்குதற்குக்) கையை நீட்டுகிற, கெடு ஆறு வாழ்க்கையே - கெட்டவழியில் வாழ்தலே, நன்று - நல்லதாம்; (எ - று.)

இப்பாட்டில் அமைந்தது இவ்வதிகாரத்தின் ஆறும்பாட்டின் சருத்தே யாலும், ஒவ்வொருபாடலும் ஒவ்வொருவாறு பாடப்பட்டதாதலால் கூறியது கூறலாகா தென உணர்க.

இட்டு என்பது-நிறைமையென்னும் பொருளாதலை "ஆகாரனலீட்டி தாயினுங் கேடில்லே"எனத் திருக்குறளிலும், "இட்டிடைப்பின்னேகேள்வர்" எனத் திருச்சந்தவிருத்தத்திலும் காண்க. இட்டு ஆறு-நிறியதானவழி; என வே, எளிய வறுமைநெறியாயிற்று. முட்டு ஆறு-வருத்தமானவழி; எனவே, இதுவும் வறுமையாம். இட்டாற்றுப்படுதல் இரந்தவர்க்கும், முட்டாற்றுப் படுதல் இரக்கப்பட்டவர்க்கும் கொள்க. வாழ்தலின் நன்ற என இயையும். 'நிறைமனை' என்ற பாடத்திற்கு-பொருள்நிறைந்த வீடு என்க, கெட்டவாற என்பது-கெட்டாற எனப் பெயரெச்சவீறு தொகுத்தல்; வேட்டகம், அட் டில் என்பவற்றிற் போல. (அ)

உஅக. கடகஞ் செறிந்ததந் கைகளால் வாங்கி
யடகு பறித்துக்கொண் டட்டுக்—குடைகலனு
வுப்பிலி வெந்தைதின் றுள்ளாறு வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால்.

(இ - ன்.) துப்புரவு-அனுபவிக்கப்படும் பொருள்கள், சென்றுலகந்தக் கால்-அழிந்துஒழிந்தால், (அவ்வேழைகள்),கடகம் செறிந்ததம் கைகளால்-

முன்னே)டகமென்னுங் கைவினைகள் பொருந்தியிருந்த தமதுகைகளாலே, வாங்கி - (பக்கங்களிலுள்ள அறுகளை அப்பால்) தள்ளி, அடகுரைகளை, பறித்து கொண்டு-பறித்துக்கொண்டுபோய், அட்டு-சமைத்து, குடைகலன் ஆ-(நுங்கெடித்த பனங்காய் தேங்காயோடு மூதலிய) குடையப்பட்ட பொருள் களேயே (வேறு பாத்திரமில்லாமையால்) உண்கலமாகக் கொண்டு, (அவற்றில்), உப்பு இலி வெந்தை நின்று-உப்பில்லாத( அரத்த) வெந்தினை யைப்புசித்து, உள் அற்ற மனமுக்கங்கெட்டு,வாழ்ப-வாழ்வார்கள்;(எ-று.)—ஏ - இரக்கம்.

இப்பாட்டு செல்வமில்லாமையின் தன்மையைச் சொல்வதாய் இவ்வதிகாரத்தில் வைக்கப்பட்டாலும், இதனை'செல்வவிலேயாமை' என்றததிகாரத்திற் சேர்த்தல் மிகப்பொருந்தும்; அங்ஙனமிருக்கவும், இந்நூலின் நானூறு பாடல்களையும் பப்பத்துப்பாடலையுடைய நாற்பதுஅதிகாரங்களாக ஒழுங்கு படப் பகுக்கவேண்டி இதனை இவ்வதிகாரத்தில் வைத்தன ரென்க.

செல்வம் மாறினால் கைகோவ இலேக்கறி பறித்துச சமைத்து உண்டு உய்யுமாறு சோரும் வறுமை மிக்க துன்பத்தரு மென்று கருத்து.

வாங்கி என்பதற்கு-(கீரைக்குரிய செடிகளை) வளைத்து என்றும் பொருள் கொள்ளலாம். கடகம்-பொன் மணிமுதலியவற்றாற் செய்யப்படும் ஒரு வகைக் கைவளை. இதனால், அவர்கள் முன்பு நல்லசெல்வமுடையராயிருந்தமை கன்கு புலப்படும். 'உப்பில்லாப்பண்டம் குப்பையிலே' என்றபடி அறுவகைசுவைகளுள்ளும் உப்பு பிரதானமாதலால், அதுவுமில்லாத வெந்தை யென அவ்வுணவின் இழிவை வெளிப்பட்டவாறு. குடை-செயப்படுபொருள் விகுதி புணர்ந்திகெட்டது. இலி, இ-பெயர்விகுதி. உள்-உடம்பினுள்ளிடத்திலே யிருக்கின்ற அகத்தறுப்பாகிய மனத்துக்கு இடவாகுபெயர். தப்புரவு என்பதைத் தப்பு உரவு எனப் பிரித்து, அனுபவித்தற்கேற்ற சிறப்புடையவை யெனக் காணப்பொருள் கூறுக; தப்பு-அனுபவித்தல், தொழிற்பெயர். உரவு - வலிமை.

இப்பாட்டு, "பாலுடைய நீர்தம் பைம்பொற் கலத்திடைப் பாலை யன்ன, நூலடி நுசுப்பினல்லா ரேர்தழு கோர்துகோக்காச, சேலடுகண்ணி காந்தட்டிருமணித் திடுப்பு முன்னை, வாலட கருள்சிசெய்ய வனத்தினை தெய்வ மானுன்" என்னும் சீந்தாமணியை நினைப்பூட்டுகின்றது. (கு)

உகூ0. ஆர்த்த பொறிய வணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவா—நீர்த்தருவி
தாழா வியர்சிறப்பிற் றண்குன்ற நண்ணுட
வாழாதார்க் கில்லைத் தமர்.

(இ - ள்.) நீர்த்த-கல்லதன்மையையுடையதான, அருவி - நீருவி, தாழா-குறைவுபடாத, உயர் சிறப்பின்-மேலான சிறப்பையுடைய, தண்-குளிர் சுயான, குன்றம்-மலையினிவளத்தையுடைய, நல் நாட - நெற்நாட்டை யுடைய அரசனே! ஆர்த்தபொறிய-(உடம்பை) நிறைத்தபுள்ளிகளையுடைய

அணி இளர் வண்டு இணை-அழகு மிகுந்த வண்டுகளின் கூட்டங்கள், பூத்து ஒழி கொம்பின் மேல்-பூப்பு ஒத்து நின்ற [மலரில்லாத] மரக் கிளைகளின் மீது, செல்லா ஆம்-போகமாட்டாவாம்; (அதுபோலவே), வாழாதார்க்கு - (செல்வமுடையராய்) உயிர்வாழாதவர்க்கு, தமர் இல்லை - இனத்தவர் (எவரும்) உளராகார்; (எ - று.)

எடுத்துக்காட்டோவமையணி. தளிர்சொல்லுடன் கூடிய மூன்றுமடி ஆசிரியத்தாழிசை முன்னிலை. இப்பாட்டு-இல்வாழ்க்கை அதிகாரத்தின் மூன்றாம்பாட்டோடொத்த கருத்தை யுடையது.

ஆர்த்த என்பதைத் தனியேயெடுத்து, ஒலியுடைய வென்று பொருள் கூறி வண்டினத்திற்கு அடைமொழியாக்கினும் அமையும். நீர்த்த அருவி-நீரை யுடையதாகிய அருவி யென்றாலு மொன்று.

## ௨௦ - ஆம் அதிகாரம்.—மானம்.

அபிமானவது-எப்பொழுதும் தம்மிலுயிரின்றுநாமையும், ஊழ்வினையால் தாழ்வுவர்தவிர்த்து உயிர்வாழாமையுமாம். உலகத்திற்பெரும்பாலும் பொருளின்மைகாரணமாக மானத்தையிழந்து இரப்பது இயல்பாதலால், அங்ஙனம் மானத்தைக்கெடுப்பது தருமபன்று என்பார், இதனை 'இன்மை' என்னும் அதிகாரத்தின் பின்னும், 'இரவச்சம்' என்னும் அதிகாரத்தின் முன்னும் வைத்தன ரென அறிக. மாகம் - வடசொல்.

உஉக. நிருபதுகை யாசத் நிறனிலார் செய்யும்
பொருந்தாக் கண்டடை கண்டதை—மெரிபண்டி
காணக் குலைப்பட்ட நிற்போற் கலுழுமே
மான முடையார் மனம்.

(இ - ன்.) நிரு மதுகை ஆசை - (தம்மிடத்தில்) செல்வம் வலிமையை யுடையதாக, (அச்செருக்கினால்), நிறன் இலார் செய்யும் - தக்க நற்குணமில்லாதவர்கள் செய்கின்ற, பொருந்தும்-வரம்புகடக்க நடத்தையை, கண்டக் கடைத்தும்-பார்த்தபொழுது,—மானம் உடையார் மனம் - மானத்தை யுடையவர்களுடைய நெஞ்சம்,—எரி மண்டி காணம் தலைப்பட்ட நீ போல்-எரிதல்பொருந்திக் காட்டிற் பற்றியெழுந்த அக்கினிச்சுவாலை போல, கலுழும்-கொதிக்கும்; (எ - று.)—எ - தேற்றம்.

செல்வச்செருக்கால் அயோக்கியர் எல்லைகடந்த நடக்கையில், மானிகளுக்கு மனவருத்தமுண்டாம் என்றபடி. பொருந்தும் - மிதத்திற்றும் விஞ்சியது என்க; மிதம்-எல்லை. எரி - முதனிலைத்தொழிற்பெயர்.

உஉஉ. என்பா யுகினு மிபல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தாழ்முடையார்—தம்பா
டுரையாமை முன்னுணரு மொண்மை யுடையார்க்
குயிரோ தாமுற்ற நோய்.

(இ - ன்.) தம் உடையார் - தமது மானத்தைத் தாம்காக்கும் இயல்பு டையவர், - என்புஆய்உலினும்-(பொருளில்லாமையில் உணவுகிடையாமல் தம்உடம்பு) எலும்புமாத்திரமாகிச் கிதைவதாயிருந்தாலும், இயல்பு இலார் பின்சென்று-கற்குணம்இல்லாதசெல்வரது பின்னேபோய், தம்பாடி உரைப் பரோ-தமதுவருத்தத்தைக் கூறுவார்களோ? [கூ₹ார்]; தம்பாடு-தமதுவருத் தத்தை, உரையாமை-தாம் சொல்லாமலிருக்கையிலே, முன்உணரும்-முன் னே (குறிப்பினல்) அறிந்து உதவத்தக்க, ஒண்மை உடையார்க்கு - கூறறி வையுடையவர்களுக்கு, தாம் உற்ற நோய் - தாம் அடைந்த தின்பத்தை, உரையாரோ-கூறாதிருப்பாரோ? [கூறுவர்]; (எ - று.)

மானிகள் எவ்வளவுதாழ்ந்தநிலைமையிலும் தமது வருத்தத்தைத்தகாத வர்க்குக்கூ₹ார்: ஏனெனில்,—அவமானமேயன்றிப்பயனில்லாமையால்; தக் கவரோடு கூறுவார்கள்: ஏனெனில்,—தாம்கூறுவிடினும் அவர்கள் தாமாக வேஅறிந்துகொள்வராதலாலும், அவர்களிடங் கூறுவதிற் பயனுண்மையா லும்என்பதுகருத்து. ''இரத்தலும்தலேபோலுங்கரத்தல், கனவிலுந் தேற்ரு தார்மாட்டே'', ''இரப்பனிரப்பாரையெல்லாமிரப்பிற், சுரப்பா ரிரவன்மினென் ன்று'' என்ற தீருக்குறள்களாலும்லோபிகளிடம் தமது குறைகூறுதல் குற்ற மும், உதாரகுணமுள்ளவரிடம் கூறுதல் குற்றமனமையுங்காண்க.''ஒட்டார் பின்சென்றிரருவன் வாழ்தலினச்சிலசீய, விட்டாரெனைபபடுதல் கன்று'' என்பது நீதியாதலால்,உடம்புபிழைக்கவர்நுமமானங்கள் தம்மையிசமூழ்ந் தின் மையார் பின்போய்த் தம்திறுன்பத்தைக்கூறுவார். ஒருவாகருத்தை அவர் கூறுமலேஅவர்தருடையமுகம்கண்முதல்யவறறிற்குறிப்பறிந்துகொண்டு அறி வதுவிசேஷமாதலால், 'உரையாமைமுன்னுணரும்மாண்பினன்'எனப்பட்டது.

உரையாரோ - இரண்டினதிடமனை உடன்பாடு உணர்த்திற்று. உரை யாமை-எதிர்மறையினேயெச்சம்; மை - குறிப்பு. 'நோயும்பெருந்து கல்கூர்ந்தா ரையினும்' என்றற்போல, 'என்பாயகுழும்' என்றார். பின்-இங்கே, இடம். ''கல்லவைசெய்யி னியல்பாகும் தீயவை, பல்லவர் ஆர்தும்ம பழியாகும்'' ஆதலால், கற்குணம்'இயல்பு'எனப்பட்டது. முன் - காலமுன். (உ)

உருக. யாமாயி னெம்பில்லவ் காட்டுநுந் தாமாபிற்
காணவே சுற்பழியு மென்பார்போ—ணுணிப்
புறங்கடை வைத்திவர் சோறு மதனுன்
மறந்திக்க செல்வர் தொடர்பு.

(இ-ள்.) யாம் ஆயின்-காமாஞல், எம்இலலம் காட்டுதும் - (வரும்விருந் தினர்க்கு) தமது வீடுமுழுவதையுங்காண்பிப்போம்; தாம் ஆயின் - செல்வச் செருக்குடையவர்களாஞல், காணவே சுற்பழியும் என்பார்போல்-(தமது வீட்டைப்பிறர்உட்புகுந்துபார்த்தமாத்திரத்திலேஅதன்உறதிகெடுமெனக் கருதுவார்போல, ணாணி - (பிறர்க்குத் தமதி வீட்டைக் காட்டக்) கூச்சப் பட்டு, புறங்கடை வைத்து - (அவர்களே வீட்டு) வெளியிடத்திலேயே இரு த்தி, சோறுமை ஈவர் - உணவையுங் கொடுப்பார்கள்; அதனுல் - அதையால்,

செல்வர் தொடர்பு மறந்திடுக - (மானமுடையவர்) செல்வச்செருக்குடையாரைப் பின்தொடர்தலை மறந்துவிடக்கடவர்; (எ - று.)

செல்வர்கள் பிறரை வீட்டினுள் வரவிடாமைக்குக் காரணம் அவர்கள் பார்த்தால் தமது வீட்டின் வலிமை அழிந்துவிடுமென்னுங் கருத்து என்று கற்பித்துக் கூறினது, ஏதுத்தந்துதுரிப்போற்றுவணியின்பாற்படும்.

'யாமாயினெம்மில்லங்காட்டுதும்' என்றது, கவிக்கூற்று; இது-உலகத்திலுள்ளசெல்வச்செருக்கில்லாத தம்போலியர்வந்தவிருந்தினரை உள்ளேயழைத்துப்போய் உபசரிக்கும் கல்லியல்பை விளக்கும். கற்பு - கல்லின்தன்மை. கடைப்புறம்-புறங்கடையென முன்பின்னுமாறியது - இலக்கணப்போலி; வெளிவாயிலென்ற பொருள். சோறும் என்ற உம்மை-இழிவுசிறப்பு; அது உள்ளே வைத்து இடுதல் தகுதியேயன்றிப் புறத்திலேவைத்தீதல் தகுதியன்றென்பதைக் காட்டும். மறந்திடுக-வியங்கோள்; இடு - தணிவுப்பொருளுணர்த்திற் றிணைவினை. தொடர்பு-அநுசரணை, இனி, இல்லம்என்பதற்கு இடவாகுபெயராய் மனிலியென்றும், கற்பு என்பதற்கு - பதிவிரதாதருமமென்றும் உரைப்பாரு முளர். போல்-ஒப்பில்போலி: உவமப்பொருள் தருவதன்று: இங்கு, தற்குறிப்புப்பொருள் தருவது. (கூ)

உகூசு. இம்மையு நன்மு மியனெறியும் கைவிடா
தும்மையு நல்ல பயத்தலாற்—செம்மையி
னானங் கமழுங் கதுப்பினாய் நன்றேகாண்
மான முடையார் மதிப்பு.

(இ - ன்.) ஞானம்-கஸ்தூரிப்புழுகு, செம்மையின்-நன்றாக, கமழும் நறுமணம் வீசப்பெற்ற, கதுப்பினாய்-கூந்தலையுடையவளே! மானம் உடையார் மதிப்பு-மானமுள்ளவர்களது பெருமை, இம்மையும்-இவ்வுலகத்திலும் [இப்பிறப்பிலும்],நன்றுஆகும்-(புகழையும்நீத்தலால்)நல்லதாகும்; இயல்நெறியும்தகைவிடாது (நல்லோர்கள் செல்லத்தக்க) நியாயவழியையும்விட்டுவிடாது, கதுப்பற்றி, உம்மையும்-மறுமையிலும், நல்ல பயத்தலால்-சிறந்தபுண்ணியப்பயனைஉண்டாக்குதலால்,(அந்தமானம்), நன்றே-(மறுமைக்கும்) நல்லதே; காண்-(இதனைநீ) அறி; (எ - று.)—ஏ-தேற்றம்.'காண்' என்பதையும்-தேற்றமுணர்த்துவ தென்னலாம்; முன்னிலையசையென்பாரு முளர்.

மதிப்பு-பிறரால் நன்குமதிக்கப்படுதல். இம்மையும், உம்மையும் என்ற உம்மைகள்-முறையே எதிரதும் இறந்ததுந் தழுவிய எச்சம். இயல்நெறினைத்தொகை; இதன்மேல் உள்ள உம்மையும்-எச்சப்பொருளதே. நல்ல-பெயர். கதுப்பு - கபோலமுமாம். கன்னத்திலும் கஸ்தூரி அணிவதுண்டு. மானம் உடையார்-மானங்கெடாதவருமாம்.

"புகழின்றூற் புத்தேள்நாட்டியாதால் என்மற்று, இகழ்வார்பின் சென்றதனினே" என்ற நீதிநூற்றொனிஞல், மானங்கெடுதல் இம்மைமறுமையிரண்டு பயன்களினும் தராத தாகுமாறு காண்க.

இனி, இப்பாட்டு-மானமுடையவர்கள் பிறரைமதிக்கும் மதிப்பு இம்மைக்கும் நல்லதாம்; இயல்பாகிய ஒழுக்கநெறியையுங் கைவிடாதிருக்கும்; மறுமைக்கும் நல்ல இன்பங்களே யுண்டாக்கும்; ஆதலால், நல்லதாம் என்றும் பொருள்படும்.

'இசைநெறியுங் கைவிடாது' என்றும் பாடம்: (சு)

உகூ. பாவமு மேனைப் பழியும் படவருவ
சாயினுஞ் சான்றவர் செய்கலார் சாத
லொருநா ளொருபொழுதைத் தின்ப மலைவிபோ
லருவை யாற்றுத லின்று.

(இ - ள்.) பாவமும்-(மறுமைக்குத்) தீவினையும், ஏனை பழியும்-மற்றை (இம்மைக்கு) உலகநிந்தனையும், பட-உண்டாகும்படி, அருவ-நோகிற காரியங்களை, சான்றவர்-(நற்குண நற்செய்கைகளால்) நிறைந்தபெரியோர், சாயினும்-(அவற்றைச் செய்யாவிட்டால் தமக்கு) மரணம்சேர்வதாயிருந்தாலும், செய்கலார்-செய்யமாட்டார்கள்; (ஏனெனில்); சாதல்-இறத்தல், ஒருநாள் ஒருபொழுதை தின்பம்-இறக்கிற ஒருநாளிலே இறக்கிறஅவ்வொருபொழுதில் மாத்திரமே(அனுபவித்துக்கழிகின்ற)தின்பமாகும்; அவைபோல்-அத்தஇழிதொழில்கள்போல, அருவை-அருமையுற்றதலின்று - (உயிருள்ளவளவும் அழியும்படி) அருமையாகிய மிக்க துன்பங்களே செய்தலில்லை; (எ - து.)

பாவம்-பாபம் என்னும் வடமொழியின் திரிபு; முதலடியில், உம்மைகள்-எண்ணுப்பொருளன. வருவ - பெயர். சாயினும், உம்மை - இழிவு சிறப்பு; அது - "சாதலின்னாதஇல்லை" எனக் கூறப்படுகிற மரணவேதனையின் மிக்க கொடுமையை விளக்கும். 'சாவினும்' என்றும் பாடம். பொருளதை ஐயீற்றுடைக்குற்றுகரம். ஒத்துவண்.

"பரம்ப்ராணபரித்யாகோ மரணபரிகண்டம்-மரணத்துஸ்ஸ்யாத்ஸ்வயனிகர்தும்கம் மாரபங்கோதிநேதுசே" என்னும் வடநூல் மேற்கோள் இங்கு அறியத்தக்கது. (இ)

உகூ. மல்லன்மா ஞாலத்து வாழ்ப வருளெல்லாஞ்
செல்வ ரெனினுங் கொடாதவர்—நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்.

(இ - ள்.) மல்லல் - (பலவகை) வளப்பங்களோடுகூடிய, மா ஞாலத்து - பெரியபூமியிலே, வாழ்பவருள் எல்லாம்-உயிர் வாழ்பவர்களெல்லாருள்ளும்; செல்வர் எனினும்கொடாதவர்-தனவான்களாயிருந்தாலும் தானஞ்செய்யாதவர்கள், நல்கூர்ந்தார்-தரித்திரரேயாவர்; நல்கூர்ந்தக்கண்ணும்-வறுமையையடைந்தவிடத்தும், செல்வரைசென்ற இரவாதார்-பொருளுடையாரிடம் போய் அவரையாயாதவர், பெரு முத்தரையரே-(பெருஞ்செல்வமுடைய) பெருமுத்தரையரென்னும் பிரபுவைப் போல்பவரே யாவர்; (எ - து.)

இச்செய்புள்செய்த ஆசிரியர்காலத்தில்பெருஞ்செல்வத்தினராய்ச்சிறந்த பெருமுத்தரையரென்பவரொருவர் இருந்தனராதல்வேண்டும். இப்பெயர்-இத்தலின் இருபதாம் அதிகாரத்தில் பதாவதுசெய்யுளிலும் "பெருமுத்தரையர்பெரிதவர்நீயுங்,கருணைச்சோறூர்வர்கயவர்" எனக்கூறப்பட்டுள்ளது.

செல்வம்படைத்ததன்பயன் பிறர்க்குக் கொடுத்தலே யாதலால் அதனைச்செய்யாதவர் வறியவரும்,செல்வமில்லாமையின்காரியமாகிய இரத்தல் இல்லாமையால் இரவாதவர்செல்வமுடையவருமாகக் கருதப்படுவரென்க.

"மல்லல் வளனே" என்ற தொல்காப்பியத்தால், மல்லல்என்பது-வள மென்னும் பொருளுணர்த்துவதோ ருரிச்சொல்லாதலே யறிக. மா - மஹா என்னும் வடமொழியின் விகாரம்; இது-பெருமையாகிய குணத்தையுணர்த்தலால், தமிழில் உரிச்சொல்லின்பாற்படும்.

வறுமைக்காலத்திலும் பிறரிடம்போய்இரவாமல்மானத்தைக்காப்பது நலம் என்ற கருத்துப் புலப்படுதலால்,இப்பாட்டு இலவதிகாரத்ததாயிற்று.

உகூஎ. கடையெலாங் காப்பசி யஞ்சுமற் றேனை
யிடையெலா மின்னுமை யஞ்சும்—புடைபரந்த
வீற்புருவ வேனெடுங் கண்ணுய்க் தலையெல்லாஞ்
சொற்பழி யஞ்சி விடும்.

(இ - ன்.) புடை பரந்த-பக்கங்களிலே பரவிய, வில்புருவம்-விற்போல் வளைந்த புருவங்களையும், வேல் செடு கண்ணுய்-வேலையுதமபோன்றகண்ட கண்களையு முடையவளே! கடைஎலாம்-அதமர்கள் யாவரும், காய்பசி அஞ்சும்-(வயிற்றை) வருத்துகின்ற பசிகருப் பயப்படுவார்கள், ஏனை-(அவர்களி னும்) வேறுபட்ட, இடை எலாம் மத்திமர்கள் யாவரும், இன்னுமை அஞ்சும் தின்பதற்குப் பயப்படுவார்கள்; தலைஎல்லாம் உத்தமர்களோ வனில, சொல்பழி அஞ்சிவிடும்-(உலகத்தாருடைய) சொல்லால் வருகின்ற பழிக்குப் பயப்படுவார்கள்; (எ - று.)

லோகாபவாதத்தால் மானக்கேடு உனதாமென்றுஅஞ்சுவர் மேன்மக்களென்றருத்தி."நெல்லி,னரிசியானின்புறூஉக்கெல்லாம்தத்தம்,வரிசையானின்புறூஉமேல்" என்றபடிகீழ்மக்கள் மானஅவமானங்களைக் கருதாமல் கிடைத்த உணவுமாத்திரத்தால் உவப்பவரும், மேனமக்கள் அங்ஙனமன்றி அவமானஞ்சிறிதுமில்லாமல் மானமேமுழுதுமுண்டாக மகிழ்பவரு மாதலால் 'கடைஎலாங் காய்பசிஅஞ்சும்' என்றும், 'தலைஎல்லாஞ்சொற் பழிஅஞ்சிவிடும்' என்றும், நற்காலத்துப்பயனுகிய பகிர்கருதலிலும் எக்காலத்தும் பயனுகிற புகழ்விளைதலிலும் நோக்கியல்லாம்,அரசர் முதலியோரால் நேரக்கூடிய மரணதண்டனை முதலிய தின்பக்கட்டுப் பயத்தி நீச செயலொழித்து நற்செயல்புரிய மியல்பினர் இடைப்பட்டவராதலால் 'இடையெலா மின்னுமை யஞ்சும்' என்றுங் கூறினர். "சாதலினின்னாந் நல்லே" என்றதனுல் இன்னுமை இறந்ததுமாம்.

பொருளால் உயர்திணைப்பலர்பாலாயினும், சொல்லால் கடை இடை தலை என்பன பால்பகா அஃறிணைப்பெயராதலால், 'அஞ்சும்' என்னுஞ் செய்புமென் முற்றைக் கொண்டன; இங்ஙனமன்றி, செய்யுமென்னும்பொதுப் பலர்பாலுக்கு ஏகியதாகாமை உணர்க. மற்று - அசைநிலையென்றுவதி, வினமாற்றென்றுவது கொள்க. புருவத்துக்கு வில் உவமை - வளைந்தவடிவினும் மாத்திரமேயன்றி ஆடலவரை வருத்துதலாலுமாம். புருவம் - பிரகிருதி என்றும் வடமொழியின் விதைவென்பர்; வடமொழியில் இதன் இரண்டாம் வேற்றுமை - பிருவம் என கிற்கும்.

"அல்ருத்தேர்ப்பாயமர்யாநாம் மத்யாசாம்மரணத்பயம் - உத்தமாசாந் தமர்த் யாசா மவமாசாத்பரம்பயம்" என்பது, இப்பாட்டிற்கு சேரான வடநூல்மேற்கோள். (எ)

உகூஅ. நல்லர் பொறிதனியர் நல்கூர்ந்தா ரென்றெளிஞர்
செல்வர் சிறுகோற்கு கேடு நிதுங்காற்—கொல்ல
வுறுவரி துஞ் புலியேபோ லுள்ளன வுஞ் சொல்லோ
தகுவாய சான்றோர் மனம்.

(இ - ன்.) 'நல்லர் - (இவர்) நன்மையுடையவர், பொறிதனியர் - மிகவுங் கருணைசெய்யத்தக்கவர், நல்கூர்ந்தார் - வறுமையடைந்தவர், என்று - என்றஇவ்வாறுகூறி, எளினி - அவமதிர்து, செல்வர் - தனவான்கள், சிறு கோற்கு கோற்கும் கால்-(பிரரை) அற்பப்பார்வையாகப் பார்க்கும்போது, --தகுவாய சான்றோர் மனம் - உத்தமர்களாகிய பெரியோரது நெஞ்சம், கொலலன் உலாவுதும் தியேபோல்-கருமான் உலைக்களத்தில் ஊதுதியெழுப் பும் நெருப்புப்போல, உள் கனலும் - உள்ளே கொதிக்கும்; (எ - று.)

சொல் ஓ இரண்டும் - அசைநிலை; 'இடைதசொற்கள் வேண்டிய பல பொருளே விகோக்கும்' என்ற வடமொழிநியாயத்தால், இங்கே இவ்வீடைச் சொற்களுக்குத் தேற்றப்பொருளுரைத்தலும் பொருந்தும். நல்லர், பொறி தனியர், நல்கூர்ந்தார் என்பன - இங்கே இரக்கத்தாற் சொல்லுஞ்சொற்களல்ல வென்றும், இதற்குப்பாற்சொல்லுஞ் சொற்களாமேன்றும் அறிக; அது, சிறுகோற்குகோற்குதலால்உணரப்படும்: ஆனதுபற்றியே, சான்றோர் மனம் கனல்வதாயிற்று. சோபத்தை யடக்குதலும் சான்றோரியல பாதலால், அதனை வெளிக்காட்டாது 'உள்கனலும்' என்றார். சிறுகோற்கு-அலட்சியமாகப்பார்த்தல்; சொல்லன்-இரும்பைக்கொல்லுதல்பற்றிவந்த பெயர்; கொல்லுதல் - மிகஅடித்தல். தீயே எ - அசை; உயர்வுதெரிப்புமாம். மனம்-மாண்; வடசொல், கால் - காலம்; விகாரம். (அ)

உகூக. கச்சியார்க் கோமை நரணுழு நாளுஞ
மச்சத்தா னுறுக ணணர்ந்—மெச்சதனின்
மெல்லிய ராகித்தம் மேலாயார் செய்தது
சொல்லா திருப்பது நாண்.

தும், தம்மால் ஆம் ஆக்கம் இலர்-தமது முயற்சியாற் சம்பாதிக்கும் பொருளுடையவரல்லர்,' என்று - என்று எண்ணியும் சொல்லியும், தம்மை மருண்ட - தம்மைத் தாமே (மேலானவராக) மயங்கின, மனத்தார்பின்-மனத்தையுடையவர்களின்பின்னே, தெருண்ட அறிவினவர் தாமும் - தெளிந்த அறிவுள்ளவர்களும், செல்பவோ- (இரத்தற்குச்) செல்வார்களோ? [செல்லார்.] (எ - று.)

'பிறர்க்கு வேண்டுவன கொடுக்கவேண்டுவது நமது கடமை' என்று கொள்ளாமல், 'நாம்கொடுத்தால்தான் ஒருத்தர் தரித்திரர்க்குப் பொருளுண்டேயொழிய அவர்களுடைய சொந்த முயற்சியால் ஒருகாசு கிடையாது' என்று இரப்பவர்களே இகழ்ந்தும், தம்மைப் பெருமைபாராட்டியும் செருக்குக் கொள்ளுகின்ற அற்பாசையிடத்து விவேகிகள் யாசகத்திற்காகச் செல்ல மாட்டார் என்பதாம்.

கடவுள் ஒவ்வொருவர்க்கு ஒ - வொருமுகமாய்ச் சுவனம் கற்பித்திருத்தலால், 'நாம் கொடுக்கிறோம்' என்று கினைப்பது அறிவின்மையாம்; ஆதலால், அங்ஙனம் நினைப்பவர் 'மருண்ட மனத்தார்' ஆவர். ''இகழ்ந்து எள்ளாதஇவரைக்காணின் மிகழ்ந்து உள் ளம், உள்ளூர் உவப்பதுடைத்து'' எனத் திருக்குறளிற்கூறியபடி, பொருந்திய யாசகங்களோ ஓவமித்து ஒழிவு சொல்லாமல் நன்கு மதித்து ஒரிவைகூறி வேண்டியபொருள் கொடுப்பவரே யாசிக்கப்படத்தக்கவரென்றும், அதனால் இல்லாதாரிடத்துப்போய் ஒருபொருளே இரத்தல்பற்றி அந்த வேண்டுகோளன்றும் கூறியதாயிற்று.

நம்மால் - செல்லச்சொருங்கியல் தம்மை யுயரதல்பற்றிவந்த தன்மைப்பன்மை. எ - பிரிநிலை ஏவா - ஆக்கமடையா. பின் - இடைசசொல்; இங்கே இடப்பொருளது. ஒ - எதுமாதை. ஞாய-ஆசை. உம்-உயர்வுசிறப்பு.

நேரிசை. இழித்தக்க செய்தொரு வன்ஞா யுணர்ந்
பழித்தது ஒர்ந்தக் செய்யாம் பரித்தக் ரவிழுமே
விழித்தநிமை ரூ மாத்திரை யன்றே வாருயி
னழித்தது ப பிறக்கும் பிறப்பு.

(இ - ள்.) ஒருவன்—, இழித்தக்க செய்தது - இழிவுக்குக்காரணமாகிய செய்கைகளே செய்து, ஆர உணர்ன் - வயிறுநிரம்ப உணர்ந்தவேக்காட்டினும், பழித்தக்க செயயான் பரித்தல் பழிக்கத்தக்க காரியங்களோ செய்யாதவனுய்ப் பரியோடிருத்தல், தவறே - குற்றமாகுமோ? [ஆகாது]. (ஏனெனில்),—ஒருவன் அழித்து பிறக்கும்பிறப்பு-ஒருமனிதன் அழித்து (மறுபடி) பிறக்கிற பிறப்பு, விழித்து இமைக்கும் மாத்திரை அன்றே - (மூடினகண்ணேத்) திறந்து இமைகொட்டுதலாகிய அவ்வுடையதன்றே? (எ - று)

'மானத்தை விட்டாயினும் உயிரைப் பாதுகாக்கவேண்டும்'என்பாரது கொள்கையை இதில் மறுக்கின்றார், இந்த உடம்பு போலவே, வேறு உடம்பு கிடைப்பது அரிதென்று கினைக்கவேண்டாம்; கணமுடிதிறக்கும் ஒருமாத்திரைப்பொழுதினுள்ளே இவ்வுயிர் வேறுஉடம்பைச்சேருமே ஆதலால, இவ்வுடம்பைப் பாதுகாக்கும்பொருட்டென்று மானத்தைவிட்டு இரந்து பிழைத்தலினும், மானகுடைமல் பட்டினியாயிருந்து உயிரைவிடுவதே நலம் என

பதாம். இரவச்சத்தை வற்புறுத்தற்பொருட்டு, இவ்வாறு கூறினர். உயிர் கட்கு இயல்பாய்க்கடிதிற் பிறப்பு வருமென்றும், நிலையில்லாத உடம்பைப் பாதுகாக்கும்பொருட்டு நிலையாகப் புகழ்பெறும் மானத்தைத் துறக்கலா காதென்றும்கூறியவாறு; "பாவமுமேனேப்பழியும் படவருவ, சாயினுஞ்சான் றமர் செய்கலார் சாதல், ஒருநாளொருரு பொழுதைத் தின்ப மலைபோல், அருகலை யாற்றுத லின்று" எனக் கீழ் மானமென்னும் அதிகாரத்தில் வர் ததுங் காண்க.

இழித்தக்க, பழித்தக்க-இழித்தற்குந் தக்கவை, பழித்தற்குந் தக்கவை என கான்காம்வேற்றுமைத் தொகையாக விரியும்: இழி, பழி-முதனிலைத் தொழிற்பெயர்கள். ஆர்-நிரப்புதியுண்டாக. மாத்திரை-மாத்ரா என்னும்வட மொழியின் திரிபு. "ஓரெழுத்து மாத்திரைமுதல் மாத்திரை" என்றார் நன்னூலார். அன்றே-தேற்றம். அழிந்து என்பது, எதனைநோக்கி, அழி த்து என வலித்தல் விகாரம் பெற்றது; இவ்வுலேயெழித்து எனப் பிற வினையாகவுங் கொள்ளலாம். விழித்தற்மைக்கு மாத்திரையன்றே-இமைத்து விழிகின்ற பொழுதாயிருக்குமென விகுதி பிரித்துக்கூட்டினுமாம்; உறங் கிக் கண்விழிக்கும் அளவன்றோ? என்று உரைப்பினும் அமையும்.

"உறங்குவது போலுஞ் சாக்காடுறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என்ற திருக்குறளினும், "பிறந்தவர் சாதலு மிறந்தவர் பிறத்தலும், உறைக லும் விழித்தலும் போன்ற துண்மையின்" என்ற மணிமேகலையையும் இங்கே அறிக.

முன்னிரண்டடியிற் கூறிய பொருளைப் பின்னிரண்டடியிற் காரணங் காட்டி நிறுவியதனால், வேற்றுவமை. பின்னிரண்டடியில் உபமான உபமேயங் கட்கு ஐக்கியத்தைச் சொன்னது, தாட்சியணி. (உ)

நேரிசை. இல்லாமை கந்தா வியவு நினிற்கிரப்போர்
மெல்லாரு மில்லா தியற்றிற்—புல்லா
வகம்புகுதி லுண்ணுறுமி னென்பவர்பாட் டங்கான்
முகம்புகுத லாற்றுமோ மேல்.

(இ - ள்.) இல்லாமை-பொருளில்லாமை, கந்தா-ஆ-காரணமாக, இரவு தணிந்து-யாசிப்பதை மட்டுமின்று, ஒருவர்—, சிறுதெறி - (இத்தலாகிய) அற்பவழியில், செல்லாரும் அல்லல்-பேசுகாமலும் இருக்கமாட்டார்; (ஆனு லும்), புல்லா-தழுவிக்கொண்டு, 'அகம் புகுமின்-(எமது) வீட்டிற்கு வாருங் கள்; உண்ணுறுமின்-புசியுங்கள்', என்பவர்மாட்டு அல்லால்-என்று சொல்லுந் தன்மையரிடத்தல்லாமல், (பிறரிடத்து), மேல் - மேன்மைக் குணமுடை யோர், முகம்புகுதல் ஆற்றுமோ-முகங்காட்டிச் செல்லுதலேப் பொறுப்பார் களோ? [பொருளர் என்றபடி]; (எ - று)

உலகத்தில் மனிதர்க்கு வறுமையால் இரக்கும்படி நேர்தலும் உண்டு; அப்படி நேர்ந்தாலும், கண்டவிடத்தும்சென்று இரவாமல், யாசகரைமனமு வந்து முகமலர்ந்து இன்சொற்சொலலி ஆதரிக்குந் தன்மையுள்ளவரிடமே செல்வர் மேலோர் என்பதாம்.

கந்த - கந்தம் என்னும் வடமொழியின் திரிபு: கந்த-மிழல்கு: இக்கே காரணத்தால் இலக்கணை; 'மூலம்' என்பதுபோல. ஸ்கந்தமென்னும் வட சொல்லின் திரிபாகக்கொண்டு, பற்றுக்கோடெனப் பொருளுரைத்தலு மொன்று.செல்லாரும்,உம்-இழிவுசிறப்பு. செல்லாரும்அல்லர்=செல்லவே செல்வர்; இரண்டு எதிர்மறை, உடன்பாட்டை யுணர்த்திற்று. ஓகாரம் - எதிர்மறை. 'மேல்' - மேலோர்; பண்பாகுபெயர்; இது, பொருளால் உயர் திணைப்பலர்பாலாயினும், சொல்லால் பால்பகாஅநிலைப்பெயராதலால், 'ஆற்றம்' என்னும் வினையைக்கொண்டது. ஒருவர் என்பது-பகுதியைகோ க்குமிடத்து ஒருமையேயாயினும், விருதுபற்றிப் பலர்பால்முற்றையேகொ ள்ளும். 'அகம்புகுதும்' என்றும் பாடம். (கூ)

கூ௦ச. திருத்தன்னே நீப்பினுந் தெய்வஞ் செறினு
முருத்த மனத்தோ டுயர்வுள்ளி னல்லா
லருத்தஞ் செறிக்கு மறிவிலார் பின்சென்
றெருத்திறைஞ்சி நில்லாதா மேல்.

(இ - ள்.) தன்னே—, திரு-இலக்குமி, நீப்பினும் கைவிட்டாலும்,தெய் வம்—, செறினும்-கோபித்து வருத்தினாலும், உருத்த மனத்தோடு-(சோர் லில்லாமல்) ஊக்கங்கொண்டமனத்தடனே, உயர்வு உள்ளின்அல்லால் - (தன்) மேன்மையை நினைத்தலேயல்லாமல்,-மேல்-மேன்மைக்குணமுடைய வன்,-அருத்தம் செறிக்கும் அறிவு இலார் பின்சென்று-(ஈகைத்தன்மையில் லாமல் லோபத்தாற்) பொருளைச் சேர்த்துவைக்கும் அவிவேகிகளிடத்திற் போய், எருத்து இறைஞ்சி நில்லாது-தலைகுனிந்து நிற்கமாட்டான்; (ஏ-று.)

வறுமையும் மற்றும் பலதின்பங்களும்சேர்ந்தாலும்தைரியத்தைவிடா மல் தமது மேன்மையையே எண்ணிப் பெரியோர்கள்இரவாதிருப்பர்களே யன்றி, லோபிகளிடம்போய்த் தலைவணங்கி நிற்கமாட்டார்கள்என்பதாம்.

செல்வம் சம்பாதித்தற்குப் பிரயோஜனமாகிய தான் அனுபவித்தல் பிறர்க்குக் கொடுத்தல என்ற இரண்டும் நிறைவுஇல்லாமல் செல்வத்தை வருந்தி மேன்மேலுஞ் சேர்த்து எவர்க்குந் தெரியாமற் பத்திரப்படுத்திப் புதைத்துவைத்தி அறிபவர் பொருளின்பயனே அறியாதவராதலால்,'அருத் தஞ் செறிக்கும் அறிவிலார்' எனப்பட்டனர். ''பாடுபட்டுத் தேடிப் பணத் தைப்புதைத்துவைத்தக், கேடுகெட்டமானிடரே'' என்றார் ஔவையாரும். திரு-செல்வத்தக்கு உரியதலைவி; ''நல்லாளுடன்படின் தானே பெருகும் கெடும்பொழுதில், கண்டனவும் காணுங்கெடும்'' ஆதலால்; செல்வம் ஒழி தலை 'நிரு நீப்பின்' என்றது.

'தன்னே' என்பதை 'செறின்' என்பதோடுங் கூட்டுக. உள்ளின் னினையெச்சம், தொழிற்பெயர்த்தன்மைப்பட்டது. தெய்வம்-ஊழ்வினை. எருத்து - பிடரி. ஆம் - அசை. (ச)

கூ௦டு. கரவாத நெஞ்சிற் கண்ணன்ஞர் கண்ணு
மிரவாத வாழ்வுதாம் வாழ்க்கை—யிரவினை
யுள்ளுங்கா ணுள்ள முருகுமா லெஞ்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு.

(இ - ன்.) கரவாத - (யாசகர்க்குப் பொருளை) ஒளிக்காத [உள்ளதைக் கொடுக்கின்ற], நிண் அன்பின் - உறுதியான அன்பையுடைய, கண் அன்னார்கண்ணும்-(தம்) கண்ணையொத்த மேலோரிடத்தும், இரவாதவாழ்வதுயாசகஞ்செய்யாமல் வாழ்வதே, வாழ்க்கை ஆம் - (ஒருவர்க்கு) சல்வாழ்க்கையாம்; இரவினே உள்ளும் கால் - யாசித்தலாகிய தொழிலே மனக்கும் பொழுதே, உள்ளம் உருகும் - மனம் கரைந்து அழிந்துபோன்றது; (அப்படியிருக்க), கொள்ளும் கால்-(பிறரிடத்தித் தாம் ஒருபொருளை ஏற்கும்) பெறும்பொழுது, கொள்வார் குறிப்பு - (அங்ஙனம்) பெற்றுக்கொள்பவரது மனம், என்கொலோ - ஊப்படிப் பட்டதாமோ; (எ - று.)

லோபிகளல்லாதவரும், மனமொத்த அன்புள்ளவரும், கண்போலசு நிறைந்தவரு மானவரிடத்தும் இரக்கக்கூடாது; ஏனென்றால்,—இரத்தலென் பதை நினைக்கும்பொழுதே மனம் அழிகிறது; இரந்து பொருள்பெறும்போது, மனம் என்ன நிலைதான் அடையுமோ? என்பதாம். ஏதுவணி. இனி, 'என்கொலோ கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு' என்பதற்கு - பிறர் வருந்தி சம்பாதித்த பொருளைத் தாம் ஒருமுயற்சியுமின்றி யாசகமாய்ப் பெறுபவரது எண்ணம்என்னவோ? என்றும் கருத்துக்கொள்ளலாம்: அர்த்த எண்ணம் இகழத்தக்க தென்றபடி.

"கரவாத வுவர்நீயுங ண்ணன்னர் கண்ணும், இரவாமை கோடியு மும்", "இரவுள்ள வுள்ள முருகு கரவுள்ள, உள்ளதூஉ மின்றிக்கெடும்" என்ற திருக்குறள்களில் இங்கு ஒப்புகோக்கத்தக்கன.

கண் அன்னர் - உறுப்புகளிற் சிறந்த கண்போல, மனிதரிற்சிறந்த உத்தமரென்க. உம் - உயர்வுசிறப்பு. குறிப்பு - தொழிற்பெயர். உள்ளம் - அகத்தி உறுப்பு. (இ)

இடசூ. இன்னு வியைக வினிய வொழிகென்று
தன்னே தானிரப்பத் தீவதற்—கென்னேகொல்
காதல் கவற்று மனத்தினுங் கண்பாழ்பட்
டேதி லவரை யிரவு.

(இ - ன்.) 'இன்னு-தின்பங்கள், இயைக - (ரகக்கு வந்து) பொருந்தக்கடவன: இனிய-இன்பகங்கள், ஒழிக-(நம்மைவிட்டு) நீங்கக்கடவன,'என்றுஎன்று எண்ணி, தன்னேயே - தன் மனத்தையே, தான் நிரப்ப - தான் நிரம்பச் செய்தலினால் [திருப்திப்படித்துவதனால் என்றபடி], நீர்வதற்கு-நீங்கிப் போகும்படியான வறுமைக்காக, காதல் கவற்றும் மனத்தினுஞ்ல்-பொருளாசை கவலைப்படுத்தும் மனத்தோடு கூடி, கண் பாழ்பட்டு - (தன்பத்தால்) கண்கள் பொலிவிழக்கப்பெற்று, ஏதிலவரை இரவு - அயலாரை யாசித்தல், என்னே கொல் - என்னபயன் கருதியோ? (எ - று.)

இன்பம் துன்பம் என்பன மனத்தின் குண மாதலால், இன்பத்தைத் துன்பம்போலவும், துன்பத்தை இன்பம்போலவும் எண்ணி மனத்தில் திருப்தியடைதலிட்டால், வறுமைத்துன்பம் நீங்கிவிடத்தக்கதன்றோ? அப்படி சம்மாலேயே நீக்கத்தக்க ஒன்றை ஒழிப்பதற்காக சமது மனத்தைப் பண்படு

த்தால் புண்படுத்திப் பொருளாசையால் ஒடுக்கிப் பிறரைப் போய் யாசிப்பது நிறிதும் அவசியமில்லாத தென்பதாம். இவ்வாறு மனத்தால் துன்பம் இன்பமாகப் பாவிக்கப்படுதல் கூடுதலே, "வைத்தலே யின்சொல்லாக் கொள்வாளு செய்பய்த, சோறென்று கூறை மதிப்பாளு—மூறிய, கைப் பதனேக் கட்டியென் றுண்பாளு மிம்மூவர், மெய்ப்பொருள் கண்டு வாழ் வார்" என்பது கொண்டு அறிக. இன்பம் துன்பமாகப் பாவிக்கப்படுதல், இளமைநிலையாமை யாக்கைநிலையாமை செல்வம்நிலையாமை மூதலியவற்றை உணர்தலால் இனிது கூடும்.

கவற்று - கவல் என்பதன்பிறவினை பாழ்படுதல்-வாடுதல். கண் பாழ் பட்டு என்பதற்கு - அறிவழிந்து என்றும் பொருள்கொள்ளலாம். காதல் - காதுதல்: (மனத்தை) வருத்துவது எண்கிறகாரணம்பற்றி ஆசைக்குப் பெய ராயிற்று. இரப்ப எனப் பிரித்து - தன்மனத்தையே தான் வேண்டிக்கொ ண்டால் எனினும் அமையும். (சு)

கூ0ஏ. என்னும் புதியார் பிறப்பினு மிவ்வுலகத்
தென்னு மவனே பிறக்கலான்—குன்றின்
பரப்பெலாம் பொன்னெழுகும் பாயருவி நாட
விரப்பாரை யெள்ளா மகன்.

(இ - ன்.) குன்றின் பரப்பு எலாம் - மலைகளினுடைய பரந்த இடங்களி லெல்லாம், பொன ஒழுகும்-பொன் ஒடுதற்குக் காரணமான, பாய் அருவி- யினராக வருகின்ற அருவிகளையுடைய, நாட - நாட்டையுடைய அரச னே:—இவ் உலகத்து - இத்தப் பூலோகத்தில், என்னும்-எப்பொழுதும், புதி யார் பிறப்பினும்-புதியராய் மனிதர்கள் பிறந்துகொண்டிருந்தாலும், இரப் பாரை என்னா மகன் அவனே - யாசகர்களே இகழாத மனிதனே, என்னும் பிறக்கலான்-எப்பொழுதும் பிறவாதவன்; (எ - று.)

இரப்பவரை அலமரியாமல் ஆதரிக்கும் இயல்புடைய உத்தமமனித னே புதிதுபுதிதாய் மேன்மேலும் மனிதர் பிறத்தற் கிடமான இவ்வுலகத் தில் தான் பிறவாமல் நற்கதியடைவன் என்பதாம். இரப்பவரையிகழாத மனிதனேப் பிறக்கக் காண்கிறோமில்லையென அருமைபாராட்டிக் கூறியதா கவும் உரைகொள்ளலாம்.

இசசெய்யுள், யாசகர்க்கு அல்லிரத்தல் தொழிலில் உண்டாகிற அசசத் தை உள்ளபடியறிந்து மனமிரங்கி அவர்களுக்குத் தானுஞ்செய்யுந் தண்மை யுடையனேப் புகழ்ந்து கூறதலாகிய சம்பாதம்பற்றி, இவ்வதிகாரத்தில் வைக்கப்பட்டதென்க. 'இது இரவசமானது எப்படியென்னில்,—இந்த உலகத்தில் இரக்குமவனே இகழாதவர் யாருமில்லை யென்றவாறுதலால், நிலையாத உடம்பினே விரும்பிஇகழ்சசிகெகு ஆடகமாட மலவலிரப்பினே யஞ்சி அதனைத் தலிரவேண்டு மென்பதாம்' என்பது, பழையவுரை.

மருதநிலமாகிய அந்நாட்டை அடித்துள்ள குறிஞ்சிநிலத்தின் மாட்சி மையையும் அங்கிருந்து பொன்னை அடித்துகொண்டு பெருகுகின்ற நீர் வெள்ளம் நிலவளத்திற்குக் காரணமாய்ச் சிறந்திருத்தலேயுங் கூறுவார், 'குன்றின் பரப்பெலாம் பொன்னெழுகும் பாயருவி நாட' என்றார்.

இவ்வுலகத்து என்றும் பிறக்கலான் என்றதனால், முத்திபெறுவனென்பது பெறப்படும்; மீளாவுலகமாகிய முத்தியைப்பெற்றவர் மீண்டும் இங்குப் பிறத்தலில்லையென்பது, நூல் முணிபு: அப்படிப்பட்ட உயர்குதியும் உதாரகுணமுள்ளவருக்குக் கிடைக்கு மென்றவாறு.

பரப்பு-பரக்க இடத்தைக்குத் தொழிலாகுபெயர் ஒழுகும் - பெயரெச்சம் காரியப்பொருளது; 'கோய்தீரும் மருந்து' என்ற விடத்தைப் போல. இனி, ஒழுகும் என்ற தன்வினைக்கு - ஒழுக்கும் எனப் பிறவினைப்பொருள் கொண்டு, பொன்னைக் கொழிக்கிற என்று உரைப்பினுமாம். அவனே, எ - பிரிநிலை. மகனவன், அவன் - முதல்வேற்றுமைச சொல்லுருபு. (எ)

ஈக.அ. பிறத்தற்தன் னின்மை கூடிய வகத்தற்தன்
னன்மரான நீக்கி நிறீஇ யிவர னுவனே
யியா யெனக்கென் றிரப்பானே லக்கிலையே
மாயாஞே பாற்றி லீடின்.

(இ - ன்.) புறத்து - வெளிப்பிலே [உடம்பிலே], தன் இன்மை - தனது வறுமை, கலிய-வருத்த [தன்மேனியைப் பொலிவழிக்க], (அதற்காக), அகத்தி தன் கல் ஞானம் சீக்கி நிறீஇ-மனத்தில் தனது கல்ல அறிவுவத்தன்னி (அறியாமையை) நிலைநிறுத்தி, ஒருவனை-(செலவமுடைய)ஒருத்தனை,எனக்கு ஈயாய் என்ற இரப்பானேல்-'எனக்கு (ஒருபொருளைக்) கொடுப்பாய்'என்று (ஒருவன்சென்ற), யாசிப்பானைஞல், மாற்றிலீடின்-(அச்த செல்வமுடைய வன்இல்லையென்று) மறைத்தலிட்டால், அதிலுமிய-அவமதிப்பதிலையே[அப் பொழுதே] மாயாஞே (அவமதிப்பவன்)இரந்துபோகமாட்டானே'(எ-று.)

வறுமைகாரணமாகச் டம்புவருந்துபவனிடம் போய் யாசிக்கிறபொழுது, அவன்இல்லையென்றுசொன்னல்அச்சயாசகன் மாணவேதனேயடைவானே? என்ற இரக்கம் கூறியபடியாம். ''இரப்பவர் சொல்லாடப் போமுமிர்'' என்றார் திருத்தகவிஞரும். உடம்பைவருத்துகிற வறுமையைத் தொலைக்கும்பொருட்டியாசிப்பது, அவடம்பைஇவ்வாறுமாணவேதனைக்கு உள்ளாகவிடுகிறவருத்தலால்முடிதலால், இரப்பது பேதைமை; அதற்கு அஞ்சவேண்டும் என்பது, இதனுற்போந்தபொருள். மானங் கெட்டு இரக்கும் விரும்பிய பொருள்பெறுது ஏவோனல் மறைக்கப்பட்ட வறுக்கு உண்டாகும் அவமானத்தினும் அவனது மாணமே மேல் என்ற கருத்தும் கொள்ளலாம்.

இனி, உடம்பை வருத்துகிற வறுமையை யொழிக்கும்பொருட்டு ஒருவன் இரக்கத்தினிலானஞலும் அதனிலும் அப்பொழுதே இறக்து அவ்வுடம்பைவிட்டு அவ்வழிபால உடம்பைப்பற்றிய வறுமையை ஒழிப்பது கலமென்ற கருத்துக்கொள்ளவும் இடமுண்டு; இக்கருத்தைக்கு, அதிலையே - (வறுமை உடம்பைவருத்துகின்ற) அப்பொழுதே, மாற்றிலீடின்-(இரக்கமுயலாமல் அதனல் வருத்தப்படுகின்ற உடம்பை) ஒழித்தால், மாயாஞே - (அவ வறுமை) நீங்கமாட்டானே' என்று பதவுரை கொள்க.

**லிய-இல்கே, பிறவினைப் பொருளது. ஈயாய் - ஏவலொருமை; ஆய்விருதி, 'ஈ'-இழிந்தோனேற்றல்வினை; "ஈ தா கொடு வெனுமூன்று முறையே, யிழிர்தோ னெற்போன் மிக்கோ னிரப்பரை" என்றார் தன்னூலார். அர்கிலையே, ஏகாரம்-தேற்றவகையால் விசாவுதிக்கும். மாயானே, ஓகாரம் - இரக்கமும் வினவுமாம். ஒருவனே இரத்தல் என இயையும்.**

**முதலடியில் 'புறத்தி', 'அகத்து' என மாறபட்ட சொற்கள் வந்தது, தொடைழாயின். (அ)**

**நூ0கூ. ஒருவ ரொருவரைச் சார்ந்தொழுக லாற்றி**
**வழிபடுதல் வல்லுத லல்லாற்—பரிசழிந்து**
**செய்யீரோ வென்னு மெனனுஞ்சொற் கின்னுதே**
**பையத்தான் செல்லு நெறி.**

**(இ - ன்.) ஒருவர்—,ஒருவரை-மற்றொருவரை, சார்ந்து ஏழுதல் ஆற்றி-சேர்ந்து (அவர்கருத்தின்படி) நடத்தலை செய்து, வழிபடுதல்-(அவரிடம் தாம்) வணக்கத்தோடிருத்தலை, வல்லுதல் அல்லால் - வல்லவராயிருப்பது முறைமையே யல்லாமல்,—பரிசு அழிந்து - பெருமை கெட்டு, என்னனும் செய்யீரோ என்னும்-"(எனக்கு) எதாயினும்(உதவி)செய்யமாட்டீர்களோ?" என்ற இசக்தசொல்லுகின்ற, சொற்கு - சொல்லைக்காட்டிலும்.—தான் பைய செல்லும் நெறி-தான் தனபமுண்டாகப் போகும் வழி, இன்னுதே-இனிமையாக இராதா? (எ - று.)**

**ஒரு வறியவன் தன் வறுமையை நீக்குதற்பொருட்டுச் செல்வமுடைய வனை யடைந்து அவனிடம் தக்கபடி நடந்து வணக்கத்தோடு இருத்தல் செய்யத்தக்கதேயன்றி, மானமிழந்து அவனிடம் ஒருபொருளையும்இரத்தல் கூடாது; அப்படி இரந்து உண்டு இனிது உயிர்வாழ்தலினும் வறுமையால் வருத்தப்பட்டுக்கொண்டு காலங்கழித்தலே மேல் என்பதாம்.**

**இச்செய்புளில், மானமழிந்து இரத்தலிலுள்ள குற்றத்தினும், வறுமை யினால் வருந்தி நடத்தற்குக் குணக்கூறியுள்ளது, அகமலர்ச்சியணியாம்; இதுவடமொழியில் உல்லாஸாலங்கார மெனப்படும். ஒன்றன் குணத்தினு லாவது குற்றத்தினுலாவது மற்றொன்றற்கு குணமாவது குற்றமாவது உண்டாதலைச் சொல்லுதல், இதன் இலக்கணம்.**

**தான் ஒருவனைச் சார்ந்திருக்கையில், தனது குறிப்பையறிந்துஅவனே எதாவது உதவிசெய்தால் அவ்வுதவியை ஏற்றக்கொண்டாலும் கொள்ளலாம்; வாய்திறந்து இரப்பது இழிவு என்பது, இதனும் போந்த பொருள். பையத்தான்செல்லும் நெறி இன்னுதே என்பதற்கு-மெல்லத் தான்இல்லத்தைவிட்டுத் துறவறத்துக்குப் போய்த் தவஞ்செய்யும் வழிதானியதன்றே? என்ற உரைப்பாரு முளர்; அவ்வுரை, தவத்தைத் தாழ்வுபடுத்திச் சொல்வதாய் முடிதலால், தகுதியன்றென விடுக்க.**

**வல்லுதல் என்ற தொழிற்பெயரில், வல்-பகுதி; இது - வன்மையென்னும் பண்பினடி வினைச்சொல்தன்மைப்பட்டதாதல் வேண்டும். செய்யீர் -**

முன்னிலைப்பன்மை யெதிர்மறை வினைமுற்று; உடன்பாட்டு ஏவற்பன்மை யாகவும் கொள்ளலாம். இ - வினை. சொற்கு - ஈன்காம் வேற்றுமை, எல்லைப்பொருளது. இன்னாதே, ஏகாரம் - வினவலையால் எதிர்மறைப்பொருளையுணர்த்தி, 'இரண்டு எதிர்மறை ஓர் உடன்பாட்டையுணர்த்தும்' என்ற நியாயத்தால் உடன்பாட்டுப்பொருளைக் குறித்து, தேற்றக்கருத்தை வினைக்கும். பைய-தன்பப்பொருளையுணர்த்தும் 'பை' என்பத னடியாகப் பிறந்த வினையெச்சம்; பைதல் [துன்பம்] என வருதலையுங் காண்க. (கு)

நாகo. பழமை நாகப் பசைந்த வழியே
இழமைதான் யாதானுஞ் செய்க—இழமை
பொருஅ ரவரென்னிற் பொத்தித்தர் நெஞ்சத்
தருஅச் சுடுவதோர் தீ.

(இ - ள்.) பழமை காந்து ஆக - பழைய பயிற்சி காரணமாக, பசைந்த வழியே-(ஒருவர் மற்றொருவர்பக்கல்) அன்புகொண்டவிடத்து, (அவர்), இழமைதான் யாது ஆனும் செய்க - யாதாயினும் ஒரு தக்க உதவியைச் செய்யக்கடவர்; அவர் இழமை பொருர் என்னின் - அவர் (அப்படி) தக்க உதவி செய்யுந் தொழிலை ஏற்றுக்கொள்ளாமற் போவாராயின், (அது), தம் நெஞ்சத்து - தமது மனத்திலே, பொத்தி - பதித்து, அரு - நீங்காமல், சுடுவது-எரிக்கும்படியான, ஓர் தீ - ஒரு தீயாகும்; (எ - று.)

வறுமையடைந்தவர் அவ்வறுமைநீங்கப் பிறரிடம் சென்று இரத்தலாலுண்டாகும் மானபங்கத்திற்கு அஞ்சிப் பழைய ரண்பரிடம் அன்போடு சென்றால், அவர்கள் தம்மால் இயன்றமட்டில் உதவி செய்யக்கடவர்; அவ்வாறு உதவியொன்றும் செய்யாமற்போனால், அது, அடைந்தவர்களது மனத்தை மிகவும் வருந்தச் செய்யும் என்பதாம்.

பின்னிரண்டடிகளில் உபமான உபமேயங்கட்கு ஐக்கியம் [ஒற்றுமை] கூறியுள்ளது, காட்சியணியாம்.

பழமை - சினேகிதரது பழையவசாரஞ் தன்மை. பொருஅர், அருஅ-செய்யுளோசை நிறைக்கவந்த உயிரளபெடைகள். இழமை - உரிமை; உரிய உதவிக்குப் பண்பாகுபெயர். இழமை பொருஅர் அவர் என்னின் என்பதற்கு - தாம் உரிமை பற்றிச் செய்த உதவியை வந்தவர் ஏற்றுக்கொள்ளாமற்போனால் என்று உரைப்பாரு முளர்; அவ்வுரை அதிகாரத்திற்குச் சம்பந்தப்பட்டதன்றும். புறத்தையே சுடுந் தீயினும் வேறுபாடு தோன்ற 'ஓர் தீ' என்றுரென்னலாம்.

இவ்வதிகாரத்துப் பாடல்களிற் சிலவற்றைச் செய்தவர்கள், கண்டவரிடத்தும் போய் மானங்கெட இரத்தலே முழுவதும் இகழ்ந்து, பழக்கமுடையவரை அடைந்து அவராற் குறிப்பறிந்து செய்யப்படும் உதவியை ஏற்றுக்கொள்ளுதலே ஒருவரிற் உடன்படுக் கருத்தையர் எனக் காண்க.

## ஐந்தாவது

# பொதுவியல்.

அரசியல் முதலியவற்றுள் அடங்கா தொழிற்தவற்றின் இயல்பைக் கூறும் பிரிவு என்பதாம். அத்தன்மை அவையறிதலென்னும் இவ்வதிகார மொன்றனுற் கூறப்படுதலால், ஓரதிகாரம்தானே ஓரியலானமை அறிக.

---

## ஈஉ - ஆம் அதிகாரம்.—அவையறிதல்.

சபையின் தன்மையை அறிதல்; அஃதாவது - சபையில் உள்ளவர்க ளது கல்வி கேள்விகளின் தகுதிகளே நட்பமாக அறிந்து அதற்கு ஏற்ற படி தான் அங்கு நடத்தல். இரவச்சத்துக்கும் அவையறிதலுக்கும் சமீப மான சம்பந்த மில்லையாஞலும் மானத்தைப் பாதுகாப்பவர்க்கு இரவச்சம் போலவே அவையறிதலும் இன்றியமையாததென்கிற காரணம்பற்றி, இர வச்சத்தின்பின் வைக்கப்பட்டது. இரப்பது அவமானமடைவதற்குக் கா ரணமாவதுபோல, சபையறியாமற் சென்று நடத்தலும் மானக்கேட்டுக்குக் காரணமாகுதல் காண்க. அவை - ஸபா என்னும் வடமொழியின் திரிபு; சபை, சவை, அவை எனக் காண்க. 'அவை' என்பது - அவையிலுள்ளாரது குணக்களுக்கு இருமடியாதபெயர்.

ஈகக. மெய்ஞ்ஞானக் கோட்டி யுறழ்வழி விட்டாங்கோ
ரஞ்ஞானந் தந்திட் டதுவாங் கறத்தழாய்க்
கைஞ்ஞானங் கொண்டோழுகுங் காரறி வாளர்முன்
சொன்ஞானஞ் சோர விடல்.

(இ - ன்.) மெய் ஞானம் - உண்மையான அறிவையுடைய, கோட்டி - சபையிலே, உறழ் வழி - சேரும் முறைமையை, விட்டு - நீங்கி, ஆங்கு-அவ் விடத்திலே, ஓர் அஞ்ஞானம் தந்திட்டு - அறிவில்லாமைக்கு உரியதொரு வார்த்தையைக் கொண்டுவந்து (எடுத்துச்) சொல்லி, அது - அந்த அஞ் ஞானவார்த்தையையே, ஆங்கு - அச்சபையிலே, அற-மிகுதியாக, தழாய்- பற்பி, கை ஞானம் கொண்டு ஒழுகும் - அற்பமான அறிவைக்கொண்டு நடக்கின்ற, கார் அறிவு ஆனர் முன் - பழிக்கப்படும் அறிவையுடையவர்க ளின் முன்பு, சொல் ஞானம் - (புகழ்ந்து) சொல்லத்தக்க(தமது) ஞானத் தை, சோரவிடல் - (ஒருவர்) தளரவிடக்கடவர்; (எ - று.)

பெரி விவேகிளின் சபையிலே போய்த் தாம் அடக்கமாக இருந்து அவர்கள் சொல்வதைத் தெரிந்திகொள்வதை விட்டு, அங்கே தமது அறி வில்லாமைக்கு உரிய ஒரு பேச்சை வெளியிட்டு அதனையே மூலாத்தன மாய் ஸ்தாபிக்கவும் தொடங்குவர்; அப்படிப்பட்ட மூடர்களின் முன்னிலை யில் விவேகிகள் தமது நெற்ற மொழிகளே உறழ்ப்படுத்திச் சொல்லாமல் விட்டிடவேண்டும் என்பதாம். "புல்லவையுட் பொச்சார்தும் சொல்லற்க நல்லவையுள், ளன்குசெலச் சொல்லுவார்" என்றார் திருக்குறளிலும்.

இச்செய்யுளில் ஒரே பொருளுள்ள 'ஞானம்' என்ற சொல் பன்முறை வந்தது, கோர்போருட்பின் வருநிலையணியாம்.

மெய்ஞ்ஞானக்கோட்டி-சபையிருள்ளாரது தத்துவசாஸ்திரஞானம், சபையின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது; உபசாரவழக்கு. அஞ்ஞானம் - அஜ்ஞானம்; வடசொல், கைஞ்ஞானம், கை-தெமை. பழியைக் கருதிமுடைய தென்று வருணித்தல் கவிமாபாதலால், அத்தன்மையை இங்கே பழிக்கப் படும் அறிவின்மேல் ஏற்றி, 'காரறிவு' என்றார். (க)

ஈடீஉ. நாப்பாடஞ் சொல்லி நயமுணர்வார் போற்செறிக்குந்
தீப்புலவற் சேரார் செறிவுடையார்—நீப்புலவன்
கோட்டியுட் குன்றக் குடிபழிக்கு மல்லாக்காற்
றோட்புடைக் கொள்ளா வெழும.

(இ - ள்.) நா பாடம் சொல்லி-வாய்க்குவந்த பாடங்களே எடுத்துச் சொல்லி, நயம் உணர்வார் போல் - நல்ல தூற்பொருள்களை அறிபவர் போல (த் தன்னைக் காட்டி), செறிக்கும் - (கூட்டஞ்) சேர்க்குந்தன்மை யுள்ள, நீ புலவன்-தகுதியல்லாத புலவனை, செறிவு உடையார் சோரார் - அடக்கமுள்ள நற்புலவர்கள் சேரமாட்டார்கள்: (ஏனெனில்),—நீ புலவன்-அந்த இழிகுணமுடைய புலவன், கோட்டியுள் - சபையிலே, குன்ற-(கேட் பவர்மனம்) வருத்தும்படி, குடி பழிக்கும் - (நற்புலவர்களின்) குலத்தை இகழ்ந்திப்பான்; அல்லாக்கால்-அப்படியல்லாவிட்டால், தோள்புடைக்கொள்ளா எழும்-தோள்களைத் தட்டிக்கொண்டு (சண்டைக்கு) எழுவான்; (எ - து.)

வாய்க்குவந்ததைச் சொல்லித் தன்னைப் படித்தவனுக்குப் பிறர்மயங்கும் படிசாட்டி இந்த ஊடம்பாத்தாற் சனங்களைக் கூட்டிவிடுகிற டம்பத்தன்மை யுள்ள மோலிப்புலவனிடத்து அடக்கமுடையோர் சென்று பேசுதல் தகாது; ஏனென்றால்,—அவன் அங்கே தனக்குத் தோன்றியபடியெல்லாஞ் சொல்லுகிற சொல்லுக்கு இவர்கள் எதாவது தக்க ஆக்ஷேபஞ்சொன்னால், அதற்கு ஏற்ற உத்தரஞ் சொல்லமாட்டாமையால் அவன் கோபக்கொண்டு இவர்கள் குலத்தைப்பற்றிப்பழித்துப்பேசவாவது கூசிப்படுவான்; அல்லது, கோபாவேசத்தாற் சண்டைக்குக் கிளம்பினாலும் கிளம்புவான் என்பதாம்.

முன்னிரண்டடிகளிற் கூறியுள்ள விஷயத்தைப் பின்னிரண்டடிகளிற் காரணங்காட்டி நிறுவியது, ஏதுவணியாம்.

இங்கே 'பாடம்' என்றது, நெட்டுருவாய்த் தனக்குத்தெரிந்த விஷயம் என்றபடி. செறிக்கும் என்பதில் பகுதியாகிய செறி என்பது-தன்வினை பிறவினை இரண்டுக்கும் பொது; இங்கே பிறவினைக்குவந்தது: செறியும் என்னுது, செறிக்கும் என வலியிடுகையே, பிறவினைக்குறி. புலம் - அறிவு; அல்லது, புலமை-கல்வித்தேர்ச்சி; அதாவது - பலவேறுவகைப்பட்ட நூலுணர்ச்சிகளெல்லாம் ஒருங்கேகொண்ட பேரறிவுடைமை: பாண்டித்தியம்: அதனையுடையவன் புலவன். புலவற்சேரார் - உயர்திணையில் இரண்டாம் வேற்றுமையுருபு தொக்கது; உயர்திணைப்பெயரின் ஈறு விகாரமாயிற்று

இரண்டாம் வேற்றுமைச் சிறப்புவினையால். புலவன் பழிக்கும், எழும் - செய்யுமென்னும்முற்று ஆண்பாலுக்கு வந்தது. புடைக் கொள்ளா - புடைத்த லைக்கொண்டு; புடை - முதனிலைத்தொழிற்பெயர். (உ)

நூகூ. சொற்றூற்றுக் கொண்டு சூணத்தெழுதல் காமுறுவர்
கற்றூற்றல் வன்மையுங் தாந்தேரார்—கற்ற
செலவுரைக்கு மாறறியார் தோற்ப தறியார்
பலவுரைக்கு மாந்தர் பலர்.

(இ - ன்.) சொல் தாறு கொண்டு - சொற்களாகிய மூட்கோல்களைக் கொண்டு, சூணத்து எழுதல் காமுறுவர் - நினைவுகொண்டு (வாதஞ்செய்ய) எழுச் நிருத்தலே விரும்புபவர்களாய்,—கற்ற ஆற்றல் வன்மையும்-(பிறரது) படித்த சாமர்த்தியத்தையும் (பேசுதல் முதலியவற்றிலுள்ள) வல்லமையையும், தாம் தேரார்-தாம் அறியாதவராய்,—கற்ற - (தாம்) அறிந்தவைகளை, செல - (பிறர் மனத்திற்) புகும்படி, உரைக்கும் ஆறு அறியார் - சொல்லும் வழியை அறியாதவர்களாய்,—தோற்பது அறியார் - (வாதப்போரில் தாம்) தோல்வியடைதலையும் அறியாதவர்களாய், பல உரைக்கும் - அதேகவார்த்தைனை (மீளுகச்) சொல்லுகிற, மாந்தர் - மனிதர்கள், பலர்-(உலகத்தில்) அதேகர் (இருக்கின்றார்கள்); (எ - று.)

உலகத்தில் அற்பஞானமுடையவர் பலர், சபையில் தாமும் ஏதாவ தொன்றை எடுத்துச்சொல்லி வாதஞ்செய்து பிறரோடு மாறுகொள்ளவேண்டுமென்று மிக்கவிருப்பங்கொண்டு இளம்புவார்கள்; அவர்க்கு, தம்எதிரில் வாதஞ்செய்பவரது படிப்பும் சாமர்த்தியமும் பிரசங்கசக்தி முதலியனவும் தெரியா; தமக்குத்தெரிந்த விஷயங்களேயும் ஒழுங்குபடச்சொல்லத் தெரியாது; தாமாக ஆசைப்பட்டு எடுத்துக்கொண்ட வாதத்தில் பிறரால் தமது கொள்கை தோற்றுப்போஞல் அதுவுந்தெரியாது; மேன்மேல் எதையாவது சொல்லிக்கொண்டிருப்பார்கள்: இப்படிப்பட்ட பயனில்சொல் பாராட்டுந் தன்மையார் சபைக்கு உரியவரல்லர் என்பதாம்.

தாம்செய்யத் தொடங்கும் வாதப்போர்க்குத் தமது சிற்றறிவுடைய சொற்களேயே ஆயுதமாகவுள்ளவர்கள் கருதுதலால், 'சொல்தாற்றுக்கொண்டு' என்றார்; உருவகம். தாறு + கொண்டு = தாற்றுக்கொண்டு; ரெடிற்றொடர், வேற்றுமையில் நகரவொற்று இரட்டித்து. சூணத்தல்-சொறிதல்; இங்கே, உபசாரவழக்காய், அதற்குக்காரணமாகிய நினவின்மேல் நின்றது: இனி, சூணத்தல்-கோபித்து என்றுமாம். 'தூணைத்தெழுதல்' என்ற பாடத்துக்கு - வீரைத்தினைம்புகென்க. காமுறுவர், காமுறு - பகுதி; இது, காமுறு என்பதன் விகாரம். கற்றூற்றல் - கற்றவாற்றல் என்பதன் தொகுத்தல். தோற்பது - தோல்வித்தான மெனப்படும். (ஊ)

நூகூக. கற்றதுஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற்
பெற்றதாம் பேதையோர் சூத்திர—மற்றதனை
நல்லா ரிடைப்புக்கு நாணுது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்.

(இ - ன்) *கற்றதனாலும் இன்றி* - (தான்) படித்தது தெரிதுமில்லாமல், *கணக்காயர் பாடத்தால்*- பள்ளிக்கூடத்திற் படிப்பவர்களது வாய்ப்பாடத்தைக் கேட்டு அதனால், பேதை மூடன், *நூல் ஒத்திரம்* - ஒருசூத்திரத்தின் மூலபாடத்தை, *பெற்றது ஆம்* - பெற்றதாவானன்; (அப்படிபெற்றாலின்), மற்று - பின்பு, *அதனை*-அச்சூத்திரதனை, *கல்லாரிடை புக்கு* - கல்லாதிருக்கின்றவான்களுடைய சபையிற் போய், *நானுது சொல்லி* - வெட்கப்படாமற் சொல்லி, *தன் புல் அறிவு காட்டிவிடும்* - தனது இழிவான அறிவை வெளிப்படுத்திவிடுவோன்; (ஏ - று.)

மூடன் ஆசிரியரை வழிபட்டு முறையேகல்விகற்காமல் கல்விச்சாலை கலிற்கற்கும் மாணாக்கர் வாய்ப்பாடத்திற்காக வாய்விட்டுப் பலமுறை உருச்சொல்லும் பொழுது கேட்டு யாதாயினும் ஒரு சூத்திரத்தமாத்திரம் தான் தெரிந்துகொள்வானுயின், அவ்வளவோடு இராமல், படித்தபெரியோர்கள்கூட்டத்திற் போய்க் கூச்சமில்லாமல் அச்சூத்திரத்தை அரைகுறையாகக் குழறித் தனது அஜ்ஞானத்தை வெளியிடுவோன் என்பதாம்.

பேதையர்களின் தன்மையைச் சுவையுபட கூறியிருத்தலால், இச்செய்யுள் - நன்மைநவிற்சியணியாம். இது, வடமொழியில் ஸ்வபாவோக்தி எனப்படும்.

ஒன்றைக் படித்தவனுக்கு, ஏதாவது ஒன்றைச் சபையிலே எடுத்துச் சொல்லுமபொழுது தவறுபடுமோ வென்ற ஞாணம் மிகுதியாக உண்டாகக்கூடும்; அது கற்றறியாதவனுக்கு இல்லை யாதலால், 'ஞானுதசொல்லி' எனப்பட்டது. அறிவுடையோரது சபையில் அறிவில்லாதவன் போலுமும் மௌனமாக இருக்தால், அவனது அஜ்ஞானம் எல்லோர்க்கும் வெளிவிளங்காது; அவ்வாறு அடங்கியிராமல் "நுணலும் தன்வாயாற் கெடும்" என்றபடி தன்வாயால் தனது பேதைமையைப் புலப்படுத்துதலால், 'சொல்லித் தன்புல்லறிவு காட்டிவிடும்' என்றார்; "கற்பனஞ்சற்றுர் கல்விக் கழகத்தாங், தொற்கமின் மூத்தவர் யங்காதல்-மற்றுத்தம்,வல்லூரு வஞ்சண்மி னென்பவே மாபறவை, புல்லூரு வஞ்சுவபோல" என்றதை இங்கே அறிக.

*கற்றதனாலும்*, உம் - இழிவுசிறப்பு; இன்னிசையளபெடை. *கற்றதனாலும் இன்றி* என்பதற்கு - வன்முறையால் *நல்லாசிரியரிடம் படித்தொன்றுமில்லாமல்* என்றும், *கணக்காயர் பாடம்* என்பதற்கு - உபாத்தியாயர் பிறர்க்குசொல்லிக்கொடுக்கிற பாடத்தினால் என்றும் உரைப்பாரு முளர். பேதை - அறிவின்மை; பேதைமையென்னும் பண்பினடி; அறிவில்லாதவனுக்குப் பண்பாகுபெயர். அவிவேகியினுடைய இழிவு விளங்க, 'பெற்றது'என அமீரிணையாக் கூறினார்; "ஏவப்பினுமுயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும், இழிப்பினும் பாலறிணையிழக்கினு மியல்பே" என்பது காண்க. ஸுத்ரம்-வடசொல். கணக்கு ஆயர்-கணக்கை ஆய்ந்த லுடையவ ரென்க; கணக்கு - எண்ணும், எழுத்தும்.

'*கல்லாரவைப்புக்கு*' என்னும் பாடம். (ச)

நூகடு. வென்றிப் பொருட்டால் விலங்கொத்த மெய்கொள்ளார்
கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ—டொன்றி
யுரைவித் தகமெழுவார் காண்பவே கையுட்
சுரைவித்துப் போலுந்தம் பல்.

(இ - ள்.) வென்றிப் பொருட்டால் - (பிறரைத் தாம்) வெல்லுதலாணமாக, விலங்கு ஒத்தி - மிருகங்கள் போன்ற, மெய் கொள்ளார் - உண்மைப் பொருளே ஏற்றுக்கொள்ளாதவராய், கன்றி கறுத்து - மிகக்கோபித்து, எழுந்து - (போர்க்குச்) சித்தமாய், காய்வாரோடு-மனங்கொதிப்பவர்களோடு, ஒன்றி - சேர்ந்து, உரை வித்தகம் எழுவார் - (தமது) சொல்லின் வன்மையைக் காட்டப் பிரயத்தனப்படுபவர், சுரை வித்து போலும் தம் பல் - சுரைக் காயின் விதைகள் போன்ற தங்கள் பற்களே, கையுள் காண்ப- (உடனே தங்கள்) கையிற் காண்பார்கள்; (எ - று.)

தாமாகவும் அறியாமல் பிறர்சொன்னலும் கேட்டுத்தெரிந்துகொள்ளாமல் முரட்டுத்தனத்தையுடையவர்களாய் மிருகத்தோடொத்த குணமுள்ள அற்ப அறிவுடையாரோடு புத்திமான்கள் யாதாயினும் ஓர் உண்மைப்பொருளைச் சொல்லத்தொடங்கக்கூடாது; அப்படித்தொடங்கினல், அந்த மூடர்கள் இவர்களையும் இவர்கன்சொல்லையும் மதியாததோடில்லாமல், இவர்களோ கன்னத்தில்லறைந்து இவர்கள்பற்களே உதிர்த்து இவர்கள்கையிற்கொடுப்பார்கள் என்பதாம்.

'மூடர்களுடன் பேசுவதன் பயன் பல்லுடையக் கன்னத்தில் லடிபடுவதே' என்பதை வேறுவகையாகக் கூறியிருப்பது, பிறிதினவிற்சியணியாம்; இது, வடமொழியில் பரியாயோக்த மெனப்படும்.

வென்றிப்பொருட்டால், பொருட்டு - நான்காம்வேற்றுமைச்சொல்லுருபு; ஆல் - அசை. மிருகங்களிலும் மனிதர்கட்கு உள்ள ஏற்றம், உணர்வுடைமை; அது இல்லாமையின், 'விலங்கொத்தி' என்றார்; "விலங்கொடு மக்க ளனைய ரிலவ்குனல், நற்ருரொ டேனை யவர்" என்ற திருக்குறளையுங் காண்க. விலங்கு - குறுக்காகவடிவமமையப்பெற்றது எனக் காரணப்பெயர்: இது - 'நிர்க்ஷ' என்ற வடசொல்லின் பொருள் கொண்டது. கன்றிக் கறுத்து - ஒருபொருட்பன்மொழி. கறுத்தல் - கோபித்தல்: உரிச்சொல். கருமை யென்னும் பண்பினடி விகாரப்பட்டு வினைத்தன்மையடைத்தது. காண்பவே, ஏ - தேற்றம்.

தான்காமடி - வழுவமை. "திரைமுத்தினேய நகையுங் காணுய், சுரை வித்தேய்ப்பப் பிறழ்ந்தவேருயினே" என்ற மணிமேகலையையுங் காண்க.

நூகசு. பாடமே யோதிப் பயன்றெரித றேற்றுந
மூடர் மூனிதக்க சொல்லுங்காற்—கேடருஞ்சீர்ச்
சான்ருர் சபழ்த்தனர் நீற்பவே மற்றவரை
யீன்ருட் பிறப்பப் பரிந்து.

(இ - ன்.) பாடமே தெளி-ஒருபாட்டின் மூலபாடத்தைமாத்திரமே வாய்ப்பாடமாகச்சொல்லி, பயன் தெரிதல் தேற்றாத -(அதன்) பொருளே ஆராய்ந்தறியமாட்டாத, மூடர் - அறிவில்லாதவர், முனிதக்க சொல்லும்கால் - (கேட்பவர்) கோபிக்கத்தக்க குற்றமான சொற்களைச் சொல்லும்பொழுது, கேடு அருஞ் சீர் சான்றோர்-அறிவில்லாத புகழையுடைய பெரியோர்கள், அவரை ஈன்றாட்கு இறப்ப பரிந்து - அவர்களைப் பெற்றதாய்விஷயத்தில் மிக இரங்கி,சமழ்த்தனர் நிற்ப-(அவர்களை அவமானப்படுத்துதற்கு) காணங் கொண்டவர்களாய் நிற்பார்கள்; (எ - று.)—எ - தேற்றம்.

செய்யுள்களின் பொருள் நுட்பமறியாத மூடர்கள் தவறாக எதைச் சொன்னாலும் புத்திமான்கள் கேட்டுப் பொறுத்துக்கொண்டு நிற்பது, 'இவனைப்பெற்றதாய், இவன் நம்மால் அவமானப்படுஞ் செய்கையைக் கேள்விப்பட்டால் வருத்துவளே!' என்று எழுந்த இரக்கத்தாற்போலும் என்பதாம்.

பெரியோர் தமக்கு இயல்பாகவுள்ள பொறுமைக்குணத்தினால் மூடர்களைப் பொறுத்திருத்தற்கு, கலி, ஈன்றாட்கிறப்பப் பரிதலைக் காரணமாகக் கற்பித்துக் கூறியது; ஏதுத்தற்குறிப்பேற்றவணியாம்; இவ்வணியில் தற்குறிப்பேற்ற வருபு தொக்குநின்றது; இங்ஙனம் உருபுதொக்குவரும் இவ்வணியை வடனூலார் கம்யோத்ப்ரேக்ஷை யென்பர்.

இவனது தாயின் தகுதியை நோக்கி இவன்பிழையைப் பொறுத்தல் கூடுமேயல்லது, இவன்பிழையையேநோக்கினால் பொறுக்கக்காரணமில்லை யென்பது கருத்து. இனி, இவனைச் சபித்தால் இவன் இங்கு அடைய அதற்காக இவன்தாய் வருத்துவளே என்று அவர்கள் பொறுத்திருப்பார்களென உரைப்பாரு முளர். "புல்லா வெழுத்திற் பொருளில்லவறுக்கோட்டி, கல்லா வொருவ னுரைப்பவுங் கண்ணேடி, நல்லார் வருந்தியுங்கேட்பரே மற்ற வன் பல்லாருள்ளாணல் பரிந்து" என்பதனோடு இச்செய்யுளை ஒப்பிடுக.

பாடமே, எ-பிறிதிலை. தேற்றாத-பிறவினை. தன்னினைப்பொருளதென்றுவது, இருவகையினைக்கு பொதுவானதை இங்கே தன்னினைக்கு வத்தென்றுவது, தேற்றதென்பதன் விரித்த லென்றுவது கொள்ளத்தக்கது. மூடர்-வடசொல். முனி-முதனிலைத்தொழிற்பெயர் கேடு-முதனிலைதிரிந்த தொழிற்பெயர். சீர் - ஸ்ரீ என்னும் வடமொழியின் திதை வெண்பா. மற்று- அசை; வினைமாற்றமாம். (ச)

ரூகஎ. பெறுவது கொள்பவர் தோள்போ னெறிபட்டுக்
கற்பவர்க் கெல்லா மெளிய நூன்—மற்றம்
முறிபுரை மேனிய ருள்ளம்போன் றியார்க்கு
மறிதற் கரிய பொருள்.

(இ - ன்.) நூல்-சாஸ்திரங்கள்,—பெறவது கொள்பவர்தோள் போல்-கிடைக்கிறபொருளைப் பெற்றுக்கொள்கின்ற லீலைகளிறது தோள்கள் போல, நெறி பட்டு கற்பவர்க்கு எல்லாம் - (படிக்கிற) வழியிலே யிறங்கிப் படிக்கிறவர்களுக்கெல்லாம், எளிய - சுலபத்தில் கிரகிக்கத்தக்கனவாம்; பொருள்-(அந்தச்சாஸ்திரங்களின்) அர்த்தங்களோ வெனின்,—அ முறி புரை

மேனியர் உள்ளம்போன்று-தளிரையொத்த உடம்பையுடைய அர்த்வேசையர்களது மனத்தை யொத்து, யார்க்கும் அறிதற்கு அரிய - எவர்க்கும் அறிவதற்கு அருமையானவை; (எ - று)

சாஸ்திரங்களின் மூலபாடத்தையும் அதன் பதவுரையையும் அறிதல், வீணைமரணிரைச் சேர்தல்போலப் பலர்க்கும் சுலபசாத்தியமாம்; அவற்றின் சாரமானபொருளையும் ஆழ்ந்தகருத்தையும் அறிதல், அவ்வேசையரதகருத்தின் நிலைமைபோல யாவர்க்கும் எளிதில் அறியமுடியாதலை என்பதாம்; உவமையணி. மூலபாடம்படித்தலோடு நிற்காமல் பொருளையுங் கருத்தையும்நுட்பமாக அறிபுர்ந்தமையுடையவரே, சபைக்குத் தக்கவர்;அப்படியறியாதவர் தக்கவரல்லர் என அதிகாரத்தக்கு ஏற்பக் கருத்துக் கொள்க.

பெறுவது-எதிர்காலவினையாலணையும்பெயர்; சாதியொருமை. எளிய, அரிய - பண்படியாப்பிறந்த பலவின்பாற் குறிப்புமுற்றுக்கள். மற்ற-வினைமாற்று. தளிர்-மேனிக்கு, மென்மை செம்மை அழகுகளில் உவமை. புரை-உவமவுருபு; வினைத்தொகை.

போன்றியார்க்கும் - குற்றியலிகரம், அலகுபெறவில்லை, மேனியருள்ளம் போன்றியார்க்கும் என்று சீர்பிரித்தால், அலகுபெறும். (எ)

உகஅ. புத்தகமே சாலத் தொகுத்தும் பொருடெரியா
ரூய்த்தக மெல்லா நிறைப்பினு—மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருடெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

(இ - ன்.) புத்தகமே - புத்தகங்களே மாத்திரமே, சால் தொகுத்தும் மிகுதியாகச் சேர்த்தும், பொருள் தெரியார் - (அவற்றின்) பொருளே அறியாதவர்களாய், உய்த்து - (அவற்றைக்) கொண்டுவந்து, அகம் எல்லாம் நிறைப்பினும்-வீடுமுழுவதும் நிறைத்தாலும், அவற்றை போற்றும் பலவரும் வேறே-உட்புத்தகங்களைப் பாதுகாக்கும் புலவர்களும் வேறானவரே: பொருள் தெரிந்து - (அவற்றின்) அர்த்தங்களே அறிந்து, தேற்றும்-(பிறர்க்கும்) அறிவிக்கும், புலவரும்-அறிவுடையோரும், வேறு-வேறானவரே; (எ று.)

புத்தகங்களே மிகுதியாகச்சேர்த்ததனாலே எவரும் புலவர்களாக மாட்டார்கள்; அவற்றின் பொருளைத் தாம் அறிந்து பிறர்க்கும் போதித்து வீளங்கச் செய்பவர்களே புலவர்களாவர் என்பதாம். 'அவற்றைப் போற்றும் புலவரும் வேறே'என்றது, அவர்கள் புஸ்தகபரிபாலகராகவே மதிக்கப்படுவோர்கள் என்றபடி.புத்தகங்கள் சேர்த்துவைத்தவனுக்குப் பயன்படாமல் படிப்பவர்க்கே பயன்படுதலே, செல்வம் சேர்த்துவைத்தவர்க்குப் பயன்படாமல் அனுபலிப்பவர்க்கே பயன்படுதல்போலக் கொள்க. புஸ்தகபரிபாலகரைப் புலவரென்றது, இகழ்ச்சி.

புத்தகம் - புஸ்தகம்: வடசொல்: ஏ - பிரிநிலை. மற்ற - வினைமாற்று. புலவர் வேறு—வேறு என்பது, இருதிணைஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவான குறிப்புவினைமுற்றுப் பகாப்பதமாதலால், புலவர் என்ற உயர்திணைப் பலர்பால் எழுவாய்க்குப் பயனிலையாய்நின்றது. மூன்றும் அடியிலுள்ள பிரிநிலையேகாரத்தைப் பிரித்து கான்காம் அடியோடுகூட்டுக. (அ)

நூகஉ. பொழிப்பகல நுட்பநூ லெச்சமிக் நான்கிற்
கொழித்தகலங் காட்டாதார் சொற்கள்—பழிப்பி
னிரையாமா சேர்க்கு நெடுங்குன்ற நாட
வுரையாமோ நூலிற்கு நன்கு.

(இ - ன்.) பழிப்பு இல்-குற்றமில்லாத, நிரை ஆமா-கூட்டமாகிய காட்டுப்பசுக்களே, சேர்க்கும் - (தம்மிடத்திலே) சேரச்செய்கிற, நெடுங் குன்றம் - உயர்ந்த மலைகளையுடைய, நாட - (பாண்டிய) நாட்டையுடைய அரசனே!—பொழிப்பு - பொழிப்புரையும், அகலம் - அகலவுரையும், நுட்பம் - நுட்பவுரையும், எசசம்-எசசவுரையும், இ நான்கின் - (ஆகிய) இந்த நான்கு வகையுரைகளாலும், கொழித்த - நன்றாக ஆராய்ந்து, நூல் அகலம் - ஒரு நூலினுடைய விரிவான பொருள்களை, காட்டாதார் - எடுத்துக் காட்டாதவர்களுடைய, சொற்கள்—,நூலிற்கு - ஒரு நூலுக்கு, நன்கு உரை ஆமோ - சிறந்த உரையாகுமோ? [ஆகா என்றபடி.]; (எ - று.)

ஒரு நூலுக்கு உரைகூறுபோந்து, அவ்வுரை நான்குவகைப்படும்;பொழிப்புரை, அகலவுரை, நுட்பவுரை, எசசவுரை என. பொழிப்புரையாவது-மூலபாடங் காட்டுதல், பதப்பொருள் சொல்லுதல், உதாரணங் காட்டுதல் என்பன. அகலவுரையாவது - தான் உரையிடப்புகுந்த நூலிலும் பிறநூலிலும் உள்ள பொருள்களின் ஒற்றுமைவேற்றுமை நயங்களைப்பற்றித் தானே பல ஆட்சேபங்களே எடுத்துக்காட்டுதல். நுட்பவுரையாவது - ஏற்ற காரணங்களினால் தக்க சமாதானங்கூறி அந்த ஆட்சேபங்களே மொழித்தல். எசசவுரையாவது-இங்ஙனம் ஆட்சேப சமாதானங்களாற் சித்தாந்தஞ் செய்யப்பட்ட பொருளே உரைத்தல். இவற்றை "பொழிப்பே யகலம் நுட்ப மெசமெனப், பழிப்பில் சூத்திரம் பன்னல் நான்கே," "அவற்றுள், பாடங் கண்ணழிபு உதாரண மென்றிவை, காடித் நிரிபில வாகுதல்பொழிப்பே," "தன்னூல் மருங்கினும் பிறநூல் மருங்கினும், தன்னிய கடாவின் புறந்தோன்றும் விகற்பம், பன்னிய வகல மென்மனூர் புலவர்," "எதுவி னுக்கு வை தடைத்தல் நுட்பம்," "தடைத்தக் கொன்பொருள் எச்சமாகும்" என்னுஞ் சூத்திரங்களா லுணர்க. இனி, பதங்களின் பொருளே அநுவயக் கிரமப்படி கூறுவது பொழிப்புரையென்றும், பதப்பொருள் முதலியவற்றை நியாயங்காட்டி விரித்தசொல்வது அகலவுரையென்றும், மூலதந்தின் சாரமான பொருள்களைக் கருத்துக்களோடு நுண்ணிதாக எடுத்துரைப்பது நுட்பவுரையென்றும், நூலிற்சொல்லப்படாதொழிந்த விஷயங்களைப் பிறநூல் மேற்கோள்கொண்டு எடுத்தசசொல்வது எசசவுரையென்றும் கொள்ளுதலும் ஒன்று. இங்ஙனம் பலவகையாலும் நூற்பொருளே விவரமாகவினக்கிகாட்டாதவர்களுடைய உரைகள் சிறப்பில்லாதன என்பது, இப்பாட்டின் கருத்து. இவ்வாறு உரைகூறதகுதக்கவர்களே சபைக்கு உரியவர் என அதிகாரத்தோடு சம்பந்தங் காண்க.

· புல் நீர் நிழல் முதலியவளங்களாற் காட்டுப் பசுக்களுக்கு அக்காலெவினுஞ் செழிப்பைத் தருதலால் அவற்றைத் தம்மிடம் வந்து சேரச்செய்கின்றன என மலைச்சிறப்பைக் கூறியபடி.

அகலம்-அகன்றிருத்தலையுடைய உரைக்குத் தொழிலாகுபெயரும், அப்பம்-நுண்மையையுடைய உரைக்குப் பண்பாகுபெயரும், எச்சம்-எஞ்சியதைத் தெரிவிக்கும் உரைக்குக் காரியமாகுபெயருமாம்; எஞ்சியது-மிச்சமானது; மறைந்தின்றது. 'பொழிப்பு அகலம் அப்பம் எச்சம்' இச்செவ்வெண், 'இக்காண்கு' என்ற தொகை பெற்று வந்தது. பழிப்பு இல் உரை யென இயைப்பினும் அமையும். ஆகோ, ஓ - எதிர்மறை. (கூ)

கூஉ. இற்பிறப் பில்லா ரெனைத்துநூல் கற்பினுஞ்
சொற்பிறரைக் காக்கும் கருவியரோ—விற்பிறக்த
நல்லறி வாளர் நவின்ற நூ றேற்றாரப்
புல்லறிவு தாமறிவ தில்.

(இ - ள்.) இல் பிறப்பு இல்லார் - உயர்குடியிற் பிறத்த லில்லாதவர், எனைத்து நூல் கற்பினும்-எவ்வளவு சாஸ்திரங்களோப் படித்தாலும், பிறர் சொல்லே காக்கும் கருவியரோ - பிறருடைய சொற்களே (இழுக்காமற்) காத்தற்கு உரிய (அடக்கம் முதலிய) சாதன முடையவராவரோ? [ஆகார்]; இல் பிறந்த நல் அறிவாளர் - உயர்குடிப்பிறந்த நல்ல விவேகிகளோ, நவின்ற நூல் நேற்றாரார் புல் அறிவு - (பெரியோர்கள்) சொன்ன சாஸ்திரங்களே அறியாதவர்களுடைய அற்பபுத்திதை, தாம் அறிவது இல்-தாம் கவனித்து அறிவதுமில்லை [அறியாதவர்போல் உபேக்ஷையாயிருப்பர் என்றபடி].

உயர்குடிப்பிறவாதவர் எவ்வளவு படித்திருந்தாலும், சபையிற் பிறர் பேசும்போது உண்டாகுங்குற்றங்களே இழுக்கம்எ அடக்கிவைக்கிற அடக்க மான குணத்தையுடையவ ராகார்; உயர்குடிப்பிறந்தவரோ, சபையிற் பிறர் பேசும்போது அதிலுள்ள குணங்களேமாத்திரம் கிரகிப்பார்களேயொழியக் குற்றங்களிற் கருத்தைச் செலுத்தவேமாட்டார் என்பதாம்.

"இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச், செப்பமு நாணு மொருங்கு" என்பது முதலாகத் திருக்குறளிற் கூறியபடி உயர்குடியிற்பிறந்தவர் இயற்கையில் நற்குணமுடையராயிருத்தலேயும் அக்குடிப்பிறவாதவர் அக்குணமில்லாதவராயிருத்தலேயுங் கூறுகிற இப்பாட்டு, பிறர்குற்றத்தை எடுத்துஇழுக்காமல் அடக்கிவைக்கும் உயர்குடிப்பிறந்தவர்களே சபைக்கு உரியவர் என்ற சம்பந்தம்பற்றி, இவ்வதிகாரத்தில் வைக்கப்பட்டதென அறிக.

பஞ்சுகொண்டு இறைத்து நூற்கப்படும் நூல்போலச் சொற்கொண்டு தொடுத்து அமைக்கப்படுதலாலும், மரம் முதலியவற்றின் கோணலைத் திருத்தச் செப்பஞ்செய்தற்குக் காரணமாகும் ஏற்றுநூல்போல மனத்தின் கோணலைத்திருத்தச் செல்வைசெய்யுஞ் சாதனமாதலாலும், நூல் என்பது-உவமையாகுபெயராய்வந்த காரணக்குறியாம். கற்பினும், உம் - உயர்வுசிறப்பு. 'சொல் பிறரைக்காக்கும்' என்பதில், உருபு பிரித்துக் கூட்டப்பட்டது. கருவியரோ, ஓ - எதிர்மறை. நவின்ற, நவில் - பகுதி. (கூ)

## ஆறாவது

# பகையியல்.

மனிதர்கட்கு உட்பகைபோல நின்று அழிக்கத்தக்க புல்லறிவாண்மை முதலிய இழிகுணங்களோப் பற்றிக் கூறும் பிரிவு என்பதாம். புல்லறிவாண்மையும், பேதைமையும், மூடமையும், கயமையும் தம்மையுடையவரைக் கெடுக்கும் பகைகளென்பது வெளிப்படை.

---

## ஙஙூ - ஆம் அதிகாரம்.—புல்லறிவாண்மை.

இது, அற்பமான அறிவை ஆராய்ந்தன்மை யென விரியும்: அஃதாவது-தான் சிற்றறிவுடையனுமிருந்தே தன்னைப் பேரறிவுடையனுகமதித்து, உயர்ந்தோர் கூறும்உறுதிச்சொற்களைக் கொள்ளாமை. புண்மை + அறிவு=புல்லறிவு; அல்லதிப்புணர்ச்சி, பண்புத்தொகை. அறிவாண்மை - இரண்டாம் வேற்றுமைத்தொகை. ஆண்மை, ஆள்-பகுதி, மை - பண்புப்பெயரிலுறுதி. சபைக்கு உரியவரல்லாதவர் புல்லறிவாள ராதலாலும், சபையினியல்பை யறியாமை புல்லறிவாண்மை யாதலாலும், இவ்வதிகாரம் அவையறிதலின் பின் வைக்கப்பட்டது.

ஙூஉ. அருளி னறமுரைக்கு மன்புடையார் வாய்ச்சொற்
பொருளாகக் கொள்வர் புலவர்—பொருளல்லா
வேழை யதனை மிகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு.

(இ - ள்.) அருளின் - (உயிர்களிடத்தில்) கருணையினால், அறம் உரைக்கும் - தருமங்களோ எடுத்துரைசொல்லுகிற, அன்பு உடையார்-அன்புள்ளவர்களது, வாய் சொல்-வாயிலிருந்து வருஞ் சொல்லை, புலவர்-அறிவுடையோர், பொருள் ஆக கொள்வர் - பயன்தருவதாக ஏற்றுக்கொள்வர்; அதனை-அச்சொல்லை, பொருள் அல்லா ஏழை-ஒருபொருளாக மதிக்கப்படாத சிற்றறிவுடையவன், பால கூழ் சுவையை மூழை உணர்தல் ஆங்கு - பாற்சோற்றினது ருசியை அகப்பை அறியாததுபோல [பயனறியாதவனுய்], இகழ்ந்து உரைக்கும்-அசூயித்துப் பேசுவான்; (எ - று.)

அருள் அன்பு முதலிய நற்குணங்களேயுடைய பெரியோர்களது சொற்களே விவேகிகள் சிறந்தபொருளாக மதிப்பார்கள்; அவிவேகிகளோ, அவற்றின்சிறப்பை யறியாமல் இகழ்வர் என்பதாம். பின்னிரண்டடி - உவமையணி. "கல்லா வொருவனைக் காரணங் காட்டினும், இல்லைமற் றொன்றும் அறனுணர்தல் நல்லாய், நறுநெய் நிறைபுழுக்க லுய்ப்பினும் மூழை, பெறுமோ சுவையுணருமாறு" எனப் பிறர் கூறியதுய் காண்க 'அகப்பையறியுமோ அடிசிலின் சுவை' என்பது, பழமொழி.

அருளர்வது-ஒரு சம்பந்தம் காரணமாகவல்லாமல் இயல்பாக எல்லா வுயிர்களிடத்துஞ் செல்லுங் கருணை என்றும், அன்பாவது - உறவுமுறை யினைக்கும் முதலிய சம்பந்தமுடையோரிடத்து உண்டாகும் விருப்பம் என் றும் வேறுபாடு அறிக. "அருளென்னும் அன்பீன் குழவி" என்ற நீருக்குற வால், அருளுக்கு அன்பு காரணமாதல் விளங்கும். 'வாய்'என வேண்டாத கூறினர், அவர்கள் வாய் எப்பொழுதும் பயனுள்ள சொற்களேயே பயின் றுள்ள தனைத் தாம்வேண்டியதன் நிறப்பைமுடித்தற்கு; இங்ஙனம் அவசிய மில்லாத பதத்திற்குத் தக்க பயன்கொள்ளுதலே வடனூலார் தாத்பர்ய மென் பர். ஏழை - அறிவாகிய செல்வ மில்லாதவன்; "அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை, இன்மையாவையா தலரு", "அறிவுடை செல்லா மூடையா ரறிவிலா, ரென்னுடைய ரேனு மிலர்" என்ற நீருத்துள்களேயும், "மண்ணுணர்வின்மை வறுமை யஃதடைமை. பண்ணப்பணைத்த பெருஞ் செல்வம்" என இர்தூலில் வந்ததையும் காண்க. கூழைச் சுவை உணராதது- உருபு பிரித்துக் கூட்டப்பட்டது; கூழினுடைய ருசி யென உருபுமயக்கமா கவுங் கொள்ளலாம். கூழ் என்பது-இங்கே, இழிவான உணவு என்கிறபொ ருளே புணர்த்தாமல், உணவென்னுமாத்திரமாய்நின்றது. ஆங்கு-உவமவுருபு.

கூஉஉ. அவ்வியம் மில்லா ரறத்தி னுரைக்குங்காற்
செவ்வியர் லல்லார் செவிகொடுத்துங் கேட்கலார்
கவ்வித்தோ றின்னுங் குணுங்கர்நாய் பாற்சோற்றின்
செவ்வி கொளறேற்ற தாங்கு.

(இ - ள்.) தோல் கவ்வி நின்னும் - (அருத்தமும் சாரமற்றதுமான) தோலை (வாயால்) கௌவித்தின்னும் இயல்புள்ள, குணுங்கர் நாய்-புலையர்க ளுடையநாய்கள், பால் சோற்றின் செவ்வி கொளல்-பாலோடுகூடிய சோற் றினது நல்லருசியைக் கொள்ளுதலை, தேற்றாது ஆங்கு - அறியாதவிதம் போல,—அவ்வியம் இல்லார் அறத்தை ஆழ உரைக்குங் கால்-பொறுமையில் லாதவர் தருமமார்க்கத்தை எடுத்துச்சொல்லும்பொழுது,(அவற்றை), செவ் வியர் அல்லார் - நல்லறிவுடையரல்லாதவர், செவிகொடுத்தும் கேட்கலார்- காதுகொடுத்துக் கேட்கவும் மாட்டார்; (எ - று.)

கருத்து, வெளிப்படை. அணி - மேற்கூறியதே.

அவ்வியம் - மற்றைத் திக்குணங்கட்கும் உபலக்ஷணம். இரண்டாமடி யிலுள்ள 'செவ்வி' என்பது - அதிகாரத்திற்கு ஏற்ப, நல்லறிவாயிற்று. செல்வமுடையவரது காயாயின் நல்லுணவுண்ணக்கூடும்; அப்படிப்பட்ட வையல்ல என்பதை விளக்க, 'குணுங்கர்நாய்' என்றார். செவ்வி-நல்ல சுவை க்குப் பண்பாகுபெயர். தேற்றாது என்பதை, மேற்பாட்டில் 'உணராது' என்பதுபோலக் கொள்க. அவ்வியம், கவ்வி என்பன - னெகியம், கௌவி என்பதன்றின் போலி யெனப்படும். (கூ)

ஈகை. இமைக்கு மளவிற்றம் மின்னுயிர்போ மார்க்க
மெனைத்தானுந் தாங்கண்டிருந்தும்—தினைத்துணையு
நன்றி புரிகல்லா ரானின் மடமார்க்கள்
பொன்றிலென் பொன்றுக்கா லென்.

(இ - ன்.) இமைக்கும் அளவில் - கண்மூடித்திறக்கும் பொழுதினுள்ளே, தம் இன் உயிர் போம் - தமது இனிமையான உயிர் நீங்கிப் போகும் படியான, மார்க்கம் - வழியை, எனைத்தானும்-எல்லாவகைகளானும், தாம் கண்டு இருந்தும்-தாம் அறிந்திருந்தும், தினை துணையும் நன்றி புரிகல்லா - தினையளவாயினும் நல்லகாரியத்தைச் செய்யாத, நாண் இல் மடம்மார்க்கள்-வெட்கமில்லாத சிற்றறிவுடைய சனங்கள், பொன்றில் என் - இறந்தால் வரும் நஷ்டமென்ன? பொன்றுக்கால் என் - இறவாதிருந்தால் வரும் இலாபம் என்ன? (எ - று.)

எனைத்தானும் - பிரதியகமும், அநுமாகம், ஆகமம் என்னும் பிரமாணங்க ளெல்லாவற்றாலும் என்றபடி. உயிர் உடம்பில் நீலைத்திராததன்மையை அறிந்திருந்தும் தமது வாழ்நாளில் நல்லகாரியஞ்செய்யாத புல்லறிவினர்களால் உலகத்திற்குச் சிறிதும் பயனில்லை யென்பதாம்.

இமைக்கும் அளவு - ஒருமாத்திரைப்பொழுது. நன்றி - நல்லகாரியத்தக்குப் பண்பாகுபெயர். இனி, நன்றிபுரிகல்லா - (பிறர்க்கு) உதவி செய்யாத என்றுமாம். செய்யவேண்டிய சற்காரியங்களைத் தாம் நிறுதம் செய்யாது ஒழிவதற்கு மனம் கூசாததனால், 'நாணில் மடமார்கள்' என்றது. நாண்-நாணம்; மூதனிலைத் தொழிற்பெயர். நாணுவது-செய்யத்தகாதவற்றில் உள்ளமொடுங்குதல். மடம் - அறியாமை; இக்கே அதிகாரத்தக்கு ஏற்கப் புலவரிவாயிற்று. மார்கள் - பகுத்தறிவில்லாத மனிதர். மா - விலங்கு: இதன்பண்மையாய், மார்கள் என அவிவேகிகட்கு வழங்குவதுபோலும். எவர்க்கும்உயிரினும் இனியதுவேறு இல்லையாதலால், 'இன்னுயிர்' எனப்பட்டது.

'இன்னுயிர் போமாற்றை' என்னும் பாடம் உண்டு. (கூ)

ஈகை. உளநாள் சிலவா னுயிர்க்கேம மின்றூற்
பலர்மன்னுந் தூற்றும் பழியாற்—பலருள்ளு
கண்டாரோ டெல்லா நகாஅ தெவனெஞ்சுவன்
றண்டித் தனிப்பகை கோள்.

(இ - ன்.) உள நாள் - (உயிர்கள் உடம்போகூடி) வாழ்ந்துள்ள நாள்கள், சில-சிலவாம்; உயிர்க்கு - (அப்படிச் சிலவாழ்நாளையுடைய) உயிர்க்கு, ஏமம்-(உடம்பைவிட்டுப்போக வொட்டாமற் செய்யக்கூடிய) காவல், இன்று - இல்லை; (அந்த அற்ப ஆயுள் நாளுள்), பலர் தூற்றும் பழி - பலபேர் வெளியிட்டுக் கூறும் பழிச்சொற்கள், மனனும் - மிகுதியாம்; (இப்படியிருக்க). ஒருவன்—, பலருள்ளும் - உலகத்திலுள்ள) பலபேர்களுள்ளும், கண்டாரோடு எல்லாம் - கேரிட்டவரெல்லாரோடும், நகாது - (இனிமையாகச் கூடிவாழ்ந்து) மகிழாமல், தண்டி-எவரோடும் கூடாமல் விலகி, தனி-தனியாயிருத்தி. பகை கோள் - (பிறரோடு) விரோதம் பாராட்டுதல், எவன் - யாதுபயன்கருதி? (எ - று.)

அற்ப ஆயுளையும் அவற்றன் பல இடையூறுகளையும் இயல்பாக வுடைய மனிதர்கள் பலபழிக்கு இடமான உலகத்தில் தம்மை எவரும்பழிக்க வொண்ணாதபடி எல்லாரோடுங் கலந்து மகிழ்ந்து வாழாமல் தனிப்பட்டு நின்று பகைபாராட்டுவது அற்பத்தி என்பதாம்.

பகைபாராட்டாமலிருத்தல் என்னும் காரியத்துக்குத் தக்ககாரணங்க ளான அற்ப ஆயுள் முதலியவற்றைப் பெற்றிருந்தும் மானிடரிடத்து அக் காரியம் தோன்றுமையைக் கூறியது, காலைவாராய்க்கீரியண்; இதனை வட நூலார் விசேஷோக்தி என்பர்.

உள - உள்ள, 'ஆல்' மூன்றும் - ஈற்றசை. ஏமம் - க்ஷேமம் என்ற வட மொழியின் திதை யென்பர். கண்டார் என்பது - தம்மை வந்து கண்டவர் களையும், தம்மாற்காணப்பட்டவர்களையும் குறிக்கும். ககாரம்-அனபெடை, செய்யுளோசைநிறைப்பது.எவன்-அஃறிணைப்பொதுக்குறிப்புமுற்று இதில், 'அன்' லிகுதி-உயர்திணையாண்பாலன்று. தனி - தனித்து; பகுதியே வினை யெச்சத் தன்மைப்பட்டது; "வரிப்பனேபாந்து" என்றவிடத்து 'வரி' என் பதுபோல. பகை - பகுதல்: வேறுதல். (சு)

கூஉடு. எய்தி யிருந்த வவையுன்னர்ச் சென்றெள்ளி
வைதா னெருவ னெருவனே—வைய
வயப்பட்டான் சாளா வீருப்பானேல் வைதான்
வியத்தக்கான் வாழு மெனின்.

(இ - ள்.) எய்தி இருந்த - (பலபேர்) கூடியிருந்த, அவை முன்னர் - சபையின் முன்னிலையிலே, ஒருவன்—, சென்று—, ஒருவனை - மற்றொரு வனை, எள்ளி - அவமதித்து, வைதான் - நிட்டிஞன்; வைய - (அவ்வாறு) நிட்டையில், வயப்பட்டான்-நிட்டைப்பட்டவன், வாளா இருப்பானேல் - (எதிரில் நிட்டாமல்பொறுத்துக்கொண்டு) சும்மாஇருப்பானாஞல், (பின்பு), வைதான் வாழும் எனின் - நிட்டினவன் (வாழான், அவ்வனமாகாது) வாழ்ந்துகொண்டிருந்தால், விய தக்கான் - ஆசசரியப்படத்தக்கவன்; (எ - று.)

அற்ப அறிவுள்ளானெருவன் ஒரு சபையிற் போய்க் காரணமில்லாமல் ஒருவனைத் நிட்டிகையில், அப்படித் திட்டப்பட்டவன் அதைப்பொற த்துக் கொண்டு சும்மா இருந்தால், நிட்டினவன் வாழமாட்டான்; ஒருகால் வாழ்வானுயின், அது அதிசயிக்கத்தக்கது என்பதாம். இதனுல், புல்லறிவா னர்க்குப் பிறரால்நித்தம்மாலேயே இம்மையிலேயே பெருந்திங்கு நேர் தல் வினக்கப்பட்டது.

வயப்பட்டான்-வையப்பட்டான் என்பதன் மூதற்போலி: இனி, வசம் என்னும் வடமொழி வயம் எனத் திரிந்ததாகக் கொண்டு, வைதற்கு வசப் பட்டவன்: அதாவது - தன்னைப் பிறன்நிட்ட உடன்பட்டவன் எனினும் அமையும். விய - முதனிலைத் தொழிற்பெயர்: வியத்தற்கு என காண்காம் வேற்றுமைத்தொகை. வாளா-தொழிலின்மையை யுணர்த்துவதோ நிலைச் சொல். (இ)

ரூ.உசு. மூப்புமேல் வராமை முன்னே யறவினையை
யூக்கி யதன்கண் முயலாதா—னூக்கிப்
புறத்திரு போகென்னு மின்னுச்சொ லில்லுட்
டொழுத்தையாற் கூறப் படும்.

(இ - ன்.) மூப்பு - நிழத்தனம், மேல் வாராமை முன்னே - நெருங்கி வரா நிருக்கற்கு மூன்னமே, அறம் வினையை - தருமகாரியத்தை, ஊக்கி-செய்பத்தொடங்கி, அதன்கண் - அவ்விஷயத்தில், முயலாதான் - முயற்சி செய்யாதவன்,—இல்லுள் - (தன்) வீட்டில், நூக்கி-தள்ளப்பட்டு, 'புறத்து இரு-வெளியிலே இரு; போகு - (இவ்விடம்விட்டுப்) போ', என்னும் - என்கிற, இன்னு சொல் - இனிமையில்லாத [கடிஞ்] சொற்களே, தொழுத்தையால்-வேலைக்காரி யாலும், கூறப்படும் - சொல்லப்படுவான்; (எ - று.)

உடம்பை ஒடிக்குகிற முதுமைப்பருவம் வருவதற்கு முன்னமே, இடம் பொரு ளேவல்கள் ஸ்வாதீனமாக இருக்கும்பொழுதே, ஒருவன் மறுமைக்கு உதவியாகத்தரு மங்களசெய்துவைத்துக் கொள்ளவேண்டும்;எனெனில்,-முதுமைவந்தபொழுதி, இவன்சொன்னபடி எவரும்கடவாமல் வேலைக்காரியும் அலட்சியஞ்செய்வள் என்க; அன்றியும், தருமஞ்செய்யாத புல்லறிவாளனை ஏவலாளரும் இகழ்தல், இயல்பு.

தொழுத்தையால் என்பதில், இழிவுசிறப்பு உம்மை விகாரத்தால் தொக்கது. தொழுத்தை - தொழும்ப ளென்பதன் பெண்பால். (கூ)

ரூ.உஎ. தாமேயு மின்புறார் தக்கார்க்கு நன்றற்ற
நேமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார்—தாமயங்கி
யாக்கத்துட் டூங்கி யவத்தமே வாழ்நாளைப்
போக்குவார் புல்லறிவி னோர்.

(இ - ன்.) புல் அறிவினர் - அற்பபுத்தியுடையவர்,—தாமேயும் இன்பு உறார் - (செல்வத்தை அநுபவித்தி) தாமாகிலும் இன்பமடையார்; தக்கார்க்கும் நன்ற ஆறார் - (அறிவொழுக்கங்களில்) தருதியுடையவர்கட்குத் தானஞ் செய்யவும் மாட்டார்; எமம் சார் - (உயிர்க்குப்) பாதுகாப்பாகப் பொருந்திய, நல் நெறியும் - நல்ல தருமவழியையும், சேர்கலார் - அடையமாட்டார்; தாம் மயங்கி-(உடம்புசெல்வம் முதலியவற்றின் நிலையில்லாமையை அறியாமல்) தாம் மயக்கங்கொண்டு, ஆக்கத்துள் ளுங்கி - செல்வத்திலேயே ஒன்றுந்தோன்றுமல் இருந்து, வாழ்நாளை - (தமது) ஆயுளை, அவத்தமே போக்குவார் - வீணுகவே கழிப்பர்; (எ - று.)

புத்திமீனர் செல்வத்தைத் தாமும் அநுபலியாமல் தானதருமமுஞ் செய்யாமல் தமது காலத்தை வீணே கழிப்பார்கள் என்பதாம்.

உம்மைகள் மூன்றும் - எசசப்பொருளன; அவற்றில், மூன்றியது - பிற்றிய வற்றை நோக்கி எதிரதழுவியதும், பிற்றியது - மூற்றியவற்றைநோக்கி இறந்தது தழுவியதும், இடையிலுள்ளது - இரண்டையும் நோக்கி இற

ர்ந்ததும் எதி ரதும் தழுவியதுமாம். ஏமம் - ரக்ஷகம். அன்குதல்-இல்லே, தொழிலறுதல்.வாழ்கான்-முக்காலமும் கருதும் வினைத்தொகை.தானம் பெறுதற்கு உரிய சற்பாத்திரம் போல்கியேரே யாதலால்,'தக்கார்க்கும் ரண்றற்றுர்' என்ருர். அவம் என்ற பெயரின்மேல் அத்து அம் என்ற சாரியையன் சேர்த்து அவத்தம் என கின்ற தென்னலாம்; தனியே ஒருபெயருமாம். (எ)

கூஉ. சிறுகாலே யேதமக்குச் செல்வுழி வல்சி
யிறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளா—ரிறுகிறுகிப்
பின்னறிவா மென்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம்.

(இ - ன்) தெ காலேயே - இளம்பிராயத்திலேயே, தமக்கு செல் உழி வல்சி - தமக்கு (இந்தபின்பு) போகும் மறுமையிடத்துக்கு உரிய (தரும மாகிய) சோற்றை,இறுக இறுக-மிகவும் அழுத்தமாக, தோள் கோப்பு கொள்ளார் - தோளிற்கட்டிய மூட்டையாக அமைத்துக்கொள்ளாதவர்களாய், இறுகி இறுகி - (பொருளில்) நிகவும் சிக்கெனவாகி, பின் அறிவாம் என்று இருக்கும்-(தரும விஷயத்தைப்பற்றிப்) பின்பு பார்த்துக்கொள்வோம் என் றிருக்கிற, பேதையார்-புல்லறிவாளர், கைகாட்டும்-(மரணகாலத்திலே பேச ரு எழாமையால் தம்) கையாற் குறித்து உருவங்காட்டுகிற, பொன்னும் - பொன்னருண்டையும், புளி வின காய் ஆம் - புளிப்புச்சுவையுள்ள வினங்கா யாகும்; (எ - று.)

இடம்பொருளேவல்கள் தமக்கு அரிணமாக இருக்கும்பொழுதே மறுமைக்கு உதவியாகத் தருமஞ்செய்யாமல் பின்பு பார்த்துக்கொள்வோமென்று விட்டுப் பணத்தைச் சேர்த்துவைக்கும் புத்திகீனர், மரணகாலத்தில் தமது வாயடைத்துப் போனபொழுது தக்கவர்க்குத் தானஞ்செய்யக்கருதித் தாம் மூன்று பத்திரப் பதித்திவைத்துள்ள பொன்நிதியை எடுத்துக்கொண்டுவரும்படி மனிவிமக்கள்முதலியோர்க்குக் கையால் அப்பொருட்டிரவி னைவைக் காட்டினுல், அவர்கள்,அக்குறிப்பையறியாமையாலோ, அச்செல் வத்தை இவர்க்காகச் செலவுசெய்ய இணங்காமையாலோ, இவர் புளிவினங் காய் வேண்டுமென்கிறார் என்றுசொல்லி அது கொண்டுவருவர் என்பதாம். புல்லறிவாளர் செல்வம் அவர்க்குப் படன்படாமற்போம்; பிறர்க்குப் பயன் படாமற்போதலும் உண்டு என இதில் விளங்கும்.

"கையாற் பொதித்தணேயே காட்டக் கயற்கண்ணு னதனேக் காட்டான், ஐயா வினாம்பழமே யென்கின்றி ராங்கதற்குப் பருவமன் றென், செய் கோவெனச் சிறந்தான்போற் சிறவாக்கட்டுரையாற் குறித்தவெல்லாம்,பொய்யே பொருளுரையா முன்னே கொடித்தண்டல் புரிபினகண்டீர்"; "வேற்றுவரில்லா நுமரூர்க்கே செல்லினும் வெகுண்டீர்போல,வாற்றுணுக்கொள்ளா தடியுறத்து வைப்பீர் யல்லீர்போலும், கூற்றங்கொண்டோடத் தமியே கொடுதெறிக்கட் செல்லும்போழ்தின், ஆற்றுணுக்கொளீர் ழகலா தறி வொன்று மிலிரேபோலும்" என்ற சீவகசிந்தாமணிச் செய்புள்களும்,"மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை, ஆய்வின்றிச் செய்யாதார் பின்னே வழிநினைந்து,நோய்காண் பொழுதினறஞ்செய்வார்க்காணுமை,நாய்காணிற் கற்காணுவாறு"என்ற பழமொழிச்செய்யுளும்இங்கு அறியத்தக்கவை.

**இறுதிறை** - இறை இறை என்பதன் தொகுத்தல். **இறுவறி** - இறுமி யிறவி என்பதன் தொகுத்தல்; அடுக்குக்கள் - மிகுதிப் பொருளன. **அறிவாம்** - தனித்தன்மைப்பன்மை. பேதையார் - அறிவில்லாதவர்; அதிகாரத்தால், புல்லறிவாளர்மேல் நின்றது. பொன்னும்—உம்-உயர்வுநிறப்பு. வின + காய் = வினங்காய்; மரப்பெயர்முன்னர் இனமெல்லெழுத்து வரப்பெற்றது.

கூ.உ கூ. வெறுமை யிடத்தும் விழுப்பிணிப் போழ்து
மறுமை மனத்தரே யாகி —மறுமையை
யைந்தை யினத்தா னு மாற்றிய காலத்துச்
சிந்தியார் சிற்றறிவினர்.

(இ - ன்.) சிறு அறிவினர் - புல்லறிவுடையவர்கள்,—வெறுமையிடத்தும் - செல்வமில்லாதகாலத்திலும், விழுமிணி போழ்தும் - மிகுந்த வியாதி வந்தகாலத்திலும், மறுமை மனத்தாரே ஆகி - மறுமைக்கு உரிய தருமத்தைச் செய்யுங் கருத்தையுடையவர்களாய்,—ஆற்றிய காலத்து - (தரித்திரத்தன்மையும் நோயும் இல்லாமல்தினைத்தைச்) செய்யக்கூடிய காலத்தில், மறுமையை - மறுமைக்கு உரிய தருமத்தை, ஐந்தை அனைத்து ஆனும்-தெகுதினளவாயினும், சிந்தியார் - நினைக்கமாட்டார்; (எ - று.)

அற்பபுத்தியுடையார், தாம் தரித்திரப்படும்பொழுதும் வியாதியதபவிக்கும்பொழுது மாத்திரமே தருமநிர்த்தையுடையவர்களாய், அத்தன்மைகளில்லாத காலத்தில் சிறிதும் அச்சிந்தையில்லாதவராயிருப்பர் என்பதாம்.

வெறுமையாவது - அநுபவிக்கப்படும் பொருள் ஏதவு மில்லாமை. விழு - விழுமம் என்ற உரிச்சொல்லின் விகாரம். விழுப்பிணி என்பதற்கு - தன்பம் தருகிற நோயென்றும் பொருள்கொள்ளலாம்; "விழுமஞ் சீர்மை யுஞ் லெப்பு மிடம்பையும்" என்பது தோல்காப்பியம். மறுமை - இறந்தபின் வரும் நிலை; இங்கே, அதற்கு உரிய நல்வினைக்கு ஆகுபெயர். ஐந்தை - கீழ்வந்த 'தினை' என்பதுபோல, சிறுமைக்கு எடுத்துக்காட்டப்படுவதோர் அளவை. (கூ)

கூ.கூ. என்னேமற் றிவ்வுடம்பு பெற்று மறநினையார்
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளே—யன்னே.
வளவிறந்த காதற்றம் மாருயி ரன்னார்க்
கொளவிழைக்குங் கூற்றமுங் கண்டு.

(இ - ன்.) (உலகத்திற் புல்லறிவாளர்கள்), இவ்வுடம்பு பெற்றும் - (தருமங்களைச் செய்தற்கு ஏற்ற) இந்த மானுடதேகத்தைப் பெற்றிருந்தும், —அளவு இறந்த காதல் - வரம்புகடந்த அன்பையுடைய, தம் ஆர் உயிர் அன்னர் - தமது அருமையான உயிரையொத்த உறவினரை, கொள இழைக்கும் - (தான்) எடுத்துக்கொண்டுபோதற்கு (வேண்டிய முயற்சியை)ச் செய்கிற, கூற்றம் - யமனது செயலை, கண்டும் - (தாம்) பார்த்திருந்தும், அன்னே - ஐயோ! அறம் நினையார் - தருமத்தைச்செய்யக் கருதாதவராய், தம் வாழ்நாளே கொன்னே கழிப்பர் - தமது ஆயுளை வீணுக்கழிப்பார்கள்; என்னே - இது என்ன அரிது! (எ - று.)—மற்ற-அசை, வினமாற்றுமாம்;

"அரிதரிது மானிடராத லரிது" என ஔவையார் கூறியபடி கிடைத்தற்கரியதாய் கற்கதிகே நேரிற்பெறுதற்குத் தக்கதாயுள்ள மனிதசரீரம் தமக்கு மூற்பிறப்பின் கல்வினையாற் கிடைத்திருந்தும் பலர் தருமஞ்செய்யாமல் வீணே காலங்கழித்தற்கு என்ன காரணமோ? தமது மனவி மக்கள் முதலிய மிக்க அன்புவைத்தற்கிடமான சுற்றத்தார்க்கென்று சேர்க்கப்பட்ட செல்வத்தைச் செலவுசெய்யக்கூடாதெனக் கருதுவாராயின், அவர்கள் வாழ்க்கை நிலையில்லாத தென்பதை உலகத்தில் அநுபவஸித்தமாகப் பிரதிபஷப் பிரமாணத்தாற் காணக் கூடுமே என்பதாம். யார்க்காகப் பொருள் சேர்க்கப்படுகிறதோ அவர்களும் நிலையில்லாதவராதலால், செல்வத்தைச் செலவுசெய்து தானப்பயனும் நற்கதியைப் பெறுமை புத்திக்குறைவு என்க.

என்னே, அன்னே என்பன - கழிவிரக்கப்பொருள் விளக்கும். பெற்றும்—உம் - உயர்வுநிறப்பு. கொன் - பயனில்லாமை யுணர்த்துவதோர் இடைச்சொல். கூற்றம் - (உடலுயிர்களைக்) கூறுபடுத்துவது; அல்லது, (ஆயுளைப்) பகுப்பது எனக் காரணப்பெயர். கொள - உயிர்கொள்ள. ஆருயிரன்னர் - உயிர் போல இன்றியமையாதவராகப் பாவிக்கப்பட்டவர். கூற்றமும் கண்டு - உம்மை மாறுக. (எ0)

## ஈச ஆம் அதிகாரம்.—பேதைமை.

அஃதாவது - யாதொன்றையும் அறியாமை; முழுமூடத்தனம். சில அறிந்து சில அறியாமையாயிய புல்லறிவாண்மைக்குப் பின் யாதும் அறியாமையாயிய பேதைமை வைத்தற்கு இயைபுடையதாத லறிக. இசசம்பந்தம் தோன்ற, திருக்குறளிலே புல்லறிவாண்மையின் முன் பேதைமை வைக்கப்பட்டவாறும் காண்க. பேதைமை புல்லறிவாண்மை என்ற இரண்டையும் மயக்கத்தின் வகை யென்னுரர் பரிமேலழகர். பேதைமை - பண்புப்பெயர்.

கூடுக கொலேஞ ருலேயேற்றித் தீமடிப்ப வாமை
நிலேயறியா தந்நீர் படிந்தாடி யற்றே
கொலேவல் பெருங்கூற்றங் கோட்பார்ப்ப வீண்டை
வலேயகத்துச் செம்மாப்பார் மாண்பு.

(இ - ன்) கொலே வல் - கொல்லுதல்தொழிலிலே வல்ல, பெருங் கூற்றம் - பெரிய யமன், கோள் பார்ப்ப - (தம் உயிரைக்) கொண்டுபோகுஞ் சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்க, ஈண்டை வலேயகத்து - இவ்வுலகவாழ்க்கையாயிய வலேயினிடத்திலே, செம்மாப்பார் - மிகக் களித்திருப்பவரது, மாண்பு - தன்மையானது,—கொலேஞர் - கொலேசெய்பவர், உலே எற்றி - உலே நீர்ப்பாத் நிரத்தை அடுப்பின்மேல் வைத்து, தீ மடுப்ப - கொழுப்பை மூட்டி எரிக்கையில், ஆமை-(அப்பாத்திரத்தில் இடப்பட்ட)ஆமை, நிலே அறியாது -(தனக்கு வந்திருக்கிற அபாய) நிலேமையைச் சிறிதும் உணராமல், அந்நீர் படிந்து ஆடி அற்ற - அவயவங்களில் முழுதும் வீணாயடிஞற் போலும்; (எ - று.)—மிக்க பேதைமை யென்றபடி.

ஆமையைச் சமைக்கத் தீமூட்டியவிடத்து அது அறிவில்லாமல் உலோகில் விளையாடுவதுபோல, தம்மியிரைக்கொள்ள யான்றித்தலுயிருக்கையில் மனிதர்கள் உலகவாழ்க்கையில்மகிழ்வது அறிவில்லாமை என்பதாம். "வெறியயர்வெங்களத்து வேன்மகன் பாணி, முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க, மறிருள குண்டன்ன மன்னுமிழ்ச்சி, அறிவுடையாளர்கணில்" என்றசெய்யுளை இங்கு ஒப்பிக்க. மாணத்தையஞ்சி மறமைமாற்கதிக்கு உரிய முயற்சிசெய்க வென்றவாறு, 'ஈண்டைவலே' என்ற உருவகத்தை அங்கமாகக் கொண்டுவந்த உவமையணி.

ஆடி-ஆடிஞல் என்னும் எச்சத்தின் திரிபு. ஈண்டை-ஐயிற்றுடைக் குற்றகரம். தம்மை நல்லழிசசெல்லவொட்டாது பற்றப்பிடித்துநலால், சம்சாரத்தை 'வலே' என்றார். செம்மாப்பார்—செம்மா - பகுதி; இது - இறுமா, அலமா, சோகா என்பன போல ஒருசொல். பெருமையென்னும் பொருள் தரும் 'மாண்பு' என்னுஞ் சொல் - இங்கே எதிர்மறையிலக்கணையாய், இழிவான தன்மைக்கு வந்தது. (க)

கூகூஉ. பெருங்கட லாடிய சென்ற ரொருங்குட
னேஞசை யகின்தபி னுதி மென்றற்ற
லீற்செய் குறைவினை நீக்கி யறவினை
மற்றறிவா மென் றிருபபார் மாணபு.

(இ - ள்.) 'இல் செய் குறைவினை நீக்கி-தும்பத்துக்குச் செய்யவேண்டிய காரியக்குறைகளெல்லாம் தீர்த்து, மற்று அறமலினை அறிவாம்-பின் தருமகாரியஞ்செய்ய ஆலோசிப்போம்,' என்று இருப்பார் - என்ற கருதி வீணே காலங்கழிப்பவரது, மாண்பு-தன்மையானது,—பெருங்கடல் ஆடிய சென்றார் - பெரிய சமுத்திரத்தில் நீராடுதற்குப் போனவர், நேஞசை ஒழுங்குடன் அவித்த பின் ஆடுதல் என்ற அற்ற - '(இக்கடலின்) ஒலிமுழுவதும் ஒரு சேர அடங்கினபின்பு நீராடுவோம்' என்றகாத்திருக்காற்போலும்.

கடலின் ஒலி ஓபாதவாறுபோல, சமுசாரத்தின் காரியமும் என்றும் குறை தீர முடியாதாதலால், அதன்பின்பு செய்வோமென்பது பேதைமை யென்பதாம். "திரையலித்து நீராட லாகா வுரைப்பார், நரையலித் தொன்றுஞ்சொல் லில்லே - அரைசராய்ச, செய்தமா மென்னினு மாகா தனவரை யாற், செய்தவர்க்கே யாகுந் திரு" என்ற செய்யுளோடு இதனை ஒபபிடுக. உவமையணி.

ஒருங்கு, உடன் - ஒருபொருட்பன்மொழி; இரண்டும், எஞ்சாமைப் பொருளுணர்த்தும் இடைசசொற்கள். என்று - என்றல் என்னும் எசசம் திரிந்தது. மற்று - வியாயல் என்றவாறு. அறிவில்லாதவர்களின் தன்மையை 'மாண்பு' என்றது, பிறநூறிப்புவகையால், அவர் கருத்தைத்தெரிந்துக் காட்டிப் பரிகாசஞ் செய்தபடியாம். (உ)

கூகூகூ. குலஞ்தவற் கல்லி குடிமைமூப் பைந்தும்
வ்லஞ்காம லெய்தியக் கண்ணு—நலஞ்சான்ற
மையறு தொல்சி ருலக மறியாமை
செய்யிலாப் பாற்சோற்றி னோர்.

(இ - ன்.) குலம்-உயர்குடிப்பிறப்பும், தவம்-விரதவொழுக்கமும், கல்வி-படிப்பும், குடிமை - (செல்வத்தாலாகுஞ்) குடித்தனவளனும், மூப்பு - பிராய முதிர்ச்சியும், ஐந்தும் - (ஆகிய) இவ்வைந்தும், விலக்காமல்-தவறாமல், எய்தியக்கண்ணும் - (ஒருவனுக்கு) சேர்ந்த விடத்தில், (அவன்), நலம் சான்ற-பெருமை மிக்க, மை அறு தொல் சீர்-குற்றமில்லாத பழமையான நிறப்பு புடைய, உலகம்-(மறுமையில் அடையத்தக்க சுவர்க்கம் மோக்ஷம் என்னும்) உலகங்களின் தகுதியை, அறியாமை-அறியாதிருப்பது,—கெய் இலா பால் சோற்றின் சேர்-நெய்யில்லாத வெண்ணிறமான சோற்றிற்குச் சமமாம்.

சோறு சுத்தமாய் வெண்ணிறம் நல்லபக்குவம் சாறுமுடைமை முதலிய நிறப்புக்களோடு கூடியிருந்தாலும் நெய்யில்லாவிட்டால் அது "நெய்யில்லா வுண்டி பாழ்" என்றபடி இகழப்படுவதுபோல, குலம் முதலியவை ஒருவனுக்கு அமைந்திருந்தாலும்மறுமையில் நல்லுலகம் பெறுதற்கு ஏற்ற முயற்சியை அறியாத பேதைமை இகழப்படும் என்பதாம். உவமையணி.

சேர் - உவமவுருபு. தவமாவது - மனம் பொறிவழிபோகாமல் நிற்றற் பொருட்டு விரதங்களால் உணவு சுருக்குதல் முதலியன. குடிமை - பண்புப் பெயர். முதலடியிற் பெயர்ச்செவ்வெண், ஐந்து என்னுந் தொகைபெற்றது. தொல்சீர் - பண்புத்தொகை: தொன்றுதொட்டு வந்த புகழென்க உலகமறியாமை - உலகத்தாரோடு ஒப்பஒழுகும் ஒழுக்கத்தை உணராமை எனினும் அமையும்; "உலகத்தோடொட்ட வொழுகல் பலகற்றும், கல்லா ரறிவிலாதார்" என்பது காண்க. 'கெய்யிலா' என்பது - சோற்றுக்கு அடைமொழி. பாற்சோறு - பால்போன்ற சோறு; இவ்வுவமைத்தொகை, வெண்ணிறமுடைய சோறென்ற மாத்திரமாய் நின்றது. (கூ)

கூகூ. கன்னனி நல்ல கடையாய மாக்களிற்
சொன்னனி தாமுணரா வாயினு—மின்னினியே
நிற்ற னிருத்தல் கிடத்த லியங்குதலென்
முற்றவர்க்குத் தாமுதவ லான.

(இ - ன்.) சொல் - (பிறர்சொல்லுஞ்) சொற்களை, கனி - கன்றுக, தாம் உணரா ஆயினும் - தாம் (கேட்டு) அறிந்துகொள்ளமாட்டாவாளுலும்,—உற்றவர்க்கு - (தம்மை) அடைந்தவர்கட்கு, இன்னினியே - (அவர்கள் தம் மிடம்வந்து) அந்தந்தப்பொழுதிலே, நிற்றல்-(மேலே) நிற்றலும், இருத்தல்-(மேல்)உட்காருதலும், கிடத்தல் - (மேற்) படுத்தலும், இயங்குதல்-(மேலே) நடந்தலும், என்ற - என்றகாரியங்கட்கு, தாம் உதவலான்-தாம் (இடமாக) உபயோகப்படுதலாலே,—கல் - கற்கள், கடை ஆய மாக்களின்-கீழ்ப்பட்ட மனிதர்களைக்காட்டிலும், கனி நல்ல - மிகவும் நல்லவை; (எ - று.)

பிறர் சொன்னதைத் தாம் அறியாத தன்மையில் மூடர்களும் கல்லும் சமமாயினும், வர்தவர்க்கெல்லாம் நிற்கவும் உட்காரவும் படுக்கவும் நடக்கவுமாகப் பலவாறு வீரும்பியபடியெல்லாம் பயன்படுகிற கல்லினும், பிறர்க்கு ஒன்றும் உதவாத பேதையர் கீழ்ப்பட்டவர் என்பதாம்.

உபமேயத்திலும் உபமானத்திற்குச் நெருப்பைவினைக்கியதனால், வேற்றுமையணி; ஒன்றுக்கும் உதவாமையாகிய உபமேயத்தினது குற்றத்தினால் உபமானமாகிய கல்லுக்கு மேன்மையைக் கூறியுள்ளது, அகமலர்ச்சியணி; இவ்விரண்டணிகளும் பாலும் நீரும் கலர்ந்தாற்போல [வேறுபாடுதோன்றாது] கலர்துவர்த்தது, கலவையணி. பரிகாசர்சுவை தோன்றக்கூறியவாறு.

ஈனி - மிகுதியுணர்த்தும் உரிச்சொல்; இது-இரண்டாம் அடியில் முழுவதும் என்ற பொருளில் வந்தது.'இன்னினியே - இப்பொழுதே என்றபடி; இனி இனி என்ற இடைசசொல்லடுக்கின் தொகுத்தல்: கீழ் 'யாக்கைநிலையாமை' என்ற அதிகாரத்திலும் "இன்னினியேயெய்க அறவினே—இன்னினியே" என வந்ததுகாண்க. மூன்றும் அடியில், கிற்றல்முதலிய பெயர்ச்செவ்வெண் தொகைபெருது வர்தது. மாக்களின், ஐர்தாமுருபு - எல்லைப்பொருளது; இப்படி உபமான உபமேயசம்பர்தத்தில் வரும் எல்லைப்பொருளோ உறழ்பொருவு என்பர். (ச)

ரூ.ரூ. பெறுவதொன் றின்றியும் பெற்றுனே போலச்
கறுவுகொண் டேலாதார் மாட்டும்—சுறவினுற்
கோத்தின்னு கூறி யுரையாக்காற் பேதைக்கு
நாத்தின்னு நல்ல சுனைத்து.

(இ - ன்.) பெறுவது ஒன்று இன்றியும் - (தன்னுற்) பெறப்படும் பயன் சிறிதும் இல்லாதிருர்தும், பெற்றுனே போல-ஒருபயனேப் பெற்றவன்போலவே, எலாதார்மாட்டும் - தகாதவர்களிடத்திலும், கறுவுகொண்டு - கோபக்கொண்டு, கறவினுல் - தணியாத அக்கோபத்தினுல், இன்னு - தன்பர்தருஞ் சொற்களே, கோத்து - தொடர்சசிப்பித்து, கூறி - சொல்லி, உரையாக்கால் (அச்சொற்களின் பொருளே) விளக்குதலுஞ் செய்யாவிட்டால், பேதைக்கு - அறிவில்லாதவனுக்கு, நல்ல சுனைத்து - நல்ல நினவானது, நாதின்னும் நாக்கை வருத்துவது (போலும்). (எ - மு.)

ஒருபயனுமில்லாமலே மிக்க ஊக்கத்தோடு எப்படிப்பட்டவர் மேலும் பகைமைபாராட்டி ஈர்தனேச்சொற்களே ஈர்தனமாகக் கற்பித்துச்சொல்லி லிவரிக்காவிட்டால், மூடனுக்குத் திருப்தியில்லே யென்பதாம்.

அறிவில்லாதவர் இயல்பாகப் பிறர்மீது பழிமொழிகளேக் கூறுதற்கு, (தற்குறிப்பேற்றவருபுகொடாமல்) நா தினவுதின்னுதலேக் காரணமாகக் கற்பித்தக்கூறியது, உய்த்துணர்தோதுத்தற்குறிப்பேற்றவணி.

பெற்றுனே—ஏ தேற்றம்.கறவு-முதனிலேத்தொழிற்பெயர். ஏலாதார் மாட்டும் - செல்வம் அதிகாரம் பெருமை முதலியவற்றால் தம்மிலும் மேம்பட்டவரிடத்தும் என்றபடி.கூறுதல உரைத்தல்என்பவற்றை ஒருபொருட் பன்மொழியாகவும் கொள்ளலாம. பெற்றுன்போல - பெறுபவன் போல; தினவு பற்றி எதிர்காலம் இறந்தகாலமாக வந்த காலவுழுவலைதி. 'நாத்தின்னும் நல்ல சுனைத்து'என்றது, பரிகாசக்கவையைவினக்குவது. இதில், "உண்டற்குரிய வல்லாப் பொருளே, புண்டனபோலக் கூறலுமரபே"என்ற வழுவமைதி யிருத்தலேயுங் காண்க. (ஞ)

நூஙூ தகுகண மரபிலலார் பினசெனறு தாபவரை
யெகுகண வனாகுது மெனபவா—புனகேணமை
நறறளிரப புனனே மலருங கடறசோபப
கறகிளளிக கையிழநு தறறு

(இ - ள) நல தளிர புனனே - அழகிய தளிர்களேயுடைய புனனைமரங்களை, மலரும - பூகபபெறற, கடல சோபப - கடலின துறைமுகத்தையுடைய (பாணடிய) ராசனே[1]—தமகண மரபு இலலாபினை - தமமிடதது (அடகக முதலிய) நலலொழுகக இலலாதவாகளிடதது நிலே, தாம செனறு—,அவரை எமகண வணகுதும - அவாகளே நமமிடம வணகுகியிருகக செயவோம, எனபவா - எனற சொலபவாகளது, புல கேணமை - இழிவான சோகதை, கல கிளளிகளை இழாது அறறு - கலலைகிளளிக கையைப போகவிக கொணடதுபோலாம, (எ - று)

இயலபிலே சிறிதம நறகுணநறசெயகை ளிலலாதவரை அடகிச சுவாதினஞசெயய பிரயதனபபடுவது, அசாதகியமும நிகருவிளபபதுமாய கலலைகிளளததொடஙகிக கைநோவையுணடாகவிகொளளுதலேப போலுதலால, பேதைமை யெனபதாம "கறகிளளிக கையுநதாரிய" எனறார பழமொழியிலும இஙகி, ஒழுகசிலலாத பேதையாகள, எவராலும தாம நலவழிபபடுதத்படாமையோடி, தமமை நலவழிபபடுத்த முயலபவாகளு மிகக துனபதனையுஞ செயவா எனறது கருதது.

புனகேணமை யெனறதி, இவவிட ஒருதலேச சினேகததை மூனறாம அடி பாணடியநாடடின செயதலிலசிறபபுக கூறம பனனே - அநநிலதுககு உரிய மரம சோபப - நெயதனிலதது ஊரின பெயா (அ)

நூஙூ. ஆகா தெனினு மகதகுரிய புணடாகிற
போகா தெறுமபு புறஞசுறறுமம—யாதுநு
கொடாஅ ரெனினு முடையாரைப பறறி
விடாஅ ருலகத தவா

(இ : ன) ஆகாது எனினும - (தமககு உணணகவிடைததல) இலலையாயினும, அகதது நெய உணடு ஆகினா - ஒருபாதத்திரதது நெயஇருகக மாஞல, எறுமபு - எறுமபுகள, போகாது (அபபாதத்திரததை விடடு) நீஙகாமல, புறம சுறறும-வெளிபபககதது சுறறிககொணடேயிருககும, (அது போல),—யாதும கொடாரி எனினும ஒருநிதிபபொருளேயும கொடாதவாகளாஞலும, உடையாரை - செலவமுளளவாகளே, உலகத்தவா - உலகத்திலுளள சனஙகள, பறறி-சோரது, விடாரா-விடடுவிடுங்கவேமாடடாரா; (எ-று)

உடபுருதது நெயயை உணணகவிடாமலிருதது அபபாதத்திரதது எறுமபுகள ஆசையிஞலவிடாமற சுறறிககொணடிருபபதுபோல, தமமிடுபதத்தினபடி ஒருபொருளும பெறகூடாமலிருதது செலவமுடை யாரைப பேதைகள ஆசையிஞல விடாமற சுறறிச்கொணடிருபபாகள எனபதாம. எதிர்துக்காட்டேமையணி.

செல்வமுள்ளவரை 'உடையார்' என்பதும், செல்வமில்லாதவரை'இல்லார்' என்பதும் - வழக்கு; "உடையார்மூன் இல்லார்போல" எனத் தீநக் குறளிலுங் காண்க. அளபெடையிரண்டும், செய்யுளோசைநிறைப்பன. பின்னிரண்டடியில், அளபெடை ஒன்றி வந்தது, அள.பு என்னுந் தொடை.

நூநூஅ. நல்லவை நாடொறு மெய்தா நறஞ்செய்யா
நில்லா தார்க் கியாதொன் று நீகலா—லெல்லா
நினியார்தோள் சேரா நிசைபட வாழார்
முனியார்கொ றும்வாழு நாள்.

(இ - ன்.) (மூடர்கள்),—நாள்தொறும் - தினந்தோறும், நல்லவை-நற்குணநற்செய்கைகளே, எய்தார் - அடையார்கள்; அறம் செய்யார்-தருமஞ் செய்யமாட்டார்கள்; இல்லாதார்க்கு - ஏழைகட்கு, யாதுஒன்றும் ஈகலார்-எதையுங் கொடுக்கமாட்டார்கள்; எல்லாம் இனியார் தோள் சேரார்-குணஞ்செயல்களிலெல்லாம் இனியரான தம்மனைவியரது தோள்களைச் சேரமாட்டார்கள்; இசை பட வாழார் - கீர்த்தியுண்டாக வாழமாட்டார்கள்; (இப்படிப்பட்டவர்), தாம் வாழும் நாள் எல்லாம் முனியார்கொல் - தாங்கள் பிழைத்திருக்குங் காலங்களேயெல்லாம் வெறுக்கமாட்டார்களா? (எ - று.)

அறம்பொருளின் பங்களைத் தாம் அடையாமலும், பிறர்க்குத்தானதருமங்கள்செய்து இம்மைக்குப் புகழும்மறுமைக்குப் புண்ணியமும்பெருமலும் வீண்காலங்கழிக்கிற அறிவில்லாதார்க்குத் தம்வாழ்நாளில்வெறுப்பில்லாமலிருப்பது வியக்கத்தக்க தென்பது கருத்து; இதில், அவர்கள் இருத்தலும் இறத்தலும் சம மென்பதும் தொனிக்கும். 'முனியார்தோள் சேரார்'என்ற தற்குறிப்பேமகளிரைச் சேர்வர் என்ற கருத்துக் கொள்க.

நல்லவை என்றது, கல்வி கேள்வி நிகழிமிழ்பொருள் சேர்த்தல் முதலியவற்றை. நல் அவை எனப் பிரித்து, நிறைந்த சபையைச் சேரமாட்டார்கள் எனினும் அமையும். எய்தார் என்ற எதிர்மறைமுற்றில், எய்து - பகுதி; (அம்பெறிதாரென்ற பொருளில், எய் என்னும் பகுதியின்மேற்பிறந்த உடன்பாட்டு முற்றும்) நீர்த்தி, இல்லறத்தில்வழுவாதார்க்கு இம்மைப் பயனுய் இவ்வுலகில் நிகழ்ந்து நிலைபெறவ தாதலால், இசைபடவாழ்தல் இறதியிற கூறப்பட்டது; திருக்குறளில் 'புகழ்' என்னும் அதிகாரம் இல்லறவியலின் இருதியில் வைக்கப்பட்ட வாறுங் காண்க. கொல்-லீறுவகையால், இழிவைவிளக்கும்.

இல்லாதார்க் கியாதொன்றும் - இங்கே குற்றியலிகரம் அலகுபெறவில்லை; 'கரும் தனேயும் தையின் குற்றியலிகர உகாக்களும் அளபெடையும் மெய்யெழுத்தும் அலகுபெறுத லிற்கும்' 'இல்லாதார்க்'என்ற தேமாங்காய்ச் சீரின்மூன் 'யா'என கோவருதல் பொருந்தமே யன்றி,'இயா'என நிரை வருதல் வெண்டளைக்கு ஏவலாமையை அலகிட்டுக் காண்க. (அ)

நூநூசு. விழைந்தொ நுவர் தம்மை வியப்ப வொருவர்
விழைந்திலே மென்றிருக்குங் கேண்மை—தழங்குரற்
பாய்திரைசூழ் வையம் பயப்பினு மின்னுதே
போய்நுலை மில்லாதார் மாட்டு.

(இ - ன்.) ஆய் கலம் இல்லாதார்மாட்டு - ஆராய்தற்குரிய கல்வியு இல்லாத மூடர்களிடத்தில், ஒருவர் விழைந்த தம்மை வியப்ப - (யாராயினும்) ஒருவர் (வந்து) விரும்பித் தம்மைக் கொண்டாட, ஒருவர் விழைந்திலேம் என்று இருக்கும் (அங்ஙனம் கொண்டாடப்பட்ட) மற்றொருவர் (ராம்) விரும்பமாட்டோமென்று எற்றுக்கென்னாதிருக்கிற, கேண்மை - னேமானது,—தழங்கு குரல்-முழங்குகின்ற ஒலியையுடைய, பாய்திரை-பாய்ந்துவருகிற அலைகளையுடைய கடல், சூழ் - சூழ்ந்த, வையம்-பூமிமுழுவதையும், பயப்பினும் - தருவதாயிருந்தாலும், இன்னாது - (சான்றோர்க்கு) இனிமையாயிராது; (எ - று.) ஏ - தேற்றம்.

தம்மைவிரும்பி வலியவந்தினெனித்தவரைத் தாம்னெனியாத மூடர்களின் சேர்க்கை, எவ்வளவு பயன்தருவதானலும், திருப்திகரமானதன்று என்பதாம். தம்மை ஒருவர் விரும்பாராயினும், தாமாக வலியப்போய்ச்சினெனித்தல் பெரியோரிடத்தாயின் பின்பு இனிமைதருவதாம் என்பது தோன்ற, 'இன்னாது ஆய்கலம்இல்லாதார்மாட்டு' என்றார்.

பாய்திரை - அன்மொழித்தொகை யென்றுவது, அடையெடுத்த சினையாகுபெயரென்றுவதுகொள்ளத்தக்கது. பயப்பினும், உம் - உயர்வுசிறப்பு; இது - ஒருபயனேயுர் தாமை தோன்ற நின்றது. ஆய் கலம் - சிறந்த நற்குணமுமாம். கேண்மை - இங்கு, ஒருதலைச்சினேகம்; எதிர்மறையில்கனேயால், போலிச் சினேக மென்றவாறுமாம். தழங்குகுரல் என்பது தழங்குரல் என்ற விகாரப் பட்டது; "தழங்குரன் முரசிற் சாற்றி" என்றார் சீவகசிந்தாமணியாரும். (க)

கூசை. கற்றனவும் கண்ணகன்ற சாயலும் பிற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும் தானுரைப்பின்
மைத்தனர் பல்கி மருந்திற் றணியாத
பித்தனென் றெள்ளப் படும்.

(இ - ன்.) கற்றனவும் - (ஒருவன்) கற்ற கல்விகளும், கண் அகன்ற சாயலும் - (அவனிடத்து) மிகுதியாகவுள்ள மென்மைக்குணமும், இல் பிறப்பும் - (அவனது) உயர்குடிப்பிறப்பும், (என்னும் இவையெல்லாம்) பக்கத்தார் பாராட்ட - அயலார் கொண்டாட, பாடு எய்தும் - பெருமைபெறும்; (அங்ஙனம் இல்லாமல்), தான் உரைப்பின் - (தன்கல்வி முதலிய சிறப்புக்னே ஒருவன்) தானுரை எடுத்துரைசொன்னல், மைத்தனர் பல்கி - (அவனுக்குப்) பலமைத்துனர் ஏற்பட்டு, (அவர்களால்), மருந்தின் தணியாத பித்தன் என்று எள்ளப்படும் - மருந்தினுற் பரிகரிக்கமுடியாத பைத்தியமுடையவனென்று (அவன்) இகழப் படுவான்; (எ - று.)

தன்சிறப்புக்களைப் பிறர்கூறினுற் பெருமையுண்டு; அங்ஙனமின்றி அறிவில்லாமையால் தற்புகழ்ச்செய்பவன் பரிகாசத்துக்கே பாத்திரமாவன் என்பதாம்; " தன்னே வியப்பிப்பான் தற்புகழ்தல் நீசகுடர், நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்" என்றார் பிறரும்.

இங்கே 'மைத்துனர்' என்றது, பரிகாசஞ்செய்பவர்களே; அவர்களே பரிகசித்தற்கு உரியவராதலால். மைத்துனன் - மனைவியின் உடன்பிறந்தவனும், அத்தைமகனுமாம். பாராட்டல் - பரர் ஆட்டல் எனப் பிரித்து, பூமியில்வழங்கச் செய்ததலைக் காரணப்பொருளுரைப்பர். தணியாத என்பதைப்பிரித்துக்கு அடைமொழி. "சாயல் மென்மை" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தால், சாயல் என்பது - ஐம்பொறிகளாலும் நுகரப்படும் பலவகை மென்மைகளையும் உணர்த்துவதோர் உரிசசொல்லாத லுணர்க. (கூ)

## கூடு ச ஆம் அதிகாரம்.—கீழ்மை.

அஃதாவது - கீழ்மக்களது தன்மை. இது - புல்லறிவாண்மை போதை மைகளின் காரிய மாதலால், காரணகாரியமுறைமைபற்றி, அவற்றின்பின் வைக்கப் பட்டது.

கூசுகு. கப்பி கடலதாக் காலித்தன் வாய்ப்பெயினுங்
குப்பை கிளிப்போவாக் கோழிபோன்—மிக்க
கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினுங் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும்.

(இ - ன்.) காலை - (உணவுவேண்டிய) காலத்திலே, கப்பி - தானியத்தை, கடவது ஆ - போதுமான அளவினதாக, தன் வாய் பெயினும்-தனது வாயிற் (பிறர் கொண்டிலவித்து) போகட்டாலும், குப்பை கிளைப்பு ஓவா - (தன் இயல்பான) குப்பையினூர்தொழிலை நீக்காத, கோழி போல்—, மிக்க கனம் பொதிந்த - மிக்க மகிமை பொருந்தின, நூல்-சாஸ்திரங்களின் பொருளை, விரித்து காட்டினும் - (அறிவுடையார்வந்து) விவரமாகத் தெரிவித்தாலும், கீழ்-கீழ்மகன், (தன்னார்க்குணத்தை விடாமல்), தன் மனம் புரிந்த ஆறே மிகும் - தன் மனம் விரும்பினபடியே மிக்குச்செல்வான் [வரம்புகடந்து கடப்பான்]; (எ - று.)

தன்முயற்சியில்லாமல் கல்லபொருள் கிடைத்தாலும் நீயதை விடாமை, கோழிக்குப்போலக் கீழோர்க்கு இயல்பு என்பதாம். உவமையணி.

கப்பி - கொய். காலை - உதயகாலமுமாம். கிளைப்பு - தொழிற்பெயர். ஓவா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; ஓவு-பகுதி; இது ஒருவு என்பதன் மருஉ எனப்படும். நூலுக்கு மிக்க கனம் - நெருத்த உறுதிப்பொருள்களைக் கூறுதல். இழிவுதோன்ற, 'கீழ்' என அஃறிணையாற் கூறினார்; இதற்கு மகனுக்குப் பண்பாகுபெயர். (க)

கூசுஉ. காழாய தொண்டு கடற்றூர் தஞ்சாரற்
முழாழ போவா மெனவுரைப்பிற்—கீழ்தா
னுறங்குவா மென்றெழுந்து போமாமஃ தன்றி
மறங்குமா மற்றுன் மூரைத்து.

(இ - ன்.) 'காழ் ஆய கொண்டு கசடு அற்றோர்த்தம் சாரல் - உறுதியான ஞாற்பொருள்களே அறிந்து குற்றம் நீங்கினவர்களான பெரியோர்கள் பக்கலில், தாழாது போவாம்-தாமதமில்லாமற் சென்று சேர்வோம்', எனஉரைப்பின்-என்றசொல்லி (த் தெரிந்தவளெருவன் கூட) அழைத்தால்,—மேற்கும்மகன்,—உறங்குவாம் என்ற - 'தூங்குவோம்' என்றசொல்லி, எழுந்திபோம் - (அவ்விடம்விட்டு) எழுந்திருந்து போய்விடுவான்; அஃது அன்றி-அதுவுமல்லாவிட்டால், மற்ற ஒன்று உரைத்து-வேறுயாதாயினும் ஒருகாரணத்தைக் கற்பித்துக்கூறி, மறங்கும் - மறத்துச்செல்வான்; (எ - று.)—'ஆம்' இரண்டும், 'தான்' என்பதும் - அசைகள்.

தெரிந்தவிடத்தில் நல்விஷயங்களைக் கேட்பதற்குப் போவோமென்று ஒருவன் வலியவந்து கூப்பிட்டாலும், மேற்மகன்யாதாயினும் தடைசொல்லி மறுத்துப்போவான் என்பதாம். தன்மைவிற்சியணி. நல்லவனது தன்மை மற்றவனேயும் நல்லவனுக்குதல்போல, கெட்டவனது தன்மை மற்றவனேயும் கெட்டவனுக்குதல் என இதில் விளக்கும்.

ஆய - இறந்தகாலப் பலவின்பால் வினையாலணையும்பெயர். கொண்டு அற்று என இயையும். போவாம், உறங்குவாம்-முன்னிலையை உளப்படுத்திய தன்மைப்பன்மைகள்; நீயும் நானும் என்க; "அம் ஆம் என்பன முன்னிலையாரையும்,...தன்னெடு படுக்குந் தன்மைப் பன்மை" என்பதுகாண்க. உறங்குவாம் என்பதைத் தனித்தன்மையாகவுங் கொள்ளலாம். அஃது என்பதன் ஆய்தம், இங்கே மெய்போல ஒலித்தது; உயிர்போல ஒலியாமையை அலகிட்டுக் காண்க. ஒன்று - ஒருகாரணத்துக்கு எண்ணலளவாகு பெயர். உறங்குதல் தாமசகுணத்தின் காரிய மாதலால், அதுவே இங்கு எடுத்துக் கூறப்பட்டது. (உ)

நேரிசை வெண்பா

பெருநடை தாம்பெறினும் பெற்றி பிழையா
தொருநடைய ராகுவர் சான்றோர்—பெருநடை
பெற்றக் கடைத்தும் பிறங்கருவி நன்னட
வற்று மொருநடை கீழ்.

(இ - ன்.) பிறங்கு - விளங்குகிற, அருவி - மலையருவிகளேயுடைய, நல்-நெற்ற, நாட - (பாண்டிய) நாட்டையுடைய அரசனே!—சான்றோர்-பெரியோர், பெருநடை தாம்பெறினும்-மிக்க செல்வத்தைத் தாம் பெற்றாலும், பெற்றிபிழையாது-தம் இயல்பாகிய பெருமைக்குணம் மாறாமல், ஒருநடையர் ஆகுவர் - (எப்பொழுதும்) ஒரேவகைப்பட்ட நடத்தையுடையவராவர்; கீழ் - கீழ்மகன், —பெருநடை பெற்றக்கடைத்தும் - மிக்க செல்வத்தை அடைந்தவிடத்து, ஒரு நடைவற்று ஆம் - (மூர்க்கியாடைக்கு வேறுபட்ட) ஒருநடைமை வல்லவனவன்; (எ - று.)

எவ்வளவு செல்வம் வந்தாலும் மேலோரது குணம் மாறாது; கீழோர் செல்வம் வந்தமாத்திரத்தே குணம் மாறிவிடுவர் என்பதாம்.

நட-செல்வமாகுதலே "நடை வழி யொழுக்கம் செல்வம்" என்றதண்டினாலும் அறிக. பலவிடங்களிலும் நடப்பதுபற்றி, நடையென்பது-செல்வத்திற்குக் காரணப்பெயர்ப்போலும்; இனி, பெருநடை என்பதற்கு-பெரியிறை

ப்புஎன்றுஉரைப்பாருமுளர். பெற்றக்கடைத்தது-எதிர்காலவினையெச்சம்.உம் இசைநிறை.வற்று-வல் என்னும் பண்பினடியாப் பிறக்கு குறிப்புமுற்று.ஆம்-அசை.கீழ்மகனது இழிவு தோன்ற,'கீழ் வற்று'எனஅஃறிணையாற் கூறினார்.

நூசுஉ. தினைவிளைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனைவிளைத்தா வுள்ளுவர் சான்றோர்—பனைவிளைத்
தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னாட
நன்றில நன்றறியார் மாட்டு.

(இ - ள்.) இலங்கு - வினங்குகிற, அருவி - மலையருவிகளினுடைய, நல் - நிறத்தை, நாட - (பாண்டிய) நாட்டையுடைய அரசனே!—தினை அளவைத்தாகவாயினும் - தினையென்னும் சிறியதானியத்தின் அளவேயானாலும், செய்த நன்று -(ஒருவன்) செய்த உபகாரத்தை, உண்டால்-(தாம்) அனுபவித்தால், (அதனை), சான்றோர்-பெரியோர், பனை அளைத்தா ஆ - பனைமரத்தளவளவு பெரிதாக, உள்ளுவர்-நினைப்பார்கள்; என்றும்-எப்பொழுதும், பனை அளைத்து-பனைமரத்தளவளவு பெரிதான உபகாரத்தை, செயினும்-செய்தாலும், நன்று அறியார் மாட்டு - செய்ந்நன்றியறியாதவர்களிடத்தில், நன்று இல-(அவ்வுபகாரங்கள்) நிறப்பில்லாதனவாம்; (எ - று.)

தமக்குப் பிறர்செய்த சிறிய உபகாரத்தையும் பெரியதாக நினைப்பது, சான்றோரியல்பு; பெரிய உபகாரத்தையும் ஒருபொழுதாக நினையாமலிருப்பது, கீழ்மக்கள் தன்மை என்பதாம். ''தினைத்தினை நன்றி செயினும் பனைத்தினையாக், கொள்வர் பயன்தெரிவார்'' என்ற திருக்குறளையும், அதன் உரையில் பரிமேலழகர் 'தினை பனை என்பன - சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சில அளவை' என்று கூறியதையும் அறிக. பனையென்பது - மரப்பெயராய்ப் பெருமை குறிக்கும். (எ)

நூசுஇ. பொற்கலத் துண்டிப் புறந்தரினு நாய்பிற
மெச்சிற் கிமையாது பார்த்திருக்கு—மச்சிர்
பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும்.

(இ - ள்.) பொன் கலத்து - பொன்னுற்செய்த பாத்திரத்தில் (அமுதத்தைக்கொண்டு), ஊட்டி-(நல்லுணவை) உண்பித்து, புறந்தரினும்-(ஒருவன்) பாதுகாத்துவந்தாலும், நாய்—, பிறர் எச்சிற்கு - அயலார் (உண்டெறிந்த) எச்சிற்சோற்றுக்கு, இமையாது - கண்கொட்டாமல், பார்த்திருக்கும் (இடைக்கிற சமயத்தை) எதிர்பார்த்திருக்கும்; அ சீர் - அத்தன்மையாக,-பெருமை உடைத்து ஆ கொளினும் - சிறப்புள்ளவனுக (ப் பிறர்தன்னை மதித்து) ஏற்றுக்கொண்டாலும், கீழ் செய்யும் கருமங்கள்-கீழ்மகன் செய்யுங் காரியங்கள், வேறுபடும் - (பெருமைக்கு) வேறுபட்டனவாக இருக்கும்; (எ - று.)

நல்லுணவுகளைக் கொடுத்து மேன்மைப்படுத்தினாலும் இழிவான உணவை எதிர்பார்த்திருப்பது நாய்க்கு இயல்பாதல்போல, பெருமை கொடுத்துக் கொளவிட்டாலும் இழிவான காரியங்களைச் செய்வது, கீழ்மகர்

களியல்பு என்பதாம். இப்பாட்டை இவ்வதிகாரத்தின் முதற்பாட்டோடு ஒப்பிடுக. இப்பாட்டில், 'நீர்' என்பது - உவமவருபு; இல்வுவமவருபு வந்து விட்டதனால், இது எடுத்துக்காட்டுவமையணியாகாது உவமையணியேயாம்.

நேர்மகனது இழிவு தோன்ற, 'உடைத்து' என அஃறிணையாற கூறினார். உம்மைகள் - உயர்வுசிறப்பு. ஊட்டி—உண் என்பதன பிறவினையான ஊட்டு - பகுதி; உண்என்னும் பகுதி முதல் நீண்டு, 'டு' என்னும் விகுதி கூடியது. புறந்தரின், புறந்தா - பகுதி; இது ஒருசொல். (உண்டதுபோக) எஞ்சியது, எச்சில்.

நேரசை. சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோ
ரெக்காலுஞ் சொல்லார் மிகுதிசமா—லெக்காலு
மூந்திரிமேற் காணி பிகுவதேற் பிற்தன்ன
யிந்திரனு வெண்ணி லிடம்.

(இ - ன்.) சக்கரம் செல்வம்-பூமண்டலம் முழுவதையும் ஆளுவதாகிய பெருஞ்சிறப்பை, பெறினும் - (தாம்) பெற்றாலும், விழு மியோர்-மேலோர், எ காலும் - எப்பொழுதும், மிகுதி சொல் - வரம்புகடந்த வார்த்தையை, சொல்லார் - சொல்லமாட்டாகள்; எ காலும் - எப்பொழுதாயினும், மூந்திரிமேல் காணி பிகுவது எல் - மூந்திரியென்னுஞ் சிறிய அளவின்மேல் காணியென்னுஞ் சிறிய அளவு செல்வம் மிகுவதானால், இந் - இந்திரன், தன்னை—, இந்திரன் ஆ எண்ணிலிடம்-தேவேந்திரனுக வினைத்துவிடுவான்.

மேலோர் பெருஞ்செல்வம் வந்தாலும் வரம்புகடந்த நடவார்; கீழோர் சிறிதுபொருள் மிகப்பெற்றாலும் தம்மை மிகச சிறந்தவராக மதித்துப் பெருமை பாராட்டுவர் என்பதாம்.

மேலோரிலும் கீழோர்க்கு உள்ள வேறுபாட்டைக் கூறிய இதில், உபமான உபமேயத்தன்மையும் தோன்றுவதால், இசசெய்யுள் வேற்றுமை யணி யாம்;(சிறுபான்மை ப்ரஸ்துதத்தையும் ப்ரஸ்துதம்-சொல்லவேண்டிய விஷயம்] உபமானமாகக் கூறுதலும் உண்டு;) இவ்வனமே மேல்வருதற்கும் இவ்வணி கொள்க.

சக்ரம் - மண்டலம்; 'இங்கே, பூமண்டலத்திற்குக் கொள்ளப்பட்டது; இனி, ஆஜ்ஞாசக்கரத்தை உலகமுழுவதும் செலுத்தும் சக்ரவர்த்தித் தன்மை என உரைப்பினும் அமையும். சக்கரன் செல்வம் எனப் பிரித்து - இந்திரனது செல்வமென்றும், சக்ராயுதபாணியான திருமாலினது செல்வ மென்றும் பொருள் கொள்ளுதலும் ஒன்று.

உம்மைகள் மூன்றனுள், முந்தினது-உயர்வு சிறப்பு; பிந்தினது-இழிவு சிறப்பு; இடையினுள்ளது - முற்றும்பொருளது. மூந்திரியென்பது - மிகச் சிறிய அளவைக்கும், காணியென்பது-அதனின் மிக்க ஓர் சிற்றளவைக்கும் காட்டப்பட்டன. காணி - அறுபத்தாரல்லில் ஒன்று. மூந்திரி - அதன் நாலில் ஒன்று. 'காணிமேல்மூந்திரி மிகுவதேல்' எனச சொற்சமனமாற்றிப் பொருள் கொள்ளினும் அமையும். சகரம், இந்திரன் - வடசொற்கள். (உ)

ரூசஎ. மைதீர் பசும்பொன்மேன் மாண்ட மணியழுத்திச்
செய்த தெனினுஞ் செருப்புத்தன் காற்கேயா
மெய்திய செல்வத்த ராயினுங் கீழ்மக்ள்ச்
செய்தொழிலாற் காணப் படும்.

(இ - ன்.) மை தீர் - குற்றமற்ற, பசும் பொன் மேல்-பசுநிறமான நெற்த பொன்னின்மேல், மாண்ட மணி அழுத்தி - மாட்சிமைப்பட்ட இரத்தினங்களைப் பதித்து, செய்தது எனினும் - செய்யப்பட்டதாயினும், செருப்பு —,தன் காற்கே ஆம்-ஒருவனது காலிற் கொள்ளுதற்கே உரியதாம்; (அது போல)—எய்திய செலவத்தர் ஆயினும் - பொருந்திய செல்வமுடையவர்களாலுலும், கீழ்மக்ளே - கீழ்மக்களே, செய் தொழிலால்-(அவர்கள்) செய்யும் இழிதொழில்களால்,காணப்படும்-(இவர்கள்கீழ்மக்களென்று)அறியக்கூடும்.

மாசற்ற பசும்பொன்மேல் வில்லையுயர்ந்த இரத்தினமிழைத்த செருப்பே யாலுலும் காலிற்கொள்ளத்தக்கதே யாவது போல, கீழ்மக்கள் எவ்வளவு செல்வம் பெற்றாலும் கீழ்ப்படியில் வைக்கத்தக்கவரேயன்றி மேற்படியில் வைக்கத் தக்கவரல்லர் என்பதாம். எடுத்துக்காட்டுவமையணி.

எய்திய செல்வத்தர் - செல்வமெயதியவர் என விகுதிபிரித்துக்கூட்டினும் அமையும். காண என்பதைத் தொழிற்பெயராக் கொண்டு, படும் என்ற வினைமுற்றோடு முடித்து, காணுதல் படும்என்க. இனி, காணப்படும் என்பதை ஒருசொல்லாகக்கொண்டு, தொழிற்பெயராய்த்தேற்றப்பொருள் பட்டு ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவான தென்பாரு முனர். காற்கே, ஏ - பிரிநிலையோடு, இழிவுசிறப்பு. (எ)

ரூசஅ. கடுக்கெனச் சொல்வற்றாங் கண்ணேட்ட மின்றா
மிடுக்கண் பிறர்மாட் டுவக்கு—மடுத்தடுத்து
வேக முடைத்தாம் விறன்மலே றன்னுட
வேகுமா மெள்ளுமாங் கீழ்.

(இ - ள்.) விறல் - பெருமையுள்ள, மலே - மலைகளேபுடையு, றல் நாடனே றிறந்த (பாண்டிய) நாட்டையுடைய அரசனே!—கீழ் கீழ்மகனது தன்மை,கடுக்கென சொல் வற்று ஆம்-கடுமையாகப் பேசுவல்லதாம்; கண்ணேட்டம் இன்று ஆம்-தாகூடினிய மில்லாததாம்; பிறர்மாட்டு இடுக்கண் உவக்கும் - அயலாரிடத்து உண்டான துன்பத்திற்கு மகிழும்; அடுத்து அடுத்து வேகம் உடைத்து ஆம் - அடிக்கடி கோபாவேசமுள்ளதாம்; எகும் ஆம் - (கண்டவிடத்தும்) செல்வதாம்; எள்ளும் ஆம் - (பிறரைத்) தூஷிக்குமாம்; (எ - று)—இப்பாட்டில் உள்ள 'ஆம்' என்னுஞ் சொற்கள் ஐந்தும்-அசை.

கடுமையாகப் பேசுவதும், யாரிடத்தும் தாகூடினியம் பாராமையும், பிறர்க்கு நேரிடுகிற துன்பத்துக்குச் சந்தோஷிப்பதும்,காரணமின்றி மேன்மேற்கோபமுடையதாதலும், பயனில்லாதவிடத்தும் நிரிதலும், பிறரைத் தூஷிப்பதும் கீழ்மக்களியல்பு என்பதாம். நன்மைதரிந்தீயனீ,

கடிக்கென-கடுமைக்குறிப்பிடைச்சொல். சொல்என்பதை-முதனிலைத் தொழிற்பெயரென்றுவது, சொல்ல என்பதன் தொகுத்தலென்றுவது கொள்க. 'கண்ணேட்டமாவது - தன்னெடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை; இஃது - அவர்மேற் கண்சென்றவழி நிகழ்வ தாதலின், அப்பெயர்த்தாயிற்று' என்பது, நீருக்குறள் பரிமேலழகருரை. தொல்காப்பியவுரையில் நச்சினார்க்கினியர் 'இடுக்கண் என்பது - மலர்ந்த நோக்கமின்றி மையல்நோக்கம்படவரும் இரக்கம்' என்றதனால், இடுக்கண் என்பது - இடுங்குகண் என்பதன் விகாரமாய், கண்இடுங்குதற்குக் காரண மான துன்பத்திற்குக் காரணப் பெயரா மென அறிக. அடுத்து அடித்து— அடுக்கு - பண்மைப்பொருளது. மேலக்கு விறல் - மழைபெய்யாமல் வறந்த காலத்திலும் தன்னைச்சேர்ந்த உயிர்கட்கு நீர்வளத்தைக் கொடுக்கும் கொ டையும், அளவுசெய்யப்படாத பலவகைப் பொருளையுடையதாதலும், நால் வகையாண்களுள் ஒன்றாக இயல்பிலமைதலும்முதலியன. ஏருமாம் எள்ளு மாம் - பிறரிடம் வலியசென்று அவரை யிகழ்வானெனினுமாம். எள்ளு மாம் ஏருமாம் என மாற்றிக்கூட்டி, (எவரிடத்தும் நில்லாமல்) இகழ்ந்து செல்வான் என்று உரைப்பாரு முளர். (அ)

கூடுகூ. பழைய ரிவரென்று பண்ணுட்பின் னிற்பி
னுழையினிய ராகுவர் சான்றோர்—விழையாதே
கள்ளுயிர்க்கு நெய்தற் கினைகடற் றண்சேர்ப்ப
வெள்ளுவர் தோ யவர்.

(இ - ள்.) கள் உயிர்க்கும் - தேனை வெளிவிடுகின்ற, நெய்தல் - நெய் தற் பூக்களையுடைய, கனை கடல் தண் சேர்ப்ப - ஒலிக்கின்ற கடலினது குளிர்ந்த நிறைமுகத்தையுடைய (பாண்டிய) ராசனே!—பின் நிற்பின்-(ஒரு வர் தம்) பின்னே வந்துநின்றால்,—சான்றோர் - மேலோர்,—இவர் பல் நாள் பழையர் என்று - இவர்கள் பலநாள் பழகியவ ரென்று கருதி, உழை- அவர்களிடத்தில், இனியர் ஆகுவர் - இனிமையான விருப்ப முடையவரா வர்; தீம் ஆயவர்-தீம்மக்களோ, விழையாதே-(அப்படி தம்பின்வந்து நின்ற வர்களை) விரும்பாமலே, எள்ளுவர் - அவமதிப்பர்; (எ - று.)

ஒருநாள் தம்மிடம் வந்தவரையும் மேலோர் பழையனேனெனிதராகக் கொள்வர்; தீதோர் அவ்வாறுகொள்ளார் என்பதாம். பழையர்இவர் என்று பல் நாள் பின் நிற்பின் - இவர் நமக்குப் பலநாளாகப் பழக்கமுடையவரெ ன்று எண்ணிப் பின்சென்று நின்றால் என்றும் உரைக்கலாம்.

பழையர் - பழமையென்னும் பண்பினடியாப் பிறந்த பலர்பாற்பெயர்; பண்புப்பெயர் நீறுபோய் இடைஅகரம் ஐயாயிற்று. நெய்தல் - சேர்ப்புக்கு அடைமொழி. (கூ)

கூடுo. கொய்புற் கொடுத்துக் குறைத்தெண்ணு நீற்றினும்
வையம்பூண் கல்லா சிறுகுண்டை—யையகே
ளெய்திய செல்வத்த ராயினுங் கீழ்களோச்
செய்தொழிலாற் காணப் படும்.

(இ - ன்.) ஐய - அரசனே! கேள் - கேட்பாய்: என்றும் - எக்காளிலும், கொய் புல் குறைத்து கொடுத்த-அறக்கத்தக்க புல்லை அறத்து (த் தின்னு)க் கொடுத்து, நீற்றினும் - (கழுவுதல் முதலியவற்றால்) சுத்தம்பண்ணினாலும், சிறு குண்டை - சிறிய எருதுகள், வையம் பூண் கல்லர-தேரைப் பூண்டு இழுக்க மாட்டாவாம்; (அதுபோல), எய்திய செல்வத்தர் ஆயினும் கீழ்ஞர் செய் தொழிலால் காணப்படும்—; (எ - று.)

இப்பாட்டின் பின் இரண்டடி - இவ்வதிகாரத்தின் ஏழாம்பாட்டிலும் வந்துள்ளது; வெவ்வேறு ஆசிரியர்க்கும் இவ்வாறு சிறுபான்மை பொருளோடு சொல்லும் ஒற்றுமைப்படுவது இயல்பு; இதனை, சமகாலத்தில் வேறு வேறு புலவராற் பாடப் பட்ட லெப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் சிலவிடத்துங் காணலாம். இவ்வடிகள், பழமொழியாக வழங்கிவந்து சேர்த்துக் கொள்ளப்பட்டன வென்றாயினும், சாமர்த்தியமாகக்கொண்டு பூர்த்தி செய்யப்பட்டன வென்றாயினும் கொள்ளவும் இடமுண்டு.

எவ்வளவு மேன்மைப்படுத்தினாலும் சிற்றெருதுகள் தேரையிழுக்க மாட்டாமை போல, கீழ்மக்களும் தக்க காரியங்கட்கு உதவார் என்பதாம். எடுத்துக் காட்டுவமையணி.

கொய் புல்-வினைத்தொகை; பக்குவமான புல் என்றவாறு. நீற்றுதல்-சுத்தப்படுத்துதல்; இனி, நீற்றினும் என்பதற்கு - நின்பித்தாலும் என்றும் பொருள்கொள்ளலாம்; பிறவினையில், உண் என்னும்பகுதி 'ஊ' என்னும் வீருதி பெற்ற முதல்வீண்டு ஊட்டு என நிற்றல்போல, நின் என்னும் பகுதி 'ம' என்னும் வீருதிபெற்ற, முதல்வீண்டு நீற்ற என நிற்கு மென்க; "நீற்றுதோ நாய் சுட்டால் நல்ல முயல்" எனப் பழமொழியிலுங் காணலாம். வையம் - தேராதலை "வையம் பற்றிய மங்கைய ரெண்ணினர்" எனக் கம்பராமாயணத்திலுங் காண்க. சுண்டையென்பது-பால்பகா அஃறிணைப் பெயராதலால், பூண்கல்லா என்னும் எதிர்மறைப் பலவின்பால் முற்றைக் கொண்டது. வையம் - பெரும்பண்டியுமாம். (கo)

---

## ஈக - ஆம் அதிகாரம்.—கயமை.

அஃதாவது - மேல் இயல்களுள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறப்பட்டுள்ள நற்குணங்கள் யாவு மிலராய மூடர்களது தன்மை:கயமை-மூடத்தனம். கீழ்மையென்னும் முன்னைய அதிகாரத்திற் கீழோராது தன்மை முற்றுங் கூறப்படாமையால், அதனையே கயமை யென்று வேறு பெயரிட்டு அவ்வதிகாரத்தைச சார வைத்தார்.

ஈருக. ஆர்த்த வறிவின ராண்டியோ ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப—மூத்தொழுகு
தீத்தொழிலே கன்றித் திரிதரு செருவைபோற்
போத்தருர் புல்லறிவி னார்.

(இ - ள்.)ஆர்த்த அறிவினர்-(கல்விகேள்விகளினால்) நிறைந்த அறிவை யுடையவர்,— ஆண்டு இனியர் ஆயினும் - வயதிற் றெரியராயிருந்தாலும். காத்த ஒம்பி -(தமது ஐம்பொறிகளையும் நிய புலன்களின்வழியே செல்ல வொட்டாது) நிறுத்தப் பாதுகாத்து, தம்மை—, அடக்கு ப - அடங்கியொ முகச் செய்வர்; புல் அறிவினர் - அற்பமாகிய அறிவையுடையவர்,—மூத் தொறும் - வயது முதிருந்தோறும், நீ தொழிலே கன்றி - நியசெயல்களி லேயே உழன்று வருந்தி, நிரிந்து- (ஒருபயனுமின்றித்) திரிந்து, எருவை போல் - கொறுக்கையைப் போல, போத்து அரூர்-உள்ளீனாயிருப்பது நீல்மோட்டார்; (எ - று.)

அறிவுனவர், வயதிற்றிரியாயினும் [இளமைமுதற்கொண்டே] இர் நிரியங்களேடு வசப்பட்டுத் தீயகாரியங்களேச் செய்யாமல் செய்தற்கு உரிய நல்ல காரியங்களேயே செய்து அடக்கமுடையராயிருப்பார்; அறிவில்லாத வரோ, அப்படியன்றித் தமது ஆயுன்முழுவதும் நித்தொழில்களேயேசெய்து வீண்காலக்கழிப்பர் என்பது கருத்து. கொறுக்கை எவ்வளவு காலஞ்சென் ருலும் மேல்தோற்றத்தில் தடிந்திருந்தும் உள்ளீனீங்காதவாறுபோல, அறிவில்லாதாரும் எவ்வளவுவயது சென்ருலும் மேல்தோற்றத்தில் தடித்த உருவத்தினராய் நல்லோரைப்போலத் தோன்றினும் உள்ளே குற்றமுடை யரா யிருக்குர் தன்மை நீங்கா ரென்க. அவ்வாறு இருப்பது தருநியன்ற என்பதாம். உவமையாணி. இனி, எருவை என்பதற்கு-கழுகென்ற பொருள் கொண்டு, நுறிவில்லாதவர் கழுகென்னும் பறவை போலக் குற்றம் நீங்கா ரென்றும் உரைக்கலாம்: கழுகு குரூரகுணமுடைய பறவையென்பது பிரசித்தம்.

தம்மைக் காத்து ஒம்புதல் - மனம் போன போக்கெல்லாம் போகா மல் நல்லறங்களேயே செய்து தம்மை நரகத்துக்கு ஆளாக்காமல் பாதுகாத் துக்கொள்ளுதல். போத்து - பொத்து என்பது எதனேரோக்கி நீட்டல் விகாரம் பெற்றது; பொத்து - குற்றம். இனி, 'தலேயென்ற பொருள்படும் பொத்து என்னும் மொழி லவித்தலும் நீட்டலும் பெற்றுப் போத்து என்ற ஆயிற்று' என்பாரும் உளர். மூத்தொறூஉம்—மூ - முதனிலேத்தொழிற்பெ யர்; அணபெடை, குறில் நெடிலான இன்னிசையளபெடை. நீத்தொழிலே கன்றுதல் - நியதொழில்களேயே செய்துதமும்புபடுதல். நிரிந்து, தா - தினேவினை. 'ஆத்தவறிவினர்' என்றும் பாடம்.

இச்செய்யுளின் முன்னிரண்டடி—களிகாற்சோழன் மிக்க இளமைப் பருவத்திலேயே முடிசூட்டப்பட்டு அரசாளத்தொடங்கிய காலத்தில் முதி யவர்கள் அவனேக்குறித்து 'இவன் அறிவுநிரம்பாத இளமையுடையான்' என இகழ்ந்து கூற, அதனையுணர்ந்த அவ்வரசன் நரைத்த மயிரைத் தன்தலே யில் முடித்துக்கொண்டு முதுமைப்பருவத்திற்கு உரிய வேஷம் பூண்டு சபைக்கு வந்து அம்முதியவர் மகிழும்படி ஒழுங்காக வியவகாரவிசாரணே செய்து நியாயமான தீர்ப்புச் சொல்லின னென்பதைக் குறிக்கும்; "உரை முடிவுகாணினமையோ னென்ற, நரைமுதுமக்க ளுவப்ப-நரைமுடித்துச், சொல்லான் முறைசெய்தான்சோழன்" என்னும் பழமொழிச்செயலுள் னினேப்பூட்டுகின்றது.

'நிரியுர் தெரிவைபோல்' என்பதும் பாடம். (5)

நூ.நூ. செழும்பெரும் பொய்கையுள் வாழினு மென்றும்
வழும்பறுக்க லில்லாவாங் தேரை—வழும்பில்சீர்
நூல்கற்றக் கண்ணு தணுக்கமொன்றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றி யரிது.

(இ - ள்.) தேரை - தவளைகள்,—என்றும்-எக்காளும், செழும் பெரும் பொய்கையுள் வாழினும் - செழிப்பான பெரிய குளத்தில் வாழ்ந்தாலும், வழும்பு அறக்கலில்லா ஆம்-(தமது உடம்பின் மேலுள்ள) வழு வழுப்பான அழுக்கை நீக்கிக்கொள்ளமாட்டாவாம்; (அதுபோல),—நணுக்கம் ஒன்று இல்லாதார் - நுட்பபுத்தி பிறிதுமில்லாதவர், வழும்பு இல் சீர் - குற்றமில்லாத சிறப்பையுடைய, நூல் - சாஸ்திரங்களே, கற்றக்கண்ணும் - கற்றப்பழினாலும், தேர்கிற்கும் பெற்றி-(அந்தநூல்களின் உண்மைப்பொருளே) ஆராய்ந்தறியுந் தன்மை, அரிது-(அவர்க்கு) இல்லையாகும்; (எ - மு.)

தவளைகள் பெரிய நீர்நிலையிற் பலகாலம் வாழ்ந்தாலும் தமது உடம்பின் மேலுள்ள மாசைக் கழுவிக்கொள்ளமாட்டாமைபோல, மூடர்கள் பெரியநூல்களிற் பலகாலம் பயின்றாலும் தமது அறியாமைக் குற்றம் ஒழிந்து அவற்றின் உண்மையான கருத்துக்களே நுட்பமாக அறியுந்தன்மை யில்லாதவராவர் என்பதாம். நிந்துகூட்டுவமையணி. உடம்புமுக்கை நீக்கிச்சுத்தப்படுத்தும் ஆற்றலுடைய நீரிலிருந்த அழுக்கு நீங்காத தவளைபோல, பலரையும் கல்வழிப்படுத்திச் சிறமுடைய நூல்களிற்பழகியும் பக்குவப்படாத கீழ்மக்களுடைய மனமென்பது கருத்து.

"இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்று, மடங்காதா ரென்று மடங்கார்—தடங்கண்ணை, யுப்பொடி செய் பால் தயிர்காயம் பெய்தடினும், கைப்பறு பேய்ச்சுரையின் காய்" என்றது போன்றது, இச்செய்யுள்.

நூல் - உவமையாகுபெயர். நணுக்கம் என்னும் பண்புப்பெயர், இல்லு நுட்பமான அறிவுக்கு ஆகுபெயர். (உ)

நூ.நூ. கணமலி நன்னுட கண்ணின் றெருவர்
குணனேயுங் கூறற் கரிதார்—குணனழுங்கக்
குற்ற முழைநின்று கூறஞ் சிறியவர்கட்
கெற்ற லியன்றதோ கா.

(இ - ள்.) கணம் மலி கல் காட - கூட்டமாகிய மலைகளையுடைய கல்ல காட்டின் அரசனே!—கண் இன்று - எதிரில்லாமல் [புதத்தில்] இருந்தி, ஒருவர் குணன் எயும் - பிறரொருவரது நற்குணத்தையும், கூறற்கு அரிதா - எடுத்தசொல்லுதற்கு (நாவெழுதல்) அருமையாயிருக்கும்; (அவ வாறிருக்க), உழை நின்று - (ஒருவரது) எதிரில் நின்றுகொண்டு, குணன் அழுங்க-(அவரது) நற்குணங்கள் அழிந்தும்படி, குற்றம் கூறும் - குற்றங்களையே எடுத்து (ப்பலர் அறிய) க்கூறுகின்ற, சிறியவர்க்கு - அற்பபுத்தியையுடைய நீசோர்க்கு, கா - காக்கு, எற்றல் இயன்றதோ - (தசையிழுலல் லாமல்) எப்பொருளாற் செய்யப்பட்டதோ? (அறியோம்); (எ - மு.)—நூல் - ஈற்றசை.

ஒருவரது நற்குணத்தைப் புறத்திற் கூறுவது சாதாரணமாயினும் அவர் யாதினிமித்தமோவென்ற அஞ்சவேண்டியிருக்க, அவ்வாறன்றி ஒருவரது எதிரில் நின்றுகொண்டு அவரதுநற்குணங்களையொழித்துத் தீக்குணங்களையே கயவர் எடுத்துக் கூறுகின்றார்களே; அவரது நாக்குத் தசையினால் செய்யப்படாமல் ஏதோ ஒரு கொடிய பொருளாற் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்ற கலி வியர்த்த கூற்றியலாது. பெரியோர்க்குப்போல அவர்க்கும் நாக்குத் தசையாற்செய்யப்பட்டதாயின் அவரும் பிறரது நற்குணங்களே எடுத்துக் கூறவரையன்றிக் குற்றங்களைக் கூறுரென்பது, தூற்றப்பெச்சம்.

பின்னே 'ஏழைன்ற' என வந்ததனுல், முன்னே 'கண்ணின்ற' என் பதற்கு - எதிரிலன்றிப் புறத்தில் எனக் கூறவேண்டியதாயிற்று. இன்ற - இன்றியென்னும் எதிர்மறைக்குறிப்புவினையெச்சத்தின் திரிபு. கண் நின்ற என்ற பிரித்து, எதிரில் நின்றுகொண்டு எனக் கூறுவதிற் பொருட் சிறப் பின்மை யறிக. (கூ)

கூடுஉ. கோடேந் தகலல்குற் பெண்டிர்தம் பெண்ணீர்மை
சேடியர் போலச் செயறேற்றார்—கூடிப்
புதுப்பெருக்கம் போலத்தம் பெண்ணீர்மை காட்டி
மதித்திறப்பர் மற்றை யவர்.

(இ - ன்.) கோடு ஏந்து அகல் அல்குல் பெண்டிர்-பக்கங்கள் உயர்ந்து அகன்ற அல்குலையுடைய குலமகளிர், தம் பெண் நீர்மை-தமது பெண்தன்மையை, சேடியர்போல - (தமக்குப் பணிவிடைசெய்யும்) பாங்கியர்போல இருந்து, செயல் - அலங்காரஞ்செய்துகொள்ளுதலை, தேற்றார் - அறியார்; மற்றையவர் - வேசையர்களோவெனில், புது பெருக்கம் போல - புதிய நீர்வெள்ளம்போல, தம் பெண் நீர்மை - தமது பெண் தன்மையை, மதித்து காட்டி - (அலங்காரஞ் செய்துகொள்வதனுல் தம்மைக் கண்டவர்) (தன்மதிக்கும்படி வெளிக்குக்காட்டி, கூடி - (ஆடவரோடு) கலந்து, இறப் பர் - கடப்பார்கள்; (எ - று.)

குலமகளிர் அலங்காரங்களினுல் தம்மைமதிக்கச்செய்து பிறரிடத்துப் பொருள்பறிப்பதில்லை; வேசையரோ அவ்வாறுசெய்யார்; அதுபோல, யோக்கியர் தமது நற்குணங்களே வெளிக்குக்காட்டி வியக்கசெய்யாமல் அடங்கியிருப்பார்கள்; அயோக்கியரோ மிக்கமேன்மையுள்ளவர்போலத் தம்மைத்தாமே வெளிக்கு நடித்தக்காட்டி வஞ்சித்துப் பிறரிடம் பொருள்பறித்துக்கொள்வார்கள் என்பதாம்.

உபமானத்தைக்கூறி உபமேயத்தைப்பெறவைத்ததனுல், பிறிதுமோழிதலணி. இவ்வுவமையால், மேம்மக்கள் டம்பத்தன்மையில் கருத்துள்ளவரென்றும், மேன்மக்கள் வெளியாடம்பரத்திற் கருத்துள்ளவரல்ல ரென்றும் வெளியாம்.

புதுநீர்ப்பெருக்கு, தான்வரும் ஆற்றினது பழவெள்ளத்தையும் அடித்தக்கொண்டு செல்வதுபோல, பாத்தையர் தாம்சேர்ந்த செல்வரது செல்வம்முழுவதையும் பறித்துக்கொண்டு பிரிந்துசெல்லுரென்பது படுநின்றது;

ஆதலின், புதுவெள்ளம் அவர்க்குத் தொழில்பற்றியஉவமை. பின்னே 'மற்றையவர்' என வந்ததனால், முன்னே 'பெண்டிர்' என்பது-குலமகளிரைக் குறித்தது. மதித்து - மதிக்கச்செய்து; தன்னினே பிறவினைப் பொருளது.

நூடுடு. தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா
வளிநீரர் மாதோ கயவ—ரளிநீரார்க்
கென்னுனுஞ் செய்யா ரெனைத்தானுஞ் செய்பவே
யின்னுங்கு செய்வார்ப் பெறின்.

(இ - ள்.) கயவர்-கீழ்மக்கள், —தளிர்மேலே நிற்பினும்-(மிகவும் மெதுவான) தளிரின்மேல் நின்றாலும், தட்டாமல் - (ஒருவர்) தட்டித்தள்ளாமல், செல்லா - இறங்கிப்போகமாட்டாத, உளி நீரர் - உளியின் தன்மையை யுடையவராவர்; (இன்னும் அவர்கள்), அளி நீரார்க்கு - (பிறர்தன்பத்தைக் கண்டு இரக்கும்) அருளையே இயற்கைகுணமாகவுடைய பெரியோர்க்கு, என்னுனும் செய்யார் - சிறிய உபகாரத்தையுஞ் செய்யமாட்டார்கள்; இன்னுங்கு செய்வார் பெறின் - (தமக்குத்) தன்பஞ்செய்பவரைப் பெற்றால், எனைத்தானும் செய்பவே - (அவர்கட்கு) எவ்வளவு பேருதவியையுஞ் செய்வார்கள்; (எ - று.)—மாது, ஓ - ஈற்றசை.

உளியானது மெதுவான பொருளிலும் தாமேசெல்லாமல் ஒருவர் தட்டித்தள்ளியபின்னரே செல்லுதல்போல, கீழ்மக்கள் எவ்வளவு சிறிய தொழிலிலும் பிறர்வாமல் பிரவேசிக்கமாட்டார்; நற்குணமுடையோர்க்கு நிருதவியும் செய்யார்; அடித்து வருத்தும் கொடியோர்க்கு எல்லாவற்றையுங் கொடுப்பார்கள் என்பது கருத்து. முன்னீரண்டடி-உவமையணி.

'வீட்டிற் கருமஞ் செயலைத்த பின்னரும், மூட்டா தவரை யியல்சொல்லவேண்டுமோ?, தொட்டக்கான் மாற்குற் றளிர்மேலே நிற்பினும், தட்டாமற் செல்லாதளி" என்ற பழமொழிச் செய்யுள் இங்கு நோக்கத் தக்கது. "பெற்றார் பிறந்தார் பெருநாட்டார்பேருலகி, லுற்ற ருகந்தா ரெனவேண்டார்—மற்றே, நிரணங்கொடுத்தா லிடுவ ரிடாரே, சரணங் கொடுத்தாலுந் தாம்" என்னும் நல்வழியோடு இச்செய்யுளின் பின்னிரண்டடிகளே ஒப்பிடுக. "வாய்வைத்தக் சொல்லச் சுபப்படாங் கிழ்" என்றார் கிழ்.

அளிநீரர் - அருளையே இயற்கைக்குணமாகவுடையவர்; அல்லது, பிறர் அளிக்கும்படியான [இரங்கும்படியான] இயல்புடையவர். 'இன்னுங்கு செய்வார்க்குச செய்ப என்றது, இலக்கணையால், அவர்பறித்தக்கொள்ள இவர் இழப்பரென்பதைக் குறிக்கும். செய்வார்ப்பெறின்—"இயல்பின் லிகாரம்."

நூடுஉ. மலிநல முள்ளுங் குறவன் பயந்த
வினைநில முள்ளு முழவன் சிறந்தெ ருவர்
செய்தநன் முள்ளுவர் சான்றோர் கயந்தன்னை
வைததை யுள்ளி விடும்.

(இ - ள்.) குறவன்—, மலை நலம் • (தன்க்கு உறைவிடமாகிய)மலையி னதுவளத்தை, உன்னும் - நினைத்தக்கொண்டிருப்பான்; உழவன் - உழுது

பயிர் செய்பவன், பயந்த-(தனக்குப்) பயன்கொடுக்குந் தன்மையுள்ள, வினை நிலம் - விளைகின்ற நிலத்தை, உள்ளும்-கினைத்துக்கொண்டிருப்பான்; சான்றோர்-(கல்வியேன்வினாற்) பெரியராயினோர், ஒருவர் செய்த நன்று-(தமக்குப்) பிறரொருவர்செய்த உபகாரத்தை, பிறக்து உள்ளுவர்-பிறப்பாகினைத்துக்கொண்டிருப்பார்; கயம் - கயவன் [நீம்மகன்], தன்னை வைதவை-(பிறனொருவன்) தன்னைத் திட்டியதையே, உள்ளிலிடும் - (மறவாமற்) கருதிக்கொண்டிருப்பான்; (எ - று.)

குறவனுக்கு மலையிற் பழக்கமாதலால், அவன் அந்தமலையின் வளத்தையே கருதுவன்;அவ்வாறே உழவன் தனக்குப்பயன்தரும் வினைநிலத்தின் வளத்தையே கருதுவன்; சான்றோர்தினைத்தினை நன்றியையும் பனைத்தினையாகப் பாவித்துப் பிறரைப் பெருமைப்படுத்துதலையேமேற் கொண்டவ ராதலால், தமக்குப்பிறர்செய்த நன்றியையே கருதியிருப்பர்; இம்மூவர்க்கும் இந்தக் குணங்கள் பழக்கமாயிருப்பதுபோல, நீமோன் ''நன்றல்லதன்றே மறப்பதன்று'' என்னும் நீதிப்படியன்றி ''ஒர்த்தகனே, புள்ளத்தாளுள்ளி புரைத்தரா யூர் கேட்பத், தள்ளித் தண்முட்டிமோய் மேற்'' என்றவாறு தன்னைப்பிறர்திட்டியதையே மறவாமற் கருதிக்கொண்டிருப்பதுவவனுக்கு இயற்கை யென்பதாம்.

இங்குச் சான்றோரையும் உடன்கூறியது, மேற்சுனது இழிவு தோன்றற்கு; அவனை 'கயம்'என்று அஃறிணையாக்கூறியதும் இதுபற்றியே. கும்மசாதிப்பெயர்; அதனைபுடையவன் குறவன்: குறிஞ்சிநிலத்தில் வாழ்பவன். உழவன் -உழுதல தொழிலுடையவன்; மருதநிலத்தில் வாழ்பவன். பிறந்த உள்ளுவர் என இயையும். பிறந்து - பிறக்க; எச்சத்திரிபு. குறவன் உள்ளும் - செய்யுமென்னுமுற்று ஆண்பாலுக்குச் சென்றது. (அ)

கூறுஉ. ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறு நன்றிசாள் சான்றோர் பொறுப்பா—கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயி
னெழுநூறு நீதாய் விடும்.

(இ. ள்.) சான்றோர்-பெரியோர்;—ஒரு கன்றி செய்தவர்க்கு-(தமக்கு) ஒருதவியைச் செய்தவர்நிறத்தில், ஒன்றி எழுந்த-இடைவிடாது தொடர்ச்சியாகத் தோன்றிய, பிழை நூறும்-நூறுகுற்றங்களேயானாலும், பொறுப்பர்-(தமக்கு முன்பு அவர்செய்த நன்றியைக் கருதிப்) பொறுத்துக்கொள்வர்: கயவர்க்கு-நீசனவர்க்கோவெனின்,—எழுநூறு நன்றி செய்தை - (ஒருவர் முன்பு) எழுநூறு உபகாரங்களைச் செய்தை, ஒன்று தீது ஆகின்-(பின்பு அவர் செய்வதை) ஒரு அபகாரமாகுமாஞல், எழுநூறும் - (முன்செய்த) அந்த எழுநூறு நன்றிகளும், தீது ஆய் விடும் - தியனவாகவே தோன்றும்; (எ - று.)

பெரியோர் தமக்கு முன்னே ஒரு நன்மை செய்தவர் பின்னே பல தீமைகளைச் செய்தாலும் முன்செய்த அந்த ஒருநன்மையைக் கருதிப் பல தீமைகளையும் பொறுப்பர்; அற்பரோவெனின் அவ்வாறன்றி ஒரு தீமையைத் தழுவிப் பலநன்மைகளையும் மறப்ப ரென்பது கருத்து. இவ்வாறிருப்பது

அவரவரியற்கை யென்பதாம். 'எழுநூறும் நீதி ஆய்விமின்' என்றது, அவ் வெழுநூறு நன்றிகளும் கீழ்மக்களால் மறக்கப்படுமென்பது பற்றியாம். நினையளவுடைமை யினையளவாகக் கொள்ளப்படுதலினுல், அல்வொரு கன்மையே அற்றிமைகளெயல்லாம் கெடுக்குமென்க.

''ஒன்றுதவி செய்யினு மல்வுதவி மறவாமற், பின்றையவர் செய்பிழை பொறுத்திவர் பெரியோர், நன்றி பலவாக வொருவரை புரிவரேனுல், கன்றிவதன்றி முதலையர் நினையாரே''என்ற வில்லிபுத்தூரார் பாரதமும் இக்கருத்துடையதே. ''கொன்றன்ன வின்னு செயினு மவர்செய்த, வொன்றுநன்றுள்ளக் கெடும்'' என்னுங் நிருக்குறளோ இக்கே முன்னிரண்டடிக ளோடு ஒப்பிடுக.

'நூறு,' 'எழுநூறு' என்பன - மிகப்பல வென்பதற்குக் காட்டியவாறு. செய்தவர்க்கு-நான்னலுருபு கோடற்பொருளதாகாமல் இடப்பொருளதாய் நிற்றலால், உருபுமயக்கம். எழுநூறும் நீது-பண்மையொருமைமயக்கம். (எ)

ஈடு அ. ஏட்டைப் பருவத்து மிற்பிறந்தார் செய்வன
மோட்டி டத்துஞ் செய்யார் முழுமக்கள்—கோட்டை
வயிரஞ் செறிபபினும் வாட்கண்ணுப் பன்றி
செயிர்வேழ மாகுத லின்று.

(இ - ன்.) வாள் கண்ணுப் - வாள்போன்ற கண்களோடுடையவனே!—இல் பிறந்தார் - உயர்குடியிற் பிறந்தவர்கள், ஏட்டை பருவத்தும்-பொருளின்மையால் தளர்ச்சியுண்டானகாலத்திலும், செய்வன - செய்யும்நற்காரியங்களே, முழுமக்கள்-மூடர்கள், மோட்டிடத்தும் - (பொருளுடைமையால்) உயர்ந்ததிலையில் நின்றகாலத்திலும், செய்யார் - செய்யமாட்டார்கள்; (எது போலவெனின்),—கோட்டை-(தனது) தந்தங்களில், வயிரம்செறிப்பினும்-பூண் கட்டினுலும், பன்றி—,செயிர் வேழம் ஆகுதல் இன்று - கோபிக்குக் தன்மையுள்ள யானையைப்போலப் போரசெய்யவல்லதாகுதல் இல்லை.

பன்றியின்பற்களுக்கு யானைத்தந்தத்திற்குக் கட்டுவதுபோலப் பூண் கட்டினுலும் அது யானையாகாததுபோல, கீழ்மக்கள் மிக்க செல்வம் பெற்றாலும் மேன்மக்கள் வறுமைக்காலத்தில் செய்யுமளவும் நற்காரியங்கள் செய்யமாட்டார்கள் என்பதாம். பன்றியுவமை, கீழ்மக்கள் தங்கட்கு எவ்வளவு பெருமைவந்தாலும் தங்கட்கு உரியஇழிகுணம் நீங்காரென்பதை வற்புறுத்தும் எடுத்துக்காட்டுவமையணி.

கீழ் சகை, கசை - ஆய் கலிகளோடு இச்செய்யுளை ஒப்புநோக்குக.

ஏட்டை - வறுமை, மோடி - உயர்ச்சி. பிறந்தபின்பு கல்விகற்றல் மூதலிய அருந்தொழில்களால் நிறைதல் தளராதிருத்தல்பற்றி, மூடரை 'முழுமக்கள்' என்றார்; உடம்பினுறு குறைவில்லாதவ ரென்றபடி. கோடி - பல. தொண்டை - உருபுமயக்கம். (அ)

நூறுக. இன்றுது மிக்கிலையே யாது மினிச்சிறிது
நின்றுது மென்று நினைத்திருந்—தொன்றி
யுரையின் மகிழ்ந்ததம் மூளாயம்வே றுகி
மரையிலையின் மாய்ந்தார் பலர்.

(இ - ன்.) 'இன்று ஆதும் - இன்றைக்குச் செல்வமுடையவராகோம்; இலையே ஆதும் - (அன்றி) இப்பொழுதே செல்வமுடையவராகோம்; இனி சிறிது நின்று ஆதும் - இனிமேல் லெகாலக்கழித்துச் செல்வமுடையவராகோம்,' என்று நினைத்து-என்று நிச்சயம் செய்துகொண்டு, இருந்து-(அதஞ் செய்யாமலே) காலக்கழித்து, ஒன்றி உரையின் மகிழ்ந்து-இவ்வாறு மேன்மேற்சொல்லுதலினுற் சர்தோஷித்து, தம் உள்ளம் வேறு ஆகி-(தாம் நினைத்தபடியெல்லாம் சோரமையால் இறுதியில்) தமது மனம் மாறுபட்டு, மரையிலையின் - தாமரையிலைபோல, பலர் - அநேகர், மாய்ந்தார் - பயனின்றியே அழிர்தார்கள்; (எ - று.)

நாம் உள்ளகாலமெல்லாம் செல்வத்தையே எதிர்பார்த்து மனோசசெயஞ் செய்துகொண்டு சிறிதர் தருமஞ்செய்யாமற் காலக்கழித்துத் தாம் நினைத்தபடி ஒன்றுமிடையாமையால் மனமழிர்து இறந்தவர் பலர் என்பது கருத்து. இதனல், ''எண்பது கோடி நினர்தெண்ணுவன'' என்றபடி வீண் கற்பனேயும், டம்பாசாரப்பேசுதலும் கீழோர்க்கு இயற்கையென்பதுபெறப் பட்டது. உவமையணி.

முதலிற் செழிப்பாயிருர்த பிறகு காளடைவில் இருர்தவிடத்திலேயே அழிதலில் கயவர்க்குத் தாமரையில்ல உவமை. மரை - தாமரை யென்பதன் முதற்குறை. இனி, மரை என்பதற்கு-மான் என்றே கொண்டு, மான் கன் மேய்ர்தஇன்ற இலேபோல இருர்தலிடர்தெரியாமல் அழிர்தார் என்று நிலித்து பொருள்கூறுவாரு முளர்; நின்பதற்குமுன் செழிப்பாய்க் காணப்பட்டுப் பிறகு சொரூபமேதெரியாமல் அழிவதில் உவமை. உரையின், ஐந்தாறுபு - கிறப்பொருளது ஆதும் - தன்மைப் பன்மைமுற்று.

'இன்னினியே' என்றும் பாடம். முதலடி - முற்றுமோனே. (க)

நூறுஉ. நீருட் பிறந்து நிறம்பசிய தாயினு
மீரம் இனட்யகத் தில்லாகு—மோரு
நிறைப்பெருஞ் செல்வத்து நின்றக் கடைத்து
மறைப்பெருங்க ளன்ஞ ருடைத்து.

(இ - ன்.) நீருள் பிறர்து - தண்ணீரில் உண்டாகி, நிறம் பசியது ஆயினும் - பசிய நிறமுடையதாயிருர்தாலும், இடை - சடைபானது, அகத்து - தனதுஉள்ளிடத்தில், ஈரம் இல் ஆகும் - ஈரமில்லாததாகும்; (அதுபோல), —நிறையெரு செல்வத்து நின்றக்கடைத்தும் - நிறைர்துள்ள பெரிய செல்வத்தில் இருர்தாலும், அறை பெரு கள் அன்ஞர் - பாறையாகிய பெரிய நெஞ்சம்போன்றவர்களே [மனமிளகுதலில்லாதவரை]. உடைத்து - உடையதாயிருக்கின்றது. (இல்பொருளகம்); (எ - று.)

எப்பொழுதும் தண்ணீரிற் கிடந்தாலும் உள்ளீரமில்லாதசடைபோல எப்பொழுதும் செல்வத்திற் பழகினாலும் இளகுதலில்லாததன்னெஞ்ச முடையமூடர் இவ்வுலகத்திற் பலர் உண்டு என்பது கருத்து. எடுத்துக் காட்டுவமையணி.

மனத்தில் ஈரமாவது-இரப்பவர்க்கு ஈதல் முதலியவற்றிற்குக் காரண மான தயைதாக்ஷிணியம். திரும - அசைநிலை; இனி, முன்னிலைப்பன்மை வினைமுற்றாய், நீர்அறியும் என்றுமாம். நிறைப்பெருஞ்செல்வம்-இனி வேண் டாமென்று திருப்பிப்பெறுதற்குக் காரணமான மிக்க செல்வம்; வினைத்தொ கையில் வலியியல்பாகவேண்டியது, எதனை நயம் நோக்கி நிறைப்பெரு எனவலிமிக்கதென்க. இனி, முதனிலைத்தொழிற்பெயராக நிறைதலேயுடை ய பெருஞ்செல்வ மெனினுமாம். அறை - கற்பாறை.

"வைகலு நீருட் கிடப்பினுங் கல்லிற்கு, மெல்லென்றல் சால வரிதாகு மஃதேபோல், வைகலு நல்லறங் கேட்பினுங் கீழ்மக்குக், கல்லினும் வல் லெண்ணு மெஞ்சு" என்ற அறநெறிக் காஞ்சியோடு ஒத்த வாய்பாடுடையது, இச்செய்யுள். (கூ)

## ஏழாவது

# பன் னெறி யியல்.

அஃதாவது - ஒன்றோடொன்று சம்பந்தமில்லாத பலவகைப்பட்ட நீதிகளோச்சொல்லும் இயல் என்ற பொருள். பல + நெறி = பன்னெறி; பல என்பது பிறிதுவர அகரம் கெட்டது. இந்நூலை அதிகாரவடைவுசெய்த பதுமனார் பத்தச்செய்யுள்வீதம் கொண்ட அதிகாரங்களின் மேற்பட்ட செய்யுள்களே யெடுத்துத் தனியே ஓரதிகாரமாக்கிப் பொருட்பாலின் இறு திபில் வைத்தனரென்க. இந்த ஓர் அதிகாரம்தானே ஒரியலானமை அறிக.

## கூ எ - ஆம் அதிகாரம்.—பன்னெறி.

இதன் பொருள் முதலியன மூற்கூறியவாற்றால் விளங்கும்.

கூசூக. மழைதினைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பா
யிழைவினைக்கு நின்றிமைப்பி னென்னும்—விழைதக்க
மாண்ட மனையாளோ டில்லாதா னில்லகங்
காண்டற் கரிதோர் காடு.

(இ - ள்.) மழை தினைக்கும் மாடம்ஆய் - மேகம் தவறும்படியான உய ரிசையுடையதாய், மாண்பு அமைந்த காப்பு ஆய் - சிறப்புப்பொருந்திய கா வலை யுடையதாய், இழை வினைக்கு நின்ற இமைப்பின்-ஆபரணங்கள் விளக் குப்போல நிலைபெற்ற வினையினையும்,—விழை தக்க - விரும்பத்தக்க, மா ண்ட மனையாளோ - (நற்குணங்களால்) மாட்சிமைப்பட்ட மனைவியை, இல்

லாதான் - பெற்றிலாதவனது, இல்லகம் - வீடானது,—என் ஆம்-என்ன பயனுடையதாம்? (அது), காண்டற்கு அரியது ஓர் காடு-கண்களாற் காண்பதற்குக்கூடாத [மிகக்கொடிய] ஒருகாடுபோலும்; (எ று.)

எவ்வளவு செல்வச்சிறப்புடையதாயிறும் நல்லமனையாளில்லாத வீடு நிறைந்த பயன்படாத என்பதாம்.

மனைநிலைக்குமாடம்—மேகத்திற்கும் மாடத்திற்கும் சம்பந்தமில்லாதிருக்கச்சம்பந்தக்கற்பித்தக்கறியது, தொடர்புயர்வுநவிற்சியணி;இதனை வடநூலார் ஸம்பந்நாதிசயோக்தி யென்பர். இது, மாடத்தின் உயர்வை வினக்கும்.

இங்கு 'மாடம்' என்றது, மேல்நிலை [உபரிகை] யைக் குறிக்கும் மாண்பமைந்த காப்பு - கள்ளர்முதலியோர் உட்புகமுடியாதபடி உறுதியாகக் காவல் செய்யப்படுதல் இழைவினக்குறின்று இமைத்தல் - செல்வச்சிறப்பைக் குறிக்கும். இழை - இரத்தினக்களைழத்துச் செய்யப்படுவதென ஆபரணத்திற்குக்காரணக்குறி. இனி, இழைவினக்கு றினறு இமைப்பின் என்பதற்கு-நல்லிரிகளினுலாயை வினக்குக்கள் எப்பொழுதும் பிரகாசித்தாலும் என்ற பொருள் கூறுவதிற் றெப்பின்மை யறிக. வினக்குக்கள் பிரகாசிப்பது, வீட்டிற்கு மக்களக்குறி யென்பர். மனையாள் நற்குண நற்செய்கையில்லாதவளாயின் உறவினர் விருந்தினர் முதலியோர் வந்துசேர்தற்கு இடமில்லையாதலால், அவ்வீடு, மிகக்கொடிய காடுபோன்றதாகு மென்க.

"மனைமாட்சி யில்லாக்க ணில்லாயின் வாழ்க்கை, யெனைமாட்சித் தாயினுமில்", "இல்லதெ னில்லவண் மாண்பாளு ளுள்ளதெ, னில்லவண் மாணக்கடை", "இல்லா னகத்திருக்க லில்லாத தொன்றில்லை, யல்லாளு மில்லாளே யாமாயி - னில்லாள், வலிகெடுத்த மாற்ற முரைக்குமே லல்லில், புலி கிடந்த தூறுய் விடும்"என்னுஞ்செய்யுள்கள், இங்கு ஒப்பு நோக்கத்தக்கன.

கூகூஉ. வழுக்கெனைத்து மில்லாத வாள்வாய்க் கிடக்கை
மிழுக்கினைத் தாம்பெரு மாயி—னிழுக்கெனைத்துஞ்
செய்குறுப் பாணி சிறிதேயச் சின்மொழியார்
கையுறுப் பாணி பெரிது.

(இ - ள்.) (மகளிர்),—வழுக்கு எனைத்தும் இல்லாத வாள்வாய் கிடக்கை - குற்றம் சிறிதுமில்லாத வாளின் காவலி லிருக்கும், இழுக்கினை தாம் பெரியர் ஆயின் (உம்) - (சற்பொழுக்கத்தினின்று) தவறுதலேயர் தாம்பெரு தவரானலும்,—அல்லெமொழியார்-இனிமையாகப்பேசுஞ்சொற்களையுடைய அம்மகளிர், இழுக்கு எனைத்தும் - றெருகுற்றத்தையாயினும், செய்குறு செய்யாமல் தம்மைப்பாதுகாத்த, பாணி - காலம், சிறிதே - சிறியதேயாம்; கை உரு பாணி-நல்லொழுக்கத்தைக் கைக்கொள்ளாத [சற்பழித்த] காலமோ, பெரிது - மிகப்பெரியதேயாம்; (எ - று.)

இது, பெரும்பான்மையாக மகளிரியற்கை கூறியபடி. இயற்கையிற் நற்பொழுக்கமில்லாத மகளிரைக் கடுங்காவலில்லைவத்தாலும் அவர்கள்

பெரும்பாலும் இழிவானகாரியமனேயே செய்வர் என்பதாம்; "மைகாக்கு காப்பெவன்செய்யும் மகளிர், நிறைகாக்குங காப்பே தலை" என்னும் நீநூக்குறளிலும்.

வாட்காலவாலாவது-வாளாயுதத்தைக் கையிலேந்தியவாளளாற் காக்கப் படுதல், வாள்போன்ற கொடிய காவ லெனினுமாம். உம் - உயர்வுசிறப்பு; இரண்டாமடியில் அவவுமமையக கூட்டிக்கொள்க அவவும்மை - மகளிர் காவல்காகப்பட்சே சிறிது குற்றஞசெய்தற்கும் இடமில்லையாயினும் அவா மனம் நிலையிறி செலலுதலே பெரும்பானமையென்பதை விளகினின்றது 'இழுகினேதாம பெறுவராயின்' எனறு பாடமோதுவாரு முளா. அப்பொழுது, மகளிர கடுகாவலிற கிடகதும சிறிது குற்றஞசெயவாயின், கற்பிலிதலறிய காலம பெரிய தாகவும அவவாறு தவறுத காலம் சிறியதா சவும் ஆயவிடமெனறு கருதுதல கொளக 'இழுகு' எனறது, சுறபினினறு தவறுதலே பாணி - பொழுது, "வேலையே மையஞ செவலி யேல்லையே பொழுது பாணி, காலெகொனபதமே போழது, காலப்பெய ரீரைக்காரும்" எனபது, நிகண்டு. (உ)

கூகூகூ எறிவெண் றெதிர்நிறபாள கூறறஞ சிறுகாலே
யடடில புகாதா ளருமபினி— யட்டதணி
யுணடி யுதவாதா ளிலவாழபே யிமமூவர்
கொணடாணகொலலும படை.

(இ - ள்.) எறி எனறு எதிர் நிறபாள-(தனறு கணவன எனகொணட போது 'எனனே' அடி.' எனற சொலலி எதிரதநிறபவன், கூறறம -(அவ னுககு இறநியைத்தரும) யமனபோலவாள,சிற காலே உதயகாலத்தில,அட்டில புகாதான-மடைபபளளியில (சமையலசெயய) நுழையாதவன, அரும் பினி-(மருநதினுல தணிதறகு) முடியாத கோயபோலவான, அட்டதனே உணடி உதவாதாள தானசமைதத பொருளகனே உணவாகக (கணவனுககு) இடாமல தானே உணபவன, இல வாழபேய - வீட்டில வசிகினைற பேய போல வாள, இ மூவா - இநத மூவரும, கொணடாணே கொலலும படை - (தமமைக) கொணட கணவரை உயிராலகும ஆயுதம போன்றவராவா.

கணவன கோபிதது எதாகிலும சொனனுல் எதிரதுநிற்பதம, உண விறகு உரிய காலத்தில சமைகக்தொடங்காமையும, கணவன விருமபிய போது உண விடாமையு ம, அககணவனேக கொலவதறகு ஒபபாகுமென பது கருதது.

"கூறறமே, யிலலிருநது நீவகொழுகுவாள" எனறவாறு தனது நீக குணதநினுல கணவன ஒழுகி உயிரொழிதறகு காரணமாதலபறறி அப் படிபபடட மனிவியை 'கூறறம' எனறும, காலமறிநது உணவிடாமையால அவனுக்கு வியாதிகோதறகுக காரணமாதலபறறி அவளே 'அருமபிணி' எனறும, கணவன பசியை நோககாமல தானே உணபதிபறறி அவளே பேய' எனறும உருவகப் படுதறகுகூறினா அததையை மனிவியைப் பேயாக உருவகளுசெயதது, "பேயபபிறபபிற பெரும்பசியும" எனறவாறு பிறாபஜநோகாமல தன பசியையே நோககுங தனமையனெனறு குறித தறகு. காடடில நிரியும பெயினும வேறுபாடு தோனற, 'இலவாழபேய' எனறா இதனையை மூவராலும கணவரது உயிர வருநது மாதலால், அவ ரை 'கொணடாணேகொலலுமபடை' எனறே கூறினா.

தொகை-உதயகாலம்; "சிற்றஞ் சிறகாலே" என்றார் பெரியாரும். மூன்று மடியின் ஈற்றில் முற்றும்மை கூட்டுக. அட்டில்-அட்டலில் என்பதன் தொகுத்தல். அட்ட இல்-சமையல்செய்புமிடம். அட்டதனை உண்டி உதவாதாள் என்பதற்கு - தான் சமைத்ததை உண் என்று இடாதவள் என்ற பொருளைப்பிறிதுமாம்; உண்டி - உண்ணுதி; முன்னிலையொருமைமுற்று. (சு)

சுசுஅ. கடியெனக் கேட்டுங் கடியான் வெடிபட
வார்ப்பது கேட்டு மதுதெளியான்—பேர்த்துமோ
ரிற்கொண் டினிதூ மேமுறுத லென்பவே
கற்கொண் டெறியுந தவறு.

(இ - ன்.) (ஒருவன்),—கடி என கேட்டும் - ('இல்லாழ்க்கையை) நீக்கி விடு' என்று (பெரியோர்) சொல்லக்கேட்டும், கடியான் - நீக்காதவனும்,—வெடிபட - (தலை) வெடித்துப்போம்படி, ஓர்ப்பது - (சாப்பறை டொண் டொண் என்று) ஒலிப்பதை, கேட்டும் - கேட்டபிறகும், அது தெளியான் - இல்வாழ்க்கை இத்தன்மையதெனத் தெரிந்துகொள்ளாதவனும்,—பேர்த்தும் ஓர் இல் கொண்டு - மறுபடியும் ஒரு மனையாளைக் கட்டிக்கொண்டு, இனிது இருஉம் - சுகதோஷமாயிருக்கின்ற, ஏமுறுதல் - மயக்கமானது,—கல் கொண்டு எறியும் தவறு - கல்லையெடுத்துத் தன்மேல் தானே எறிந்து கொள்ளும்குற்றம்போல்வதாகும்,என்ப-என்று கூறுவர்,(அறிவுடையோர்).

நற்குணங்களும் புத்திரபாக்கியமும் இல்லாதிருந்தாலும் மனைவியை விடக்கூடாதாதலாலும் மணஞ்செய்தபின் இல்லாழ்க்கையிற் பலதுன்பங்களுண்டாதலாலும், இனமையிலே அவ்வில்லாழ்க்கையை விட்டுத் துறவறம் பூண்பாயென்ற பெரியோர் நற்புத்திசொல்லவும் விடாமல், ஒரு மனைவி இறந்துபோனபிறகு யாக்கை நிலைமையையும் இல்லாழ்க்கையிற் றிதிம் இன்பமில்லாமையையும் பிரதியக்ஷமாகக்கண்டும் மனந்தெளியாதவனுக்கு மற்றொருத்தியை மணஞ்செய்துகொண்டு மகிழ்ந்திருப்பது, தன்னைத் தானே கல்லாலெறித்துகொள்வது போன்ற பெருங்குற்றமாகுமென்பதாம். உவமையால், தவருமல் தனக்குத்தானே நாசத்தை வீலைவித்துக்கொள்வ னென்பது பெறப்படும்.

கடி—கீழ்-துறவு ; சு ஆஞ் செய்யுளிற் கூறியதைக் காண்க.வெடிபட-அச்சமுண்டாக எனினுமாம். ஓர்ப்பது - இங்கு சாப்பறையின் ஒசை. இருஉம் - இருவும் என்னும் பெயரெச்சம் விகாரப்பட்ட சொல்லிசையள பெடை. ஏமுறுதல்=ஏமமுறுதல்; இன்பமில்லாததை இன்பமுள்ளதுபோலக்கருதி மயங்குதல். (சு)

சுசுடு. தலையே தவமுயன்று வாழ்த லொருவர்க்
கிடையே யினியார்கட் டங்கல்—கடையே
புணராதென் றெண்ணிப் பொருணசையாற் றம்மை
யுணராரின் சென்று நில்லை.

(இ - ன்.) ஒருவர்க்கு—,—தவம் முயன்று வாழ்தல்-தவத்திற்கு உரிய ஒழுக்கங்களில் முயற்சிசெய்துஉயிர்வாழ்வது, தலையே-முதன்மையானசெய்

கையே [உத்தமமாகும], இனியாராகண் தங்கல் - நற்குணாற்செய்கைளே யுடைய மனிஷியருடன கூடிவாழ்தல [இல்லறவாழ்கையிற் பொருந்து தல],இடையே நடுத்தரமானது [மத்தியமமாகும],புணராதஎன்றவண்ணி- இடையாதெனறு நினைத்தாம, பொருளா ராசையால - செலவுதநினிடதது ஆசையிஞல, தமமை உணராபின - தமது குடிபபிறபபு முதலியவற்றை அறியாதவராகளின பினனே, னெனறு நீல - போய நிறபது, கடையே - கடைபபட்டதே [அதமமாகும்] (எ - று)

மனிதா திறவறமபூணடி தவஞசெயது வாழவது முகியமானது, இலலியாயின கறபுடைமனைவியோடு இலலறதநில வாழவாவதுவேண்டும, இவவிரணடுமிலலாமல பொருளாசையிஞல லோபிகளோப பினதொடாரது யாசிபபது மிகவும இழிவு எனபது, கருத்து

இனியாராகண தங்கல இடையேனபதறகு - நறகுணமுடையாரோடு கூடி வாழ்தலெனறு உரைபபாரு முளா "புலலா, அகமபுகுமி ணுணணுமி னெனபவாமாட டலலான, முகமபுகுத லாறறுமோ மேல," "அருத்தஞ செறிகு மறிவிலாபினசென, நெருதநிறைஞரி நிலலாதம மேல"எனற கீழகூறியுளளதஞல, உதாரகுணமுடையோரிடதது இரபபதால்லதென் றும, லோபிகளிடதது இரபபது நீயதெனறும அறிக. (இ)

ஈ.ஊ.ஊ கலலாக கழிபபா தலேபாபா கலலவை
துவவாக கழிபப ரிடைகள கடைக
ளினிதுணணே மாரட பெறேமையா மென்னு
முனிவினறு கணபா டிலா

(இ - ன) தலேயாரா-தலேமையான அறிவையுடையோர [உத்தமர்], கல்லா - (ஞானனூலகளோ) கறறு, கழிபபா - காலகழிபபா, இடைகள் - நடுவாயினோர [மத்தியமர], கலலவை - தருமவழியாறறிதத பொருள் களே, துவவா - அறுபவித்தகொணடி, கழிபபா - காலகழிபபா, கடைக கள - கீழாயினோர [அதமர], 'யாம நாம, இனித உணணேம - இனிமை யான உணவுகளே உணணபபெறறிலோம ஆர பெறேம - (செலவுதை) நிரமபபெறறிலோம,' எனனும - எனனருகுதிகின்ற, முனிவினஞல-வெறுப் பினல, கணபாடு இலா-(இரவிலும) அசகமிலலாமல வருதலா, (எ - று)

தத்துவஞானத்திறகு உரிய நூலகளோக கறறும பொழுது போகுவது உத்தமாதொழில, ஊழலினேயாற கிடைத்தமடடில திருபதியாயச சுகத தை யனுபவிபபது மத்தியமா தொழில, எவவளவு கிடைத்தாலும திருப்தி யிலலாமல செலவதறிகாக ஏக்கமகொணடு தலேவது அதமா தொழில எனபதாம.

கலலா, துவவா - செயயா எனனும வாயபாட்டி உடனபாட்டி இறந்த கால வினையெசசம. 'உணணேம, ஆரபபெறேம' எனன - வெறுப்புக குறிபபன. கணபாடி - கணபடி எனனும முதனிலே திரிந்த தொழிறபெயர்; ணபதேல - கணணுறகுதல. (ஈ)

நூஙூள. செந்நெல்லா லாய செழுமுனை மற்றுமச்
செந்நெல்லே யாகி விளைதலா —லக்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய ஓர
மகனறிவு தந்தை யறிவு.

(இ - ன்.) செந்நெல்லால் ஆய செழு முனை - செந்நெற்களாலுண்டா கிய செழிப்பான முனைகள், மற்றும் - பின்னும், அ செந்நெல்லே ஆகி விளைதலால் - அத்தச்செந்நெற்பயிராகவே ஆய் மேன்மேல் விளைதலினால்,—அ நெல் - அப்படிப்பட்ட செந்நெற்பயிர்கள், வயல் நிறைய காய்க்கும்-கழனி கள் நிறையும்படி விளைகின்ற, வளம்-செழிப்பையுடைய, வயல்-வயல்களாற் [மருதநிலத்தால்] சூழப்பட்ட, ஊர் - ஊர்களேயுடைய பாண்டியராசனே!— தந்தை அறிவு - தகப்பனது அறிவே, மகன் அறிவு - மகனது அறிவாகும்.

செந்நெல்லின் முளையினால் அந்நெல்லே விளைவதுபோல, ஒருகுலத் தில் தந்தை நற்புத்தியுடையனாயிருந்தால் அவன்மகனுக்கும் அவ்வாறேநற் புத்திபுண்டாகு மென்பதாம். தந்தையறிவே மகனது அறிவென்ற அநுமா னித்தி அறியப்படி மென்க. மகனது அறிவு இத்தகையதென்ற தந்தையி னறிவைக்கொண்டு உய்த்துணரப்படுதலால், இது - ஏதுவணி.

"தந்தையே மைந்தனைப் பிறக்கிறுன்", "மகனுரைக்குந் தந்தைதாத் தை" என்பன இங்கு கோக்கத்தக்கன. "கோக்கியறிகிலாத் தம்முறுப்புக் கண்ணுடி, நோக்கி யறிய வதுவேபோ-லுேக்கி, முகனறிவார் முன்ன மறிய வதுவே, மகனறிவு தந்தை யறிவு"என்ற பழமொழிச்செய்யுளிலும் இச்செய் யுளின் ஈற்றடியபின் துள்ளது.

செந்நெல் - சாலியென்னுஞ் சிறந்ததொரு சாதி நெல். முளை-தொழி லாகுபெயர். விளைதலால் என்பதில் துள்ள 'ஆல்' உருபு - ஞாபகவேதுப் பொருளில் வந்தது. (எ)

நூஙூஅ. உடைப்பெருஞ் செல்வருஞ் சான்றேருங் கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களுங் கீழும் பெருகிக்
கடைக்கா லுலக்கண்ண தாகிக் குடைக்கால்போற்
கீழ்மேலாய் நிற்கு முலகு.

(இ - ன்.) உடை பெருஞ்செல்வரும் - தொன்றுதொட்டுவந்த பெருஞ் செல்வமுடையவர்களும், சான்றேரும் - (கல்வியறிவு நிறைந்த) பெரியவர் களும், கெட்டு - (தங்கள்தங்களது நிலைமை மாறிப்போய், புடை பெண் டிர் மக்களும்-(இழிகுணமுடைய) வைப்பாட்டிகளின் பிள்ளைகளும், கீழும்- (குலம் அறிவு குணம் முதலியவற்றிற் குறைந்த) கீழ்மக்களும், பெருகி - (செல்வத்தினுல்) விருத்தியடைந்து,—கடைக்கால் நிலைக்கண்ணது ஆகி - சாற்புறத்தில் விருக்கவேண்டியது நிலப்புறத்தில் விருப்பதாகி, (இவ்வாறு ஆதலினுல்),—குடை கால்போல் - குடையினது காம்புபோல, உலகு-உலக மானது, கீழ் மேல் ஆய்நிற்கும் - கீழ்மையடைதற்கு உரியது மேன்மை யுடையதாக நிற்கும் தன்மையுடையதாகும்; (எ - து.)

பரம்பரையாகப் பெருஞ்செல்வமுடையவர்களும் இயற்கை சற்குண முடைய பெரியவர்களும் தமது பெருமை கெட்டுப்போதலாலும், குலத்தி னாலும் குணத்தினாலும் மிகத் தாழ்ந்தவர்கள் பெருஞ்செல்வம்பெற்றுப் பெருமையுடன் வாழ்தலாலும், 'இப்படியும் மாறிவிடுகின்றதே!' என உலக வியற்கை நோக்கிப் பிறர்த அநுதாபத்தால் எடுத்துக்கூறியவாறு. "புணர் கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே, புணர்வதுடையா ரிருப்ப - வுணர்விலா, வட்டேம் வழுதிணையும் போல்வாரும் வாழ்வரே, பட்டோர் தனு முமித்து" என்று மேற் சுன்றியில் செல்வத்த வர்தன்னசெய்யுளோடு இதனை ஒப்பிக்க. குடைக்காம்பு கவிழ்த்துப் பிடிக்கப்படுவதை முற்காலத்து வழக் கம்போலும்.

கெட்டு, பெருமி, ஆகி இவை-காரணப்பொருளனவாய் வந்த செயவெ னெச்சங்களின் திரிபுகள். உலகம் மேழ்மேலாவதற்கு இவையே காரணம். புடைப்பெண்டிர் - பொருள்கொடுப்பார்க்கல் ;சாரும் பெண்களெனக் காரணப்பொருளது. கடைக்கால் - அங்கு இருத்தற்குரிய பொருளுக்கு இடவாகுபெயர். (அ)

ஈ.கக. இனியார் தந் நெஞ்சத்து நோயுரைப்ப வர்நோய்
தனியாத வுள்ள முடையார்—மணிவரன் றி
வீழு மருவி வீறன்மலி நன்னட
வாழ்வின் வலரபாய்த னன்று.

(இ - ன்.) மணி வரன்றி - இரத்தினங்களே வாரிக்கொண்டு, வீழும் - வீழுகின்ற, அருவி - நீரோடைகளோடுடைய, வீறல் மலை - வெற்றிபெற்ற [மிகச் சிறந்த] மலைகளோடுடைய, நல் நாட - நல்ல பாண்டியாரட்டாசனே! —இனியார் - நல்ல நெஞ்சர், தம் நெஞ்சத்து நோய் உரைப்ப - தமது மனத்திலுள்ள வருத்தத்தை எடுத்துக்கூறியபிறகும், அ நோய் தணியாத - அந்த வருத்தத்தை நீக்கமாட்டாத, உள்ளம் உடையார்-(வலிய) மனமுடை யவர்கள், வாழ்வின் - உயிர்வாழ்வதைக்காட்டிலும், வரைபாய்தல்-மலையின் மீது ஏறி விழுந்து உயிர்விடுதல், நன்று - நல்லதாம்; (எ - று.)

நல்ல நெஞ்சுதாது மனத்தின்பத்தை அவர் கூறமுன்னமே குறிப்பறி ந்து "உடுக்கையிழந்தவன் கைபோல வாங்கே, யிடுக்கண்களேவதாம் சட்பு" என்றபடி நீக்கி உதவவேண்டியிருக்க, அவர் எடுத்துக் கூறியபிறகும் நீக்க மாட்டாத வலிய மனமுடையவர் உயிர்வாழாதி வலுவில் உயிர்விடுதலே நல்லது என்பது கருத்து. கண்பரத தின்பங்களேத் தணியாமல் உயிர்வாழ் தலிற் பழிபாவங்கள் பெருகுதலால், அதனினும் உயிர்துறத்தலே நல்லதா யிற்று. தம்மால் அத்தின்பத்தை நீக்கக்கூடினும் கூடாவிடினும் அதில் மனஞ்செல்லாத பாவிக னென்றற்கு, 'தணியாதவுள்ளமுடையார்' என்றார். 'இனியார் தந்நெஞ்சத்து நோயுரைப்ப' என்றதனால், "தோழரேடு மேழை மைபேசேல்" என்ற நீலே கடந்த பெருந்தின்பத்தைக் குறித்தவாறு. (க)

ஈ.எ. புதுப்புனலும் பூங்குழையார் கட்பு மிரண்டும்
வீதுப்பற நாடின வேறில்ல—புதுப்புனலும்
மாரி யறவே யறமே யவரன்பும்
வாரி யறவே யதும்.

(இ - ள்.) புதி புனலும் - புதிய நீர்வெள்ளமும், பூ குழையார் சுட்டும்- அழகிய காதணியையுடைய வேசையர்களது சிரோகமும், இரண்டும்-இரண்டையும், விதப்பு அற நாடின் - விசாரில்லாமல் [நிதானமாக] ஆராய்ந்து பார்த்தால், வேறஅல்ல-வேறுபடுவனவல்ல [இரண்டும் ஒரு தன்மையுடையனவே]; (எவ்வாறெனின்,—) புது புனல் - புதிய நீர்வெள்ளம், மாரி அறமழை நீங்கினால், அறும் - ஒழியும்; அவர் அன்பும் - அவ்வேசையரது சிரோகமும், வாரி அற - பொருளின் வருவாய் நீங்கினால், அறும் - ஒழிந்துபோம்.

மழை அதிகமாகப் பொழியும்போது மிக்குப்பெருகி அது நின்றமாத்திரத்தில் ஒழியும் புதுநீர்ப்பெருக்குப்போல, பொருள் அதிகமாகக் கொடுக்கும்போது அன்புகாட்டி அது குறைத்தமாத்திரத்தில் அன்புகுறையுங் தன்மையுடையவர் வேசையாதலாலும், அப்படிப்பட்ட வஞ்சனைக்குணமுடையவரோடு கூடிப்பழகுதல் வேண்டாமென்பது கருத்தி. எடுத்துக்காட்டுவமையணி. அடுத்த அதிகாரத்தின் முதற்செய்யுளும் இக்கருத்துடையதே.

இனி, விதப்பறநாடின் என்பதற்கு - விருப்பமில்லாமல் ஆராய்ந்தபார்த்தால் என்றும் பொருள்கொள்ளலாம்; ஒருபொருளை ஆராயும்போது அதனிடத்து விருப்புவெறுப்பின்றி ஆராய்ந்தால்தான் உண்மை விளங்கு மென்பது, நூல் துணிபு; "காய்த லுவத்த லகற்றி யொருபொருட்க, ணாய்த லறிவுடையார்க்கண்ணதே - காய்வதன்க, ணுற்றகுணர் தோன்றுதாகு முவப்பதன்கண், குற்றமுந் தோன்றுக் கெமம்," "வாரம்பட்டொழித் லீயஷ நல்லவார், நீரச்சாய்தழி கல்லவுந் நீயவா, மோரும் வையத்தியற்றை" என்பன காண்க.

பொதமகளிரது தன்மையைக் கூறும் இச்செய்யுளை இங்கு வைத்தது இனிவரும் அதிகாரம் இன்னதெனத் தோற்றுவாய்செய்தற்குப் போலும்.

போருட்பால் முற்றுப்பெற்றது.

## மூன்றுவது

# காமத் துப்பால்.

அஃதாவது - பொருளோத் துணைக்காரணமாகவுடையதாய் இம்மையை மாத்திரமே தருந் தன்மையையுடைய காமத்தைக் கூறும் பாகம்; காமமென்பது, ஒருகாலத்திலே ஒருபொருளால் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்னும் ஐம்புலன்களேயும் அனுபவித்தற்கிடமுடைய காமவின்பத்தினை; பலவகைச்சுவைகளுள் இன்பசுவையொன்றனைமாத்திரமே இப்பாலில் மூன்று அதிகாரங்களாலும் மிகுத்துக்கூறுகின்றார்.

இந்தக் காமத்துப்பால் - கூஅ - ஆம் அதிகாரம் இன்பத்தின்பலிய லென்றும், இதனில் இரண்டு அதிகாரங்கள் இன்பப்பயனென்றும் இரண்டு உட்பிரிவுகளையுடையதாய் அமைக்கப்பட்டது; "கடையின்ப வகைதான் கருதினிருவகை, யின்பதின்ப வதிகார மொன்றே, யேனை யின்பவதிகார மிரண்டே" என்ற பழைய உரைச்சூத்திரத்தை உணர்க.

இது, பதமஞரால் வருக்கப்பட்ட பாகுபாடு, சில உரையாசிரியர்கள்-இர் தூலின் ஈற்றபது அதிகாரங்களுள் முதற்பதின்மூன்று அதிகாரங்களே அறத்தப் பாலாகவும், அடுத்த இருபத்தாறு அதிகாரங்களைப் பொருட்பாலாகவும், இறுதியதிகார மொன்றை மாத்திரம் காமத்தப்பாலாகவும் வகுத்தக்கூறியுள்ளார். அகப்பொருட்கிளவித்தறை முதலிரண்டு அதிகாரங்களில் இல்லாமையும், இறுதியதிகாரத்து மாத்திரமே உள்ளமையும் அவர் அவ்வாறு கொண்டதற்குக் காரணமென்பர்.

## முதலாவது

# இன்பதுன்பவியல்.

அஃதாவது - ஒருசார் இன்பத்தையும் ஒருசார் துன்பத்தையும் தருவதாகிய தன்மையைக் கூறும் பிரிவு என்பதாம். இது பொதுமகளிரின் சேர்க்கையாதலால் அவ்விரண்டு தன்மையையுந் தருவதென்பது வெளிப்படை. (இன்பத் துன்பவியல்' என்றும் வழங்குவது உண்டு.) இங்கு ஓர் அதிகாரம் தானே ஓரியலானமை அறிக.

## ஈ.அ - ஆம் அதிகாரம்.—பொதுமகளிர்.

அஃதாவது - தமது கலத்தைப் பொருள்கொடுப்பார்யாவர்க்கும் விற்பதல்லாமல் அதற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரையறையில்லாத மகளிர தியல்பு; அவர் ஒருவர்க்கே வாழ்க்கைப்படாமல் பொருள்கொடுப்பவர்க்கெல்லாம் வாழ்க்கைப்படுதலால், 'பொதுமகளிர்' எனப்பட்டனர். இவரது தன்மையை முன்னிய அதிகாரத்தின் ஈற்றுசெய்யுளில் எடுத்துக்கூறித் தோற்றுவாய் செய்தவதனால், அதிகாரமுறைமையை அறிக.

ஈ.எக. விளக்கொளியும் வேசையர் கட்பு மிரண்டுந்
துளக்கற நாடின் வேறல்லை—விளக்கொளியு
நெய்யற்ற கண்ணே யுறுமே யவரன்புங்
கையற்ற கண்ணே யதும்.

(இ - ள்.) விளக்கு ஒளியும் - விளக்கினது பிரகாசமும், வேசையர் கட்பும் - பொதுமகளிரது அன்பும், இரண்டும் - ஆகிய இரண்டையும், தினக்கு அறநாடின் - சஞ்சலமில்லாமல் ஆராய்ந்துபார்த்தால், வேறு அல்ல-வேறு வகைப் பட்டனவல்ல [இரண்டும்ஒருதன்மையனவே]. (எவ்வாறெனின்,—) விளக்கு ஒளியும்-விளக்கினது பிரகாசமும், நெய் அற்றகண்ணே-நெய் வற்றிய அப்பொழுதே, அதும் - நீங்கும்: அவர் அன்பும்-அத்தப்பொதுமகளிரது அன்பும், கை அற்ற கண்ணே - கையிற் பொருள்கொடுத்தல் குறைந்த பொழுதே, அதும் - நீங்கிவிடும்; (எ - று.)

விளக்கின்பிரகாசம் அதில் விடப்படும் நெய் வற்றியபொழுது நீங்குதல் போலவே, வேசையர்கட்பும் பொருள்வருவாய் அற்றபொழுதே அற்

றுப்போ மென்பதாம். இதவும் மேலைச்செய்யுள் போன்றதே. இதனுல், உன்னுர அன்புபாராட்டாத பொதமகளிரின் போகம் இனியதன்று என் பது, கூறப்பட்டது. 'வேறல்ல' என்பது - காரணம் உன்னவளவே காரியம் கீழே மென்றபடி.

வேளையர்-வேஸ்யா என்பதன்திரிபான வேசையென்பதன் பன்மை. தனக்கு - தனக்கு என்ற முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; தனக்குதல்-சலித்தல். கை என்பது - கைப்பொருளுர்க்கு ஆகுபெயர். (க)

நூஎஉ. அங்கோட் டகலல்கு லாயிழையா ணம்மொடு
செங்கோடு பாய்தமே யென்ருண்மன்—செங்கோட்டின்
மேற்காண மின்மையான் மேவா தொழிந்தாளே
காற்காணுய் காட்டிக் கலுழ்ந்து.

(இ - ள்.) அம் கோடு அகல் அல்குல் ஆய் இழையான் - அழகிய பக் கங்களுயர்ந்து அகன்ற அல்குலேபுடையவளும் ஆராய்ந்தணிந்த ஆபரணங் களேபுடையவளுமான பொதமகன்,—நம்மொடு-நம்மோடுகூட,செம் கோடு பாய்தம் - செம்மையான மலேயுச்சியில் ஏறி அதனினின்றும் (காம் இரு வரும்ஒருசேர) விழுவோம், என்ருன் மன்- என்ற (எம்பிடத்திற் பொருள் பெரும்போது அன்புசாட்டி) உறுதியாகக் கூறினுன்; காணம் இன்மை யால் - (எம்பிடத்திற்) பொருளில்லாமையால், (இப்போது), செம் கோட் டின்மேல் மேலாது - செம்மையான மலேயுச்சியின்மேல் ஏறிவீழ்தற்கு (நம் மூடன்) கூடவராமல், கால் கால்கோய் காட்டி - 'எனதுகாலில் வாதநோய் வந்தனுதலுனல் உடன்வர முடியவில்லே' என்று (பொய்க்காரணஞ் சொல்லிச்) காண்பித்து, கலுழ்ந்து - (பொய்யாகவே) அழுது, ஒழிந்தான் - (எம்முடன்வராது) நீங்கினுன்; (எ - று.)

'நீ மலேமேல்ஏறி வீழ்ந்தாலும் சாலும் உன்னுடன் விழுவேனேயன்றி உன்னேவிட்டு ஒருணமும் உயிர்பிழைத்திரேன்' என்ற என்னிடம் பொ ருள் பெறும்போது அன்புகாட்டி உறுதி கூறிய பொதமகன், இப்போது எனக்கு நேர்ந்த பெரியதொரு ஆபத்தினுல் யான் மலேமேலேறி விழும்படி நேரிட, அப்போதும் அவனேப்பிரிய மனமில்லாமல் அவனோடுவரும்படி நான் அழைத்தபோது, பொருளில்லாமையால், தனது காலில் நோய்வந் ததுகாரணமாக உடன்வரக்கூடவில்லே யென்ற பொய்க்காரணஞ்சொல்லி அழுது என்னேவிட்டு நீங்கிப்போயினுள் என்பதாம். இதனுல், பொதமக ளிரா ஆடவர் மீது உள்ளுரஅன்புபாராட்டாமல் உழுவலன்புடையவர்போல வெளிக்கு நடித்துப் பொருளேயே பிரதானமாகக்கொண்டு வஞ்சித்து அத னேப் பறிப்பரென்பது கூறப்பட்டது. "அன்பின் விழையா பொருள் விழைவு மாய்தொடியா, நின்சொ லிழுக்குத் தரும்" என்னும் நீருக்குறள் இங்கு நோக்கத்தக்கது."காலார வேண்டுமே விதஞ்சொல்லுவா ருண்ணு நான் பிரித்தாற்,சாவேனென்றேயிருந்தொக்கவுண்பார்என்கைதான்வறண்டாற், போய்வாருமென்று கடத்தலேக்கே குட்டும் பூவையர்" என்பதும் காண்க.

செல்வம்பெற்றபோது அவ்வாறுகூறியவன் செல்வமில்லாதபோதுதல நிலிட்டாளென்பதைக் காட்டினுமாயின்;'மன்'என்னும் இடைசசொல்-ஒழி

**மிகைப்பொருளது; அசையுமாம். பாய்தும், முன்னிலையை உளப்படுத்திய தன்மைப்பன்மைமுற்று; நீயும் காணும் என்ன: இதில், தம் - காலல்காட்டும் விகுதி. இனி, மூன்றுமடிக்கு - மலியின்மீது பொருள்கிடையாமையால் உடன்வராமல் உபேக்ஷித்தானேயன்றி அங்கும் பொருள்கிடைக்குமாயின் உபேக்ஷியாது உடன்வருவனென்று கூறுதலு மொன்று. 'கால் சோர்' என்றதில், கால் என்றது - தனது பரியாயாகமமாயே வாயுவென்னுஞ் சொல்லைக் குறிப்பிட, அது - தனது பொருள்களில் ஒன்றான வாத மென்னும் சோயை உணர்த்திநிற்றல்; இது - லக்ஷித்தலக்ஷணை; (கம்பராமாயணத்தில் கேகயராஜவம்சத்தை "மயின்முறைக்குலம்" என்றதும், நீலகேசிநீதாமணியில் புத்திசேனனை "திங்கள்விரிவியபெயரினன்" என்றதும் இத்தன்மையனவே.)**

கூ.எகூ. அங்கண் விசும்பி னமரர் தொழப்படுஞ்
செங்கண்மா லாயினு மாகமன்—றங்கைக்
கொடுப்பதோன் றில்லாரைக் கொய்தளிர் வண்ணர்
விடுப்பர்தங் கையாற் றுழுது.

(இ - ள்.) அம் கண் விசும்பின் - அழகிய இடமகன்ற வானுலகத்திலுள்ள, அமரர் - தேவர்களால், தொழப்படும் - வணங்கப்படுகின்ற, செங்கண் மால் ஆயினும் ஆக - சிவந்தகண்களையுடைய திருமாலேயானாலும் ஆகட்டும், தம் கை கொடுப்பது ஒன்று இல்லாரை - தமது கையிற் கொக்கும்படியான பொருள் சிறிதுமில்லாதவரை, கொய் தளிர் அன்னர்-கொய்யத்தக்க தளிர்போன்ற உடம்பின் நிறத்தையுடைய பொதுமகளிர், தம் கையால் தொழுது - தமதுகைகளாற் கும்பிட்டு வணங்கி, விடுப்பர் - அனுப்பிவிடுவார்கள்; (எ - று.)

பிக்ஷைபெருமை அழகு முதலிய குணங்கள் வாய்ந்தவராயினும் பொருளில்லாதவரைப் பொதுமகளிர் 'நீங்கள் வருதற்கு இது சமயமன்று' என்று போக்குச சொல்லி அனுப்பிவிடுவார்களே மன்றி அவரைச சேரா தென்பது கருத்து. இதனால், கொடுப்பாரை விரும்பாமல் பொருளையே விரும்பும் பொதுமகளிரது நிரபேக்ஷமையை எடுத்துக்காட்டினார்.

'அமரர் தொழப்படும்' 'செங்கண்' என்ற அடைமொழிகள் கொடுத்துக் கூறியவதனால், திருமாலுக்கு மேன்மையும் அழகுமிருக்கியும் கூறியவாறும். இனி, மால் என்பதற்கு - இந்திரனென்று பொருள் கூறுவாருமுளர். அமரர் - அசுரரை முண்டகளால் மரணமில்லாதவ ரெனத் தேவர்க்குக் காரணக்குறி. மன் - அசை. தம்மைக்கொடுப்பது என்பதற்கு - தமது கையாற் கொடுக்கும் பொருளென்று கூறினும் பொருந்தும். (டை).

கூ.எசு. ஆணமி னெஞ்சத் தணிநீலக் கண்ணர்க்குக்
காணமில் லாதார் கடுவனீயர்—காணவே
செக்கூர்ந்து கொண்டாருஞ் செய்த பொருளுடையர
ரக்காரு மன்னு ரவர்க்கு.

(இ - ள்.) காண - ஆலோசித்துப்பார்க்குமிடத்து,—ஆணம் இல்லெஞ்சத்து - அன்பில்லாத மனத்தையுடைய, அணி நீலம் கண்ணர்க்கு-அழகிய

கருங்குவளைமலர் போன்ற கண்களையுடைய பொதுமகளிர்க்கு, காணம் இல்லாதார் - பொருளில்லாதவர், (அழகுமுதலியவற்றும் நெற்றோராயினும்), கடை அனையர்-விஷம்போலப் பிரியமில்லாதவராவர்; செக்கு ஊர்ந்து கொண்டாரும் - செக்கு ஆடுதலாகிய இழிதொழிலுடையவராளும், செய்த பொருள் உடையார் - தேடிய செல்வமுடையவரே, அவர்க்கு - அப் பொதுமகளிர்க்கு, அக்காரம் அன்னர் - சர்க்கரைபோலப் பிரியமுடையவராவர்; (எ - று.)

பொருளொன்றினையே முக்கியமாகக்கொள்ளுர் தன்மைய ராதலுற்றிப் பொதுமகளிர் பொருளில்லாதாரை விஷத்துக்கொப்பாகவும், பொருளுள்ளவரைச் சர்க்கரைக் கொப்பாகவும் பார்ப்ப ராதலால், அவரது போகம் வெறுக்கத் தக்கது என்பதாம்.

"இழிபவ ருயர்ந்தோர் மூத்தோ ரினையவர் கழியாகோயாற், கழிபவர் யாவரேனுங் கண்ணிலேப்பட்டு நெஞ்ச, மழிபவர் பொருள்கொண் டென்னுக் கெண்ணேப்போ னெந்துகாட்டிப், பழிபடுபோகம் விற்பார்" எனப் பிறர் கூறியது இங்குப் பின்னிரண்டடிக்கு ஒப்புநோக்கத்தக்கது.

'காண' என்பதை முன்னும் பின்னும் கூட்டிக்கொள்க; இடைநிலேத் தீவகம். இனி, காண என்பதை 'செக்கூர்ந்து கொண்டாரும்' என்பதனேடு இயைத்து, உலகத்தார்யாவரும் காணும்படி செக்கு ஆடுந் தொழில் செய்தவராயினும் என்று பொருள் கூறினும் பொருந்தும். 'செக்கூர்ந்து கொண்டானுஞ் செய்த பொருளுடையார்' என்ற பாடத்திற்கு - செக்கு ஆடியாவது தேடிய பொருளே புடையவ ரென்க. நீலம்-பண்பாகுபெயர். ஆனும்=ஆயினும்; மரூஉ. (சு)

கூஎடு. பாம்பிற் கொருதலே காட்டி யொருதலே
தேம்படு தெண்கயத்து மீன்காட்டு—மாங்கு
மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்ன வெள்ளறி வினர்.

(இ - ன்.) பாம்பிற்கு ஒரு தலே காட்டி-(தன்னேப் பிடிக்கவரும்) பாம்புக்கு ஒருபுறத்தைக் காண்பித்து, ஒரு தலே - மற்றொருபுறத்தை, தேம் படு தென் கயத்து மீன் காட்டும் - இனிமைபொருந்திய தெளிந்த நீரையுடைய தடாகத்திலுள்ள மீனுக்குக் காண்பிக்கும் தன்மையையுடைய, மலங்கு அன்ன - மீலாங்குமீனேப்போன்ற, செய்கை - (பலரிடத்தும் அன்புகாட்டும்) தொழிலேயுடைய, மகளிர் - பொதுமகளிரது, தோள் - தோள்களே, விலங்கு அன்ன வென் அறிவினர் - மிருகத்தை யொத்த பகுத்தறிவில்லாத மூடர்கள், சேர்வார் - சேர்வார்கள்; (எ - று.)

தன்னேப்பிடிக்கவரும் பாம்புக்கும் மீனுக்கும் பிடிபடக்கூடு மென்னும் ஆசையைக் காட்டி ஒன்றுக்கும் அகப்படாமல் தப்பித்துக்கொண்டு செல்லுமிவ விலாங்குமீனேப்போலப் பலர்க்கும் ஆசைகாட்டி மயக்கும் பொதுமகளிரை அறிவில்லாதவர் சேர்வரேயன்றி அறிவுடையார் சேரமாட்டா ரென்பதாம். பொதுமகளிர்க்கு மலங்குமீன் தொழில்பற்றிய உவமம்.

'மலங்கண்ண செய்கை' என்பது-அவரவர்க்கு வேற்றுமை காட்டாமல் இனமாகச்சேர்த்து நின்று அன்பு காட்டுதல். அவர்கள் செய்யும் வஞ்சனை தெரிக்தால் அவரது இன்பம் வெறுக்கப்படு மென்பது, குறிப்பு. அவ்வஞ்சனையை அறியமாட்டாமல் அவர்களதோள் சேர்பவனை'வெள்ள றிவிஞர்'என்றார். வெள்அறிவு-சாமமற்ற அறிவு. வெண்மையென்பது சாமின்மையென்னும் பொருளதாய், அறிவுமுதிராமைமேல் நிற்பதை, "வெண்மையெனப்படுவது யாதெனி ஞெண்மை, யுடையம்யா மென்னுஞ் செருக்கு" எனத் திருக்குறளிலும், "வெண்மையுடையார் விழுச்செல்வ மெய்தியக்கால்" என இந்நூலிலும், "வெண்மையில்லே பல்கேள்வி மேவலால்", "வெள்ளியையாதல் விளம்பினே" எனக் கம்பராமாயணத்திலும் காண்க. வெள்ளறிவு என்றல் வழக்கு.

மீன்காட்டும் - கான்காம் வேற்றுமைத்தொகை. ஆல்கு-அசை (இ)

கூ.எகூ. பொத்தநூற் கல்லும் புணர்பிரியா வன்றிலும்போ
னித்தலு நம்மைப் பிரியல மென்றுரைத்த
பொற்றெடியும்போர்த்தகர்க்கோடா யிணைஞெஞ்சே
நிற்றியோ போதியோ நீ.

(இ - ள்.) கல் நெஞ்சே - (எனது) கல்ல மனமே!—பொத்த றல் கல்லும் - தினைக்கப்பட்ட [உட்டினையுடைய] நாலிற் கோத்த இரத்தினத்தையும், புணர் பிரியா அன்றிலும்-கூடியிருத்தல் பிரியாத அன்றிற்பறவைகளேயும், போல்-போல, நித்தலும்-எப்பொழுதும், நம்மை பிரியலம்-நம்மையிட்டுப் பிரியமாட்டோம், என்று உரைத்த - என்ற (முன்பெல்லாம்) உறுதி கூறியிருந்த, பொன் தொடியும் - பொன்னிஞலாகிய வளையல்களேயுடைய பொதுமகளும், (இப்போது), போர் தகர் கோடு ஆயினள் - போர்செய்யுந் தன்மையுள்ள ஆட்டுக் கடாவின் கொம்புபோல [மாறுபாடாகிய] குணமுடையவளாயினள்; (அவள் அவ்வாறான பிறகும்), நீ—, நிற்றியோ-(அவளிடத்தில்) நிற்பாயோ? (அல்லது), போதியோ-(என்னுடன்) வருவாயோ? (சொல்); (எ - று.)

நாலும் மணியும் போலவும், இரட்டையாகிய அன்றிற்பறவைகள் போலவும் எப்பொழுதும் இணைபிரியாமலிருப்பேனையல்லது சற்றும் உன்னை விட்டுப் பிரியே னென்று செல்வமுள்ளகாலத்தில் நம்பிக்கைகூறியிருந்த பொதுமகள் செல்வம்வறண்ட இப்பொழுது சண்டைசெய்யும் ஆட்டுக் கடாவின் கொம்பு பிற்பட்டு மூறுக்குடன் வளைந்திருப்பதுபோல முன் சொன்னதற்கு விரோதமாகக் குணமாறிவிட்டாள்; அவள் குணம் நிரித்த பிறகும் அவளுடன் இணங்கி நடப்பது நல்லதன் றென்று ஒருவர் தமது மனத்திற்குநல்லறிவுகூறிய வாய்பாடையதாக இச்செய்யுள் செய்யப்பட்டதென அறிக. வேசையர்வழிச்செல்லாமல் மனத்தை வசப்படுத்தவேண்டுமென்பது, கருத்து. நாலும் மணியும், இரட்டையன்றிப் பறவைகளும் - இணைபிரியாமல் உடனுறைதற்கு உவமம்.

அன்றிலென்பது - ஒருபறவை, அது, எப்பொழுதும் ஆணும் பெண்ணும் இணைபிரியாது கிற்கும். கணப்பொழுது ஒன்றை ஒன்று விட்டுப்பிரிர்தாலும் அத்துயரத்தைப்பொறுமல் ஒன்றையொன்று இரண்டுமுதலாம்

கத்திக்கூலி அதன்பின்பும் தன்தினையைக் கூடாவிடின் உடனே இறந்து படும். இதனை, வடநூலார் க்ரௌஞ்சம் என்பர். தகர்க்கோடாதல் - பின்பு திருகி கிற்றல். இனி, பொத்தனூற்கல் என்பதற்கு கடையும் சாணைக்கல் என்ற பொருள்கொண்டு, அக்கல்லில் இரத்தினங்களைத் தேய்க்கும்போது மணலும் கூடத்தேய்வதுபோல, அவன் செட்டபொழுது தானும் உடன் கெடவும், அவன் வாழ்ந்தபொழுது தானும் உடன்வாழவும் இவ்வாறவஞ் தினையாகக்கொண்டுள்ளபொதுமகளிரது மனத்திண்மைக்கு உவமைப்பித் திக் கூறுவாரு முளர். தகர்த்தல்-தினைப்படுதல் பிரியலம்-தான்மைப்பன் மை யெதிர்மறைமுற்று. பொன்தொடி - வேற்றுமைத்தொகையன்மொழி.

கூ.எஎ. ஆமாபோ னக்கி யவர்தைப் பொருள்கொண்டு
சேமாபோ ற்றுப்புமாஉஞ் சில்லிக்க ணன்பிண
பேமார் தெமதென் றிருந்தார் பெறுபவே
தாமாம் பலரா னதை.

(இ - ள்.) ஆமா போல் - காட்டுப்பசுவைப்போல, நக்கி - (முதலில் இன்ப முண்டாகப்) பரிசித்து, அவர் தை பொருள் கொண்டி - தம்மிடம் கூடியவர்களது கையிலுள்ள செல்வத்தைக் கவர்ந்துகொண்டி, (பிறகு), சேமா போல் - எருதைப்போல, குப்புமும் - கவிழ்த்துபடித்துக்கொள்ளு கின்ற, சில்லிக்கண் - தாழ்ந்தகடைத்தையுடைய பொதமகளினிடத்தில், அன்பினை-அசைவை, எமாந்த - மயங்கி, எமது என்ற இருந்தார் எமக்கே உரியது என்று (மோகத்திஞல் நம்பி) இருந்தவர்.—பலரால் - பலராலும், ஈதை பெறுப-அவமதிப்பைப்பெறுவர்; (எ - று.)—தாம், ஆம் - அசைகள்.

காட்டுப்பசு உடம்பை நக்கினால் அப்பொழுது சுகமாயிருந்து பின்பு லீவந்தம்போல மரணத்தை விளைக்கு மென்பர்; அன்றியும், காட்டுப்பசு பிறர்க்கு இன்புமுண்டாம்படி முதலில் காவினால் அவருடலை நக்கி அவர்க்குத் தம் பக்கல் நம்பிக்கையையுண்டாக்கிப் பிறகு அவர் அஜாக்கிரதையாயிருக்கின்ற சமயம் பார்த்து முட்டிக் கொல்வது போல, பொதமகளிரும் தம் மிடம்வந்த ஆடவரை இன்பமுற ஆலிங்கனம் முதலியவற்றை செய்து நம்பிக்கைகாட்டி அவர் கைப்பொருள் பறித்துக்கொண்டி அவர் ஏமாந்தசமயத்தில் உழவுக்கு உதவாமல் படித்துக்கொள்ளும் எருதைப்போலக் கவிழ்த்து மோசஞ்செய்துவிடுவார்களாதலால், அவர்கள் கடித்துக் காட்டும் பொய்யன்பை நம்புகின்றவர்கள் பலராலும்பழிக்கப்படுவார்க ளென்பதாம். அல்லேசையரது அன்பு தற்காலத்தில் மிழ்சசியைச் செய்தாலும் பின்பு பழிப்புக்கிடமான பல நீமைகளைத் தருமென்பது, கருத்து. ஏமமையனி.

சேமா - எருதாயிய லிலக்கு என இருபெயரொட்டு. சில்லி - ஜார்த்தை [தியொழுக்கமுடையார்.]; இனி, சில்லிக்கண் என்பதற்கு-சின்னவண்டு போன்ற கண்களை புடையாள் என அன்மொழித்தொகையாகப் பொருள் கொண்டி, வண்டு தேனுள்ள விடத்திற் சென்ற அதனைக் கவர்ந்திரிக்குதல் போல, செல்வமுடையாரிடத்திற் சென்ற அவர்செல்வத்தைப் பறித்துக்

கொண்டு செல்லுர் தன்மையுடையானென்று கூறவாருமுளர். கண் என்றது, அப்போது உள்காட்டத்தை. குப்புறதல் குறித்தோடுதலுமாம்.

ஈஎஅ. ஏமாந்த போழதி னினியாபோன் றின்ஞாய்,த
தாமார்ந்த போதே தகாக்கோடா—மானேகஞிற்
றாநெறிப பெண்டிர் தடமூலி சேராரே
செநெறிச சோதிமென் பாா.

(இ - ன்.) செம் நெறி சேர்தும் என்பா - செவலியவழியை [நல்ல முதிநிமாாகததை] ச சேரேவோ மெனறு கருதுவோா,—ஏமாநத போழ தின - (ஆடவா அவரதிமோகவலியிற சிகி) மயஙகியபோது, இனியார் போனறு - அன்புளளவாகனேபோல விருநது, தாம் ஆர்த போது-(வறு மையடைந்து) தாமே இசிதததசென்றகாலததில், இன்ஞா ஆய் - அன் பிலலாதவராய, தகா கோடி ஆம - ஆட்டுககுடாவின் கொம்பைப்போ லா கும்படியான, மான் நோகனி - மான்போன்ற பாவையையுடைய, தம் நெறி பெணடிா-தமகருடனிய களவுவழியில் தவருதலடைகும பொதிமகளி ருடைய, தட மூலை - பெரிய தனஙகளே, சேரா - அடையமாட்டாகள்.

காமுறா தமதுமோகவலியிற சிகி மயஙகிய போது அவாபொருளைப் பறிப்பதறகு அனபுடையாபோனறிருநது, அது முடிந்தவுடன், அவர் பொருளவறணடி தாமாகவிருமபிவாதபோது உடனபடாது மாறுபடுகின்ற பொதிமளிரது இனபதைதப பெரியோ விருமபிச சேரமாட்டாரெனபது கருத்து. தாம விருபபிய பறறம செநெறிகு அவரது இன்பம் மறறலி யாதலின சேரா ரெனபதாம. "பொருட் பொருளாா் புணனெக தோயா ரருட்பொரு, ளாயு மறிவினவா", "பொதுகலதாரா புணனெர தோயாா மதி லலதினி, மாணட வறிவினவா", எனனுரா ந்ருக்குறளிலும்.

ஆதல - விருமபுதல தமநெறிப்பெணடி - ஒருவருகும் வசப்படா மல் தமது மனபோகினபடியே செலகினறவா எனறுமாம. செநெறி - செவ்வையாகிய வீட்டுநெறி. (அ)

ஈஎக ஊறுசெய் நெஞ்சநதம மூள்ளடககி யொண்ணுதலாா
தேறற மொழிநத மொழிகேட்டுத்—தேறி
யெமதெனறு கொள்வாருங் கொள்பவே யாா்க்குர்
தமரலலா தமமுடமபி ணாா.

(இ - ன்.) ஒள் நுதலாா - பிரகாசமான நெற்றியையுடைய பொதிமக ளிர், ஊறு செய நெஞ்சம - (பிறாகருத) தினபஞ்செயபமபடியான தமது எண்ணததை, தம் உள அடககி-(பிறா அறியவொட்டாமல) தமகருளளே மறைத்துவைததகொண்டு, தேற - (கேட்டு) நிசசயமென்று நம்பும்படி, மொழிந்த - சொல்லிய, மொழி - பசப்புவாாத்தைகளை, கேட்டு—, தேறி- நம்பிகைகொண்டு, எமா எனறு கொளவாரும் - (அந்தப்பொதிமகளிரை) இவர் எமமைசசோ்ந்தவரெனற நினைப்பவாகளும், கொள்ப - அவவாறே

நினைக்கட்டும்: (அந்தப் பொதுமகளிர்), யார்க்கும் - எப்படிப்பட்டவர்க்கும், தமர் அல்லர்-உரியவராகார்: தம் உடம்பினர் - (பிறர்க்கு உரிமையன்றித்) தமக்கே உரிய உடம்பையுடையவராவர்; (எ - று.)

தமதுவஞ்சனையை வெளிக்காட்டாமல் கல்லவர்களேப்போல நம்பும் படி பேசவல்ல வேசையரை நற்குணமுடையவ ரென்று நினைப்பவர்கள் நினைக்கட்டும், அவர்கள் வாய்ப்பேச்சினல்மாத்திரம் அவ்வாருவரேயன்றித் தமது உடம்பைப் பிறர்க்கு வசப்படித்தாமல் தமக்கேவசமாக்கி வைத்துள் ளவரென்று கருதத்தக்கவ ரென்பதாம். (க)

க்ஷ ஏ0. உள்ள மொருவ னுழையதா வொண்ணுதலார்
கள்ளத்தாற் செய்யுங் கருத்தெல்லாங்—தெள்ளி
யறிந்த விடத்து மறியாராம் பாவஞ்
செறிந்த வுடம்பி னவர்.

(இ - ன்.) உள்ளம் ஒருவன் உழையது ஆ - (தமது) மனம் ஒருவனிடத் திலிருக்க, ஒள் நுதலார் - லீலக்கமான நெற்றியையுடைய பொதுமகளிர், கள்ளத்தால் செய்யும் - கபடமாக (அன்புடையார்போன்ற) செய்கிற, கருத்து எல்லாம் - நினைவுமுழுவதையும், தெள்ளி அறிந்த இடத்தும்-தெளி வாக ஆராய்ந்தறிந்தபோதும், பாவம் செறிந்த உடம்பினவர் - தீவினை மிகுநியையுடைய உடம்பை யுடையவர் [பாலிகள்], அறியார் - உண்மை யறியமாட்டார்கள்; (எ - று.)

தமதுமனம் ஒருவர்மேல் நிற்க மற்றொருவர்மேல் அன்புற்றவர்போல நடிக்கும் பொதுமகளிரது வஞ்சனைக்கருத்தை நன்ருக அறிந்தாலும் பாவி கட்கு அவர்கள்மீதே அன்புசெல்லுமென்பது, கருத்து. இதனல், பொது மகளிர் இருமனப்பெண்டிரென்றும், உருவுசொல் செயல்களால் வஞ்சிப் பது அவர்க்குச் சாதி தருமமென்றும் பெறப்பட்டது. இங்குப் பாவம் என் றது, மூற்பிறப்புக்களிற் செய்த தீவினைகளால் மனம் தெளிவடையாதிருத் தலே, "இருமனப்பெண்டிரும் கள்ளும் கவறும், நிரு கீக்கப்பட்டார் தொட ரிபு"என்ற நீதிநூற்றுளிற் கூறியவாறு பினவுபட்ட மனமுடையபொதுமகளி ரிடம் பற்றுச்செல்லுதலினலேயே அவர் தீவினேயுடையாரென்று அறியப் படு மென்க. ஆம் - அசை. (க0)

## இரண்டாவது

## இன் ப வி ய ல்.

அஃதாவது-முழுவதும் மனத்திற்கு இன்பத்தையே கொடுக்கும்பிரிவு என்ற பொருள். இது கற்புடைமகளிரின் சேர்க்கை யாதலின், இன்பமே தருவதென்பது வெளிப்படை. இவ்வதிகாரமும், அடுத்த அதிகாரமும் இல் லியலிற் சேர்ந்தவை.

அச் காமலின்பத்தான் - புணர்ச்சி பிரிவு என இருவகைப்படும்; மற் றை இருந்தல் இரங்கல் ஊடல் என்பனவோ வென்னில், இத்தலாதிரிவர்

பொருட் பாகுபாட்டினை அறம் பொருள் இன்பமென வடநூல் வழக்குப் பற்றிக் கூறுதலால், அவ்வாறே அவற்றைப் பிரிவினிடத்து அடக்கினு ரென்று அறிக. இனி,அவற்றையே தமிழ்நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியை 'களவு' என்றும், பிரிவை 'கற்பு' என்றும் பெரும்பான்மைபற்றி வகுத்து, அவற்றைச் சுவையுமிருதி பயக்குமாறு உலகாடையோடு ஒத்தலும் ஒவ்வாமையு முடையனவாக்கிச் சொல்லுகின்றார்; அவ்வொழுக்க மிரண்டனுள், களவாவது - பிணி மூப்பு இறப்புக்களில்லாமல் எக்காலும் ஒருதன்மையராய் உரு நிரு பருவம் குலம் குணம் அன்பு முதலியவற்றுலே தம்முள் ஒப்புமையுடையராகிய தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இல்லாமல் ஊழ்வகையால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது. கற்பாவது - கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள்; பதிவிரதாதருமம். கொண்டானிற் பிறந்த தெய்வமில்லை யென்றும், அவனுக்கு இன்னவாறு நீ குற்றேவல் செய்தொழுகு என்றும் தாய்தர்தையரா லும் பிறராலும் கற்பிக்கப்பட்டு இவ்வொழுக்கம் உண்டாகி நிலைபெறுதலால், கற்பு எனப் பெயர்பெற்றது.

உண்மையறிவை யுண்டாக்கும் நீதிநூல்களில் அகப்பொருட்கினவித் துறைகளை இடையிடையே கூறுதல் கலிசமயமாதலே இலக்கியங்கள் கொண்டு உணர்க. சிருங்கார ரசப்பிரதானமான அகப்பொருட் கினவித்துறைகளை ஞானமுண்டாதற்குக் காரணமாகிய நீதிநூல்களிற் கூறுதற்குக் காரணம், கடித்தின்ஞானைக் கட்டியூடே கடித்தின்பிப்பார்போலச் சிற்றின்பங் கூறும் வகையாற் பேரின்பத்தைக் காட்டி காட்டுதல் என்பர்.

## ஙக - ஆம் அதிகாரம்.—கற்புடைமகளிர்.

அஃதாவது - பதிவிரதைகளின் தன்மை. காணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் மகடூஉக்குணம் நான்களேயெனும் பதிவிரதியத்தையுடையவர், கற்புடைமகளிர். பொதுமகளிரது இன்பம் வெறுக்கத்தக்கது என்றதனால், குலமகளிரது இன்பம் அறத்திற்குப் பொருந்தியகாரணமாக விரும்பத்தக்கதென்பதை அறிவித்தற்கு, இது பொதுமகளிரின் பின் வைக்கப்பட்டது.

ஙஅக. அரும்பெறற் கற்பி னயிராணி யன்ன
பெருமம்பெயர்ப் பெண்டி ரெனினும்—விரும்பிப்
பெறுகையாற் பின்னிற்பா ரின்மையே பேணு
நறுநுதலா ணன்மைத் தகை.

(இ - ன்.) அரும் பெறல் கற்பின் - பெறுதற்கரிய பதிவிரதா தருமத்தையுடைய, அயிராணி அன்ன - இந்திராணியைப்போன்ற, பெரும்பெயர்-பெரிய சீர்த்தியையுடைய, பெண்டிர் எனினும்-பெண்களாயினும், பெறும் கையால் - (தன்னைப்) பெற்ற அனுபலிக்கவேண்டுமென்னும் ஆசையால், விரும்பி - விருப்பங்கொண்டு, பின் நிற்பார் இன்மையே - தனது பின்னே நிற்கும் ஆடவ ரில்லாமையாகிய நற்குணத்தையே, பேணும் - விரதமாகக்

கொண்டொழுகுந் தன்மையுள்ள, நறுநுதலாள்-அழகிய நெற்றியையுடைய பெண்ணே, நலமை தினை - (தனது கணவனுக்கு) நலமை பொருந்திய தினையாவாள், (எ - று)

மிகச்சிறந்தவளாயினும், தன்னைச் சேரவேண்டுமென்று விரும்புகொள்ளும் பரபுருஷர்களுக்கு சிறிதும் இடங்கொடாது ஒழுகுபவளே, தனது கணவனுக்கு உறற தினையாவ ளெனப்தாம பெண்ணின குறிபபை கோக காமல எவனும ஒருததியின பினனே நிறகமாட்டானஎனபதையால, 'பினனிற பார' எனறார அமிராணி - தேவேந்திரன மனைவி இவனை இங்கே உவமை கூறியதறகுக காரணம, நகுஷன புதிதாக இந்திரபதவிபெறறதத தனனை விருமபி யணுகியபோதம தனது பழைய கணவனுகிய இநதிரனிடமேயனறி அவனை விருமபாத கறபுநெறியில நினறு ளாதலின 'பெருமபெயா' எனபது, பெருமபுகழ, அதாவது - சானவாழும ஊரார கறபடைமையால தனனை புகழுமது கூறவது கறபுடையமனைவி தான பிறகத குலததாககும புகுதத குலததாகவும நறகதி புணடாகதலால, அததகைய பெணணை பொதுவாக 'நற நுதலா னனைமைததினை' எனறு ரெனிலுமாம, இததனையை, "கறபு மேய கனகுமை மாதரைப, பெறறனோாத மாபும பெருகதவக, கறபினுடகொணட காதலஞருயிரச, சுறறம யாவுங திறகததி னெயதுமால" எனனுஞ செயயுளால அறிக (க)

கூஉ குடநீரட டுண்ணு மிகெகட பொழுதுங
கடனீ ரறவுண ணுங கேளிர வரினுங
கடனாமை கையாருக கொளலு மடமொழி
மாதா மினைமாடகி யாள

(இ - ள) குடம நீர அடடு உணணும இகெகண பொழுதம - ஒரு குடதது நீரைக காயசி உணணுமபடியான [நீரையேயனறி உணபதறகு உரிய பொருளொனறும அகபபடாத] வறுமைநிலையம வாதகாலத்திம கடல நீர அற உணணும கேளிர வரினும கடலின நீரை வறறுமபடி உணணுதலக [மிகப பெருக கூடடமான] சுறறததார வநதாலும, கடன நீர மை - தனது கட்டமையாகிய குணஙகளேயே, கைஆறு ஆ கொளளும ஒழுகக நெறியாகக கொளளுகினற, மடமொழி மாதர - இரசமான இனசொற களையுடைய பெணணே, மனை மாடசியாள இலவறவாழகைகருததக பெருமையுடையவளாவள, (எ - று)

சுறறதததவர பலர வநதாலும தனது கணவன வறுமைப படடாலும மனஞசோராது தனது கடமைகளைத தவறாது நடதலபவளே இலவாழக கைகருகிய மனைவியாவ ளெனபதாம அவடருக கடமையாவன திறநதவர உபசரிததலும, விருநதோமபலும, சுறறதாழுவதலும, வறியவரிடதது அருளுடமையும, வாழகைகரு வேணடிய பொருளைதத தோாது காப பாறறிவைததலும, உணடி சமைததல வலலமையும, உபகாரஞசெயதலும முதலியவையாம இகெகண எனபது,அதறகுக காரணமான வறுமையைக் குறிதததி, உபசாரவழக்கு முதலடி - வறுமை மிகுதியையும, இரணடாமடி உறவினா மிகுதியையும குறிபபன. (உ)

ஈகஅஉ. நாலாறு மாறுப் நனிசிறிதா யெப்புறனு
மேலாறு மேலுறை சோரினு—மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பி
னில்லா ளபர்ந்தசேயில்.

(இ - ள்) நால் ஆறும் ஆய்-நான்கு பக்கங்களிலும் வழியையுடையதா கியும்,—நனி சிறிதா ஆய - மிகசிறியதாகியும்,— எ புறனும் - எல்லாப்பக் கங்களிலும், மேல் ஆ ற - மேல வழியினின்று, மேல் - தன்மேல், உறை சோரினும் - மழைநீர பெருகிவழிந்தாலும், மேல் ஆய - சிறந்த தருமங்களே, வல்லாள ஆய் - (செயய) வல்லவளாய, வாழும் ஊர் - தான் வாழுகின்ற ஊரிலுள்ளார், தன் புகழும் - தனனைப் புகழும்படியான, மாண் கற்பின் - மாட்சிமைப்பட்ட பதிவிரதா தருமத்தையுடைய, இல்லாள்-மனைவி, அமர்ந்தசே - பொருந்தப்பெறறசே, இல் - வீடாகும், (எ - று.)

நான்கு பகக்ஙகளிலும் வழியையுடையதாதலும், மிகசசிறியதாதலும், மிகக வறுமைகாலத்திலும் தனது நலலொழுகைகதிற் சிறிதுகுறையாத புகழுபெறற கறபினையுடைய மனைவி பொருந்தப்பெற்றதாதலுமே, ஒரு வீட்டிற்கு நல்லிலக்கண மெனபதாம.

நனிசிறிதாய— 'இட மபடவீடிடேல்", "சிறுக்கக்கட்டிப் பெருக்க வாழ" என்பன காணக எப்புறனும் மேலாறு மேலுறை சோர்தல் - வீட்டின கட்கேகோப்புக குலோதது மழைநீர ஒழுகப்பெறுதல் இவவாறு கூறியது, வறுமை மிகுதியைக குறித்தறகு வாழும ஊர தற்புகழதல்—"தற்காதது தறகொண்டாற பேணித தகைசான்ற, சொற்காதது சோவிலாள பெண்"எனனுங திருகுறளி ன பரிமேலழகருரையில் 'தன்மாட்டுப் புகழாவது - வாழும ஊர கறபால தனனைப புகழவது' என்றது காண்க. இதனால, எவவளவு வறுமைக காலத்திலும தனககு உரிய நலலொழுகைத் திற குறையாது கறபுநெறியில நிறபவனே நிறந்த பெண ணெனறாயிற்று.

ஈகஆ சடகனியாள காதலன காசல் வகைபூணவா
ளூட்குடையா வாயா ளியலிபெனு—ளூட்கி
யிடனறிந தூடி யிரந்தி லுணரு
மடமொழி மாதரான பெண

(இ - ள) கட்கு இனியான - கணணுககு இனிய உருவமுடையவளா கியும,—காதலன காதல வகை பூணவானா - (தனது) கணவனது ஆசையின் படி தனனை அலங்கரித்துக கொளபவளாகியும,—உட்கு உடையான்-அசச முடையவளாகியும, ஊ ணாண இயலபினா ஊரிலுளளனாகாகு [பிறரிட்ட தில] ணாணகொளளுந் தன்மையுடையவளாகியும,—உட்கி - (தனது கண வனிடத்து) அசசஞ்சி, இடன அறிந்து சமயமறிந்து, ஊடி - (அவனைவு) பிண ஙகி, இனிதின உளரும இனபமுணடாமபடி உடனே அறிந்து ஊடலநீர் இனறு, மடமொழி மாதரான - சபடமிலலாத இனசொறகளே யுடையவளா கியு மிருபபவனே, பெண -மனனவியாவாள, (எ - று.)

முகக்கோட்டம் கடுகெடுப்பு முதலிய துர்க்குணங்களில்லாமல் பார்ப்ப தற்கு இனிய தோற்றமும், தனது கணவனிஷ்டப்படி தன்னே யலங்கரித் துக்கொள்ளுதலும், செய்யத்தகாத காரியங்களில் அஞ்சி விலகுதலும், பர புருடாபத்தில் நாணங்கொள்ளுதலும், ஊடலேயும் கூடலேயும் உரிய சம யங்களில் கொள்ளுதலும் - கற்புடைய மனேவியின் குணங்க ளென்பதாம்.

ஊர்காணியல்பினுள் என்பதற்கு - தான் வாழும் ஊரி லுள்ளார் தன் னேக்கண்டு வெட்கமடையும்படியான நேர்த்த நல்லொழுக்கமுடையா னெனி னுமாம். உலப்பிற்கு ஏதுவாதலால் 'இடனறிந்து ஊடி' என்றும், அவ்வூட லேத் தணித்துக்கொள்ளாமல் நீட்டித்தால் வெறுப்பைத்தரு மாதலின் 'இனிதினுணரும்' என்றும் கூறினர். ஊடலாவது - இன்பநிலேயில் அவ் வின்பத்தை மிகுவிக்குமாறு ஆடவர்நீது மகளிர் கோபித்தல். இங்ஙனம் வினேயாட்டுவகையாற் கலவியிற் கொள்ளும் பிணக்கு, புலவி யெனவும் படும். ப்ரணயகலஹ மென்பது இதற்கு வேறு வடமொழி. இதன் முதிர்ந்த நிலேமை, தனி யெனப்படும்.

"ஊட லுணர்தல் புணர்த வினவகாமல், கூடியார் பெற்ற பயன்", "ஊடிப்பெறுகுவல், கொல்லோ நுதல்வெயர்ப்பக், கூடலிற் ரேன்றிய வுப்பு" என்னுந் நீருந்நறள்கள் இங்குக் கவனிக்கத்தக்கன. (ச)

நஉறு. எஞ்ஞான்று மெங்கணவ ரெற்நோண்டேற் சேர்ந்தெழினு மஞ்ஞான்று கண்டேம்போ னுணுதுமா—லெஞ்ஞான்று மென்னே கெழீஇயினர் கொல்லோ பொருணசையாற் பன்மார்பு சேர்ந்தொழுகு வார்.

(இ - ன்.) எ ஞான்றும் - எக்காலமும், எம் கணவர் - எமது தலேவர், எம் தோள்மேல் சேர்ந்து எழினும் - எமதுடைய தோள்களில் அணேந்து எழுந்தாலும் [தினந்தோறும் கூடி இன்பமனுபவித்தாலும்],—அ ஞான்ற- (புதிதாக மணஞ்செய்துகொண்ட) அக்காலத்தில், கண்டேம்போல்-(யாம்) கண்டதுபோல, நாணுதும் - (அவரிடம் இப்பொழுதும்) நாணமடைகின் றோம்; (இவ்வாறு இருக்க),— எ ஞான்றும் - எக்காலமும், பொருள் நசை யால் - பொருளாசையால், பல் மார்பு சேர்ந்து ஒழுகுவார் - பலதரு மார்பு களே (ஒருகால்) சேர்ந்து நடக்கின்ற பொதுமகளிரை, கெழீஇயினர் - (அத் தப்பலரிடத்தும்) உரியராயிருக்கின்றனர்; என்னே கொல் ஓ - இது என்ன தன்மையோ! (எ - று.)

நாம் எமது கணவரிடத்தில் எப்பொழுதும் கூடிப்பழகினாலும் அவரை முதலிற்கண்டபோது எவ்வாறு நாணினேமோ அவ்வாறே இப்பொழுதும் நாணவேண்டியிருக்கின்றது; இப்படியிருக்க, பொதுமகளிர் பொருளாசை யாற் பலபுருடரை ஒவ்வொருகால் சேர்ந்தாலும் அப்பொழுது சிறிதும் நாணமில்லாமல் அவ்வாடவரைச் சொந்தமாகச் கையாளுகின்றாரே! இது என்ன! என்ற ஒருகுலமகள் பொதுமகளிரின் நாணின்மையை நோக்கி வியந்து கூறியவாறு. பொதுமகளிரைப்போல நாணமில்லாமல் குலமகளிர் நடவா ரென்பதாம்.

கெழீஇயினர் - கெழுவினர்; சொல்லிசையளபெடை. (கொல், அசைகள்.

ங்ஙுசூ. உள்ளத் துணர்வுடையா னெஞ்சிய நூலற்றூல்
வள்ளன்மை பூண்டாண்க ணெண்பொரு—டெள்ளிய
வாண்மகன் கையி லயில்வா ளனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம்.

(இ - ன்.) வள்ளன்மை பூண்டாண்கண் - ஈகைத்தன்மையை மேற் கொண்டவனிடத்தி லுள்ள, ஒள் பொருள் - மிக்க செல்வமானது, உள்ளத்து உணர்வு உடையான்-மனத்தில் நல்லறிவுடையவன், ஒதிய - கற்றறிந்த, நூல் அற்ற-நூலேபோலும்; நாண் உடையான் - நாணமுடைய குலமகள், பெற்ற - அடைந்தின்ன, நலம்-அழகானது, தெள்ளிய ஆண் மகன்-தேர்ந்தெடுக்கப்பட்ட [மிகச்சிறந்த] வீரபுருஷனது, கையில் - கையிலுள்ள, அயில் வாள் அனைத்து - கூரிய வாளாயுதத்தைப்போலும்; (எ - று.)—ஆல், அரோ - ஏற்றனசொன்.

இயற்கையிற் கொடைத்தொழிலுடையானுக்குக் கையிற் பொருள் இருந்தால் அது விவேகமுள்ளவன் கற்றறிந்த நூல்போலப் பயன்படும்; இயற்கையில் நாணமுடையவளுக்கு அழகு இருந்தால் அது சுத்தவீரன் கையிலுள்ள ஆயுதம்போலப் பயன்படுமென்பதாம். இவ்வாறு கூறினாராயினும், கற்புடைமகளிர் அதிகாரப்பட்டு நிற்றலால், முதல் மூன்று பொருள்கள் உபமானமும், ஏற்றது உபமேயமுமெனக் கொள்ளுதல் தகுதி. இதற்கு இணங்க, முதலடியிலுள்ள 'அற்று' என்பதை இரண்டாமடியிலும்'ஒண் பொருளற்று' என்று கூட்டிப் பொருள்காண்க. கற்புடைய குலமகளுக்கு சேர்ந்த அழகானது - தெளிந்த அறிவுடையான் கற்ற நூல் போலவும், கொடையாளிக்குக்கிடைத்த செல்வம் போலவும், சுத்தவீரன் கையிற் பிடித்த ஆயுதம்போலவும் பெருமையடையுமென்பது, கருத்து. நாண் என்பது - மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் மற்றை மகடூஉக் குணங்கட்கும் உபலக்ஷணம்.

இவை ஆறு செய்யுள்களாலும், கற்புடை மகளிர்க்கு உரிய இயற்கை நற்குணங்கள் பொதுவாக எடுத்துக கூறப்பட்டன. (சு)

[உலாப்போயிவர்ந்த தலைமகன் பள்ளியிடத்தாகத் தலைமகள் சொல்லியது.]

ங்ஙுஎ. கருங்கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணிப் பதக்கென்
றிருருங்கொடப்பக் கொண்டானு மூர—னெருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்பு னீராடா
தென்னீயுந் தோய வரும்.

(இ - ள்.) ஊரன் - சிற்றாரிலுள்ளாரெருவன், கருங் கொள்ளும்-கறுத்த கொள்ளேயும், செம் கொள்ளும் - சிவந்த கொள்ளேயும், ஒழுகுகு ஒப்ப-(இவ்விரண்டற்குமுள்ள வேற்றுமையைச் சிறுதாது) ஒரு நிகராக, அணி பதக்கு என்று - (ஒன்றற்குச் சிறப்பக்கொடாமல்) அணிப் பதக்கு என்னும் ஒரே அளவாக, கொண்டான் ஆம் - வாங்கிக்கொண்டானும்; (அது போலவே),— ஒருகு ஒவலா - முழுவதும் ஒத்திராத, நல் நுதலார் - அழ

யெற்றியையுடைய பொதுமகளிரை, தோய்ந்த - அனுபவித்த, வரை மார்பன் - மலைபோன்ற மார்பையுடைய (எனது) கணவன், நீர் ஆடாது - ஸ்நாஞ் செய்யாமல், என்னையும் தோய வரும் - (குலமகளாகிய) என்னையும் அனுபவிக்க வருகின்றான்; (இது என்ன அநீதி!) (எ - று.);

தலைவனும் தலைவியும் ஒரு பக்கையிலே கூடியிருந்தவிடத்து அவனிடத்துப் பிணங்குதற்குக் காரணமில்லாதிருக்கவும் ஊடல் கைம்மிருதலால் நுட்பமாகிய ஒருகாரண மிருக்கிறதாக உட்கொண்டு அதனை அவன் மேலே ஏற்றி அவன் பிணங்குதல் என்பது, இத்தலைமயின் போக்கு.

பருத்தநிலில்லாத நாட்டுப்புறத்தானொருவன்கருப்கொள் செக்கொள் என்னு மிரண்டனது வேறபாடி கருதாமல் இரண்டையும் ஒரே லீலைக்கு ஒரே யனவாக வாகங்கிக்கொண்டார்போல, பொதுமகளோடும் குலமகளோடும் வேற்றுமை கருதாது எனதிதலைவன் பொதுமகளைப் புணர்ந்தபடியே என்னையும் அனுபவிக்கவருவது தருதியன்றென்று பிணங்கிக்கூறின னென்பதாம். பொதுமகளிர் உன்னையனுபவித்ததுமுல், அவர் மிச்சிலாகிய தினது மார்பினைப் பொருந்தேனென்பது, நீறிப்பு. "பெண்ணியலா ரெல்லாரும் கண்ணிற் பொதுவுண்பார், நண்ணேன் பரத்தநின்மார்பு"என்ற திருக்குறள் இங்கு நோக்கத்தக்கது.

இதனுல், தனது கணவன் செய்த அக்கிரமத்தையும் கற்புடை மகளிர் பொறுத்துக்கொள்வ ரென்பதும், நீராடியாவது வந்தால் சேரலாமென்று தமது தாய்மையுடையையும் கூறியவாறும்.

உபமானத்தில் கருக்கொள்ளுவும் செக்கொள்ளுவும் ஒருநிகராகக் கருதியமை கூறியதனுல்,உபமேயத்தில் பொதுமகளிர்க்கு உரியதாழ்வையும்,குல மகளிர்க்கு உரிய உயர்வையும் கருதாமை வெளிப்படுமென்பது. 'ஒருக்கொவ்வா ரன்னுதலார்' என்றது, கற்பு ராண முதலாகிய நற்குணங்களில்லாமையால், பொதுமகளிர்க்கு உள்ளது பெண்ணுமிருக்குந் தன்மைமாத்திரமே யென்னும் கருத்தால் ஆண், பதக்கு - முகத்தினவைப் பெயர்கள். ஆண் - ராண்முமரக்கால்; பதக்கு - இரண்டுமரக்கால். 'ஆம்' என்பது - இங்கு அலட்சியர்தோன்ற நின்றது; "வைத்தோடுஞ்சிறை கற்போயை, வைத்தோ னின் றியிர்வாழ்வானும், பொய்த்தோ ரில்லிகள் போவாராம், இத்தோ டொப் பநி யாதண்டே" எனக் கம்பராமாயணத்திலும், 'அன்னேயானை ருமிருவராம் முதலளித்த தந்தையர்க லோவாம்' என்பது முதலாக வில்லிபுத்தூரார்பாரதத்திலும் வருவன காண்க. 'வரைமார்பின்' என்றும் பாடம். ரன்னுதலார்த் தோய்ந்த - "இயல்பின் விகாரம்." வரைமார்பு - உத்தம லீலக்கணமாகிய கோடுகளேயுடைய மார்பு எனினுமாம். (எ)

[தலைவனது பிரிவுகார்த்தீய பாணனே நோக்கித் தலைவி மறுத்துக் கூறியது.]

ஈஉஅஅ. கொடியவை கூறுதி பாணநீ கூறி
னடியைய விட்டொதுங்கிச் சென்மு—னடியி
னிடக்கண் ணினேயய்யா மூரற் கதனுல்
வலக்கண் ணினேயார்க் குரை.

(இ - ள) பாண-பாணனே!—கொடியவை கூறுதி - கொடுமையான சொறகளே(ஏமமில மை) சொலலாதே, (ஏனெனில்,—) யாம—, ஊரதிகு - தலே மகனுகு, தடியின இடகக்ண அனேயம - உடகைகையினது இடபக கதையை போல பயனபடாதிருகனெறேம, அதஞல—, நீ கூறின - (அப படிபடட சொறகளே) நீ சொலவதாயிருந்தால, பைய அடி லிடடு ஒதுகி சென று - (நீ) மெதுவாக இவவிடமவிடடு அபபுறமபோய, வலகக்ண அனேயாகக-(அநத உடகைகையின) வலபகக்ததைபபோலப பயனபடும மகளிர கு, உரை - சொலவாயாக, (எ - று)

ஒருத்தி, தனது தலேவன பிரிந்து பரதையரிட்ஞசெலவதைப பாண தனனிடம வந்து கூற, அது கேடகப பொறுமல'பயனபடாத எனனி டம நீ இதனேச சொலலவேணடாம, பயனபடும பரதையரிடம சொல எனறு வருந்திக்கூறின ளெனறு தறையின போகக்கு காணக தனகரும தலேமகளுகரும வேறறுமைசருதாது பாணனே நோகக்கித தோழி கூறியது மாம 'கொடியவை எனறது தலேவன பிரிந்துசெலலுஞ செயதியை தலேவன எனனேப பிரியாமை யுணடாயின அதனே எனகருச்சொல எனபது, தறிப்பு| மணஞசெயதுகொணட பினபு தலேவன அறம பொருளின பககளின பொருடடுத்த தலேவியைபபிரிந்து சேரதலிலும அவவிட்டதிலிலும செலவதுண டெனபதை அறிக

பாணன - பாடடுபபாகிவினற ஓர இழிகுலத்தான், இவன, தலேவன் தலேவிக ருக்குத் தூதுசெலவது உண்டி 'பாணன - ரெளிலனறிகேயிருக் கப பண்ணுந் தோதறிமொழியுடையான' எனபர உடகைகைகு வலபபக கம அடி பதிதலும, இடபபகக்ம அடிபடடமையும கருதி இவவுவமை கூறப் படடது கண - அடிகருமிடம கூறுதி ஏவலொருமை யெதிரமறைமுறறறு

இவ்வதிகாரத்து ஈறறுச்செயயுள இங்கு நோகக்தறகது (அ)

['பாத்தையிற்பிரிந்து வந்த தலேமகளேநோ நீ புலவாமைக்குக் காரணம் யாது என்ற தோழிக்குத் தலேவி சொல்லியது]

ஈக சாயபபறிகக நீரதிகழுந் தணவய ஓரணமீ
தீபபறகக நொருதேணும யானேமற—றீபபறட்ை
தாககி முழேலிபொருத தணசாகு தணியகல
நோககி யிருதேணும யான

(இ - ள) சாய பறிகக-கோரையைப பிடுங்கியெறிதலாற்நிரதநில, நீர் நிகழும - தணணீர நிறைநத வீளஙகபபெறற, தண வயல-குளிர்சசியான கழனிகள சூழ்நத, ஊரன மீது-ஊர்களேயுடையவனுன (எனறு) தலேவன மேல, (கூடியிருந்தகாலததில்,) ஈ பறகக ளபானறு பறககுமபோதிலும, நொ தேணும - பொருமல மனமவருநியவளும, யானே—; (அததலேவன எனனேப பிரிந்துசென காலததில), நீ பறகக நெருபபுபபொறி பறககுமபடி, முலே தாககி பொருத (பொதிமகளிர் தமது) தணவகளினுல தாகபபோ செயத [தழுவி இனபமனுபவிதத்], தண சாநது அணி அவலம - குளிர்சசி யான கலவைச சநதனததை யணிந்த (அததலேவனது) மாபை, நோககி இருதேணும-பாரத்திப பொறுதிருந்தவளும, யான-பானே; (எ - று.)

கூடியிருக்கையில் எனது தலைவன்மேல் ஈயானது பறந்தாலும் சகியா மல் அன்புகொண்டிருந்தவளும் நான், பிரிந்தகாலத்து வேசையர் தமது மூலை ஒருமுங்கப்புல்லி யின்பமனுபவித்த அத்தலைவனது மார்பைக் கண்டு கொந்து கிற்பவளும் நானே யென்ற ஒருதலைவி வருந்திக்கூறின னென்ப தாம். இதனால், குலமகளிர் தமதுதலைவர் பொதுமகளிரைக் கூடியவழியும் அவரை அலட்சியஞ் செய்யாதிருக்கவேண்டு மென்று கூறியவாறு.

சாய்-ஒருவகைக்கோரை. 'சாய்ப்பறிக்க நீர்நிலமூழ் தண்வயல்'என்றது நீர்வள மிகுதியைக் குறிக்கும். மன் - அசை. கொய்தேன், இருந்தேன் வினையாலணையும் பெயர்கள். (கூ)

[தலைவி பாணனுக்கு வெகுளல்.]

நூகூ0. அரும்பவிழ் தாரினு னெம்மருளு மென்று
பெரும்பொய் யுரையாதி பாண—கரும்பின்
கடைக்கண் ணனையா மூரற் கதளு
மிடைக்கண் ணனையார்க் குரை.

(இ - ன்.) பாண-பாணனே!—'அரும்பு அவிழ் தாரினுன்-பூவரும்புகள் மலரப்பெற்ற மாலையையணிந்த தலைவன், எம் அருளும்-எமக்கு அருள்செய் வான்', என்று—, பெரும் பொய் உரையாதி-பெரிய பொய்வார்த்தைகளைச் சொல்லாதே; (எனெனில்,—) நாம்—, ஊரற்கு - தலைவனுக்கு, கரும்பின் கடைக்கண் அனையம்-கரும்பினது கடையிலுள்ளகணுக்களையொத்திருக் கின்றோம்; அதனால்—, (இப்பேசசை), இடைக்கண் அனையார்க்கு உரை- (அக்கரும்பினது) இடையிலுள்ள கணுக்களையொத்த பரத்தையர்க்குச் சொல் வாயாக; (எ - று.)

தலைவனைப் பிரிந்தசென்ற பரத்தையைக்கூடிவீன்ற தலைமகன் மீண்டு, தலைமகளிடம் வருமளவில், அவன் செய்தியை அறிந்து கினங் கொண்ட அவள் அவன் வரவை ஏற்றுக் கொள்ளாது மறுக்க, அதனால் வருத்தமுற்ற தலைமகன் அவட்குச் சமாதானங்கூறி அவளைக் கோபந்தணித்த தற்பொருட்டு ஒருபாணனை அவள்பக்கல் அனுப்ப, அவன் அங்ஙனமேவத்து தலைவியைநோக்கி 'நீ மறுத்தலால் நினதுதலைவர் நின்மனைக்கு வரக் கூசி நின்றார்; அவர் நின்மீது மிக்க காதலையுடையர்' என்பன போன்ற சில நயப் புரைகளை எடுத்துக்கூற, அது கேட்ட தலைவி அவனைப் பரிகசித்து வெகு ண்டு கூறியது இதனென அறிக.

கரும்பின் கடைசிக்கணுக்களைப்போன்ற அவனுக்கு உருசிகுறைந் துள்ள எம்மிடத்தில் தலைவன் அன்புடையனுள்ளா னென்று பொய்சொல் லாதே; கரும்பின் இடையிலுள்ள கணுக்களைப் போன்ற அவனுக்கு உருசி மிகுந்துள்ள பரத்தையரிடம் இப்பேசசைச் சொல்வா யென்று பாணனை நோக்கித் தலைவி கூறியது இது. கரும்பின் கடைக்கணுக்களில் இனிப் பின்மையும் இடைக் கணுக்களில் இனிப்புண்மையும் வெளிப்படை. (கம)

**அஃதாவது** - காமவின்பத்தின் பகுதிகளைக் குறித்துச் சொல்லுகின்ற பிரிவு என்பதாம். நுதலுதல் - குறித்துக்கூறுதல். இழிகுணமுடைய பரத்தையன்றிக் குலமகளிரது இன்பம் நிறத்தலால், அதனை இவ்வதிகாரத்திற் சிறப்பித்துக் கூறுகின்றன ரென்றுமறிக. அதிகாரமுறைமையும் இதனுலே விளங்கும். இனி, இயல் என்பதற்கு - இலக்கண மென்று கொண்டு, இன்ப முறைமையைக் கூறும் இலக்கண மென்றும் பொருள் கூறுவர்.

[தலைமகற்கு வாயிலாகிவந்த தோழிதலைமகளிற் புலவிநீங்கக்கூறியது]

ஈகூஈ. முயங்காக்கால் பாயும் பசலைமற் றுடி
யுயங்கார்க்கா லுப்பின்றுங் காமம்—வயங்கோத
நில்லாத் திரையுலகுக் கீள்கழித் தண்சேர்ப்ப
புல்லாப் புலப்பதோ ராறு.

(இ - ன்.) வயங்கு - விளங்குகின்ற, ஓதம் - கடலானது, நில்லா - நிலையாயிராமல், திரை அலைக்கும் - அலைகளால் மோதுகின்ற, நீள் கழி-நீண்ட கழி களினது, தண் - குளிர்ந்த, சேர்ப்ப - கரையையுடைய அரசனே!—முயங்காக்கால்-கூடா விட்டால், பசலை பாயும் - (பிரிவுத்தன்பமிகுதியால்) நிற வேறுபாடு (உடம்பில்) மிக்குப்பரவும்; ஊடி உயங்காக்கால் - ஊடல் கொண்டு வருந்தாவிட்டால், காமம் உப்பு இன்று ஆம்-காமநுகர்ச்சி இன்ப முடையதாகாது; (ஆகலால்), புல்லா புலப்பது-முதலிற் கூடிப் பிறகு ஊடலது, ஓர் ஆறு-(காமநுகர்ச்சியில் ருசியுண்டாதற்கு) ஒருவழியாம்; (எ - று.)

தலைவனும் தலைவியும் கூடாவிட்டால் உடம்பிற் பசலை யுண்டாகின்றது; ஊடல்கொள்ளாமல் எப்பொழுதும் சேர்ந்தேயிருந்தால் காமத்தில் ருசியுண்டாதலில்லை; ஆதலால், கூடுவதும் ஊடுவதும் காமநுகர்ச்சிக்கு அழகு என்பதாம். "உப்பமைந்தற்றுப் புலவி", "துனியும் புலவுமில்லாயிற் காமம், கனியுங் கருக்காயு மற்று", "ஊடலுணர்தல் புணர்தலிவைகாமம், கூடியார் பெற்றபயன்" என்னுந் திருக்குறள்களை நோக்கத்தக்கன.

வாயில் நேர்தல் - வழியெடுத்துக்கூறுதல். புலவி-புலத்தல்; ஊடுதல். பசலை - தலைவனைப்பிரிந்த துன்பத்தினுல் தலைமகளது உடம்பி லுண்டாகும் நிறவேறுபாடு. உப்பு என்பது - இங்கு இனிமையென்னும் பொருளில் வந்தது. வடநூலார், கூடலை 'ஸம்போகம்' என்றும், ஊடலை 'விப்ரலம்பம்' என்றும், விப்ரலம்பத்தை 'மதுரதரம்' [மிக்க இனிமை] என்றுங் கூறுவர். இங்கு 'பசலை' என்பது - தயிவின்மை, உடம்புமெலிதல், எல்லாவற்றிலும் வெறுப்பு முதலியவற்றிற்கும் உபலக்ஷணம். மற்று - அசை. (க)

[பருவங்கண்டு ஆற்றுவித்தகாலை தோழிக்குச் சொல்லியது.]

ஈகூஉ. தம்மமர் காதலர் தார்ரு முணியகல
லிம்ம முயங்குந ஆணிப்லார்க்—கிம்மெனப்
பெய்ய வெழிலி முழங்குந் திசையெல்லா
நெய்த லிறைந்தன்ன நீர்த்து.

(இ - ன்.) தம் அமர் காதலர்-தம்மிடத்து வீரப்பமுடைய தலைவரது, தார் சூழ் அணி அகலம் - மாலையையணிந்த அழகிய மார்பை, விம்ம முயங்கும் - (மகிழ்ச்சியினுற்) பூரிக்கும்படி தழுவுதற்கு உரிய, தூணை-தலைவரை, இல்லார்க்கு - இல்லாத [தலைவரைப்பிரிந்த] மகளிர்க்கு,—இம்மென - இம் என்னும் ஓசையோடு, பெய்ய - மழைபொழியும்படி, எழிலிமுழங்கும் - மேகங்கள் கர்ச்சிக்கின்ற, இசை எல்லாம் - இக்குக்களிலெல்லாம், (அம் முழக்கம் அவர்க்கு), செய்தல் அறைந்த அன்ன கீர்த்தி - சாப்பறையடித் தாற்போன்ற தன்மை யுடையதாம்; (எ - று.)

மிகுதியும் வருத்தந்தரு மென்பதாம். கார்காலத்திலே மீண்டு வருவே னென்ற காலங்குறித்துப் பிரிந்தசென்ற தலைமகன் அக்காலம் வந்தும் வாராததனுல், காலத்தைநோக்கித் தலைமகள் ஆற்றது வருந்திக் கூறியது இது. சேர்தற்கு உரிய காலத்தில் தனது தலைவனைச் சேரப்பெறுது வருந் தும் ஆற்றுமையும், எவ்வகைத் தாபத்தையுந் தணிக்கவல்ல நீர்கொண்ட மேகம் தனது சிலைமைமாறி இப்பொழுது தன்னை வருத்துகின்ற கொடுமை யும் தலைவி இரங்குதற்குக் காரணமாயின வென்க. கார்காலத்து மேகமுழக் கம் - காமோத்தீபகப்பொருள்களில் ஒன்று. இம்மென்ல - ஒலிக் குறிப்பு. செய்தல் - சாப்பறை. (உ)

[தலைமகள் கேளவுடன்படாமையைத் தலைமகற்குத் தோழி சொல்லியது]

கூ.கூ. கம்மஞ்செய் மாக்கள் கருவி யொடுக்கிய
மம்மர்கொண் மாலை மலராய்ந்து பூக்தொடுப்பாள்
கைம்மாலை யீட்டுக் கலுழ்ந்தா டுணையில்லார்க்
கிம்மாலை யென்செய்வ தென்று.

(இ - ன்.) கம்மம் செய் மாக்கள்-கம்மியத்தொழிலைச்செய்கின்ற மனி தர் [கம்மானர்], கருவி - (தமது) ஆயுதங்களை, ஒடுக்கிய - (வேலையில்லாமல்) அடக்கச்செய்த, மம்மர் கொள் மாலை - மயக்கத்தைக்கொண்ட மாலைப் பொழுதில், மலர் ஆய்ந்து பூ தொடுப்பாள் - மலர்களை ஆராய்ந்தெடுத்து அவற்றைக்கொண்டு மாலைதொடுப்பவளாகிய தலைமகள்,—'தூணை இல்லார் க்கு-தலைமகனைப்பிரிந்த மகளிர்க்கு, இ மாலை என் செய்வது - இந்த மலர் மாலை யாது பயன்படும்?' என்று—, கை மாலை இட்டு - தனதுகையிலுள்ள மலர்மாலையைப் போகட்டு, கலுழ்ந்தாள்-மனங்கலங்கி யழுதாள்; (எ - று.)

தலைமகன் மாலைப்பொழுதில் கல்லமலர்களை மாலையாகத் தொடுக்கும் போது தலைமகன் பிரிந்துசெல்வதைத் தோழியால் அறிந்து அவனைநோ க்கி 'எனது காயலுக்குசென்ற அன்போங்கட்டும் இம்மலர்மாலை அவரில் வாதபோது எதற்கும் பயன்படாதே!'என்ற மனங்கலங்கி யழுததனைத் தோழி தலைமகற்குக் கூறியது இது. "காலையரும்பிப் பகலெல்லாம் போ தாகி, மாலை மலரு மிம்மோய்" என்றபடி சேர்க்கைக்கு உரிய காலமாகிய இரவின் தொடக்கமான மாலைப்பொழுது, பிரிந்தார்க்கு அத்துயரை மிகு விக்கு மென்க. இதுபற்றியே, 'மம்மர்கொள் மாலை' என்றார். மம்மர்-மயக் களிப்பு.

கம்மாளர் பகல்முழுதும் வேலைசெய்து மாலைப்பொழுது வந்தவுடன் வேலையொழிவ ராதலின், மாலைப்பொழுதுக்கு 'கம்மஞ்செய் மாக்கள்கருவி யொடுத்திய' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது; "ஓலைக்கண்ணக ரொலியடங்கு புன்செக்கர் மாலைப்பொழுது" என்று பின்வருவதும் இது போன்றதே. இது, பகலெல்லாம்வருந்தி வேலைசெய்யுங் கம்மியரும் வேலை யைமுதற்றித் தம்தம் நாயகியரிடம்செல்லுங்கால மென்பதைக் குறிக்கும்.

[வினைமுற்றி மீண்ட தலைமகன் பாங்கற்கேட்பத் தோல்லியது.]

ஈடூ. செல்சுடர் நோக்கிச் சிதரார்க்கண் கொண்டநீர்
மெல்விரல் ஊழ்தெறியா விம்மித்தன்—மெல்விரலி
னுள்வைத்து நுங்குற்ற மெண்ணுங்கொ லன்றோதன்
றோள்வைத் துறங்கிடந்த

(இ - ள்.) (எனது தலைமகன்),—செல் சுடர் நோக்கி - (மேல்கடலே நோக்கிச்) செல்லுகின்ற ஞாயிற்றை பார்த்து, சிதர் அரி கண் கொண்ட நீர்-சிதறிய செவ்வரிகளோடுடைய (தனது) கண்களில் நிறைந்த நீரை, மெல் விரல் - (தனது) மெல்லிய கைவிரல்களால், ஊழ்தெறியா - முறைமையாக [அடிக்கடி] எடுத்து எறிந்து, விம்மி - அழுது, தன் மெல் விரலின்-தனது மெல்லிய விரல்களினுள், நாள் வைத்து - (நாம் பிரிந்துசென்ற) நாள்களைக் கணக்கிட்டுக்கொண்டு, அணைமேல் - பகிகையில், தன் தோள் வைத்து கிடந்து - தனதுதோளையே தலையணையாகக்கொண்டு படுத்து, நம் குற்றம் எண்ணும் கொல் - நமதுகுற்றங்களை நினைத்து வருந்துவனோ! அந்தோ ஐயோ! (எ - று.)

ஒருதலைமகன் தனது தலைவியைப் பிரிந்துசென்று வினைமுற்றி மீண்டு வருகையில், 'எனது காதலி மாலைப்பொழுதில் நான் பிரிந்துசென்ற இத் தனை காளாயினவென்றும், யிசையில் வருவேனென்றும், இன்னின்னவாறு செய்வேனென்றும் சொல்லிக்கொண்டு எனது குற்றங்களைச் சிந்தித்து வருந்துவளே!' என்ற இரங்கிப் பாகனெடு கூறியது இது.

பிரிந்த தலைவன் மீண்டுவருவது மாலைக்கால மாதலின் 'செல்சுடர் நோக்கி' என்றும், தலைமகன் தான்குறித்தபடி மீண்டுவராது நீட்டித்தலாற் பிரிந்துசென்ற நாள்களைத் தன்விரல்களால் தலைமகள் எண்ணுவ ளாதலின் 'மெல்விரலின் நாள்வைத்து... ..எண்ணுங்கொல்' என்றும் கருதிக் கூறின னென்க. விரையச்சென்று சேராவிடின் ஆற்றுமை மிகையிற்சுதலால் அவள் இறந்துபடுவ ளாதலால் நமக்குப் பழியுசேர்ந்திடு மாதலின், அதற்குமுன்பே தேர்செலுத்தவேண்டு மென்ற குறிப்பு. சிதரார்க்கண்கொண்டநீர் - உரிய காலத்தில் தலைமகனைக் கூடப்பெறாது வருத்தமிகுதல்பற்றி உண்டாவது; இனி, இரேகைகள் படர்ந்த கண்களின் அழகை மறைத்துக்கொண்டு ததும்புகின்ற நீர் என்றும் பொருள்கூறலாம்: இது, அவளது கண்ணழகை நினைந்து வருந்தியதைக் குறிக்கும். கண்களிற் செவ்வரிபரத்தல் உத்தம விலக்ஷணம். அந்தோ-இரக்கக்குறிப்பிடைச்சொல். செல் சுடர் என்பதை,

அஸ்தமிக்குச் தருணத்திலிருக்கிற சூரியனுடைய மாலைப்பொழுதென அன்மொழித்தொகையாகவும் கொள்ளலாம். தன்தோள்வைத்து அணை மேற்கிடத்தல்-வருத்தமிருதியால் படுக்கைகொள்ளாமல் முடக்கிய தனது கையின்மேல் தலையைவைத்துக் கிடப்பது. 'மெல்லிரல்' என்றது, "வளரற் புற்கென்ற கண்ணு மவர்சென்ற, நாளொற்றித்தேய்ந்த விரல்" என்ற படி பிரிந்துசென்ற காள்கள் சுவரின்கண் இழைத்தவற்றைத் தொட்டு எண்ணுதலால் கைவிரல்கள் தேய்ந்தன வென்ற குறிப்பு. (சு)

[நலமகன் தானும்நற்றதைப் பாங்கற்குச் சோல்லியது.]

கூ.கூஎ. கண்கய லெண்ணுங் கருத்தினுற் காதலி
பின்சென்ற தம்ம சிறுசெரல்—பின்சென்று
மூக்கி யெழுந்து மெறிகல்லா வொண்புருவங்
கோட்டிய வில்வாக் கறிந்து.

(இ - ள்) சிற செரல் - சிறிய சிச்சிலிக்குருவியானது,—கண் - (எனது காதலியின்) கண்களே, கயல் என்னும் கருத்தினுல் - கயல்மீனென்கிற எண்ணத்தினுல், காதலி பின் சென்றது - (அவற்றைக் குத்தித்தின்னக் கருதி) அவள் பின்னே தொடர்ந்து போயிற்று; பின்சென்றும்-(அவ்வா று) பின்தொடர்ந்துபோயும், மூக்கி எழுந்தும் - முயற்சிசெய்தும், ஒள் புருவம் கோட்டிய வில் வாக்கு அறிந்து-(அவளது) ஒள்ளியபுருவம் வளைக்கப்பட்ட வில்லின் வளைவுபோலிருக்குதை அறிந்து, எறிகல்லா (து) - (அஞ்சி அக் கண்களைக்) குத்தித் தின்ன மாட்டாதிருந்தது; (எ - று.)

தனது காதலியின்கண்களைக் கயல்மீனென்று கருதிச் சிச்சிலிக்குருவி பின்சென்று பிடிக்முயன்றும் அக்கண்களுக்குமேலுள்ள புருவத்தை வளைக்தலில்லென்று நினைத்து அஞ்சிப் பிடியாமலே நின்றுவிட்ட தென்று அவ ளதுகண்ணழகி லீடுபட்ட தலைவன் அதனை வியந்து தோழனுக்கு சொல் லிய துறை இது.

சிச்சிலிக்குருவி தலைமகளது கண்களைக் கயலென்றும், புருவங்களை வளைந்த வில்லென்றும் மாறுபடக் கருதியதாகக் கூறியது, மயக்கவுவமி.

செல் - மீன்குத்திப்பறவை. அம்ம - வியப்பிடைச்சொல்; இனி,"அம்ம கேட்பிக்கும்" என்றதனுல், பாங்கனே! நீ கேள் என்றுமாம். வாக்கு - வா ங்கு என்னும் முதனிலை நிரிந்த தொழிற்பெயர். (இ)

[நற்றாய் தன்மகள் சென்ற சுரத்தருமை கூறி இரங்கியது.]

கூ.கூஅ. அரக்கரம்ப னுறும்வா யம்மருங்கிற் கன்னே
பரற்கான மாற்றின கொல்லோ—வரக்கார்ந்த
பஞ்சிகொண் டிட்டினும் பையெனப் பையெனவென்
நஞ்சிப் பின்வாங்கு மடி.

(இ - ன்.) அரக்கு ஆம்பல் நாறும் வாய் அம் மருங்கிற்கு - சிவந்த ஆம் பல் மலரைப்போன்ற வாயையும் அழகிய இடையையுமுடைய(எனது) மக

ஞக்கு,—அரக்கு ஆர்ந்த பஞ்சி கொண்டு ஊட்டினும் - (முன்னே) செங்நிறம் பொருந்திய பஞ்சைக்கொண்டு (செம்பஞ்சுக்குழம்பைத்) தடவினாலும், பையென பையென என்று - மெல்ல மெல்ல வென்று, அஞ்சி - (அதனையும் ஆற்றமாட்டாமல்) அச்சங்கொண்டு, பின்வாங்கும் - இளைத்துப் பின்வாங்கிய, அடி - (அவளது) பாதங்கள், (இப்போது), அன்னோ-ஐயோ! பரல் கானம் ஆற்றின கோல் ஓ - பருக்கைக் கற்களையுடைய காட்டைப் பொறுத்தனவோ! (எ - று.)

இயற்கைப்புணர்ச்சி, பாங்கற்கூட்டம், பாங்கியிற்கூட்டம் என்பவற்றுள் களவுகெறியில் தலைமகளைக் கூடிய தலைமகன் பகற்பொழுதலின் தோழியால்விலக்கப்பட்டு அதன்பின்பு உடனே அவளே வெளிப்படையாக மணஞ் செய்து கொள்ளுதல் இயல்பு: அங்ஙனஞ் செய்யாதலின், அப்பகுதியடங்கு மாறு இலகான் தலைமகளே ஒருவழிப்பிரிந்து உறைதலும், தலைமகளை உடன் கொண்டு தன் ஊர்க்குச் செல்லுதலும், தோழியால் வரைவுமுடுக்கப்பட்ட அரிய அணிகலஞ் செலுத்தி வரைந்துகொள்ளுதலும் என்னும் இம்மூன்றனுள் ஒன்று முறைமையாய்நிகழும்; அவற்றுள், தலைவன் தலைவியை இடைச்சுரநெறியாக உடன் கொண்டு போனமையைத் தோழியாலறிந்த செவிலித்தாய் அதனை நற்றாய்க்கு உணர்த்த, அவள் அப்பாலைநிலத்தின் கொடுமையையும் தனது மகளது மிக்கமென்மையையும் கருதிக் கவன்று இவ்வாறு கூறின ளென்க.

செம்பஞ்சுக்குழம்பைக் கால்களிற் பஞ்சினுல் தடவினாலும் பொறுக்க மாட்டாது வருந்திய எனதுமகள் இப்பொழுது தனது தலைவன் பின்னே காட்டிற்குச் செல்லுகையில் அவளது பாதங்கள் பருக்கைக்கற்களின்மீது எவ்வாறு நடந்து சென்றனவோ வென்ற தாய் இரங்கிக்கூறியது இது.

அரக்காம்பல் நாறும் வாய்-செவ்வாம்பல்மலர்போல மணம்வீசும் வாயெனினுமாம். மருதுருல் அதனோடையாட்டு ஆகுபெயர். அன்னோ - இரக்கக் குறிப்பிடைச்சொல். பஞ்சு எனினும், பஞ்சினெனினும் ஒக்கும். செம்பஞ்சுக்குழம்பூட்டுதல், மகளிரது பாதங்கட்குச் செம்மையும் மென்மையும் உண்டாதற் பொருட்டு. பையென-பையவென என்பதன் தொகுத்தல் அடுக்கு-அச்சப் பொருளது. அடி - பால்பகாவஃறிணைப்பெயர்; இகுரப் பன்மை.

[தலைவனது பிரிவையாற்றத் தலைவியின் நிலைமையைத் தோழிகூறியது.]

நூகூஎ. ஓலைக் கணக்க ரொலியடங்கு புன்செக்கர்
மாலைப் பொழுதின் மணந்தார் பிரிவுள்ளி
மாலை பரிந்திட் டழுதாள் வனமுலைமேற்
கோலஞ்செய் சாந்தந் திமிர்ந்து.

(இ - ன்.) ஓலை கணக்கர் - ஓலையிலெழுதுங் கணக்கர்களுடைய, ஒலி-நிறை, அடங்கு - ஒழிந்துபோம்படியான, புல் செக்கர் - அற்பமாகிய செவ்வானத்தையுடைய, மாலை பொழுதில்-மாலைக் காலத்தில்,—(தலைமகன்),—மணந்தார் பிரிவு உள்ளி - (தனது) தலைவன் பிரிந்து செல்வதை நினைத்து, மாலை பரிந்து இட்டு - (தான் குடியிருந்த) மலர்மாலையைச் சுழற்றி

பெறித்து, வனம் மூலைமேல் கோலம் செய் சாந்தம் நிமிர்ந்து - (தனது) அழகிய தனங்களின்மீது அலங்காரஞ் செய்திருந்த கலவைச் சாந்தத்தையும் உதிர்த்து ஒழித்து, அழுதான்—; (எ - று.)

தலைவி மாலைப்பொழுதில் தனதுதலைவன் பிரிந்துசெல்வதையெண்ணி அதனைப் பொறுது தான் அணிந்திருந்த மலர் மாலையையும் சந்தனத்தையும் வெறுத்து ஒழித்து வருந்தினளென்று தோழி தலைவனுக்குக் கூறியது இது. இதனை, மூன்றஞ்செய்யுள் போலத் தலைமகள் பிரிவுடன்படாமையைத் தோழி தலைமகற்குக் கூறிய திறையாகவுங் கொள்வர் சிலர்.

முதலடி - இவ்வதிகாரத்து ஈ - ஆஞ்செய்யுளில் ''கம்மஞ்செய் மாக்கள் கருவியொடுக்கிய'' என்றது போன்ற மாலைப்பொழுதிற்கு உரிய குறிப்பு. ''மணந்தார்' என்றது, தன்னைக் கலவுவழியாற் கூடியவரை. (எ)

[உடன் போக்குப் பொருந்திய தலைமகள் தோழிக்குக் கூறியது.]

நூஅ. கடக்கருங் கானத்துக் காளைபின் ஞாஅ
நடக்கவும் வல்லியோ வென்றி—சுடர்த்தொடீஇ
பெற்ற னெருவன் பெருங்குதிரை யக்கிலியே
சுற்ற னஃதொரு மாறு.

(இ - ள்.) சுடர் தொடீஇ - பிரகாசிக்கின்ற வளையல்களை யுடையவனே!—'கடக்க அரும் கானத்து - கடந்துசெல்வதற்கு அருமையாகிய காட்டில், காளைபின் - இளவெருதுபோன்ற (உனது) தலைவன்பின்னே, நாளை - காலைத்தினம், நடக்கவும் வல்லியோ - நடந்துசெல்லவும் மாட்டுவாரோ?' என்றி-என்று (என்னைநோக்கிச்) கூறினாய்; பெருங் குதிரை-பெரியதொரு குதிரையை, பெற்றன் ஒருவன் - இடைக்கப்பெற்றவனுகிய ஒருத்தன், அதிலேயே - பெற்ற அப்பொழுதே, அஃது ஊரும் ஆறு - அதனை ஏறி நடத்தும் முறைமையையும், கற்றன்-கற்றறிந்தவனே யாவனன்றே? (எ - று.)

'நீ உனது தலைவன் பின்னே உடன்செல்ல உடன்பட்டாயே;நாளைக்கு அவன்பின்னே நடந்துசெல்ல வல்லையோ?' என்று நீ என்னை வினவினாய்; அதற்குச் கூறவேன் கேள்: ஒருவன் குதிரையொன்றை வாங்கினால் அதை யேறி நடத்திக் திறத்தையும் அவன் கற்றிருப்பா னல்லனோ? அதுபோலவே, ஒருகணவனுக்கு வாழ்க்கைப்பட்டாயின் அவன்பின்செல்லவும் வல்லனென்ற தலைமகள் தனதுதோழியை நோக்கிக் கூறிய திறை இது.

பின்னிரண்டடி - பிறிதுமொழிதலணி;உபமானத்தைக்கூறி அதன்உபமேயத்தைப் பெறவைத்தது காண்க.

கணவன்பின்செல்வது அரிதன்று என்பது, குறிப்பு.

காளை - உவமையாகுபெயர். ஆண்மகனுக்கு இளவெருது - நடை வலிமை காம்பீரியக்களிலே உவமை. வல்லை, என்றி - முன்னிலையொருமை முற்றுக்கள்; முறையே ஐ. இ - லிகுதிகள். சுடர்த்தொடீஇ - அளபெடை, இன்னிபுருபு. இல்லு ஆய்தம் உயிர்போல் ஒலித்தது. (எ)

[மகளோப்போக்கிய நற்றாய் கவன்று கூறியது.]

நூகூகூ. முலைக்கண்ணு முத்து முழுமெய்யும் புல்லு
மிலக்கணம் யாது மறியேன்—கலைக்கணம்
வேங்கை வெரூஉ நெறிசெலிய போலுமென்
பூம்பாவை செய்த குறி.

(இ - ன்.) (நேற்று எனதுமகள்), முலைக்கண்ணும் - (தனது முலைக்கண்களையும், முத்தும்-முத்துமாலையையும், (சுன்னுக அழுத்தமாக),முழு மெய்யும் புல்லும் - (எனது) உடம்புமுழுவதையுந் தழுவிய, இலக்கணம் - அடையாளத்தை, யாதும் அறியேன் - (அப்பொழுது) சிறிதும் அறிந்திலேன்; என பூ பாவை செய்த குறி - எனது அழகிய சித்திரப்பதுமைபோன்ற மகள் (அப்பொழுது) செய்த அந்த அடையாளம், —கலை கணம் - மான்கூட்டம், வேங்கை வெரூஉம் - வேங்கைப்புலிக்கு அஞ்சித்திரிகின்ற, நெறி-காட்டு வழியில், செலிய போலும் - செல்லுதற்குப் போலும்; (எ - று.)

நேற்று என்மகள் தனது முலைக்கண்ணும் முத்துமாலையும் எனதுடம்பில் அழுத்தம்படி என்னைத்தழுவிக்கொண்ட இன்னத்தை அப்பொழுது இன்னதென்று சிறிதும் அறிந்திலேன்; மான்கள் புலிக்கு அஞ்சியோடும்படியான காட்டு வழியில் தனது கணவன்பின்னே தான் செல்லுதற்கு அடையாளமாகச் செய்தாளென்று அதனை இப்பொழுது அறிந்தேனென்று தாய் தன்மகளைக்குறித்து இரங்கிக்கூறியது இது. 'என்பூம்பாவை' என்றது, நற்றாயுகூற்று என்பதைக் குறிக்கும்.

'லக்கணம் வேங்கைவெரூஉம் நெறி'என்றது, காட்டின் கொடுமையைக் காட்டும். வேங்கை வெரூஉம்-வேங்கையினின்று வெருவும் என ஐந்தனுருபுத் தொகையாகவாவது, வேங்கையைவெருவும் என இரண்டனுருபுத் தொகையாகவாவது கொள்க.''அச்சக்கினவிக்கு ஐந்து மிரண்டும், எச்சமில வே பொருள் வயினான்'' என்பது தோல்காப்பியம். வேங்கைக்கு வெருவும் என நான்னுருபுத்தொகையாகக் கொள்வது உலகவழக்கு. வெரூஉம் =வெருவும்; சொல்லிசையளபெடை. செலிய - செய்யியவென்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்; இதன்முன் வலி இயல்பாம். 'போலும்' என்பது - ஒப்பில்போலி; இங்குத் தற்குறிப்பேற்ற வருபாய்கின்றது. பூம்பாவை என்பதற்கு - தாமரை மலரில் வாழ்கின்ற இலக்குமிபோன்ற மகளெனினுமாம். (க)

[தலைமகள் பிரிவாற்றுமையைத் தோழிக்குச் சொல்லியது.]

சூ00. கண்மூன் னுலைடயாணுங் காக்கையும் பையவு
மென்னீன்ற யாயும் பிழைத்ததென்—பொன்னீன்ற
கோங்கரும் பன்ன முலையாய் பொருள்வயிற்
பாங்கனுற் சென்ற நெறி.

(இ - ன்.) பொன் ஈன்ற - பொன்போன்ற தேமல்பொருந்திய, கோங்கு அரும்பு அன்ன-கோங்கமலரை யொத்த, முலையாய்-தனங்களையுடைய

தோழியே!—கண் மூன்று உடையானும் - மூன்றுகண்களோடுடைய சிவபிரானும், காக்கையும்—, பை அரவும் - படத்தையுடைய (இராகுவென்னும்) சர்ப்பமும், என் ஈன்ற யாயும்-என்னைப்பெற்ற தாயும், பிழைத்தது-(எனக்கு) பிழைசெய்தது, என் - யாது? [ஒன்றுமில்லை]; பொருள்வயின்-பொருளினிடத்து ஆசையால், பாங்கனுர் - (எனது) தலேவர், சென்ற - போன, நெறி - மார்க்கமே, (எனக்குப் பிழைசெய்தது; (எ - று.)

பயனிலேவருவித்து முடிக்கப்பட்டது. அர்நெறி இல்லேயாயின் எனது தலேவர் பிரிந்து செல்லார்; அப்பொழுது யாவும் எமக்கு நல்லனவேயாம். எனது தலேவர் பொருள் விருப்பத்தாற் பிரிந்துசென்ற நெறியை நாம் வெறுத்துப் பழித்துப் பேசவேண்டுமேயன்றி வேறன்று. எனது தலேவர் பிரியாது உடனிருந்தால் மன்மதனும் குயிலும் சந்திரனும் என்னே வருத்தக் காரண மில்லே யாதலின் சிவபிரான் முதலியோர்மீது பழிகூற வழியில்லேயாதலால், அவர் சென்ற நெறியே எமக்குப் பிழைசெய்ததென்று கூறவேண்டியதாயிற் றெனத் தலேமகள் தோழிக்குத் தனது பிரிவாற்றுமையைக் கூறியது இது.

மன்மதனே உருவழித்துப் பின்னும் அவனே உளனாக்கிய சிவபிரானும், தன் கூட்டிற் பொரித்த குயிலின் குஞ்சைக் குத்திக்கொல்லாது விட்ட காக்கையும், சந்திரனே விழுங்கிப் பின்பு உமிழ்த்திட்ட இராகுவும், என்னைப் பெற்றபோதே கொல்லாமல்விட்டு வளர்த்த தாயுமே பிழைசெய்தன என்ற கருதுதற்குக் காரணம், கணவனைப்பிரிந்தகாலத்தி மன்மதனும் குயிலும் சந்திரனும் வருத்துவதனலும், தாய் பிறர்த அப்பொழுதே கொன்றிருந்தால் தான் இப்படிப்பட்ட துன்பங்களே அனுபவிக்கக் காரணமில்லேயாதலாலும்.

'இறைவனுக்குக் கண்மூன்றும் முச்சடர்' ஆதலால், சிவபிரானுக்கு 'கண்மூன்றுடையான் என்று ஒருபெயர் கூறினர். குயில் முட்டையிட்டவுடனே அதனைப் பொரித்துப் பாதுகாவாமல் காக்கையின் கூட்டில் அதற் குத்தெரியாமலே இட்டுச் செல்ல, அது அம்முட்டையைத் தனதென்றே கருதி அடைகாத்துக் குஞ்சுபொரித்துச் சிலகாள் சென்றவுடனே அது கூவென்று கத்தத்தொடங்குகையில் காக்கை கோபங்கொண்டு அதனேக் குத்தித் தரத்திலிடு மென்பது வழக்கு. 'பொன்' என்றது - அதுபோன்ற நிறமுடைய தேமலுக்கு ஆகுபெயர். (கo)

காமத்துப்பால் முற்றுபெற்றது.

நாலடியார் முற்றிற்று.

# நாலடியார்

## செய்யுள் முதற் குறிப்பு அகராதி.

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அகத்தாரே | ஈஙி | இசையுமெனி | கஙூ | உணரவுணரு | உ0உ |
| அக்கேபோ | க0ஙூ | இடம்பட | க0ஙூ | உண்டாய | உஙூ |
| அங்ஙண்-னக | கஙூ | இம்பைகூர் | கூஙூ | உண்ணெனெளி | கஙூ |
| அங்ஙண் - னம | ஈ0ஙி | இட்டார்நற்று | உச0 | உபகாரஞ் | சூஙூ |
| அங்கோட் | ஈ0ச | இமைக்குமன | உகஙூ | உயிர்போயார் | சஙூ |
| அச்சம் | எசு | இம்மியரிசி | அசு | உருவிற்கமை | கஙஙூ |
| அடுக்கன்மலே | கஙசு | இம்மைபயக் | கஙச | உருவுபிளமை | கூஙூ |
| அடைத்தார்ப் | கசஎ | இம்மைபு | உசூச | உலகறியத் | கஎ0 |
| அத்திட்ட | உஙூச | இரவலர்கன் | உஙூஈ | உளகாள்ஸில | உஙூகூ |
| அம்பலயலெடு | அ0 | இருக்கையெ | கஎஙி | உள்கூர்பழி | உஙூஅ |
| அம்புமழலு | அஎ | இரும்பார்க்குப் | க0கூ | உள்ளத்தா | கஙஙூ |
| அரக்காம்ப | ஈஎஉ | இலங்குநீர் | கஅஅ | உள்ளத்துணர் | ஈஙசு |
| அருகல | உகசு | இல்லமிளமை | ஙிஉ | உள்ளமொரு | ஈ. க0 |
| அரும்பவிழ்ச் | ஈஙஅ | இல்லாமை | உருச | உாக்குந் | ச 0 |
| அரும்பெறல் | ஙஎ | இல்லாவிடத் | அச | உறற்பால | கூச |
| அரும்பெறற் | ஈஙகூ | இழித்தக்க | உஙி0 | உறுபுலி | கூ0ஏ |
| அருளின்ற | உசுஎ | இழைத்தார | கசு | உறுபுனறாக் | கஙுச |
| அலகுசால் | கஉஈ | இளையானட | கூஈ | உறைப்பருங் | கஙுஈ |
| அவமதிப்பு | கச0 | இறப்பச்சிறி | கூ0 | ஊக்கித்தாங | ஙுசு |
| அவ்வியமில் | உசுஅ | இறப்பநினே | கச.ஈ | ஊருங்கணீர் | கசுஅ |
| அழன்மண்டு | கசுஅ | இறப்பவே | கஉஙி | ஊருளெழுந் | அஉ |
| அன்னிக்கொ | உகஅ | இற்சார்வி | கஙூ | ஊறியுவர்த் | சஎஉ |
| அறம்புகழ் | எஎ | இற்பிறப்பில் | உசுஈ | ஊறுசெய் | ஈ0கூ |
| அறிமினறி | கசசு | இற்பிறப்பெ | கஎஎ | எஞ்ஞான்று | ஈகசு |
| அறியாப்பரு | கசஙி | இனநன்மை | கஉ.அ | எத்தியேயா | உஉசு |
| அறியாரு | கூஎ | இனியார்தந் | ஈ0ச | எந்நிலத்து | ககஅ |
| அறிவதறிக் | எக | இன்பம் | எச | எம்மையறி | கசக |
| அறுவை | ஙக | இன்றுதமிக் | உஈச | எய்தியிரு | ஐஎ0 |
| ஆகாதெனி | உஎஅ | இன்றுகொ | ஈ. க | எறிநீர்ப் | உஉக |
| ஆடுகோடாஞி | கஙூக | இன்னரினேய | கஎக | எறியென் | உகூஎ |
| ஆட்பார்த் | உஅ | இன்னுசெயினுமி | எஉ | எறிறெறன்று | கஈ. 0 |
| ஆணமினெ | ஈ0ஙி | இன்னு - விட | கஅஉ | எனக்குத்தா | உஙி |
| ஆமாபோ | ஈ0அ | இன்னு - விடு | கஅஎ | எனதென | உஈ.0 |
| ஆர்த்தபொறிய | உசுக | இன்னுவியைக் | உஙி. | எண்பாயுதினு | உசுஉ |
| ஆர்த்தவறிவின | உஅஎ | ஈட்டலுந் | உஈ.ஈ. | என்றும்புநி | உஙிஉ |
| ஆவாநாமாக்க | ஈஉ | ஈண்டுநீர் | கூஅ | என்னனு | கஙி |
| ஆவேறுருவின | க0ஙி | ஈதலிசையா | கஙிஉ | என்னேமற் | உஎகூ |
| ஆற்றுங்துணை | கஉஉ | ஈனமாயில் | கஙூஈ | ஏட்டைப்பரு | உசுஈ. |
| ஆன்படுசெய் | கஙஙி | உடாஅது | உ 0 | ஏதிலார்செய் | கஅசு |
| இசைந்த | கஙிஙி | உடுக்கை | கஎச | ஏமாந்தபோழ் | ஈ0கூ |
| இசையாதெ | கசு0 | உடைப்பெருஞ் | ஈ.0ஏ | ஏற்றகை | அசு |
| இசையாவொரு | கூகூ | உடையாரிவ் | கஈ.அ | ஏண்கதிர் | கசஅ |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| ஒருங்கிரி | ... |
| ஒருதீப் | ... |
| ஒருபுடை | ... |
| ஒருவரொருவ | ... |
| ஒல்கியவொள் | ... |
| ஓதியுமோதா | ... |
| ஓலைக்கண்ணக | ... |
| கடகஞ்செரி | ... |
| கடக்கருங | ... |
| கடமாதொ | ... |
| கடல்சார்ந்து | ... |
| கடித்தக் | ... |
| கடிப்பிடி | ... |
| கடியெனக் | ... |
| கடுத்தியொரு | ... |
| கடுத்தெனச | ... |
| கடையாயார் | ... |
| கடையெலாங | ... |
| கட்டினியான் | ... |
| கணைகொண்டு | ... |
| கணைமலை | ... |
| கண்கயலென் | ... |
| கண்மூன் | ... |
| கப்பிகிடவதா | ... |
| கமழஞ்செய் | ... |
| கரவாதநின் | ... |
| கருவிகொள் | ... |
| கருத்துணர்ந்து | ... |
| கருமமு | ... |
| கருமவரிசை | ... |
| கருப்பாட்டிக் | ... |
| கல்லாக்கழிப் | ... |
| கல்லாதீண்ட | ... |
| கல்லாதபோ | ... |
| கல்லாமை | ... |
| கல்லாரேயா | ... |
| கல்லெறிற் | ... |
| கல்லென்று | ... |
| கல்லோயகு | ... |
| கல்லிகரையில | ... |
| கழுற்தாரிடு | ... |
| கழுரோட் | ... |
| களர்நிலத்தி | ... |
| கள்ளார்கள் | ... |
| கற்றனெ | ... |
| கற்றறிந்த | ... |
| கற்றனவும் | ... |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| கற்றருரை | ... |
| கனைகடற்றண் | ... |
| கன்னவரில்ல | ... |
| காணிற் | ... |
| காதலாரசொல் | ... |
| காலாடுபோ | ... |
| காவாதொரு | ... |
| காழாயகொ | ... |
| குஞ்சியழகுங | ... |
| குடநீரட்டிண | ... |
| குடருருகொ | ... |
| குலரதலங | ... |
| குற்றமுமே | ... |
| கூர்த்தகாய் | ... |
| கேளாதேவர் | ... |
| கொடியவை | ... |
| கொடுத்தலுள் | ... |
| கொய்புற | ... |
| கொலைஞருலை | ... |
| கொல்லையிரு | ... |
| கொண்னே | ... |
| கோடோடித | ... |
| கோட்டுப்பூ | ... |
| கோதையருவி | ... |
| கோளாற்றக | ... |
| சககரசெல் | ... |
| சாய்ப்பறிக | ... |
| சான்றணமை | ... |
| சான்றோரென | ... |
| சிதலிலினைப் | ... |
| சிறுகாபெருகா | ... |
| சிறுகாலேயே | ... |
| சீரியா | ... |
| சேரசெல்லா | ... |
| செம்மை | ... |
| செயகையழி | ... |
| செயயாத | ... |
| செல்சுடா | ... |
| செல்லாவிட | ... |
| செல்வாயா | ... |
| செல்வுழிக | ... |
| செழுமைபெறும் | ... |
| செறிப்பில | ... |
| சேறுததோ | ... |
| சென்றெயெ | ... |
| சொற்றளார்த் | ... |
| சொற்றுற்றுக | ... |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| தக்காருர் | ... |
| தகுகோலக் | ... |
| தகுகண்மர | ... |
| தண்டாச | ... |
| தம்மென்ற | ... |
| தம்மாகாத | ... |
| தம்மையிகழ்ந் | ... |
| தம்மையிகழுவா | ... |
| தலையேதவ | ... |
| தவருருக | ... |
| தவிரிமேலே | ... |
| தனதாகத் | ... |
| தாருசெய | ... |
| தாமேயுமின் | ... |
| தாழாததளா | ... |
| தான்செடி | ... |
| தீருததன்னே | ... |
| திருமதுகை | ... |
| தினைததிணை | ... |
| தினையினைத | ... |
| தீகருமும் | ... |
| துகரா | ... |
| தகதகதட் | ... |
| தியதகை | ... |
| தின்பமே | ... |
| தின்பம்பல | ... |
| தெண்னீரக | ... |
| தெரியாத்தெரி | ... |
| தெளிவிலா | ... |
| தோணியாக | ... |
| தோறாபோ | ... |
| தோறாறஞ்சான் | ... |
| நகையாக | ... |
| நடுகருறாத | ... |
| நடுபுருள | ... |
| நட்டாராகு | ... |
| நட்பாகார | ... |
| நமமாலே | ... |
| நயவாக | ... |
| நமபெபூதி | ... |
| நரைவருமே | ... |
| நலலகுல | ... |
| நல்லாபெரி | ... |
| நல்லவைசெய் | ... |
| நல்லவைகா | ... |
| நலலாரொளத | ... |
| நல்லாராடல | ... |

| பக்கம். |
|---|
| ... |
| ... |
| ... |

| பாட்டு. | பக்கம். |
|---|---|
| கல்லாலின் | ௧0௨ |
| களிகடந்தறண்-நல் | ௪௯,௮ |
| களிகடந்தறண்-நா | ௪ ௭0௨ |
| கறுமலர்த் | ௪௭௪ |
| கன்னிலேக் | ௨ ௦௨ |
| நீப்பாட்டு | ௨,௫,௪ |
| நாய்க்காற் | ௪ ,0 |
| நார்த்தொடு | ௫,௨ |
| நாலா றுமா | ௪ ,, |
| நாள்வாய்ப் | ௪ ௪ ௬ |
| நாறுதகைசே | ௨ ,, 0 |
| நிலைபெறுத | ௪,௫,0 |
| நீலைலமா மை | ௫,௪ |
| நின்றலை யின | ௪,௫ |
| நீரிலு நுண | ௨ ,, ௫,௫ |
| நீருட்பிறகு | ௨,௪,௭ |
| நீளமையே | ௨ ,, ௪,௯ |
| நுண்ணுணர்வினு | ௯ ,, ௪,௨ |
| நுண்ணுணர்வின | ௨ ,, 0,௫ |
| நெடுங்கால | ௯,௫ |
| நெருப்பழற | ௪ ,, ௪ |
| நேரல்லா | ௪,௪ |
| சோத்து | ௪,0 |
| பகைவாபணி | ௪ ,, ௯,௪ |
| பகுமைழு | ௫,௫ |
| பண்டமறி | ,, ,, ,,